உ

திருச்சிற்றம்பலம்.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவெங்கைக்கோவை

மூலமும்,

காஞ்சி - மஹாவித்வான்

இராமாநந்தயோகிகள்

இயற்றிய

உரையும்.

இவை

சை. சிவசங்கரசெட்டியார், பி. ஏ., பி. எல்.,

அவர்களால் தமது

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

 விலை ரூபா 2—8—0.

உ
வேலுமயிலுந் துணை

முகவுரை

உய்த்துணருமிடத்துப் பண்டைய தமிழ் நூல்களின் கூற்றுக்கள் அனைத்தும் இரண்டே பகுதியிற் படுவனவாகும். அவையதாம் - அகப்பொருளும், புறப்பொருளும் என்பன. தமிழ் மொழியின் இயற்பகுதிகள் ஐந்தனுள் இவ்விரண்டினை விளங்கக் கூறும் பொருளியற் பகுதியே தலைசிறந்து விளங்குந் தகுதியினை யுடையதாகும். இது நோக்கியன்றே, 'எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமே யெனின், இவை "பெற்றும் பெற்றிலேம்" என்பதனைப் பாண்டியன் கூற்றாக இறையனார் அகப்பொருளுரைகாரரும் காட்டியதூஉ மென்க.

இனி, அகப்பொருளென்பது அகத்தினாகிய பயன். அது, ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய் கூடிய கூட்டத்தின் பின்னர், ஆண்டு அக் காலத்தே நுகர்ந்த வின்பம் எவ்வாறிருந்த தென்று அவ்விருவரி லொருவரை யொருவர் கேட்பின், தமக்குப் புலப்படக் கூறப்படாததாய், உணர்வே நுகர்வதாய், அகத்தே நிகழும் இன்பமாம். புறப்பொருளென்பது புறத்தைச் சார்ந்து வரும் பொருளாம்.

அகப்பொருளிலக்கணத்திற் கோர் இலக்கியமாக விளங்கும் கோவை நூல், நந்தம் தமிழ் மொழிக்கே சிறப்புநூலாம். ஒரினமணிகளை ஒழுங்குபடக் கோத்தல்போல, அகப்பொருட் கிளவிகளை ஒழுங்குபடக் கோத்தலின் இந் நூல் கோவை யெனப்பட்டது. இது களவு கற்பென்னும் இரண்டியல்களில் இருபத்தாறு கிளவிக் கொத்துக்களான் நானூறு துறைகளைக்

கொண்டு இயல்கின்றது. இயல், கிளவி, துறை யாகிய இவற்றின் பெயர்முறைகள் யாவும் செந்தமிழ் மொழியானே யாக்கப்பட்டிருப்பது மிகப் பாராட்டற்பாலதாம்.

கோவைநூலின் தொடர்பு நாடகத் தமிழைச் சார்ந்து நடைபெறுகின்றது. இந் நூலுள், பண்டைய தமிழ் மக்களின் கூட்டுறவும், நடை யுடை பாவனைகளும், நாகரிகமும், ஆடவர் மகளிரிடத்துக் கொண்ட நட்பும், பெண்டிர் ஆடவரிடத்துக் கொண்ட அன்பும், பிறவும் இனிது விளங்கும்.

இக் காலத்தே நாகரிகம் பெற்றார் அனைவராலும் நல்லனவென நாட்டப்படுகின்ற ஒழுக்கங்கள் பலவற்றை நந்தம் தமிழ் மக்கள் பன்னூறு யாண்டுகளுக்கு முன்னரே தமக்கு உடம்பாடாகக்கொண்டு ஒழுகினரென்பது கோவைநூல் ஒன்றினைக் குறையற வாராய்வார் காணக்கிடக்கும் குணங்களாம். அவை தாம் என்னையெனின்-சாதி சமயவேறுபாடுகளைக் கருதாது, மனவொழுக்கங் கொண்டு தம்முள் ஒத்து உரிய மணமக்களாதல், மகளிர் உவவனத்துட் பாங்கியரோடு சென்று பூக்கொய்தல், நீர்விளையாடல், மயிலுடனகவல், மலையெதிர் கூவல் இன்னோரன்ன பிறவுமாம்.

மற்றும், தலைமகன் தான் தலைவியினிடத்துக் கொண்ட அன்பு காரணமாக, இள மாந் தளிரினைப் பறித்துக் கொடுத்தலும், அதனைத் தலைமகள் பொன்னினும் போற்றிப் புனைந்து கோடலும் நோக்கின், தமிழர் முற்காலத்தே இலையுடையினை விழைந்துகொண்டனரென்பதும் விளங்கும். தலைவிக்கு மாறுபாடு கண்டவிடத்தெல்லாம் வேலனைக்கூய் வெறியாட்டயர்ந்தனரென்பவாதலின், அக் காலத்து முருகனே தமிழர்க்குக் கடவுளாதலும், அவற்குப் புலாலையும் படைத்தனரென்பதும் போதரும்.

இனித் தில்லையம்பல வாணர் வாதவூரடிகளை, "பாவை பாடிய வாயாற் கோவை பாடுக" எனப் பணிப்ப, அவ்வடிகள்

திருவாய் மலர்ந்தருளினரெனக் கூறப்படும் திருக்கோவையாருக்கு உரைகண்டருளிய பேராசிரியர் எழுவாய்க்கிடந்த பாட்டின் உரைக்கண்,

"அறிவனூற் பொருளு முலகநூல் வழக்குமென
விருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்.
ஆங்கவ்விரண்டனுள்,
ஆகம நூல்வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற்கரி
துலகநூல்வழியி னுதலிய பொருளெனு
மலகி றீம்பாற் பரவைக் கண்ணெனும்
புலனெனுங் கொள்கலன் முகந்த வகைசிறி
துலைய மரபி னுரைக்கற்பாற்று"

என்றாராகலின் கோவைத்துறைகள் அறிவனூற் பொருளையும் தரும் என்பது பெறுகின்றாம்.

இப் போழ்தத்து வழங்கும் கோவைநூல்கள் பல. அவற்றுள் திருக்கோவையார், ஒப்புயர் வற்று விளங்கும் தன் தலைவனே போல் விளங்கும் மேன்மையினை யுடையதாம். அது இயல் வரம்பிற்கும் அமையாது மேம்பட விறுதலின், உரைகாரர் அதன் கூற்றுக்குத் தக இயலுங் கூறிவைத்தனர். பின்னர், நாற்கவிராசநம்பி செய்துவைத்த அகப்பொருள் இயல்பற்றி பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் என்னும் ஒரு வள்ளலை பாட்டுடைத் தலைவனுக் கொண்டு கோவை நூல் ஒன்றினை யாத்தனர். பின்னரும் பல்வேறு கோவை நூல்கள் பல்கின. அவற்றுள் திருவெங்கைக் கோவையும் ஒன்றாம்.

இத் திருவெங்கைக் கோவை துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவரர் திருவாய் மலர்ந்தருளியது. தமிழ்த் துறையிலிறங்கும் மாணவர்க்கும், தமிழ்க் கடலுள் படிந்து திளைத்து முழுகும் புலவர்க்கும் பெரும்பேறாக விளங்க அம்முனிவரர் இயற்றியருளிய தமிழ் நூல்களின் சிறப்புக்கள், அவற்றை

ஐயமறக்கற்று மகிழ்நரேயன்றி, மற்றையோர் அறியற்பாலன வன்றாம். இவர் தஞ்சைவாணன் கோவையினையே படிச்சந்த மாகக் கொண்டனர் என்பது இரண்டனையும் ஒப்ப நோக்கு வார்க்கு விளங்காமற்போகாது. இவ்விரண்டு நூல்களினும் பற்பல விடங்களில் கருத்துக்கள் ஒத்திருத்தலே யன்றி, சிற் சிலவிடங்களில் ஏதுகை நயங்களும் உறழ்ந்து காண்கின்றன. நந்தம் முனிவர்பெருமான் தம் நூலுள் திருக்குறளின் கருத் துக்களும், அடைவுகளும், தருக்க வமைதிகளும், உலகியல் வழக்குக்களும், சங்கநூற் பெயர் முறைகளும் அகப்பட அழகு பெற யாத்திருக்குஞ் சிறப்புச் செப்புந் திறத்ததன் றாம். துறைப் பொருட்குத் தகப் பாட்டுடைத் தலைவனது சீர்த்தியைத் தொகுத்துக் கூறு மொற்றுமை இவ் வெங்கைக் கோவை ஒன்றினே காணக் கிடைப்பதாம்.

இத்தகைய நூலுக்கு உரையொன்று வேண்டுவது இன் றியமையாமையாம். அதனுக்கு உரையிடுவது கோவையில் வல்லுநரென யாவரானும் நன்குமதிக்கப்படும் காஞ்சி. மகா வித்துவான் இராமாநந்தயோகி யவர்கட்கே ஏற்றதாம் என் பது தேற்றம். யான் அவர்பால் திருக்கோவையாரைப் பாட மாகக் கேட்டகாலத்து, உலகத்தவர் உயர்வாகக் கூறும் அவ ரது திறம் உண்மையுறக் கண்டு பெருமகிழ்வடைந்தனென். இக்கோவையுள்ளும் அவர் செய்துள்ள சிற்சிலதிருத்தங்கள், அவரது உழைப்பின் வன்மையை நன்கு தெரிக்கும். அவ ருரையை நேரிற் கேட்டு மகிழ்ந்த என்னைப்போல், இவ்வுரை யை அச்சிற் கண்டு மகிழும் தமிழுலகமும் இவர்பால் அன்பு பாராட்டுதல் தனது கடப்பாடாகக்கொள்ளும் என்னும் கரு த்துடையேன்.

☞ கா. நமச்சிவாயன்.

உ

சிவமயம்

சாத்துகவிகள்

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
மகாமகோபாத்தியாயர்
பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள்
இயற்றியது.

அறுசீராசிரிய விருத்தம்.

தூமேவு மறிஞர்பிரான் சிவப்பிரகா சப்பெரியோன்
சொற்ற தூய
மாமேவு திருவெங்கைக் கோவைதனக் குரையொன்று
வகுத்தா னூல்கள்
தாமேவு முளமுடையான் வளமுடையா னுடன்முதிர்ந்துந்
தளரா நாவோன்
பாமேவு காஞ்சிநக ரிராமசா மிப்பெயர்கொள்
பாவல் லோனே.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
மகாவித்வான்
ஸ்ரீ-உ-வே.
கா. ஸ்ரீ. கோபாலாசாரிய ஸ்வாமிகள்
சொல்லியவை.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சொன்னாலும் வாயினிக்குங் கேட்டாலுஞ் செவியினிக்குந்
துயர்கொ ணெஞ்சந்
தன்னாலு நினைந்தாலு மனமினிக்குந் தமிழ்ப்புலமை
தழைக்க யார்க்கும்
பன்னாளி னுபகரிக்குஞ் சிவப்பிரகா சப்பெருமான்
வளமார் பாடல்

பன்னுவுங் கொண்டுபெணி பதியுரைப்ப தன்றியென்னாற்
பகர லாமே. (க)

இனியதமிழ்க் கனியெனவே பனுவல்பல வியற்றியெமக்
கீங்கே யுள்ளங்
கனியவெங்கை யிறைவனடிக் காதல்பெருக் கெடுப்பவந்தக்
கடவுள் யோகி
வனிதைநிலை யடைந்தவனை நுகர்ந்தவகை யனைத்துமக
மருவுஞ் செய்கை
நனியமையக் கோவையெனப் போந்தனவித் தமிழகந்தா
னலனுற் றோங்க. (உ)

அன்னதொரு நூலினரும் பொருளினைநந் தமிழ்ச்சிறுவ
ரறியு மாறு
தன்னையுரை வேண்டுநர்க்கு மெய்தளர்ந்து மறுக்காது
தமிழின் வந்த
பன்னுபல நூற்குரைசெய் பண்புடையா யிதற்கொருரை
பரிந்தீ கென்ன
மன்னுபுகழ்க் காஞ்சிநகர் வருராம சாமியென்பான்
வகுத்தான் மன்னோ. (ங)

அனையவெங்கைக் கோவைதனக் கரும்பொருளை யப்புலவ
னளித்தா னன்று
நினையுமந்தப் பொருளினுக்கும் பொருள்வழங்கி நிலத்தின்
நிலவத் தந்தான் [மிசை
மனையகத்து மருவியுமுண் மருவாத தூயவிரத்
தினமென் வள்ளல்
துனையனர சார்கலையின் வல்லசிவ சங்கரப்பேர்த்
தகைமை யோனே. (ச)

திரிசிரபுரம்,

பிரம்மஸ்ரீ. திரு. அ. சிவாநந்த சாகரயோகீசுரர்

அவர்கள் இயற்றியது.

பொன்னவி ரிதழிப் பூந்தொடை மிலைந்த
மின்னவிர் சடில விமலன்மா லாதிப்

பண்ணவர் பரவத் தண்ணில வெறிக்கும்
கயிலைமால் வரையின் மயிலியல் பாக
மாகவீற் றிருக்கு மோகமின் முக்கண்
ணேக நாயக னினிதருள் சுரந்து
பாகமா ருயிர்வெம் பவமறப் புகன்ற
வாகம நெறிபல வாகுமன் னவற்றுட்
சைவத் துறைபுக லெவ்வழி யிருப
தெட்டா கமத்துள் ளின்பமார் முத்தி
தட்டா தருளுந் தகைபெறு தெய்வ
வீரா கமப்பய வேலையி லெழுந்த
வாரா வமுதுண் டத்விதா னந்தப்
பன்னூற் கதிரொளி தன்னா லெம்மகத்
தாணவ விருளறுத் தருள்பொழி மதியம்
ஆலமுண் டருளி ஞாலநன் றளித்துக்
காலனை யுதைத்த கடவுளர் பெருமான்
புன்றலை மறிமான் கன்றணி பரமன்
அன்றொரு தெய்வ மின்றெனக் கருதுந்
தவப்பிர சாதத் துவப்புறு ஞானச்
சிவப்பிர காசச் செய்தவ முனிவன்
செங்கயல் புரளக் கொங்கலர் சாலிப்
பங்கய மலரும் பொங்கம் ரோடைச்
சீரணி வெங்கைத் திருநக ருவந்த
காரணி கண்டக் கடவுளைப் பரவும்
ஐந்திணைக் கோவைச் செந்தமிழ் நூலுக்
குள்ளுறை விளங்கத் தெள்ளிய வுரையொன்
றிந்நில மதிக்க வினிதுரைத் தழியா
மன்னிய பெருஞ்சீர் வளம்படைத் தனனால்
வையக மெல்லா மெய்யென மயங்கு
மாமா னந்த வளரு மெய்ஞ் ஞான
ராமா னந்த யோகி மற்றதனை
இச்சகம் விளங்க வச்சினி லாக்கித்
தகைமலி யழியாப் புகழொடு வைகினன்
கல்வியா சாரங் கடவுளர் தியானம்
நல்வழி பாடு நயமொழி வினையம்

அன்பொடு நற்குண மென்பன வெல்லாந்
தன்பா லாகத் தரணியி னுளும்
மங்களம் பெருக வாழ்சிவ
சங்கர னெனுஞ்சீர்த் தனபதி தானே.

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலு செட்டியா ரவர்கள்

இயற்றிய

நிலைமண்டில வாசிரி யப்பா.

ஆரணம் பரவுங் காரண னருளால்
பூரண மாகப் பொருந்திய கல்வித்
தேசார் புலவர் மாசற வாழு
மாதார் காஞ்சீ மன்னிய சீரான்
குணமுறு கௌரியர் குலத்துட் டோன்றி
"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றன னன்றே"
எனமுன்னோர் புகன்ற இங்கித மொழியை
மனதினு னுன்னி மாட்சிமை வாய்ப்ப
அணியெனப் புரசை யமரட் டாவ
தானச் சபாபதி சதுரன் முதலினோ
ரிடத்துக் கல்வி யெல்லா முற்று
மடத்தை யகற்றிய மாணற் பண்டிதன்
பரநிலை யுணர்ந்த பளகறு சீமான்
பன்னரும் பீடார் பல்பெரு நூல்கட்
கின்னய வுரைக ளெழுதிய குரிசில்
கோவைக் கொருவன் பாடற் கொருவன்
பூவை நிறத்தான் பொன்னடி மறவான்
வாய்ப்புறூர் புகலு மகாவித் வேச
னேய்த்தலி லிராம யோகியென் பெயரா
னவப்பிர காச மற்றொளிர் ஞானச்
சிவப்பிர காசச் செயமம லியற்றிய
பன்னோக்கு முற்ற பன்னூ றப்பு

ளொன்றும் வெங்கைக் கோவைக் குரையொன்
றகப்பொரு ளறிந்தோ ரார்வமீக் கூர
வுகப்புடன் மாணவ ருவந்தடி போற்றத்
தமிழ்மா துவந்திவன் றன்மக னென்ன
வமிழ்தினு மினிதா வகலமா யெழுதிப்
புகழுடம் பென்றம் பொன்று வாறு
திகழுற வச்சிற் சேர்த்திட் டனனே.

சென்னை - வேப்பேரி.

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

கா. நமச்சிவாய முதலியார்

இயற்றியவை.

மானமருங் கரமுடையான் மதியமருஞ் சிரமுடையான்
மலர டிக்கே
தேனமரு மொழியலங்கல் செந்தமிழி னியலமருந்
திறத்தி னாடி
ஊனமரு முடல்கொண்ட வெம்மனோர் பத்திநெறி
யுளத்தின் மேவ
வானமருங் கருணையுட னுதவுசிவப் பிரகாச
மாத வத்தோன். (க)

கற்றோருக் கினியதொரு தமிழமுதா யகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரு மணற்கேணி தொட்டென்ன வணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறு நயம்பெருகத் திருவெங்கை நாயகனற்
றுணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையா மொருநூலை
வகுத்திட் டானால். (உ)

இத்தகைய நூலகத்துக் கரந்தவரும் பொருளனைத்து
மெளிதி லின்று
வித்தகமி லெனைப்போலுங் கல்லாரு மினிதுணர
விளக்கி யான்ற

சித்தமுறு மேற்கோள்கள் பலநாட்டி யகப்பொருளின்
தெளிவு கூட்டி
அத்தமுறு மாமலக மெனக்காட்டி ஞானவன்சீ
ரறைதற் பாற்றோ. (௩)

என்னைபாட் கொளுமுருக னிணையடிக்கே யன்புசெயு
மிதயம் பூண்ட
நன்னயச்செந் தமிழ்க்குரவ னன்னசபா பதிமாறன்
னளினத் தாட்கே
மன்னவரு மனங்கொண்டோன் கற்றவெலா மேடகத்து
வரைந்து வைத்தே
இன்னலுறும் புலமையினோர் நாணவெலா மகவேட்டி
லெழுது மேலோன். (௪)

என்கணனை யான்மயிலைச் சண்முகமா லெனப்புகலு
மியனு வல்லோன்
தன்கணன்று வைத்தவொரு வுரிமைவழி முறைவந்த
சார்பு கொண்டு
என்கணென்று நீங்காத வருட்டாயாய்த் தமிழ்மொழியி
னியல்பி யாவு
மன்னவெனக் கருள்காஞ்சி யிராமயோ கிப்பெயர்கொண்
மதிஞன் மாதோ. (௫)

வித்வான், சே. வேள்ளியம்பலப்பிள்ளையவர்கள் குமாரர்
சே. சிவஞானம் பிள்ளை யவர்கள்
இயற்றியவை.

தேன்பிலிற்று நறுங்கடுக்கை மிலைந்தபிரான் முதற்பெயரைச்
சேர நின்ற
வான்பிலிற்று மொளிமருவு பெயர்விளங்கு முனிவரனன்
மாண்பு சான்றோன்
ஊன்பிலிற்று மெழின்மடவார் மயலினைத்து மொருங்கவித்த
வுரவோன் ஞானக்
கான்பிலிற்றுங் கவிமாரி பொழியவரு தமிழெழிலி
கவின்ற தொப்பான். (௧)

நல்லாற்றா ரியற்றுமொரு தவப்பிழம்பா யுதித்திடுமந்
நாவ லோன்றன்,
பல்லாற்றாற் பயன்படவே யருள்புரிந்த வெங்கைநகர்
படர்கோ வைக்குச்
சொல்லாற்ற லொடுசிவனும் நயனெலா மாடியெனத்
தோன்ற வின்று
நல்லாற்ற னுரையொன்று வகுத்திட்டா னவன்சீர்த்தி
நவிலற் பாற்றே. (௨)

முத்திநக ரோரேழில் முதல்விளங்கு நகர்மேவு
முதுத வத்தோன்
வித்தகநற் றமிழ்க்கடலைத் தன்னறிவாஞ் சோங்குகொடு
மெலக் கடந்தோன்
எத்தகைய பாவினையு மியம்புமுனம் பயனுரைக்கு
மிறைமை சான்றோன்
புத்துரையை மணற்கேணி தொட்டென்ன வகுத்துமொரு
புலமை வாய்ந்தோன். (௩)

எந்நூலு மிந்நூலுக் கிணையில்லை யெனப்புகலு
மிறைமை வாய்ந்த
நன்னூலாந் திருக்குறளுந் திருக்கோவை யாநூலும்
நலக்க வின்று
பன்னூலும் படித்துணர்ந்த படியெனக்குப் பகர்ந்திட்ட
பண்பு மிக்க
தொன்னூலா சிரியனெனும் ராமயோ கிப்பெயர்கொள்
தூய னம்மா. (௪)

குறிப்பு.

பாவாக்கியென்னும் முதற்குறிப்பினையுடைய ௧௦௩-ம் பாட்டினுரையில் வாகீசர் என்பதை சம்பந்தர் எனத் திருத்திக்கொள்க.

திருவெங்கைக்கோவையின்

கிளவித் தொகை

களவியல்.

வரைவியல்.

கற்பியல்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

கட்டளைக்கலித்துறை.

ஏவைக்கடக்கும்விழியாரைவென்றவிய லுடையான்
காவைப்பொருவுஞ்சிவப்பிரகாசக்கடவுளென்போன்
பாவைப்பலமுறையானுணர்ந்தோர்கள்படித்துணரக்
கோவைத்தமிழ்நந்திருவெங்கைவாணர்க்குக்கூறினனே.

பதவுரை. ஏவை - அம்பை, கடக்கும் - வென்ற, விழியாரை - கண்களையுடைய மாதரை, வென்ற - ஜெயித்த, இயல் உடையான் - துறவறவியலையுடையவனுகிய, காவைபொருவும் - கற்பகத்தருவை நிகர்க்கின்ற, சிவப்பிரகாசக் கடவுள் என்போன் - சிவப்பிரகாச சுவாமியென்று சொல்லப்படுவோன், பாவை - நூல்களை, பலமுறையான் - பலவகையாலும், உணர்ந்தோர்கள் - கற்றறிந்தோர்கள், படித்து உணர-படித்து அறியும்பொருட்டு, நம் திருவெங்கை வாணர்க்கு - நமது திருவெங்கை வாணர்மீது, கோவை தமிழ் - கோவையென்கிற தமிழ்ப் பிரபந்தமொன்றனை, கூறினன் - பாடினுன், என்றவாறு.

கருத்துரை. மாதர்மயக்கறுத்துயர்ந்த துறவறவியலையுடைய சிவப்பிரகாச சுவாமியென்று சொல்லப்படுவோன், திருவெங்கை வாணர்மீது கோவையென்னும் இப் பிரபந்தத்தைப் பாடினுன் என்பதாம்.

விசேடவுரை. ஏ - அம்பு, ஏவைக்கடக்கும் விழியாரைவென்ற வியலுடையான் என்றது, மாதர்மயலற்றவன் என்றபடி. விழியார் என்றது, விழியார்மயலை. "அம்பஞ்சி யாவம் புகமிக நீண்டரி சிந்து கண்ணுள்" "வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாளியும், கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கலைப்பட்டவே "கணையைக் கடைவித்து" என்றற்றொடக்கத் தறிஞர் திருவாக்குக்களினும் ஏந்திழையார் கண்கள் ஏவைக்கடத்தல் கூறப்பட்டிருத்தல்

காண்க. காவைப்பொருவுஞ் சிவப்பிரகாசக்கடவு ளென்போன் என்றது, கற்பகச்சோலையை நிகர்த்த கொடையாளன் என்றபடி. இவர்க்குக் கொடை-கல்விக்கொடை. பா - பாக்களாலாகிய நூலை யுணர்த்தலால் கருவியாகுபெயர். நம் என்றது, நமக்கு உத்தேசியரான என்றவாறு. சிவப்பிரகாசக் கடவுளென்போன் திருவெங்கைவாணர்க்குக் கோவை கூறினன் என முடித்துக்கொள்க.

கோவைத்தமிழ் என்பதைத் தமிழ்க்கோவையென முன்பின்னாகமாற்றித் தமிழ்ப்பிரபந்தங்கள் தொண்ணூற்றாறனு ளொன்றாகிய கோவை யென்னும் பிரபந்தம் என்றுரைத்துக்கொள்க. தமிழ்க்கோவை யென்றமையால் பிறபாடைகளில் இத்தன்மையாகிய பிரபந்த மின்றென்பதும் வெளியாயிற்று. நம் என்றது தம்போல்வாரையு முளப்படுத்தற்கென்க. வாழ்நர் என்பது வாணர் என்றாயிற்று. அம்பலவாணர் மன்றவாணர் குன்றவாணர் பாவாணர் கவிவாணர், தஞ்சைவாணன் என்றற்றொடக்கத்தனபோல. வெங்கைவாணர்க்கு உருபு மயக்கம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை மூலமும் உரையும்.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

பூவைமலர்நிறத்தெம்பெருமாட்டிபொருப்பரையன்
பாவைவளர்க்குங்கிளிமுன்கையாளொருபான்மருவுந்
தேவைவளர்சடைத்தென்வெங்கைவாணனைச்சேர்ந்துவருங்
கோவைபடர்வதற்குள்ளூன்றுவாமொற்றைக்கொம்பரையே.

ப - ரை. பூவைமலர் நிறத்து - காயாம்பூவின் நிறத்தினையுடைய, எம்பெருமாட்டி - எம்பெருமாட்டியும், பொருப்பு அரையன்பாவை - மலையரையன் மகளும், வளர்க்கும் - (தான்) வளர்க்கிற, கிளி - கிளியை, முன்கையாள் - தன் முன்கையிலுடையவளும் (ஆகிய உமாதேவியானவள்) ஒருபால் மருவும் - ஒரு பாகத்திலமைந்திருக்கப்பெற்ற, தேவை - தேவனை, வளர்சடை - நீண்டசடையினையுடைய, தென்வெங்கை வாணனை - தென்வெங்கைத் திருப்பதியில் வாழ்பவனை, சேர்ந்துவரும் - குறித்து வருவதாகிய, கோவை - கோவையென்னும் இப்பிரபந்தமானது, படர்வதற்கு - (தமிழ்நாடு முழுவதும்) பரவுதற்பொருட்டு, ஒற்றைக்கொம்பரை - ஒரு கொம்பினை யுடையவராகிய மூத்தநாயனாரை, உள் - (எமது) மனத்தின்கண், ஊன்றுவாம் - பதிப்போம் (யாம்) எ - று.

க - ரை. உமாநாயகராகிய வெங்கைவாணர்மேற் பாடப்பட்ட கோவையென்னும் இந்தப்பிரபந்தமானது தமிழ்நாடு முழுதினும் பரவி விளங்குதற்பொருட்டு ஸ்ரீ விநாயகமூர்த்தியை எமது மனத்திற் பதித்துவைப்போம் யாம் என்பதாம்.

வி - ரை. உமாதேவி நீலநிறமாதலால் 'பூவைமலர் நிறத்தெம் பெருமாட்டி, என்றார். பெருமாட்டி யென்பதற்கு ஆண்பாற் பெயர்- பெருமான். இவ்வாறே நீலநிற முடையவனாகிய திருமாலை, "கண்ணகல் ஞாலமளந்ததூஉங் காமருசீர்த், தண்ணறும் பூங்குருந்

தஞ் சாய்த்ததூஉம், நண்ணிய, மாய்ச்சகட முதைத்ததூஉ மிம்மூன்றும், பூவைப்பூவண்ணனடி" எனவும், "மதிமன்னுமாயவன் வாண்முக மொக்கும், கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரமொக்கும், முதுநீர்ப் பழனத்துத்தாமரைத் தாளின், எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்,புதுமலரொக்குநிறம்" எனவும்,பெரியோர் கூறியிருத்தலும், "உமாதேவியை, "வேதரஞ்சகன் மால்புரந்தரன் வேகசண்டகுபேரனே, டாதியெண்டிசை பாலர்பொன்றவு மாதியந்தமி லாததோர், நாதர்பொன்றில ரேதுன்மங்கல நாணுறுந்திற மாதலால், நீ தழைந்தது யோகமம்பிகை நீலியென்றது பாவமே" எனவும், "தொடு கரச்சிலை தொடப்பொருமலர் சுரும்புநாணிடுவ தைந்துகோல், அடு படைத்தலைவ னூர்வசந்தமலை தென்றறேருருவ மருவமாம், முடுகு கொற்றமத னொருவனிப்புவன முற்றும்வெற்றிகொள முடிவிலா, நெடுமலர்க்கணருள் சிறிதளித்தனைகொ ணீலியேகரக பாலியே" எனவும், சான்றோர் கூறியிருத்தலும் காண்க. பாவை - உவமையாகு பெயர். ஒருபால் என்றது இடப்பாகத்தை. கோவை ஓர் பிரபந்தத்திற்கும் ஓர் கொடிக்கும் பெயராதலால், பிரபந்தத்திற் கேற்பப்படர்தல் எங்கும் வழங்குதல் எனவும், கொடிக்கேற்பப் படர்ந்தேறல் எனவும் பொருளுரைத்துக் கொள்க. உள் - மனத்திற்கும் உள்ளிடத்திற்கும் பெயராதலால், பிரபந்தத்திற் கேற்ப மனத்திலெனவும், கொடிக்கேற்ப உள்ளிடத்திலெனவும் பொருள்கொள்க. ஒற்றைக் கொம்பர் விநாயகர்க்கும் ஒரு கொம்புக்கும் பெயராதலால், விநாயகரை மனத்திலூன்றுவாம் எனவும், ஒரு கொள்கொம்பைக் கொடிக்கிடையேயூன்றி வைப்பாம் எனவும் உரைத்துக்கொள்க. கொம்பு என்பது கொம்பர் எனப் போலியாயிற்று. சைவசமயிக ளெல்லாரும் யாதானு மோர்நூல் செய்யப்புகுங்கால் அந்நூ லிடையூறின்றி யினிதுமுடிதற்பொருட்டு விநாயக வணக்கங்கூறல் மரபாதலால் இந்நூலாசிரியரும் விநாயகவணக்கங் கூறினரென்க. யாம் என்னுந் தோன்றுவெழுவாய் வருவித் துரைக்கப்பட்டது. ஒற்றைக்கொம்பரையுள்ளூன்றுவாம் என முடித்துக் கொள்க.

ௐ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை

மூலமும் உரையும்.

முதலாவது

களவியல்.

கைக்கிளை.

அதாவது:—ஒருதலைக்காமம். அது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்னும் நான்கு துறைகளை யுடைத்து. இதனை, அகப்பொருள் விளக்கம், களவியல், ௨-ம் சூத்திரமாகிய, "காட்சியையந் துணிவுகுறிப் பறிவென, மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை" என்பதனாலறிக. அவற்றுள்,

காட்சி.

காட்சியாவது:—தலைமகன் தலைமகளைக் காண்டல். தலைமகன் என்றும் தலைமகள் என்றும் கூறிய இவர் யாரெனின், இல்லதாகிய புனைந்துரையாற் றோன்றினோர் என்க. இவரது இலக்கணம்யாதோவெனின், பிணிமூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய், உருவும் திருவும் பருவமும் குலனும் குணமும் அன்பும் முதலியவற்றால் தம்முளொப்புமையுடையராய்ப் பொருவிறந்தாராதலென்றுணர்க. இவர் களவொழுக்கத்தில் நிகழுங்காலத்து இவர்க்கு எத்தனை யாண்டுக் கூறவேண்டுமெனின், தலைமகனுக்குப் பதினைந்தாண்டும் பத்துத்திங்களும் தலைமகளுக்குப் பதினோராண்டும் பத்துத்திங்களும் கூறவேண்டும். என்னை,-இறையனாரகப் பொருள், ௫௨-ம் சூத்திரத்தில், "களவினுட்டவிர்ச்சி வரைவினீட்டம், திங்களிரண்டி னகமெனமொழிப" என்றாராகலின் என்க. இது "உணர்ந்தார்க் குணர்வரியோன்" என்னு முதற்குறிப்பினையுடைய திருக்கோவையார்ச் செய்யுளுரையானும் இனிதுவிளங்கும். கோவைக்குத்

தலைமகன் என்றும் தலைமகள் என்றும் கூறவேண்டுமென்பது நியமம். கோவையாவது, "ஆய்ந்த கலித்துறைதா னானூ றகப்பொருண் மேல், வாய்ந்தநற் கோவையாம்" என்னும், வச்சணந்திமாலைச் செய்யுளியல், க௫-ம் செய்யுள் விதிப்படி பாடப்படுவது. பலமணிகளும் ஒரினமா யொழுங்குபடக் கோக்கப்படின் அதுகோவை யெனப் படுதல்போல அகப்பொருட்கிளவித் துறைகள் பலவும் தலைமகன் முதலானோர் மனத்தில் தோன்றும் ஒழுங்கின்படி கோக்கப்பட்டு நிற்றலால், இதுவும் கோவையெனப்பட்டது. அகப்பொருள் என்பது யாதோவெனின், அகத்திணையபயன் என்க. அகம் என்பது யாதோவெனின், ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடுங் கூட்டத்தின் பின்னர் ஆண்டு நுகர்ந்த வின்பம் எவ்வாறிருந்ததென்று அவ்விருவரில் ஒருவரை யொருவர் வினவின், தமக்குப் புலப்படக் கூறப்படாததாய், உள்ளத்துணர்வே நுகர்வதாய் அகத்தே நிகழ்தலான் அகம் எனப்பெயராயிற்று. அகத்தே நிகழ்கின்ற இன்பத்தை அகம் என்றதோ ராகுபெயர்.

பொருள் என்பது யாதோவெனின், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவென்க. அகத்தைச் சார்ந்துவரும் பொருளெல்லாம் அகப்பொருளென்றும், புறத்தைச் சார்ந்துவரும் பொருளெல்லாம் புறப்பொருளென்றும் கூறப்படும். சுவையொன்பானுள் இது இன்பச் சுவையென்று கூறப்படும். இதனைக் காமச்சுவையென்றுங் கூறுப. வடநூலார் சிருங்காரரசம் என்பர்.

இஃதெத்துணை வகையாற் கூறப்படுமோவெனின், களவு,கற்பு என்னும் இரண்டு கைகோளாற் கூறப்படும். கை என்பது ஒழுக்கம், கோள் என்பது கொள்ளுதல். ஆதலின், களவொழுக்கம்-கற்பொழுக்கம் எனப்படும். களவாவது, - தலைமகனும் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் பான்மைவகையால் தாமே யெதிர்ப்பட்டுப் புணர்தல். இது களவியல் எனவும் படும். ஆயின், களவுஎன்பது தரும நெறியன்றே, அங்ஙனமாக, இலக்கணம் பலவற்றினும் கூறிய வழக்குப் பயிற்சியாய் வருவதென்னை யெனின், களவில் தீங்கு தருவதாய் நரகத்துக்கேதுவாய் செய்யத் தகாத களவு நூல்களால் விலக்கப்பட்ட தென்றுணர்க. களவில் நன்குதரு களவுமுண்டு. அது திருவாலிநாடர்செய்த களவுபோல்வது. அறஞ்செய்ய மறமாகவும், மறஞ்செய்ய அறமாகவும் வருதலுமுள. அஃதென்னையெனின், தக்கன் வேள்வியாகிய நல்வினை செய்ய அது அவனுக்குத் தீங்குபயந்ததனால் அறஞ் செய்யமறமாயிற்று. "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்" என்றவாறே,

சாக்காடெய்தி நின்றதோருயிரை மீட்டுய்விக்கும்பொருட்டு ஒருவன் பொய் கூறினான்; அவன் பொய் கூறினது மறமேயாயினும் ஒருயிருய்தலால் அம்மறம் அறமாயிற்று. இக்களவு கேடு முதலிய துன்பங்களைத் தருவதன்றாதலாலும், எண்வகை மணத்துளொன்றாய்க் கந்தருவ நெறியென்று மறையொழுக்கமாய்க் கூறப்பட்டதாகலின் இது ‘தருமவொழுக்கமெனப்படும். ஆயின் இதற்குக் களவென்று பெயர் கூறவேண்டுவ தென்னை யெனின், பல பொருளு மறைந்திருக்குங்காரணத்தால் வேதத்தை மறையென்றல் போல, இருவரும் கரந்தவுள்ளத்தராய்ப் பிறரறியாமைக் கூடுதலால் களவியலென்று பெயர்கூறியதென்க. பின் கற்பின் வழிநின்று விளங்குதலால் குற்றமின்றெனக்கொள்க.

இக்களவொழுக்கத்திற்கு முன்னர்க் கைக்கிளை கூறப்படும். என்னை,—‘மெய்க்கிளை யாதோர் வேண்டும்புணர்ச்சிமுன், கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப” என்பதிலக்கண மாகலி னென்க. கைக்கிளை என்பது யாதோ வெனின், கை என்பது சிறுமை, கிளை என்பது உறவு, ஆகலின் சிறுமையுற வென்பது கைக்கிளை யெனப்பட்டது. கைக்குடை, கைப்பெட்டி, கையரிவாள் என வழக்கிடத்தும் கையென்பது சிறுமை குறித்து வருதல் காண்க. அஃதென்னை யெனின்; ஒருதலைக்காமம் எனப்பட்டுத் தலைமகன் கூற்றாய் நிகழ்தலா னென்க. அதனுள் இக்கிளவி காட்சி யெனப்படும்.

காணு மியல்பு யாதோவெனின், முன்சொன்ன தலைமகனும் கற்கந்தும், எறிபோத்தும், கடுங்கண்யானையும், தறுகட் பன்றியும், கருவரையும், பெருநிலனும், பெருவிசும்பும் அனையார், ஆளிமொய்ம்பினர். அரிமான் றுப்பினர் பற்பனூறாயிரவர் கூர்வேலிளையர் தற்சூழச் செல்வனென்பது முடிந்தது. தலைமகளும் உடன்பிறந்து, உடன் வளர்ந்து, நீருடனாடி, சீருடன் பெருகி, ஓலுடனூட்டப், பாலுடனுண்டு, பல்லுடனெழுந்து, சொல்லுடன்கற்றுப், பழமையும், பயிற்சியும், பண்பும், நண்பும், விழுப்பமும், ஒழுக்கமும், மாட்சியும் உடையார் பற்பனூறாயிரவர் கண்ணு மனமுங் கவரும் ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவட் டண்மதியென்னச் செல்வாளென்பது முடிந்தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது. என்னை,—அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினாற் பிரியும். என்னை பிரியுமாறெனின், ஒருவர் ஒருவரின் முன்னர்த் தழை விழையத் தக்கன கொய்துமென்றும், கண்ணிதண்ணறு நாற்றத்தன தொடுத்துமென்றும், போது தேக்கன பறித்துமென்றும், மயிலொடு மாறு

டுதுமென்றும், குயிலொடு மாறு கூவுதுமென்றும், அருவியாடி யஞ்சுனை குடைதுமென்றும், வாசமலர்க் கொடியில் ஊசலாடுதுமென்றும் பரந்து அப்பாலுள்ளார் இப்பாலுள்ளாள் கொல்லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளாள் கொல்லோவென்றும் இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது.

இவ்வகை அவளைத் தமியளாக விட்டுப் பிரிபவோ வெனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் குலத்தினள் அல்லளாகலானும், பான்மைஅவ்வகைத்தாகலானும் பிறவாறுநினையார் பிரிபவென்பது. ஆயின்இவ்வகைப்பட்டஆயத்திடைமேனாட்பிரிந்துபயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ வெனின், நிற்கும், தான் பயின்ற விடம் தன் ஆயத்தோடொக்கு மாகலா னென்பது. யாங்ஙனம் நிற்குமோ வெனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக் குயில்க ளிசைபாடத் தாதொன்ற விடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழினடுவன் ஓர்மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன்பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் றுளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள். காண்டலும், பெரியதோர் களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடிமேற்சிலம்பு சிலம்ப, அம்மலரணிக்கொம்பர் நடைகற்பதென நடந்து சென்று, நறைவிரிவேங்கை நாண்மலர் கொய்தாள். கொய்தவிடத்து, மரகதமணிவிளிம் படுத்த மாணிக்கச் சுனைமருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப்போது வேய்ந்த பூநாறுகொழுநிழற்கீழ்க்கடிக் குருக்கத்திக் கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்து வந்திழிதரும் அருவி பொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தோடு வயிரமுந்தி அணிகிள ரருவி யாடகப்பாறைமேல் அதிர்குரன் முரசின் கண்ணிரட்ட, வண்டுந்தேனும் யாழ்முரல, வரிக்குயில்க ளிசைபாட, தண்டாதுதவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்து மிசை, நீலவால வட்டம் விரித்தாற்போலத் தன்கோலக் கலாவங்கொளவிரித்து முளையிள ஞாயிற்றிளவெயிலெறிப்ப ஓரிளமயிலாடுவது கண்டு நின்றாள். அப்பால் தலைமகனும் பற்பனூறுயிரவர்கூர் வேலிளைஞரோடு குளிர் மலைச்சாரலிற் போய் வேட்டஞ்செய்து விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின் பின்னோடிக் காவ

விளைஞரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற் கான்யாற்றி னிற்கப்பணித்து, தொடுகழலடியதிரச் சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங் கண்ணிமேற்கொண்டு வண்டுமணமயர, அஞ்சாந்தி னறுநாற்ற மகன்பொழிலிடைப் பரந்துநாற, அடுசிலை யொருகணையேந்தி உருவளர் காமன்போலச் சென்று அவணின்றவிரும் பொழில்புகும். அஃதியாங்ஙனமோ வெனின், வடகடலிட்ட வொருநுகத் தொருதொளை தென்கடலிட்ட வொருகழிசென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர் மதியமுந் தக்கதிவழுவித்தலைப் பெய்தாற்போலவுந் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டனிமித்தமாகத் தமியராவ ரென்பது.

பூவும்பழுத்தசெழுந்தீங்கனியும்பொழியமுத
மேவுங்குடங்களிரண்டுடனேயிருமீனுங்கொண்டு
சேவுந்தழகர்திருவெங்கைவாணர்சிலம்பின்மலர்
தூவும்பொழிலெதிர்ப்பட்டதாலொருதூமணியே.

ப - ரை. சேஉந்து - இடபவாகனத்தை நடத்துகின்ற, அழகர் - அழகராகிய, திருவெங்கை வாணர் - திருவெங்கை வாணரது, சிலம்பில் - மலையிலுள்ள, மலர் தூவும் பொழிலில் - மலர்களைச் சொரிகின்ற சோலையினிடத்து, ஒரு தூமணி - ஒரு பரிசுத்தமாகிய மாணிக்கமானது, பூவும் - பூவினையும், பழுத்த செழுதீகனியும் - கனிந்த செழுமையாகிய மதுரம் பொருந்திய கனியையும், பொழி அமுதம் மேவும் - சொரிகின்ற பால் நிரம்பின, குடங்கள் இரண்டுடனே - இரண்டு கலசங்களோடு, இருமீனும் - இரண்டு மீன்களையும், கொண்டு - ஏந்திக்கொண்டு, எதிர்ப்பட்டது - (என்)கண்ணுற்றது. ஆல் - இதென்ன வியப்பு. எ - று.

க - ரை. இடபவூர்தியாகிய திருவெங்கைவாணர் மலையைச் சார்ந்தவோர்பூம்பொழிற்கண் ஒரு தூயமணியானது பூவையும் கனியையும் அமுத கலசங்களையும் மீன்களையுங் கொண்டு என் கண்ணுக்குப் புலப்பட்டது. இஃதென்ன வியப்பு என்பதாம்.

வி - ரை. ஏ - அசை. யாதானுமோர் நூல் செய்வோர் அதன் றொடக்கத்தில் மங்கல மொழிமுதல் வகுத்துக்கோடல் மரபாதலால் இந்நூலாசிரியரும் பூ என்னு மங்கலமொழி வகுத்துக்கொண்டனர். இது திரு, யானை, தேர் முதலிய எனைய மங்கலமொழிகளினுஞ் சிறந்ததென்பது அறிஞரெல்லார்க்கு மொத்ததுணிபு. "பூவிற்குத் தாமரையே" "பூவிற்சிறந்தது பொறிவாழ்பூவே" என்றற்றொடக்கத்

தனவற்றில் பூவென்பது தாமரைப்பூவையே யுணர்த்தலானும், ஈண்டு முகத்துக்குவமையாகப் புணர்க்கப்படுதலானும் இதுவும் தாமரைப்பூவையே யுணர்த்திற்று. ஆகவே பூவென்றது முகத்தையும், பழுத்த செழுந்தீங்கனியென்றது அதரத்தையும், பொழிய முதமேவுங் குடங்களிரண்டு என்றது தனங்களையும், இருமீன் என்றது கண்களையுங் குறித்தன. ஆல் - வியப்பிடைச்சொல். எல்லா மணிகளினுஞ் சிறந்ததாகலானுட், இபற்றைத் தூய்மைத் தாகலானும், தூமணியென்பதற்கு மாணிக்கம் எனப் பொருளுரைக்கலாயிற்று. சுவை மிகுதி தோன்ற அதரத்தை 'பழுத்த செழுந்தீங் கனி' என்றார். இதில் கனியென்றது கொவ்வைக்கனியை. இது "உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன், குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடை" "மாவைவந் தாண்டமென் ஞெக்கிதன் பங்கர்வண் டில்லைமல்லற், கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி" என்றற்றொடக்கத்தனவற்றா னறிக. மீன் எனப் பொதுப்படக் கூறினரேனும் கண்ணுக்குவமையாகப் புணர்க்கப்பட்டதனால் கயல்மீன் எனக்கொள்க. கண்ணுக்குக் கயல் மீனையே யுவமைகூறுதல், "சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத் தொடித்தோள் போற்றி, கரும்புருவச் சிலைபோற்றி கவுணியற்குப் பால்சுரந்த கலசம்போற்றி, இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட வங்கயற்கணெம்பிராட்டி, அரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள்போற்றி" "புயல்வளருசன் மூன் றடிப்பொன் னேபின்னைப் போய்ப்பொலியு, மயல்வளர்குன்றினின்றேற்றுமருவி திருவுருவிற், கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரந் தீர்த்தருளுந், தயல்வளர் மேனிய னம்பலத் தான்வரைத் தண்புனத்தே" "கயலுளவே கமலத்தலர்மீது கனிபவளத், தயலுள வேமுத்த மொத்த நிரையரனம்பலத்தி, னியலுள வேயிணைச் செப்புவெற் பாகின தீர்ங்கொடி மேற், புயலுள வேமலர் சூழ்ந்திரு ணீங்கிப் புரள்வனவே" "செழுநீர்த் தடத்துக் கயன்மிளிர்ந் தாலொப்பச் சேயரிக்கண், அழுநீர் ததும்ப வலமரு கின்றன வாழியரோ, முழுநீர் முகில்வண்ணன் கண்ணன் விண் ணாட்டவர் மூதுவராற், றொழுநீ ரிணையடிக் கேடன்பு சூட்டிய சூழ்குழற்கே" "கயலோ நுமகண்க ளென்று களிறு வினவி நிற்றிர், அயலோரறியினு மீதென்ன வார்த்தை கடல்கவர்ந்த, புயலோடலாங் கொண்டல் வண்ணன் புனவேங் கடத்தெம்மொழிம், பயலோவிலீர் சொல்லை சாக்கின்ற நாளும் பலபலவே" "இயல்பா யினவஞ்ச நோய் கொண் டேலாவு மொரோகுடங்கைக், கயல்பாய் வனபெரு நீர்க்கண் கடம்பொடிங்குன்றமொன்றாற், புயல்வா யினநிரை காத்தபுள் ளூர்

திகள் ளொருந்துழாய்க்,கொயல்வாய் மலர்மேன் மனத்தொடென்னுங்
கொலெங் கோல்வளைக்கே" என்றற் றொடக்கத் தான்றோர் செய்
யுட்களானறிக. கயல்மீன்-கெண்டைமீன். இது "மீள்வது செல்வ
தன்றன்னையிவ் வெங்கடத் தக்கடமாக்,கீள்வதுசெய்த கிழவோனொ
டுங் கிளர் கெண்டையன்ன, நீள்வது செய்தகண் ணாளிந் நெடுஞ்சுர
நீந்தியெம்மை, யாள்வதுசெய்தவன் றில்லையி னெல்லை யணுகுவரே"
அரியனயாமின்று காண்கின் றனகண்ணன் விண்ணனையாய், பெரி
யனகாதம் பொருட்கோ பிரிவென ஞாலமெய்தற், குரியன வொண்
முத்தும் பைம்பொன்னு மேந்தி யொரோகுடங்கைப், பெரியன கெ
ண்டைக் குலமிவை யோவந்து பேர்கின்றவே" என்பவற்றாற் றெள்
ளிதி னுணரப்படும். சே என்னும் ஓரெழுத்தொருமொழி விலங்கேற்
றிற்குப் பொதுவாகாது இடபத்தையே யீண்டுணர்த்திற்று. "பாறல்
புல்லம் பாண்டில்பசுமூரி, ஏறுபூணி யிறலேபெற்றம், எருது சே
விடை யிடப மென்றிவை, கருதிற் போத்தின் பெயரெனக் கருது
வர்" என்பதனானும் இது இனிது விளங்கும். "தோடுடைய செவி
யன் விடையேறி" என ஆளுடைய பிள்ளையார் தமது முதற்றிருப்
பதிகத்தின் முதற்பாட்டி லிடபவாகனத் தெழிலிற்கண் வைத்தது
போல் இவரும் முதற்பாட்டில் சேவுந்தழகர் என இடபவாகனத்
தெழிலிற்கண் வைத்ததனால், எருளு மிறையோர்க்கு விடையேற்
றமே மிகுமெழிறருவதுபோலும். சிவாலயங்களில் திருவிழாக்
காலங்களினும் இடபவாகனக் காட்சியையே மிக விழைதல் உலகியற்
கையாதல் கண்கூடாகும். சேவுந் தழகர் திருவெங்கைவாணர் சிலம்
பின்மலர் தூவும் பொழிலில் ஒரு தூமணி, பூ, கனி முதலியவற்றை
யேந்தி யென் கண்ணுக்குப் புலப்பட்டது என முடித்துக்கொள்க.
எதிரொலிக்குந் தன்மைத்தாதலால் மலையைச் சிலம்பு என்றார்.
சிலம்புதல் - ஒலித்தல். இதனை "திருத்தம் பயின்றவன் சிற்றம் ப
லத்து நெற்றித்தனிக்க, ணொருத்தன் பயிலுங் கயிலை மலையி னுயர்
குடுமித், திருத்தம் பயின்ற சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்,
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே" என
மணிவாசக ரருளிச்செயலானுங் காண்க. பிறமணிகளோ டிதற்கு
வேற்றுமை தோன்ற ஒரு தூமணி பூ முதலியவற்றைக் கொண்டு
எதிர்ப்பட்டதென்றார். மணியென்ற தீண்டு மணிபோல்வாளாகிய
தலைவியை. இது உவமையாகுபெயர். 'சேவுந்தழகர் திருவெங்கைவா
ணர் சிலம்பி லொரு தூமணி, பூ முதலிய திரவியங்களைக்கொண்டு
எதிர்ப்பட்டதனால் இனி யெனக்கு இம்மை மறுமை வீட்டின்பங்க
ளெய்தலெளிதா மென்றவாறாயிற்று. ஆல்-வியப்பிடைச்சொல். வெ
ங்காபுரம் வெங்கையென மரூஉ வாயிற்று. (௧)

ஐயம்.

அதாவது:—கண்ணுற்ற தலைமகன், மணியன்று, பெண்ணென்றறிந்து, இங்ஙனஞ் சிறந்து தோன்றலால், இவள் மானிடமாதோ, திருமகள் முதலிய தெய்வப்பெண்களி லொருத்தியோவென் றையுறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

மண்ணோவிரைச்சந்தனவரையோமலர்மாளிகையோ
விண்ணோவலைத்தண்புனலோபழமலைவெங்கையன்ன
பெண்ணோடிருக்கும்பொழுதிளஞ்சேலிற்பிறழுநெடுங்
கண்ணோடிருக்குமுகம்போல்வதாங்கதுகண்டிலமே.

ப - ரை. பழமலை - பழமலையைச் சார்ந்த, வெங்கை யன்ன - திருவெங்கை நகரத்தையொத்த, பெண்ணோடு - மாதுடன், இருக்கும்பொழுது - கூடியிருக்குங்காலத்தில், இள சேலின் - இளங்கயல்போல, பிறழும் - வலமிடமாகப் பிறழ்கின்ற, நெடுகண்ணோடு இருக்கும் - நெடிய கண்களோடு கூடியிருக்கின்ற, முகம் போல்வது - முகம்போலச் சிறந்து விளங்குவது, மண்ணோ - மண்ணுலகமோ, விரை சந்தனவரையோ - மணமுள்ள பொதிய மலையோ, மலர் மாளிகையோ - தாமரை மலராகிய வீடோ, விண்ணோ - விண்ணுலகமோ, அலை தண் புனலோ - அலைகளையுடைய குளிர்ந்த கடலோ, அது கண்டிலம் - அதனை யாம் அறிந்திலம், எ - று.

க-ரை. திருவெங்கையை நிகர்த்த இப்பெண்ணுக் கிடமாயிருப்பது மண்ணுலகோ, பொதியமலையோ, மலர்மாளிகையோ' விண்ணுலகோ, கடலோவென்பதாம்.

வி-ரை. பழமலை வெங்கையன்ன பெண்ணோடிருக்கும்பொழுதிளஞ் சேலிற் பிறழுநெடுங் கண்ணோடிருக்கு முகம்போல்வது மண்ணோ! விரைச் சந்தனவரையோ! மலர்மாளிகையோ! விண்ணோ! அலைத் தண்புனலோ! ஆங்கது கண்டிலம்,என்றமையால், இவளில்வழி மண் முதலியவை கண்ணற்ற முகம்போல அழகிழந்திருக்கு மென்றதாயிற்று. மண்முதலியவற்றீற் றோகாரங்கள் ஐயப்பொருள். பிறமரங்களுளவேனும் மிகுதிபற்றிப் பொதியமலையைச் சந்தனவரையென்றார். விரை-சாதியடை. மண்ணோவென்றமையால் மாநுடமாதோவென்றும், விரைச் சந்தனவரையோ வென்றமையால்' வரையரமகளிரோவென்றும், மலர்மாளிகையோ வென்றமையால் திருமகளோவென்றும், விண்ணோவென்றமையால் இந்திராணியோ என்றும், அலைத் தண்புனலோவென்றமையால் நீரரமகளிரோ வென்றும் ஐயநிகழ்ந்ததென்க. மலர்மாளிகையென்பது மலராணியன்ற மாளிகையெனப்

பொருள் கொள்ளக் கிடந்தது. திருமக டங்கு மலராதலால் தாம ரை மலரைக் குறித்தது. சேலின் என்பதில் இன் ஐந்தாவத னுப் புப்பொருட்டு. ஆங்கது என்பது ஒருசொல். "கூம்பலங் கைத்த லத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும், பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற், றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ ளுங்கனி வாய்க மழும்,ஆம்பலம் போதுள வோவளி காணும் மடன்பணையே" என்பதில் ஈங்கிவள்என்பது ஒருசொல்எனவும், "புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா, திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு, கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டி டென்று, வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" என் பதில், ஆங்கது என்பது ஒருசொல் எனவும் உரையாசிரியரால் எழு தப்பட்டிருத்தலை இவ்விரண்டு செய்யுட்களினுரையிற் காண்க. கண் டிலம் என்னு முளப்பாட்டுத் தன்மைப் பன்மைவினைக்கு வினை முதலாகிய யாம் என்பது பெய்துரைக்கப்பட்டது. "இளஞ்சேலிற் பிறழுநெடுங்கண்" என்றார். குருடு முதலியவற்றை யொழித்தற்கு, பிறவுறுப்புக்களோடு கூடியிருப்பினும் கண்ணோடுகூடா முகஞ்சிற வாதுபோலப்பிறபொருள்களோடுகூடியிருப்பினும்இப்பெண்ணோடு கூடா மண் முதலியவை சிறவாமை கூறியவாறு. பழமலையை விருத் தாசலம் விருத்தசைலம் விருத்தகிரியெனப் பலபெயர்களால்வழங்கு வர் வடநூலார். வெங்கையன்னபெண் என்றமையால் கண்டார்க்குப் பெருங்களிப்பைத்தரும் திருவெங்கைப்பதிபோல இவளுந் தன்னைக் கண்டார்க்குப் பெருங்களிப்பைத் தருவளென்பது வெளியாயிற்று. சில குறிகளைக் கண்டு இவள் மாநுட மாதேயெனத் துணியப்போத லைக் குறிப்பிக்க, முதற்கண் மண்ணே என்றார். அதற்குச் செய்யுள்,

இதுவுமது.

முலைப்பகையோகட்பகையோவவர்தம்முகப்பகையோ
மலைப்பகையாம்விண்முழுதாளியென்றும்வணங்குமயன்
றலைப்பகையாயகரமுடையான்வெங்கைசார்ந்துநின்ற
சிலைப்பகையாகுநறுநுதலார்தந்திருமனையே.

ப-ரை. மலைப்பகையாம்-மலைகளுக்குப் பகைவனாகிய, விண்மு ழுது ஆளி - இந்திரனானவன், என்றும் - எக்காலத்தும், வணங்கும்- வணங்குகின்ற, அயன் - பிரமனது, தலைப்பகை ஆய - தலைக்குப் பகையாகிய, கரம் உடையான் - திருக்கரத்தையுடையவனது, வெங் கை - திருவெங்கை நகரத்தை, சார்ந்துநின்ற - அடைந்துநின்ற, சிலைப்பகை ஆகும் - வில்லுக்குப்பகையாகிய, நறுநுதலார் - அழகிய

நெற்றியை யுடையவரது, திருமனை - அழகிய வீடானது, அவர்- அவரது, முலைப்பகையோ - தனங்களுக்குப் பகையாகிய மலையோ, கண்பகையோ-கண்களுக்குப் பகையாகிய கடலோ, முகப்பகையோ- முகத்திற்குப் பகையாகிய தாமரைமலரோ (யாம் அறிந்திலேம். எ - று.

ச-ரை. திருவெங்கைப் பதியைச்சார்ந்துநின்ற இப்பெண்ணிற் கிடமாயிருப்பது மலையோ, கடலோ, தாமரைமலரோ என்பதாம்.

வி-ரை. இரண்டாமடியிற்பகை பண்பாகு பெயர். பெருமை, பரப்பு, அழகு என்பவற்றிற் சிறந்தமலைகடல்மலர் என்பவற்றிற்குமுறையே முலைகண் முகம் என்பன வொப்பாதலே யன்றிச் சிறந்து விளங்குதலால் அவற்றைப்பகை யென்றார். "சிலைப்பகையாகு நறுநுதல்" என்றமையால் வில்வனப்பிற் சிறந்தது நுதலென்றதாயிற்று. "கருப்புருவச்சிலை" "வில்லொன்று வாணுதலீர்" என்பவற்றிற்போல வொப்புப்பொருளுணர்த்திற் றெனினுமாம். ஒப்புப்பொருள் கோடலும் பகைப் பொருளின் பாற்படு மென்ப தறிந்துணர்க. இதிலுள்ள ஓகாரங்கள் மூன்றும் மேலைப்பாட்டிற்போலவே ஐயப்பொருள. மலையிடத்து நிற்றலால் முலைப்பகையோ என்றும், பசும்பொற்றகடு வேய்ந்து மரகத விளிம்புநித்த மாணிக்கச் சுனையருகே, சண்பகம் பாதிரி வகுளம் அசோகு சந்தன முதலாய தருக்கண் மலர்ந்த பூநாறு சொழுநிழற்கீழ்ப் பளிக்குப் பாறைமேல் கோலக்கலாபம் விரித்து ஓர்மயிலாட நோக்கி நிற்றலால் அவ்விடப் பெருமைநோக்கி 'மலர்மாள்கையோ' என்றும் கூறினார். கூறவே, இங்கு நிற்குமிவள் வரையரமகளிரோ, நீரரமகளிரோ, திருமகளோவென் றையநிகழ்ந்ததாயிற்று. மலைகளைச் சிறையரிந்தவனாதலால் இந்திரனை 'மலைப் பகையாம் விண்முழுதாளி' என்றார், விண்முழுதாளியென்பது ஒருசொல் ஆம் என்னும் பெயரெச்சத்தை முடித்தலான். அயன் அஜன் என்னும் வடசொற்றிரிபு. இதற்குப்பொருள் பிறவாதவன் என்பது. திரு மங்கலம். தலைப்பகையாதலாவது கின்றுதல். நுதலார் என்பதற்குப் புருவத்தை யுடையவர் என்றுரைத்தலுமாம். "சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர்" என்புழியும் சிலை புருவத்தை யுணர்த்துதல் காண்க. தட்-சாரியை, திருமனை - திருமாளிகை. (ரு)

துணிவு.

அதாவது—மேல் மாநுடமாது முதலானவர்களாக ஐயுற்ற தலைமகன், கால் நிலந் தோய்தல் கண்ணிமைத்தல் கண்ணிவாடல் முதலிய குறிகளான் மாநுடமாதேயெனத் தெளிந்துரைத்தல். அதற்குச் செய்யுள்,—

சேணும்பிலமுமலர்மாளிகைபுஞ்செழுஞ்சிலம்பு
நாணும்படிநம்படியேதவப்பயனண்ணியமை
பூணும்பணியரன்வெங்கையின்மாகிழற்பூம்பொழில்வாய்க்
காணும்பிறைநுதலாட்சுமவாநின்றுகாட்டியதே.

ப-ரை. சேணும் - சுவர்க்கலோகமும், பிலமும் - பாதாளலோகமும், மலர்மாளிகையும் - தாமரைமலராகிய வீடும், செழுசிலம்பும் - செழுமையாகிய மலையும், நாணும்படி - வெள்கும்படி, நம்படியே - நமது பூமியே, தவப்பயன் நண்ணியமை - தவப்பயன் பெற்றதை, பணிபூணும் அரன் - பாம்பை ஆபரணமாகத் தரிக்கும் சிவபெருமானது, வெங்கையில் - திருவெங்கை நகரத்தில், மாகிழல் - பெருநிழலைச் செய்யும், பூம்பொழில் வாய் - பூஞ்சோலையினிடத்து, பிறை காணும் நுதலாள் - பிறைபோலத்தோன்றும் நெற்றியையுடையவளை, சுமவாநின்று - தாங்கி நின்று, காட்டியது - (எமக்குக்) காட்டிவிட்டது, எ - று.

க-ரை. இந்தப்பூமியானது இவளைத் தாங்கி நின்று விண்ணுலகு முதலாயவற்றிற் றன் றவப்பயன் பெற்றமையை யெமக்குக் காட்டிவிட்ட தென்பதாம்.

வி-ரை. சேண் - இடவாகுபெயர். பிலமும் அது. அலர்மாளிகையெனப் பிரித்தலுமாம், பொருள் வேறுபாடின்று. நாணும்படி யென்பது ஒரு சொன்னீரதாய் நாணவென்னும் பொருடந்து நின்றது. 'நம்படி, என்றான், தவப்பயனண்ணியவுலகிற் றனுளனாதல் பற்றி யென்க. பூணும்பணி என்பதற்கு ஆபரணமாகப் பூணும்பணி யென்றுரைத்துப் பிறபணிகளோடிவற்றை வேறுபடுப்பினுமாம். பணம்-படம். அதனை யுடையதாதலாற் பாம்பைப் பணி என்றார். இது வடசொல். அரன் ஹர: என்னும் வடசொற்றிரிபு. இறுதிக் காலத் தெல்லா வுயிர்களையு மடித்துப் பொடித்து நீறுயணிவோன் என்ப திதன்பொருள். நுதற்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் பிறையென்றது மூற்பக்கத் தட்ட மிச்சந்திரனை. (ச)

குறிப்பறிதல்.

அதாவது—தலைவியின் பார்வையால் தன்னிடத்து அவள் வேட்கையுண்டென்பது குறிப்பால் தலைமகனறிதல் அதற்குச்செய்யுள்,

பாயுமலர்த்தண்பொழில்சூழும்வெங்கைப்பழமலைசீ
ராயுமுனிவரர்நாயேனுமுனிவருளாக்குதல்போ
லேயுமங்நோய்க்குமருந்தாகநிற்குநாற்பகலிற்
றேயுமருங்குற்பெருமுலைமாதர்திருக்கண்களே.

ப-ரை. நூல் பகவின்-நூலிழையின் வகிர்போல, தேயும்-தேய்ந்த, மருங்குல் - இடையினையும், பெருமுலை - பெருந்தனங்களையுமுடைய, மாதர் - இம்மாதரது, திருக்கண்கள்-அழகிய கட்பார்வைகள், பாயும் - தேன் பெருகிப் பாய்கின்ற, மலர் - மலர்களையுடைய, தண்பொழில் சூழும் - குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த, வெங்கை பழமலை-திருவெங்கைப் பழமலை நாதரது, சீர்-பெருமையை, ஆயும் - ஆராய்கின்ற, முனிவரர் - முனிசிரேட்டர், தாமே - தாமே, முனிவு அருள் ஆக்குதல்போல் - கோபத்தையும் கருணையையும் செய்வது போல், நோயும் - நோயினையும், அந்நோய்க்கு - அந்த நோயினுக்கு, மருந்தும் - மருந்தினையும், தராநிற்கும் - தந்துகொண்டு நிற்கின்றன, எ - று.

க-ரை. வெங்கைப் பழமலை நாதரது சிறப்பினையாராயு முனிவரர் தாமே சாபாநுக்ரஹங்களைச் செய்வதுபோல, இம்மாதின் கட்பார்வைகள் தாமே நோயும் அந்நோய்க்கு மருந்துமாயிராநின்றனவென்பதாம்.

வி-ரை. பகவு-வகிர். இன் ஐந்தாவதனுருப்புப்பொருட்டு. தேயு மருங்குல் என்றது சிற்றிடை என்றபடி. இன் உறழ்பொருட்டாகக் கோடலுமாம். மாதர்என்றபன்மை உயர்வுகுறித்துவந்தது. கண்கள் ஆகுபெயர் கட்பார்வையை யுணர்த்தலால். பாயும் என்னும் வினைக்கேற்ற வினை முதலாகிய தேன் வருவித்துரைக்கப்பட்டது. முனிவரர் என்பதற்கு இறைவரது சீரை யிடையறாது மநநஞ்செய்வோர் என்பது பொருளாதலால்,அப்பெயர்க்கேற்ப "பாயு மலர்த்தண் பொழில் சூழும் வெங்கைப் பழமலைசீ ராயு முனிவரர்"என்றார். முனிவு-சாபம். அருள் - அநுக்ரஹம். இந்தச் சாபாநுக்ரஹ சக்தி யிவர்க்குண்டாய திறைவரதிடையறாத் தியாநத்தாலே யென்பது போதர, "பாயு மலர்த்தண் பொழில்சூழும் வெங்கைப் பழமலைசீ ராயு முனிவரர் தாமே முனிவரு ளாக்குதல்" என்றார். எனவே, வெங்கைப்பழமலை சீரா யாருக் கிவை யுளவாகாவென்பதும் வெளியாயிற்று. தராநிற்கும் என்பதற்குத் தராநின்றன வென் றுரைப்பினுமாம்.தராநிற்கும் என்பதில் இடைநிலை ஆநில். முன்னே நோய் செய்யினும் பின்னே மருந்தாயினமையால் கண்களை 'திருக்கண்கள்' என்றான். பழமலை இடவாகுபெயர். "மேருக் குவடு நிகர்தோட் பழமலை மேவுதிருத் தேருக்கு" என்புழிப்போல. தலைவி குறிப்பறிதற்குக் கருவியாய் எல்லா அவயவங்களினுங் கண்சிறந்தமையின், 'திருக்கண்களை' என்று விதந்து கூறினான். "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லையாவதுங் காட்டியதே" "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்வாய்ச்சொற்க,

ளென்னபயனுமில" "ஒருநோக்கிவ ளுண்க ணுள்ள தொருநோக்கு: நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" என்றற் றொடக்கத்தனவற்றா னுங் கண்ணிற் சிறந்த வுறுப்பின் றென்பதறிக. (௫)

கைக்கிளை முற்றிற்று.

இயற்கைப்புணர்ச்சி.

அதாவது:—தெய்வத்தாற் கூடுதலும் தலைவியாற் கூடுதலும் என இயற்கைப்புணர்ச்சி யிருவகைப்படும். தெய்வப்புணர்ச்சி பாடுவார் சிலர். தலைவியிற் புணர்ச்சிபாடுவார் சிலர். அவற்றுள் இச்செய்யுள் தலைவியிற் புணர்ச்சியாய இயற்கைப் புணர்ச்சியெனக்கொள்க. "வேட்கை யுணர்த்தல் மறுத்தலுடன்படல், கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே" என்னும் விதியால் இயற்கைப்புணர்ச்சி நான்குவகைப்படும். அவை வருமாறு,—

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

அதாவது:—தலைவன் தலைவியை யிரந்து பின்னிற்றற்கெண்ணல். (பின்னிற்றல் - இரந்துசொல்லல்) அதற்குச் செய்யுள்,—

புரந்தாடுமையர் திருவெங்கைவாணர் பொருப்பினின்ற
வரந்தாழயிற்கண் மடமாதிரக்கத்தக்கவாறதனா
லிரந்தாய்குவமிவர் தந்தனநாமின் றினியநெஞ்சே
கரந்தாலமக்குப்பழியுளதாயிற்கழறுகவே.

ப - ரை. இனியநெஞ்சே-(எனக்கு) இனிதாகியமனமே, புரந்து ஆடும் ஐயர் - யாவரையும் காக்கும்பொருட்டு திருநடனம் செய்யும் தலைவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைத்தலத்தில் வாழ்பவர், (அவரது) பொருப்பில் நின்ற - மலையின்கண் நிற்கின்ற, அரம்தாழ் - அரத்தினால் அராவப்பட்ட, அயில் - வேல்போன்ற, கண்-கண்களை யுடைய, மடமாது-மடப்பத்தையுடைய மாதரை, இரக்கத்தக்க ஆறதனால் - இரக்கத்தக்க வழியினால், இரந்து - வேண்டி, இவர்தம் தனம் - இவரது தனத்தினை, ஆய்குவம் - ஆராய்வோம், கரந்தால் - இவர் இல்லையென்று ஒளிப்பாராயின், நமக்கு-எமக்கு, பழி உளது ஆயின் - பழியுண்டாமாயின், கழறுக - நீ சொல்லுக எ - று.

க - ரை. இனிதாகிய என் மனமே! திருவெங்கைவாணரது மலையில் நிற்கின்ற மடமாதினை யிரந்து அவரது தனத்தை யாராய்வோம், அவர் இல்லையென் றொளிப்பின், அவர்க்கேபழியுளதாமன்றி நமக்குளதாகாது, உளதாயின் நீ சொல்லுகவென்பதாம்.

வி - ரை. புரந்து செயவெனெச்சத்திரிபு. அரம் தாழ் என்றது அரத்தினால் அராவப்பட்ட என்றபடி, இரக்கத்தக்க எனற்பாலது

இரத்தக்க எனத் தொகுத்தலாயிற்று. ஆறதனால் என்பதில் அது பகுதிப்பொருள்விகுதி, ஆறாகிய அதனால் என்றுரைப்பினுமாம் ஆய்குவம் என்றது பரிசிப்போம் என்றபடி. பரிசித்தல் - கூடுதல். இவர் தந்தனம் என்பதில் தம் சாரியை. தனம் ஈண்டு செல்வத்தையும் கொங்கையையு முணர்த்திற்று. நமக்குப் பழியுளதாயின் என்றதில் ஆயின் என்பது உளதாகாதென்பது படவந்தது. (௬)

இரந்துபின்னிலைநிற்றல்.

அதாவது—தலைவியை யிரந்து இதஞ்சொல்லுதல், (நிலையாகப் பின்னிற்றல்) என மாற்றிக்கொள்க. அதற்குச் செய்யுள்,—

தாளுந் தரக்கன் றனைமீண் டெடுத்துய்யத் தண்ணளியா
லாளும் பழமலை வெங்கையன் னீரொன் றலாதுபல
வாளுங் கணையுங் கதிர்வேலு மானு மதர்விழியா
னீளுந் துயர்செய்து வாளாநின் றீரிது நீதியன்றே.

ப - ரை. தாள் உந்து - திருவடியால் அழுத்தின, அரக்கன் தன்னை - அரக்கனாகிய இராவணனை, மீண்டு எடுத்து - மீட்டும் எடுத்து, உய்ய-அவன் பிழைக்கும்படி, தண்ணளியால் - தண் பெருங்கருணையால், ஆளும் - ஆண்டருளின, பழமலை வெங்கை-பழமலைநாதரது வெங்கைத்தலத்தை, அன்னீர் - நிகர்த்தவரே, ஒன்று அல்லாது - ஒன்றல்லாமல், பல - பலவாகிய, வாளும்கணையும் - வாட்களையும் அம்புகளையும், கதிர்வேலும் - ஒளியையுடைய வேற்படைகளையும், மானும் - நிகர்த்த, மதர் விழியால் - மதர்த்த கண்களைக் கொண்டு, நீளுந்துயர்செய்து - பெருந்துயரத்தை எனக்குஉண்டாக்கிவிட்டு, வாளாநின்றீர் - (ஒன்றுமறியாதார்போல) சும்மா நிற்கின்றீர், இது-இவ்வாறு நிற்றல், நீதிஅன்று-உமக்கு நியாயமன்று, எ-று.

க - ரை. திருவடியாலழுத்தின ராவணனைக்கருணையாலெடுத்தாண்டருளின இறைவனது வெங்கைப்பதியை நிகர்த்தவரே, பலவாகிய வாட்படை முதலியவற்றை நிகர்க்கின்ற நுமதுகண்களால் எனக்குப் பெருந்துயர் விளைத்து வாளாநிற்பது உமக்கு நீதியன்றென்பதாம்.

வி-ரை. அரக்கன் என வாளா கூறினரேனும் தாளுந்து என்றதனாலும், மீண்டெடுத்துய்யத் தண்ணளியால் ஆளும் என்றதனாலும் இராவணனை யுணர்த்திற்று. இறைவன் பெருங்கருணைக் கடலாதலால் இராவணன்செய்த இருபிழை பொறுத்து கடுந்தண்டம் புரியாது தகவொறுத் தாண்டருளினன் என்பது போதர "தாளுந் தரக்கன்

றனைமீண் டெடுத்துய்யத் தண்ணளியா, லாளும் பழமலை வெங்கை" என்றான். 'ஒன்றலாது பலவாளுங் கணையுங் கதிர்வேலு மானுமதர் விழி' என்றதனால் அவற்றினுங் கூரிது கொடியது கொலைத்தொழிலது இக்கண்ணென்பது தெற்றென விளங்கிற்று. இராவணனுக்குச் சிறுதுயர்செய்து அதுவும் அவன் பொருட்டென்றிரங்கி யவனையாண் டருளின இறைவரது திருவெங்கைப்பதியிலுள்ளீராதலால் நீயிரும் எனக்குச் சிறுதுயர்செய்து பின்னையுமது தண்ணளியாலாடற் குரித் தாதல்விட்டுப் பெருந்துயர் செய்து அதனை யொழித்தலுஞ் செய் யாது வாளாநிற்றல் உமக்குத் தகவன்றென்பது போதர, இவ்வாறு கூறினன். வாளா என்றது பரிகரிக்கமுயலாது என்றபடி. இது நீதியன்று என்றதனால் வாளாவில்லா தத்துயரை யொழிக்க முயல்வதே நீதி யென்றதாயிற்று. ஈற்றேகாரம் இரங்கற் குறிப்பின் கண் வந்தது. (எ)

முன்னிலையாக்கல்.

அதாவது:—தலைமகன் தலைமகளை முன்னிலையாக்கிக் கூறுதல். அஃதென்னையெனின், காரியத்திற்கு முன்னிற்பது யாதோ அது முன்னிலையெனப்படும். முன்னிலையெனினும் முதனிலையெனினும் காரணமெனினு மொக்கும். இஃதென்சொல்லியவாறோ வெனின், தலைவி நிற்பது தன் காரணமாக்கிக் கூறுதல். அதற்குச் செய்யுள்;—

பாரக்கைச்சூலத்தர்வெங்கையிலேகண்பகைத்துநின்ற
வாரக்கட்பூஞ்சுனைப்போதையெல்லாமடலோடுமடல்
சேரக்கட்டிக்குழற்காட்டிலிடாமற்சிறந்தவலங்
காரக்கட்பேதைதனித்துநின்றாயென்னகாரணமே.

ப - ரை. சிறந்த - சிறப்பாகிய, அலங்காரம்-சௌந்தரியமுள்ள, கண் - கண்களையுடைய, பேதை - பேதாய், கைபாரம் சூலத்தர் - (தமது) கையின்கண்ணே பாரமாகிய சூலாயுதத்தை யுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே-திருவெங்கைத் தலத்தில், கண் பகைத்து நின்ற - கண்களோடு பகைகொண்டு நின்ற, அ - அந்த, கள் வார் - தேன் ஒழுகுகின்ற, பூ - பொலிவாகிய, சுனைப்போதை எல்லாம் - சுனைமலர்களையெல்லாம், மடலோடு மடல் சேரக்கட்டி - மடலோடு மடல் சேரும்படி கட்டி, குழல் காட்டில் இடாமல் - கூந்தலாகிய காட்டினிடத்துச் செலுத்தாமல், தனித்துநின்றாய் - தனிமையாய் நிற்கின்றனை, (இப்படி நிற்றற்குக்) காரணம் என்ன - காரணம் யாது, எ - று.

க - ரை. பேதாய்! உன் கண்களோடு பகைத்துநின்ற சுனை மலர்களை மடலோடு மடல் பொருந்தப் பிணித்துக் குழற்காட்டி விடாமல் நீ தனித்துநிற்றற்குக் காரணம் யாது? கூறுவாயாக வென்பதாம்.

வி - ரை. சிவபிரான் திருக்கரத்துப் பிறபடைகளு ளூமேவேனும் சூலம் சிறந்தமையின், 'பாரக்கைச் சூலத்தர்' என்றார். சுனைப்போது பலவேனும் கண்பகைத்துநின்ற என்ற குறிப்பால் நீலமலர் எனக் கொள்க. மடல் - இதழ், சேரக்கட்டி - மாலையாகப்பிணைத்து என்றபடி. பகைவரை மடலோடு மடல் (கையோடுகை) பொருந்தக் கட்டிக் காட்டிற்கனுப்புத லுலகவியற்கையாதலால், நீயும் உன் கண்ணுக்குப் பகையாகிய நீலமலர்களை மடலோடுமடல் சேரக்கட்டிக் கூந்தற் காட்டிவிடுதல் முறைமையாதல்பற்றி நீ யதுசெய்யாது நிற்றல் அறிவொடுபடாத செய்கையென்பது போதர, பேதையென்றான். நீ தனித்திருந்து அதுசெய்யு மாற்றலுடையை யல்லையாயின் எம்போல்வாரைத் துணைகொள்ளாமையும் பேதைமையாமென்பது தோன்ற, பேதையென்றான் எனினுமாம். வார் நீருக்குப் பெயராதலால், சுனைப்போது உன் கண்ணுக்குத் தோற்று நீர்சொரிநாநின்ற கண்ணோ டிருப்பதுநோக்கி இரக்கமுற்று அவற்றை மடலோடுமடல் சேரக்கட்டிக் குழற்காட்டி விடாது நின்றனைபோலும், அது செய்தலும் பேதைமை யென்பது தோன்ற, பேதை யென்றான் எனினுமாம். "தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார், அழுதகண்ணீரு மனைத்து" என்பது திருக்குறள். பேதை அண்மைவிளியாதலா லியல்பாயிற்று. ஏற்றேகாரம் இரங்கற்குறிப்பு. (அ)

மெய்தொட்டுப்பயிறல்.

அதாவது:—தலைவன் தலைவிமெய்யினைத் தீண்டாநின்று நெருங்குதல். தீண்டுமாறென்னை, மெய்யைத் தொடக்கொடுப்பின் நாணிலளாம், நாணுடையளெனின் தொட்டதின்றாம். மற்றென்னையெனின், நாணுமுடையள், தொட்டதுமுண்டு. எனல் வேண்டும், எவ்வாறெனின்,

புனலோடும்வழிப் புற்சாய்ந்து புறங்கிடப்பதுபோல வேட்கைமீதூரப்பட்டு நாணமொருபாற் சாய்ந்து கிடப்ப நின்றாளென்க. அக்காலத்தே தலைவன் தீண்டற் கஞ்சிநின்று அவள் குழலில் வண்டோச்சுவதுபோல நெருங்கி வண்டோச்சுகையில் கைபட்டதுபோலத் தொட்டானென்க. அங்ஙனந் தீண்டலிற் பயனென்னெனின், இவனுக்கு ஊற்றின்பமும் தலைவி நாணத் தன்வயப்படுத்தலும் பயனென்க. பயிறல்-பழகுதலென்பாருமுளர். நெருங்கி நிற்றலால் பழ

கூறலுமாம். நச்சினார்க்கினியர் மெய்தொட்டுப் பயிறல் என்பதற்கு, புலையன் தீம்பால்போல மனங்கொண்டுங் கொள்ளாதது மாயிருக்கும்போது தொட்டானென் றுரையுரைத்தார். அஃதென்னையெனின், புலையன் தொட்டானென்பதனால் சிறிது அருவருப்பும், பாலுக்குக் குற்ற மின்றென்பதனால் விருப்புமென்றறிக. அருவருப்பும் விருப்பும் இவட்கெற்றிற் றுயதோவெனின், களவொழுக்கம் என்பதனால் அருவருப்பும், கந்தருவமணம் என்பதனால் விருப்புமுள வாயவென்க. இவனெவ்வுறுப்பைத் தொட்டானெனின், தோளையென்க. இது, "உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்கமிழ்தி னியன்றன தோள்" என்னுந் திருக்குறளா லினிதுவிளங்கும். அதற்குச் செய்யுள்,—

மெய்கூறிடும்வரைமங்கைமணாளர்தம்வெங்கையினிற்
பொய்கூறிலஞ்சிலர்போலிலையேயெனப்புல்லிழையிற்
செய்கூறதிலொன்றளவுளதேயிவள்சிற்றிடைதான்
மைகூர்குழலில்வெறிகொண்டுலாவுமதுகரமே.

ப-ரை. மை கூர் குழலில் - கருமை மிகுந்த கூந்தலில், வெறி கொண்டு உலாவும் - வெறிகொண்டு உலவுகின்ற, மதுகரமே-வண்டுகளே, மெய்-தமது திருமேனியை, கூறு இடும்-பாகித்துக்கொள்ளுகின்ற, வரை மங்கை - மலையரையன் புத்திரியாகிய உமாதேவியாருக்கு, மணாளர் - மணவாளராகிய சிவபெருமானாரது, வெங்கையினில் - திருவெங்கைத் தலத்தில், சிலர் போல் - சிலர்போல, இல்லையே என - இல்லையேயென்று, பொய் கூறிலம் - யாம் பொய் சொல்லோம், (மற்றென்னெனின்) இவள் சிற்றிடை - இவளது சிறிய இடையானது, புல் இழையில்-நுண்ணிய நூலிழையை, செய்-வகிர்ந்த, கூறு - கூறாகிய, அதில் - அதன்கண், ஒன்று அளவு உளதே - ஒன்றின் அளவினை உடையதாக விருக்கின்றதே, (அஃது இங்ஙனமாகச் சிலர்பொய்கூறுவது யாதுகருதி) (இனி நீவிர்அக்குழலைவிட்டு நீங்குவீராக), எ - று.

க - ரை. இவளது கருங்கூந்தலில் வெறிகொண்டுலாவும் வண்டுகளே! இவளது சிற்றிடை யில்லையென்று சிலர் பொய்கூறுவர், அற்றன்று, நுண்ணூலிழையொன்றின் கூற்றி னளவிற்றாயிருக்கின்றதே, அந்நுண்ணிடையின் நொய்ம்மை யெண்ணாது நீவிரிங்ஙனஞ் செய்தல் தகாதென்பதாம்.

வி - ரை. வரைமங்கை மணாளர் என்றது இறைவிக்கும் இறைவர்க்கும் பொருத்தமுண்மை யுணர்த்திற்று. என்னை; இறைவிக்குப்

பொன்மலையும் இறைவற்கு வெள்ளிமலையும் ஆட்சியாதலாலென்க. இமயமலை பொன்மலையென்பது, "சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த, பருப்பொரு டானும் விழுப்பொருளாம் பனி மாலிமயப், பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக்கருங் காக்கையும் பொன்னிறமா, யிருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ் விருநிலமே" "டள்ளி மால்வரை பொன்னென னோக்கிவான், வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள், உள்ளி யுள்ளவெ லாமுவந் தீயுமவ், வள்ளி யோரின் வழங்கின மேகமே" என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களாற் பெறும். சிலர் என்றது "அறந்திகழ் தவமு மகிலமு மிதனா லழியுமென் றயன்படைத் திலனோ, சிறந்தவேல் விழியை முன்படைத் தயர்ந்து செங்கரஞ் சோர்ந்ததோ திகைத்து, மறந்ததோ கரந்து வைத்ததோ களப வனமுலைப்பொறைசுமந் துருகி, இறந்ததோ வுளதோ வில்லையோ வினிமே லெய்துமோ வறியொணா திடையே" என்றற்றொடக்கத்துக் கவிபாடுவாரை. உளதேயென்பதிலேகாரம் இரங்கற் குறிப்புப்பொருட்டு. வெறி-மணம், கள். வெறிகொண்டு என்பதற்கு மணத்தை விரும்பியென்றும் கள்தேனாதலால் தேனை விரும்பியென்றும் உரைத்துக்கொள்க. வெறிகொண்டலாவும் என்பதற்கு கள்ளைக்குடித்துக் களித்துத்திரிகின்ற என்றும் பைத்தியங்கொண்டலைகின்ற என்றும் பொருளுரைத்து, இவ்வியற்கையிராதலால் இவளது இடையிட்டிமை நோக்கிற் றிலீரென்றிழித்துரைத்ததாகக்கொள்க. மதுகரம்-வடசொல். இதற்குத் தேனையீட்டுவது என்பது பொருள். இதனால், இனிய தேனையீட்டு மியல்பினிராகிய நீவிர் இவளிடையை முறித்துப் பழிபாவங்களை யீட்டல் தகாதென்றதுமாயிற்று. வெறிகொண்டலாவுவீர் நீவிர், உமக் குலாவிடம் மைகூர்குழல். நுமக்குக் காரியாகாரிய மெங்ஙனந்தோன்று மென்பதும் உள்ளுறையா யமைந்திருத்தல் காண்க. இனி நீவிர் அக்குழலை விட்டு நீங்குவீராக என்ப திசையெச்சமாய் வருவிக்கப்பட்டது. அதற்குச் செய்யுள்;—

இதுவுமது.

மன்னிசைவெங்கையுடையபிரான்வரைமானுசுப்பைப்
பொன்னிசைகொங்கையொடித்தாலுநிந்தைபொருந்துநமை
மின்னிசைமென்குழலேறன்மின்னீர்விளங்கிலிரோ
வின்னிசைவண்டினங்காள்காதலியமென்பதுவே.

ப-ரை. இன் இசை - இனிய இசை பாடுகின்ற, வண்டு இனங்காள் - வண்டினங்களே, மன் - நிலைபெற்ற, இசை - கீர்த்திபொருந்திய. வெங்கை - திருவெங்கைத்தலத்தை, உடைய - தன்வாழ்விட

மாகக்கொண்ட, பிரான் - சிவபிரானது, வரை-மலையிலுள்ள, மான் - இம்மாதினது, நுசுப்பை - இடையை, பொன் இசை கொங்கை - தேமல் பரவிய கொங்கைகள், ஒடித்தாலும்-முறித்தாலும், நிந்தை-பழியானது, நும்மை பொருந்தும் - உங்களைச்சேரும், (ஆதலால்), மின் இசை-மின்னுதலைப் பொருந்திய, மென்குழல்-மெல்லிய கூந்தலின்மீது, எறன்மின் - ஏறுதீர்கள், காகதாலியம் என்பது - காகதாலியம் என்னும் நியாயத்தை, நீவிர் விளங்கிலிரோ-நீங்கள் அறிந்திலீரோ. எ - று.

க-ரை. இன்னிசை வண்டினங்காள்! இவளது இட்டிடை முறிக்கக் கொங்கைகளே யமையும். இடைமுறி பழியைக் குழலேற்றத்தால் நீவிரேலாதொழிமின். காகதாலிய நியாயத்தை நீவிரறிந்திலீர் போலும் என்பதாம்.

வி-ரை. இறைவற்குளதாயவிசை பிறதெய்வங்கட் குளவாய மன்னுவிசை போலாது என்ஞான்று நிலைபெற்று விளங்குதலால் 'மன்னிசை வெங்கையுடைய பிரான்,' என்றார். தீமை செய்தவன் பழிபாவங்கட் காளாவதிடல்பாக, செய்யாதவன் ஆளாத றகாதகாரியம், இடையை முறிக்கும்பழி கொங்கையேற்றலியற்கையாக, நீவிரேற்பது, காகதாலிய நியாயம் போலும். காகதாலியம்-தருக்கநூலினோர் நியாயம்; அது காகமேறிப் பனம்பழம் வீழ்ந்ததென்பது. பொன் - தேமல். பொன்மலையெனினும் அழகு எனினுமாம். மின் - முதனிலைத்தொழிற் பெயர். இன்னிசை-இனிதாகிய கீர்த்தியெனினுமாம். இனிதாகிய கீர்த்தியாவது - நல்லார் விழிபோலிருத்தல். அளியெனு நாமம் பெறுதல் முதலாயின, மேலைச்செய்யுளில்'மைகூர் குழலில் வெறிகொண் டுலாவுமதுகரமே'என்றது காரியாகாரிய மறியாமைக்குச் சாலப்பொருத்த முடைத்து, மின்னிசை மென்குழலேறல் பொருத்தமுடைத்தன்று; ஆதலால் நியாயநூலுதாரணமுங் காட்டிக் கூறலாயிற்று. மின்னிசை மென்குழல் என்பதற்கு, செய்ய வேண்டுஞ் சிறப்பெல்லாஞ் செய்யப்பட்டு விளங்குகிற மெல்லிய கூந்தலென்றுரைத்துக்கொள்க. செய்யவேண்டுஞ் சிறப்புக்களெல்லாம் என்றதை, திருமுருகாற்றுப்படையில் "துவர முடித்த துகளறு முச்சி" என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதின வுரையாலறிக. மன்னிசை யென்பதற்கு இறைமைத்தன்மை யமைந்த என்றுரைத்தலுமாம். பிரான் என்பதற்கு உபகாரகுணமுள்ளவன் என்பது பொருள். இறைவற்கு உபகாரகுணமாவது ஆன்மாக்கண்மேல் வைத்த பெருங்கருணை. மான் - உவமையாகுபெயர். இத் துறை வண்டு முன்னிலை

யாகப் பாடவேண்டுமென்பது நியமமாதலால் மேலைச்செய்யுளும் இச்செய்யுளும் அவ்வாறே பாடப்பட்டன. (௧௦)

பொய்பாராட்டல்.

அதாவது:—தலைமகன் தலைமகள் மாட்டுள்ளதும் இல்லதுஞ் சேர்த்துக் கொண்டாடுதல். (உள்ளது மில்லதும் சேர்த்துக்கொண்டாடுதல் - மிகுதியாகக் கொண்டாடுதல்). அதற்குச் செய்யுள்;

முழுதலங்காரமழுவோன்றிருவெங்கைமொய்குழலுன்
பழுதறுங்கொங்கைக்குடைதுயராற்பனிமாமலய
மழுதகண்ணீரைப்பொருநையென்பாரதன்வெய் துயிர்ப்பை
யெழுதருந்தென்றலெனவேயுலகரியம்புவரே.

ப - ரை. முழுது அலங்காரம் - அதிக சவுந்தரியத்தையுடைய, மழுவோன்-மழுப்படையை யுடையவனாகிய சிவபெருமானது, திருவெங்கை - திருவெங்கைத் தலத்திலுள்ள, மொய்குழல் - மொய்குழலே, பனி - குளிர்ச்சி பொருந்திய, மா - அழகாகிய, மலயம் - பொதியமலையானது, உன் - உன்னுடைய, பழுது அறும் - குற்றமற்ற, கொங்கைக்கு - தனங்களுக்கு, உடை - தோற்றுப்போன, துயரால் - துன்பத்தால், அழுத - அழுததனாற் பெருகிய, கண்ணீரை - கண்ணீரினை, உலகர் - இவ்வுலகத்தார், பொருநை என்பார் - பொருநைநதி யென்று சொல்லுவர், அதன் - அம்மலையினது, வெய்துயிர்ப்பை - பெருமூச்சை, எழுதரும் - எழுகின்ற, தென்றல் என - தென்றற் காற்றென்று, இயம்புவர் - சொல்லுவர், எ - று.

க-ரை. திருவெங்கை மொய்குழால்! பொதிகைமலையானது உன் கொங்கைக்குடைந்து அழுதகண்ணீரைப் பொருநையாறெனவும் அதன் வெய்துயிர்ப்பை தென்றற்காற்றெனவும் இவ்வுலகத்தார் கூறுகின்றனர் என்பதாம்.

வி-ரை. முழுதலங்காரம் - மிகுந்த அழகு. மொய்குழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். இது அண்மை விளியாதலா லியல்பாயிற்று. பழுதறுங் கொங்கையென்றது சாய்ந்துபடுதல் முதலிய குற்றங்களின்றி யெஞ்ஞான்றுஞ் சாயாம லிறுமாப்பு முதலிய குணங்களோடு கூடியிருக்குங் கொங்கை யென்றவாறு. "கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர், படாஅ முலைமேற் றுகில்" என்பது திருக்குறள்; "வாரிட்டு விம்மிப் புடைத்திறுகி யிளகிமணி மார்பிட மெலாங்கவர்ந்து; வட்ட

மிட் டடியிட்டு நாளுக்கு நாண்மேல் வளர்ந்துபூ ரித்துமுத்து, மாலை யிட் டிறுமாந்து பட்டவர்த் தநயானை மத்தகத் தோடெதிர்த்து, வா திட்டு மல்லிகைப் பூச்செண் டினைத்தினம் வாட்டப் படுத்திவரை யைப், போரிட்டு மைந்தர்கண் மனஞ்சூறை யிட்டுமேற் புளகித்து வஜ்ரரத்நப், புதுச்செப் பினைத்தோழ மைக்கொண்டு பொன்னினைப் பொடியா வராவிமீதிற், போட்டிட்ட தென்னவே தேமல்படர்ந்து செம் பொற்சரிகை வேலையிட்டுப், புனைதரு ரவிக்கையை யிறுக்கிக் கிழித்துப் புறப்பட்டு மல்லிகைப்பூந், தாரிட்டு வரவரப் பளபளப் பாகியுயர் தங்கக் கிணத்தை யொத்துச், சந்த்ரகா விச்சேலை வல்ல வாட் டுக்குட் டதும்பியண் ணுந்திடையினித், தாங்கா தெனக்கனத் தோங்கிமன் மதனுஞ் சலாமிட்டு நிற்கவுந்தான், சீரிட்டு நின்றுதந் தலைவணங் காமற் றிரண்டபூண்முலைகள்' ஆச்செய்யுளிற் புனைந்துரை க்கப்பட்டவையாவும்அவற்றிற்குரிய குணங்களாகவும்அவையின்மை குற்றமாகவும் உரைத்துக் கொள்க. ஒருவற் குடைந்தவன் கண்ணீர் விடுதலும் நெட்டுயிர்ப் பெறிதலும் உலகியற்கையாதலால், மலயமும் கொங்கைக்குடை துயரார் கண்ணீர்சிந்தி வெய்துயிர்த்ததாகக் கூற ப்பட்டது. பொருநை - தாமிரபர்ணி நதி. இதன் பிறப்பிடம் பொதி கை. தென்றற்கும் பிறப்பிடம் அதுவே. (கக)

இதுவுமது.

உன்மலைவார்முலைநல்லேர்கவர்ந்தது தவுதற்குப்
பொன்மலைநாணொண்கழுத்தொடுதாளுறப்பூட்டிவெங்கை
மன்மலைமாதுமைபங்காளன்முன்னம்வளைத்ததன்றி
வின்மலையாக்குதலென்மிளிர்வேற்கண்விளங்கிழையே.

ப-உ.ர. மிளிர் - விளங்குகின்ற, வேல் - வேற்படையை நிகர் த்த, கண் - கண்களையும், விளங்கு இழையே - பிரகாசிக்கின்ற ஆபரணங்களையும் அணிந்தமாதே, வெங்கைமன் - திருவெங்கைத் தலத்திற் கிறைவன், மலைமாது - மலையரையன் பெண்ணாகிய, உமை பங்காளன் - உமைபங்கன், (அவன்) முன்னம் - முற்காலத் தில், பொன்மலை - பொன்மலையானது, கவர்ந்தது - கவர்ந்துகொ ண்டதாகிய, உன் - உன்னுடைய, வார்-கச்சணிந்த, மலை - மலையை நிகர்த்த, முலை - ஸ்தனங்களின், நல் ஏர் - மிக்க அழகை, உதவு தற்கு - மீட்டும் கொடுத்தற்பொருட்டு, ஒண்கழுத்தொடு - அழகா கிய கண்டத்துடன், தாள் உற-அடிபொருந்தும்படி, நாண் பூட்டி - நாண்தொடுத்து, வளைத்தது அன்றி - வளைத்ததேயல்லாமல், மலை - மலையை, வில் ஆக்குதல் - வில்லாகச் செய்துகொள்ளுதற்குக் கார ணம், என் - யாது, எ-று.

க - ரை. மிளிர்வேற்கண் விளங்கிழையே! பொன்மலையாகிய மேருவானது உன் கொங்கையின் அழகைக் கவர்ந்துகொண்டதென்றும் அதனை மீட்டுக்கொடுக்க வேண்டுமென்றும் திருவுளம்பற்றியே திருவெங்கைநாதர் அதனை வில்லாக வளைத்தனர் என்பதாம்.

வி - ரை. பொன்மலை - மேருபர்வதம். நாலெண்ணகழுத்தொடு தாள் உறப்பூட்டி யென்றது, அண்ணாந்தாள்பூட்டி யென்றபடி. இது கள்வர் முதலியோரிடத்துப் பொருள்மீட்கும் பொருட்டுச் செய்வதோர் கடுந்தண்டம். வெங்கைமன் என்பதற்கு - திருவெங்கைப் பதியில் நிலைபெற்றிருக்கிற என்றுரைத்தலுமாம். இப் பொருட்கு மன் என்னும் காலங்கரந்த பெயரெச்சம் மலைமாதுமை பங்காளன் என்னும்பெயர்கொண்டு முடிந்ததாகக்கொள்க. பங்காளன்-(இடப்) பாகத்தையுடையவன். முன்னம் என்றது திரிபுர சங்காரகாலத்தை. வேற்கண் விளங்கிழை - வேல்போலுங் கண்களையுடைய விளங்கிழையெனினுமாம். இப்பொருட்கு விளங்கிழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். கண்களுக்கு வேல்போலவருத்துந் தொழிலுண்மையால் வேற்கண் எனப்பட்டது. இது "கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் பொடுங்கிரவுஞ்ச வெற்பைத், தொளைத்துப் புறப்பட்ட வேன்முரு காதுநவோருளத்தை, வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க், கிளைத்துத் தவிக்கின்ற வென்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்கானும் அநுபவத்தானும் இனிது விளங்கும். மேலைச் செய்யுளிலும் இச்செய்யுளிலும், கொங்கைக் குடைதுய ராற்பனி மாமலயம், அழுதகண் ணீரைப் பொருநையென் பாரதன் வெய்துயிர்ப்பை, யெழுதருந் தென்றலெனவே யுலக ரியம்புவர்" என்றதும், "உன்மலை வார்முலை நல்லேர் கவர்ந்த துதவுதற்குப், பொன்மலை நாலெண் கழுத்தொடு தாளுறப் பூட்டிவெங்கை, மன்மலை மாதுமை பங்காளன் முன்னம் வளைத்தது" என்றதும், இல்லது சேர்த்துக் கொண்டாடுதலென்றுணர்க. மகளிர் உறுப்புப் பலவற்றினு முகனும் முலையும் சிறந்தனவாதலானும் இவ்விரண்டி னொன்றைப் புகழ்ந்து இக்கிளவிக்குப் பாடவேண்டுமென்பது புலவர்வழக் காதலானும், இவ்விரண்டு செய்யுளானும் முலையையே புகழ்ந்து பாடியவாறாயிற்று. (கஉ)

இடம்பெற்றுத்தழால்.

அதாவது,—தலைவிசிறிது மிடத்துக்கயலே தேனருவிபாயு மாற்றங்கரையிலோ ரசோகமரத்தைப் பூங்கொடி சூழ்ந்து படர்ந்

திருக்க, மாதவிக்கொடி மலர்பூத்துநிற்க, வண்டுந்தேனும் பாடாநிற்க, குயில் கூவாநிற்க, தென்றல் வீசாநிற்க, மணல்பரந்து பூந்தாது தவிசுபடுத்தாற்போற் பொலியும் அவ்விடத்தைக்கண்ணுற்று, ஆண்டுத் தலைவியைத் தலைவன்றழுவ விருப்புற்றுக் கூறாநிற்றல். இங்ஙனம் விரித்துச் சிறப்பித்துக் கூறுதலெற்றுக் கெனின், களவிற் பகற்குறியிற்கூடுங் கூட்டமெல்லாவற்றிற்கும் இதுவே குறியிடமாக நிற்றலினென்க. அதற்குச் செய்யுள்,—

வந்தாளுமையர் திருவெங்கைவாணர்வரையணங்கே
நந்தாமணிவிளக்குற்றுதிர் பூவணைநன்கமைந்த
பைந்தாதுகுக்குங்கணியேறுமல்லிகைப்பந்தரிடஞ்
சிந்தாகுலமறநாமிசையோர்மணஞ்செய்வதற்கே.

ப - ரை. வந்து - தாமேவலியவந்து, ஆளும் - எம்மையாண்டருளின, ஐயர் - இறைவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைத் தலத்தில் வாழ்பவர், (அவரது) வரை - மலையிலுள்ள, அணங்கே - பெண்ணே, சிந்தா ஆகுலம் அற - மனத்துன்பம் அற்றொழியும்படி, நாம் - யாம், இசையோர் மணம் - காந்தருவமணத்தை, செய்வதற்கு, செய்து கொள்ளுதற்கு, பை - பசுமையாகிய, தாது உகுக்கும் - மகரந்தத்தை உதிர்க்கின்ற, கணி - வேங்கைமரத்தின்மேல், ஏறும் - படர்ந்தேறுகின்ற, மல்லிகை பந்தர் இடம் - மல்லிகைப் பந்தலின் கண்ணே, நந்தா (ஒளி) கெடாத, மணிவிளக்கு உற்று - மாணிக்க தீபங்கள்பொருந்தி, உதிர் - உதிர்ந்த, பூஅணை - புஷ்ப சயனம், நன்கு அமைந்த-நன்றாயமைந்துள்ளன. (இனிக் கூட்டத்திற் குடன்படுவாயாக.) எ - று.

க - ரை. எம்மையாண்டருளின திருவெங்கை நாதரது மலையிலுள்ளமாதே! யாம் கந்தருவமணம் புணர்தற்கு வேண்டிய மணிவிளக்கு, பூந்தவிசு, மல்லிகைப்பந்தர் முதலியவை வாய்ப்பாயமைந்துள்ளனவாதலின் இவ்விடத்து யாம் கூடுவோமென்பதாம்.

வி - ரை. வந்தாளும் ஐயர் என்றது, சுந்தர மூர்த்திகளைத் தாமே வந்து தடுத்தாட்கொண்டார்போலத் தாமே யெழுந்தருளி யெம்மையாட்கொண்ட இறைவர் என்றபடி. வாணர் - வாழ்நர். அணங்கு-தெய்வப் பெண். இது இசையோர் மணத்திற் கேற்றபொருள். நெய்முதலியகுறைந்த விடத்தொளி மழுங்கும்விளக்குஅன்றென்பார். நந்தாமணிவிளக்கு என்றார். மணி-மாணிக்கம். ஈண்டுமாணிக்கம் வந்தவாறென்னையெனின், மல்லிகைப் பந்தராதலாலும் அதன்

மணநுகர்வான் மாராளஞ் சேர்தலியல்பாதலானும் ஆண்டு மாணிக்கங்கள் மிகப் பலவுங் கிருக்குமாகலானு மென்க. மல்லிகைப்பந்தரை, லதாக்ருஹம் என்பர் வடநூலார். ஈண்டு மல்லிகையென்றது வசந்த மல்லிகையை. பந்தர் - பந்தல் என்பதன் போலி. சிந்தாகுலம் - வடமொழிச் சந்தி. நாமிசையோர் மணம் என்பதற்கு, யாம் இசைந்த (எண்மணத்தில்) ஒன்றாகிய கந்தருவமணம் என்றுரைத்தலுமாம். இசைபாடலிற் சிறந்தவராதல் பற்றிக் கந்தருவரை இசையோர் என்றார். மிசையோர்-மேலிடத்துள்ளார் எனினுமாம். இனிக் கூட்டத்திற்குடன்படுவாயாக என்ப திசையெச்சமாய் வருவித் துரைக்கப்பட்டது. அமைந்த - வினைமுற்று. (கரு)

வழிபாடு மறுத்தல்.

அதாவது—இரந்து பின்னிலைநிற்றல் முதலாகப் பொய் பாராட்டலீறாக தலைவன் வழிபட்டதனைத் தலைவிமறுத் துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அகலா தடைக்கலம்புக்கபுட்காகத்தன்னாகமெல்லா
மிகலாயரிந்துபுரந்தவற்காத்தவர்வெங்கையிலே
யிகலாதயற்சந்தனம்படர்ந்தேறுமிளங்கொடியே
புகலாயெனக்குயிர்போலுநன்னாணைப்புரந்தருளே.

ப-ரை. அகலாது-நீங்காமல், அடைக்கலம்புக்க - சரண்புகுந்த, புட்கு ஆக - ஒருபுறவின்பொருட்டு, தன் ஆகம் எல்லாம் - தன்சரீரமுழுதும், இகல்ஆய் - மனவுறுதியோடு, அரிந்து - சிறுக அறுத்துக் கொடுத்து, புரந்தவன் - அதனைக்காத்தவனாகிய சிபிச்சக்கரவர்த்தியை, காத்தவர் - காத்தருளினவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், இகலாது - நீங்காது, அயல்-பக்கத்திலுள்ள, சந்தனம் - சந்தனமரத்தில், படர்ந்து ஏறும் - படர்ந்தேறுகிற, இளங்கொடியே—, எனக்கு புகல் ஆய்-எனக்கு அடைக்கலமாகி, உயிர்போலும் - என் உயிர்போன்ற, நல் நாணே - சிறந்த நாணத்தை, புரந்தருள் - காத்தருள்வாயாக. எ - று.

க - ரை. இறைவரது திருவெங்கைப்பதியில், சந்தனமரத்தின் மீது படர்ந்தேறுகின்ற இளங்கொடியே! எனக்குயிர் போலுஞ் சிறந்த நாணினைக் காத்தருள்வாயாக என்பதாம்.

வி - ரை. புள் எனப் பொதுப்படக் கூறினாரேனும் புட்காகத் தன்னாகமெல்லாம் இகலாயரிந்து புரந்தவன், என மேல்வருவனவற்

ருல் புறு என்றுரைக்கப்பட்டது. புரந்தவன் யாரெனின், குறுநடைப்புறவின் றபுதிகண்டஞ்சித் துலைபுக்கோனாகிய சிபிச்சக்ரவர்த்தியென்க. இவன் உசீதரன் மூத்த மகன். இவன் யாகஞ்செய்த காலத்தில், இந்திரனும் அக்கினியும் இவனது உத்தம குணத்தைச் சோதிக்கும்பொருட்டு, இந்திரன் பருந்தாகவும் அக்கினி புறாவாகவும் உருவெடுத்து, பருந்து புறாவைப் பிடித்துண்ணப் பின்றொடர்ந்து துரத்திக்கொண்டுபோக, புறாவானது ஓடிப்போய், சிபிச்சக்ரவர்த்தியிடம் அடைக்கலம்புகுந்தது. அதுகண்டசிபி, அப்புறாவுக்கு அபயங்கொடுத்து, அணைத்துக் கொண்டான். பருந்தும் தொடர்ந்து உள்ளேபோய், சிபியை நோக்கி, தான் துரத்திவந்த புறாவை விடும்படி கேட்க, சிபி, என்னிடத் தடைக்கலம் புகுந்த புறாவை நான் விடேனென்ன, எனக்கு மாமிச முண்ணலியற்கை, மனிதரைப்போலக் காய்கனிகளையுண்டு சீவிக்கவியலாது. ஆதலாற் புறாவை விடக் கடவையென்றது. சிபி அப்பருந்தை நோக்கி, புறாவைவிடமாட்டேன், அப்புறாவின் எடையுள்ள மாமிசத்தை யென்னுடம்பிலரிந்து தருகிறேன் ஏற்றுக்கொள்ளென்றான். பருந்து அதற்குடன்பட்டது. உடனே ஒரு துலையின் ஒருதட்டிலே அந்தப்புறாவை வைத்து எதிர்த்தட்டிலே அதற்கீடாகத் தன் சதையை அரிந்துவைத்தான். அத்தட்டுத் தாழ்ந்து புறாவிருந்த தட்டுக்குச் சமமாகாமை கண்டு மீண்டும் அரிந்து வைத்தான். அப்படியும் நிரம்பாமைகண்டு, அப்பருந்துக் கிரையாகத் தானே அத்துலையிலேறலும் தட்டு சமப்பட்டது. உடனே இந்திராக்கினிக ளிருவரும் தமது மெய்வடிவோடெதிர்நின்று, சக்ரவர்த்தியே! உன் ஜீவ காருண்யத்தை மெச்சினோம். உனக்கிஷ்டமான வரங்களைத் தருவோமென்று, அவனை முன்புபோலச்செய்து அநேகவரங்களைத் தந்துபோயினர் என்பது புராணகதை. இளங்கொடியென்றது வசந்த மல்லிகைக் கொடியை. புறவைக்காத்தவன்சிபி, அவனைக்காத்தவன் சிவபெருமான், அவன் மலையிலுள்ளீர் நீவிராதலால் எனதுநாணைக் காக்கவேண்டுமென்றவாறாயிற்று. (கச)

இடையூறுகிளத்தல்.

அதாவது—தலைவி நாணிக்கண் புதைத்தலால் தனக்குண்டான துன்பத்தைத் தலைவன் கூறுநிற்றல் அதற்குச் செய்யுள்,—

மதயானையிருரியூடேமறைந்துமழைமறைத்த
உதயாதிபனென்னநின்றார்தம்வெங்கையிலுன்றனைப்போற்
கதையாலெனினுமறிக்கலம்வேள்கலக்கத்தணங்கே
புதையாதுபைம்பொற்குடங்கதிர்வாளைப்புதைப்பதுவே.

ப-ரை. அணங்கே - பெண்ணே, வேள்கலகத்து - காமன் போரில், பைம்பொன்குடம் - பசும்பொற்குடத்தை, புதையாது - ஒளித்துவைக்காமல், கதிர்வாளை-ஒளிபொருந்திய வாளாயுதத்தை, புதைப்பதுவே - ஒளித்துவைப்பதோ அறிவு, மதயானை-மதயானையின், ஈர் உரி ஊடே - குளிர்ந்த தோலினுள்ளே, மறைந்து-மறைந்திருந்து, மழை மறைத்த - கரியமேகத்தினால் மறைக்கப்பட்ட, உதயாதிபன் என - சூரியன்போல, நின்றார் - நின்றவராகிய, சிவபிரானது, வெங்கையில் - திருவெங்கைப் பதியில், உன்றனைப் போல் - உன்னைப்போல கதையால் எனினும்-கதையினாலாயினும், அறிந்திலம் - கேட்டறிந்திலேம் - எ - று.

க - ரை. அணங்கே! சிவபிரானது வெங்கைப்பதியில் வாழ்கின்ற வுன்னைப்போலக் கதையிலுங் கேட்டதில்லை. அதென்னெனின், மன்மதன்போரில், தனத்தை புதைக்காது வாளைப்புதைத்தல் என்பதாம்.

வி - ரை. மதயானை யீருரி - கயாசுரனது தோல். வேள்கலகம்-மன்மதப்போர். பைம்பொற்குடம் - பசும்பொற்குடம். (கொங்கை) கதிர்வாள்-ஒளிபொருந்தியவாள். (கண்) உதயாதிபன் - பால் சூரியன். புதைத்தல் - பைம்பொற்குடத்திற்கு நிலத்துப் புதைத்தலாகவும், வாளுக்குக் கையால் மறைத்தலாகவும் பொருளுரைத்துக்கொள்க - இரங்கற்குறிப்பின் கண்வந்தது. மழை - மேகம். (கரு)

நீடுநினைந்திரங்கல்.

அதாவது—புணர்ச்சியெய்தாமையான் இவளுள்ளம் என்னான்றியையுங்கொலோவெனக் காலநீட்டிக்க, தலைவியை நோக்கி நினைந்திரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சூலக்கரத்தர்திருவெங்கைவாணர்முன்சுட்டமத
னீலக்கணையிற்கைவைத்தானினிச்சற்றுநேரநிற்பிற்
காலற்கிரையிடுமென்னாவியையிந்தக்காரிகையார்
கோலக்களபக்குன்றென்றேமருவக்குறுகுவதே.

ப - ரை. சூலங்கரத்தர் - சூலப்படையைத் திருக்கையிலுடையவர், திருவெங்கை வாணர் - திருவெங்கைத் தலத்தில் வாழ்பவர், (அவர்) முன் - முற்காலத்தில், சுட்ட - சுட்டெரித்த, மதன் - மன்மதனானவன், நீலக்கணையில் - நீலமலராகிய அம்பின்மேல், கை வைத்தான்—, இனிசற்றுநேரம் நிற்பின்- இனிச்சற்றுநேரம் தாழ்த்து

நின்றால், என் ஆவியை - என்னுயிரை, காலற்கு இரையிடும் - யமனுக்கு இரையிடுவான். (ஆதலால்) இந்த காரிகையார் - இந்த மாதரது, கோலம் - அழகாகிய, களபக்குன்று - சந்தனமலையை, மருவ குழகுவது - தழுவப்பெறுவது, என்றோ - எந்நாளோ - எ-று.

க-ரை. திருவெங்கைவாணர் முற்காலத்தெரித்தமதன் நீலக்கணையைக் கைப்பற்றினான். இன்னுஞ் சற்றுநேரம் நின்றால், என்னுயிரைக்காலனுக் குணவாக்கிவிடுவான். ஆதலால் இம்மாதரது களபமலையையடையப் பெறுவது என்றோ வென்பதாம்.

வி-ரை. முன்சுட்ட மதன்-சிவபெருமான் யோகு செய்திருந்த முற்காலத்துஅந்தயோக நிலையைக் குலைத்தலால், நுதற்கண்திறந்து எரித்துவிட்ட மன்மதன். நீலக்கணை-நீலமலராகியஅம்பு. இது கொல்லுங்குணத்த தாதலால், இனிச் சற்றுநேர நிற்பிற் காலற்கிரையிடுமென் னாவியை என்றான். இது கொல்லுங்குணத்த தாதல், "நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ, அனைத் துணவு நீக்கு மசோகு, வனத்திலுறு முல்லைகிடை காட்டுமாதே முழுநீலம், கொல்லுமத னம்பின் குணம்" என்னும் இரத்தினச்சுருக்கச் செய்யுளாலினிது விளங்கும். பகைவரையஞ்சி யரண்புகல் யாவர்க்கு மியல்பாதலால் இவனும் மாரப் பகைவற்கஞ்சியரண்புக நாடுகின்றான். நாடுவோன் நால்வகையரணுள்ளும் வலியது மலையரணாதலால் அதனையே நாடுவானாயினன். இந்தக் காரிகை ஆர் கோலம் களபம் குன்று - மலையரணுக்கேற்ப, அழகு பொருந்திய பன்றி யானைக்கன்று என்பவைகள் சஞ்சரிக்கிற மலையென்றும், கொள்கைக்கேற்ப, இந்தமாதரது சந்தனக்கோலமெழுதப்பெற்ற தனமென்றும் பொருளுரைத்துக்கொள்க. என்றோ வென்பது நீடுநினைந்திரங்கலை வெள்ளிடைமலைபோல் விளக்கி நின்றது. (கசு)

மறுத்தெதிர் கோடல்.

அதாவது—முன் வழிபாடு மறுத்ததனை மறுத்துத் தலைவன் சொல்லையேற்றுக்கொள்ளாநிற்றல். வழிபாடு மறுத்ததனை மறுத்தல் என்பது வழிபாடுமறுத்தல் இக்கிளவியைத் தொடர்ந்தன்றே! இடையூறுகிளத்தல் நீடுநினைந்திரங்கல் என்னும் இரண்டுகிளவியும் இடையிட்டு நிற்க வழிபாடு மறுத்ததனை மறுத்தெதிர் கோடலெங்ஙனமியையுமோவெனின்; இயையும். என்னையெனின், வழிபாடு மறுத்தல் தலைவிகூற்றாகலின் அக்கூற்றுக்கு மறுத்தெதிர் கோடலும் தலைவிகூற்றாகலின் அடுத்தகூற்றாய் இயைந்தவாறுகாண்க. இவ்வியைபுடைமை "மறைந்தவற்காண்டல்" என்னுந்தொல்காப்பியச் சூத்தி

ரத்தில் இளவிகோக்கு முறைமையில் தலைவிகூற்றெல்லாம் ஒரு வகைப்படத் தொகுத்துக் கூறுமிடத்து, வழிபாடுமறுத்தல் மறுத்தெதிர் கோடல் எனத் தொடர்ச்சியாய்க் கூறியவாறு காண்க. அதற்குச் செய்யுள்,—

சந்தாபவெந்தழறந்மடியார்க்குத்தணித்தருளுஞ்
செந்தாமரைமலர்த்தாளார்தம்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னந்தாமதுகையொடுபிறப்பேழுநமைத்தொடர்ந்து
வந்தார்தமையிந்நிறையோவராமன்மறிப்பதுவே.

ப - ரை. தாபம்-சம்-இயல்பையுடைய, சம்-பிறவியாகிய, வெம்தழல் - வெப்பமாகிய நெருப்பை, தணித்து - அவித்து, தம்அடியார்க்கு அருளும் - தம் அடியவர்க்கு அருள் செய்கின்ற, செந்தாமரை மலர் தளார்-செந்தாமரைமலர்போன்ற திருவடியையுடையவராகிய சிவபெருமானது, வெங்கை-வெங்கையிலேயுள்ள, செழுசிலம்பில்-செழுமையாகிய மலையில், நந்தா - கெடாத, மதுகையொடு - மனவுறுதியோடு, பிறப்புஎழும் - எழ்பிறவியின் கண்ணும், நம்மை தொடர்ந்து வந்தார் தம்மை - நம்மைவிடாது பற்றி வந்தவராகிய தலைவரை, இ - இந்த, நிறையோ-கற்போ, வராமல் மறிப்பது - வராமல் தடுப்பது. எ - று.

க - ரை. தமதடியார்க்கு, பிறவி வெப்பமாகிய நெருப்பைத் தணித்து அருள்செய்கிற, செந்தாமரைமலர்போலுந் திருவடியையுடையவராகிய சிவபிரானது வெங்கைமலையில், உறுதியாகிய அன்போடு பிறவியேழன்கண்ணும் நம்மைத்தொடர்ந்து வந்தவரை இந்த நிறையோவராமற் றடுக்கவல்ல தென்பதாம்.

வி - ரை. தாபம் - தபித்தல் (சுடுதல்). சம் - பிறவி. வெங்கை நாதரது திருவடியானன்றித் தணிக்கவொண்ணாத தாகலின் பிறவித் தாபாக்கினியை, 'சந்தாப வெந்தழறம்மடி யார்க்குத் தணித்தருளுஞ் செந்தா மரைமலர்த் தாளார், என்றார். எழ்பிறப்புந் தொடர்ந்துவருமன்பை உழுவலன்பு என்பர். "உழுவலன்பிற் பழவடியார்" என்றார் பிறரும். மதுகை - வலி; அது ஈண்டு மிக்க அன்பைக்குறித்தது. ஓகாரம்-எதிர்மறை. நிறை - மறை, பிறரறியாமை, ஈற்றேகாரம் இகழ்ச்சிக் குறிப்பு. நந்தாமதுகையொடு என்பதில் ஒடு உடனிகழ்வு. இங்ஙனங்கெடாதமிக்க அன்பாகிய துணையோடு வந்தவரைத் துணையின்றித் தனியே நிற்கின்ற இந்நிறை தடுக்கவலன்றென்பார், 'நந்தாமதுகையொடு பிறப்பேழு நமைத்தொடர்ந்து வந்தார் தமையிந்நிறை

யோ வராமன் மறிப்பது. என்றார். "காமக்கணிச்சியுடைக்கு நிறை யென்னு நாணுத்தாழ்வீழ்த்தகதவு" என்றார் பெருநாவலரும். (கஎ)

வறிதுநகைதோற்றல்.

அதாவது—தலைவிமுகத்தே சிறுநகை தோற்றல். என்னை ! "வறிது சிறிதாகும்" என்பதனால் வறிது என்பதீண்டுச் சிறிதெனப் பொருள்பட்டு நின்றது. நகைதோற்றல் என்பதற்கு நகை வெளியாய்த் தோன்றலென்றல் பொருந்தாது. என்னை ! தலைவன் முன் நாணுடையளாதலின் பற்றோன்றப்புன்முறுவல் செய்தலென்றலு மமையாது. அமையாதாயின், வறிது நகைதோற்றலென்னுங் கிளவிப்பொருள் பொய்க்குமேயெனின், அற்றன்று, "முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை,நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு" என்பதனால் நகைவெளிப்படாமைக் கூறியவாறுணர்க. நகைதான் தோற்றுமாறென்னையெனின், தலைவன் சொற்குவேட்கையாலுடன் பட்டு மகிழ்ச்சியான் முகமலர்ந்து அம்மலர்ச்சிக் குறிப்பினன் நகையெனத் தோற்றுவித்தவாறுணர்க. அதற்குச் செய்யுள்,—

புல்லார்பவர்கணெற்சோறுபெற்றாங்குப்பொருந்தியென்று
மல்லார்மதியநிலவுண்சகோரமருந்தவுங்கல்
வில்லார்திருவெங்கையன்பர்முகாம்புயம்வீறுதவு
நல்லார்வதனமதியிடந்தோன்றுநகைநிலவே.

ப - ரை. கல்வில்லார் - மலையாகிய வில்லையுடைய சிவபெருமானாரது, திருவெங்கை-திருவெங்கைத் தலத்திலுள்ள, நல்லார்- மாதரது, வதனம் மதியிடம் - முகமாகிய சந்திரனிடத்து, தோன்றும் - உண்டாகிய, நகை நிலவு - நகையாகிய நிலவானது, புல் ஆர்பவர்கள் - புல்லுயுண்பவர்கள், நெல்சோறு பெற்றாங்கு - நெல்சோற்றைப் பெற்றதுபோல, என்றும் பொருந்தி - எந்நாளும்பொருந்தி, அல்ஆர் - இரவில் சஞ்சரிக்கிற, மதியம் - சந்திரனது, நிலவு - கிரணத்தை, உண் - உண்கின்ற, சகோரம் - சகோரப்புட்கள், அருந்தவும் - உண்ணவும், அன்பர் - தம்மன்பரது, முகம் அம்புயம் - முகமாகிய தாமரை மலருக்கு, வீறு உதவும் - பெரு மகிழ்ச்சியை யுண்டாக்காநின்றது. எ - று.

க - ரை. புல்லுண்போர் நெற்சோறு கண்டாற்போல, சகோரங்களுண்ணநிற்கவும், தன்பர் முகத்தாமரை மலரவும், இத்தலைவியின் நகைநிலவானது ஒளிராநின்றதென்பதாம்.

வி - ரை. ஆர்தல் - உண்டல், "கூற்றாரிலூசிடுஞ் சீயுடம்பே" என்றார் மேலோரும், சகோரம் - நிலாமுகிப்புள், இது சந்திரிகை

யருந்தி யுயிர்வாழ்வது. சிவபிரான் வில்லாகக்கொண்டது பொன் மலையேயாயினும், பெரும்பான்மை பற்றிக், 'கல்வில்லார்' என்றார். வதன மதியிடந்தோன்று நகை நிலவு அன்பர் முசாம்புயம் வீறுதவும். என்றதில், அதிசயோக்தி தொனிக்கின்றது. நகை - முறுவல். நிலவு - சந்திரிகை. நல்லார் என்பதற்கு அழகுடையார் என்பது பொருள். ஏ - அதிசய விடைச்சொல்.

இக்கவி யார் கூற்றெனின், உரைப்பாரும் கேட்பாரு மின்மையாற் கவிக்கூற்றெனக்கொள்க. அகப்பாட்டுறுப்புப் பன்னிரண்டினும் துறையென்னு முறுப்பு இக்கவியெனக் கொள்க. தலைவன் கூற்றாய்க்கூறாது கவிக்கூற்றாய்க் கூறவேண்டுவ தென்னையெனின், இது தலைவன் கூற்றாயின் மேல் முறுவற் குறிப்புணர்தல் என்னும் தலைவன் கூற்றுத் தோன்றாதாதலால் இதுகவிக்கூற்றாயிற்று. (கஅ)

முறுவற்குறிப்புணர்தல்.

அதாவது—அம்முறுவலின் குறிப்பைத் தலைமகன் உணரா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

தனிவானவர்நந்திருவெங்கைவாணர்தழலெறிப்ப
முனிவானகைசெய்நகைபோல்வதன்றிம்முகிண்முலையார்
பனிவாண்மதிமுகத்தேயென்னையாளப்பரிவின்மனக்
கனிவாயெழுநகையீதம்பிகாமக்கடலினுக்கே.

ப - ரை. இ - இந்த, முகிழ் - தாமரை யரும்புபோன்ற, முலையார் - தனங்களையுடைய மாதாது, பனி - குளிர்ச்சியும், வாள் - ஒளியுமுள்ள, மதிமுகத்தே - பூர்ணசந்திரனை நிகர்த்த முகத்தின் கண்ணே, என்னை ஆள - என்னையாளும் பொருட்டு, பரிவின்-அன்போடு, மனக்கனிவு ஆய் - மனவுருக்கங்கொண்டு, எழும் - தோன்றுகின்ற, நகை - நகையாகிய, ஈது - இது, காமம் கடலினுக்கு - காமக்கடலைக் கடத்தற்கு, அம்பி - புணையாகும், தனி - ஒப்பற்ற, வானவர்-தேவர், நம்-நமது, திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்கின்றவர், (அவர்) தழல் எறிப்ப - அனல்வீசும்படி, முனிவால் - கோபத்தினால், நகை செய்-நகைத்தலைச் செய்த, நகை போல்வது அன்று - நகையை நிகர்த்தது அன்று - எ - று.

க - ரை. இம்மாதின் முறுவற்குறிப்பான இந்நகையானது, வெங்கைவாணர் கோபநகைபோல்வது அன்று. மற்றென்னெனின், என்னையாளும் பொருட்டுப் பரிவோடுகூடி யிருத்தலால், இது யான் காமக்கடல் கடத்தற்குப் புணையாயிராநின்றது என்பதாம்.

வி - ரை. ஈடெடுப்பில்லா விறைவனுதலாற் சிவபிரானைத் தனிவானவன் என்றார். 'முனிவர் னகைசெய் நகை-முப்புரமெரிக்கச் செய்தநகை. அம்பி - மரக்கலம் எனினுமாம். முனிவா னகைசெய் நகைபோல்வதன்று எனையாளப்பரிவின் மனக்கனிவா யெழுநகை யிதம்பிகாமக் கடலினுக்கே என்றதனால், தலைவிவேட்கைக் குறிப்பை முறுவலா லுணர்ந்தானெனக் கொள்க. கைக்கிளையில் குறிப்பறிதல் என்பது தலைவன் தன்னவாவினாற் கூறியதல்லது வேட்கைக்குறிப்பு நிகழ்ந்த தன்றென்பது இக்கிளவியால் தெளியப்பட்டதென்றுணர்க. 'கனிவாய் எழுநகை என்பதற்குக் கனிவாயிலுண்டாகிய நகையென்றலுமொன்று. (கக)

முயங்குதலுறுத்தல்.

அதாவது—தலைவி முயங்குதற் குடன்பட்ட அருமையை வலியுறுத்திக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொங்கைக்குவடுமணிபல்குற்பாம்புங்குறுமுனிவ
னங்கைத்தலமடங்காவிழிவாரியுமாங்கிருப்ப
வெங்கைப்பழமலையாரருளாலவ்விசும்பறியா
மங்கைப்பருவத்திவள்வாயமுதிங்குவாய்த்ததுவே.

ப - ரை. கொங்கை குவடும் - தனக்குன்றும், அணி அல்குல் பாம்பும் - அழகிய அல்குலாகிய பாம்பும், குறுமுனிவன் - அகத்தியரது, அங்கைத்தலம் - குடங்கைத் தலத்தில், அடங்கா - அடங்காத, விழிவாரியும் - கண்ணாகிய கடலும், ஆங்கு இருப்ப - அவ்விடத்தே இருக்க, வெங்கை - திருவெங்கைப் பதியிலுள்ள, பழமலையார் - பழமலைநாதரது, அருளால் - திருவருளினால், அ - அந்த, விசும்பு - விண்ணுலகத்தார், அறியா - அறியாத, மங்கைப் பருவத்து - மங்கைப்பருவத்தினையுடைய, இவள் - இவளது, வாய் அமுது - வாயமுதானது, இங்கு வாய்த்தது - இவ்விடத்தில் எனக்குக்கிடைத்தது, ஏ - இதென்ன வியப்பு. எ - று.

க - ரை. கொங்கைக்குவடுமுதலாயின தொழிற்படாதே இவள் வாயமுதெனக்குவாய்த்த தென்பதாம்.

வி-ரை. மந்தரமலையும், வாசுகிப்பாம்பும், குறுமுனிவனங்கைத் தலமடங்கினவாரியும் தொழிற்படத் தேவர்கருந்து மமிழதம் கிடைத்தது. கொங்கைக்குவடும் அல்குற்பாம்பும் குறுமுனிவ னங்கைத் தலமடங்காவிழிவாரியும் தொழிற்படாமலே இம்மாதினிடத் தமிழ்தெனக்குக் கிடைத்ததென்றவாறு. அங்குஷ்டப் பிரமாணத்தி

னராதலால் அகத்தியரைக் குறுமுனிவன் என்றார். கடல் குறுமுனி வனங்கைத் தலத்தடங்கினது அதனை யாசமனஞ்செய்தகாலத்தில் ஆங்கிருப்ப என்றது தொழிற்படாதிருக்க என்றபடி. விசும்பு அங்குள்ள தேவரை யுணர்த்தலால் இடவாகு பெயர். மங்கைப்பருவம் - பதினோராண்டும் பத்துத் திங்களும் புகுந்தபின்னே நிகழும் பருவம். இவள்வாயமுது - இவளிடத்தமுது இவள் வாயினிடத்தமுது என்றிருவகையாகக் கூறிக்கொள்க. வாயினிடத்தமுது - அதராமிர்தம். ஈற்றேகாரம் கிடைத்தலருமை தோன்றநின்றது. மங்கைப் பருவத்திவள் வாயமுதிங்குவாய்த்தது என இறந்தகாலத்தாற் கூறியது கூடும் விரைவு பற்றியெனக்கொள்க. இதனை, "வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி, யிறந்த காலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார் புலவர்" என்பதனாலறிக. (உ0)

புணர்ச்சியின்மகிழ்தல்.

அஃதாவது—தலைவன் புணர்ச்சியான் மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தாண்டுஞ்சினவிடையெம்மான்றனிவெங்கைத்தண்சிலம்பில்
யாண்டும்பெறலருமின்பமெல்லாமைம்புலனுமின்று
தூண்டுஞ்சுடரெனநின்றவிம்மாதரிற்றுய்த்தனமால்
வேண்டும்பொருணமக்கேதோவினியிந்தமேதினிக்கே.

ப - ரை. தாண்டும் - தாவிச்செல்லுகின்ற, சினம் - கோபத்தையுடைய, விடை - இடபவாகனத்தையுடைய, எம்மான் - எம்பெருமானது, தனி - ஒப்பற்ற, தண் - குளிர்ந்த, வெங்கை சிலம்பில் - வெங்கைமலையில், தூண்டும் - தூண்டப்பட்ட, சுடர் என நின்ற - தீபம்போல விளங்கிநின்ற, இ - இந்த, மாதரில் - மாதரிடத்து, யாண்டும் - எவ்வுலகத்தினும், பெறல் அரும் - பெறுதற்கரிதாகிய, இன்பம் எல்லாம் - இன்பமுழுதும், இன்று - இந்நாள், ஐம்புலனும் - ஐம்புலன்களாலும், துய்த்தனம் - நுகரப்பெற்றேம், ஆல் - ஆதலால், இனி இந்த மேதினிக்கு - இனி யிந்த வுலகத்தில், நமக்கு - நம்மால், வேண்டும்பொருள் - விரும்பப்படும்பொருள், ஏதோ - யாதோ (ஒன்றுமில்லை) எ - று.

க - ரை. திருவெங்கை நாதரது மலையிலுள்ள இம்மாதினிடத்தே யாண்டும் பெறலரு மின்பமுழுதும் ஐம்புலனானு நுகரப்பெற்றனமாதலால், இனியிவ்வுலகில் யாம் பெறவிரும்பும் பொருள்யாதோ வென்பதாம்.

வி - ரை. தாண்டுதல்-தாவிச்செல்லுதல். த்ரிபுரசம்ஹார காலத்தில் இறைவன் போன்றேயிதுவுஞ் சினங்கொண்டிருந்ததென்பது தோன்ற 'தாண்டும் சினவிடை,' என்றார். ஐம்புலனும் - ஐம்புலனும் எனமூன்றனுருபு விரித்துரைக்கப்பட்டது. நுகர்ச்சிக்குக் கருவி வேண்டுதலின், "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனு,மொண்டொடி கண்ணே யுள" என்பது திருக்குறள். யாண்டும் என்றது சுவர்க்க மத்ய பாதாளலோகத்து மாதரிடத்தும் என்றபடி. யாண்டு ஆகுபெயர். இன்று துய்த்தனம் என்றதனால் இதற்கு முன்னெல்லாம் துய்த்திலேமென்பதும் தோன்றிற்று. மேதினிக்கு-உருபுமயக்கம். (உக)

புகழ்தல்.

அதாவது—புணர்ச்சியான் மகிழ்ந்த தலைமகன், தலைமகளது நலத்தைப் பாராட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தர்வெற்பிற்
குறைந்தாலிவ ணுதலொவ்வாய்நினதுகுறைநிறைந்தாற்
சிறந்தாயிழைமுகமொவ்வாய்விளங்குஞ்செழுங்கலையா
னிறைந்தாலென்னன்றிக்குறைந்தாலென்னெங்கட்குநீமதியே

ப - ரை. மதியே-சந்திரனே, புறம் தாழ்குழல்-புறத்தேதொங்குகின்ற கூந்தலையுடைய, உமைபங்காளர் - உமைபங்கர், வெங்கைபுரத்தர் - திருவெங்கை நகரத்தையுடையவர் (அவரது), வெற்பில் - மலையின்கண், நீ—, குறைந்தால்-குறைவடைந்தால், இவள்-இம்மாதின், நுதல் - நெற்றியை, ஒவ்வாய் - ஒத்திராய், நினதுகுறை நிறைந்தால் - நின்குறைவு நிறையப்பெற்றால், சிறந்த - சிறப்புப்பெற்ற, ஆயிழை - இப்பெண்ணின், முகம் - முகத்தை, ஒவ்வாய்-ஒத்திராய், (ஆதலால்) எங்கட்கு - எமக்கு, விளங்கு செழுகலையால் - பிரகாசிக்கின்ற செழுமையாகிய கலைகளினால், நிறைந்தால் என்-நிறைவடைந்தால் என்னபயன், அன்றி - அல்லாமல், குறைந்தால் என் - குறைவடைந்தால் என்னபயனில்லை. எ - று.

க - ரை. சந்திரனே! நீ கலை குறைந்த காலத்தே யிவணுதலை யொவ்வாய், கலைநிறைந்த காலத்தே யிவள் வதனத்தை யொவ்வாயாதலால், உன் குறைவு நிறைவுகளா னெங்கட்குளவாவன சில நட்டலாபங்க ளிலவென்பதாம்.

வி - ரை. சிறந்த ஆயிழை-சிறந்தாயிழையென நிலைமொழியீற்றகரந்தொகுத்தலாயிற்று. "புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை" என்

புழிப்போல. ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். இரந்து பின்னிற்றற் கெண்ணல் முதல் நீடுநினைந் திரங்கலீறாகிய ஒன்பானுள், வழிபாடு மறுத்தலொன்று மொழித்தொழிந்த வெட்டும் வேட்கையுணர்த்தற்குரியன. வழிபாடு மறுத்தலொன்று மறுத்தற்குரித்து. மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலுமாகிய இரண்டும் உடன்படற் குரியன. முறுவற் குறிப்புணர்தலும், முயங்குதலுறுத்தலும், புணர்ச்சியின் மகிழ்தலும், புகழ்தலுமாகிய நான்கும் கூட்டத்திற் குரியனவாம்.

இங்ஙனம் புணர்ந்த தலைமகன், புணர்ச்சியால் வேட்கையிற் குறைபாடுடையனோ, முன்போலும் வேட்கையுடையனோ வெனின், குறைபாடுடையனெனின் தலைவியிடத் தன்பிலனும், வேட்கையாற் பிறந்தவன்பாதலான். அன்றி, குறைபாடிலனெனின், புணர்ச்சியாற் பயனின்றாம். மற்றென்னெனின், அன்பும் இயற்கையன்பென்றும் செயற்கையன்பென்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள், இயற்கையன்பாவது ஊழ்வினை வயத்தான் ஒருவரிடத்துப் பற்றிய அன்பு. செயற்கையன்பாவது புணர்ச்சிக்கட் டலைமகளிடத்துப் பிறந்த குணங்களாற் றோன்றும் அன்பு. ஆதலால், புணர்ச்சிக்கட்குறைந்த வேட்கை இயற்கையன்பானும் செயற்கையன்பானும் நிறையுமாதலான், புணராத முன்னின்ற வேட்கையும் அன்பும் புணர்ந்த பின்னும் ஒத்து நிற்கு மென்றறிக. என்னை; "அதுவே, தானேயவளே தமியர்காணக், காமப்புணர்ச்சி யிருவயினொத்தல்" என்னும் இறையனாரகப்பொருட் சூத்திரத்தில், இருவயினொத்தல் என்பதற்கு புணராத முன்னும் புணர்ந்த பின்னும் வேட்கையும் அன்பும் ஒத்திருக்கும் என்னும் உரைவாய்ப் பட்டிருத்தல் ~~காண்க.~~

வன்புறை.

அதாவது—தலைவி ஐயுற்றவழி, அதுதீரத் தலைவன் வற்புறுத்திக் கூறுநிற்றல். அது "ஐயந்தீர்த்தல் பிரிவறிவுறுத்தலென், றெய்திய வன்புறை யிருவகைத்தாகும்" என்னுஞ் சூத்திரவிதியால் இரண்டு வகைப்படும்.

அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

அதாவது—புணர்ச்சி யிடத்துத் தலைவியணிந்திருந்த முத்துவடமுதலிய கொங்கையணிகளும், சில் முதலிய குழலணிகளும் நிலைகுலைந்தமையைத் தலைமகன் தன்கையினால் சீர்திருத்துழி, தலை

வியானவள் பாங்கியாலணிப்பட்டு அணியை இவர்கையாலணிந்தால் வேறுபடுமென்றும், அவ்வேறுபாட்டைப் பாங்கியறியின் ஐயப்பாட்டிற் கேதுவாமென்றும் நாணி முகம்வேறுபட்டாளாக, அதனையறிந்த தலைமகன் அவளைத் தெளிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மன்றாடிய திருவெங்கைபுரேசர்மணிவரைமே
னன்றாயணிகுவனென்றாலுநின்பெருநாணையஞ்சிக்
குன்றாரெதிரொலிபோலநின்பாங்கியர்கோலணியா
வின்றாயிழையணிந்தேன்வெருவேனெஞ்சிளங்கொடியே.

ப - ரை. மன்று ஆடிய - பொற்சபையில் திருநடனஞ்செய்த, திருவெங்கைபுர ஈசர்-திருவெங்கைப் பதிக்கிறைவராகிய சிவபெருமானாரது, மணி - அழகிய, வரைமேல் - மலையிலுள்ள, இளங்கொடியே - இளங்கொடிபோல்வாளே, ஆய் - ஆராய்ந்தெடுக்க. இழை - ஆபரணங்களை, நன்றாய் அணிகுவன் என்றாலும் - நன்றாக அலங்கரிக்க வல்லேனாயினும், நின் - உனது, பெருநாணை அஞ்சி - பெருநாணுக்குப் பயந்து, குன்று ஆர் எதிர் ஒலிபோல - மலைக்கெதிரே நின்றழைத்தால் அது எதிரொலி செய்வதுபோல, நின்பாங்கியர் - உன் தோழியர், கோல் - செய்கின்ற, அணிஆ - அலங்கரிப்பாக, இன்று - இப்பொழுது, அணிந்தேன் - யான் அலங்கரித்தேன், (ஆதலால்) நெஞ்சுவெருவேல் - மனமஞ்சற்க. எ - று.

க - ரை. திருவெங்கைநாதரது மணிவரைமேல் வாழ்கின்ற இளங்கொடியே! யான் ஆபரணங்களை யணிவதில் மிக வல்லேனாயினும் உன் பெருநாணுக்கஞ்சி, உன்பாங்கியர் அணிவதுபோலவே யணிந்தேன், ஆதலால் நீமனமஞ்சற்க என்பதாம்.

வி - ரை. மன்று - சபை. அது ஈண்டுப் பொற்சபைக்காயிற்று. மணி - அழகு. நன்றாய் என்றது நின்பாங்கியர் அணிவதினும் நன்றாக வென்றபடி. அணிதல் - அலங்கரித்தல். நாணை - உருபுமயக்கம். குன்றாரெதிரொலிபோல - சிலம்பெதிர் கூவுமொலிபோல. கோலல் - செய்தல். இளங்கொடி-பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர். (உரு)

பெருநயப்புரைத்தல்.

அதாவது—மீண்டும் இவன் வருவன்கொல்லோ, வாரான்கொல்லோவென் றெண்ணி முகம் வேறுபட்டாளாக, அவ்வேறு பாட்

டைத் தலைமகன் குறிப்பானுணர்ந்து தனது காதன் மிகுதியைக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கடக்கும்பவத்தர்திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
குடக்குங்குமமுலையாண்மாட்டலாமற்குலவளிகா
ணடக்குங்கமலமுநோக்குங்குவளையுநாணிலவை
யடக்குங்குமுதமுங்கண்டதுண்டோவுங்களாவியிலே.

ப - ரை. குலம் அளிகாள் - கூட்டமாகிய வண்டுகளே, கடக்கும் பவத்தர் - பாபரகிதர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) கனக வெற்பில் - பொற்கிரிமேலுள்ள, குங்குமம் - குங்குமச்சேறணிந்த, குடம் - பொற்குடத்தை நிகர்த்த, முலையாள்மாட்டு அல்லாமல் - தனங்களையுடையவளாகிய இம்மாதினிடத்தேயன்றி, உங்கள் ஆவியிலே - உங்கள் பொய்கையிலே, நடக்கும் கமலமும் - நடக்கின்ற தாமரைமலரையும், நோக்கும் குவளையும - பார்க்கின்ற குவளைமலரையும், நாள்நிலவை அடக்கும் குமுதமும் - புதிய நிலவினைத்தனக்குள்ளே அடக்கின குமுதமலரையும், கண்டது உண்டோ - பார்த்ததுளதோ (பார்த்திருப்பீராயின் கூறுதிராக). எ - று.

க - ரை. வண்டினங்காள்! திருவெங்கைநாயகரது கனகாசலத்தில் வாழ்கின்ற இம்மாதினிடத்தே யன்றி, நீங்கள் சஞ்சரிக்கிற பொய்கைகளில், நடக்குந் தாமரைமலரும், நோக்குங் குவளை மலரும், நிலவைத் தன்னுள்ளே யடக்கிய குமுதமலரும் நீங்கள் கண்டதுண்டோ? கண்டதுண்டேல் எமக்குக் கூறுவீராமின் என்பதாம்.

வி - ரை. குலம் - மேன்மையுமாம். கடக்கும் பவத்தர் - பவத்தைக்கடந்தவர்; பவம்-பாவம் பிறவி. இது ஜிதேந்த்ரியர் கதகல்மஷர் என்பன போல்வது. குடம் என்றுரேனும் ஈண்டைக்கேற்பப் பொற்குட மென்றுரைக்கப்பட்டது, நடக்குங்கமலம் என்றது பாதத்தை. நோக்குங் குவளை யென்றது கண்ணை. குமுதம் என்றது வாயை. நாணிலவு என்றது பல்லையும் அதனொளியையும். உங்களாவி என்றது வண்டினங்களுக்குளதாகிய பொய்கைப்பெரும் பயிற்சிதோன்றற்கென்க. குவளை - நீலோத்பலமலர். குமுதம்-செவ்வல்லிமலர். ஆவி-பொய்கை. உண்டோவென்னு மோகாரம் எதிர்மறை. கமலம் குவளை குமுதம் என்பன முதலாகு பெயர்கள்; இதனைப்பொருளாகு பெயரென்பர். நிலவு - உவமையாகுபெயர். இக்கிளவியும் வண்டு முன்னிலையாகப் பாடவேண்டுமென்பது நியதி. "கூம்பலங் கைத்த

லத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும், பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற், றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ ளுங்கனி வாய்கமழு, மாம்பலம் போதுள வோவளி காணும் மகன்பணையே" என்றார் மணிவாசகரும். (உச)

தெய்வத்திறம்பேசல்.

அதாவது—இங்ஙனங் கூறியுந் தெளிந்திலளாதலால், ஊழின் றிறத்தைக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

நதிவசத்தாயசடையார்திருவெங்கைநாட்டொருவர்
மதிவசத்தாலன்றிவான்கூன்மதிநுதல்வல்லிசதா
கதிவசத்தால்வரும் வள்ளிதழ்ப்போதின்கடிமணம்போல்
விதிவசத்தால்வருநங்கேண்மையாவர்விலக்குவரே.

ப - ரை. நதிவசத்து ஆயசடையார் - கங்காநதியானது வசப்பட்டிருக்கிற சடாபாரத்தையுடைய சிவபெருமானாரது, திருவெங்கைநாட்டு - திருவெங்கை நாட்டின்கணுள்ள, வான்கூன் மதிநுதல் வல்லி - ஆகாயத்திலுள்ள வளைவாகிய பிறைபோலும் நெற்றியையுடைய ஓர் கொடிபோல்பவளே, ஒருவர் மதிவசத்தால் அன்றி - ஒருவருடைய அறிவின் வசத்தினாலல்லாமல், சதாகதிவசத்தால்வரும்- காற்றின் வசப்பட்டு வருகின்ற, வள்இதழ்-வளவிய இதழையுடைய, போதின் - மலர்களின், கடிமணம்போல் - மிக்கமணம்போல, விதிவசத்தால் - ஊழ்வயத்தால், வரும் - உண்டான, நம் கேண்மை-நமது நட்பை, விலக்குவர் யாவர் - விலக்கவல்லவர் யார். எ - று.

க - ரை. வான்கூன்மதி நுதல்வல்லி! கங்காதராகிய திருவெங்கை நாதரது நாட்டில் ஒருவரது அறிவின் வயத்தாலன்றி வாயுவசத்தான் வரும் பூமணம்போல ஊழின்றிறத்தால் வந்த நமது கேண்மையை விலக்குவோர் யாவர் என்பதாம்.

வி - ரை. நதிவசத்தாய சடையார் என்றதற்கு "வெள்ளந்தாழ் விரிசடையாய்" என்புழிப்போலப் பொருள்கொள்ளப்பட்டது. நுதற்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் வான்கூன்மதி யென்பதற்கு முற்பக்கத்தட்டமிச்சந்திரனெனப் பொருள்கொள்க. வல்லி அண்மைவிளியாதலா லியல்பாயிற்று. சதாகதி-வடசொல்; இதற்கு இடையறா வியக்கமுடையது என்பது பொருள். போது - மலர். காற்றியக்கத்தானன்றி மலர்மணம் பிறர்க்குப் புலப்படாமை தோன்றற்கு "சதாகதி வசத்தால் வரும் வள்ளிதழ்ப்போதின்கடிமணம்" என்

ருர். கேண்மை-கேளாந்தன்மை. யாவர் விலக்குவர் என்னும் வினு எதிர்மறைப்பொருட்டு, "தேவரிற் பெற்றநஞ் செல்லக் கடிவடி வார் திருவே', யாவரிற் பெற்றினி யார்சிதைப் பாரிமை யாதமுக்கண், மூவரிற் பெற்றவர் சிற்றம் பலமணி மொய்பொழில்வாய்ப், பூவரிற் பெற்ற குழலியென் வாடிப் புலம்புவதே" என்பது திருக்கோவை யார். (உரு)

பிரியேனென்றல்.

அதாவது—நீர்க்கரைப் பசுங்கொடி வேனில்வெப்பத்தால் வாடுதல்போலப் புணர்ச்சி யின்பத்தாற் பெற்றவழகு வேறுபட்டு நிற்குந் தலைமகளைக்கண்ட தலைமகன் நின்னிற் பிரியேனென வற்புறுத்திக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பாவிடைவைத்தபெரும்புகழ்வெங்கைப்பழமலைகைம்
மாவிடைவைத்தவிகல்வாள்விழியெழின் மாதர்தமை
நாவிடைவைத்தவன்மார்பிடைவைத்தவனுணவகப்
பூவிடைவைத்தநினையோபிரிகுவன்பூங்கொடியே.

ப - ரை. பூங்கொடியே - பூங்கொடிபோல்வாளே, பா இடை - அன்பரது பாடல்களில், வைத்த-அமைக்கப்பட்டுள்ள, பெரும்புகழ் - பெரும்புகழையுடைய, வெங்கை பழமலை - வெங்கைப்பழமலை நாதரது, கை - திருக்கரத்திலுள்ள, மா இடை - மானினிடத்து, இகல் வைத்த - பகைவைத்த, வாள் - வாட்படைபோன்ற, விழி-கண்களை யுடைய, எழில் - அழகாகிய, மாதர்தமை-மாதர்களை, நா இடைவைத்தவன் - நாவின்கண் வைத்துக்கொண்டவனாகிய பிரமனும், மார்பு இடைவைத்தவன்-மார்பின்கண் வைத்துக்கொண்டவனாகிய திருமாலும், நாண - வெள்கும்படி, அகம்பூ இடை - என்மனமாகிய மலரினிடத்து, வைத்த - வைத்துக்கொண்ட, நின்னையோ-உன்னையோ, பிரிகுவன் - விட்டுப் பிரிவேன் (பிரியேன்) எ - று.

க - ரை. பூங்கொடியே! வாள்போலும் விழியையுடையவராகிய மாதரைத் தமது நாவினுமார்பினும் வைத்தவராகிய பிரமவிட்டுணுக்கள் நாணும்படி உன்னை யென்னகமலர்மீதமைத்துளேன், அத்தன்மையையாகிய நின்னையோ யான் விட்டுப் பிரிவேன் என்பதாம்.

வி - ரை. பூங்கொடி - இரண்டன் றொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; உவமையாகு பெயருமாம். இடையைந்தும் இடப்பொருளவாகிய ஏழனுருபுகள். பாவென்றது

பாவும் பாவினமுமாகிய இரண்டனையும். மா - மான். இகல் - வலியுமாம்; போர் என்றலுமொன்று. மாதர்தமை நாவிடை வைத்தவன். மார்பிடை வைத்தவன் என்றது நாமகளையும் மலர்மகளையும் முறையே நாவிலும் மார்பிலும் வைத்தவன் என்றபடி. நாவில் வைத்தவன் பிரமன். மார்பில் வைத்தவன் விட்டுணு. வைத்தவனிரண்டனீற்றினுமெண்ணும்மைதொக்கன. நினையோ பிரிகுவன் என்றதனால், பிறரைப்பிரியினும் நின்னைப்பிரியேனென வற்புறுத்தியவாறாயிற்று. பிரிகுவன் என்பதில் அன் தன்மையில் வந்தது. இது புதியன புகுதல்.

(உசு)

பிரிந்து வருகென்றல்.

அதாவது—மேலைச்செய்யுளில், நினையோ பிரிகுவன் என்றமையால், பிரிவென்பதொன்றுண்டு போலுமென்றறிந்து வருந்தாநின்ற தலைமகளைத் தேற்றுவான், பிரியினும் விரைந்துவந் துன்னைச்சேர்வேனென வற்புறுத்திக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

உழைதொட்டவங்கையர்வெங்கையர்ஞானவொளியர்வெற்பி
லிழைதொட்டுவிம்மிமலையோடிகலுமிளமுலையாய்
மழைதொட்டுநின்றவிப்பூம்பொழிற்புக்குமணிமகரக்
குழைதொட்டுமீளுநின்கண்போல்விரைந்துகுறுகுவனே.

ப - ரை. உழைதொட்ட - மானைத்தரித்த, அங்கையர் - திருக்கரத்தையுடையவர், வெங்கையர் - திருவெங்கைப்பதியையுடையவர், ஞானவொளியர் - ஞானமாகிய பிரகாசத்தையுடையவர், (அவரது) வெற்பில் - மலையிலுள்ள, இழைதொட்டு - ஆபரணங்களணியப்பெற்று, விம்மி - பருத்து, மலையோடு இகலும் - மலையோடு பகைக்கின்ற, இளமுலையாய் - இளமைபொருந்திய தனங்களையுடையாளே, மழைதொட்டு நின்ற - மேகங்கள் தவழ்கின்ற, இ - இந்த, பூம்பொழில் புக்கு - பூஞ்சோலையிற் புகுந்து, மணி - மணிகளழுத்தின, மகரக்குழைதொட்டு - மகரகுண்டலத்தைத் தீண்டி, மீளும் - மீளுகின்ற, நின்கண் போல் - உன் கண்கள்போல, விரைந்து குறுகுவன் - ~~விரைவாய் மீளுவேன்~~ நின்பாற் சேருவேன். எ - று.

க - ரை. திருவெங்கை நாதரது மலையில் வாழ்கின்ற இளமுலையாய்! உன் மகரக்குழையைத் தொட்டு மீள்கின்ற நின் கண்போல, இப்பூஞ்சோலையிற் புகுந்து விரைந்து மீண்டு வருவேன் என்பதாம்.

வி - ரை, முன்னிரண்டடியிலுள்ள தொடல் தரித்தற்பொருட்டு; பின்னிரண்டடியிலுள்ள தொடல் தீண்டற்பொருட்டு. ஞான

வொளியர் — ஞானப்ரகாசர். விம்மல் - பருத்தல். இகலும் என்பதற்குப் போர்செய்கிற என்றுரைத்தலுமாம். இளமுலை - முதிராமுலை; சாயாதமுலையுமாம். இப்பூம்பொழிலென அண்மைச்சுட்டாற் கூறினான் பிரிவு தாங்கற்கென்க. மகரக்குழை - மகரவடிவாகச் செய்யப்பட்ட குண்டலம். மாதர் கண்கள் செவியளவோடி மீடலியல்பென்பது, "காதளவோடிய கலகப்பாதகக் கண்ணியர், குழையைச் சிலுகிட்டு மையிட்டு மருட்டிற முற்றவிழிச்சியர்" என்னுமான்றோர் திருவாக்குக்களானும், கண்கூட்டானும் இனிது விளங்கும். கண்போல் - கண்கள் விரைந்து மீள்வதுபோல. (௨௭)

இடமணிந்தேன்றல்.

அதாவது—தலைவனூர் சேய்த்தோ அணித்தோவென்று தலைமகள் கவல்வதனைக் குறிப்பானறிந்த தலைமகன், அவட்கெளியுமாறு எம்மூரணித்தெனக் கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சீறாக்கயல்விழிமாதேதென்வெங்கைச்செழும்பதியான்
கூறாய்த்திகழ்திருமேனியுமாதுமைகூறுடலும்
வேறாய்ப்புணர்வதென்னோவந்துன்சாரல்வியன்பதியு
மாறாப்பழனத்தெமதூருமொன்றிமருவுறுமே.

ப - ரை. சீறா - கோபியாத, கயல் - கயல்போன்ற, விழி - கண்களையுடைய, மாதே - பெண்ணே, தென் - அழகாகிய, செழு - செழுமையுள்ள, வெங்கைப் பதியான் - திருவெங்கைப் பதியையுடையவனாகிய சிவபெருமானது, கூறு ஆய் - ஒரு பங்காகி, திகழ் - விளங்குகின்ற, திருமேனியும்—, உமை மாது-உமாதேவியின், கூறு- ஒரு பங்காகிய, உடலும் - திருமேனியும், வேறு ஆய் - தனித்தனியாகி, வந்து - மீட்டும் வந்து, புணர்வது என்னோ - பின் கூடுவதோ, (அன்று) (அதுபோல) நின் சாரல் - உன்மலைச்சாரலிலுள்ள, வியன் பதியும் - பெருமையுள்ள ஊரும், மாறா - இடையறாத, பழனத்து - வயல்களையுடைய, எமது ஊரும் - எம்மூரும், ஒன்றி - ஒற்றுமைப்பட்டு, மருவுறும் - பொருந்தியிருக்கும். எ - று.

க - ரை. சீறாக்கயல் விழிமாதே! திருவெங்கைப் பதியானது திருமேனியும் உமாதேவியின் திருமேனியும் வெவ்வேறாதலின்மை போல, உன்பதியும் எம்பதியும் வேறாய்ப்பிரிந்து தோன்றாதொன்றாய்ப் பொருந்தியிருக்கும் என்பதாம்.

வி - ரை. கூறு - பாகம். மந்து உமை - அழகாகிய வுமை யெனினுமாம். வியன் விசாலித்த வெனினுமாம். மாறா என்றது விளைவிடையறாத என்றவாறு. ஒன்றி - ஒன்றாகி யெனினுமாம். தலைவியூர் குறிஞ்சி நிலத்தின் கண்ணதென்பதும், தன்னூர் மருத நிலத்தின் கண்ணதென்பதும் தோன்ற, 'உன்சாரல் வியன்பதியு மாறாப் பழனத்தெமதூரும், என்றான். ஒன்றியென்றதன் மேலும் மருவுறும் என்றதனால் மிகவு மணித்தென்பது விளங்கும். எமது- தனித்தன்மைப் பன்மை. என்றோவென்னு மோகாரம் எதிர் மறை. (உஅ)

தெளிவு.

அதாவது—"தலைவன்மாற்றந் தலைவிதேற்றம், தெளிவாமென் பர் தெளிந்திசினோரே" என்னுஞ் சூத்திரவிதியால் தலைவனது சொல்லைத் தலைவி மெய்யெனத் தெளிந் தாற்றாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பழிமாற்றியபுகழ்வெங்கைபுரேசர்பனிவரைமேன்
மொழிமாற்றெனும்பொருள்கோளினல்லாலன்மொழிபிறழார்
சுழிமாற்றியவுந்தியாய்வருவேனெனச்சொல்லியவவ்
வழிமாற்றமும்பிறழ்மோபிறழாதுமறப்பினுமே.

ப - ரை. பழிமாற்றிய-(பாண்டியன்) பழியைத்தீர்த்த, புகழ்- கீர்த்தியையுடைய, வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க்கு அதி பராகிய சிவபெருமானாது, பனிவரைமேல் - குளிர்ச்சி பொருந்திய மலைமீதுள்ள, சுழிமாற்றிய - நீர்ச்சுழியைவென்ற, உந்தியாய் - நாபி யையுடையவளே, மொழிமாற்று என்னும் - மொழிமாற்றென்று சொல்லப்படுகின்ற, பொருள் கோளின் அல்லாமல் - பொருள் கோளினிடத்தன்றி, மொழிபிறழார் - மொழிதவறார், வருவேன் என சொல்லிய - வருவேனென்று யான்சொன்ன, அ - அந்த, வழி மாற்றமும் - தாழ்ந்த சொல்லும், பிறழ்மோ - தவறுமோ, மறப்பி னும் - (யான்) மறந்தாலும், பிறழாது - தவறாது. எ - று.

க - ரை. சுழிமாற்றிய வுந்தியாய்! திருவெங்கை நாதரது மலை யில் வாழ்கின்றவர் மொழிமாற்றுப் பொருள் கோளினல்லது வேறி -த்து மொழிதவறார். ஆதலால் (யான் சொன்ன சொல்லானது) யான் மறந்தாலும் தவறாது என்பதாம்.

அவ்வழி மாற்றம் - வருவேனெனச் சொல்லிய அந்த முறைமை யினையுடைய சொல்.

வி - ரை. பழிமாற்றிய புகழ் - நிர்மலமான புகழ் எனினுமாம். பனிவரை-பனிதவழுமலை யென்றலுமொன்று. சுழிமாற்றிய வென்பதில் மாற்றிய வென்பதீண்டு வென்றவெனப் பொருள்கொள்ளக் கிடந்தது. பிறழ்மோவென்றது பிறழுமோ வென்பதன் விகாரம். இதில் மகரங்குறுகிற்று. மொழிமாற்றுப் பொருள்கோள் - என்றது எண்வகைப் பொருள்கோளிலொன்று. அது "ஏற்றபொருளுக்கியையு மொழிகளை, மாற்றி யோரடியுள் வழங்கல் மொழிமாற்றே" என்னுஞ் சூத்திரவிதிப்படி மொழிகளை யேற்ற பெற்றி மாற்றிப் பொருள்கோடல். எண்வகைப்பொருள் கோளாவன - யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரனிறைப்பொருள் கோள், விற்பூட்டுப்பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப்பொருள்கோள், கொண்டு கூட்டுப்பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்பனவாம். மறத்தற்கு வினைமுதலாகிய யான் என்பது வருவித் துரைக்கப்பட்டது. (உகூ)

பிரிவுழிமகிழ்ச்சி.

அதாவது—தலைமகள் பிரிந்து போகுழி, அவள் போகுந்தன்மையைத் தலைமகன் கண்டு மகிழ்தல். அது, செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல், பாகனொடுசொல்லல் என்றிரு துறைகளை யுடைத்து. அவற்றுள்,

செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தோடு சொல்லல்.

அதாவது—தலைவன், புணர்ச்சிக் களத்துநின்றும் பெயர்ந்து போகாநின்ற தலைமகளது செலவைக்கண்டு தன் நெஞ்சொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

உடையோர்சிறிதொருகைதூக்கிவீசியொருகையினைப்
புடையோடணைக்கண்ணிலேருக்கி சுறம்ருவிப்பூவுடனே
சடையோர்திருவெங்கைவெற்பினம்மாவி தனிநெஞ்சமே
நடையோர்மங்கள்கண்டனேபறக்கடக்கின்றதே.

ப - ரை. தனிநெஞ்சமே - ஒப்பற்ற என்மனமே, சடையோர் - பெரிய சடாபாரத்தைத் யுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கை மலையிலுள்ள, நம் ஆவி - எமது உயிரனையாள், ஒரு கை - ஒரு கையினால், உடை - ஆடையின், ஓர் சிறிது தூக்கி - முன்றானையைத் தூக்கிக்கொண்டும், ஒரு கையினை

வீசி - ஒரு கையை வீசிக்கொண்டும், புடை ஓடு - பக்கங்களில் ஓடுகின்ற, அரி - செவ்வரிபரந்த, கண் - கண்களால், நிலன் நோக்கி - நிலத்தைப் பார்த்துக்கொண்டும், சிறு ஒலி பூண் உடனே - சிற்றொலியையுடைய ஆபரணங்களோடு, ஓதிமங்கள் - அன்னப்பறவைகள், நடைகண்டு - தனது நடையை நோக்கி. பறக்க - பறக்கும்படி, நடக்கின்றது - நடவாநின்றது, என் - ஈதென்ன வியப்பு (நீ காண்பாயாக) எ - று.

க - ரை. என் ஒப்பற்ற மனமே! சிவபிரானது திருவெங்கைப் பதியிலுள்ள எம் முயிரானது, ஒரு கையினால் தன் ஆடையைத் தூக்கிக்கொண்டும், மற்றொரு கையினை வீசிக்கொண்டும், நிலத்தை நோக்கிக்கொண்டும் சிற்றொலிப்பூணோடு, தனது நடையைக்கண்டு அன்னங்கள் பறக்கும்படி நடவாநின்றது; இஃதோர் வியப்பிருந்தவாறென்னை யென்பதாம்.

வி - ரை. உடை - தொழிலாகுபெயர். ஈற்றேகாரம் உவகைக் குறிப்பு. கைவீசல் விரைந்து நடத்தற்பொருட்டென்க. உடையோர் சிறிதொருகை தூக்கியும், ஒரு கையினை வீசியும், நிலநோக்கியும், சிற்றொலிப்பூணுடனே நடத்தல் யாதுக்கெனின், புணர்ச்சிக்களத் திருப்புழி ஆயக்கூட்டத்தார் வருவரென்றும், வரிற்களவுபுலனாமென்றும் கருதி அவ்விட நீங்கித் துகில்செவ்வனே யுடுத்தல் முதலிய செய்யாமை வந்தாளென்க. நிலநோக்குதல் நாணின்செய்கை. சடையோர் என்ற சொல்லாற்றல் பெரிய சடையென விளக்கிற்று. ஓதிமம் - அன்னம். ஆவியிவ்வாறு நடத்தல் வியப்பிற் கேதுவாயிற்று. பறத்தல் - நடைக்குத் தோற்றோடல். நீ காண்பாயாக வென்பது சொல்லெச்சம். (௫0)

பாகனோடு சொல்லல்.

அதாவது—தலைவன் தன்னைத் தேடிவந்த பாகனுக்குத் தலைவி செல்லுஞ் செலவைக் காட்டிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொன்னங்கிரிநிகர்திண்டேர்செலுத்தும்புகழ்வலவா
மின்னஞ்சடையர்திருவெங்கைவாணர்தம்வெள்ளருவித்
தென்னஞ்சிலம்பிலிடைமிடித்தார்நமைத்தேடிபெதி
ரன்னம்பிடியெனவேட்டடந்தேருநம்மாயிழையே.

ப - ரை. அம் - அழகாகிய, பொன்கிரிநிகர் - பொன்மலையை நிகர்த்த, திண் தேர் - வலியதேரை, செலுத்தும் - நடத்துகின்ற, புகழ் - புகழையுடைய, வலவா - பாகனே, மின் - மின்போலும்,

அம்சடையர் - அழகிய சடாபாரத்தை யுடையவரும், திருவெங்கை வாணர் - திருவெங்கைவாணரும் ஆகிய சிவபெருமானாரது, வெள் அருவி - வெள்ளிய அருவியாறுகளையுடைய, அம் - அழகிய, தென் சிலம்பில் - தென்றிசையிலுள்ள மலையினிடத்து, இடைமிடித்தார் தமை - இடைச்சிறுமை யுடையவரை, தேடி - தேடிக்கொண்டு, நம் ஆயிழை - நம் தலைவி, எதிர் - அவர்களுக்கெதிரே, அன்னம் என - அன்னம்போலவும், பிடி என - பெண் யானைபோலவும், நடந்து ஏகும் - நடந்து செல்லாநின்றனள். (நீ காண்பாயாக) எ - று.

க - ரை. பொற்கிரிபோலும் அழகிய தேரைச் செலுத்துகின்ற பாகனே! திருவெங்கைச் சிவபிரானது மலையில் இடை மிடித்தாரைத் தேடி அவர்க்கெதிரே நம்மாயிழை அன்னம் பிடியெனச் செல்லாநின்ற செலவை நீ காண்பாயாக வென்பதாம்.

வி - ரை. பொன்னங்கிரி தென்னஞ்சிலம்பு என்பவற்றில் அம் சாரியைகளாக்கினு மமையும். பொன்னங்கிரி - பொன் மலையாகிய மேரு. புகழ் - தேர்கடவுமாற்றலாற் படைத்த புகழ். வலவன் - பாகன். மின் - மின்னுகின்ற வெனினுமாம். இடை மிடித்தார் - இடை சிறுத்தவர், இடையே மிடித்தவர் என் றிருபொருள்கொள்ளக் கிடந்தது. அன்னம் பிடியென என்பதற்கு இடை சிறுத்தார்க் கேற்ப அன்னமும் பெண் யானையும்போல வென்றும், இடையே மிடித்தார்க்கேற்ப அன்னம் (சோறு) பிடியென்றும் பொருளுரைத்துக்கொள்க. மிடித்தார் - வறியர். ஆயிழை - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். நீ காண்பாயாகவென்னுஞ் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது. ஈற்றேகாரம் வியப்பிடைச்சொல். அன்னம் பிடியெனவே யென்னுமேகாரம் தேற்றம்; பிரிநிலையென்றலு மொன்று. (௩௧)

பிரிவுழிக்கலங்கல்.

அதாவது—தலைவி பிரிந்துழித் தலைவன் கலங்கிக்கூறல். அது ஆய வெள்ளம் வழிபடக்கண் டிதுமாயமோ வென்றல், வாயில் பெற்றுய்தல், பண்புபாராட்டல், பயந்தோர்ப்பழிச்சல், கண்படை பெறாது கங்குனோதல்என்றைந்து துறைகளையுடைத்து. அவற்றுள்,

ஆயவெள்ளம் வழிபடக்கண் டிது மாயமோ வென்றல்.

அதாவது—தலைமகளை ஆயவெள்ளம் வந்து வழிபடக் கண்ட தலைமகன், இவ்வாயத்துள்ளாள் என்னைத் தனித்துக் கூடியது என்ன மாயமோவென மயங்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஆயவெள்ளத்தினடுவேயிருக்குமரசவன்னம்
பாயவள்ளத்தமுதுற்றாங்கெனக்ககப்பட்டதுதான்
மேயவெள்ளச்சடையெம்மான்றிருவெங்கைவெற்பிலொரு
மாயவெள்ளக்கனவோவறியேனெஞ்சமாழ்குவதே.

ப-ரை. மேய - ஆகாயத்தினின்றும் பெருகிவந்த, வெள்ளம் - கங்கையை, சடை - தமது சடாபாரத்தி லடக்கிக்கொண்ட, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில், ஆயவெள்ளத்தின் நடுவே இருக்கும் - தோழியர்கூட்டத்தினிடையே யிருக்கின்ற, அரச அன்னம் - அரச அன்னமானது, வள்ளத்து - கிண்ணத்தில், பாய - பரவிய, அமுது உற்றாங்கு - பால்கிடைத்தது போல, எனக்கு அகப்பட்டது - எனக்குக்கிடைத்தது, ஒரு மாயவெள்ளக்கனவோ - மாயையின் மிகுதியாலுண்டாகிய தோர் சொப்பனமோ, அறியேன் - அறிந்திலேன், நெஞ்சம் - என்மனமானது, மாழ்குவது - மயங்கா நின்றது. எ-று.

க-ரை. கங்காதர ராகிய சிவபெருமானது திருவெங்கை மலையில், ஆயக்கூட்டத்தி னிடையே வீற்றிருக்கின்ற ராஜஹம்ஸமானது, எனக்குக் கிடைத்ததென்பது மாயையின் மிகுதியாலே யாம் கண்டதொரு சொப்பனமோ, அறிந்திலேன். உண்மை தெரியாமையால் என்மன மயங்காநின்றதென்பதாம்.

வி-ரை. ஆயம் - தோழியர்குழு. ஆயத்தை வெள்ளமென்றதற் கேற்பத் தலைமகளை அரசவன்னம் என்றான். வெள்ளம் ஈண்டு மிகுதிப்பொருட்டு. வள்ளம் - பாநபாத்திரம். வெள்ளத்தமுது - எனப்பாடமோதிப் பாற்கடலமுது என்றுரைத்தலுமொன்று. வெள்ளம் ஈண்டுக் கடலையுணர்த்திற்று. அற்றேல் கடலென்பது பாற்கடலை யுணர்த்துமோவெனின், உணர்த்தும். என்னை, "அன்பினைந் திணையென் றறுபதுசூத்திரம், கடலமு தெடுத்துக் கரையில்வைத் தனபோல்" என்புழிக் கடலென்பது பாற்கடலை யுணர்த்தியது போல வென்க. தான் - அசை. வெள்ளச்சடையெம்மான் என்பதில் வெள்ளம் கங்கையைக்குறித்ததோ ராகுபெயர். மாயவெள்ளம் - மாயையின் மிகுதி. மாழ்குதல் - மயங்குதல். ஏ - இரங்கற்குறிப்பு.

இங்ஙனந் தலைமகள் காணாததோ ரணிமைக்கண்ணின்ற தலைமகன் தலைமகள் ஆயக்கூட்டத்தை யடைதலும், அவ்வாயத்தார் குறுங்கண்ணியும் நெடுங்கோதையுந் தளிருங்கொணர்ந்து வழிபடுவாருங் குற்றேவல் செய்வாரும் பல்லாண்டு பாடுவாருமாய்ச் சூழ, தாரகை

நடுவெட்டண் முழுமதியென இவள் வீற்றிருத்தல் கண்டு மயங்கிக் கூறியவாறு, இது மருளுற்றுரைத்தல். மேல்வருவன தெருளுற்றுரைத்தல் எனக்கொள்க. என்னை, "மருளுற்றுரைத்த றெருளுற்றுரைத்தலென் றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்" என்ப தோத்தாகலினென்க. (கூஉ)

வாயில் பெற்றுய்தல்.

அதாவது—தலைவி ஆயக்கூட்டத்திற் செல்லும்போது தன்னுயிர்ப்பாங்கியின் முகத்தை நோக்கா நின்று செல்ல, அதைத் தலைமகனறிந்து, அவளைத் தனக்குத் தூதாகப் பெற்றுய்ந்ததாகக் கூறல். வாயில் எனினும் தூது எனினுமொக்கும். பாங்கு - பக்கம். பாங்கி - பக்கத்திலிருப்பவள். இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமுங் கூறி, மதியுடம்பாட்டி லறிதற்குரிய பாங்கியை யீண்டறிந்ததாகக் கூறியதென்னையெனின், மதியுடம்பாட்டில் வாயில்பெற் றிரவுவலியுறுத்திக் கண்ணியுந்தழையு மேந்திச்சென்று, ஊர், பேர் முதலிய வினாவழிப் பாங்கியை யறிதற்கெனக்கொள்க. ஈண்டறியாவிடின், இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டங்களில் அறியுமிட மின்றாதலான், இவ்வாயில் பெற்றுய்தற்கும் அவ்வாயில் பெற்றுய்தற்கும் மாட்டேற்றுப் பூட்டென்றறிக. அதற்குச் செய்யுள்,—

சேவையுகைப்பவர்வெங்கைபுரேசர்சிலம்பின்மய
னோவையொழிப்பமருந்துகண்டோமினிநோவனெஞ்சே
பூவையுருத்தமொழியார்மழைக்கட்பொறிவண்டுதான்
பாவையொருத்திமுகாம்புயத்தேசென்றுபாய்கின்றதே.

ப-ரை. சேவை உகைப்பவர்-இடபவாகனத்தை நடத்துபவர்; வெங்கை புரேசர் - திருவெங்கை நகரத்தில் எழுந்தருளியிருப்பவர், (அவரது) சிலம்பில் - மலையில், மயல் நோவை - மையற்பிணியை, ஒழிக்க - நீக்குதற்குரிய, மருந்து - ஓர் மருந்தினை, கண்டோம் - (யாம்) அறிந்தோம், இனி—, நெஞ்சே - என்மனமே, நோவல் - நீ வருந்தாதை, (அம்மருந்தியாதெனின்) பூவை - நாகணவாய்ப்பறவையை, உருத்த - வென்ற, மொழியார் - இன்சொல்லை யுடைய இம்மாதரது, மழை - குளிர்ச்சியும், பொறி - அறிவுமுள்ள, கண் வண்டு - விழிகளாகிய வண்டுகள், பாவை - பாவைபோன்ற, ஒருத்தியாகிய-ஒரு தோழியின், முகம் அம்புயத்தே - முகத்தாமரை மலரினிடத்தே, சென்று பாய்கின்றது - சென்று பாயாநின்றது. எ - று.

க - ரை. மனமே! இடபவாகநராகிய சிவபெருமானரது திருவெங்கை மலையிலுள்ள இம்மாதரது கண்களாகிய வண்டுகள் ஒரு

பாங்கியின் முகமாகிய தாமரைமலரின்மேற் சென்று பாயாநின்றன வாதலால் எமது மயலைத் தீர்க்கு மருந்தொன்று கண்டோம்; நீ நோவற்க வென்பதாம்.

வி - ரை. சே - இடபம். இது இன்சாரியை பெறாதே யுரு பேற்றுச் சேவையென்றாயிற்று. இது "எ முனிவ்வி ருமையும்" என் பதனாலமைந்தது. உகைத்தல் - செலுத்தல். மருந்து என்றது உயிர்ப்பாங்கியை யறிதல். கண்டோம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. நோவல் - விலங்கோள். பூவை - நாகணவாய்ப்புள். இதனைச்சாரிகம் என்பர் வடநூலார். பூவையுநத்த இரண்டன்றொகை நிலைத்தொடர். கட்பொறி - கண்ணாகியபொறி யெனினுமாம். பாவை - சித்திரப்பாவை (பிரதிமை). பாவை யொருத்தியென்றது உயிர்ப்பாங்கியை. வண்டு அம்புயத்தே சென்று பாய்தலியற்கை யென்ற விச்செய்யுளாலினிது விளங்கும். "குவளைக் கருங்கட்கொடி யே ரிடையிக்கொடிகடைக்கண், உவளைத் தனதுயி ரென்றது தன்னோ டுவமையில்லா, தவளைத்தன் பால்வைத்த சிற்றம் பலத்தானரு ளிலர்போற், றுவளத் தலைவந்த வின்னலின்னேயினிச சொல்லு வனே" என்றார் மணிவாசகரும். கண்டோம் என்பதற்கு வினைமுத லாகிய யாம்என்பது வருவித்துரைக்கப்பட்டது. இச்செய்யுள் தெரு ளுற்றுரைத்தலெனக் கொள்க. மேல்வருவனவுமவை. (௫௩)

பண்புபாராட்டல்.

அதாவது-தலைவியதழகைப்பரிந்து கொண்டாடாநிற்றல். பண் பென்பது அழகுக்குப் பெயரோவெனின், பண்பு பலவற்றுள்ளும் அழகுமோர் பண்பாமாதலால் அழகெனப்பட்டது. அற்குச்செய்யுள்,—

நிதிமுன்மிடியர்மனம்போலவாவிநிகரில்வெங்கைப்
பதிமுன்புகுமுதுகுன்றுடையார்பதம்பண்டரைத்த
மதிமுன்மரையுமரைநாயகன்முன்மதியுங்கண்டோர்
விதிமுன்கொணருமிவர்முகம்போலவியக்கிலரே.

(ப - ரை.) (நெஞ்சே - மனமே,) நிதிமுன் - பொருளினிடத்தில், மிடியர்மனம்போல் - வறியர் மனம்போல, நிகர் இல் - சமான மில்லாத, வெங்கைப்பதிமுன் - திருவெங்கைப் பதியினிடத்தில், அவாவிபுகும் - இச்சித்து எழுந்தருளின, முதுகுன்று உடையார் - பழமலையையுடைய சிவபெருமானரது,பதம்-திருவடியானது,பண்டு- முற்காலத்தில், அரைத்த-தேய்த்த, மதிமுன்-சந்திரனுக்கெதிரே, மரையும் - தாமரைமலரையும், மரைநாயகன் முன் - சூரியனுக்கெ

இவர் முகத்தின் முன் ஏனையர் முகம் மதிமுன் மரை போற் கூம்பியும், மரைநாயகன் முன் மதி போல் ஒளிமழுங்கியும் தோன்றுமாதலால் இவர் முகம் போல் ... முகம் வந்தாலும் வியவாரென்க.

திரே, மதியும்-சந்திரனையும், கண்டோர்-பார்த்தவர், முன்-முன்னே, விதிகொணரும் - ஊழினால் எமக்குக்கொணர்ந்து தரப்பட்ட, இவர் முகம்போல - இவரது முகத்தைவியப்பதுபோல, வியக்கிலர் - விய வார், எ - று.

க - ரை. சந்திரனுக்கெதிரே தாமரைமலரையும் சூரியனுக்கெ திரே சந்திரனையும் கண்டவர், இம்மாதின் முகத்தை வியப்பது போல வியவார் என்பதாம்.

வி - ரை. நிதி - செல்வம். மிடி - வறுமை. அவாவல் - ஆசைப் படுதல். முதுகுன்றுடையார் பதம் பண்டரைத்த மதியென்றது தக்ஷயஜ்ஞத்வம்ஸகாலவர்த்தமானத்தைக் குறித்தது. மதி-ஈண்டுப் பூர்ணசந்திரனெனக்கொள்க. மரை-முதற்குறை. தாமரையை மலர் த்துதலால் சூரியனை மரைநாயகன் என்றார். விதி-ஊழ் (தெய்வம்). வியத்தல் - புகழ்தல். (கொண்டாடல்) மதியென்பதற்கு அமிழ்தத் தையுடைய தென்பதுபொருள். நெஞ்சு - முன்னிலையெச்சம்.(நச)

பயந்தோர்ப்பழிச்சல்.

அதாவது—தலைமகளை யீன்றாரைத் தலைமகன்வாழ்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

செந்தாமரையுமரிமார்புமென்னத்திருமகடா
னந்தாமனையிடையின் றிருந்தாங்கெந்தநாளுமுற
வந்தாழ்சடையவர்வெங்கையிலேநமதாவிநிற்ப
வந்தாரமுதிதழ்தந்தாரைத்தந்தவர்வாழியவே.

ப - ரை. அம் - கங்கை, தாழ் - தங்கிய, சடையவர்-சடாபாரத் தையுடைய பரமசிவனாரது, வெங்கையிலே-திருவெங்கைப்பதியில், நமது ஆவி நிற்ப - நமது உயிர்நீங்காது நிற்கும்படி, வந்து-(விதிவழி யால்) வந்து, ஆர் - அருமையாகிய, இதழ்அமுது - அதராமிர்தத்தை, தந்தாரை - (எமக்குத்)தந்த விம்மாதரை, தந்தவர் - ஈன்றவர், செந் தாமரையும் - செந்தாமரை மலரும், அரிமார்பும் - திருமாலின் மார் பும், என்ன-போல, திருமகள்-திருமகளானவள், நந்தாமனை இடை- அழிவற்றவீட்டின்கண், இன்று இருந்தாங்கு - இன்று இருந்தது போல, எந்தநாளும் உற - எந்த நாளினும்பொருந்த, வாழிய - வாழ்ந் திருப்பாராக, எ - று.

க - ரை. சிவபெருமானது திருவெங்கைப்பதியில் எம்முயிர் நீங்காதிருக்கும்படிவந்து தன்னிதழமுதெமக்குத் தந்தவிம்மாதைத் தந்

தவர்பெருஞ் செல்வத்தரா யென்ஞான்றும் வாழ்வாராக வென்ப தாம்.

வி - ரை. தாமரை - ஆகுபெயர். தான் அசை. நந்தல்-கெடல். அம் - நீர்; அது ஈண்டுக் கங்கைக்காயிற்று. கடலமுது தேவர்கட்கா விதந்ததுபோல இவளிதழமுது எமக்காவிதந்த தென்றதாயிற்று. அமுதிதழ்தந்தாரைத் தந்தவர் - இருமுதுகுரவர். (தாய்தந்தையர்) எம்முயிர் தந்துவாழ்வித்தவரைப்பெற்றவர் என்ஞான்றும் உயிர் வாழ்வாராகவென்று வாழ்த்தல் செய்நன்றியாதலின் இவ்வாறு தலைமகன் வாழ்த்தலாயினன் என்பது. (௫௫)

கண்படைபெறாது கங்குனோதல்.

அதாவது—தலைமகன், தலைமகள்தந்த வேட்கை மிகுதியால், அன்றிரா முழுதும் கண்பாடின்றி மனம் வருந்திக்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அரவாம்பணியினர்வெங்கைபுரேசரணியழகின்
வரவாங்கதிரென் றுறுமோவுடுமொக்குள்வந்தெழவே
விரவாம்புயற்கரவோடவிர்மாமதிவெள்வளைசே
ரிரவாங்கடலில் விழுந்தமிழ்வேலையெடுப்பதற்கே.

ப - ரை. (நெஞ்சே - மனமே,) உடு - நக்ஷத்திரங்களாகிய, மொக்குள் - குமிழிகள், வந்து எழ - வந்து தோன்ற, விரவு ஆம் - வந்து கலக்கின்ற, புயல் கரவோடு - மேகமாகிய முதலையோடு, அவிர் - விளங்குகின்ற, மா - அழகிய, மதி - சந்திரனாகிய, வெள்வளைசேர் - வெள்ளிய சங்கங்கள்கூடின, இரவு ஆம் - இராத்திரியாகிய, கடலில் விழுந்து - கடலின்கண் வீழ்ந்து, அமிழ்வேலை - அமிழ்ந்துபோகின்றவனாகிய வென்னை, எடுப்பதற்கு-மேலே தூக்குவதற்கு, அரவு ஆம் பணியினர் - பாம்பாகிய ஆபரணத்தையுடையவர், வெங்கைபுரேசர்- திருவெங்கை நகரத்திற்கதிபர், (அவரது) அணி அழகின் - ஆபரண சவுந்தரியம்போல, வரவு ஆம்-உதிக்கின்ற, கதிர் - சூரியன், என்று உறுமோ - எந்நாள் தோன்றுமோ (அறியேன்). எ - று.

க - ரை. உடுமொக்குள் முதலியவற்றையுடைய இரவாகிய கடலில் விழுந்தமிழ்வேனை யெடுப்பதற்கு, வெங்கைப்பதியாரது அணியழகுபோற் றோன்றுகின்ற சூரியன் என்றுதயஞ் செய்வனோ வென்பதாம்.

வி - ரை. அரா - அரவெனக்குறுகி உகரமேற்று அரவு என்றாயிற்று. அர என்பதே வகரவுடம்படுமெய் பெற்று உகரமேற்றதெனினுமாம். பண்ணி - அலங்கரிப்பது. அது பணியெனத் தொகுத்தலாயிற்று. கரா - முதலை. இது குறுகிக் கரவென்றாயிற்று. அவிர்தல் - விளங்குதல். மாமதி - முழுமதி. (பூர்ணசந்திரன்) வளை-சங்கு; இது முதனிலைத் தொழிலாகுபெயர். அமிழ்தல் - அழுந்தல். கதிர் என்று என்பதற்கு கிரணக்கற்றையையுடைய சூரியன் என்றுரைத்தலுமாம். உறுமோ வென்னு மோகாரம் இரங்கற் குறிப்பிடைச்சொல். ஈற்றேகாரமுமது. நெஞ்சு முன்னிலை யெச்சமாய் வருவித் துரைக்கப்பட்டது. இந்நான்கு செய்யுளுந் தெருளுற்றுரைத்தல். (ரு௬)

இடந்தலைப்பாடு.

அதாவது—இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் மறுநாள் அவ்விடத்தேவந்து தலைமகளைக்கூடல். இது "தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென், றிவ்வோர் மூவகைத் திடந்தலைப்பாடே" என்பதனால் மூவகைப்படும். அவற்றுள்,—

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

அதாவது—முன்பியற்கைப்புணர்ச்சியில் தலைமகளைக்கொணர்ந்து தந்தவிதியானது, யாமின்றுஞ்சென்றால் அவளை யெமக்குத்தருமெனக்கருதிச் செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்றந்தவேணியர்வெங்கைபுரேசர்மிகுமருளா
லன்றந்தவாரிநடுவேயொருவனகற்றியிட்ட
பொன்றந்ததெய்வமன்றோமலர்மாவைப்பொழிலிடத்தின்
முன்றந்ததின்றுந்தருநெஞ்சமேசெலின்முந்துறவே.

ப - ரை. நெஞ்சே - மனமே, மலர் - தாமரைமலரில் வீற்றிருக்கிற, மாவை - திருமகள்போன்றவளை, பொழில் இடத்தில் - சோலையில், முன் தந்தது - முன்னேயெமக்கு அருள்செய்தது, மின் தந்த வேணியர் - மின்போலும் சடாபாரத்தை யுடையவர், வெங்கை புரேசர்-திருவெங்கைநகரத்திற் கதிபர், (அவரது) மிகும் அருளால் - மிக்க கருணையால், அன்று - அந்நாளில், வாரிநடுவே - கடலினிடையே, ஒருவன் அகற்றிஇட்ட-ஒருவன் எறிந்துவிட்ட, பொன்-பொன்னை, தந்த-கொணர்ந்து அவனுக்குத்தந்த, தெய்வம் அன்றோ-தெய்வமல்லவா, (ஆதலால்) முந்துற செல்லின் - சற்று முந்திச் சென்றால், இன்றும் - இந்நாளிலும், தரும் - கொணர்ந்து கொடுக்கும், எ - று.

வாரி நடு — விருத்தகிரியாற்றின் மத்தி என்கை [illegible].

க - ரை. மனமே! திருவெங்கைநாதரது அருளால் ஒருவன் அன்றந்தக்கடலிலிட்ட பொன்னைக் கொணர்ந்து தந்த தெய்வமானது, இன்றும் யாம்செல்லின் எமக்குத்தரவிருக்கின்றதென்பதாம்.

வி - ரை. மின்தந்த என்பதற்கு மின்னுதலைச் செய்த வென்றுரைப்பினுமாம். "பொலிந்திலங்கு மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்வீழ்சடை" என்றார் சேரமான் பெருமாணாயனாரும். வேணி- சடை. ஒருவன் என்றது ஏலேலசிங்கன் என்னும் வாணிகனை. தெய்வம் - ஊழ். மா - உவமையாகுபெயர். (௯௭)

முந்துறக்காண்டல்.

அதாவது—முன்புபோலக் காணுநிற்றல். அதற்குச் செய்யுள்,

அங்கஞ்சுமந்ததிருமார்புடைவெங்கையானருளால்
வங்கஞ்சுமந்தகடற்பிறவாமல்வருமமுதஞ்
சிங்கஞ்சுமந்தகரியுடனேயொண்செழுந்தரளச்
சங்கஞ்சுமந்தசெந்தாமரைதோன்றத்தனிவந்ததே.

ப - ரை. நெஞ்சே - மனமே, அங்கம் - எலும்புமாலையை, சுமந்த - தாங்கிய, திருமார்பு உடை - திருமார்பினையுடைய, வெங்கையான் - திருவெங்கைப் பதியையுடையவனாகிய சிவபிரானது, அருளால் - திருவருளால், வங்கம் சுமந்த - மரக்கலங்களைத் தாங்கிய, கடல் பிறவாமல் - பாற்கடலில் தோன்றாமல், வரும் - ~~எமக்குக் கிடைத்த~~, அமுதம் - அமுதமானது, சிங்கம் சுமந்த - சிங்கத்தினால் தாங்கப்பட்ட, கரியுடனே - யானையோடு, ஒள்-ஒட்பமாகிய, செழு- செழுமைபொருந்திய, தரளம் - முத்தினையுடைய, சங்கம் சுமந்த - சங்கத்தால் தாங்கப்பட்ட, செந்தாமரை-செந்தாமரை மலரானது, தோன்ற - தோன்றாநிற்க, தனிவந்தது - தனிமையாய் என்னிடத்தே தோன்றிற்று. எ-று.

க - ரை. திருவெங்கைச் சிவபிரானது திருவருளால், பாற்கடலிற்றோன்றாமற் றோன்றின அமுதமானது சிங்கஞ் சுமந்த யானையோடும் தரளச்சங்கம்சுமந்த செந்தாமரை தோன்றத் தனிவந்ததென்பதாம்.

வி - ரை. அங்கம் - என்பு. அது அதனாலாகிய மாலையையுணர்த்தலால் கருவியாகுபெயர். வங்கஞ் சுமந்த கடல் என்றது பாற்கடலை அமுதந் தோன்றுதற்குரிய ததுவாதலான். அற்றேல்; பாற்கடல் வங்கஞ்சுமத்தற் குரித்தோவெனின், அது சாதியடையாதலா

லுரித்தென்றலமையும், "வங்கக்கடல்கடைந்த மாதவனை" என்று பெரியாரும் பணித்தார். சிங்கம் என்றது இடையை. கரியென்றது தனத்தை. செழுந்தரளச் சங்கம் என்றது கழுத்தினை. மாதர்மிடற்றுத் தரளமுண்டாகாத லியல்பாதலா லிவ்வாறு கூறப்பட்டது. மாதர் மிடற்றில் தரளமுண்டாதலை, "தந்தி வராக மருப்பிப்பிகந் தனிக் கதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளினமின்னார், கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகா, ரிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே" "இரத முடைய நடமாட் டுடையவ ரெம்முடையர், வரத முடைய வணிதில்லை யன்னவ ரிப்புனத்தார், விரத முடையர் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேற், சரதமுடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே" "ஆய் முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து,நீ முத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையி னித்தநித்தம், வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச் சொன்னால், வாய்முத்தஞ் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவன்னையே" "மகளிர்கள முத்த முச்சியதுக்குனும்" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களா னுணர்க. செந்தாமரை யென்றது முகத்தை. நெஞ்சு - முன்னிலையெச்சம். (நஅ)

முயங்கல்.

அதாவது—தலைமகன் தலைமகளைப் புணர்ந்து அப்புணர்ச்சி யின்பத்தைக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மடலுமணமுமெனவேநிறைவெங்கைவாணர்தமைத்
தொடலுமடியர்பெறும்பேறெனவிவடோண்மருவி
யுடலுமுயிருமனமுமெலாம்வளர்ந்தோங்குமின்பக்
கடலுளழுந்தியவசமுற்றேதையுங்கண்டிலமே.

ப - ரை. மடலும் - பூமடலும், மணமும்-வாசனையும், எனவே - (பிரியாது நிற்றல்) போலவே, நிறை - (எவ்விடத்தும்) நிறைந்த, வெங்கைவாணர் தம்மை - வெங்கைவாணரை, தொடலும் - சார்ந்த மாத்திரத்தில், அடியர் - அவரது அடியார்கள், பெறும் - அடைகின்ற, பேறு என - பயன்போல, இவள் தோள்மருவி - இம்மாதின் தோள்களைத் தழுவி, உடலும் உயிரும் மனமும் எல்லாம்,— வளர்ந்து ஓங்கும் - பெருகியுயர்கின்ற, இன்பக்கடலுள் - ஆனந்தசாகரத்தில், அழுந்தி - முழுகி, அவசம் உற்று - பரவசமடைந்து, ஏதையும் கண்டிலம் - வேறெதனையும் கண்டிலேம். எ - று.

க - ரை. அடியாராயினோர் மடல் மணம்போல எங்குநிறைந்த வெங்கைவாணரை யடைதலும், அவர் பெறும் பேறுபோல, யாமும் இவளது தோளுண்டுதலும் உடலுயிர் மனங்களெல்லாவற்றினும் வளர்ந்தோங்கு மின்பக்கடலுளழுந்தி யவசப்பட்டு வேறொன்றையுங் கண்டிலே மென்பதாம்.

வி - ரை. மடல்-பூவிதழ். அவசமுற்று-பரவசப்பட்டு. நெஞ்சு - முன்னிலையெச்சம். ஏ - வியப்பிடைச்சொல். சிவபிரானை யடைந்த அடியார் பேரின்பக்கடலுளழுந்தி வேறொன்றுங் காணாததுபோல, யாமும் இவடோண்மருவிப் பேரின்பக்கடலுளழுந்தி வேறொன்றுங் கண்டிலே மென்றவாறு. (நகூ)

புகழ்தல்.

அதாவது—புணர்ச்சியின்ப நுகர்ந்த தலைமகன், அவ்வின்பளித்த தலைமகளைப்புகழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நாங்குழையாமலருள்வோன்றிருவெங்கைநாயகன்கைத்
தாங்குழையேயன்றிமென்முலைதாங்கித்தளருமிடைப்
பூங்குழையாயெப்படிகுதித்தாலுமிப்புல்லறிவாய்
நீங்குழையோநின்மதர்வேனெடுங்கணிகர்ப்பதுவே.

ப - ரை. மெல்முலைதாங்கி-மிருதுவாகியதனங்களைச் சுமந்து, தளரும் - தளராநின்ற, இடை - இடையினையும், பூ குழையாய் - அழகிய குழையினையும் உடையமாதே, நாம் குழையாமல்-யாம் வருந்தாமல், அருள்வோன்-அருள்செய்பவன், திருவெங்கைநாயகன்-திருவெங்கைநாதன் (அவனது,) கை - திருக்கரத்தால், தாங்கு - ஏந்தப்பட்ட, உழையேஅன்றி - மானேயல்லாமல், எப்படி குதித்தாலும் - எவ்வாறு குதித்தாலும், இ - இந்த, புல்அறிவாய் - அற்பவறிவினதாகி, நீங்கு உழையோ - ஓடிப்போகின்றமானோ, நின்-உனது, மதர்-மதர்த்த, வேல் - வேற்படைபோன்ற,நெடுங்கண் - நெடியகண்களை, நிகர்ப்பது - நிகர்க்கப்பெறுவது, எ - று.

க - ரை. மென்முலை தாங்கித் தளருமிடைப் பூங்குழையாய்! திருவெங்கைநாதரது திருக்கரத்துமானேயன்றி,இந்தப்புல்லறிவையுடைய மானோ, உன் நெடுங்கண்களை நிகர்ப்பது என்பதாம்.

வி - ரை. குழைதல்-பிறவித்துன்பத்தான் வருந்துதல். உழையேயன்றி - உழைநிகர்ப்பதேயன்றி. குழை - சுறவக்குழை; காதணியெல்லாவற்றிற்கும் பொதுவுமாம். புல்லறிவாய் - புல்லறிவினதாகி,

புல்லுணவறிந்த வாயினையுடையதாய், என்றிருவகையாய்ப் பொரு ளுரைத்துக்கொள்க. உழையோவென்னு மோகாரம் எதிர்மறை. ஈற்றேகாரம் இரங்கற்குறிப்பிடைச் சொல். (௪௦)

ஆயத்துய்த்தல்.

அதாவது—தலைமகளைப் புகழ்ந்த தலைமகன், கால நீட்டிப்பினு யத்தார் நேடுவரெனக்கருதி அவளை விரைந்து ஆயத்துச் செலுத்தா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

வானோக்கிநிற்கும்பைங்கூழ்போலவுமொருமன்னவன்செங்
கோனோக்கிவாழுங்குடிபோலவுந்தடங்கோட்டிமயத்
தேனோக்கிநிற்குமெழிலுடையான்வெங்கைச்செல்வியுனைத்
தானோக்கிநிற்குநல்லாயத்துளேசென்றுசார்ந்தருளே.

ப-ரை. தடம் - பெரிய, கோடு - சிகரத்தையுடைய, இமயம் - இமயமலையிற் பிறந்த, தேன் - தேனனது, நோக்கிநிற்கும் - பார்த்து நிற்கின்ற, எழில் உடையான் - அழகுடையனாகிய சிவபிரானது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, செல்வி - திருமகளே, வான்நோக்கிநிற்கும் - மேகத்தையே நோக்கிநிற்கின்ற, பைங்கூழ்போலவும் - பயிர் போலவும், ஒரு மன்னவன் - ஒப்பற்ற அரசனது, செங்கோல் நோக்கிவாழும் - செங்கோலையே நோக்கி வாழ்கின்ற, குடிபோலவும் - குடிகள்போலவும், உன்னைத்தான் நோக்கிநிற்கும் - உன்னையே நோக்கிநிற்கின்ற, நல் ஆயத்துள்ளே - நல்ல தோழியர் கூட்டத்தினுள்ளே, சென்று சார்ந்தருள் - போய்ச் சேர்ந்தருள்வாயாக, எ - று.

க-ரை. சிவபிரானது வெங்கையிலுள்ள செல்வீ! வானோக்கி நிற்கும் பைங்கூழ்போலவும் ஒரு மன்னவன் செங்கோல்நோக்கிவா ழுங்குடிபோலவும், உன்னையேநோக்கிநிற்கும் ஆயத்திடைச்சென்று சார்வாயாகவென்பதாம்.

வி-ரை. வான்-இடவாகுபெயர். செங்கோல்-உவமையாகுபெ யர்; இது செவ்வியகோல் போறலின் இப்பெயர்த்தாயிற்று. இமயத் தேன் என்றது உமாதேவியை; இவள் இறைவற்கு மலைத்தேன் போல இனிமைபயத்தலால் உவமையாகு பெயர். செல்வி - உவமை யாகுபெயர். அண்மைவிளியாதலா லியல்பாயிற்று. தான் என்ப நீண்டுப்பிரிநிலை யேகாரப்பொருளில்வந்தது. இமயத்தேனோக்கி நிற் குமெழிலுடையான் என்பதற்கு இமயத்தேன் போல்வாளாகியவுமா தேவியை நோக்கி நிற்கும் அழகன் என்றுரைப்பினுமமையும். நல்லா,

யம் என்றான் இவளையே நோக்கிநிற்றலால். சார்ந்தருள் ஒரு சொன் னீர்மைத்து. இமயம் - பனிமலை, "தந்ததெய்வந் தருமெனச்சேற லொன்றுந் தெய்வந் தெளிதற்குரித்து" காண்டல், முயங்கல், புகழ் தல் என்னு மூன்றுங் கூடற்குரிய. ஆயத்துய்த்த லொன்றும் விடுத் தற்குரித்து. இவையாவும் இரண்டாநாளினிகழ்ந்தன. (சக)

பாங்கற்கூட்டம்.

அதாவது—மூன்றாநாள் பாங்கனாற் கூடுங்கூட்டம். "சார்தல் கேட்டல் சாற்றலெதிர் மறைநேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென், றாங்கெழுவகைத்தே பாங்கற்கூட்டம்" என்னுஞ் சூத்திரவிதியால் இது எழ்வகையினை யுடைத்து. அவற்றுள்,—

தலைவன் பாங்கனைச் சார்தல்.

அதாவது—தலைவன் இவ்வேட்கை நோய் நம்பாங்கனாலன்றித் தீராதெனக்கருதித் தன் பாங்கனைச்சாராநிற்றல். அதற்குச்செய்யுள்,

கன்னியுந்தானுமொன் றானோன் றிருவெங்கைக்கண்ணுதல்
வன்னியுங்காற்றுங்கலந்தேறியவெம்மதனைவெல்லச் [போல்
சென்னியுஞ்சேகரமும்போனமக்குச்சிறந்தநண்பன்
மன்னியிங்கோர்துணையாயினல்லாமல்வலியில்லையே.

ப - ரை. கன்னியும் தானும் - உமாதேவியுந் தானும், ஒன்று ஆனோன் - ஒருருவாயினவனாகிய, திருவெங்கை கண்ணுதல்போல் - திருவெங்கைப் பதியி லெழுந்தருளிய சிவபிரான்போல, வன்னியும் காற்றும் - கினியையுங்காற்றையும், கலந்து ஏறிய - சேர்த்து ஏறின, வெம் - வெவ்விய, மதனை - மன்மதனை, வெல்ல - வெல்லுவதற்கு, நமக்கு - எமக்கு, சென்னியும் சேகரமும் போல் - சிரமும் மகுடமும் போல, சிறந்த நண்பன் - சிறந்த பாங்கன், இங்கு மன்னி-இங் கேவந்து, ஓர் துணை ஆயின் அல்லால் - ஒப்பற்ற வுதவியாயி னல்லது, வலி இல்லை - எமக்கு வேறு வலியில்லை, எ - று.

க - ரை. உமாசகிதனாகிய திருவெங்கைநாயகன் போல கொடிய மன்மதனை வேறற்பொருட்டு, எமக்குச் சென்னியுஞ் சேகரமும் போற்சிறந்த பாங்கன் துணையாயினாலன்றி அம்மன்மதனைவெல்லும் வலியெமக்கின்றென்பதாம்.

வி - ரை. எல்லாவுலகங்களையும் அவற்றுள்ள சீவகோடி களை யும் ஈன்றும் தான் எஞ்ஞான்றுமுதிராது ஒரு பெற்றியே நிற்றலால்

உமாதேவியைக்கன்னி என்றார். ஒன்று - ஒருரு. கண்ணுதல் - நெற்றிக்கண்ணை யுடையவன். "வன்னி தத்தை சுகமரிசுவாகதம், கிள்ளைய வந்திகை கீரங்கிளியே" என்பதனால் ஈண்டுவன்னியென்றது கிளியை. இது மன்மதனுக்கோர் வாகனம். காற்று-தென்றற்காற்று. வன்னியுங் காற்றும் - நெருப்புங் காற்றுமெனச் சொன்னயந்தோன்றல் காண்க. காற்றோடு கூடிய நெருப்பினை யூர்வோனுதலால் வெம்மதன் எனப்பட்டான். வெம்மதன்-விருப்பத்தை யுண்டாக்கு மதன் என்றலுமொன்று. கண்ணுதல்போல்-கண்ணுதல் வென்றதுபோல.

பாங்கன் றலைவனை யுற்றதுவினுதல்.

அதாவது—தலைவனது உள்ளமும் தோளும்வாடிய வேறுபாட்டைப் பாங்கன்கண்டு, நினக்கு இவ்வேறுபாடுற்றதற்குக் காரணமென்னேவென வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இலங்காபுரிமன்னன்றோளிறவூன்றியவீசர்வெங்கை
யுலங்காதலிக்குந்திண்டோளுரவாகடலூர்ந்திடினும்
விலங்காமறலியொருகோடிதூதொடுமேல்வரினுங்
கலங்காவுளமுங்கலங்கிநின்றாயென்னகாரணமே.

ப - ரை. இலங்காபுரி - இலங்கைநகரத்திற்கு, மன்னன் -அரசனாகிய இராவணனது, தோள் இற - தோள்கள் நெரியும்படி, ஊன்றிய - (திருவடியைப்) யூன்றின, ஈசர் - ஈசரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, உலம் காதலிக்கும் - திரள்கல்லானது விரும்புதற்குரிய, திண்டோள் - வலிய தோள்களையுடைய, உரவா - அறிவுடையோனே, கடல் ஊர்ந்திடினும் கடனீரானது உலகின்மேற்பரந்து வந்தாலும், விலங்கா - (ஒருவராலும்) விலக்கப்படாத, மறலி - யமனனவன், ஒருகோடி தூதொடு-ஒரு கோடி தூதுவருடன், மேல் வரினும் - மேல்வந்தாலும், கலங்கா உள்ளமும் - கலங்காத மனமும், கலங்கி - கலங்கப்பெற்று, நின்றாய்-நிற்கின்றனை, காரணம்-(இதற்குக்) காரணம், என்ன - யாது, எ - று.

கு - ரை. இலங்கைக் கரசனாகிய ராவணனது தோள்களிறவூன்றிய திருவடியையுடைய ஈசரது திருவெங்கையிலுள்ள திண்டோளுரவனே! கடனீர் உலகின்மேற் பரந்துவரினும், ஒருவரானுமாற்றப்படாத நடுவன் ஒருகோடி தூதரோடு மேல்வரினும், கலங்காமனமுடையையாகிய நீயும் மனங்கலங்கி நிற்றற்குக் காரணமென்னென்பதாம்.

வி - ரை. தோளிறலூன்றிய வீசர் என மேல்வருதலால் இலங்காபுரிமன்னன் என்றது இராவணனை யுணர்த்திற்று. உலம் - திரள் கல். காதலித்தல் - இச்சித்தல். உரவா - வலியுடையோய் எனினுமாம். "மாற்றேனெனவந்தகாலன்" ஆதலால் அவனை 'விலங்காமறலி' என்றார். ஊர்ந்திடினும் மேல் வரினும் என்னுமும்மைகள் ஊராமை வாராமைகளின் பொருள. கலங்காவுளமும் என்றவும்மை யுயர்வு சிறப்பு. இலங்காபுரி மன்னன் றோளிறலூன்றியது, அவன் திருக்கயிலையைத்தூக்கின காலத்தில். ஊன்றுதற்குவினைமுதலாகிய திருவடி வருவித்துரைக்கப்பட்டது. வலியினும் வனப்பினுந்திரள் கல்லிற் சிறந்த தோளாதலான், 'உலங்காதலிக்குந் திண்டோள்' என்றான். உரவன்-அறிவன், வலியன். ஈற்றேகாரம் வியப்பிடைச் சொல். "வில்லங்கலைக் கால்விண்டு மேன்மே விடவிண்ணு மண்ணுமுந்நீர்க், கலங்கலைச் சென்றவன் றுங்கலங் காய்கமழ் கொன்றைதுன்று,மலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத் தானரு ளில்லவர்போற், றுலங்கலைச் சென்றி தென் னேவள்ள லுள்ளந் துயர்கின்றதே" என்பது திருக்கோவையார். ஈசர் - பெருஞ் செல்வத்தை யுடையவர். (சரு)

தலைவனுற்றதுரைத்தல்.

அதாவது—இவ்வாறு வினவிய பாங்கற்குத் தலைமகன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணங் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மலைவன்பணியரிவின்ஞாண்கணைசெய்துவந்துவெங்கைத்
தலைவன்புரமிரண்டொன்றேவெல்லவிச்சகமனைத்துஞ்
சிலைவன்குணங்கணைவேழஞ்சுரும்பலர்செய்துவென்றோன்
முலைவன்கிரியுறவந்தநண்பாவொருமொய்குழலே.

ப - ரை. நண்பா - பாங்கனே, மலை - மலையையும், வன்பணி - வலிய பாம்பையும், அரி - திருமாலையும், (முறையே) வில் - வில்லாகவும், ஞாண் - நாணாகவும், கணை - அம்பாகவும், செய்துவந்து-செய்துகொண்டெழுந்தருளி, வெங்கைதலைவன் - திருவெங்கைக் கிறைவனாகிய சிவபெருமான், புரம் இரண்டு ஒன்றேவெல்ல-முப்புரங்களை மாத்திரமே வெல்ல, இ - இந்த, சகம் அனைத்தும் - உலகமுழுதும், வேழம் - கரும்பையும், சுரும்பு - வண்டையும், அலர் - மலரையும், (முறையே) சிலை-வில்லாகவும், வன்குணம்-வலியநாணாகவும், கணை - அம்பாகவும், செய்து - செய்துகொண்டு, வென்றோன் - வென்றவனாகிய மன்மதன், முலைவன் கிரிஉற - ஸ்தனங்களாகிய வலிய மலையைப் பொருந்த, ஒரு மொய்குழல் - ஒருமாது காரணமாக, வந்த - இவ்வேறுபாடுகள் எனக்கு உண்டாயின, எ - று.

க - ரை. நண்பனே! திருவெங்கைத்தலைவன், மலை பாம்பு அரி இவற்றை வில் முதலியவாகச் செய்துகொண்டு முப்புரத்தை வெல்ல, மன்மதன் கரும்பு சுரும்பு மலர் இவற்றை வில் முதலியவாகச் செய்துகொண்டு இந்தச் சகமுழுதும் வென்றானன்றே, அவன் ஒரு மாதின் முலையாகியமலையரணைச் சார்ந்துநிற்க, இவ்வேறுபாடெனக்குண்டாயிற் றென்பதாம்.

வி - ரை. மலை - மேருமலை. வன்பணி - வலியபாம்பு (ஆதிசேடன்). அரி-விட்டுணு. புரம் இரண்டொன்றேவெல - புரங்களிரண்டொன்றையேவெல்ல. சகம்-தோன்றியழிதன்மாலையது.(உலகு). வந்தன வந்தவென வீறு தொக்கது. மொய்குழல் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். முல்லை - காடு; இது முலையெனத் தொகுத்தலாயிற்றெனக்கொண்டு, காட்டரண் மலையரண்களைச் சார்ந்து நிற்க எனக் கிவ்வேறுபா டுண்டாயிற்றென் றுரைகக்கொள்க. வெங்கைத்தலைவன் வலிய சுரும்பு வின் முதலிய கொண்டு வென்ற திரண்டொரு புரங்களையே, மதன்மெல்லிய கரும்புவின் முதலிய கொண்டுவென்றது எல்லாவுலகங்களையும் ஆதலால் அவனெதிரே யென்வலியழிதல் வியப்போவென்றதாயிற்று. பணி - படத்தை யுடையது (பாம்பு). வேழம்-கரும்பு. சுரும்பு - வண்டு. (சச)

கற்றறிபாங்கன் கழறல்.

அதாவது—வேதாகம புராணங்களெல்லாம் கற்றறிந்த பார்ப்பனப்பாங்கன், தலைவனையிடித்துக் கூறுநிற்றல். (இடித்துக்கூறல் - உறுதிச் சொல்லுரைத்தல்) அதற்குச் செய்யுள்,—

போதைப்பொதிந்திட்டி ருடேங்களகப்பொருப்பிமய
மாதைக்கலந்ததிருவெங்கைவாணர்மதுரைச்சங்க
மேதைபபசுந்தமிழ்ப்பாறகடனீந்தியவீரமொரு
பேதைக்குடைந்துநின்றாய் தகுமோசொல்பெருந்தகையே.

ப - ரை. பெருந்தகையே!—, போதை பொதிந்திட்டு - மலரைச்சூடி, இருள்தூங்கு - இருளானது நித்திரை செய்யப்பெற்ற, அளகம்-கூந்தலையுடைய, இமயம்பொருப்பு-இமயமலையீன்ற,மாதை-உமாதேவியை, கலந்த - சேர்ந்த, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, மதுரை - தென்மதுரையிலுள்ள, சங்கம்-சங்கத்திற் பயில்கின்ற, மேதை - அறிவுகொடுத்தற்குரிய, பசுந்தமிழ் - பைந்தமிழாகிய, பால்கடல் நீந்திய - பாற்கடலைக்கடந்த, வீரம் - வீரத்

தன்மையானது, ஒருபேதைக்கு-ஒரு மாதுக்கு, உடைந்துநின்றாய் - தோற்றுநின்றனை, தகுமோ-(இது உனக்குத்) தகுதியாமோ, சொல்-நீயேசொல்லுக, எ - று.

க - ரை. பெருந்தகாய்! உமாநாயகராகிய திருவெங்கைவாணரது தென்மதுரைச் சங்கப்பசுந்தமிழாகிய பாற்கடலைக் கடந்த நீயொருபேதைக் குடைந்துநின்றனை, இது நின்பெருமைக்குச் சாலுமோ என்பதாம்.

வி - ரை. பெருந்தகை-பெருங்குணத்தையுடையவன். போது-பேரரும்பு. இது "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்னுந் திருக்குறளாலினிது விளங்கும். 'இருநேங்கு' என்பதில் தூங்கு என்பதற்குத் தங்குதல் எனினுமாம். இமயப் பொருப்பு என்பது பொருப்பிமயம் என முன்பின்னாய்மாறிநின்றது. பதிபேதமேயன்றிப் பதிபேதமில்லையாதலான், 'திருவெங்கைவாணர்மதுரைச்சங்கம்' என்றார். கடலுக்கேற்ப நீந்திய என்றார். உடைதல் - தோற்றல். பேதை - பெண், அறிவிலான். தகுமோவென்னு மோகாரம் எதிர்மறை. (சுகு)

கிழ்வோன்கழற்றெதிர்மறுத்தல்.

அதாவது—பாங்கன் கூறிய கட்டுரையைத் தலைவன் மறுத்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஊணுமெனநஞ்சுவந்தோன்றிருவெங்கையூரிலுயர்
சேணுமுலகம்வறிதாகவந்தவச்சேயிழையார்
பூணாரமென்முலையின்பெருங்காட்சியும்பொய்யிடையின்
காணுமையுங்கண்டனையாயினண்பகழறலையே.

ப - ரை. நண்ப - நண்பனே, நஞ்சு - விஷத்தை, ஊண் ஆம் என - உணவாகுமென்று, உவந்தோன்-உண்டு மகிழ்ந்தவனாகிய சிவபெருமானது, திருவெங்கை ஊரில் - திருவெங்கை நகரத்தில், உயர் - உயர்ந்த, சேண் ஆம் - ஆகாயத்திலுள்ள, உலகம் - சொர்க்கலோகம், வறிது ஆக - வெறுமையாம்படி, வந்த - இவ்வுலகத்திற்கு வந்த, அ - அந்த, சேஇழையார் - மாதரது, ஆரம்பூண் - முத்தாரம் பூண்ட, மெல்முலையின் - மெல்லிய தனங்களின், பெருங்காட்சியும்-பெருந் தோற்றத்தினையும், பொய் இடையின் - பொய்போலும் இடையினது, காணுமையும் - காணாமையினையும், கண்டனை ஆயின்-கண்டாயாயின், கழறலை - (இவ்வாறு) இடித்துச் சொல்லமாட்டிற்றிலை. எ - று.

க-ரை. நண்பனே! சுவர்க்கலோகம் வறிதாம்படி திருவெங்கை நகரில் வந்த அம்மாதின் பூணாரப் பெருந்தனக் காட்சியினையும் பொய்போலு மிடையின் காணாமையினையும் நீ கண்டனையாயின் இவ்வாறு கழறுவாயல்லை யென்பதாம்.

வி-ரை. நண்பன் - பாங்கன். ஊண் - உணவு. இறைவற்கு உணவுநஞ்சென்பது, "பிரமனிந்திரன் முற்பிறதேவர்களுணெலாம், நரைபெருந் திரையற்ற நல்லாரமிழ்தே கொலாம், ஒருவர் தங்கிலர் கின் சிவனூண்விடம் வாழ்வன்மா, திருபெருங் குழையிட்ட பொன் னூலையின் வாசியே, "கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்கம் பலத்தமிழ்தாய், வினைகெடச் செய்தவன் விண்டோய் கயிலை மயிலனையாய், நனைகெடச் செய்தன மாயி னமைக்கெடச் செய்திடுவான், றினைகெடச் செய்திடு மாறுமுண் டோவித் திருக்கணியே" என்றற் ருடக்கத்தான்றோர் செய்யுட்களா னினிது விளங்கும். இவணீக்கத்தானழகிழந்தது சுவர்க்கமென்பார், 'சேணுமுலகம் வறிதாக' என்றார். சேயிழையார் - மாது. ஆர் விகுதி யுயர்வுகுறிக்கவந்தது. பூணாரம் என்பதனை யொரு சொல்லாகக் கொண்டு முத்துவட முதலிய வாபரணப் பொதுவெனினுமாம். பொய்யிடை - பொய்போலுமிடை. "பொட்டணி யானுதல் போயிறு மென்றுபொய் போலிடை" என்றார் திருவாதவூரடிகளும். காணாமை - காணப்படாமை (கட்புலனாகாமை). 'கண்டனையாயிற் கழறலை' என்றதனாற் காணாமையாற் கழறுகிற்றி யென்றவாறாயிற்று. நண்பவென்றது பகையாமைப் பொருட்டென்க. (சுசு)

கிழவோற் பழித்தல்.

அதாவது—அவ்வாறு கழற்றெதிர் மறுத்த தலைமகனைப் பாங்கன் பழித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அண்டாதிபர்நந்திருவெங்கைநாயகர்க்கன்றியொரு
பெண்டாலிதயமுருகினையாயிற்பெருந்தகைநீ
விண்டாரகைகண்டினியிந்துகாந்தமுமெய்யுருகும்
வண்டாமரைகளுமின்மினிதோன்றமலர்ந்திடுமே.

ப-ரை. பெருந்தகை நீ - பெருந்தகையாகிய நீ, அண்ட அதிபர் - தேவாதிபராகிய, நம் திருவெங்கை நாயகர்க்கு அன்றி - நம் திருவெங்கை யிறைவருக்கல்லாமல், ஒரு பெண்டால் - ஒரு பெண்ணினால், இதயம் உருகினையாயின் - மனமுருகப் பெற்றனையானால், இனி - இனிமேல், இந்து காந்தமும் - சந்திரகாந்தமும், விண்தார

கை கண்டு - ஆகாயத்திலுள்ள வுடுக்களைக் கண்டு, மெய் உருகும் - உண்மையாக உருகும், மின் மினி தோன்ற - மின் மினிப்பூச்சி காணப்பட, வள் தாமரைகளும் - வளவிய தாமரைகளும், மலர்ந்திடும் - புஷ்பிக்கும், எ - று.

க - ரை. பெருந்தகையாகிய நீ திருவெங்கை வாணர்க்கே யன்றி யொரு பெண் பொருட்டாக இதய முருகினையாயின், இனிச் சந்திரகாந்தமும் தாரகைகளைக் கண்டுருகும், தாமரைகளும் மின் மினிகளைக் கண்டு மலரும் என்பதாம்.

வி - ரை. அண்டாதிபர் - எல்லா வுலகங்களுக்குந் தலைவர் எனினுமமையும்; அண்டர் அதிபர், அண்டம் அதிபர் என்றிருவகையாய்ப் பிரித்துப் பொருளுரைத்துக்கொள்க. நாயகர்க்கன்றி யென்றது நாயகருக் குருகுவதல்லது என்றவாறு. தாரகை-நாண்மீன்கள். இந்து - சந்திரன். மின்மினி - கச்சோதம்; இதனை, கத்யோதம் என்பர் வடநூலார். சந்திரகாந்தம் ஓர் வகைக்கல்; இது சந்திரனைக் கண்டு நீர் கால்வது. பெண்டு - பெண். விண்டாரகை யென்பதில் விண் இயற்கையடை. பெருந்தகை - பெருங்குணத்தையுடையவன். பெருங்குணம் இறைவனையே யன்றி வேறொன்றைச் சிந்தியாத ஞானகுணம். "விண்டா ரகைகண் டினியிந்து காந்தமு மெய்யுருகும் வண்டா மரைகளு மின்மினி தோன்ற மலர்ந்திடும்" என்றமையால் இதுகாறும் அவ்வாறு உருகுதல் மலர்தல் என்பன நிகழ்ந்தனவில்லை பெருந்தகையாகிய நீ அண்டாதிபராகிய திருவெங்கை நாயகர்க் கன்றி யொரு பெண்டா லிதய முருகினை யாதலால் இனியவை நிகழுமென்றவாறாயிற்று. இதயம்-ஹ்ருதயம் என்னும் வடசொற்றிரிபு.

கிழவோன் வேட்கைதாங்கற் கருமைசாற்றல்.

அதாவது - தலைவன், நண்ப! அழிகின்ற வென்னுள்ளந் தேறுதற்குரிய இன்சொற் சொல்லாது நீ பழிக்கின்றனை, இனி வேட்கை தாங்க என்னால் முடியாதென் றுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்,-

பாலார்மொழியுமைபங்காளர்வெங்கையம்பாவைதந்த
மாலாழ்தருமெனைவெவ்வுரையானண்பவாட்டுகின்றாய்
காலாழ்களரினமிழ்ந்தவெங்கோட்டுக்களிற்றையொரு
வேலாலெறிபவர்போலேயிழிவெய்திவசமே.

ப - ரை. நண்ப - நண்பனே, கால் ஆழ்களரின் - கால் புதைந்து போகிற களர் நிலத்தில், அமிழ்ந்த - அழுந்திப்போன,

வெம் - வெவ்விய, கோடு - கொம்பினையுடைய, களிற்றை - யானையை, ஒரு வேலால் - ஒப்பற்ற வேற்படையினால், எறிபவர் போலே - குத்துவோர்போல, பால் ஆர் மொழி - பால்போலும் இன்மொழியையுடைய, உமை பங்காளர் - உமைபங்கராகிய சிவபெருமானாரது, வெங்கை - திருவெங்கைப் பதியிலுள்ள, அம் - அழகிய, பாவை - பாவைபோலு முருவுடையாள், தந்த - கொடுத்த, மால் - மையற் கடலில், ஆழ்தரும் - அழுந்தியிருக்கின்ற, என்னை—, வெம் உரையால் - வன்சொற்களால், வாட்டுகின்றாய் - வாட்டுகின்றனை, இது - இப்படி நீ செய்வதற்குக் காரணம், என் விதி வசமே - என் விதி வசமே யாம். எ - று.

க-ரை. நண்பனே! காலாழ்களரி னமிழ்ந்த வொரு யானையை வேலா லெறிபவர்போல, திருவெங்கைப் பதியிலுள்ள வொரு மாது தந்த காம மயக்கத்தால் வருந்தாநின்ற என்னை, நீயும் வன்சொற்களால் வருத்தாநின்றனை, இவ்வாறு நீ செய்தற்குக் காரணம் என் விதி வசமேயாமென்பதாம்.

வி - ரை. பால் ஆர் மொழி என்பதில் ஆர் உவமை யுருபு. பாவை - உவமையாகுபெயர். மால் - மயக்கம். ஆழ்தரும்-ஒருசொல். வெவ்வுரை-கழற்றுரை. களர்-உவர் நிலம். "காலாழ் களரி னரியடுங் கண் ணஞ்சா, வேலாண் முகத்த களிறு" என்றார் பெருநாவலரும். கோடு - கொம்பு. இது வளைந்திருப்பதெனக் காரணம் பற்றி வந்த பெயர். களிறு - ஆண்யானை. ஆழ்தரும் என மேலவருதலால் அதற்கேற்ப மால் என்பதற்கு மையற்கடலெனப் பொருள் கூறலாயிற்று. விதிவசமே யென்பதி லேகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். (சஅ)

பாங்கன்றன்மனத்தழுங்கல்.

அதாவது—கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றக் கேட்ட பாங்கன், எம்பெருமான், வேட்கை தாங்கலாற்றாது யிவ்வாறு கூறின், யானென் சொல்வேனெனத் தன்னுள்ளே யிரங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

பெட்டுப்பட்டாவுரிகொண்டோன்றென்வெங்கைப்பிரான்வரையின்
மட்டுப்பட்டாவிமலர்வாரிசமுகமெல்லிமுகை
முட்டுப்பட்டானையனையானிடையெனுமோரிழையாற்
கட்டுப்பட்டானினியென்செய்குவேனெந்தக்காசினிக்கே.

ப - ரை. நெஞ்சம் - மனமே, உரி - (யானைத்)தோலை, பெட்டு - விரும்பி, பட்டு ஆ - பட்டாடையாக, கொண்டோன் - அணிந்துகொ

ண்டோன். தென்வெங்கைப்பிரான்-தென்வெங்கைப்பெருமான் (அவனது), வரையில் - மலையிலுள்ள, மட்பெட்டு-தேன்பொருந்தி, ஆவி - தடாகத்தில், மலர் - மலர்கின்ற, வாரிசம் - தாமரைமலர்போன்ற, முகம் - முகத்தையுடைய, வல்லி-பூங்கொடி போல்வாளது, முகை - (முலையாகிய) முகையினிடத்து, முட்டுப்பட்டு - தடைபட்டு, ஆனை அனையான்-யானையை நிகர்த்தவனாகிய நமது தலைவன், இடை என்னும் - இடையென்கின்ற, ஓர் இழையால்-ஒரு நூலிழையினால், கட்டுப்பட்டான் - பிணிப்புண்டான், இனி—, இந்த காசினிக்கு - இந்த உலகத்தில், என்செய்குவேன் - நான்யாது செய்வேன், எ - று.

க - ரை. நெஞ்சமே! யானையை நிகர்த்தவனாகிய நந்தலைவன், திருவெங்கை நாயகரது மலையிலுள்ள வோர் பெண்ணின் முலை முகையான் முட்டுப்பட்டு, அவளிடையாகிய வோரிழையாற் கட்டுப்பட்டான், இனியா னென்செய்வேன் என்பதாம்.

வி - ரை. உரி - தோல். அது இங்கு யானைத்தோலைக் குறித்தது; புலித்தோலுமாம். பிரான் - உபகாரசீலன். மட்டு-தேன். ஆவி-வாவி. வாரிசம் - நீரிற்பிறப்பது (தாமரை). இழை-சரடு. நெஞ்சம் - முன்னிலையெச்சம். வல்லி - உவமையாகுபெயர். முகை - அரும்பு. அது இங்குத்தாமரை யரும்பை யுணர்த்திற்று தனத்துக் குவமையாகப் புணர்க்கப்பட்டதனான். தென்வெங்கை யென்பதற்கு அழகாகிய வெங்கையென்றுதல் தென்றிசையிலுள்ள வெங்கை யென்றுதல் பொருளுரைத்துக்கொள்க. வல்லிக்கேற்ப முகையுமுடன் கூறினார். காசினிக்கு-உருபு மயக்கம். (சக)

தலைவனோடழுங்கல்.

அதாவது—தன் மனத்தழுங்கின பாங்கன், தலைவனோடழுங்கிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நாட்டுமலிபுகழ்ப்பெம்மான்றிருவெங்கைநாட்டிறைவ
கோட்டுவரிவிற்கொலைவேடர்தந்தகொடியிடையாள்
பூட்டுமயற்றொடர்நீயேபடினைவர்போக்குறுவார்
காட்டுமிரவிக்கிரவியுண்டோவிருள்காய்வதற்கே.

ப - ரை. நாட்டும் - நிலைபெறுத்தப்பட்ட, மலிபுகழ்-மிக்க புகழினையுடைய, பெம்மான் - சிவபெருமானது, திருவெங்கைநாட்டு - திருவெங்கை நாட்டிலுள்ள, இறைவ - தலைவனே, கோட்டு - வளைக்கப்படுகிற, வரி - நீண்ட, வில் - வில்லையுடைய, கொலை - கொலைத்

தொழிலையுடைய, வேடர்தந்த - வேடரீன்ற, கொடி இடையாள் - கொடிபோலு மிடையினையுடையவள், பூட்டும் - பூட்டிவிட்ட, மயல் தொடர் - மையல் விலங்கில், நீயேபடின்-நீயே யகப்படின், போக்கு உறுவார்-அதை யொழித்துக்கொள்வோர், எவர்-யாவர், இருள்காய்வதற்கு - இருளை யழிப்பதற்கு, காட்டும் இரவிக்கு இரவி உண்டோ - தன் கிரணங்களைத் தோற்றுவிக்கின்ற சூரியனுக்கு வேறொரு சூரியனுண்டோ. எ - று.

க - ரை. திருவெங்கை நாட்டிறைவனே! நீயே இந்த வேடரீன்ற கொடியிடையாள் மையல் விலங்கிற் கட்டுப்பட்டால் வேறு யாவர் படாதொழிவர், இருளை வெல்வதற்குச் சூரியனுக்கு வேறொரு சூரியனுண்டோ வென்பதாம்.

வி - ரை. நாட்டுமெலிபுகழ் என்பதற்கு எல்லா வுலகங்களினு மிக்க புகழ் என்றுரைத்தலுமாம். இப்பொருட்கு நாடுசினையாகுபெயர். பெம்மான்-பெருமான் என்பதன் மரூஉ. கோட்டுதல் - வளைத்தல். வரி-கட்டமைந்த என்றலுமாம். கொலை-கொல்லல். தொடர் - சங்கிலி; அது இங்குக் கால்விலங்குக்காயிற்று. போக்கு - ஒழிவு; உண்டோவென்னு மோகாரம் எதிர்மறை. நோட்டு என்பதற்கு மலைநாட்டி லுள்ள வென்றுரைத்தலுமாம். தந்த என்பதீண்டு ஈன்றவென்னும் பொருட்டு. இறைவ என்பதில் வகரம் உடம்படுமெய் யல்லாதமெய். (௩0)

எவ்விடத்தேவ்வியற்றென்றல்.

அதாவது—தலைவனோடழுங்கிக் கூறின பாங்கன், எம்பெருமான், யானிவ்வாறு கூறியுமாற்றானாயினன், அதனால், தலைவியைக் கூட்டாதொழியின் இவனிறந்து படவுங் கூடுமெனத்தெளிந்து, தலைவனை நோக்கி, நின்னாற் காணப்பட்ட வுரு எவ்விடத்தது எவ்வியல்புடையதென வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தழைந்தார்மலிசடையீசர்தம்மாதின்றடமுலைக்குக்
குழைந்தார்திருவெங்கைநாயகனாரிடங்கொண்டுதனி
விழைந்தார்நினதகச் திற்றிட்டிவாயிடைவேழமொடு
நுழைந்தாரிடமியலெல்லாமிறைவநுவன்றருளே.

ப - ரை. தழைந்த - செழித்த, ஆர் - ஆத்திமலர்மாலையானது, மலி - மிக்கு விளங்குகின்ற, சடை - சடாபாரத்தையுடைய, ஈசர் - ஈச்சுரர், தம் - தமது, மாதின் - தேவியாராகிய உமையவளுடைய, தடம் - பெரிய, முலைக்கு - தனத்திற்கு, குழைந்தார் - குழைந்தவர்,

திருவெங்கை நாயகனார் - திருவெங்கைப்பதிக்கு இறைவர், (அவரது) இடம்கொண்டு - இடத்தைத் தமக்கிடமாகக்கொண்டு, தனி - ஒப்பற, விழைந்தார் - விரும்பினவரும், நினது அகத்தில் - நின்னகத்தில், திட்டிவாய் இடை - திட்டிவாயில் வழியே, வேழமொடு - யானையோடு, நுழைந்தார் - நுழைந்தவருமாகிய அம்மாதரது, இடம் இயல் எல்லாம்-இடமும் இயலுமாகிய வெல்லாவற்றையும், இறைவ - இறைவனே, நுவன்றருள் - சொல்லியருள்வாயாக, எ - று.

க - ரை. இறைவனே! திருவெங்கை நாதரது மலையிலுள்ள, உனதகத்தின் திட்டி வாயில் வழியே யானையோடு நுழைந்தவரது இடமியல் யாவுமெனக்குக்கூறி யருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. தழைந்த ஆர் என்பது தழைந்தார் எனத் தொகுத்தலாயிற்று "புகழ்புரிந்தில்லிலோர்க்கு" என்புழிப்போல. தடம் - மலையெனினுமாம். அகம் - மனம், வீடு. திட்டிவாய்-கண்ணாகியவழி, திட்டிவாயில். வேழம் - கொங்கை, யானை. இடம் - வாழிடம். இயல் - அவயவவிலக்கணம். நுவலல் - சொல்லல். ஆர் - ஆகுபெயர். விழைதல் - விரும்புதல். திட்டி கண்ணெனப்பொருள் கொள்வுழி த்ருஷ்டியென்னும் வடசொற் சிதைவெனக்கொள்க. நுவன்றருள் - ஒரு சொல். இதற்குப் பகுதிநுவல். (௬௧)

அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

அதாவது—அவ்வாறு வினாவிய பாங்கற்குத் தலைமகன், என்னாற் காணப்பட்ட வுருவிற்கு இடமிது இயலிதுவெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நறையேயிதழிபுனைவார்திருவெங்கைநாதர்சடைப்
பிறையேநுதலவர்மானேகருங்கண்பிடித்ததுடிப்
பறையேயிடையணிபாம்பேயகலல்குல்பற்றுமலை
யிறையேமுலைமலர்த்தண்டலையேயிடமென்னுயிர்க்கே.

ப் - ரை. என்உயிர்க்கு - என்னுயிர்போன்றவளாகிய வம்மாதுக்கு, நறை எய் - தேன்பொருந்திய, இதழி - கொன்றை மலர்மாலையை, புனைவார் - தரிப்பவராகிய, திருவெங்கைநாதர் - திருவெங்கை நாதரது, சடை - சடையிலணியப்பட்டிருக்கிற, பிறையே - சந்திர கண்டமே, நுதல் - நெற்றியாம், அவர் - அவரது, மானே - மானினுருவமே, கருங்கண் - கருங்கண்ணும், பிடித்த - அவர் பிடித்த, துடிப்பறையே - உடுக்கையே, இடை - இடையாம், அணி-அவரணிந்த,

பாம்பே - பாம்பின்படமே, அகல் அல்குல் - அகன்ற அல்குலாம், பற்றும் - அவர் இடமாகக்கொண்ட, மலைஇறையே - மேருமலையே, முலை - தனங்களாம், மலர்தண்டலையே - (அம்மலையைச்சார்ந்த)பூஞ் சோலையே, இடம் - இடமாகும், எ - று.

க - ரை. என்னுயிர்போல்வாளுக்கு, நெற்றி முதலிய அவயவங்கள், தேனூர்ந்த கொன்றைமலர் மாலையை யணிந்த திருவெங்கைநாதர் சடைப்பிறை முதலியவையேபோலும், இடம் அவ்விறைவரது மலையைச் சூழ்ந்த பூஞ்சோலையேயாகும் என்பதாம்.

வி - ரை. நறை - மணம் எனினுமாம். இதழி இருமடியாகு பெயர். துடிப்பறை-உடுக்கையாகிய வாத்தியம். பாம்பு - பொருளாகு பெயர்; இதனை முதலாகுபெயரென்பர். மலையிறை யென்றது முலைக்குவமையாகப் புணர்க்கப்பட்டதனால் ஈண்டு மேருமலையென்றுரையுரைக்கலாயிற்று. தண்டலை - குளிர்ச்சியாகிய இடம் (சோலை). மிகுதிபற்றிக் கருங்கண் என்றார். உடம்பின் மத்யமாதலால் மருங்குலை இடையென வழங்கலாயினர். ஈற்றேகாரம் அசை. (௫௨)

பாங்கனிறைவனைத்தேற்றல்.

அதாவது — தலைவன் தலைவியின் இயலிடங் கூறக்கேட்ட பாங்கன், தலைவனை நோக்கி, ஐய! நீ யிவ்வாறு வருந்தாதொழிக, யான் நீ சொன்ன குறியிடத்தே சென்று தலைவியைக் கண்டு வருகிறேனெனக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

தடங்கொண்டகண்ணியிடத்தார்திருவெங்கைத்தண்டலையை
யிடங்கொண்டுகாமப்புனனீந்திநீகரையேறுதற்குக்
குடங்கொண்டுநின்றவொருமாதைக்கண்டுகுறுகுமட்டுந்
திடங்கொண்டுநெஞ்சந்தளராதுநிற்றிதிறலவனே.

ப - ரை. திறலவனே - வெற்றிமிக்கவனே, தடம்கொண்ட - அகற்சியைக்கொண்ட, கண்ணி - கண்களை யுடையவளாகிய உமாதேவியை, இடத்தார் - இடப்பாகத்தி லுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை - திருவெங்கைப் பதியிலுள்ள, தண்டலையை - சோலையை, இடம்கொண்டு - தனக்கிடமாகக்கொண்டு, நீ—, காமப்புனல் நீந்தி - காமக்கடலை நீந்தி, கரை ஏறுதற்கு - கரையேறும்பொருட்டு, குடம்கொண்டு நின்ற - குடங்கொண்டு நிற்கின்ற, ஒருமாதை - ஒப்பற்ற வப்பெண்ணை, கண்டு குறுகுமட்டும் - (நான் போய்ப்) பார்த்து மீண்டு வருமளவும், நெஞ்சம் திடம்கொண்டு - மனவுறுதிகொண்டு, தளராது நிற்றி-தளராது நிற்கக் கடவை. எ-று.

க - ரை. திறலவனே! நீ சொன்ன குறியிடத்தே யான்போய்த் தலைவியைக்கண்டு மீண்டு வருமளவும் நீ மனந்தளரா திருக்கக்கடவை யென்பதாம்.

வி - ரை. திறலவன் - வலிமிக்கவன் என்றலுமாம். இடத்தார் என மேல்வருதலால் தடங்கொண்ட கண்ணி உமாதேவியைக் குறித்தது. புனல் - நீர்; அது இங்குக்கடலை யுணர்த்திற்று. கரையேறுதல் - கடத்தல். குடம் - கும்பம்; அது இங்குக் கொங்கையைக் குறித்தது. குழகுதல் - வருதல். தடங்கொண்ட கண்ணி யென்பதற்கு, அகற்சி, கருமை, ஒளி, வெளுப்பு, நீட்சியென்னும் பெருமைகள் யாவுங்கொண்ட கண்களை யுடையாளென்க. இது "ஈசற் கியாம் வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவெம், பாசத்திற் காரென்ற வன்றில்லை யின்னொளி போன்றவன்றோள், பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம், பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே" என்னுமான்றோர் திருவாக்காற் றெள்ளிதினுணரப்படும். (நரு)

குறிவழிச்சேறல்.

அதாவது—இறைவனைத் தேற்றின பாங்கன், அவன்சொன்ன தலைவியைக் குறிவழியே காண்டற்பொருட்டுச் செல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

காவியுமாம்பலும்பூத்தசெந்தாமரைகண் டளிகள்
வாவியுமோடையும்விட்டெய்தவேபொழில்வாய்நிற்குமோ
தேவியுமானும்விளையாடிடத்தர்திருவெங்கையி
லாவியுமாரமுதும்போன்றிறைகண்டவாயிழையே.

ப - ரை. தேவியும் - உமாதேவியும், மானும்—, விளையாடு - விளையாடப்பெற்ற, இடத்தர் - இடப்பாகத்தை யுடையவராகிய சிவபிரானது, திருவெங்கையில் - திருவெங்கைப்பதியில், ஆவியும் - உயிரும், ஆர் அமுதும் - அரிய அமுதமும், போன்று - ஒத்து, இறை - நம் தலைவனால், கண்ட - காணப்பட்ட, ஆயிழை - மாது, காவியும் ஆம்பலும் பூத்த - நீலோற்பலமும் செவ்வல்லியும் மலர்ந்த, செந்தாமரை - செந்தாமரைமலரை, கண்டு - நோக்கி, அளிகள் - வண்டுகள், வாவியும் ஓடையும் - தடாகத்தையும் ஓடையையும், விட்டு எய்த - நீங்கி வந்தடையும்படி, பொழில்வாய் - இச்சோலையினிடத்து, நிற்குமோ - நிற்பளோ. எ - று.

க - ரை. உமாசஹிதரது திருவெங்கைப் பதியில் நம் தலைவனுற் காணப்பட்ட மாதானவள் இந்தப் பூஞ்சோலையில்வந்து நிற்பளோ வென்பதாம்.

வி - ரை. காவி - நீலம். ஆம்பல் - செவ்வல்லி; செந்தாமரை. இவை யிவற்றின்மலர்களை யுணர்த்தலால் முதலாகுபெயர். மலர்கள் அவைபோலும் அவயவங்களை யுணர்த்தலால் உவமையாகுபெயர். காவியென்றது கண்களை. ஆம்பல் என்றது வாயை. செந்தாமரை யென்றது முகத்தை. இடத்தர் - இடப்பாகத்தை யுடையவர். இடத்தையுடையவர். இறை - பண்பாகுபெயர். கண்ட - செயப்பாட்டு வினை; இது, "இல்வாழ்வானென்பான்" என்றாற்போல்வது. ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். ஏகாரம் ஈற்றசை - நிற்குமோ வென்னு மோகாரம் ஐயம். நெஞ்சம் - முன்னிலையெச்சம். (ருச)

இறைவியைக்காண்டல்.

அதாவது—குறிவழிச் சென்றபாங்கன், தலைவனுற் கூறப்பட்ட இயலிடங்களை யுடையவளாகிய தலைவியைக் காணுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முகையேமுலைசெழும்போதேமுகமலர்மூசுவண்டின்
றொகையேகுழல்செந்தளிரேயடிநற்சுவைக்கனியே
நகையேயிதழ்திருவெங்கைபுரேசர்கைநவ்விமிகும்
பகையேயெனுங்கணிவரேயிறைசொன்னபைங்கொடியே.

ப - ரை. முலை - தனங்களானவை, முகையே - தாமரை யரும்புகளே, முகம் - முகமானது, செழுபோதே - செழுமையாகிய தாமரைமலரே, குழல் - கூந்தலானது, மலர் - அம்மலரை, மூசு - மொய்த்த, வண்டின் தொகையே - வண்டின் கூட்டமே, அடி - பாதங்களானவை, செந்தளிரே - செந்நிறமுள்ள தளிரே, நகை எய் இதழ் - ஒளிபொருந்திய அதரமானது, நல் சுவைகனியே - இன்சுவையை யுடையகனியே, இறைசொன்ன பைங்கொடி - நம் தலைவன் சொல்லிய பசுங்கொடி போல்வார், திருவெங்கைபுரேசர் - திருவெங்கைப் பதிநாதரது, கை - திருக்கரத்திலுள்ள, நவ்வி - மானினது, மிகும் பகையே - மிகுதியாகிய பகையேயாம், என்னும் - என்று சொல்லப்பட்ட, கண் - கண்களையுடைய, இவரே - இம்மாதரேயாம். எ-று.

க - ரை. முகை முதலியவைபோலுந் தன முதலியவற்றை யுடைய இம்மாதே நம் தலைவனுற் சொல்லப்பட்டவள் என்பதாம்.

வி - ரை. முகை - மொட்டு. செந்தளிர் என்றது மாந்தளிரை; அசோகந் தளிரையுமாம். சுவை யாறனுள்ளுஞ் சிறந்தது இனிமை யேயாதலான் அதனை நற்சுவையென்றார். கனியென்றது கொவ்வை க்கனியை: இது, "உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருந்தன், குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய், மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே" "மாவைவந் தாண்டமென் னோக்கிதன் பங்கர்வண் டில்லை மல்லற். கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி குறிப்பறியேன், பூவைதந் தாள்பொன்னம் பந்துதந் தாளென்னைப் புல்லிக்கொண்டு, பாவைதந் தாள்பைங் கிளியளித் தாளின்றென் பைந்தொடியே" என்றற் றொடக்கத் தான்றோர் செய்யுட்களா லினிதுவிளங்கும். நவ்வி - மான். பைந்தொடி - பசும்பொன் வளையலையணிந்தவள். (௫௫)

இகழ்ந்ததற் கிரங்கல்.

அதாவது:—தலைவியின் பேரழகைக்கண்ட பாங்கன், தலைவியைக்காணு முன்னந் தான் தலைவனை யிகழ்ந்தமைக் கிரங்கிக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

புடையேயுமையொடுஞ்செங்கதிர்வேற்கைப்புதல்வனொடும்
விடையேயிவர்தரும்பெம்மான்றிருவெங்கைவெற்பிலன்னப்
பெடையேயெனவந்திளங்காவுறுமிப்பெருந்தனத்தா
ரிடையேயிலையெனினைந்திளையான்கொலிறையவனே.

ப - ரை. புடை - தன்னிடப் பக்கத்தில், எய் - பொருந்திய, உமையொடும் - உமாதேவியோடும், செங்கதிர் - செவ்வொளியை யுடைய, வேல் - வேற்படையைத் தாங்கிய, கை - திருக்கரத்தை யுடைய, புதல்வனொடும் - புதல்வனோடும், விடையே - இடபத்தின் மீதே, இவர் தரும் - ஏறுகின்ற, பெம்மான் - பெருமானது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், அன்னம் பெடையே என்ன வந்து - அன்னப்பெடையே போன்று வந்து, இளம் கா உறும் - இளஞ்சோலையை யடைந்த, இ - இந்த, பெருந்தனத்தார் - பெருந் தனத்தை யுடையவரது, இடையே இல்லை என்னின் - இடையே யில்லையாயின், இறையவன் - (நம்) தலைவன், நைந்து இளையான் கொல் - நைந்து மெலியானோ, எ - று.

க - ரை. தம் தேவியாராகிய வுமையோடும் புதல்வராகிய முருகக்கடவுளோடும் இடபவாகனத்தின்மீ தேறுகின்ற திருவெங்கைப்

பெருமானாரது மலையில் அன்னப்பெடைபோல நடந்துவந்து இந்தச் சோலையிலுலாவுகின்ற பெருந்தனத்தாரது இடை சிறிதுமில்லையாயின், நம்மிறைவன் மெலிந்திளையானே வென்பதாம்.

வி - ரை. புடை - பக்கம்; அது இங்கு இடப்பக்கத்தைக் குறித்தது. உமையென்பதற்கு, தவம் வேண்டாம் ஓ பெண்ணேயெனத் தாயினால் தடுக்கப்பட்டவள், ரக்ஷிப்பவள் என் றிருவகையாய்ப் பொருளுரைப்பர் வடநூலார். செங்கதிர் வேற்கையென்ற விசேடணத்தால் புதல்வன் முருகக்கடவுளைக் குறித்தது. இவர் தரும்-ஒருசொல். பெருந்தனத்தார் - பெரியகொங்கைகளையுடையவர், பெருஞ்செல்வமுடையவர். இடை - மருங்குல், சமயம். ஏகாரம் - இரங்கற் குறிப்பிடைச்சொல். (௫௬)

தலைவனைவியந்தல்.

அதாவது—இவ்வாறிரங்கின பாங்கன், இத்தகைப்பேரழகைக் கண்டு மீண்டுவந்து நம்மை யடைந்தானே, இவன் மனவுறுதியென்னெனத் தலைவனை வியந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சூடும்பிறையர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுங்கவியுளடங்காக்கவினுடைப்பாவையன்னார்
கூடுங்குவிமுலைக்குன்றுங்கண்வேலையுங்கூந்தனெடுங்
காடுங்கடந்துவந்தான்மிகவீரனங்காவலனே.

ப - ரை. சூடும்பிறையர்-அணியப்பெற்ற சந்திரகண்டத்தையுடையவர், திருவெங்கைவாணர்—, (அவரது) சுடர்-ஒளிபொருந்திய, கிரிமேல் - மலைமீதுள்ள, பாடும் - (புலவரால்) பாடப்பெற்ற,கவியுள் அடங்கா - கவிகளுளடங்காத, கவின் உடை - அழகையுடைய, பாவை அன்னார் - பாவைபோல்வாரது, கூடும்-ஒன்றோடொன்று நெருங்கின, குவி - குவிந்த, முலை - தனங்களாகிய, குன்றும் - மலைகளையும், கண் - கண்களாகிய, வேலையும் - கடல்களையும், கூந்தல் - கூந்தலாகிய, நெடும் காடும் - பெருங்காட்டினையும், கடந்து வந்தான் - தாண்டிவந்தான், (ஆதலால்) நம் காவலன் - நம் அரசன், மிகவீரன்- மிக்க வீரத்தன்மை யுள்ளவன் எ - று.

க - ரை. திருவெங்கைவாணரது மலையிலுள்ள இந்தக் கட்டழகியின் முலைக்குன்றினையும், கண்ணாகிய கடலினையும், கூந்தலாகிய பெருங்காட்டினையுங் கடந்துவந்தமையால் நம் தலைவன் மிக்க வீரத்தன்மையுள்ளவன் என்பதாம்.

வி - ரை. சூடும்பிறையர் என்பதற்கு பிறையைத்தரிப்பவர்என முன்னுகமாற்றிப் பொருளுரைத்தலுமாம். கவின் - அழகு. பாவை - பிரதிமை. மலையரண் நீரரண் காட்டரண் என்பவற்றைக் கடத்தல் காவலர்க் கியல்பாதலால் நம் காவலன் முலைக்குன்றும் கண் வேலையும் கூந்தனெடுங்காடுங்கடந்து வந்தானெனப் பாங்கன் வியந்தவாறு மிற்று. வேலை - கடல். இதனைவேலா என்பர்வடநூலார். காவலன் - அரசன், காத்தற்றொழிலில் வல்லவன் என்பதுபொருள். ஏ - வியப் பிடைச்சொல். (ருஎ)

தலைவியைவியந்தல்.

அதாவது—இவ்வாறு தலைவனை வியந்தபாங்கன், இத்தகைப் பெருவீரனாகிய நம்மிறைவன் வருந்துமாறு செய்யவல்லளாதலால், இவளும் பேராற்ற லுடையாளென வியந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பருத்தகுவிமுலைப்பாரத்தினாற்கடற்பங்கயத்தி
லிருத்தலரிதெனவந்துவன்பூவிலிருக்குமிவர்
விருத்தகிரிமகிழ்வெங்கைவெற்போன்மயல்வெள்ளங்கொண்
வருத்தவிதயமலர்மீதிருந்திடவல்லவரே. [டு

ப - ரை. பருத்த - பெருத்த, குவிமுலைபாரத்தினால் - குவிந்த தனப்பொறையினால், கடல் பங்கயத்தில் - கடலிற்றோன்றிய தாம ரைப்பூவில், இருத்தல் - தங்கியிருப்பது, அரிது என - அருமையா மென்று நினைத்து, வந்து—, வன் பூவில் - வலியபூவின்கண், இருக் கும் - இருக்கின்ற, இவர் - இம்மாதர், விருத்தகிரிமகிழ் - பழமலை நாதர் விரும்புகின்ற, வெங்கை வெற்போன் - திருவெங்கைமலையி லுள்ளவனாகிய நம் தலைவனை, மயல்வெள்ளம் கொண்டு வருத்த - மையற்பெருக்கு இழுத்துச் சென்று வருத்தும்படி, இதயமலர்மீது - இதயதாமரையின் மீது, இருந்திட வல்லவரே - இருக்கவல்லரே யாவர், எ - று.

க - ரை. கடற்றாமரையை விட்டு இவ்வுலகில் வந்து, பழமலை நாதரது வெங்கைத்தலத்திலுள்ள நம் தலைவனை மனம் வருந்துமாறு செய்ய வல்லவரே யாவரிவர், என்பதாம்.

வி - ரை. பருத்தமுலை-குவிமுலை யென்றியையும். பொறை - சுமை. பங்கயம் - தாமரை; சேற்றிற் பிறப்பதென்பது பொருள். வன்பூ - வலியபூமி. வெற்போன் எழுவாயெனக்கொண்டு, வருந்த வெனற்பாலது எதுகைநோக்கி வருத்தவென வலித்தல்பெற்ற

தென்றலு மொன்று. வல்லரே யென்னு மேகாரம் தேற்றம், துணி வெனினுமாம். (௫அ)

இவ்வைந்துபாட்டும் பாங்கன் தன்னுட்கூறினவை.

தலைவன்றனக்குத்தலைவிநிலை கூறல்.

அதாவது—இவ்வாறு வியந்தபாங்கன், தலைவி குறியிடத்துத் தனித்துநின்ற நிலையைத் தலைவற்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இயலாற்சிறந்ததிருவெங்கைவாணரிமயவெற்ப
மயலாற்புரிந்தமுலையானையின்முன்மதர்மழைக்கட்
கயலாற்கலக்குவித்துன்கலைவேலையைக்காரளகப்
புயலாற்பருகுவித்தார்நின்றுளார்தண்பொழிலிடத்தே.

ப - ரை. இயலால் - எல்லாவிலக்கணங்களாலும், சிறந்த - சிறப்புற்ற, திருவெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, இமயவெற்ப- இமயமலையிலுள்ளவனே, மயலால் - மையலால், புரிந்த - (யாவரும்) விரும்புகின்ற, முலையானையின் முன் - தனமாகிய யானைக்கு முன்னே, உன்கலைவேலையை - உன்கலைக்கடலை, மதர் - மதர்த்த, மழை- குளிர்ச்சிபொருந்திய, கண் கயலால் - கண்ணாகிய கயல்களால், கலக்குவித்து - கலங்கச்செய்து, கார் அளகம் புயலால் - கருங்கூந்தலாகிய மேகத்தைக்கொண்டு, பருகுவித்தார் - பருகச்செய்தவர், தண்பொழில் இடத்து - குளிர்ந்தசோலையின்கண், நின்றுளார் - நிற்கின்றனர், எ - று.

க - ரை. திருவெங்கைவாணரது இமயவெற்பனே! உன்கலைக் கடலை, முலையானை கலக்குமுன்னே கண்மீனாற் கலக்கிப்பருகுவித்தவர், குளிர்ந்த இச்சோலையில் நிற்கின்றனர் என்பதாம்.

வி - ரை. இயல் - இலக்கணம்; அது விமலத்வம் முதலாக நூற்றெட்டு வகைப்படும். இது, "விமலமுதற் குணமாகி நூற்றெட்டாதி வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்ப,வமையுமிலக்கணவடிவாய்" என்றற் றொடக்கத்தான்றோ திருவாக்குக்களாலினிது விளங்கும். இது விரிப்பிற் பெருகுமாதலான் இம்மட்டினிறுத்தப்பட்டது. முலையானையின் முன் என்றது முலையானை கலக்குவதற்கு முன்பேயென்றவாறு. கயல் - சேல்மீன். புயல் - மேகம். பருகுவித்தல் - குடிப்பித்தல். பருகுவித்தார் என்றது ஈண்டுத்

தலைவியைக்குறித்தது. நின்றுளார் என்றது ஒரு சொன்னீரதாய் நிற்கின்றனர் என்னும் பொருள் பயந்துநின்றது. (௫௯)

தலைவன்சேறல்.

அதாவது—பாங்கன் தலைவிநிலைகூறக் கேட்ட தலைவன், அவன் சொற்படி குறியிடநோக்கிச் செல்லாநிற்றல். அதற்குச செய்யுள்,—

எழாமுலகும்புகழ்வெங்கைவாணரிமயவெற்பி
லாழாதென்னைநெடுங்காமக்கடனின்றணைத்தெடுப்பார்
தாழாதிசையளிமூசுமென்பூந்துணர்த்தண்கொம்பரே
சூழாயமாகநடுநிற்பரோவிந்தச்சோலையிலே.

ப-ரை. நெஞ்சம் - மனமே, எழ் ஆம் உலகும் - எழுலகங்களும், புகழ் - புகழ்தற்குரிய, வெங்கைவாணர் - திருவெங்கை வாணரது, இமயவெற்பில் - இமயமலையில், ஆழாது - அழுந்திவிடாமல், என்னை - என்றனை, நெடு - நீண்ட, காமக்கடல் நின்று - காமசமுத்திரத்திலிருந்து, அணைத்து எடுப்பார் - தழுவியெடுப்பவர், தாழாது- தாழ்க்காமல், இசை - இசைக்கின்ற, அளி - வண்டுகள், மூசும் - மொய்க்கின்ற, மெல் - மென்மையாகிய, பூதுணர் - பூங்கொத்துக்களையுடைய, தண்கொம்பரே - குளிர்ச்சியாகிய கொடிகளே, சூழ் - தம்மைச்சூழ்ந்த, ஆயம்ஆக - ஆயமாகக்கொண்டு, இந்த சோலையில் - இச்சோலையின்கண், நடுநிற்பரோ - நடுவிடத்தில் நிற்பாரோ, எ-று.

க-ரை. இந்தச்சோலையிலே, என்னைக் காமக்கடலினின்றணைத்தெடுப்பவர், பூங்கொடிகளே தமதாயமாகச் சூழ்ந்துநிற்க, அவற்றினிடையே நிற்பரோ வென்பதாம்.

வி-ரை. எழாமுலகும் என்றாரேனும், க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம் என்று சொல்லப்படுகிற எல்லாவுலகங்களு மென்றுரைத்துக்கொள்க. எடுத்தலரிதென்பது போதர, "நெடுங்காமக் கடனின் றணைத்தெடுப்பார்" என்றார். ஆயம் - தோழிக் கூட்டம். நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௬0)

தலைவியைக்காண்டல்.

அதாவது—பூந்துணர்த்தண் கொம்பரே சூழாயமாக நடுநிற்பரோ விந்தச்சோலையிலே யென் றையுற்றுச்சென்ற தலைமகன் தலைமகளைக் கண்ணுற்று, இடைமெலிவுதீரவோ தனிநின்றீரென வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தளைப்பாசநாசகர்வெங்கைபுரேசர் தடஞ்சிலம்பிற்
களைப்பான்மதிமுகக்காரிகையீர் தண்களபமுலைக்
கிளைப்பாரமென்பெருந்தோண்மேலிருத்திநைகின்றவிடை
யிளைப்பாறவோ தனிநின்றீரிக்காமரிளம்பொழிற்கே.

ப - ரை. தளைபாசம் நாசகர் - பாசத்தளையை யறுத்து எம்மைக் காப்பவர், வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க்கதிபர், (அவரது) தடம் சிலம்பில் - பெரிய மலையின் கண்ணுள்ள, களை - அழகுள்ள, பால் - வெள்ளிய, மதி-பூர்ணசந்திரனை நிகர்த்த, முகம் - முகத்தையுடைய, காரிகையீர் - மாதரே, தண் - குளிர்ந்த, களபம் - கலவைச்சந்தனமணிந்த, முலை - தனங்களின், கிளை - கிளைத்தலையுடைய, பாரம் - பொறையை, என் - எனது, பெரு-பெரிய, தோள் மேல் இருத்தி - தோளின்மேல் வைத்து, நைகின்ற - (அத்தன பாரத்தால்) நைகின்ற, இடை - இடையானது, இளைப்பு ஆறவோ - இளைப்புத்தணியவோ, இ - இந்த, காமர் - அழகாகிய, இளம்பொழிற்கு - இளஞ்சோலையில், தனிநின்றீர் - தனித்துநின்றீர், எ-று.

க - ரை. திருவெங்கைநாதர் தடஞ்சிலம்பில் நீர்தனிநிற்றல், நுமது முலைப்பொறைக் கிளைத்த விட்டிடையின் மெலிவுதீரவோ சொல்லுவீராமின் என்பதாம்.

வி - ரை. "தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை" "பாசத் தளை யறுத் தாண்டுகொண்டோன்" என்றற் றொடக்கத்தான்றோர் செய்யுட்களையடியொற்றி, இவ்வாசிரியரும், 'தளைப்பாசநாசகர்,' என்றார். களை - கலையெனினுமாம். களைப்பான் மதியென்றமையால் பூர்ண சந்திரனென் றுரைக்கப்பட்டது. காரிகை - அழகாதலால், காரிகையீர் என்பதற்கு அழகுள்ளவரே யென்றுரைப்பினுமாம். பொழிற்கு - உருபு மயக்கம். (சுக)

கலவியின் மகிழ்தல்.

அதாவது—புணர்ச்சி யின்பத்தான் மகிழ்ந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

துதிவாய்தொறுங்கொளுமென்மலர்ப்பூம்பொழில்சூழ்ந்தவெங்கைப்
பதிவாய்வரையிளமானோடமர்ந்தபரனருளாற்
றிதிவாய்மதியமிர்தம்போலலாமற்சிறந்தமுக
மதிவாயமிர்தமுண்டோம்வந்துகூடவிம்மங்கையரே.

ப - ரை. துதி - தோத்திரங்களை, வாய்தொறும் - எல்லாருடைய வாய்களாலும், கொளும் - ஏற்றுக்கொள்ளுகிற, மெல் - மென்

மையாகிய, மலர் - மலர்களையுடைய, பூபொழில் - பொலிவாகிய சோலைகள், சூழ்ந்த - சூழ்ந்திருக்கிற, வெங்கைபதி - திருவெங்கைப் பதியில், வாய் - பொருந்திய, வரை - மலையிலுற்பவித்த, இளமானோடு அமர்ந்த - இளமான்பிணைபோலும் உமையோடமர்ந்த, பரன் அருளால் - பரமனது திருவருளால், திதிவாய் - வளர்தல் வாய்ந்த, மதி - பூர்ண சந்திரனிடத்துள்ள, அமிர்தம் போல் அல்லாமல் - அமுதம்போலல்லாமல், சிறந்த - அதனினும் சிறப்புற்ற, முகம் - முகமாகிய, மதிவாய் - சந்திரனிடத்துள்ள, அமிர்தம் - அமுதத்தை, இம் மங்கையர் - இந்தமாதர், வந்து கூட - வந்து கூடுதலால், உண்டோம் (யாம்) நுகர்ந்தோம். எ - று.

க - ரை. எல்லாராலும் புகழப்பட்ட பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவெங்கை நாதராகிய பரமரது திருவருளால், இம்மாதரது முக மதியினிடத் தமிர்தத்தை நுகரப்பெற்றேம் என்பதாம்.

வி - ரை. திதி - முதனிலைத் தொழிற்பெயர். வரையிளமான் என்றது மலையரையன் பெண்ணாகியவுமாதேவியை. பரன் - மேலானவன். திதி - வளர்ச்சி. மதிவாய் என்பதில் வாய் - ஏழனுருபு. மங்கையர் என்றது, ஈண்டுப் பருவங் குறியாது மாதரென்னுந் துணையாய் நின்றது. நெஞ்சம் - முன்னிலை யெச்சம். (சுஉ)

புகழ்தல்.

அஃதாவது—கலவியின் மகிழ்ந்த தலைமகன், தலைமகளைப் புகழ்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

சங்கந்துறந்தன்னமில்லாமலேயொருதாளினின்று
பொங்கம்புனலிற்றவம்புரிந்தாலும்புரைகுவிரோ
வங்கம்பலவணிந்தார்வெங்கைவாணரணிவரைமே
லிங்கம்புயமுகைகாளிந்தமாதரிளமுலைக்கே.

ப - ரை. பலஅங்கம் அணிந்தார் - பலவாகிய என்புமாலைகளையணிந்தவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) அணி - அழகாகிய, வரைமேல் - மலையின்மேல், இங்கு - இவ்விடத்துள்ள, அம்புயம் முகைகாள் - தாமரை முகைகளே, (நீங்கள்) சங்கம் துறந்து - சங்கத்தைநீங்கி, அன்னமில்லாமலே - அன்னமின்றியே, ஒரு தாளில் நின்று - ஒற்றைத்தாளின் மேனின்று, பொங்கு - பெருகுகின்ற, அம் - அழகிய, புனலில் - நீரில், தவம் புரிந்தாலும் - தவஞ்செய்தாலும், இந்த மாதர் - இம்மாதரது, இள முலைக்கு - இளமுலையை, புரைகுவிரோ - நிகர்ப்பீரோ, எ - று

க - ரை. திருவெங்கை நாயகரது அழகிய மலைமேலுள்ள தாமரை முகைகாள்! நீங்கள் நீரில் ஒருதாளினின்று தவஞ்செய்யினும் இந்த மாத ரிளமுலையை நிகர்ப்பீரோ வென்பதாம்.

வி - ரை. தவம்புரிவார்க்கேற்ப, சங்கம் துறந்து என்பதற்குச் சனசமூகத்தை விட்டென்றும், அன்னமில்லாமலே யென்பதற்குச் சோறில்லாமலேயென்றும், ஒரு தாளினின்று என்பதற்கு ஒற்றைக் காலினின்றென்றும்; தாமரைமுகைக்கேற்ப, சங்கந்துறந்து என்பதற்குச் சங்குகளை நீங்கியென்றும், அன்னமில்லாமலே யென்பதற்கு அன்னப்புட்களில்லாமலே யென்றும், ஒரு தாளினின்று என்பதற்கு ஒற்றை நாளத்தின் மேனின்றென்றும் பொருளுரைத்துக் கொள்க. தவம்புரிந்தாலும் என்னுமும்மை புரிதலருமை தோன்ற நின்றது. புரைதல் - ஒத்தல். அம்புயம் - நீரிற்பிறப்பது. (தாமரை) நீரிற் பிறப்பன பிறவுளவேனும், இந்த மாத ரிளமுலைக்கே புரைகுவிரோ என்றமையால் தாமரை மொட்டுக்களையே குறித்தன. இளமுலைக்கே உருபுமயக்கம். (௬௫)

பாங்கியோடுவருகேனப்பகர்தல்.

அதாவது—இங்ஙனம் புகழ்ந்த தலைமகன், தலைவியை நோக்கி, இனி நீ வருங்கால் உன்னுயிர்ப் பாங்கியோடு வருகெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பங்கேருகத்திற்கடுத்தசெங்காவிப்பனிமலர்போ
னுங்கேளெனுமுயிர்ப்பாங்கியொடேமறைநூன்முகத்திற்
சங்கேதமாம்பெயர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லிங்கேவருகவென்னெஞ்சாலயத்திலிருப்பவரே.

ப-ரை. என் - எனது, நெஞ்சு-மனமாகிய, ஆலயத்தில் - கோயிலில், இருப்பவரே-வாழ்பவரே, மறை-வேதமாகிய, நூல் முகம்-முதனூலின் ஆதியில் உள்ள, சங்கேதம் ஆம்பெயர் - சங்கேதமாகிய பெயரையுடைய, வெங்கை புரேசர் - திருவெங்கைநாதரது, தடம் சிலம்பில் - பெரிய மலையிலுள்ள, இங்கே-இவ்விடத்தே, (இனி நீர் வரின்) பங்கேருகத்திற்கு அடுத்த-தாமரைமலரையடுத்த, பனிசெங்காவிமலர்போல் - குளிர்ச்சி பொருந்திய செவ்வல்லிமலர் போல, நும்கேள் என்னும் - நுமது உறவு என்று சொல்லப்படுகிற, உயிர்ப்பாங்கி யொடே - உயிர்த்தோழியோடு, வருக - வருவீராக, எ - று.

க - ரை. என் மனக்கோயிலில் வீற்றிருப்பவரே! திருவெங்கை நாதரது மலையில் இவ்விடத்திற்கு இனி நீர்வரின் நுமது உயிர்ப் பாங்கியோடு வருவீராக வென்பதாம்.

வி - ரை. பங்கேருகம் என்பதற்குச் சேற்றில் தோன்றுவது என்பது பொருள். கேள் - உறவாந்தன்மை. மறைநூன் முகம் - வேதத்தின் உபோத்காதம் எனினுமாம். சங்கேதம் - நியமம். நெஞ்சாலயம்-மனக்கோயில். பங்கேருகத்தைச் செங்காவி யடுத்திருத்தல் போல, நும்மையடுத்திருக்கிற நும்முயிர்ப்பாங்கியொடு வருகவென்றமையால், தனித்துவாரற்க வென்றவாறாயிற்று. (சுச)

பாங்கிற்கூட்டல்.

அதாவது—தலைவன் தலைவியை ஆயத்துச்செலுத்தா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கார்கண்டமஞ்ஞையுஞ்செந்தேனிரம்பக்கடைதிறக்குந்
தார்கண்டவண்டுந்திருவெங்கைநாயகர்தாண்மலரின்
சீர்கண்டவன்பரும்போலேநிற்கண்டுசிறக்குமுளப்
போர்கண்டவேற்கண்மடவாரைமேவுகபூங்கொடியே.

ப - ரை. பூங்கொடியே - பூங்கொடிபோல்வாளே, கார்கண்ட - மேகத்தைக்கண்ட, மஞ்ஞையும் - மயிலையும், செந்தேன்நிரம்ப - செந்தேனது நிறைய, கடைதிறக்கும் - வாயிலைத்திறக்கிற, தார்கண்ட - பூவரும்பைக்கண்ட, வண்டும் - வண்டையும், திருவெங்கைநாயகர் - திருவெங்கையீசரது, தாள் மலரின் - திருவடித்தாமரைமலரின், சீர்கண்ட - சிறப்பைக்கண்ட, அன்பரும் - அன்பரையும், போலே - போலவே, நிற்கண்டு - உன்னைக்கண்டு, சிறக்கும் - களிக்கிற, உள்ளம் - மனத்தினையும், போர்கண்ட - போர்த்தொழிலமைந்த, வேல்கண் - வேல்போலுங் கண்களையுமுடைய, மடவாரை - மாதரை, மேவுக - பொருந்துக. எ - று.

க - ரை. பூங்கொடியே! மேகத்தைக்கண்ட மயில்போலவும் பூவரும்பைக்கண்ட வண்டுபோலவும், திருவெங்கைநாதரது திருவடி மகிமையைக்கண்ட அன்பர்போலவும், உன்னைக்கண்டு மகிழ்கின்ற மனத்தையுடையவராகிய ஆயத்தாரைச் சேர்வாயாக வென்பதாம்.

வி - ரை. கார் - கார்காலம் எனினுமமையும். கடை - இதழ்க்கதவு. தார் - மலரும் பருவத்துப் பேரரும்பு. தாண் மலரின் சீர் - கட்கினிமையும் கருதியதளித்தலுமுதலாயின. அன்பர் - பத்திமான்கள். சிறத்தல் - மகிழ்தல். போர்கண்ட என்பதற்குப் போர்த்தொழிலை யறிந்திருக்கிற என்றுரைத்தலுமாம். மடவாரை யென்றது ஆயத்தாரை. பூங்கொடி - ஆகுபெயர்.

இக்கிளவித்துறைகளில் முன்னைய மூன்றும் சார்தல் கேட்டல் சாற்றல் என்னு மூன்றற்குரிய. பாங்கன் கழறல்முதல் கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றலீறாகக் கூறியநான்கும் எதிர்மறைக்குரிய. பாங்கன் தன்மனத் தழுங்கல் முதல் தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறலீறாகக் கூறியபதினொன்றும் நேர்தற்குரிய. தலைவன் சேறல்முதல் புகழ்தலீறாகக் கூறிய நான்கும் கூடற்குரிய. தலைவன் தலைவியைப் பாங்கியொடு வருகெனப்பகர்தலும் தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டலுமாகிய விரண்டும் பாங்கிற் கூட்டற் குரியவெனக்கொள்க. (சுரு)

பாங்கிமதியுடன்பாடு.

அதாவது—தலைவி வேறுபாடுகண்டு புணர்ச்சியுண்மை யாராய்ந்தறிந்த பாங்கி தன்மதியை யுடன்படுத்தல். இது, "முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல், இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென், றுங்குமூ வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு" என்னும் சூத்திரவிதியால்மூவகைப்படும். அவற்றுள், முன்னுறவுணர்தலாவது:—தலைவி பாங்கற் கூட்டத்தின்கண், பாங்கியை நீங்கிச்சென்று தலைவனைப் புணர்ந்து மீண்டுவந்து பாங்கி முன்னுற்ற வழி, பாங்கி தலைவியது வேறுபாடு கண்டு அதனானே கூட்ட முண்மையறிதல்.

குறையுறவுணர்தலாவது:—பாங்கி, தலைவன் தழையும் கண்ணியுங்கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பக்கண்டு அதனானே கூட்டமுண்மையறிதல்.

இருவரு முள்வழி யவன்வரவுணர்தலாவது:—தலைவியுந்தானும் ஒருங்கிருந்துழி, தலைவன் அவ்வாறு வரக்கண்டு அதனானே கூட்டமுண்மையறிதல்.

"நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றேர்தலும்"

நாற்றமாவது - தான்பண்டுபெயின்றறியாததோர் நாற்றம்.

தோற்றமாவது - கூட்டத்தாலுண்டானதோ ரழகு.

ஒழுக்கமாவது - தெய்வந்தொழாமை முதலியன.

உண்டியாவது - ஊண்பண்டையிற் சுருங்குதல்.

செய்வினைமறைப்பாவது - தான்செய்யும்வினையைப்பாங்கிக்குமறைத்தல்.

செலவாவது - ஆயத்தைநீங்கித் தனியேசேறல்.

பயில்வாவது - எப்பொழுதும் ஒரிடத்துநிற்றல்.

இவ்வேழினும் பாங்கிதலைவியை ஐயுற்றாராய்தல். இவற்றுள் ~~இச்செய்யுள்~~ தோற்றத்தாலாராய்தல். அதற்குச் செய்யுள்,—

என்னையாடியபதத்தாள்வோன்றிருவெங்கையெந்திழைநீ
சினையாடியமணிப்பொன்னூசலாடிச்செழுங்குவளைச்
சுனையாடிவண்டல்விளையாடிமுத்தந்துவன்றியவம்
மனையாடிவந்தனையோதிருமேனிவருந்தியதே.

ப - ரை. என்னை - என்றனை, ஆடிய - நடனஞ்செய்த, பதத்து - திருவடியினால், ஆள்வோன் - ஆண்டருள்வோனாகிய சிவபெருமானது, திருவெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, எந்திழை-எந்திழாய், நீ—,சினை ஆடிய - மரக்கிளையிற் றொடுத்த, மணி - அழகையுடைய, பொன்னூசல் ஆடி—,செழுகுவளை - செழுமையாகிய குவளை மலர்களுள்ள, சுனை ஆடி - சுனையிற்குளித்து, வண்டல் விளையாடி—,முத்தம் துவன்றிய - முத்துகள் நெருங்கப்பதித்த, அம்மனையாடி வந்தனையோ—;திருமேனி வருந்தியதே—, எ - று.

க - ரை. என்னையாண்டருள்வோனாகிய சிவபிரானது திருவெங்கைப்பதியிலுள்ள எந்திழாய்! நீ பொன்னூசலாடியதனாலோ, சுனையாடியதனாலோ, வண்டல் விளையாடியதனாலோ, அம்மனையாடியதனாலோ, உன் திருமேனிவருந்தியதற்குக் காரணமின்னதெனக் கூறுவாயாக வென்பதாம்.

வி - ரை. ஆடியபதம் - ஆடியபாதம். (நடனபாதம்) எந்திழை- வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். சினை - கிளை. மணிப்பொன்னூசல் - மணிகளாலும் பொன்னினாலுஞ் செய்யப்பட்ட ஊசல் எனினுமமையும். வண்டல் - மகளிர் விளையாட்டினொன்று. துவன்றல் - நெருங்கல். அம்மனை - அம்மானை. (எழாங்காய்) (சுசு)

ஒழுக்கந்தாலையந்தீர்தல்.

அஃதாவது—தெய்வந் தொழாமை முதலியவற்றால் ஐயம் நீங்குதல். அதற்குச் செய்யுள்,—

கொற்றிக்கிசைந்தபுயத்தார்திருவெங்கைக்கோமளமே
நெற்றிக்குடைந்தசென்றெள்ளப்படாதந்தநெற்றியின்மேல்
வெற்றிக்கமலக்கரங்குவித்தேயின்றுவிண்ணினெழு
மற்றிப்பிறைத்தெய்வங்கன்னியர்யாரும்வணங்குவதே.

ப - ரை. கொற்றிக்கு இசைந்த - துர்க்கைக் கேற்ற, புயத்தார் - திருத்தோள்களை யுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை - திருவெங்கையில் வாழ்கின்ற, கோமளமே - மெல்லியலே, நெற்றிக்கு உடைந்தசென்று - நெற்றிக்குத் தோற்றதென்று, எள்ளப்படாது - இகழப்படாது, கன்னியர் யாரும் - கன்னியரெல்லாரும், அந்த நெற்றியின்மேல்—, வெற்றி - வெற்றிபொருந்திய, கமலம் - தாமரை மலர்போன்ற, கரம்குவித்து - கைகூப்பி, இன்று - இப்பொழுது, வணங்குவது - தொழுவது, விண்ணில் எழும் - ஆகாயத்திலுதித்த, இப்பிறைத் தெய்வம் - இந்தப் பிறைத் தெய்வத்தையேயாம் (ஆதலால் நீயும் வணங்குக), எ - று.

க - ரை. சிவபெருமானது திருவெங்கைக் கோமளமே! கன்னியரெல்லாரும் தமது நெற்றிக்குத் தோற்றதென் றிகழாமற் கைகூப்பி வணங்குவது இந்தப் பிறைத் தெய்வத்தையே யாதலால் நீயும் இதனை வணங்குவாயாக வென்பதாம்.

வி - ரை. கோமளம் - மெல்லியலாள் (ம்ருதுஸ்வபாவை). உடைதல் - தோற்றல். எள்ளல் - இகழ்தல். மற்று—அசை. பிறைத்தெய்வம் - பிறையாகிய தெய்வம். நெற்றிக்குடைந்ததென் றெள்ளப்படாது என்றமையால் இது பூர்வபக்ஷத் தஷ்டமிப் பிறையெனக்கொள்க. கன்னியர் - மணம் புணராத பெண்கள். விண் - ஆகாயம். எழுதல் - உதித்தல்.

இப்பால், பாங்கி தலைவியை நோக்கி, கண் சிவத்தல், இதழ் வெளுத்தல் நுதற்குறுவெயர் வரும்பல் என்றற்றொடக்கத்து வேறுபாடு நினக்குளதாய தியாதினாலென வினவுதலும், சுனையாடிப்போந்ததனா லுளதாயதெனத் தலைவி விடுத்தலும் இச் செய்யுளிற் கவி கூறிற் றிலராலோவெனின், அகப்பொருளில் இவ்விரண்டிற்கும் கிளவி கூறிற்றிலராதலானென்க. அவர் கிளவி கூறாமைக்குக் காரணம்யாதெனின், சுருக்க நூலாதலிற் கூறிற்றிலர் என்க. விரிநூலிற் கூறியதுண்டோவெனின், கூறியதுண்டு. என்னை ; தொல்காப்பியத்தில் பொருளதிகாரம், களவியல், இருபத்துமூன்றாவதாகிய,

"நாற்றமுந் தோற்றமும்" என்னுஞ் சூத்திரத்தில், நச்சினார்க்கினியருரையில், தலைவி வேறுபாடு பாங்கி வினயதற்குச் செய்யுள்,—

"தொய்யில் வனமுலையுந் தோளுங் கவினெய்தித்
தெய்வங் கமழுமா லைம்பாலு - மையுறுவல்
பொன்னங் கொடிமருங்குற் பூங்கயற் கண்ணினுய்க்
கென்னை யிதுவந்த வாறு".

இதற்குத் தலைவிவிடை—நின்னை நீங்கி மேதக்க சுனைகண்டு நெடுங்காலமாடினதனு னுயிற்றென்பது. அதற்குப் பாங்கி, மெய்யினுற் பலவேறு கவர்பொருள் சொல்லி நாடலின்,

சுனைநயப்புரைத்தல்.

அதாவது—மெய்யாயினுக, அது கூறி, அதனோடு வேறு பல கவர்பொருள் சொல்லி யாராய்தலிற் சுனை நன்மையைக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

கடைக்கண்சிவ திதழொன்றேவெளுப்பக்கலவியினு
ளிடைக்கண்மெலிவுதருங்கொங்கைமேலதுவேயழிய
விடைக்கண்விரும்பியுறைவார்திருவெங்கைவெற்பிடத்திற்
றொடைக்கண்மலர்க்குழலாய்சுனையாதினுட்டோய்ந்தனையே.

ப - ரை. விடைக்கண்- இடபத்தின்மீது, விரும்பி உறைவார் - இச்சித்து வாழ்பவராகிய சிவபெருமானுரது, திருவெங்கை வெற்பிடத்தில் - திருவெங்கை மலையினிடத்துள்ள, தொடை - மாலையாகத் தொடுக்கப்பட்ட, கள் - தேன்பொருந்திய, மலர் - மலரையணிந்த, குழலாய் - கூந்தலையுடையாளே, கடைக்கண் சிவந்து—, இதழ் ஒன்றேவெளுப்ப-ஓரிதழே வெளுக்க, கலவியினுள்-கூட்டத்தில், இடைக்கண் -மருங்குலினிடத்து, மெலிவுதரும் - மெலிவைத்தருகிற, கொங்கைமேல் - தனங்களின்மேற் பூச்சு, அதுவே அழிய - தானுகவே யழியுமாறு, சுனையாதினுள் - எந்தச் சுனையினுள்ளே, தோய்ந்தனை - மூழ்கினை, எ - று.

க - ரை. தொடைக்கண் மலர்க்குழலாய்! கடைக்கண் சிவத்தல் முதலிய வேறுபாடுண்டாக, எச்சுனையாடி வந்தனை யென்பதாம்.

வி - ரை. கடைக்கண் - கட்கடை. இதழொன்றே யென்றது அதரத்தை. கலவி - புணர்ச்சி. கடைக்கண் சிவத்தல் இறுகத்தழுவலானும், இதழ்வெளுத்தல் அதர சும்பநத்தாலும் உண்டாவனவென்றுணர்க. விடைக்கண் விரும்பி யிவர் வார் என்றும் பாடம்

இப்பாடத்திற்கு விடையின்மேல் விரும்பி யேறுவார் என்பது பொருள். ஏ - வியப்பிடைச்சொல். (சுஅ)

சுனைவியந்துரைத்தல்.

அதாவது—அச்சுனையில் யானுமாடிக் காண்பேனெனப் பாங்கி கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஒளியார்குமுதநல்வெள்ளாம்பலாகவொழிவறுதண்
ணளியார்கருநெய்தல்வந்துசெந்தாமரையாகச்செய்யி
லெளியாரடியவர்க்கானார்தம்வெங்கையில்யாரொருவர்
குளியார்மதிநுதனீயாடியவக்குளிர்சுனையே.

ப - உரை. மதிநுதல்-பிறைநுதால், அடியவர்க்கு-அடியார்க்கு, எளியார் ஆனார் - எளியவரானாராகிய சிவபெருமானாரது, வெங்கையில் - திருவெங்கைப்பதியில், நீஆடிய-நீ யாடிவந்த, அ-அந்த, குளிர் சுனை - குளிர்ந்த சுனையானது, ஒளிஆர் குமுதம் - ஒளிபொருந்திய செவ்வல்லிமலரானது, நல் - அழகாகிய, வெள்ஆம்பல் ஆக - வெள்ளல்லி மலராகவும், ஒழிவுஅறு - இடையறாத, தண் - குளிர்ச்சிபொருந்திய, அளிஆர் - வண்டுகள் நிறைந்த, கருநெய்தல் - கருநெய்தல் மலர்கள், வந்து-தம்முருமாறி வந்து, செந்தாமரையாக-செந்தாமரைமலர்களாகவும், செய்யில்-செய்யவல்லதாயின், (அதனிடத்தே) யாரொருவர் குளியார் - யாரொருவர் குளிக்காதவர், எ - று.

க - ரை. மதிநுதால்! நீயாடிய அக்குளிர்சுனையானது, செவ்வல்லிமலரை வெள்ளல்லி மலராகவும், கருநெய்தல் மலரைச் செந்தாமரை மலராகவும் செய்யவல்லதாயின் அதனிடத்து யார் தாம் மூழ்கார் என்பதாம்.

வி - ரை. மதிநுதல் - பிறைபோலும் நெற்றியை யுடையவள்; இது உவமைத் தொகைட்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். குமுதம், ஆம்பல், நெய்தல், செந்தாமரை யென்பன முதலாகுபெயர்கள். எளியாரடியவர்க்கானார் என்றது, செம்மனச்செல்வியின்பொருட்டு மண்சுமந்ததும், சுந்தரர்பொருட்டுப் பாவையின்பாற் றூதுசென்றதும், பாணபத்திரர்பொருட்டு விறகு விற்றதும் முதலாயினவற்றைப்பற்றியென்க. யாரொருவர் குளியார் என்ற வினா யாவருங் குளிப்பர் என உடன்பாட்டுப் பொருடந்துநின்றது.

தகையணங்குறுத்தல்.

அதாவது—தலைவியின் வேற்றழகைக்கண்டு, அவளையோர் தெய்வப்பெண்ணாகப் புனைந்துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

பண்ணூடுமின்சொ லுமைபாகர்வெங்கைப்பனிவரைமேல்
விண்ணூடிழிந்துவருந்தெய்வமாதுவிளங்குறுமென்
கண்ணூடிருந்தபெண்ணின்னீழலாகக்கருத்திடைநீ
யெண்ணூடிருந்துகவேலிவடானெங்களேந்திழையே.

ப - ரை. பண்-பண்கள், ஊடும் - பிணங்குகிற, இன்சொல்-இனிய சொல்லையுடைய, உமைபாகர் - உமாதேவியைப் பாகத்தி லுடையவராகிய சிவபிரானாது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, பனிவரைமேல் - குளிர்ச்சியையுடைய மலையின்மேல், விண்ணூடு இழிந்துவரும் - சுவர்க்கலோகத்தினின்றிழிந்துவந்த, தெய்வமாது-தெய்வப்பெண்ணே, விளங்குறும் - பிரகாசிக்கிற, என் - எனது, கண்ணூடு இருந்த பெண்-கண்ணிடத்திருந்த பெண்ணை, நின் நீழலாக, உன்சாயையாக, கருத்திடை - உன்மனத்தில், நீஎண் - நீ கருது, ஊடு இருந்து உகவேல் - இடையேயின்று மகிழாதை, எங்கள் ஏந்திழை - எமதுபெண், இவள்தான்-இவளேயாவள், எ-று.

க - ரை. சுவர்க்கலோகத்தினின்றிழிந்து சிவபிரானது திருவெங்கையில் வந்துவிளங்குந் தெய்வப்பெண்ணே! எமது தலைவியை யொத்திருக்கிறாய், இவளே யெங்கள் பெண் என்பதாம்.

வி - ரை. பண் - இந்தளம், பஞ்சுரம், பழம் பஞ்சுரம், குறிஞ்சி, கைசிகை, கேதாரம், முதலாயின. ஊடுதல் - இவ்வினிமை தம்மிடத்தின்றே யென்றுபகைத்தல். விண்ணூடு என்பதில் ஊடு-ஐந்தாவத னீக்கப்பொருட்டு. தெய்வமாது-அண்மைவிளி. கண்ணூடு என்பதில் ஊடு-ஏழனுருபு. தான்-பிரிநிலையேகாரப்பொருட்டு. எந்திழை-வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். ஈற்றேகாரம்-அசை. மனத்தில் தலைவிதானென் றறிந்துவைத்தும் வாயுரையால் அணங்சாகக் கூறினமையின், பொய்யினாற் பலவேறு கவர்பொருள் சொல்லி நாடலாயிற்று. கவர்பொருள் என்றதுபலவேறு கவர்பொருள் என்றதென்னையெனின், ஒன்றல்லன வெல்லாம் பலவாதல் தமிழ்நடையாதலி னென்றுணர்க. இவை காணநாட்டம்.

(எ0)

நடுங்கநாட்டம்.

அதாவது—தலைவி நடுங்குமாறாராய்தல். அதற்குச் செய்யுள்,—

எதிராக்கவினுமைபங்காளர்வெங்கையிறைவர்சடை
முதிராப்பிறையைந்தலைநாகமீன்றமுழுமணியின்
கதிராற்சிவந்ததுபோற்சேந்தகோட்டுக்களிற்றைமல
ருதிராக்கொடியனையாயின்றுநான்கண்டுடைந்தனனே.

ப - ரை. மலர் உதிரா-மலர்கள் சிந்திப்போகாத, கொடி அனையாய் - பூங்கொடிபோல்வாளே, எதிரா - நிகரற்ற, கவின் - அழகையுடைய, உமைபங்காளர்-உமாதேவியைப் பாகத்திலுடையவர், வெங்கை இறைவர் - திருவெங்கை யீசர், (அவரது) சடை - சடாபாரத்திலுள்ள, முதிராபிறை - இளம்பிறையானது, ஐந்தலைநாகம் ஈன்ற - ஐந்தலைப்பாம்பு உமிழ்ந்த, முழுமணியின் கதிரால் - மாணிக்கவொளியினால், சிவந்ததுபோல்-சிவந்ததுபோல, சேந்த-சிவந்த, கோட்டு - கொம்பினையுடைய, களிற்றை - யானையை, இன்று நான் கண்டு - இப்பொழுது நான் பார்த்து, உடைந்தனன் - மனந் தளர்ந்தேன், எ-று.

க - ரை. மலருதிராத பூங்கொடிபோல்வாளே ! சிவபிரானது சடாபாரத்திலுள்ள இளம்பிறையானது அங்குள்ள ஐவாயரவுமிழ்ந்த மாணிக்க வொளியினாற் சிவந்ததுபோலச் சிவந்த கொம்பினையுடைய ஒரு யானையை இப்பொழுது யான் கண்டு மனந்தளர்ந்தேன் என்பதாம்.

வி - ரை. எதிராக்கவின் - நிகரற்ற பேரழகு. முதிராப்பிறையென்றமையால் இளம்பிறையென்பது பெறப்பட்டது. ஐந்தலைநாகம் சடையிற் கயிறாகச் சுற்றிக்கட்டப்பட்ட பாம்பு. ஐந்தலை நாகமீன்ற முழுமணியென்றமையால் மாணிக்கமென் றுரைக்கலாயிற்று. கதிர்-ஒளி. கோடு - கொம்பு. 'மலருதிராக் கொடியனையாய்' என்றது இல்பொருளுவமை. உடைதல் - அஞ்சுதலுமாம். "நாணவு நடுங்கவு நாடாடோழி, காணுங் காலைத்தலைமகடேத்து" என்பதனால், நாணநாட்டமும் நடுங்க நாட்டமுங் கூறியது அகப்பொருட் சிதைவாய்ப் பெருந்திணைப்பாற்படும். அன்றியும் பாங்கி யிவ்வாறு கூறவே தலைவி குறிப்பறியாது கூறினளுமாம், அவமதித்தாளுமாம், ஆசாரமின்றிக் கூறினளுமாம்; மற்று இக்குற்றங்களெல்லா நீங்குமாறும் அகப்பொருட் சிதைவுவாராமற் போற்றுமாறும் என்னையெனின்,நாணநாட்டத்தின்கண் தலைவிக்குயிர்ப்பாங்கி யாதலின், இவளுள்ளமே யவளுள்ளமாதலின், புணர்ச்சியுண்மை யறிந்து கூறுகின்றாளென்பது தலைவி யறியும். அறிந்தவள் பாங்கிக்குக் கூறாததென்னெனின், இவள் பெருநாணினளாதலாற் கூறாதிருந்தாள். தன்னோடு உண்மை கூறவில்லை, தான் உண்மைக் கயலாயினேன், அவ்வாறு அயலாகாதுடம்பட்டிருக்கத் தலைவியாகத் தன்னோடுகூறவேண்டுமென்பது கருதி, பாங்கியாராய்ச்சி செய்த காரியமாதலால் நாண நாட்டத்தாற் குற்றமின்மை யறிக.

இனி நடுங்கநாட்டம் யானே கண்டஞ்சினேனென்றவழி தலைவி நடுங்காதிருந்ததென்னெனின், "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொரு ணாட்டத்தானும்" என்னுஞ் சூத்திரத்தில் வழிநிலை பிழையாது என்பதற்கு, நச்சினார்க்கினியருரையில், பாங்கி குற்றேவல் முறைமை தப்பாது,பெருநாணினள், பேரச்சத்தாள் தலைவியென்ப தறிந்து, தானுமிறந்துபடாமற் கூறத்தகும் வார்த்தை கூறுமென் றுரைகூறினா ராதலானென்பது. நடுங்க நாடிக்கூறும்போதும் பாங்கி, எம்பெருமாட்டி கவற்சியுறும், கவற்சியுற்ற போதே யிறந்துபடினும் படுமென்பதறிந்து முகமலர்ந்து நகையாடுதல் போன்றுங் கூறுமாதலால், தலைவி யிவள் முகக்குறிப்பு நோக்கியும், கவற்சியில்லாமை நோக்கியும் பொய்யென் றறிந்திருந்தாளென்க. அன்றியும் ஆன்றோர் செய்யுட்களில் பெரும்பாலும் பயின்றுவருதலானும் குற்றமின்றென்றுணர்க. இத்துணையு மூன்றாநாட் செய்தியென்றறிக. (எக)

குறையுறவுணர்தல்.

பேட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல்.

அதாவது—இயற்கைப் புணர்ச்சியின் பின்னர்ப் பிரிவழிக் கலங்கலின் வாயில் பெற்றுய்தலென ஆண்டு விரும்பப்பட்ட பாங்கியைத் தூதாகப் பெற்றுக் குறையிரத்தலை வற்புறுத்திக் கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அருவாயுருவமுமாம்வெங்கைவாணரரும்பதத்தைக்
குருவாலடைபவர்போலுயிர்ப்பாங்கியைக்கொண்டுமெல்லப்
பெருவாரறநிமிர்ந்தோர்நூன்மருங்குற்பெரும்பழியை
வெருவாதெழுமுலைப்பெண்ணாரமுதத்தைமேவுதுமே.

(இ - ரை.) அரு ஆய் - அருவாகி, உருவமும் ஆம் - உருவமுமாகின்ற, வெங்கைவாணர் - திருவெங்கை வாணரது, அரு - அருமையாகிய, பதத்தை-திருவடியை, குருவால் - குருவைக்கொண்டு, அடைபவர்போல்-சார்வாரைப்போல,உயிர்ப்பாங்கியைக்கொண்டு—, மெல்ல - பைய, பெரு - பெரிய; வார் அற - கச்சிறும்படி, நிமிர்ந்து - இறுமாந்து, ஓர் நூல் - ஒருநூலிழைபோன்ற, மருங்குல் - இடையின், பெரும்பழியை - பெரும்பழிக்கு, வெருவாது - அஞ்சாதல், எழும் - எழாநின்ற, முலை - தனங்களையுடைய, பெண் - மாதா

கிய, ஆர்அமுதத்தை - அரிதாகிய அமிர்தத்தை, மேவுதும் - அடைவோம், (நெஞ்சமே! அஞ்சற்க). எ - று.

க - ரை. திருவெங்கை வாணரது திருவடியைக் குருவைக் கொண்டடைபவர்போல, இந்தப் 'பெண்ணாரமுதத்தை அவளதுயிர்ப்பாங்கியைக்கொண்டு அடைவோம் என்பதாம்.

வி - ரை. அருவப்பொருள் உருவப்பொருள் முதலிய எல்லாப் பொருள்களா யிருப்பவன் இறைவனே யாதலால், "அருவா யுருவமுமாம் வெங்கைவாணர்" என்றார். "அரும்பதம்-பெறலருர் திருவடி" இது "புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே யுண்டியா யண்டவாணரும் பிறரும், வற்றியாருநின் மலரடிகாணா" என்றற் றொடக்கத்தான்றோர் திருவாக்குக்களா லினிது விளங்கும். குரு - ஞானசாரியன், "கூலித்தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்றகுரு, வேலைப்பகடிகளை மேவாதே" என்றும், "குட்டித் திரட்கரடி யாறெழுகக் கோன்குதித்துக், கட்டிப் புதைந்த கதையாகும்" என்றும் மேலோராற் கூறப்பட்டிருத்தலால், குருவென்பதற்கு ஞானகுருவென் றுரைகூறலாயிற்று. உயிர்ப்பாங்கி - உயிர்போலும் பாங்கி. கொண்டு-மூன்றுவதன் சொல்லுருபு. மருங்குற் பெரும்பழி - இடையிறலா லுண்டாகும் பெரிய நிந்தை. பழியை - உருபுமயக்கம். பெண்ணாரமுதம் - பெண்ணுருக்கொடுபோந்த அரிய அமிர்தம்; ஆர் அமுதம் - நுகர்தற்குரிய அமிர்தம் எனினுமாம். கடலமுதம் நாப்பொறி யொன்றனே நுகரப்படுதலான் அதனினிது சுவைமிகுதியுடைத்தென்பதும் தெற்றென விளங்கிற்று. குரு என்பதற்கு அவிச்சையாகிய இருட்டை யொழிப்பவன் எனப் பொருள்கூறுவர் வடநூலார். நெஞ்சம் - முன்னிலையெச்சம். வெங்கைநாடு கடலாகவும் உயிர்ப்பாங்கி மரக்கலமாகவும் தலைவன் மரக்கலநாயகனாகவும் தலைவி அக்கடலிடத் தமுதமாகவு முரைத்துக்கொள்க. (எஉ)

ஊர்வினுதல்.

அதாவது—தலைவன் கண்ணியுந்தழையு மேந்திக் குறையுறுவான்போலவந்து நின்று, நும்மூர்யாதென வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்—,

வலைநடுவந்தவிளங்கலைபோனும்மணிவடந்தாழ்
முலைநடுவென்னவிடமறவேவந்துமுட்டுமிரு
மலைநடுவந்துநொந்தேனுரையீர்நும்வளம்பதியா
தலைநடுவந்தநஞ்சுண்டபிரான்வெங்கையன்னவரே.

ப - ரை. அலை நடுவந்த நஞ்சு - பாற்கடலினிடையே தோன்றின நஞ்சினை, உண்ட - நுகர்ந்த, பிரான் - உபகார சீலனாகிய சிவபெருமானது, வெங்கை அன்னவரே - திருவெங்கைப்பதியையொத்தவரே, வலைநடுவந்த-வலையினிடையே யகப்பட்ட, இளங்கலைபோல்- இளமான்போல, நும் - உமது, மணிவடம்-முத்து மாலைகள், தாழ் - தொங்குகிற, முலைநடுவென்ன - முலைநடுவிடம் போல, இடம்அற - இடமில்லாமல், வந்து முட்டும்-வந்துநெருங்கின, இருமலைநடுவந்து- இரண்டுமலை நடுவேவந்ததனால், நொந்தேன் - வருந்தினேன், (ஆதலால்) நும் வளம்பதி யாது - நுமது வளவிய வூர் யாது, உரையீர் - சொல்லுவீராமின், எ - று.

க - ரை. சிவபிரானது திருவெங்கைப்பதியை நிகர்த்தவரே! யான் நுமது முலைநடுவிடம் போல இடையிடமின்றி நெருங்கியிருக்கிற இருமலைநடுவே வந்து நொந்ததனால் அவ்வருத்தந்தீர நுமது ஊரையெனக்குச் சொல்லுவீராமின் என்பதாம்.

வி - ரை. படைப்புக்காலத்தே யமைந்துள தன் றென்பார், 'அலைநடுவந்த நஞ்சு' என்றும் "கனைகடற் செய்தநஞ் சுண்டபிரான்" "பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத், திருமிடற் றடக்கிய சிவனே" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களை யடியொற்றி, 'அலைநடு வந்தநஞ் சுண்டபிரான்' என்றும் கூறினார். பிரான் என்பதற்குப் பொருள் உபகாரகுணமுள்ளவ னென்பதாதலானும், அப்பெருங்குணத்தானே "நஞ்சமஞ்சி யாவவெந் தாயென் றவிதாவிடும்" தேவரைக்காத்தருளின ராதலானும் இறைவனைப் பிரானென்னுஞ் சொல்லாற் கூறினர். வெங்கையன்னவர் என்றது காட்சிமாத்திரையானே பேரின் பளித்தலா னென்க. "வலைத்தலைமானன்ன நோக்கியர்" எனப் பெரியார் பணித்திருத்தலால், இவரும் 'வலைநடு வந்த விளங்கலை' என்றார். முலைநடுவென்ன என்பதற்கு முலைநடு இடமறவந்து முட்டியிருத்தல் போலவெனவிரித்துரைத்துக் கொள்க. 'வலைநடு வந்த விளங்கலை போல்' என்பதற்கும் வலைநடுவேயகப்பட்ட இளமான் நோவதுபோலவென விரித்துரைத்துக் கொள்க. வலைநடுவந்த விளங்கலைபோல் நொந்தேன் என்றியையும். "இழையிடைபுகாது மார்பிடங் கொண்ட வேரிளவனமுலை" ஆதலால், "முலைநடு வென்ன விடமற வேவந்து முட்டுமிரு மலை" என்றார். இடமறமுட்டு மிருமலையிடைவந்து வருந்தினேன். அவ்வருத்தந்தீர வளம்பதியை விரும்பலியற்கையாதல் தோன்ற, 'இருமலை நடுவந்து நொந்தேனுரையீர் நும்வளம்பதி யாது' என்றான். (எஙு)

பெயர்வினுதல்.

அதாவது—ஊர்வினைய தலைமகன் மறுமொழி பெறுமையால், நீவிர் நும்வளம்பதி கூறீராயினும் நும்பெயராயினுங் கூறுவீராமினென னப்பெயர் வினுவாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஊரான திங்குரையீராயினுமென் னுளங்குளிரச்
சீரார் திருவெங்கைமாநகரார் தந்திருப்பெயர்போற்
பாரார்பருவங்கண்டேமறையாகப்பகர்வதன்றே
பேராயினுமுரையீர்பிறைவாணுதற்பேதையரே.

ப - ரை. பிறை - பிறைபோன்ற, வாள்நுதல் - ஒளியுள்ளநெற்றியையுடைய, பேதையரே - மாதரே, ஊரானது - நும்மூரானதை, இங்கு உரையீராயினும் - இவ்விடத்துச் சொல்லீராயினும், என் உள்ளம் குளிர - என்மனங்குளிர, பேர் ஆயினும் - நும்பெயரையாயினும், உரையீர் - சொல்லுவிராமின், (அதுவுஞ் சொல்லவொண்ணுதெனின்) சீர் ஆர் - சிறப்புப்பொருந்திய, திருவெங்கைமாநகரார்- திருவெங்கைப்பதியிறைவரது,திருப்பெயர்போல்-திருநாமம்போல, பாரார் - உலகத்தார், பருவம் கண்டே - பக்குவநோக்கியே, மறையாக - இரகசியமாக, பகர்வது அன்றே - சொல்லுவதல்லவே, எ-று.

க - ரை. பிறைவாணுதற் பேதையரே! நும் ஊரைச் சொல்லாவிடினும் நும் பெயரை யாயினுஞ் சொல்லுவீராக வென்பதாம்.

வி - ரை. ஊரானது என்பதில் ஆனது சொல்லுருபு. திருப்பெயர்போல் - திருநாமத்தைச்சற்சீடரது பருவங்கண்டுசெதாசாரியர் உபதேசிப்பதுபோல. பிறை - முற்பக்கத்தட்டமிச்சந்திரன்.பேதையர் - பருவங்குறியாது மாதரென்னுந் துணையாய்நின்றது. பருவம் - பக்குவம்; அதுமந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். அவற்றுள் ஈற்றதாகிய தீவிரதர பக்குவத்தை யுடைய சச்சீடருக்கே சதாசாரிய ருபதேசிக்க வேண்டுமென்பது நியமம். இதன் விரிவெல்லாம் வீட்டுநூல்களிற் காண்க. (எச)

கேடுநிவினுதல்.

அதாவது—கெட்டபொருளைவினுதல். (கெட்டபொருள்-மறைந்தபொருள்.) அதற்குச் செய்யுள்,—

பைங்காஞ்சனவரைவில்லாளர்வெங்கைப்பனிவரைமேற்
செங்காந்தளன்னமென்கைம்மடவீர்செங்குருதிபொங்க
வங்காந்ததன்பகுவாய்போலவேல்பட்டழுந்துபுண்ணோ
டிங்காம்புனத்தயல்வந்ததுண்டோலொரிளங்களிறே.

ப - ரை. பை - பசுமையாகிய, காஞ்சனவரை-பொன்மலையை, வில்லாளர் - வில்லாகவுடையவராகிய சிவபிரானது, பனி-குளிர்ச்சியாகிய, வெங்கைவரைமேல் - வெங்கை மலைமேலுள்ள, செங்காந்தள் அன்ன - செங்காந்தள் மலர்போன்ற, மெல் - மென்மையாகிய, கை - கையினையுடைய, மடவீர் - மாதரே, ஓர் இளங்களிறு - ஒரு இளைய யானையானது, செங்குருதிபொங்க - செவ்விரத்த மதிகரித்தொழுகாநிற்க, அங்காந்த - பிளந்த, தன்-தனது, பகுவாய்போல - பகுவாய்போலவே, வேல்பட்டு அழுந்துபுண்ணோடு - வேல் பட்டழுந்தின புண்ணுடனே, இங்குஆம் புனத்துஅயல்-இவ்விடத்துள்ள புனத்தருகே, வந்ததுண்டோ,—(வரக்கண்டதுண்டாயின் சொல்வீராமின்) எ - று.

க-ரை. சிவபெருமானது திருவெங்கை மலைமேலுள்ள மாதரே! இங்கு நும்புனத்தயலே யொருயானையானது, எமது வேல்பட்டழுந்துபுண்ணோடு வந்ததுண்டோ? வரக்கண்டதுண்டாயிற் கூறுவீராமின் என்பதாம்.

வி - ரை. காஞ்சநம்-பொன். பைங்காஞ்சனம் - பசும் பொன். பைங்காஞ்சநவரை-மேருமலை. வில்லாகவளைத்தற்குச் செம்பொன்னாகாதாதலால், 'பைங்காஞ்சநவரை வில்லாளர்' என்றார். வில்லாளர்-வில்லாடலையுடையவர். வரைவில்லாளர் - வரையாகிய வில்லாளர் எனினுமாம். செங்காந்தள்-ஆகுபெயர். செங்குருதியென்பதில் செம்மை சாதியடை. பகுவாய்-திறந்தவாய். இதனைவேழம் வினுதல் என்றுங் கூறுப. (எ௫)

ஒழிந்ததுவினுதல்.

அதாவது—தலைவன் வினயதற்கெல்லாம் விடையின்மையான் நீவிர் பேசாதொழிகைக்குக் காரணம் யாதெனவினுவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விழித்தேமதனைப்பொடித்தார்செவ்வாம்பன்மிஞிறுவப்பச்
சுழித்தேனுமிழ்வயல்வெங்கையிலேகடற்றோட்டலரை
யொழித்தேவருமடவீரளியேனின்றுளம்வருந்த
மொழித்தேனிலாதமென்னோவுங்கள்வாய்க்குமுதமலர்க்கே.

ப - ரை. விழித்தே - விழித்தலைச் செய்தே, மதனை - மன்மதனை, பொடித்தார் - நீறாக்கினவராகிய சிவபெருமானது, மிஞிறு உவப்ப - வண்டுகள் களிக்கும்படி, செவ்வாம்பல் - செவ்வல்லிமலர்கள், சுழித்தேன் - சுழித்தோடுந்தேனை, உமிழ்-உமிழ்கின்ற, வயல்-

வயல்சூழ்ந்த, வெங்கையிலே—, கடல்-கடலினிடத்துள்ள, தோடு - இதழ்களையுடைய, அலரை - தாமரைமலரை, ஒழித்து-நீக்கி, வரும்- இங்கேவந்த, மடவீர் - மாதரே, அளியேன் - ஏழையேன், நின்று உள்ளம் வருந்த - நின்று மனம்வருந்தாநிற்க, உங்கள் வாய்-உங்கள் வாயாகிய, குமுதமலர்க்கு - செவ்வல்லி மலருக்கு, மொழிதேன் இல்லாதது-சொற்றேனில்லாமைக்குக் காரணம், என்னோ-யாதோ, (அறிந்திலேம், கூறுவீராமின்,) எ - று.

க - ரை. வண்டுகள் களிக்கும்படி செவ்வல்லி மலர்கள் தேனை யுமிழ்கின்ற வயல் சூழ்ந்த திருவெங்கைப்பதியிலுள்ள மடவீர்! அளியேன் வருந்தாநிற்கவும் உங்கள் வாயாகிய குமுதமலரில் சொற் றேனின்மைக்குக் காரணமென்னோ கூறுவீராமின் என்பதாம்.

வி - ரை. கண்டிறந்த லொன்றுனே யென்றற்கு 'விழித்தே' என்றார். விழித்தல்-நெற்றிக்கண்ணைத் திறத்தல். மிஞிறு-இவ்விடத்து வண்டின் பொதுவைக்குறித்தது. உவத்தல் - மகிழ்தல். சுழித்தல் - சுழித்தோடல். மொழித்தேன் - மொழியாகிய தேன். உங்கள் வாய் குமுதம் - உங்களிடத்துக்குமுதம் எனவு முரைத்துக்கொள்க. உங் கள் வெங்கைத்திருப்பதியைச் சூழ்ந்த வயற்குமுதங்கள் வண்டுகள் மகிழத் தேனுமிழாநிற்க, நும் வாய்க்குமுதங்கள் அளியனேன் வருந் தக் கண்டும் தேனுமிழாமைக்குக் காரணமென்னோ வென்று வினவியவாறு. செவ்வாம்பல், குமுதம் என்பன ஆகுபெயர்கள். என்னோ வென்னும் ஒகாரம் வியப்பு, இரங்கலெனினுமாம். (எசு)

யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

அதாவது—இவ்வாறு கண்ணியுந்தழையு மேந்தி வந்துநின்று, ஊர் பேர்கெடுதியோடொழிந்தவும் வினவிநின்றவர் யாவரோ, இவர் மனத்தெண்ணம் யாதோவெனப் பாங்கி தன் மனத்தாராயாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஊரேதென்பாரதைவிட்டேயருகுவந்தும்முடைய
பேரேதென்பார்கரிகண்டதுண்டோவெனப்பேசிநின்று
வாரேறுகொங்கைக்குடநோக்குவார்வெங்கைவாணர்வெற்பி
லாரேயிவர்மனத்தெண்ணமென்னேயென்றறிந்திலமே.

ப - ரை. ஊர் ஏது என்பார்-ஊர்யாதென்பார், அதைவிட்டு—, அருகுவந்து - கிட்டவந்து, உம்முடைய பேர் ஏது என்பார்—, கரி- யானையை, கண்டது உண்டோ எனப்பேசி நின்று—, வார்வறு -

கச்சணிந்த, கொங்கைகுடம் - ஸ்தநகும்பங்களை, நோக்குவார்-பார்ப்பார், (ஆதலால்) வெங்கைவாணர் வெற்பில் - திருவெங்கைவாணரது மலையிலுள்ள, இவர்யாரே-இவர்யாரோ, மனத்து எண்ணம் என்னேயென்று - இவரது மனக்கருத் தென்னேவென்று, அறிந்திலம் - உணர்ந்திலேம், எ - று.

க - ரை. திருவெங்கைவாணர் மலையில், இவ்வாறு கண்ணியுந் தழையுமேந்திவந்து நின்று ஊர் முதலியவற்றை வினவாநிற்பவராகிய இவர் யாவர், இவர் மனக்கருத் தியாது, யாமறிந்திலேம் என்பதாம்.

வி - ரை. கரி - யானை, துதிக்கையையுடைய தென்பது பொருள். வாரேறு என்பதற்குக் கச்சினைக்கிழித்து வெளிப்பட்ட என்றுமொன்று. ஏ - வியப்பு. ஊரேதென்றன் முதலியவற்றீற்றில் வாரேறு கொங்கைக் குடநோக்குவார் என்றமையால் இவர் அதை நோக்கும் பெருவிழைவினரே யாவரென்பது வெளியாயிற்று. வரும் பாட்டானு மிது விசதமாம். (எஎ)

எண்ணந்தெளிதல்.

அஃதாவது—ஊர்வினுதல் முதலியவற் றீற்றில் வாரேறு கொங்கைக்கு நோக்குதலால் இவரது எண்ண மின்னதெனப் பாங்கி தெளியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஊர்கேட்கவுநம்பெயர்கேட்கவுநின்றுழல்பனைக்கைக்
கார்கேட்கவும்வந்தவரேயலரிவர்கன்னியுமை
சீர்கேட்குமையர்தென்வெங்கையிலேயிவள்செய்யவிள
நீர்கேட்கவந்தவரேபற்றுகாமநெருப்பினுக்கே.

ப - ரை. நெஞ்சு - மனமே, இவர் - இவ்வாறு வினவிநிற்பவர், ஊர் கேட்கவும்—, நம் பெயர் கேட்கவும்—, நின்று—, உழல்-இங்குமங்குமாய்த்திரிகிற, பனை - பனைபோன்ற, கை - துதிக்கையினையுடைய, கார் - மேகத்தை, கேட்கவும்—, வந்தவரே அல்லர்—, (மற்றென்னெனின்) கன்னி உமை - கன்னியாகிய உமாதேவியின், சீர்-சிறப்பினை, கேட்கும் - கேட்கிற, ஐயர் - இறைவரது, தென்வெங்கையிலே—, பற்று - பற்றி யெரிகிற, காமநெருப்பினுக்கு - காமத்தீயினுக்கு, இவள் - இவளது, செய்ய இளநீர் கேட்கவந்தவரே-செவ்விளநீர்களைக் கேட்கவந்தவரே யாவர், எ - று.

க - ரை. இவ்வாறு வினவி நிற்பவர், நம்மூர்பேர் முதலியவற்றைக் கேட்கவந்தவ ரல்லர், காமநெருப்புக்கு நமது தலைவியாகிய இவளது செவ்விளநீர்களைக் கேட்கவந்தவரே யாவர் என்பதாம்.

வி - ரை. நின்றுழல்பனைக்கைக்கார் என்றது யானையை. எல்லாவுலகங்களையு மீன்று முதிராக்கவினுடைய ளாதல்பற்றி இறைவியைக் 'கன்னியுமை' யென்றார். சீர்-அழகின்பெருக்கம், பொருட்பெருக்க முதலாயின. ஐ அழகாதலால் ஐயர் என்பதற்கு அழகர் என்றுரைத்தலுமாம். செய்யவிளநீர் என்றது தனத்தை. பூதாக்கினியின் வெப்பந் தணித்தற்கு செவ்விளநீர் உதவியாமாறுபோல, காமாக்கினியைத் தணித்தற்கு இவள் கொங்கை யுதவியாமென்பது போதர, 'இவள் செய்யவிளநீர் கேட்கவந்தவரே பற்று காமநெருப்பினுக்கே' என்றார். ஏகாரம் மூன்றனுள் முன்னைய விரண்டும் தேற்றம்; பின்னையதொன்றும் அசை. நெஞ்சம் முன்னிலையெச்சம். (எஅ)

தலைவன் கையுறை யேந்திவருதல்.

அதாவது—தலைவியும் பாங்கியுஞ் சேர்ந்தோ ரிடத்திருப்பக் கண்ட தலைவன் கையுறை யேந்திவந்து அவரை யணுகக் கருதிக் கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொடையாளர்கையிற்பொருள்போற்சிறுமென்கொடிபுரையு
மிடையாளிகுளையுடனிருந்தாளினியேதுக்குறை [ன்
விடையானிணையிலிவெங்கைப்பிரான்றன்விழிக்குடைந்தோ
படையான்மெலிந்தவெல்லாநெஞ்சமேமுன்பகருதுமே.

ப - ரை. நெஞ்சமே - மனமே, கொடையாளர் - ஈகையாளரது, கையில் - கையிலுள்ள, பொருள்போல் - திரவியம்போல, சிறு - சிறியதாகிய, மெல் - மெல்லிய, கொடி - பூங்கொடியை, புரையும் - நிகர்த்த, இடையாள் - இடையினை யுடையவளாகிய தலைவி, இகுளையுடன் இருந்தாள்-பாங்கியுடன் கூடியிருக்கிறாள், இனி குறை ஏது - இனி நமக்குக் குறை யாது, விடையான்-இடபவாகனன், இணையிலி - ஒப்பில்லாதவன், வெங்கைப்பிரான் - திருவெங்கைப் பெருமான், (அவனது) விழிக்கு - கண்ணுக்கு, உடைந்தோன்-தோற்றவனாகிய மன்மதனது, படையால் - படையினால், மெலிந்த எல்லாம் - இளைத்தவை யாவும், முன்பகருதும்-முன்னே சென்று சொல்லுவோம்.

க - ரை. நெஞ்சமே! தலைவியும் பாங்கியுமோரிடத்தே கூழமிருந்தார்கள் ஆதலால், யாம் அவர்க்கெதிரே சென்று, மன்மதனாற்பட்ட பாடெல்லாம் சொல்லுவோம் வருவாயாக வென்பதாம்.

வி - ரை. கொடையாளர் - வள்ளன்மையுடையவர். புரைதல் - நிகர்த்தல். விழி-நெற்றிக்கண். உடைதல்-தோற்றல். படை-ஆயுதம்.

மன்மதனுக்குப் படைமாதராதலால் சேனையெனினுமாம். மெலிதல்-இளைத்தல். கொடையாளர்வயத்தகப்பட்ட பொருளை யிரப்போர் பெற வெளிதாமாறுபோல, பாங்கி வயத்துள்ள தலைவியை யாமிரந்துபெற வெளிதென்பதுபோதர "கொடையாளர் கையிற் பொருள் போற் சிறுமென் கொடிபுரையு, மிடையா ளிகுளை யுடனிருந் தாளினி யேதுகுறை" என்றான். ஏதுகுறை யென்ற வினா குறையின்றென்னும் பொருட்டு. ஒருவாற்றானு மிறைவனை நிகர்ப்பவ ரிலாததலால் 'இணையிலி' என்றார். "இணையிலி தொல்லைத்தில்லை" என்றார் மணிவாசகரும். இறைவன் விழிக்குடைந்தோர் பிறரின்மையால் விழிக்குடைந்தோன் என்றது மன்மதனையே யுணர்த்திற்று. ()

தலைவனவ்வகைவினாதல்.

அதாவது—தலைவன் முன் கெடுதி வினாயதுபோல மீண்டு ஒருகலை வந்ததோவென வினாவா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கானைக்கலையொன்றெனதம்புபாயக்கலைமதியின்
மானைப்புணரவெழல்போலவேதுள்ளிவந்ததுண்டோ
வானைந்தலைமகற்பெற்றோன்றிருவெங்கையாவியிள
மீனைப்பொருதகன்றொள்வாளிகலும்விழியவரே.

ப - ரை. ஆனைத்தலை - யானைத் தலையையுடைய, மகன் - புதல்வனை, பெற்றோன் - ஈன்றவனாகிய சிவபெருமானது, திருவெங்கை - திருவெங்கைப் பதியிலுள்ள, ஆவி - தடாகத்தில் வாழ்கின்ற, இளமீனை - இளஞ்சேல்மீனோடு, பொருது - போர்செய்து, (அது தோற்றமையால்) அகன்று - அதைவிட்டு நீங்கி, ஒள்வாள் - ஒட்பமாகிய வாட்படையோடு, இகலும்-போர்செய்கிற, விழியவரே - கண்களையுடைய மாதரே, கான் - காட்டில் வாழ்கின்ற, ஐ - அழகாகிய, கலை ஒன்று-ஒரு கலைமானானது, எனது அம்புபாய - என்கணைபாய்தலால், கலைமதியில் - கலைகளோடுகூடிய சந்திரனிடத்துள்ள, மானைபுணர - மானைச்சேர, எழல்போலவே - எழுதல் போன்றே, துள்ளிவந்தது உண்டோ—,(வரக்கண்டதுண்டேற்கூறுவீராமின்). எ - று.

க - ரை. யானைத்தலைப் புதல்வனைப் பெற்ற சிவபெருமானரது திருவெங்கைப் பதியில் வாழ்கின்ற சேல்வாட்களோடு பொருகின்ற கண்களையுடைய மாதரே! ஒரு கலைமானானது என் கணைபட்டுத் துள்ளி யிங்குவரக் கண்டதுண்டோ? கண்டிருப்பிற் கூறுவீராமின் என்பதாம்.

வி - ரை. கானக்கலை - காட்டுவாழ்வும் அழகுமுள்ளகலை. பாய்தல் - பட்டுருவல். மதியில் மானுண்டென்பது நூற்றுணிபாதலால் 'கலைமதியின் மான்' என்றான். சந்திரனுக்குச் சசாங்கன் என்னும் பெயருண்மையான் முயலுண்டென்றலுஞ் சில நூலாரது மதம். துள்ளல் - துடித்தல். உண்டோவென்னு மோகாரம் ஐயம். ஆனைத் தலைமகன் என்பதற்கு யானையாகிய மூத்தமகன் என்றுரைத்தலுமொன்று. ஆவி - வாவி; இதனை வாபீயென்பர் வடநூலார். மீன் என்றது சேல்மீன்; இதனைக் கெண்டைமீன் என்பர் "இளர் கெண்டை யன்ன நீள்வது செய்த கண்ணாள்" "ஒரோ குடங்கைப் பெரியன கெண்டைக் குலமிவை யோவந்து பேர்கின்றவே" என்றார் மேலோரும். மீனை உருபு மயக்கம். பொருதகன்று என்பதற்கு நிகர்த்து விசாலித்து எனினுமாம். இகலல் - பகைத்தல்; பகைத்தல் போர் செய்தற்கே யாதலால் போர்செய்தலெனப் பொருள் கூறலாயிற்று. விழியவரே யென்னு மேகாரம் விளியுருபு. (அ0)

எதிர்மொழிகொடுத்தல்.

அதாவது—தலைமகன் வினயவினாவுக்குப் பாங்கி விடை கூறி நிற்றல். அதற்குச் செய்யுள்,—

மானக்கலைகளெட்டெட்டும்வல்லீர்கொன்றைவார்சடையிற்
கூனற்பிறைபுனையெம்மான்றென்வெங்கைக்கொடிச்சியரே
மேனற்புனத்திற்கிளிபார்த்திதணினிருப்பதன்றிக்
கானக்கலையைத்தனிபார்த்திருக்குங்கருத்திலமே.

ப - ரை. மானம் - பெருமை பொருந்திய, கலைகள் எட்டெட்டும் - அறுபத்துநான்கு கலைகளினும், வல்லீர் - வல்லவரே, கொன்றை - கொன்றை மலர் மாலையைத் தரித்த, வார்சடையில் - நீண்ட சடைமீது, கூனல் - வளைவாகிய, பிறை - பிறையை, புனை-தரித்த, எம்மான் - எம்பெருமானது, தென்வெங்கை - தென்வெங்கைப் பதியிலுள்ள, கொடிச்சியரேம் - கொடிச்சியராகிய யாம், எனல் புனத்தில் - தினைப்புனத்தில், கிளிபார்த்து - கிளிகளை நோக்காநின்று, இதணில் - பரண்மீது, இருப்பது அன்றி - இருத்தலே யன்றி, கானக்கலையை - காட்டுமானை, தனி - தனியே, பார்த்திருக்கும் - நோக்கியிருக்கும், கருத்து இலம் - கருத்துடையேமல்லேம்.

க - ரை. மானக்கலைகளெட்டெட்டும் வல்லீர்! இறைவரது திருவெங்கைப் பதியிலுள்ள கொடிச்சியரேம், தினைப்புனங் காவ

லாகக் கிளிகடிந் திதண்மீதிருப்பதன்றி, மான் பார்த்திருக்குங் கருத்திலேம் என்பதாம்.

வி - ரை. மானம் - பெருமை. கலைகள் - கலைஞானங்கள். எட்டெட்டு - அறுபத்துநான்கு; அவையாவன:—அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிட சாத்திரம், தரும சாத்திரம், யோகசாத்திரம், மந்திர சாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்திய சாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீக்ஷை, கநக பரீக்ஷை, ரத பரீக்ஷை, கஜபரீக்ஷை, அசுவபரீக்ஷை, ரத்நபரீக்ஷை, பூமிபரீக்ஷை, சங்கிராம விலக்கணம், மற்போர், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்வேஷணம், மதநசாத்திரம், மோகநம், வசீகரணம், ரசவாதம், காந்தர்வவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாசகமநம், பரகாயப்பிரவேசம், அதிரிசியம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், த்ருஷ்டிஸ்தம்பம், வாக்ஸ்தம்பம், சுக்லஸ்தம்பம், கநநஸ்தம்பம், கட்கஸ்தம்பம், அவஸ்தாப்ரயோகம் என்பனவாம். கொன்றை - ஆகுபெயர். வார் நீராதலால் வார்சடை யென்பதற்கு கங்கையை யணிந்த சடை யெனினுமாம். கொடிச்சியர் - குறிஞ்சி நிலப்பெண்கள். இதண் - காவற்பரண். கானக்கலை - சங்கீத சாத்திரம் என்றலுமொன்று. (அக)

இறைவனை நகுதல்.

அதாவது—தலைவன் அப்பாற் சென்றானாக, பாங்கி தலைவியை நோக்கி, தலைவனை யசதியாடி நகாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தேனனையாவருமாமலராலச்சிலைமதவேண்
மானனையாரைவருத்துமென்பாரின்றுயாந்தழையாற்
கூனனையாமதிவார்சடையார்வெங்கைக்குன்றில்விழி
மீனனையாயிவரெய்தார்பெருங்கலைவீழ்ந்திடவே.

ப - ரை. தேன் - தேனானது, நனையாவரும் - நனைந்துகொண்டு வெளிப்படுகிற, மாமலரால் - அழகிய மலர்களால், அ - அந்த, சிலை - (கரும்பு) வில்லையுடைய, மதவேள் - மன்மதன், மான் அனையாரை - மான் போல்வாராகிய மாதரை, வருத்தும் என்பார் - வருத்

துவானென்று சொல்லுவார்கள், கூனல் நையா - வளைவு நீங்காத, மதி - பிறையையணிந்த, வார்சடையார் - நீள்சடையாராகிய சிவபிரானது, வெங்கைக்குன்றில் - திருவெங்கை மலையிலுள்ள, விழி மீன் அனையாய் - மீன்போலுங் கண்களையுடையவளே, இன்று - இப்பொழுது, இவர் - இத்தலைவர், பெருங்கலை வீழ்ந்திட - பெரிய கலைமான் விழும்படி, மாந்தழையால் எய்தார் - மாந்தழையா லெய்தனர், ஏ - இதென்ன வியப்பு. எ - று.

க - ரை. மீன்போலுங் கண்களை யுடையவளே! மன்மதன் மலர்க்கணையால் மாதரை வருத்துவா னென்பார்கள், இன்று இத்தலைவர் மாந்தழையாற் பெரிய கலைமான் விழும்படி யெய்தார், இதென்ன வியப்பு என்பதாம்.

வி - ரை. தேனனை யாவரு மாமலர் என்பதற்கு வண்டுகளை நனைத்துக்கொண்டு வருகிற அழகிய மலர் எனினுமாம். சிலை - வில். அது மதவேள் என மேல்வருதலால் கரும்புவில் எனப்பட்டது. மான் மருளுநோக்கத்தால் மாதர்க்குவமை. கூனனையா என்றமையால் வளைவோடு கூடியவென்க. கூனனையா என்ற விசேடணத்தால் மதி இளம்பிறைக் காயிற்று. பெருங்கலை - பெரிய நூலறிவு. வீழ்ந்திட - விரும்பவென்றுமாம். ஏ - இரங்கற் குறிப்பின்கண் வந்தது. (அஉ)

பாங்கி மதியினவரவர்மனக்கருத்துணர்தல்.

அதாவது—பாங்கி தன்னறிவினாற் றலைவன் றலைவியென்றிருவரது மனக்குறிப்பையாராய்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

மான்வேட்டமீதும்புனங்காவன்மீதினும்வைத்தமனந்
தான்வேட்டகாதன்மறைப்பவெல்லாமயன்றாதையொடு
நான்வேட்டசெம்மலர்த்தாளான்றிருவெங்கைநாட்டிலிவர்
தேன்வேட்டபூங்கண்களேயலர்தூற்றித்தெரிவிக்குமே.

ப - ரை. அயன் தாதையொடு - பிரமனுக்குத் தந்தையாகிய திருமாலோடு, நான் வேட்ட - நானும் விரும்பின, செம்மலர் - செந்தாமரை மலர்போன்ற, தாளான் - திருவடியை யுடையவனாகிய சிவபிரானது, திருவெங்கைநாட்டில் - திருவெங்கைநகரிலுள்ள, இவர் - இவ்விருவரும், வைத்த - ஒருவர்மீது ஒருவர்வைத்த, மனம் வேட்ட காதல் - மனத்தான் விரும்பின ஆசையை, மான் வேட்டமீதும் - மான் வேட்டத்தானும், புனங்காவல் மீதினும் - புனங்காவலானும், மறைப்பவெல்லாம் - மறைக்குந்தொழில் முழுதும், தேன்வேட்ட -

வண்டுகள் விரும்புகிற, பூ - தாமரைமலர் போன்ற, கண்களே-விழிகளே, அலர்தூற்றி தெரிவிக்கும் - பலரறியத்தூற்றித் தெரிவியாநின்றன, எ - று.

க - ரை. சிவபெருமானது திருவெங்கை நாட்டில், இவ்விருவரும் மான் வேட்டத்தானும் புனங்காவலானும் தாம் ஒருவர்மீதொருவர் வைத்த ஆசைப் பெருக்கினை மறைக்குந் தொழில் முழுதும் இவரது கண்களே பலரறியத் தெரிவியாநின்றன வென்பதாம்.

வி - ரை. வேட்டம்-வேட்டை. புனம் - தினைப்புனம். காவல்-கிளி முதலியவற்றுனழியாது கவணெறிந்து காத்தல். அயன்-அஜன் என்னும் வடசொற்றிரிபு; பிறவாதவனென்பது பொருள், இது மங்கலவழக்கு. தாளான் என மேல்வருதலால் செம்மலர் செந்தாமரை மலரையே யுணர்த்திற்று. கண்ணுக்குவமையாகப் புணர்க்கப் பட்டமையால் பூவுந் தாமரைப்பூவையேகுறித்தது.

காட்சியில் தலைவி ஆயவெள்ளம் புடைசூழ்ந்து குற்றேவல் செய்யவீற்றிருந்தா ளென்று கூறி இங்ஙனந் தினைப்புனங்காவல் செய்தாளெனக் கூறியதும், தலைவனும் பற்பனூருயிரங் கூர்வேலிளைஞர்தற்சூழத்தேரூர்ந்து வேட்டையாட வந்தானென்றுகூறி, இங்ஙனந்தமியனுய்த் தழையேந்திவந்தானென்றும் குறையிரந்தானென்றும் கூறியது மாறுபாடன்றேவெனின், அன்று.என்னை; தலைவி ஆயக்கூட்டமுன்போலவே சூழ்ந்து பிரிந்து விளையாடாநிற்ப, இவளும் பற்பல விளையாட்டினுள் இதுவுமோர் விளையாட்டாகவும், தலைவன் குறியிடத்து வரிற்றனித்து அவனைக்கூடவேண்டு மென்னுங்கருத்தாகவும் புனங்காத்தாளென்றும், தலைவன் கூர்வேலிளைஞரும் வேட்டை விருப்பாற் சூழ்ந்து பிரிந்துசெல்லாநிற்ப, இவனும் வேட்கைமீதூரப் பட்டுப் பாங்கியாற் கூடவேண்டுமென்னுங் கருத்தினல், தலைவிகுல முறைமை யொருவர்க்கொருவர் தழையுங் கண்ணியுங் கொடுத்துக் காண்டலுள் இவர் அவற்றையேற்றுகோடலுந் தொன்றுதொட்டு நடந்து வருமியல்பாதலால் தழையுங்கண்ணியுமேந்தி வந்து நின்று குறையிரந்தானென்றுங்கூறியதுமாறுபாடன்றெனவுணர்க. எனவே தலைவி யெளியளாய்ப் புனங்காத்தாளுமல்லள், தலைவன் எளியனுய்க் குறையுற் றிரந்தானுமல்லன் என்பது தோன்றியவாறுணர்க. (அரு)

பாங்கியிற் கூட்டம்.

அதாவது—பாங்கிகூட்டத்தலைவன் கூடுங்கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

அதாவது—தலைவன் தான் உள்ளத்தின்கட் கொண்ட காதலைக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நற்றேமொழியுமைபங்கன்றிருவெங்கைநாடனையீர்
முற்றேரிளமுலைமேநகையாதியர்முற்றுநுங்கள்
குற்றேவல்செய்யுமடந்தையராகக்கொடுப்பனின்னே
சற்றேயருட்கடைக்கண்பார்த்தென்னுவியைத்தாங்குமினே.

ப - ரை. நல் - நல்ல, தேம்மொழி - தேன்போலு மின்மொழியையுடைய, உமை - உமாதேவியை, பங்கன் - பாகத்தில் வைத்தாள்பவனது, திருவெங்கைநாடு அனையீர் - திருவெங்கை நாட்டினை நிகர்ப்பவரே, முற்றுஎர் - முழுவனப்பமைந்த, இளமுலை - இளமுலையையுடைய, மேநகையாதியர்-மேநகைமுதலானோர், முற்றும், எல்லாரும், நுங்கள் - நுமது, குற்றேவல்செய்யும் மடந்தையர்ஆக கொடுப்பன் - குற்றேவல்செய்யும் பெண்களாகக் கொடுப்பேன், இன்னே - இப்பொழுதே, சற்றே - சிறிதே, அருள் - கிருபையோடுகூடிய, கடைக்கண்பார்த்து, கடைக்கண்ணோக்கஞ்செய்து, என் ஆவியை - என்னுயிரை, தாங்குமின் - தாங்குங்கள். எ - று.

க-ரை. உமைபங்கராகிய சிவபிரானரது திருவெங்கை நாட்டினை நிகர்த்தவரே! மேநகை முதலிய தெய்வமகளிரை நுமக்குக் குற்றேவல் செய்யக் கொணர்ந்து தருவேன், நீவிர் சற்றேயருட்கடைக்கண்ணால் பார்த்து என்னுயிரைத் தாங்குமின் என்பதாம்.

வி - ரை. நற்றேம் - கோற்றேன். இழைமுலையென்றும்பாடம். இதற்கு ஆபரணங்களை யணிந்ததனம் என்றுரைக்க. மேநகை - ஒரு அப்ஸரஸை, இவள் தேவதாசி; இவளை இந்திரன் விசுவாமித்திர முனிவரது தவத்தைப் பங்கப்படுத்துமாறேவ, அப்படியே அம்முனிவரது தவத்தைக் கெடுத்து அவரைக் காமவிகாரியாக்கி அவரைக் கூடி சகுந்தலையைப் பெற்றவள். குற்றேவல் - சிறுதொண்டு; அது படியகமேந்தல், அடைப்பையேந்தல் முதலியவை போல்வது. குற்றேவல் செய்யு மடந்தையர் - அடிமைப்பெண்கள். (அச)

பாங்கிதுலமுறைகிளத்தல்.

அதாவது—தலைவனிவ்வாறு கூறியதற்குப் பாங்கி தம் குலமுறைமையா லியையாதென மறுத்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொய்ம்மேவரும்புனங்காவலர்யாங்கள்புனநடுவின்
வம்மேவுறுமதுகாப்பவனீவளைசூழ்வதெம்மூர்
நம்மேலருள்வைத்தளிப்பார்திருவெங்கைநாட்டிலுன்னூர்
கும்மேல்வரும்வளைசெய்காட்டுவதொண்குலோத்துங்கனே.

ப - ரை. நம்மேல் - நம்மீது, அருள்வைத்து - கருணைவைத்து, அளிப்பார் - காத்தருள்பவராகிய சிவபெருமானது, திருவெங்கை நாட்டில்—, யாங்கள் - நாங்கள், பொய்மேவரு - பொய்நடையாடாத, புனங்காவலர்—, புனம் - அப்புன நடுவே, வமேவுறுமது - வகரம் பொருந்துவதை, காப்பவன் நீ - காப்பவன் நீயாவை, எம் ஊர்—, வளைசூழ்வது - வளைகள் சூழ்ந்திருப்பது, உன் ஊர் - நின்னூரானது, குமேல் வரும்வளை-குகரம்மேலே வரப்பெறும் வளையை, செய்காட்டு வது - வயல்காட்டுவது, ஒள் - ஒட்பமாகிய, குலோத்துங்கனே-குலத் தானுயர்ந்தவனே, எ - று.

க - ரை. உயர்குலத்தரசனே ! எம்மைத் தன்னருளாற் காப்பவனாகிய சிவபெருமானது திருவெங்கை நாட்டிலுள்ள புனங்காவலர் யாங்கள், புனத்திடையே வகரம்பொருந்துவதைக் காப்பவன் நீ, எம்மூர் வளை சூழ்வது, உன்னூர் குகரமேலே வரப்பெறும்வளையைச் செய்காட்டுவது, ஆதலால் இது நினக்குத் தகவன்றென்பதாம்.

வி - ரை. பொய்ம்மே வரும் புனம் என்பதில் அருமை இன்மை குறித்துவந்தது. புனம் - தினைக்கொல்லை. புனநடுவே வமேவுறு மது-புவனம். வளை-குகை. குமேல் வரும்வளை-குவளை. உத்துங்கம் - உயர்ச்சி. ஒட்பம் - வடிவின்மை. (அ௫)

தலைவன் றலைவிதன்னையுயர்த்தல்.

அதாவது—பாங்கிகுலமுறை கூறக்கேட்ட தலைவன்தலைவியை யுயர்த்திக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அலைமகளன்னவிலங்கிலைவேற்கணரிவைநல்லாய்
கலைமகள்வந்தனைசெய்வெங்கைநாதர்க்குக்கைகொடுத்து
மலைமகளண்டமுழுதாளினுங்கண்மலையரையன்
றலைமகளன்மைப்பெருமையையாதென்றுசாற்றுவனே.

ப - ரை. அலைமகள் அன்ன - திருமகளையொத்த, இலங்கு - விளங்குகிற, இலை - இலைவடிவினதாகிய, வேல் - வேற்படைபோன்ற, கண் - கண்களையுடைய, அரிவைநல்லாய் - மாதுநல்லாய், கலை

மகள் - நாமகள், வந்தனை செய்-வந்தியாநின்ற, வெங்கை நாதர்க்கு - திருவெங்கையில் வாழ்வோராகிய சிவபெருமானுர்க்கு, கை கொடுத்து - கையைக்கொடுத்து, மலைமகள் - மலையரையன் பெண்ணுகிய உமாதேவி, அண்ட முழுது ஆளின் - எல்லா வுலகங்களையும் ஆண்டருள்வாளாயின், உங்கள்-உமது, மலையரையன் - மலையரையனீன்ற, தலைமகள் - தலைவியது, நன்மைப்பெருமையை - நன்மையினேற்றத்தை, யாதென்று சாற்றுவன் - என்னென்று சொல்லுவேன், எ-று.

க - ரை. திருமகளை நிகர்த்த வேற்கண்மாதே! மலைமகளாகிய வுமாதேவியானவள் திருவெங்கைநாதர்க்குக் கைகொடுத்து உலக முழுதும் ஆண்டருள்வாளாயின், உங்கள் தலைவியது எற்றத்தையா னென்னென்று சொல்லுவேன் என்பதாம்.

வி - ரை. அலை-அலைகளையுடைய கடலுக்காயினமையால் ஆகுபெயர்; அலையெனவாளா கூறினுரேனும் திருமகளை யீன்றமை பற்றிப் பாற்கடலெனக்கொள்க. அரிவை - பருவங்குறியாது மாது என்னுந்துணையாய் நின்றது. கலைமகள் - கலைகளுக்கு அதிதேவதை (சரசுவதி). வந்தனை செய்தல் - வாழ்த்தல். கைகொடுத்தல் - பாணிக்ரஹணகாலத்தில் கை கொடுத்தல். தலைமகள் - தலைவி. மலையரையன்றலைமகள் - குறிஞ்சிநிலத்தரசனீன்ற முதன்மைபெற்றமகள். ()

பாங்கியறிளாள் போன்று விறைதல்.

அதாவது—இவன் தலைவியிடத்துக் காதல்கொண்டதறியாள் போன்று, தலைவனை நோக்கி, நீ காதல்பூண்டது யாரிடத்தென விறைவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இஞ்சிப்புரமொருமூன்றெரித்தார்வெங்கையீர்ம்பொழில்வா
பஞ்சிற்சிறுதளிர்மெல்லடிமாதர்பலரினுந்தான் [ய்ப்
வஞ்சித்தெமையெம்முடனேயிருப்பினும்வந்துனது
நெஞ்சிற்புகுந்துமறைந்தவள்யார்சொன்னெடுந்தகையே.

ப - ரை. நெடுந்தகையே - பெருந்தகாய், இஞ்சி - மதிலுருவாகிய, ஒரு மூன்றுபுரம்-முப்புரத்தை, எரித்தார் - எரித்தவராகிய சிவபெருமானரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, ஈர்-குளிர்ச்சியாகிய, பொழில்வாய் - சோலையில் விளையாடுகிற, பஞ்சின் - செம்பஞ்சூட்டப்பெற்ற, சிறு - சிறிய, தளிர்-தளிர்போன்ற, மெல்-மென்மையாகிய, அடி-பாதத்தையுடைய, மாதர் பலரினும் - பலமாதருள்ளும், எம்முடனே யிருப்பினும்—, எம்மை வஞ்சித்து—, வந்து—, உனது நெஞ்சில்-உன்மனத்தில், புகுந்து-நுழைந்து, மறைந்தவள் - மறைந்துபோனவள், யார்—, சொல்-சொல்வாயாக, எ - று.

க - ரை. பெருந்தகையே! முப்புரத்தை யெரித்தவராகிய சிவபெருமானரது திருவெங்கையில் குளிர்ந்த சோலையில் விளையாடு மகளிர் பலருள்ளும், எம்மோடு கூடியிருந்தும் எம்மை வஞ்சித்து வந்து உன் நெஞ்சிற் புகுந்து மறைந்தவள்யார்? சொல்வாயாக வென்பதாம்.

வி - ரை. முப்புரம் மதிலுருவாயிருத்தலான் அதனை 'இஞ்சிப்புரம்' என்றார். இஞ்சி - மதில். இந்தப்புரமூன்றனுள் ஒன்று இரும்பினாலும் ஒன்று வெள்ளியினாலும் ஒன்று பொன்னினாலும் இயன்றன. இவை ஜங்கமபட்டணங்கள் "சுரும்புறு நீலங்கொய் யற்றமிசின்று துயில்பயின்மோ, வரும்பெறற் றேழியொ டாயத்து நாப்பணமரரொன்னா, ரிரும்புறு மாமதிற் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர், துரும்புறச் செற்றகொற் றத்தெம்பி ரான்றில்லைச் சூழ்பொழிற்கே" என்னும் மணிவாசகர் திருவாக்கா னுணர்க. பஞ்சிற் சிறுதளிர் மெல்லடி என்பதற்கு பஞ்சினும் சிறிய தளிரினும் மெல்லடியென் றுரைப்பினுமாம். இப்பொருட்கு தளிர் என்பதனீற்றில் இன்னென்பதைக் கூட்டுக. மறைந்தவள்-ஒளித்தவள். நெடுந்தகை-பெருங்குணமுள்ளவன். ஈற்றேகாரம் விளியுருபு. (அஎ)

இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

அதாவது—இவ்வாறு அறியாள்போன்று வினவிய பாங்கிக்கு தலைவன் தலைவியின் அவயவ விலக்கணங்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

போதேமுகமிளஞ்சேலேவிழிபசும்பொன்னுரைத்த
சூதேமுலைசெந்தளிரேயடிகதிர்ச்சோதியொடு
வாதேபுரியுந்திருமேனியர்வெங்கைமங்கையர்க்கு
மாதேயிடையொன்றுமல்லாமற்பொய்யல்லமற்றவையே.

ப - ரை. மாதே - பெண்ணே, கதிர்-கிரணங்களையுடைய, சோதியொடு - சூரியனோடு, வாதுபுரியும் - போர்செய்கிற, திருமேனியர்-திருமேனியை யுடையவராகிய சிவபெருமானரது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, மங்கையர்க்கு - மாதர்க்கு, முகம் - முகமானது, போதே - தாமரைமலரே, விழி - கண்ணனது, இளஞ்சேலே-இளஞ்சேல்களே, முலை-தனமானது, பசும்பொன் உரைத்த - பசும்பொன்னுரைக்கப்பெற்ற, சூதே - சூதாடுகருவியே, அடி - பாதங்கள், செந்தளிரே - செவந்ததளிர்களே, இடை ஒன்றும் அல்லாமல் - இடையொன்றுமேயன்றி, மற்றவை - பிறவுறுப்புகள், பொய்யல்ல - யான் சொன்ன விலக்கணத்திற் பொய்ப்பனவல்ல, எ - று.

க-ரை. சிவபிரானது திருவெங்கை மங்கையர்க்கு முகம் தாமரை மலர்போலும், கண் சேல்மீன்போலும், முலை பசும்பொன்னுரைத்த சூதுபோலும், அடி செந்தளிர் போலும், பெண்ணே! அம்மாதுக்கு இடையொன்றும் பொய்படுமெல்லது மற்றவை யான்சொன்னவிலக்கணத்திற் பொய்படா என்பதாம்.

வி-ரை. முகமெனமேல் வருதலால் போது தாமரைமலரையே குறித்தது. சூது-சூதாடுகருவி; (சொக்கட்டான்காய்) இதனைவல்லெனவுங்கூறுப. செந்தளிர் என்றது மாந்தளிரை, அசோகந்தளிரையுமாம். கதிர்ச்சோதியொடு வாதேபுரியுந்திருமேனியர் என்றமையால் இறைவரது திருமேனி செந்நிறத்ததென்பது பெறப்பட்டது. மங்கையர் என்றது பருவங்குறியாது மாதரென்னுந் துணையாய் நின்றது. (அஅ)

பாங்கி தலைவி யருமை சாற்றல்.

அதாவது—தலைவன் இறைவி தன்மை யியம்பக்கேட்ட பாங்கி தலைவனை நோக்கி, தலைவியின் பெறலருமை கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஒறுத்துப் புரஞ்சுடு மெம்மான் திருவெங்கை யூரின்மலர்
பொறுத்துக் கொளும்பொனெனன் றெண்ணே லிராசிப் புதுத்
துலையாற், கறுத்துத் தழைந்த குழலோடு கொங்கைக் கனத்த
செம்பொ,னிறுத்துக் கொளும்பொனன் றோவெளி தோசொ
னெடுந்தகையே.

ப – ரை. நெடுந்தகையே - பெருந்தகாய், புரம் - முப்புரத்தை, ஒறுத்து - வருத்தி, சுடும் - எரித்த, எம்மான்-எம்பெருமானது, திருவெங்கையூரில் - திருவெங்கைநகரில், (எம் தலைவியை) மலர் பொறுத்துக்கொள்ளும் - தாமரைமலர் தாங்கிக்கொண்டிருக்கிற, பொன் என்று எண்ணேல் - பொன்னென்று நினையற்க, இராசி - இராசியாகிய, புதுதுலையால் - புதுத்துலாக்கோலினால், கறுத்துதழைந்தகுழலோடு-கறுத்துச் செழித்த கூந்தலோடும், கொங்கை கனத்த செம்பொன் - தனங்கனத்த செம்பொன்னானது, நிறுத்துக்கொள்ளும்-நிறுத்துவாங்குதற்குரிய,பொன் அன்றோ-பொன் அல்லவா, எளிதோ-(அதைக்கொள்ளுதல்) எளிதாமோ, சொல் - சொல்வாயாக, எ – று.

க – ரை. புரஞ்சுட்ட பெருமானது திருவெங்கைப்பதியிலுள்ள பெருந்தகாய்! எமது தலைவியாகிய பொன்னைத் தாமரைமலர்ப் பொன்னென் றெண்ணற்க, அது கறுத்துத் தழைந்த குழலோடு

நிறுத்துக் கோடற்குரிய பொன்னாதும், அதனைக் கொள்ளுதலெளி தன் றென்பதாம்.

வி - ரை. மலர் - தாமரை மலர். மலர்பொறுத்துக்கொளும் பொன்-திருமகள். இராசிப்புதுத்துலையென்றது துலாராசியை. "மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே, மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே" என்றார் பிறரும். "கொங்கைக்கனத்த செம்பொன், என்பதற்கு - கொங்கையிற் கனத்த செம்பொன்போலுந் தேமல் என்றுரைத்தலுமாம். பொன்-தேமல். கறுத்துத்தழைந்த குழலோடு நிறுத்துக்கொளும் பொன்என்றியைத் துரைத்துக்கொள்க. கொங் கைக் கனத்த செம்பொன் - கொங்கையாகிய கனத்த செம்பொன் மலை (மேருமலை). எளிதோவென்னு மோகாரம் எதிர்மறை. (அக)

தலைவ னின்றியமையாமை யியம்பல்.

அதாவது—தலைவன், தலைவியின்றி யமையாமையாகிய தனது நிலையைப்பாங்கியோ டுரையாநிற்றல். இன்றியமையாமை ஓர்சொல்; அது முடிந்தபொருளதாய்த் துணிபுபற்றியசொல். அதற்குச்செய்யுள்,

பொங்கூழொளிநிகர் வெங்கைபுரேசர்பொருப்பிடத்தில்
வங்கூழ்வழங்கும்வியன்ஞாலந்தன்னில்வளர்ந்தெழுந்த
பைங்கூழ்புயலின் றமையாதவாறெனப்பாவைநல்லா
யிங்கூழ்தருமென்கொடியன் றிவாழ்தலின்றென் னுயிரே.

ப-ரை. பொங்கு-விளங்குகிற, ஊழ்-வெயிற்கற்றையையுடைய ஒளி-சூரியனை, நிகர்-நிகர்த்த, வெங்கைபுரேசர்-வெங்காபுரத் தலைவரது, பொருப்பிடத்தில்-மலையின்கணுள்ள, பாவைநல்லாய்-பெண்ணே, வங்கூழ்வழங்கும் - வாயுசஞ்சரிக்கிற, வியன்ஞாலம் தன்னில் - பெரிதாகிய இவ்வுலகத்தில், வளர்ந்து எழுந்த - வளர்ந்தோங்கின, பைங்கூழ் - பயிர்கள், புயல் இன்று - மேகத்தையின்றி, அமையாத ஆறு என - அமையாத வாறுபோல, இங்கு - இவ்விடத்தில், ஊழ்தரும் - ஊழினாற் சொணர்ந்துதரப்பெற்ற, மெல்கொடியன்றி - மென்கொடி போல்வாளாகிய நுமதலைவியையின்றி, என்உயிர் - என்னுயிரானது, வாழ்தல் இன்று - வாழ்தல் இல்லை, எ - று.

க - ரை. திருவெங்கைநாதர் மலையில் வாழ்கின்றமாதே! பயிர்கள் மேகத்தை யின்றியமையாதவாறு போல, என்னுயிர் நுமது தலைவியையின்றியமையாமையால் யானினிவாழ்தலில்லை யென்பதாம்.

வி-ரை. ஊழ் - வெயிற்கற்றை. சோமசூர்யாக்நிகளாகிய முச்சுடர்களுட் சிறந்த வொளியுடையவன் சூரியனாதலால் அவனை ஒளி

ஊழ் - சூற்குறை; ஒன்... - சூரியன், வெயில்.

யென்றே கூறினர். வங்கூழ்-காற்று. "அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு,'மல்லன்மா ஞாலங் கரி" எனப்பெரியோர் பணித்திருத்த லானும் கண்கூடாக்காணப் பெறுதலானும், இவரும் 'வங்கூழ் வழங்கும் வியன்ஞாலம்,' என்றார். வைங்கூழ் - ஒருசொல். புயல் - மேகம்; அது இங்கு மழையைக்குறித்த தாகுபெயரான். இன்று - இன்றி. மென்கொடி-பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். இன்று - இல்லை. வாழ்தலின்று என்றமையால் இறந்துபடுமென்றதாயிற்று. ஏற்றேகாரம் இரங்கற்குறிப்பு. (௧0)

பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

அதாவது—தலைவ னிவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, நின்குறையை நீயேசென்று தலைவிக்குக் கூறுவாயாகவென் றுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தீயேனுளங்குடிகொள்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பில்
வீயேறுமென்றொடைத்தோளண்ணலேயயல்வேறொருவர்
போயேயுரைப்பின்மனமிரங்காளெங்கள்பூங்கொடிக்கு
நீயேவணங்கிமனமுளைந்தோதுகநின்குறையே.

ப - ரை. தீயேன் - தீயேனது, உள்ளம் - மனத்தினும், குடிகொள் - குடிகொண்ட, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையிலுள்ள, வீ ஏறு - வண்டுகளேறப்பெற்ற, மெல் தொடை - மெல்லிய பூமாலையை யணிந்த, தோள் - புயத்தையுடைய, அண்ணலே - பெரியோனே, அயல் - அயலாராகிய, வேறொருவர்போய் உரைப்பின்-மற்றொருவர் போய்ச் சொல்லின், மனம் இரங்காள் - மனமிரங்காளாதலால், எங்கள் பூங்கொடிக்கு - எங்கள் பூங்கொடிபோலுந் தலைவிக்கு, நின் குறை - உன் குறையை, நீயே வணங்கி - நீயே தொழுது, மனம் உளைந்து ஓதுக - மனம் வருந்திக் கூறுவாயாக. எ - று.

க - ரை. திருவெங்கைநாதரது மலையிலுள்ள பெரியோனே! அயலார் சொன்னால் மனமிரங்காதவளாகிய எமது தலைவிக்கு உன் குறையை நீயே கூறிக்கொள்வாயாக வென்பதாம்.

வி - ரை. உள்ளம் என்பதனீற்றி விழிவு சிறப்பும்மை தொக்கது. வீ - மலர் எனினுமாம். வீயேறு தொடையாதலால் மென்மை சொல்லப்பட்டது. முதல்சினைகட் கொற்றுமை யுண்மையான் மனமிரங்காள் என்றாள். அயல் வேறொருவர்போயே யுரைப்பின் மன

[illegible]

மிரங்காள் என்றமையால் நீ யுரைத்தால் மனமிரங்குவாள் என்றவா ருயிற்று. அன்றியும் எங்கள் பூங்கொடி உன்றோளுக்கேற்ற மலர் களையுங் கொடுக்குமென்றது மாயிற்று. (கக)

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

அதாவது—பாங்கி நின்குறை நீயேசென் றுரையென்றமையால் தலைவன் மனம் வருந்தி பாங்கியைப் பழித்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கல்லைக் குழைத்துப்பயின் றுளதாகியகல்விபுடைத்
தில்லைப்பதியினடமாடும்வெங்கைச்சிவனையல்லாற்
சொல்லைக்கொடுநின்மனநாங்குழைப்பத்துணிதலொரு
புல்லைக்கொடுதண்கடனீந்தவுன்னுதல்பூங்கொடியே.

ப-ரை. பூங்கொடியே - பூங்கொடிபோல்வாளே, கல்லை குழைத்து - கல்லைவளைத்து, பயின்று - பழகி, உளது ஆகிய - உண்டாகிய, கல்வியுடை, கல்வியையுடைய, தில்லைப்பதியில் - திருத்தில்லை யென்னும் க்ஷேத்திரத்தில், நடம்ஆடும் - நடனமாடுகின்ற, வெங்கைச்சிவனை அல்லால் - திருவெங்கைச் சிவபெருமானையன்றி, நின் மனம் - உன்மனத்தை, சொல்லைக்கொடு - சொல்லினல், நாம் குழைப்ப - நாம் குழைக்கும்படி, துணிதல் - துணிவுகொள்ளல், ஒருபுல்லைக்கொடு - ஒருபுல்லினல், தண்கடல்நீந்த - குளிர்ச்சியாகிய கடலை நீந்திச்செல்ல, உன்னுதல் - கருதுதலோடொக்கும், எ-று.

க-ரை. பூங்கொடிபோல்வாளே! கல்வளைத்துப் பயின்றிருக்கிற திருத்தில்லைக் கூத்தனுகிய வெங்கைச் சிவபெருமானையன்றி, உன் மனத்தை எமது சொல்லைக்கொண்டு குழைக்கயா மெண்ணுதல், ஒரு புல்லைக் கொண்டு கடலை நீந்திச்செல்லக் கருதுதல்போலும் என்பதாம்.

வி-ரை. தில்லைப்பதினடமாடும் வெங்கைச்சிவன் குழைத்தது பொன்மலையேயாயினும் பெரும்பான்மைபற்றிக் 'கல்லைக்குழைத்து, என்றார். கல் - கல்லானியன்றமலை. "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரைமேனியன்" "கல்லைமென்கனியாக்கும் விச்சைகொண்டென்னை நின்கழற் கன்பனுக்கிறாய்" என்றற் றொடக்கத்தான்றோர் திருவாக்கின்படியே கல்லைக்குழைத்தலின் மிகு சமர்த்தனுய் அப்பழக்க மிகுதியாற்றானுங் கன்னெஞ்சனுயிருப்பினும், அவனையும் எமது சொல்லாற்

குழைவிப்போம். நும்மனத்தைக் குழைக்கவல்லேம் அல்லேமென்றற்கு இவ்வாறு கூறினன். இதனாற் சொல்லைக்கொண்டு உன்மனத்தைக் குழைத்தல் கூடாது, எதுபோலவெனின் ஒருபுல்லைக்கொடு தண்கடல் நீந்துதல் கூடாததுபோல வென்றாயிற்று. குழைத்தல்-வளைத்தல், இளகுவித்தல். ஒருபுல்லைக்கொடு தண்கடனீந்த வுன்னுதல் என்றது முடியாமைதோன்றற்கென்க. (கூஉ)

பாங்கிபேதைமை யூட்டல்.

அதாவது—தலைவனிவ்வாறு பாங்கியைப்பழித்தலும், அவள் தலைவனைநோக்கி, எமது தலைவி பிறர் துயரமறியாள் ஆதலால் உன் றுயரத்தை யான்சொல்லினும் மனமிரங்காளெனத் தலைவியின் பேதைமையைக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மானைக்கவர்வமழுவிலையேல்வெங்கைவாணர்க்கந்த
வானைப்புணர்மதிகீள்வேமகப்படின்மானுக்கென்னுஞ்
சேனைக்குறவர்மகளாகியவித்திருந்திழையா
ளானைத்திறலுடையாயறியாளுன்னருந்துயரே.

ப-ரை. ஆனைத்திறல் உடையாய் - யானையின் வலியுடையவனே, வெங்கைவாணர்க்கு - திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானுர்க்கு, மழு இல்லையேல் - கையில் மழுவில்லையாயின், மானை - அவன் திருக்கரத்துமானை, கவர்வம் - கிரகிப்போம், அந்த வானைப்புணர்மதி - அந்த ஆகாயத்தைச் சேர்ந்த சந்திரன், அகப்படின், கிடைத்தால், மானுக்கு - அதனிடத்துள்ளமானின் பொருட்டு, கீள்வேம் - அதனைப்பிளப்போம், என்னும் - என்று சொல்லுகிற, சேனைகுறவர் மகளாகிய - கூட்டமாகிய குறவர் மகளாகிய, இ - இந்த, திருந்திழையாள் - மாது, உன் அருந்துயர் - உன் அரிய துயரத்தை, அறியாள் - உணராள், எ-று.

க-ரை. ஆனைத்திறலுடையாய்! தறுகண்மையையுடைய குறவர் மகளாகிய எமது தலைவி பிறர் துயரமறியாத வியல்பினளாதலால் உன் அருந்துயரத்தை யான் சொல்லினு மனமிரங்காள் என்பதாம்.

வி-ரை. எம்மையராகிய குறவர் மிக்க தறுகண்ணர் என்பதறிவித்தற்கு, "மானைக் கவர்வ மழுவிலை யேல்வெங்கை வாணர்க்கந்த, வானைப் புணர்மதி கீள்வே மகப்படின் மானுக்கென்னுஞ்,' சேனைக் குறவர்" என்றாள். இங்ஙனம் வன்கண்ணராகிய குறவர்மகளாகிய இம் மாதும் அவரையே யொத்தவளாதலை யுணர்த்தற்கு 'அறியாளுன்

னருந்துயரென்று கூறினாளாயிற்று. திருந்திழையாள் - திருத்தமாகிய ஆபரணத்தை யணிந்தவள். திருந்திழை - தொழில்முற்றிய ஆபரணம்; முற்றிழை யென்றார்பிறரும். அருந்துயர் - சகித்தற்கரிய துன்பம். (௯௩)

காதலன்றலைவி மூதறிவுடைமை மொழிதல்.

அதாவது—அவ்வாறு கூறிய பாங்கியைத் தலைவன் நோக்கி, முதிர்ந்த அறிவினையுடைய நம் தலைவியை இவ்வாறு கூறற்பாலை யல்லை யெனக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விடுத்தமயலுடையெம்மான்றிருவெங்கைவெற்பணங்கே [த்
யெடுத்தவிடைமுறிக்குங்கொங்கையேயன்றியென்னையெய்ய
தொடுத்தகுவளைக்கணைவாங்கிவின்மதன்றூணியிட
வடுத்தகடைக்கண்வைத்தாரறியாமையறிந்திலரே.

ப - ரை. விடுத்தமயல்உடை - விடுத்த மையலையுடைய, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கை வெற்பு - திருவெங்கைமலையிலுள்ள, அணங்கே - பெண்ணே, எடுத்த - தம்மைத்தாங்கிய, இடை - இடையை, முறிக்கும் - ஒடிக்கின்ற, கொங்கையே அன்றி - கொங்கைகளேயல்லது, என்னை எய்ய - என்மீதெய்யும் பொருட்டு, தொடுத்த - பூட்டிய, குவளைக்கணை - நீலமலர்க்கணையை, வாங்கி - மீட்டு, வில்மதன் - கரும்புவில்லையுடைய மன்மதன், தூணிஇட - தனது ஆவத்தில்வைக்கும்படி, அடுத்த-தகுதியாகிய, கடைக்கண் - தமது கடைக்கண்ணோக்கத்தை, வைத்தார் - என்மீது வைத்தவராகிய நந்தலைவியார், அறியாமை அறிந்திலர் - அறியாமையென்பதை யறியார், எ - று.

க - ரை. விடுத்தமயலுடை யெம்மான் திருவெங்கை வெற்பணங்கே! தம்மைச்சுமந்த இடையை முறிக்குங்கொங்கைகளேயன்றி மன்மதன் என்மீதெய்யத் தொடுத்த நீலக்கணையை மீட்டுத்தன் றூணியிலிடும்படி, தம்கடைக்கண் ணோக்கத்தை யென்மேல்வைத்தவராகிய நமது தலைவியார், அறியாமையென்பதை யறிந்திலர் என்பதாம்.

வி - ரை. ஜிதேந்த்ரியன், கதகல்மஷன், என்றற்றொடக்கத்து வடசொன்னடையை யடியொற்றி, 'விடுத்தமயலுடையெம்மான்' என்றார்; எனினும் மையல்விடுத்த வெம்பெருமான் எனப்பொருளுரைத்துக்கொள்க. அணங்கு அழகாதலால் அணங்கே யென்பதற்கு அழகிற் சிறந்தவளேயென்றும், தெய்வப் பெண்ணாதலால் தெய்வப்

பெண் போல்வாளே யென்றும் உரைத்துக்கொள்க. கொங்கையே யன்றியென்றது கொங்கைஅறியாமையறிந்ததேயன்றியென்றவாறு. என்னை-உருபுமயக்கம். தொடுத்த-அநுசந்தித்த. குவளைக்கணை-குவளைமலராகியகணை. குவளைமுதலாகுபெயர். குவளை-நீலமலர். கணை - அம்பு. வாங்கி-மீட்டு,(எய்யாமல் மீட்டு). தூணி-அம்பறுத்தூணி,அம்புப்புட்டில், அம்புக்கூடு. இதனை ஆவம் என்றுங் கூறுப. "கம்பஞ்சி வந்த சலந்தர னாகங் கறுத்ததில்லை,நம்பன் சிவநகர் நற்றளிர் கற்சுரமாகுநம்பா,வம்பஞ்சி யாவம்புகமிக நீண்டரி சிந்துகண்ணாள்,செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக் கும்மலர்ச் சீறடிக்கே" என்னு மணிவாசகர் செய்யுளினும் ஆவம் வந்தமைகாண்க. இதனைத்தூணீரம் என்பர்வடநூலார். கடைக்கண் பார்வையைக் கடைக்கண்ணென்றார் ஆகுபெயரான். அறியாமை-பேதைமை. அறியாமை யறிந்திலர் என்றமையால் அறிவறிந்தவர் என்றவாறாயிற்று. எடுத்தவிடை முறிக்குங் கொங்கை அறியாமையறிந்த தென்றது, "கோலத் தனிக்கொம்ப ரும்பர்புக்கஃதே குறைப்பவர்தஞ், சீலத் தனகொங்கை தேற்றகிலேம்" என்றாற் போல்வது. ஈற்றேகாரம் வியப்பு. (கூ௪)

பாங்கிமுன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

அதாவது—இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, முன்னே நின்வேட்கை தீர்த்தாளென்றனையே, அவ்வாறேயின்னுங் கூடுகவெனக்கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மருவீரவெண்மதிவேணிப்பிரான்வெங்கைவான்பொழில்வா
யிருவீருமொத்துப்புணர்ந்தாற்பயனுமக்கென்னையொன்னார்
பொருவீரவாள்விழிக்காப்பதினாயிரம்பொய்யுரைத்து
வருவீரறிந்திலிரேயுலகோதும்வழக்குரையே.

ப - ரை. ஒன்னார் - பகைவர், பொரு - ஒருவரோடொருவர் பொருகின்ற, வீரவாள் விழிக்கா-வீரவாள்போன்ற விழியையுடையவளாகிய எமது தலைவியின்பொருட்டு, பதினாயிரம் பொய் உரைத்துவருவீர் - பதினாயிரம் பொய்வார்த்தைகள் சொல்லாநின்று வருகிறவரே, ஈரம்மருவு-குளிர்ச்சிபொருந்திய, வெள் - வெள்ளிய, மதி-சந்த்ரகண்டத்தை யணிந்த, வேணி-சடாபாரத்தையுடைய, பிரான்-சிவபெருமானது, வெங்கை-திருவெங்கைப்பதியைச் சூழ்ந்த, வான் பொழில்வாய் - பெருஞ்சோலையின்கண், இருவீரும்-நீவிரிருவீரும், ஒத்து - மனமொத்து, புணர்ந்தால் - கூடினால்: நுமக்கு - உங்கட்கு, பயன் என்னை - பயன் யாது, உலகுஓதும் வழக்குரை - உலகத்தார்

சொல்லும் வழக்கச்சொல்லையாயினும், அறிந்திலிரே-அறிந்திலீரோ, எ - று.

க - ரை. வீரவாள்போலுங் கண்களையுடைய எம்பெருமாட்டியின்பொருட்டுப் பதினாயிரம் பொய் பேசிவருகின்றவரே! திருவெங்கைச்சோலையில் நீவிரிருவீரு மனமொத் துப் புணர்ந்தாற்பயன்யாது? உலகர் சொல்லும் வழக்குரையேனு மறிந்திலீரோ வென்பதாம்.

வி - ரை. மருவீரம் என்பதனை ஈரம் மருவு என முன் பின்னாக மாற்றிப் பொருள்கூறலாயிற்று. இவ்வாறன்றி மருவு ஈரம்என்பதற்கு பொருந்திய ஈரத்தையுடைய வெனினுமமையும். வெண்மதியென்றது ஒரு கலையாகிய திங்களை; இது "தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த, காரென்ன வாருங் கறைமிடற்றம்பல வன்கயிலை,யூரென்ன வென்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேர், பேரென்ன வோவுரை யீர்விரை யீர்ங்குழற் பேதையரே" என்னுந்திருக்கோவையார் ருகூ-ம், செய்யுளுரையானறிக. வான்பொழில் - ஆகாயத்தை யளாவிய பொழில் எனினுமாம். பயனென்னையென்னும் வினு பயன் சிறிது மின்றென்பது படநின்றது. ஒன்னார்-பகைவர். பொருதல் - போர்செய்தல். வீரம் - வீரத்தன்மை. வாள் - கட்கம். வாள்விழி - உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். அறிந்திலிரே யென்னு மேகாரம் வினு. வழக்குரை - வழக்கச்சொல்; அது கண்ணில்லாது வழி நடத்தல் என்பது, புருஷகாரம் (மத்யஸ்தம்) இல்லாமல் ஒரு காரியமும் முடிவுபெருதென்பது. (கூ௫)

தன்னிலைதலைவன்சாற்றல்.

அதாவது—பாங்கி இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் அவளை நோக்கி, தான்வேட்கை நோயால் வருந்து நிலையை அவட்குக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

மண்ணைக்கொண்டுண்டபெருமான்றொழும்வெங்கைவாணர்வெற்பிற், பண்ணைக்கொண்டுற்றமொழியாயுனையன்றிப் பாரமுலைப், பெண்ணைக்கொண்டின்பம்பெறநான்விரும்பப் பெறினதுதான், கண்ணைக்கொண்டன்றிவழிதானடப்பக்கருதுதலே.

(ப - ரை) மண்ணைக் கொண்டு உண்ட - மண்ணை யெடுத்துண்ட, பெருமான் - பெருமை யுடையோனுகிய திருமால், தொழு-

வணங்குகின்ற, வெங்கைவாணர் வெற்பில் - திருவெங்கை வாணரது மலையிலுள்ள, பண்ணைக் கொண்டு - பண்களானே, உற்ற - இயன்ற, மொழியாய் - இன்சொல்லை யுடையாளே, உன்னையன்றி - உன்னையல்லது, பாரமுலை - கனதனத்தையுடைய, பெண்ணைக் கொண்டு - நமதுமாதினால், இன்பம்பெற - இன்பந்துய்க்க, நான் விரும்பப்பெறின் - நான் விரும்பப் பெறின், அது - அச்செயல், கண்ணைக் கொண்டு அன்றி - கண்ணுதவி பெற்றன்றி, வழிநடப்பக் கருதுதல் - வழிநடக்கக் கருதுதலோடொக்கும், எ-று.

(க - ரை) திருவெங்கை வாணரது மலைமாதே! உன்னையன்றி நும் தலைவி யின்பநுகர யான் விரும்புதல், கண்ணில்லாதவன் வழிநடக்கக் கருதுதலோடொக்கு மென்பதாம்.

(வி - ரை) மண்ணைக் கொண்டு என்பதற்கு மண்ணை யுணவாகக்கொண்டு என்றலுமாம். மண்ணைக் கொண்டுண்ட என்றேனும் எல்லா வுலகங்களையு முண்டவென்பது பொருளாகக் கொள்க. இது "உலகமுண்ட பெருவாயன்" "வையமேழுங்கண்டாள் பிள்ளை வாயுளே" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களா னினிது விளங்கும். மண்ணைக் கொண்டுண்ணினும் அது சமித்தொழியாது திருவுதரத்து வைத்துக் காத்து மீட்டும் வெளிநாடு காண வுமிழ்ந் தானாதலால் 'பெருமான்' எனவுங்கூறினர். பண்ணைக்கொண் டுற்ற மொழி-மிகவுமினிதாய மொழி. தாணிரண்டும் அசை நிலைகள். இவ்வாறு கூறினதனால், உன்னைக் கொண்டு பாரமுலைப் பெண்ணின்பம்பெற நான் விரும்பப் பெறின் அது கண்ணைக்கொண்டு நடப்பக் கருதுதல் என்றவாறாயிற்று. யான் உய்யச் செய்தலும் நையச்செய்தலும் உன்வயத்தன வென்பதாம். (கூக)

பாங்கியுலகியலுரைத்தல்.

அதாவது—தலைவனிவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, உலகில் ஒரு பெண்மீது வேட்கை கொண்டோர், சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர், அவ்வாறே, நீயும் உலகியல்வழாது வரைந்து கொள்வாயாக வெனக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

வெண்டாமரைமுளைப்பாலிகைவாளரவிந்தச்செந்தீக்
கொண்டாவியிற்சங்கமார்ப்பக்குவளைமணம்புணர்ந்து
வண்டாடுநல்லியலூரவெம்மான்வெங்கைமர்தினைநீ
கண்டாசைப்பட்டனையேல்வரைந்தேகொள்கடைப்பிடித்தே

(ப - ரை) வண்டு - வண்டுகள், வெள்தாமரை - வெண்டாமரை மலராகிய, முளைப்பாலிகை - முளைப்பாலிகையையும், வாள் - ஒளிபொருந்திய, அரவிந்தம் - செந்தாமரை மலராகிய, செந்தீ - செந்தீயையும், கொண்டு - (மணத்திற்குரிய வுபகரணங்களாக) கொண்டு, ஆவியில் - தடாகங்களில், சங்கம் ஆர்ப்ப - சங்கவாத்திய முழங்க, குவளை - குவளை மலர்மீது, மணம்புணர்ந்து - வரைந்து கொண்டு, ஆடும் - விளையாடுகின்ற, நல் இயல் - நல்லியல்லையுடைய, ஊர - ஊரையுடையவனே, எம்மான் - எம்பெருமானது, வெங்கை- திருவெங்கைப் பதியிலுள்ள, மாதினை - எமது தலைவியாகிய பெண்ணை, நீ கண்டு - நீ பார்த்து, ஆசைப்பட்டனையேல் - விரும்பினையாயின், கடைப்பிடித்து - மனவுறுதிகொண்டு, வரைந்தேகொள் - வரைந்தே கொள்ளக்கடவை.

(க - ரை) வண்டுகள் தடாகங்களில் மணம்புணர்ந்து விளையாடுதற்குரிய நல்லியல்லையுடைய வூரனே! நீ திருவெங்கையிலுள்ள எமது தலைவியாகிய பெண்ணைக்கண் டாசைப் பட்டனையாயின், வரைந்துகொள்ளக் கடவை யென்பதாம்.

(வி - ரை) தாமரை, அரவிந்தம், குவளை யென்பன ஆகுபெயர்கள். ஆவி - தடாகம். சங்கம் - சங்கு. மணம் புணர்தல் - வதுவை செய்தல். ஊரன் - மருத நிலத்தலைவன். மான் - மகான். எம்மான் வெங்கைமாது என்பதற்கு எமது மான்போலும் வெங்கைப்பெண் என்றுரைத்தலுமாம். எல்-எனின் என்பதன் மரூஉ. வரைந்தேகொள் என்றதனால் இனியிக்களவொழுக்க மொழுகற்பாலை யல்லையென்றவாறுயிற்று. கடைப்பிடித்தல் - உறுதியாய்ப் பற்றுதல். முளைப்பாலிகை - முளையெழுமகல். செந்தீ - ஓமாக்கினி. வண்டுகள் தடாகமாகிய இடத்தில் முளைப்பாலிகை முதலிய மணத்துக் குரிய உபகரணங்களோடு, சங்கமுழங்க, மணம் புணர்ந்தாடும் நல்லியலூரனுயிருக்கச்செய்தே, நீயுமவ்வாறே முளைப்பாலிகை முதலிய மங்கலதிரவியங்க ளமைத்துக்கொண் டிவளை அக்கினி சாக்ஷிகமாய் மணம் புணர்ந்தின்பநுகர்தலே தகுதியென்பதிச் செய்யுளின் பிண்டப்பொருள்.

தலைமகன் மறுத்தல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவன் அவளை நோக்கி, தலைவியை மணந்து காமக்கனலைத் தணிக்கக் கடவை யென்ற நீ, ஊரிற் பற்றியெரிகிற தீயைத் தணித்தற்குக் கிணறு வெட்டச் சொல்லுவோரின் வேறல்லை யெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தாமக்குழலைவரைந்துகொண்டேவெங்கைத்தாணுவெற்பிற்
காமக்கனலைத்தணிப்பாயென்றோதியகாரிகைநீ
நாமக்கிணறகழ்ந்தந்நீர்கொடுநன்னகரிற்பற்றி
வேமக்கனலையவிப்பாயென்பார்களின்வேறல்லையே.

ப-ரை. வெங்கை-திருவெங்கைப்பதியிலெழுந்தருளிய, தாணு- சிவபெருமானது, வெற்பில் - மலையிலுள்ள, தாமம் - பூமாலையை யணிந்த, குழலை - கூந்தலையுடையாளை, வரைந்துகொண்டே - வதுவை செய்துகொண்டே, காமக்கனலை - காமத்தீயை, தணிப்பாய் என்று ஓதிய - தணிக்கக்கடவையென்று சொன்ன, காரிகை - பெண்ணே, நல் நகரில் - நல்ல நகரத்தில், பற்றிவேம் - பற்றியெரிகிற, அக்கனலை - அந்தநெருப்பை, நாமம் - அச்சத்தையுண்டாக்குகிற, கிணறுஅகழ்ந்து - கிணறுதோண்டி, அந்நீர்கொடு - அந்தக்கிணற்று நீரைக்கொண்டு, அவிப்பாய் - அவிக்கக்கடவை, என்பார்களின் - என்றுசொல்லுவோரினும், நீவேறு அல்லை-நீ வேறுவாயல்லை, எ-று.

க-ரை. தலைவியை வரைந்துகொண்டு காமத்தீயைத் தணிப்பா யென்று சொன்னமாதே! ஒரு நல்லநகரிற் பற்றியெரிகிற தீயைக் கிணறுவெட்டி அதிலுண்டாகிற நீரைக்கொண்டு தணியென்று சொல்வோரினும் நீ வேறாகமாட்டா 'யென்பதாம்.

வி-ரை. தாமம்-மாலை. அது இங்குப்பூமாலையையுணர்த்திற்றுக் குழலென மேல்வருதலால். தாமக்குழல் - அன்மொழித்தொகை. தாணு - சிவபிரான். (அசைவற்றவன் என்பதுபொருள்) தணித்தல்- அவித்தல். நாமம் - அச்சம். அகழ்தல் - தோண்டுதல். பற்றிவேதல்- மூண்டெரிதல். என்பார்களின் வேறல்லையென்றது அவர்கட்கும் உனக்கும் வேற்றுமையின்றென்றவாறு. ஈற்றேகாரம் வியப்பு.கனல்- நெருப்பு; இது முதனிலைத் தொழிலாகுபெயர். (கூஅ)

பாங்கியஞ்சியச்சுறுத்தல்.

அதாவது—பாங்கி தானும் அஞ்சினவளாய்த் தலைவனை அப்புணம் விட்டு நீங்குமாறச்சுறுத்திக்கூறுமிற்றல். அதற்குச்செய்யுள்,—

பால்கொண்டவத்தியெனவேயுடல்வடுப்பட்டவெமர்
வேல்கொண்டதம்முடற்புண்ணிலிட்டேவளைவேனிமிர்ப்பார்
சேல்கொண்டகண்ணியிடத்தார்திருவெங்கைச்சேயிழைக்கு
மால்கொண்டுநின்றுழலேல்விரைந்தேகுகமன்னவனே.

ப-ரை. பால்கொண்ட - பாலையுடைய, அத்தியெனவே - அத்திமர மென்னும் படியாகவே, உடல் வடுப்பட்ட - உடம்புவடுப்பட்ட, எமர் - எம்மையர், வேல்கொண்ட - வேல்பட்ட, தம் உடல் புண்ணில் இட்டே - தம்முடற்புண்ணில்வைத்தே, வளைவேல் நிமிர்ப்பார் - வளைந்தவேலை நிமிர்ப்பார்கள், சேல்கொண்டகண்ணி - சேலின் றன்மையைக் கொண்ட கண்களையுடையவளாகிய வுமாதேவியை, இடத்தார் - இடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, சேயிழைக்கு-இந்தமாதின் மீது, மால்கொண்டு நின்று - ஆசைகொண்டு நின்று, உழலேல் - உழலற்க, விரைந்து ஏகுக - விரைந்து செல்க, மன்னவனே - அரசனே, எ-று.

க-ரை. மன்னவனே ! இங்குள்ள எம்மையர் மிகு வன்கண்ணர் ஆதலால் எம் தலைவியின்பொருட்டு இவ்விடத்து நின்றுழலற்க, நீவிரைந் திவ்விடம்விட்டு நீங்கக்கடவை யென்பதாம்.

வி-ரை. போரில் வல்லராதல் பற்றிப் படைக்கலங்கள் பட்டாறின வடுதழும்புகளையுடைய வுடம்பினராதலால் 'பால்கொண்ட வத்தி யெனவே யுடல்வடுப் பட்டவெமர், என்றாள். 'வேல்கொண்ட தம் முடற் புண்ணிலிட் டேவளை வேனிமிர்ப்பார்,என்றமையால் அவரது வன்கண்மையின் மிகுதிவெளியாயிற்று. இடத்தார் என மேல் வருதலால் சேல்கொண்ட கண்ணியென்றது உமாதேவியைக்குறித்தது. சேயிழை - அன்மொழித் தொகை, செவ்விய ஆபரணங்களையணிந்தவள் என்பது பொருள். சேயிழைக்கு-உருபுமயக்கம். மால் - ஆசை. இங்ஙனமாய வன்கண்ணர்வரி னூறு செய்வரென்பது கருதியும், தலைவிக்குயிரா யிருப்பவனாதல் கருதியும், விரைந்தேகுக என்றாள். (கக)

தலைவன்கையுறைபுகழ்தல்.

அஃதாவது—இவ்வாறு பாங்கியஞ்சி யச்சுறுத்தவும் அவ்விடம் விட்டு நீங்காத தலைவன் தான் கொணர்ந்த கையுறையேற்குமாறு பாங்கியை யிரவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொண்டலங்கண்டார்திருவெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
றண்டளிர்வென்றசெந்தாண்மடவீர்நுந்தடமுலையா
மூண்டகமென்முகைமேல்வாழவூசிமுனையினின்று
வுண்டவஞ்செய்திங்குவந்தகண்ணிப்பண்ணிட்டமே.

ப - ரை. கொண்டல் - நீலமேகம் போன்ற, அம் - அழகாகிய, கண்டர்- திருமிடற்றினையுடையவர், திருவெங்கைவாணர்—, (அவரது)குளிர்சிலம்பில் - குளிர்ந்த மலையிலுள்ள, தண் -குளிர்ச்சிபொருந்திய, தளிர் - மாந்தளிரை, வென்ற - செயித்த, செம்தாள் - செந்நிறமமைந்த பாதத்தையுடைய, மடவீர் - மாதரே, இ மணிவடம்-இந்த முத்துமாலை, நும் - உமது, தடம் - பெரிய, முலை ஆம் - தனமாகிய, முண்டகமெல் முகைமேல்வாழ - தாமரையின் மெல்லிய அரும்பின் மீது வாழும்பொருட்டு, ஊசிமுனையில்நின்று-ஊசி நுனிமேனின்று, வள் தவம் செய்து-பெருந்தவஞ்செய்து, இங்குவந்தது-இவ்விடத்து வந்தது, (ஆதலால் நீவிரிதனை யேற்றுக்கொள்வீராக) எ - று.

க - ரை. நீலமேகம் போலுந் திருமிடற்றை யுடையவராகிய திருவெங்கைவாணரது மலையில் வாழ்கின்ற, மாந்தளிரை வென்ற பாதத்தையுடைய மாதரே! நுமது பெரிய தனங்களின் மீதுவாழும் பொருட்டு இந்த மணிவடமானது பெருந்தவஞ் செய்திங்கு வந்தது. ஆதலா னிதனை யேற்றுக்கொள்வீராக வென்பதாம்.

வி - ரை. கொண்டல் என வாளா கூறினும் இறைவரது திருமிடறு நீலநிறமாதலால் நீலமேகம் என்றுரைக்கலாயிற்று. செந்தாள் என மேல்வருதலால் தளிர் மாந்தளிரைக் குறித்தது; அசோகந்தளிருமாம். வென்ற என்றது அத்தளிரினும் மிக்கமென்மை,அழகு,செந்நிறமென்பவற்றையுடைய தென்பதை யறிவித்தற்கென்க. தடம் - மலைபோன்ற வெனினுமாம். முண்டகம்-தாமரை. முகை-மொட்டு. வண்டவம் என்பதில் வண்மை யிங்குப் பெருமை குறித்து நின்றது. செய்து - முற்றி. வந்தது என்பது வந்தவென்றீறு தொகுத்தலாயிற்று. மணிவடம் என்றது பால்பகாவஃறிணைப் பெயராக்கி வந்த வென்பதனைப் பலவின்பால் வினைமுற்றாக்கினுமமையும். நவமணிகளுள்ளுஞ் சிறந்து நிர்த்தோஷமாய், மகளிர்தனத்தணியாய் விளங்குவதாதலால் மணியென்ற தீண்டு முத்து மாலையையே குறித்தது. ஊசிமுனையி னிற்றலாவது ஊசிநுனியாற் கோக்கப்படுதல். கண்டீர் - முன்னிலை யசையிடைச்சொல். ஆதலால் நீவிரிதனை யேற்றுக்கொள்வீராக வென்ப திசையெச்சமாய் வருவித்துரைக்கலாயிற்று.()

பாங்கிகையுறைமறுத்தல்.

அதாவது—தலைவன் இவ்வாறு கையுறை புகழ்ந்து நிற்கக் கண்டபாங்கி, தலைவனை நோக்கி, நீ கொணர்ந்த இவ்வணியை யெமது தலைவி கொங்கையிற்காணி னெம்மையர் மிகக்கறுப்பராதலா னிதனையா மேலேமென மறுத்துரையா நிற்றல். அதற்குச்செய்யுள்,—,

மல்லார்க்குந்தோளண்ணலேவெங்கைவாணர்வரையிற்பெண்க
ளெல்லார்க்கும்வந்தவிடைபோல்வதன்றிங்கிவட்கன்றியே
வில்லார்க்குநின்னணிகொங்கையிற்காணிலெம்வேடரென்னும்
பொல்லார்க்குறங்கும்புலிவாயிடறுதல்போன்றிடுமே.

ப-ரை. மல் ஆர்க்கும் - மற்போரின் பொருட்டு ஆரவாரித்துக்கொண்டிருக்கிற, தோள் - புயங்களையுடைய, அண்ணலே - பெரியோனே, வெங்கைவாணர்வரையில் - திருவெங்கைவாணரது மலையில் வாழ்கின்ற, இங்கிவட்கு - இவளுக்குள்ளது, பெண்கள் எல்லார்க்கும்வந்த - பெண்களெல்லாருக்கு முண்டாயிருக்கிற, இடைபோல்வது அன்று - இடையை நிகர்த்ததன்று, அன்றியே - இதுவன்றியே, வில் ஆர்க்கும் - ஒளி வீசுகிற, நின் அணி - உன்னணியை. கொங்கையில் காணின் - கொங்கைமீ திருக்கக்காணின், எம் வேடர் என்னும் பொல்லார்க்கு - எமது வேடராகிய தீயோருக்கு, உறங்கும் - நித்திரை செய்கிற, புலிவாய் - புலியின்வாயில், இடறுதல் போன்றிடும் - இடறுவதை யொத்திருக்கும். எ - று.

க-ரை. மல்லார்க்குந் தோளண்ணலே! வெங்கைவாணர் மலையிற் பெண்கள் யாவர்க்குமுண்டான விடைபோன்றதன்றிவட்குண்டாயிருக்குமிடை. அதுவேயுமன்றி, நின்னணியை யிவள்கொங்கைமே லிருக்கக்காணின், எம் வேடராகிய தீயார்க்கு, உறங்கும் புலிவாயை யிடறுவதுபோன் றிருக்கும் என்பதாம்.

வி-ரை. ஆர்த்தல் என்பதற்கு அணிதலென்னும் பொருளுண்மையால் மல்லார்க்குந்தோள் என்பதற்கு மற்றொழிலாகிய அணியை யணிந்திருக்கிற என்றுரைத்தலுமாம். அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். பெண்களெல்லார்க்கும் வந்தவிடை போல்வதன்று என்றமையால் மிகச் சிறுத்த விடையென்பதும், நின்னணியைத்தாங்காதிறு மென்பதும் கூறியவாறாயிற்று. இங்கிவளென்பதொருசொல்; இது, "கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுருகக்குனிக்கும், பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற், றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ ளிங்கனி வாய்கமழும், ஆம்பலம் போதுள வோவளி காணும் மகன்பணையே' எனனுந் திருக்கோவையார் கக-ஆம் செய்யுளுரையானினிது விளங்கும். வில் - ஒளி. ஆர்த்தல் கட்டுதலெனக்கொண்டு வில்லார்க்கு மென்பதற்கு ஒளியை நீங்காமைப் பிணித்துவைத்த வென்றுரைத்தலுமொன்று. நின்னணி - நின்னுற்றரப்பெற்ற விம்மணிவடம். வேடரென்னும் பொல்லார் என்றமையால் இவருள்ளே நல்லாரொருவரு மிலரென்பதும் வெளியாயிற்று. இவர் அவ்

வணியைக்காணின் உறங்கும் புலிவாயிடறுதல் போன்றிடுமென்ற தெற்றுக்கெனின், இம்மணிவடம் இந்நிலத்ததன்றாதலானும் எம்மவரல்லவே திலர் யாரோ கொணர்ந்து தரப்பெற்றதாமென்னு மையந்தோன்றலானுமென்க. போன்றிடும் என்பதில் இடும் துணிவு குறிக்கவந்தது. (௧0௧)

ஆற்றநெஞ்சினோடவன்புலந்தல்.

அதாவது—தலைவன் இவ்வாறு கூறிக் கையுறை மறுத்தபாங்கியை வெறுத்துத் தன்னுற்ற நெஞ்சினோடு கூறிப்புலவா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

பாமாலைகொண்ட திருவெங்கைவாணர்பனிவரைமேன்
மாமாலைநண்ணியவென்னெஞ்சமேயிவ்வரியளிக
டாமாலைமென்குழலார்தமைவேண்டிநந்தாண்முறிந்த
பூமாலையேறுங்கொலோவவர்வார்முலைப்பொற்குன்றமே.

ப-ரை. பாமாலை - (அன்பரது) பாமாலைகளை, கொண்ட - ஏற்றுக்கொண்ட, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, பனிவரைமேல் - குளிர்ச்சிபொருந்திய மலைமேல், மா - பெரிய, மாலை நண்ணிய-மயக்கத்தைப் பொருந்திய, என்னெஞ்சமே - என்மனமே, இ - இந்த, வரி - இராகம்பாடுகிற, அளிகள் - வண்டுகள், தாம் - தாவி விளையாடுதற்குரிய, மாலை - பூமாலை யணிந்த, மெல் குழலார் தமைவேண்டி - மெல்லியகூந்தலையுடையவராகிய இம்மாதரை விரும்பி, நம் தாள் முறிந்த - நமது கால்கள் முறிந்தன, (அங்ஙனமாக) அவர் - அவரது, வார் - கச்சணிந்த, முலை - தனங்களாகிய, பொற்குன்றம் - பொன்மலைமேல், பூமாலை யேறுங் கொலோ - மலர்மாலை யேறுமோ, எ-று.

க - ரை. அன்பரது பாமாலைகளைக்கொண்ட திருவெங்கைவாணரது பனிவரைமேல், பூமாலை மென்குழலார்தமை வேண்டி நம் தாள்கள் முறிந்தனவாக, அவரது வார்முலைப்பொற் குன்றமீது நம் தாள் முறிந்த பூமாலை யேறப்பெறுமோ வென்பதாம்.

வி - ரை. பாமாலை - சொன்மாலைகள்; அவை:-தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலாயின. மற்றைய பாமாலைகளைக் கொண்டிலரோ வெனின், கொள்ளினும் இவற்றிற் பேரார்வமுடையராதலால் இவற்றை யெடுத்துரைத்தாம். இவற்றிற் பேரார்வ முடைமை யாதினு லறியப்படுமோ வெனின், 'கழுதுகண்படுக்கும்பா ளிரவினிற்றூது சேறல்' மண்சுமத்தல் முதலாயின.

வற்று னறியப்படுமென்க. இவற்றின் மீதிவர்க்கு விருப்பஞ்சேறற் காரணம் யாதெனின்,"மூதுணர்வோர் முற்பழிச்சு பாடலையாற்கவை விடர்க்கிளம் பாவையருரைபோ றலேயாமென்க. மாமாலை - பெரிய மயக்கத்தை. வரி - கீற்று எனினுமாம். தாம்-தாவு மென்பதன் விகாரம். மென்குழலார் என மேல்வருதலால் மாலை பூமாலையை யுணர்த்திற்று. தாள்முறிந்த பூமாலை யென்றது கால்களைந்த மலர்மாலை யென்றவாறு. (௬0௨)

பாங்கியாற்றுவிந்தகற்றல்.

அதாவது—இவ்வாறு தலைவன் புலந்தமை கண்டபாங்கி, அவனைத்தேற்றி, நீயஞ்சலை, நாளைவாவெனக் கூறியகற்றுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஆனுக்களித்தகொடியாளர்வெங்கையணிநகராய்
பானுக்களித்துவருங்காலைநீவரிற்பைந்தொடிக்கைத்
தேனுக்களிக்குமலர்தொடைவார்குழற்றேமொழியெம்
மானுக்களித்துக்கலைகாக்குவனுன்கைவண்டழையே.

ப - ரை. ஆனுக்கு அளித்தகொடியாளர் - இடபத்துக்களித்த கொடியாளராகிய சிவபிரானரது, அணி-அழகிய, வெங்கைநகராய் - திருவெங்கைநகரில் வாழ்பவனே, பானு - சூரியன், களித்துவரும் காலை - களித்துதிக்குங் காலத்தில், நீவரின் - நீவந்தால், பைந்தொடிக்கை - பசியவளையலை யணிந்த கையினையும், தேனுக்கு - வண்டுகளுக்கு, அளிக்கும் -(தேனை) கொடுக்கிற, மலர்தொடை - பூமாலையையணிந்த, வார்குழல் - நீண்ட கூந்தலையும், தேம்மொழி - தேன்போலு மின்சொல்லையுமுடைய, எம்மானுக்கு - எம்மாதுக்கு, உன் கைவள் தழை - உன்கையினிடத்ததாகிய செழித்ததழையினை, அளித்து - கொடுத்து, கலைகாக்குவன் - கலையைக்காப்பேன், எ - று.

க - ரை. இடபக்கொடியாளராகிய சிவபிரானரது திருவெங்கைப்பதியில் வாழ்பவனே! நாளை சூரியோதயகாலத்திலே நீ யிங்கு வருவையாயின் உன்கை வண்டழையை எமது தலைவிக்குக் கொடுத்துக் கலைகாப்பேன் என்பதாம்.

வி - ரை. ஆ-பசுவின்பொதுவை யுணர்த்துவதாகிய வோரெழுத்தொருமொழி; அதுனகரச்சாரியை பெற்று ஆனென்றாயிற்று. கொடியாளர் என மேல்வருதலால் இது இடபத்தைக்குறித்தது.களித்துவரும் காலைப்பொழுது என்றுரைத்தலுமாம். பைந்தொடி - பச்சைவளையல்; அன்றிப்பசும்பொன் வளையலுமாம். தேனுக்கு அளிக்கும்

என்பதை முன் பின்னாகமாற்றி வண்டுகளுக்குத் தேனைச்சிந்துகிற என்றுரைத்தலு மொன்று. வார் - நீட்சி. மலர்த்தொடை அளிக்கு தேன் உக்குவார் என மொழிகளைப் பிரித்து நிறுத்தி, மலர் மாலையானது வண்டுகளுக்குத் தேனைச்சிந்தி யொழுக்குகிற என்றுரைத்தலுமாம். மான்கலை யென்பன பெண்மானும் ஆண்மானு மெனக்கொள்க. மானுக்களித்துக் கலைகாக்குவன் என்பதற்கு மானுக்குக் கொடுத்துக் கலையைக் காப்பேனென்றும், எமது தலைவிக்குக் கொடுத்து உன் கல்வியறிவைக்காப்பேனென்றும், அவளது கலை நெகிழாமைக்காப்பேனென்றும் உரைத்துக்கொள்க. வண்டழை - வளவியதழை. இது காறும் ஐந்தாநாட்செய்தி. தலைமகன் கூற்றாயினவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும், பாங்கி கூற்றாயினவெல்லாம் சேட்படுத்தற்கும் உரியவாமாறு காண்க. (க0ரு)

இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தல்.

அதாவது—மறுநாட் காலையில்வந்த தலைமகன், இவளாற் காரியமின்றெனக் கருதி, இரந்து குறைபெறே மாயினே மெனவருந்தி, இனி நமக்குப் பொருளாவது மடலேயெனத் தன்னுள்ளே மதித்துக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

எண்ணைவிட் டோங்கும்புகழாளர்வெங்கையிமயவெற்பில்
விண்ணைவிட் டெய்துமிவட்டருவாயெனமேவியுழும்
பண்ணைவிட்டூர்தொறும்புக்கிரப்பாரிற்பசியமடற் [மையே.
பெண்ணைவிட் டோர்பெண்ணைநாம்வேண்டிநிற்பதுபேதை

ப - ரை. நெஞ்சே - மனமே, எண்ணைவிட்டு - எண்ணத்தைக்கடந்து, ஓங்கும் - உயர்ந்த, புகழாளர் - புகழையுடையவராகிய சிவபெருமானாது, வெங்கை - திருவெங்கையைச் சார்ந்த, இமயவெற்பில் - இமயமலையில், விண்ணைவிட்டு எய்தும் - விண்ணை நீங்கி வந்த, இவள் - இவளை, தருவாயென - தரக்கடவையென்று, மேவி - பொருந்தி, உழும் - உழுகின்ற, பண்ணைவிட்டு - வயலைவிட்டு, ஊர்தொறுமபுக்கு - ஊர்தோறும்போய், இரப்பாரின் - யாசிப்பவர்போல, பசியமடற் பெண்ணைவிட்டு - பசுமையாகிய மடற் பெண்ணைவிட்டு, ஓர் பெண்ணை - வேறொரு பெண்ணை, நாம் வேண்டி நிற்பது - நாம் குறை யிரந்து நிற்பது, பேதைமையே - அறியாமையேயாம்.

க - ரை. விண்ணுலகத்தைவிட்டு, மனத்துக்கெட்டாதவராகிய சிவபெருமானாது திருவெங்கையைச் சார்ந்த இமயமலையில் வந்தி

ருக்கிற இந்தப் பெண்ணைத் தருகவென்று, பண்ணைத்தொழிலை விட்டு ஊர்தோறுஞ் சென்றிரப்பவர்போல, மடற்பெண்ணை விட்டு வேறொரு பெண்ணை நாமிரப்பது நமது அறியாமையின் காரியமே யா மென்பதாம்.

வி - ரை. எண் என்றது மனத்தை; முக்கரணங்களுள்ளும் சிறந்தமனத்தை விட்டோங்கும் புகழாளர் எனவே மற்றை வாக்குக்காயங்களை விட்டோங்குதல் சொல்லாதே யமையும்; அமையவே, மனோ வாக்கு காயங்களாகிய முக்கரணங்களுக்கு மெட்டாதவர் இறைவர் என்றதாயிற்று. அவாங்மாநஸகோசரர் என்பர் வடநூலார். எண்ணை விட்டோங்கலை புகழுக்கே விசேடணமாக்கினு மமையும். விண்ணை விட்டெய்து மிவள் என்றமையால் இவள் இந்திராணி யென்றவா றாயிற்று. பண்ணை-வயல். இரப்பாரின் என்பதில் இன் ஐந்தாவதனுப் புப் பொருளது. பசியமடற்பெண்ணை - பசுமையாகிய மடலோடு கூடிய பனை; பனைமடல். ஓர் பெண்ணை - ஒரு பாங்கிப்பெண்ணை. ஈற்றேகாரம் தேற்றம். (க0ச)

பாங்கிக்தலைவின்மேல் வைத்துரைத்தல்.

அதாவது—தலைவன் அம்மடலேற்றினை யுலகின்மேல் வைத்துப் பாங்கிக்குக் கூறுகிற்றல். அதற்குச் செய்புள்,—

வாமத்துமைமகிழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
றாமக்குவிமென்முலைமட்டுவார்குழற்றையனல்லாய்
நாமக்கடலைக்கலமிவர்ந்தேறுவர்நானிலத்தோர்
காமக்கடலைமடன்மாவிவர்ந்துகடப்பர்களே.

ப - ரை. வாமத்து - வாமபாகத்திலுள்ள, உமை - உமாதேவி, மகிழ்-மகிழ்தற்குரிய, வெங்கைபுரேசர்-திருவெங்கை நகர்க்கிறைவராகியசிவபெருமானது, மணிவரைமேல்-அழகிய மலையில் வாழ்கின்ற, தாமம் - மாலையையணிந்த, குவி - குவிந்த, மெல்முலை - மெல்லிய தனங்களையும், மட்டுவார்குழல் - தேனொழுகுகின்ற கூந்தலையுமுடைய, தையல் நல்லாய்-பெண்களிற் சிறந்தவளே, நானிலத்தோர் - இவ்வுலகத்தார், நாமம் - அச்சத்தைத்தருகிற, கடலை - சமுத்திரத்தை, கலம் இவர்ந்து - கப்பலேறி, ஏறுவர் - கரையேறுவர், காமக் கடலை-காமசமுத்திரத்தை, மடன்மா இவர்ந்து-மடற்குதிரையேறி, கடப்பர்கள் - தாண்டுவார்கள், எ - று.

க - ரை. சிவபெருமானது திருவெங்கை மலைப்பெண்ணரசே! இவ்வுலகத்தார் கப்பலேறி நாமக்கடலைக் கடப்பர், மடன்மாவேறிக் காமக்கடலைக் கடப்பர் என்பதாம்.

வி - ரை. வாமம் - வாமபாகம், (இடப்பாகம்) வலப்பக்கம் தக்ஷிணபாகம் எனப்படும். வாமம், தக்ஷிணம் என்பன வடசொற்கள். உமைமகிழ் என்பதற்கு உமையைமகிழ்கின்ற என்றுரைத்தலுமாம். தாமம்- முத்துமாலை முதலியன; ஒளி, பெருமை, மலை, யானை என்றுரைத்தலுமமையும். தையல்-கைபுனையப்பட்டவள். (அலங்கரிக்கப்பட்டவள்) கலம் - மரக்கலம். இவர்தல் - ஏறுதல். மடன்மா-பனைமடலாற் செய்யப்பட்ட குதிரை. நானிலத்தோர் என்றது பாலைக்கு நிலமில்லையாதல் பற்றியென்க. காமக்கடல் - காமமாகிய கடல். (௧௦௫)

அநுனைந் தன்மேல் வைத்துச்சாற்றல்.

அதாவது—அம்மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

பாவாக்கிமுன்பெண்பனையாகவாண்பனை பாட்டருளுந்
தேவாக்கியாளுந்திருவெங்கைவாணரிற்றேர்ந்தெருக்கம்
பூவாக்கிமாலையணிந்துபொன்னேயொருபொற்பனையை
மாவாக்கிநாளையும்மூர்நடுவீதிவருகுவனே.

ப - ரை. பொன்னே - பொன்போல்வாளே, முன் - முற்காலத்தில், ஆண்பனை பெண்பனையாக—, பா ஆக்கி - பாவினாற் செய்து, பாட்டு அருளும் - தேவாரப்பாடலை யருளிச்செய்த, தே - தெய்வத்தன்மை யமைந்த, வாக்கி - வாகீசரை, ஆளும்-ஆண்டருளின, திருவெங்கைவாணரின் - திருவெங்கைவாணர்போல, தேர்ந்து - ஆராய்ந்து, எருக்கம் பூ—, மாலை ஆக்கி அணிந்து—, ஒரு பொன்பனையை - ஒரு அழகிய பனைமடலை, மா ஆக்கி - குதிரையாகச்செய்து, நாளை - நாளைக்கே, உம் ஊர் - நுமதூரிலுள்ள, நடுவீதி - நடுத்தெருவே, வருகுவன் - (நான்) வருவேன், எ - று.

க - ரை. பொன்போல்வாளே! திருவெங்கைவாணர்போலவே, நான் நாளைக்கு, எருக்கம்பூமாலையைத் தரித்து மடற் குதிரையேறி, நும்மூர் நடுத்தெருவில் வருவேன் என்பதாம்.

வி - ரை. ஆண்பனையைப் பெண்பனையாக்கத் தேவாரப்பதிகம் பாடினவர் வாகீசராதலால், அவரை "பாவாக்கி முன்பெண்பனையாக வாண்பனைபாட்டருளுந் தேவாக்கி" என்றார். திருவெங்கைவாணரின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருட்டு. தேர்தல்- ஆராய்தல். பொன் - அழகு. மா - குதிரை. வருகுவன் என்பதற்கு வினைமுதலாகிய நான் என்பது வருவித்துரைக்கப்பட்டது. வாகீசர்-

வடசொல்; திருநாவுக்கரசர் என்பர்தமிழ் நூலார்; இவரை அப்பர் எனவுங்கூறுப. பொன்னே யென்றது திருமகள்போல்வாளே யென்றவாறு; இது உவமையாகுபெயர். மடலேறலாவது:—தலைமகன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற் குதிரையும் பனைமரத்துள்ளவற்றால் வண்டில் முதலியவுஞ் செய்து, அக் குதிரையின் மீதேறுதல். மடலேறுவோன் திகம்பரனாய் உடல் முழுது நீறுபூசி ஒவியர் கைப்படாது தானே கிழியெழுதி, கிழியின்றலைப் புறத்தே தன் பெயரையும் தலைவி பெயரையு மெழுதிக் கைக்கொண்டு, ஊர்நடுவே நாற்சந்தியில் ஊணுறக்கமின்றி அக்கிழிமேல் கண்ணுமனமுஞ் செலுத்தி, வேட்கை வயத்தனாய் வேற்றுணர்வின்றி, மழை வெயில் காற்றுகளுக்கு மயங்காதிருப்புழி, அவ்வூரார் பலருங்குழுமிவந்து, நீ சோதனை தருதியோ வென்புழி இயைந்தானாயின், அரசனுக்கறிவித்து அவனேவலால் அவன் மடலேறுவழி, எருக்கமலர்மாலை, பூளைப்பூமாலை யென்பவற்றை யணிந்து மடன்மாவிவர்வுழி, பனங்கருக்குப் படுமிடந்தோறும் உதிரந்தோன்றாது வீரியந்தோன்றின், அவன் விழைந்த மாதினையவனுக்கே மணம் புணர்த்துவதும், உதிரந்தோன்றின் அவனைக் கொலைசெய்வதும் பண்டைக்காலவழக்காம், என்றுணர்க.

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றல்.

அதாவது—அவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, நீ மடலூர்வது கிழியெழுதிய பின்பன்றோ, கிழியெழுதுங்கால் அவளவயவமெழுத லுனக்கருமையா மெனக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

மந்தாகினியணிவேணிப்பிரான்வெங்கைமன்னவநீ
கொந்தார்குழன்மணிமேகலைநூனுட்பங்கொள்வதெங்ஙன்
சிந்தாமணியுந்திருக்கோவையுமெழுதிக்கொளினு
நந்தாவுரையையெழுதலெவ்வாறுநவின்றருளே.

ப - ரை. மந்தாகினி - ஆகாயகங்கையை, அணி - தரித்த, வேணி - சடாபாரத்தையுடைய, பிரான் - சிவபெருமானது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, மன்னவ - அரசனே, நீ - நீ, கொந்து - பூங்கொத்துக்கள், ஆர் - பொருந்திய, குழல் - கூந்தலையுடையாளது, மணி - ரத்நகசிதமாகிய, மேகலை - மேகலையணிந்த, நூல் - நூல்போலு மிடையினது, நுட்பம் - நுண்மையை, கொள்வது எங்ஙன் - கொள்வது எவ்வாறு, சிந்தாமணியும் - சிந்தாத முத்துப்போலும் பற்

களையும், திருக்கோவையும் - அழகிய கொவ்வைக்கனிபோலும் அதரத்தையும், எழுதிக்கொளினும் - எழுதிக்கொண்டாலும், நந்தா - கெடாத, உரையை - சொல்லை, எழுதல் - எழுதுவது, எவ்வாறு - எங்ஙனம், நவின்றருள் - சொல்லியருள்வாயாக, எ - று.

க - ரை. சிவபெருமானது திருவெங்கைப் பதியிலுள்ள அரசனே! நீ யெமது தலைவியினிடை நுண்மையைக் கண்டெழுதுதலெங்ஙனம்? முறுவலும் அதரமு மெழுதிக் கொள்வையேனும் சொல்லையெழுதுத லெங்ஙன மியையும், சொல்லியருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. மந்தாகினி - வடசொல்; இதற்கு மெல்லக் குடிலகதியாய்ச் செல்வதென்பது பொருள். உலகமுழுது மழியாதிருக்கத் திருவுளம்பற்றி வேணியிற்றரித்த வுபகார குணத்தை யெண்ணி, பிரான் என்றார்; பிரான் என்பதற்கு உபகார குணமுள்ளவன் என்பது பொருள். கொத்து - பூங்கொத்து. ஆர்தல் - பொருந்தல். மேகலை - மாதரிடை யணியினொன்று; அது எழுகோவையா னியன்றது. நூல் என்றது நூல்போலு மிடையை. மணிமேகலைநூல் - மணிமேகலை யென்னுநூல்; இது பஞ்சகாவியங்களுளொன்று. இது கோவலனுக்கு மாதவிபாற் பிறந்த பெண்ணாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுதலால் அவள் பெயரையே தனக்குப் பெயராகப்பெற்றது. சாத்தனார் நூலாசிரியர்; இவர் சீத்தலைச் சாத்தனாரெனவும் படுவர். சிந்தாமணி - திருத்தக்கதேவர் என்னும் சமணமுனிவரியற்றிய தமிழ்க்காவியம்; இது சீவகன் கதையை விரிவாகக் கூறுவது; இதற்கு நச்சினார்க்கினியர் உரைவகுத்தனர். இதை சீவகசிந்தாமணி யெனவுங்கூறுப. இது கடைச்சங்கத்தார் காலத்தை யடுத்த நூல். 3145 செய்யுளானியன்றது; இதிற் பதின்மூன்றிலம்பகங்களுண்டு. திருக்கோவை - திருக்கோவையார்; இது சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசகசுவாமிகளா லருளிச்செய்யப்பட்டது. இதனைத் திருச்சிற்றம்பலக்கோவையார் என்றுங் கூறுப. இது நானூறு கட்டளைக் கலித்துறையா னமைந்தது; அறிவனூற்பொருளுமுலக நூல் வழக்குமென்றிரு பொருளுந் தோன்றுமா றியற்றப்பட்டது.

"வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனைவண் டில்லைமன்னைத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய் திருச்சிற்றம்பலப்
பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற் றப்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கோவைபாடிச்சிரிப்பிப்பரே"

"உருவாருந்தமிழ்ச்சங்கத்தடம்பொய்கைத்தோன்றி
யுயர்ந்தோங்குமெய்ஞ்ஞானவொளியையுடைத்தாகி
மருவாருங்கிளவியிதழ்நானூறென்றாகி
மதுப்பொருள்வாய்மதிப்புலவர்வண்டாகியுண்ணத்
தருவாரும்புலியூரினுலகுய்யக்குனிபோன்
றடங்கருணையெனுமிரவிதன்கதிராலலருந்
திருவாதவூராளிதிருச்சிற்றம்பலவன்
றிருவடித்தாமரைச்சாத்துந்திருவளர்தாமரையே"

"ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின்
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப
ரேரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே"

என்றிவ்வாறு நம்பியாண்டார்நம்பி முதலியோராற் புகழ்ந்து பாடப் பெற்றது: உரை - பொருள். (௧0௭)

தலைமகன்றன்னைத்தானே புகழ்தல்.

அதாவது—இவ்வாறவயவமெழுத லரிதென்ற பாங்கியைத் தலைவனேக்கி, யானெழுதவல்லேனெனத் தன்னைத் தானே புகழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஐயாநநமுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
பொய்யாவிளமுலைமங்கைநல்லாரிடைபொய்யென்பதை
மெய்யாகச்சாதித்தெழுதாவிடிற்புகழ்வேண்டியநான்
கையாலெடுத்ததுதூரிகையேயன்றுகாரிகையே.

ப - ரை. காரிகையே - மாதே, ஐயாநநம் உடையார் - ஐந்து திருமுகங்களையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) அணி - அழகாகிய, வரைமேல் - மலைமீதுள்ள, பொய்யா - பொய்க்காத, இளமுலை - இளமுலையையுடைய, மங்கை நல்லார்இடை - மங்கைநல்லாரது இடையானது, பொய் என்பதை - பொய்யென்று சொல்லுவதை, மெய் ஆக - உண்மையாக, சாதித்து- கடைப்பிடித்து, எழுதாவிடின் - எழுதாவிட்டால், புகழ்வேண்டிய நான் - புகழைவிரும்பின நான், கையால் எடுத்தது—, தூரிகையே அன்று - எழுதுகோலேயன்று, எ - று.

க - ரை. காரிகையே! ஐந்து திருமுகங்களையுடைய சிவபிரானது திருவெங்கைமாதரது இடை பொய்யென்பதை மெய்யாகச்

சாதித்தெழுதாவிடின், புகழ்பெறவிரும்பின நான்கைக்கொண்டது தூரிகையன்று என்பதாம்.

வி - ரை. ஐயாநநம் - ஐந்துஆநநம். (ஆநநம் - முகம்) இது வடசொல். இறைவர்க்கு ஐந்து திருமுகங்களுண்மையால் 'ஐயாநநமுடையார் என்றார். ஐந்து திருமுகங்களாவன - ஈசாநம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்பன. இவையைந்தும் முறையே அனைத்து மாளுதல், காத்தல், அழித்தல், விளக்கல், தோற்றுவித்தல் என்னுந் தொழில்களை யுடையன. தூரிகை - சித்திரமெழுதுங்கோல். (௧0அ)

பாங்கியநளியல்கிளத்தல்.

அதாவது—இவ்வாறு தலைவன் கூறக்கேட்ட பாங்கி, அவனை நோக்கி, நீ பனையழித்தன்றோ மடன்மாப்புனைவது, அங்ஙனம் பனையழிப்பின், அதில்வாழும் அன்றில் அதன் பெடையோடழியுமே, இது நின்னருளுக் கியைவதன்றெனக் கூறி நிற்றல். அதற்குச் செய்யுள்,—

வென்றிப்படைநன்மழுவுடையார்திருவெங்கையிலே,
குன்றிற்பொலியுங்குவிமுலையாளொடுகூடவெண்ணி
நின்றிப்படிதளர்வேலண்ணலேயென்றுநீக்கமற
வன்றிற்பெடையொடுவாழ்வதன்றோபனையாவதுவே.

ப - ரை. வென்றி - வெற்றியைத்தருகிற, படை - ஆயுதமாகிய, நல் - அழகிய, மழுஉடையார் - மழுவை யுடையவராகிய சிவபெருமானரது, திருவெங்கையிலே - திருவெங்கைப் பதியிலுள்ள, குன்றின் - மலைபோல, பொலியும் - விளங்குகின்ற, குவி முலையாளொடுகூட - குவிந்த முலையாளுடன்சேர, எண்ணி நின்று - கருதி நின்று, இப்படிதளர் - இவ்வாறு தளர்கின்ற, வேல் - வேற்படையையுடைய, அண்ணலே - பெரியோனே, பனை ஆவது - பனைமரமாவது, அன்றில் - அன்றிற் பறவையானது, என்றும் - எந்நாளும், நீக்கம் அற - நீங்குதலில்லாமல், பெடையொடு வாழ்வது அன்றோ - தன் பெடையோடுகூடி வாழ்ந்திருக்கு மிடமல்லவா, எ - று.

க - ரை. வென்றிப்படை நன்மழுவுடையார் திருவெங்கையிலே வாழ்கின்ற அண்ணலே! குன்றிற்பொலியுங் குவிமுலையாளொடு கூட வெண்ணி மடலூரப் பனையழிப்பையாயின், அதில்வாழும் அன்றிற் பறவையைப் பெடையோடழித்த பாவமெய்துதி, இது நின்னருளியற்குத் தகவன்றென்பதாம்.

வி - ரை. இறைவர்க்குப் பிறபடைக ளுளவேனும் மழுச்சிறந்ததாதலால் 'வென்றிப்படை நன்மழுவுடையார்' என்றார். குன்றின் என்பதற்குக் குன்றினும் என்றுரைத்தலு மமையும். தளர் என்பது காலங்கரந்த பெயரெச்ச மாதலால் வேலண்ணல் ஒரு சொல்லாகக் கொள்க. நீக்கம் - நீங்குதல். அன்றில் - கிரவுஞ்சப்பறவை. (கoகூ)

பாங்கிகோட்டு நிலைகூறல்.

அதாவது—தலைவன் உயிர்தாங்கி நிற்குநிலையாகிய மொழியைப் பாங்கி கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மூலத்தனிமுதலானார்திருவெங்கைமொய்வரைவாய்
நீலத்தடங்கண்ணினாட்குன்குறைசொலநேர்ந்திலளேற்
கோலத்தளிரியன்மாதின்கருங்கட்குடங்கவரத்
தாலத்திவர்கநின்னையாவர்பின்னைத்தடுப்பவரே.

ப - ரை. அண்ணலே—, மூலம் - ஜகத்காரணமாகிய, தனி - ஒப்பற்ற, முதல் ஆனார் - முதற்பொருளானவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை - திருவெங்கையிலுள்ள, மொய் - வலிமைபொருந்திய, வரைவாய் - மலையில்வாழ்கின்ற, நீலம்-நீலநிறத்தையுடைய, தடம்கண்ணினாட்கு - விசால நேத்திரையாகிய வெமது தலைவிக்கு, உன் குறைசொல்ல - உன் குறையைச்சொல்ல, நேர்ந்திலளேல் - உடம்படாளாயின், கோலம் - அழகாகிய, தளிர் இயல் - தளிரியலையுடைய, மாதின் - எமது பெண்ணின், கருகண் - கரிய கண்ணையுடைய, குடம் - ஸ்தநகும்பத்தை, கவர-கவரும்பொருட்டு, தாலத்து - பனைமடன் மாவின்மேல், இவர்க-ஏறுக, பின்னைநின்னை தடுப்பவர் யாவர்-பின் புன்னைத்தடுப்பவர்யார், எ - று.

க - ரை. அண்ணலே! திருவெங்கைப்பிரானாரது மலையில்வாழ்கின்றவெமது தலைவிக்கு நின்குறை கூறியும் நேர்ந்திலளாயின், அவளது கும்பஸ்தனத்தின்ப நுகரும்பொருட்டு மடலேறுவாயாக, பின் புன்னைத்தடுப்பவரொருவருமிலர் என்பதாம்.

வி - ரை. மூலம்-ஜகதுத்பத்தி ஸ்திதிலயங்களுக்குக் காரணம். ஜகம் - தோன்றியழிதின் மாலையது. நேர்தல் - சம்மதித்தல். தளிரியல்-ம்ருதுஸ்வபாவை. (மெல்லியல்). கருங்கட்குடம் கவரத்தாலத்திவர்க என்பதற்கு, கரியகள்ளுக்குடத்தைக் கவரும்பொருட்டுப் பனைமரத்தேறுகவ்வன வேறொருபொருளுந் தோன்றியவாறு கண்டுகொள்க. யாவர் என்னும்வினா ஒருவருமிலர் என்னும் பொருடந்து நின்

றது. தலைவன் கூற்றுயின வெல்லாமடலேற்றிற்கும் பாங்கி கூற்று யினவெல்லாமடல் விலக்கிற்கு முரியவாமாறுகாண்க. (௧௧0)

தலைவியிளமைத் தன்மை பாங்கிதலைவற்குணர்த்தல்.

அதாவது—இவ்வாறு கூறின பாங்கி தலைவனைநோக்கி, அண்ணலே! எமது தலைவி பருவமுறாதவளா யிருக்கின்றனள், அவளதிளமைத்தன்மை யிற்றெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொடிக்கின்றகொங்கையிடைவருத்தாமுனம்பூவிரவி
முடிக்கின்றகங்குல்களம்வருத்தாமுனமுத்தலைவேல்
பிடிக்கின்றவங்கையர்வெங்கையிலேயிளம்பெண்ணினுக்கா
வடிக்கின்றவேலண்ணலேயென்கொலோசொல்வருந்துவதே.

ப-ரை. வடிக்கின்ற - வடித்த, வேல் - வேற்படையையுடைய, அண்ணலே - பெரியோனே, பொடிக்கின்ற கொங்கை - அரும்பாநின்ற கொங்கைகள், இடைவருத்தாமுனம் - இடையை வருத்தாததற்கு முன்பே, பூ-மலர்களை, விரவி முடிக்கின்ற - கலந்து முடிக்கின்ற, கங்குல் - இராப்போலுங்கூந்தல், களம் வருத்தாமுனம் - கண்டத்தை வருத்தாததற்கு முன்பே, முத்தலைவேல் பிடிக்கின்ற-முத்தலைச்சூலத்தைப் பற்றுகின்ற, அம்கையர் - அழகியகையினையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியிலுள்ள, இளம் பெண்ணினுக்கா - இளம்பெண்ணின் பொருட்டு, வருந்துவது - நீவருந்துவது, என்கொலோ - யாதுகாரணத்தானோ, (அறியேன்) சொல் - சொல்லக்கடவை, எ - று.

க-ரை. முத்தலைவேல் பிடிக்கின்ற வெங்கையராகிய சிவபெருமானாரது திருவெங்கைப்பதியிலுள்ள வெமதுதலைவிக்குக் கொங்கை கனவாமுன்னம் கூழையிருண்டு நெய்த்து நீளாமுன்னம் அவள் பொருட்டு நீவருந்துதல் யாதுக்கு? அதனைச் சொல்லக்கடவை என்பதாம்.

வி-ரை. பொடித்தல்-அரும்புதல். விரவல்-கலத்தல். கங்குல் - இரா; அது இராப்போலுங் கூந்தலையுணர்த்திற்று ; இது உவமையாகுபெயர், "நத்தங்கும்பிட்டகுழலீர்"என்றார் பிறரும். களம்-கண்டம்; இதுவடசொல். முத்தலைவேல் - திரிசூலம் எனினுமாம். அங்கை அகங்கையென்பதன் சிதைவெனக் கோடலுமமையும். வடித்தல் - கூர்மையாக்குதல். (௧௧௧)

தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்.

அதாவது—இவ்வாறு பாங்கி கூறக்கேட்ட தலைவன், தலைவி தன்னை வருத்திய செய்தியைப் பாங்கிக் குரையா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கருவுக்குமாமருந்தானார்தென்வெங்கைக்கநகவெற்பிற்
பொருவுக்குமாறொன்றிலாதெழுந்தோங்கியபூண்முலையாய்
திருவுக்குமாலைத்தருமெழில்கூர்நுந்திருந்திழைக்கு
மருவுக்குவாசனைபோல்வந்ததாலென்னைவாட்டுவதே.

ப - ரை. கருவுக்கு - பிறவியாகிய பிணிக்கு, மாமருந்து ஆனார் - மஹௌஷதமானவராகிய சிவபெருமானாரது, தென்வெங்கை - தென்வெங்கைப் பதியிலுள்ள, கநகவெற்பில் - பொற்பொருப்பில் வாழ்கின்ற, பொருவுக்கு - ஒப்புச் சொல்வதற்கு, மாறு ஒன்று இலாது - வேறொரு பொருளில்லை யென்னும்படி, எழுந்து ஓங்கிய - தோன்றியுயர்ந்த, பூண்முலையாய் - ஆபரணங்களையணிந்த கொங்கைகளையுடையவளே, திருவுக்கும் - திருமகளுக்கும், மாலைத்தரும்- விருப்பத்தை யுண்டாக்குகிற, எழில்கூர்-அழகுமிக்க, நும்-நுமது, திருந்திழைக்கு - பெண்ணுக்கு, என்னைவாட்டுவது - என்னை வருத்துங்குணம், மருவுக்கு - மருக்கொழுந்துக்கு, வாசனைபோல் - மணம்போல, வந்தது - உடன் பிறந்தது, ஆல் - இஃதோர் வியப்பிருந்தவா றென்னை, எ - று.

க - ரை. பிறவிப்பிணிக்குப் பெருமருந்தானவராகிய சிவபிரானாரது தென்வெங்கைப் பொன்மலைப் பூண்முலையாய்! திருமகளுக்கும் விருப்பத்தை யுண்டாக்குகிற பேரழகையுடைய நும் தலைவிக்கு என்னை வருத்துங்குணம் மருவுக்கு மணம்போலியற்கையாயுடன் றோன்றிற்றென்பதாம்.

வி - ரை. கரு - பிறவி; மாமருந்தானார் எனமேல் வருதலால் கருவென்பதைப் பிறவிப்பிணி யென்றுரைக்க லாயிற்று. கநகம் - பொன். வெற்பு - மலை. பொருவு - ஒப்பாதல். திருவுக்கும் என்னு மும்மையுயர்வு சிறப்பு. மால் - ஆசைப் பெருக்கம். கூர்தல் - மிகுதல். திருந்திழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்; திருத்தமாகிய பணியணிந்தவள் என்பது பொருள். மரு - மணம் அதனை யியற்கையா யமைந்துளதாதலால் இதனை மருவென்றே வழங்கலாயினர். மருவையுடைய கொழுந்தை மருவென்ற தாகுபெயர். (கக௨)

பாங்கிதலைமகள் செவ்வியருமை செப்பல்.

அதாவது—பாங்கி, தலைவியின் செவ்வியினருமையைத் தலைவனுக்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கிளிக்குஞ்சுவையமு தூட்டாளக்கிள்ளைசொற்கேட்டுவவாள்
குளிக்குஞ்சுனையிற்குளியாள்சிலம்பெதிர்கூவுகிலா
ளளிக்குந்தொழிலுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
றுளிக்குஞ்செந்தேன்மலர்த்தாராயவட்கென்னசொல்லுவனே.

ப - ரை. அளிக்கும் தொழில் உடையார் - (எல்லாவுலகங்களையும்) காக்குந்தொழிலையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில்வாழ்பவர், (அவரது) அணிவரைமேல் - அழகிய மலைமேல் வாழ்கின்ற, துளிக்கும் செந்தேன் - துளிக்கின்ற செந்தேனையுடைய, மலர்த்தாராய் - மலர்மாலையையணிந்தவனே, கிளிக்கும் - தான் வளர்க்கும் கிள்ளைக்கும், சுவை - இன்சுவையுள்ள, அமுது ஊட்டாள் - பாலூட்டாள், அக்கிள்ளைசொல் கேட்டு - அந்தக் கிளிமொழியைக் கேட்டு, உவவாள் - உவக்கிலள், குளிக்கும் சுனையில் - நாடோறுங் குளிக்கின்ற சுனைநீரில், குளியாள்-குளித்திலள், சிலம்பெதிர் கூவுகிலாள் - சிலம்பெதிர் கூவுகின்றிலள், (இவ்வாறிருக்கிற) அவட்கு - அத்தலைவிக்கு, என்ன சொல்லுவன்-நான்யாது சொல்வேன் எ-று.

க - ரை. திருவெங்கைப்பதியில் வாழ்கின்ற தலைவனே! எமது தலைவி, தன்கிளிக்குப்பாலூட்டாள், அதன் சொற்கேட்டுவவாள், சுனையாடாள், சிலம்பெதிர் கூவாள், இவ்வாறிருப்பாட்கு யானென்னசொல்வேன் என்பதாம்.

வி - ரை. மாதர்க்கு சுனைகுளித்தல், சிலம்பெதிர்கூவுதல்முதலியவற்றினும் கிளிக்கமுதூட்டலே மிகச்சிறந்த தொழிலென்பார், 'கிளிக்குஞ்சுவையமு தூட்டாள்'என முதற்கண்ணே கூறினர். கிளிக்கும் என்னுமும்மையுயர்வு சிறப்பு; இறந்ததுதழீஇயதுமாம். சுவையென்றாராயினும் அமுதெனமேல்வருதலால் இன்சுவையென்றுரைக்கலாயிற்று. உவத்தல்-மகிழ்தல். குளித்தல்-குடைதல். (மூழ்குதல்.) சிலம்பெதிர்கூவுதல்-மலைக்கெதிரழைத்தல்; இதுமகளிர்க்கோர்விளையாட்டென்பது, "சிலம்பெதிர்கூய்வருத்தம் பயின்றுகொல் லோவல்லிமெல்லியல் வாடியதே" என்னுந் திருக்கோவையாரானு மினிதுவிளங்கும். அளித்தல்-காத்தல். துளித்தல் - சிந்துதல். தார் - மாலை. என்ன சொல்லுவன் என்றது ஒன்றுஞ் சொல்லமாட்டிற்றிலேன் என்றவாறு. செவ்வி - சமயம். (ககரு)

தலைவன் செவ்வி யெளிமை செப்பல்.

அதாவது—பாங்கி செவ்வி யருமைசெப்பக் கேட்ட தலைவன் அவளை நோக்கி, தலைவியின் செவ்வி யெளிமை கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

தேன்வந்தகொன்றைச்சடையாளர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
கான்வந்தவேரிப்புனற்கோர்சிறுவழிகாட்டுதல்போல் [ற்
யான்வந்தவாறுசிறிதுரைத்தாலிடையீடின்றியே
தான்வந்துகுங்குமக்கொங்கைகளாரத்தழீஇக்கொளுமே.

ப - ரை. (பாங்கி-பாங்கியே,) தேன்வந்த - தேன்பொருந்திய, கொன்றை - கொன்றைமலர் மாலையைத்தரித்த, சடையாளர்-சடாபாரத்தையுடையவராகிய சிவபெருமானாது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, செழுஞ்சிலம்பில்-செழுமையாகிய மலையில்,கான்வந்த - காட்டிலுண்டாகிய, ஏரிப்புனற்கு - ஏரிநீருக்கு, ஓர் சிறுவழி காட்டுதல்போல் - ஒரு சிறு நெறிகாட்டல்போல, யான்வந்தவாறு - நான்வந்த செய்தியை, சிறிது உரைத்தால்-நீ சென்று சிறிதே சொல்லினையாயின், இடையீடு இன்றியே-தடையில்லாமலே, தான்வந்து - (நும் தலைவி) தானேவந்து, குங்குமக் கொங்கைகள் ஆர - குங்குமக் கொங்கைகள் பொருந்த, தழீஇக்கொளும் - (உன்னைத்) தழுவிக் கொள்வாள், எ-று.

க - ரை. சிவபெருமானாது திருவெங்கைச் செழுஞ்சிலம்பிலுள்ள பாங்கியே! நீ சென்று நுந்தலைவிக்கு என் வரவுரைத்தனையாயின், அவள் உன்னையிறுகத் தழுவிக்கொள்வாள் என்பதாம்.

வி - ரை கொன்றை-இருமடியாகு பெயர். கான் - காடு. ஏரி - பெருநீர்நிலை. இடையீடு - தடை. குங்குமக்கொங்கை - குங்குமச்சேறணிந்த கொங்கை. ஆர - மார்போடு மார்பு பொருந்த. தழீஇ - தழுவி. ஏரிநீருக்குச் சிறுவழிகாட்டின் அது அச்சிறு வழியை யறுத்துப் பெருவழியாக்கிப் பெருகியோடுவதுபோல, என்வரவைச் சிறிதுரைத்தால் அவளது பேரன்பு வெளியாகி உன்னையும் மார்போடிறுகத் தழுவிக்கொள்வாள் என்பதிச் செய்யுளின் பிண்டப்பொருள். ()

பாங்கி யென்னை மறைத்தபி னெளிதெண நகுதல்.

அதாவது—தலைவனிவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, நீயிருவீரும் என்னை மறைத்தீர்கள், இக்களவொழுக்கம்

நுங்கட்கு மிகவெளிதாமென நகையாடிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

குற்றாலமூர்தென் றிருவாலவாயுங்குடியிருப்புப்
பெற்றார்பவர்திருவெங்கையிலேயெங்கள்பெண்ணணங்கின்
முற்றாமுலையையென்னைமறைத்தின்பமுயங்குறுதல்
கற்றாவினைமறைத்தேயதன்பாலைக்கறப்பதுவே.

ப - ரை. குற்றாலமும் - திருக்குற்றாலமும், தென் திருவாலவாயும் - தென்றிருவாலவாயுமே, குடியிருப்பு பெற்று-தமது குடியிருப்பாகப்பெற்று, ஆர்பவர் - வாழ்பவராகிய சிவபெருமானாரது, வெங்கை வெற்பா - திருவெங்கை வெற்பனே, எங்கள் பெண் அணங்கின் - எமது தலைவியின், முற்றாமுலையை - இளமுலையை, என்னை மறைத்து - எனக்கொளித்து, இன்பம் முயங்குறுதல்-இன்பம் நுகர்தல், ஆவினை கன்றுமறைத்து - பசுவிற்குக் கன்றை மறைத்து, அதன் பாலைக்கறப்பதுவே-அதன் பாலைக்கறப்பதனையே நிகர்க்கும்,எ - று.

க - ரை. திருக்குற்றாலம் திருவாலவாய் என்னும் திருப்பதிகளைத் தமது குடியிருப்பாகப்பெற்று வாழ்பவராகிய சிவபெருமானாரது திருவெங்கை வெற்பனே! எமது தலைவியின் இளமுலைப்போகத்தை என்னையின்றி நீதுய்த்தல் கன்றின்றிப் பசுவின்பாலைக் கறத்தலோடொக்கும் என்பதாம்.

வி - ரை. திருவாலவாய் - தென்மதுரை. ஆர்தல் - வாழ்தல். பெண்ணணங்கு - பெண்டெய்வம். முற்றாமுலை யென்றமையால் இளமுலையென்பது பெறப்பட்டது. மறைத்தல் - ஒளித்தல். முயங்குறுதல் - நுகரப்புகுதல். கன்றை மறைத்துப் பசுவின்பாலைக் கறத்தலியலாததுபோல என்னை மறைத்து நீவிரின்ப நுகரப்புகின் அது முடியாத காரியமென்பதிச் செய்யுளின் பிண்டப்பொருள். (கக௫)

அந்நகைபொறாஅதவன் புலப்பல்.

அதாவது—இவ்வாறு பாங்கி நகையாடல் பொறாத தலைவன் அவளை நோக்கிப் புலந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தடாதுவிளங்கொளியாளர்திருவெங்கைத்தையனல்லாய்
படாதுவளர்முலையால்வருநோயைப்பரிகரித்து
விடாதுநகைசெய்திகழ்வதளற்றில்விழுந்தவரை
யெடாதுமருமமுருவச்செவ்வேல்கொண்டெறிவதுவே.

ப-ரை. தடாது - தடுக்கப்படாமல், விளங்கு - விளங்குகிற, ஒளி ஆனுர்-தேஜோரூபமானவராகிய சிவபிரானுரது, திருவெங்கை- திருவெங்கைப்பதியிலுள்ள, தையல் நல்லாய் - பெண்ணே, படாது வளர் முலையால் - சாயாமல் வளர்கின்ற நும் தலைவியின் கொங்கையால், வரும் - உண்டாகிய, நோயை - காமநோயினை, பரிகரித்து விடாது - ஒழித்துவிடாமல், நகைசெய்து - சிரித்து, இகழ்வது - எள்ளுவது, அளற்றில் விழுந்தவரை - சேற்றில் விழுந்தவரை, எடாது - எடுக்காமல், மருமம் உருவ - அவரது மார்பிற் பட்டுருவும்படி, செவ்வேல்கொண்டு எறிவதுவே - செவ்வேலினை யெடுத்தெறிவதனையே நிகர்க்கும், எ - று.

க-ரை. ஒளியுருவாகிய சிவபிரானுரது திருவெங்கைப் பதியிலுள்ள பெண்ணே ! நீ, சாயாமல் வளர்கின்ற நும் தலைவி கொங்கையாலுண்டாகிய காமநோயைப் பரிகரிக்காது நகைத்திகழ்தல், சேற்றில் விழுந்தவரை யெடாமல், அவர் நெஞ்சுருவ வேலெறிவதை நிகர்க்கும் என்பதாம்.

வி-ரை. தடாது விளங்கொளி - ஒரு பொருளாலுந் தடுக்கப் படாது விளங்கொளி. ஒளி - தீபம் எனினுமமையும்; மழை காற்று முதலியவற்ருல் தடைபடாது விளங்கு மொளியென்றவாறு. படுதல்-சாய்தல். "கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்,படாஅமுலை மேற்றுகில்" என்னுந் திருக்குறளினும் படுதல் இப்பொருட்டாதலறிக. முலையால் வருநோய் என்றமையால் காமநோயெனப்பட்டது. பரிகரித்தல் - ஒழித்தல். அளறு - சேறு. மருமம் - மார்பு. செவ்வேல்-கொல்லுலையிற் காய்ந்து சிவந்தவேல். (ககசு)

பாங்கி தலைவனைத் தேற்றல்.

அதாவது—இவ்வாறு கூறின தலைவனுக்கிரங்கினவளாகிய பாங்கி, (தலைவனை இதஞ்சொல்லி) தேற்ருநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தொடர்ந்தாளும்வெங்கைப்பழமலைவாணரச்சுந்தரர்சொற்
கடந்தாலுமென்சொற்கடவாள்வரிச்செங்கயன்மருட்டும்
விடந்தாழயிற்கண்மடமான்றருமயல்வெள்ளத்திலே
கிடந்தாகுலமுற்றிடேல்விடுவாயுன்கிலேசத்தையே.

ப-ரை. (அண்ணலே - பெரியோனே,) தொடர்ந்து - ஆன்மகோடிகளை விடாதுபற்றி, ஆளும் - ஆண்டருள்கின்ற; வெங்கைப்

பழமலைவாணர்—, அ - அந்த, சுந்தரர் சொல் - சுந்தரர்சொல்லை, கடந்தாலும் - அதிக்ரமித்தாலும், வரி - கீற்றுக்களையுடைய, செங்கயல் - செங்கயல்களை, மருட்டும் - வெருட்டுகிற, விடம் தாழ் - நஞ்சு தங்கிய, அயில்கண் - வேல்போலுங் கண்களையுடைய, மடமான் - மடமான்போல்வாள், என் சொல் கடவாள் - என் சொல்லைக் கடக்கமாட்டாள், (ஆதலால்) தரும் - அவள் தந்த, மயல் வெள்ளத்திலே கிடந்து - மையற் பெருக்கில்வீழ்ந்து, ஆகுலம் உற்றிடேல் - வருத்த மடையற்க, உன் கிலேசத்தை விடுவாய் - உன் மனோதுக்கத்தை விடக்கடவை, எ - று.

க-ரை. திருவெங்கைவாணர் சுந்தரர் சொல்லைக் கடந்தாலும் எமது தலைவி யென்சொல்லைக் கடவாள, ஆதலாலவளை யுனக்காக்கக்கடவேன், நீ யுன் மனக்கிலேசத்தை விடுவாயாக என்பதாம்.

வி - ரை. தொடர்ந்தாளல் - எழுமையுந் தொடர்ந்தாளுதல்; இது இறைவற் கியல்பாகிய பேரருளின் காரியம். "பல்பிறவித் தொகை தணித்தற்கென்னை யாண்டுகொண்டான்" என்றார் பெரியாரும். இக்குணம் சுந்தரரைத் தடுத்தாண்டமையா லினிது விளங்கும். சுந்தரர் சொற்கடவாமைக்கு பரவைதன் புலவிதீர்ப்பான் சமுதா கண்படுக்கும் பானாளிரவினிற் றூதுசென்றமையும், குண்டையூர் நெற்கொடு செலுத்தினமையுமே சான்றாகும். கடந்தாலும் என்றமையால் கடவாமை வற்புறுத்தப்பட்டது. செங்கயல் - செஞ்சேல். வரி - நீட்சியுமாம். விடம்தாழ் என்பதற்கு விடமும் தாழும் எனினுமாம். மடமான் - உவமையாகுபெயர். மயல் - மையல்.(காமமயக்கம்) வெள்ளம் - பெருக்கு. ஆகுலம் - வருத்தம்; இது வடசொல். கிலேசம் - வடசொல்; வ்யஸநம் என்பது பொருள். (கசஎ)

பாங்கிகையுறையேற்றல்.

அதாவது—பாங்கி தலைவனது கையுறை யேற்றுக் கூறுகிற்றல்.

அதற்குச் செய்யுள்,—

ஏகநிலைத்தவுமைபாகன்வெங்கையிமயவெற்பின்
மாகநிலத்திலரிதாயவின்பம்வளர்ந்தெழுமே,
பாகநிலப்பிறைவாணுதலாடன்பரவையல்குற்
போகநிலத்திலிட்டாளையனேயுன்கைப்பூந்தழையே.

ப - ரை. ஐயனே - தலைவனே, உன்கை - உன்கையதாகிய, பூதழை - பொலிவாகிய தழையினை, பாகம் - பிளவாகிய, நில - சந்

ரிகையையுடைய, பிறை - பிறைபோன்ற, வாள் - ஒளிபொருந்திய, நுதலாள் - நெற்றியையுடையவள், தன் - தனது, பரவை - பரப்பாகிய, அல்குல் - அல்குலென்கிற, போகநிலத்தில்-போகபூமியில், இட்டாள் - வைத்துக்கொண்டாள், (ஆதலால் இனி) ஏகம் நிலைத்த - அத்விதீயம் நிலைபெற்ற, வெங்கை உமைபாகன் - வெங்கையிலுள்ள உமாதேவிபங்கனது, இமயவெற்பில் - இமயமலையில், மாகநிலத்தில்- சுவர்க்கலோகத்தினும், அரிது ஆய இன்பம் - அரிதாகிய பேரானந்தம், வளர்ந்து எழும் - வளர்ந்தோங்கும், எ - று.

க - ரை. ஐயனே! உன்கைப்பூந்தழையை யெமது தலைவிதன் போகநிலத்தி லிட்டாளாதலால், இனியுனக்கு விண்ணுலகவின்பத்தினும் மேலாயவின்பம் வளர்ந்தோங்கும் என்பதாம்.

வி - ரை. ஏகம் - அத்விதீயம்; (ஒன்ருந்தன்மை) ஒப்பின்மையெனினுமாம். மாகம்-ஆகாயம்; மா, கம் எனப்பிரித்து பெரிதாகிய ஆகாயம் என்றுரைத்தலுமாம். பெரிதாகிய ஆகாயம் என்றது ஏனைய நான்கு பூதத்திற்கும் இடந்தருதலாகிய பெருமை நோக்கியென்க. மாகநிலம்-விண்ணுலகம். பாகம் - பிளவு. நில-நிலாவென்பதன் குறுக்கம். பரவை - பரப்பு. போகநிலம்-போகபூமி. பூ - பொலிவு. (கக அ)

கிழவோனாற்றல்.

அதாவது—பாங்கிகையுறை யேற்றமையால் தலைவன் காமநோயைப் பொறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வன்மொழிபோலவுரைத்தவெல்லாமிந்தமங்கைநல்லா
ளின்மொழியேமனத்தன்புவிடாமலிசைத்தமையான் [ந்த
மென்மொழிவாய்மைத்திருத்தொண்டர்தாமுனம்விட்டெறி
கன்மொழிமாமலரன்றேதிருவெங்கைக்கண்ணுதற்கே.

ப - ரை. இந்தமங்கைநல்லாள் - இந்தமாதுநல்லாள், வன்மொழிபோல - கடினவார்த்தைபோல, உரைத்த எல்லாம் - சொன்னவையாவும், மனத்து அன்புவிடாமல் - மனத்திலன்பு நீங்காமல், இசைத்தமையால் - சொன்னமையால், இன்மொழியே - இன்சொல்லே, மெல்மொழிவாய்மை - மென்சொல்லும் உண்மையுமுடைய, திருத்தொண்டர் - திருத்தொண்டராகிய சாக்கியநாயனர், முன்னம் விட்டெறிந்த - முற்காலத்தில் விட்டெறிந்த, கல் - கல்லும், திருவெங்கை-திருவெங்கையிலெழுந்தருளிய, கண்ணுதற்கு-நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு, மொழி - புகழ்ந்துரைத்தற்குரிய, மா - பெருமை பொருந்திய, மலர் அன்றே - மலராயிருந்ததன்றே, எ-று.

க-ரை. இந்த மங்கைநல்லாள் வன்சொற்போலச் சொன்ன வையாவும் மனத்தன்பு விடாமற் சொன்னமையால் இன்சொல் லேயாம், முற்காலத்துச் சாக்கிய நாயனரெறிந்தவலிய கற்கள், திரு வெங்கைக் கண்ணுதற்கு மெல்லிய மலர்களாயினவன்றோ வென்ப தாம்.

வி-ரை. இசைத்தல் - சொல்லுதல். வாய்மை - உண்மை. முனம் விட்டெறிந்த கன்மொழி மாமலரன்றோ திருவெங்கைக்கண் ணுதற்கேயென மேல் வருதலால் திருத்தொண்டர் என்றது சாக் கிய நாயனரை யென்றறிக. (கககக)

இறைவன்றனக்குத் துறைநேர்பாங்கி யிறைவிக்கவன் குறையுணர்த்தல்.

அதாவது—இறைவற்குக் குறைநேர்ந்த பாங்கி, தலைவிக்கவன் குறையுறவறிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

வத்திரமைந்துடையார்வெங்கைவாணர்வரையணங்கைப்
பத்திரங்கொண்டருச்சித்தேவரங்கொளும்பான்மையரை
யொத்திரங்குள்ளமொடுபூந்தழைக்கையொருவரின்று
சித்திரமொன்றனையாயடைந்தார்நந்திருப்புனத்தே.

ப-ரை. சித்திரம் ஒன்று அனையாய் - ஒரு சித்திரப்பாவை யை நிகர்த்தவளே, வத்திரம் ஐந்து உடையார் - ஐந்து திருமுகங்க ளையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில்வாழ்பவர், (அவரது) வரை - மலையிலுள்ள, அணங்கை - தெய்வத்தை, பத்திர ம்கொண்டு - பத்திரத்தால், அருச்சித்து - அர்ச்சனைசெய்து, வரம் கொள்ளும் பான்மையரை ஒத்து - வரம் பெறுந் தன்மையர் போ ன்று, இரங்கு உள்ளமொடு - இரங்கின மனத்துடனே, பூதழைக் கை ஒருவர் - பொலிவாகிய தழைக்கையராகிய வொருவர், நம் திரு ப்புனத்தே அடைந்தார் - நமது அழகிய புனத்திடத்தே வந்தனர், எ-இஃதோர் வியப்பிருந்தவா றென்னை, எ-று.

க-ரை. சித்திரமொன்றனையாய்! வெங்கைவாணர் வரைய ணங்கைப் பத்திரத்தா லர்ச்சனை செய்து வரம் பெறுவார்போல, தழைக்கையராகிய வொருவர் இன்று நம் புனத்தையடைந்தா ரென் பதாம்.

வி-ரை. வத்திரம் - முகம்; இது வக்த்ரம் என்னும் வடசொ ற்றிரிபு. அணங்கு - தெய்வப்பெண். வரையணங்கு - மலையரமகளிர்

எனினுமாம். பத்திரம் - தழை. (பச்சிலை). பான்மை - தன்மை. இரங்குள்ளம் - இரக்கங்கொண்ட மனம். இன்று அடைந்தார் என்றமையால் இதற்கு முன்னெல்லாம் அடைந்திலரென்றதாயிற்று. இதுகாறும் வாராதவொருவரின்று வரப்பெற்றமையால், நந்திருப்புனம் என்றாள். ஒருவர் என்றது ஒப்பற்றவர். வெங்கைவாணர் வரையணங்கைப் பத்திரங்கொண் டருச்சித்து வரங்கொளும் பான்மையரையொத்து ஒருவரின்று நந்திருப்புனத்தே யடைந்தார் என்றது, வெங்கைவாணர் வரையணங்காகிய வுன்னை யர்ச்சித்துத் தம் மனோரதம் நிறைவேற்றிக்கொள்ளுங் கருத்துடையராய் வந்தாரென்றவாறு. ஏ - வியப்பிடைச்சொல். (கஉ0)

இறைவியறியாள் போன்று குறியாள்கூறல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவி ஒன்றுமறியாதாள் போன்று மனத்திற் கருதாத வேறொன்றைக் கருதிக் கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,

வேலுக்குமம்புக்குமாறுகொண்டோடும்விழிமடவாய்
மாலுக்குநன்மனையாண்மனையாகிவழங்கவல்ல
கோலுக்குவல்லவண்ணாமலையார்கட்டுகோயிலகப்
பாலுக்குவந்ததுகண்டாய்நம்வெங்கைப்பழமலையே.

ப - ரை. வேலுக்கும் - வேற்படைக்கும், அம்புக்கும் - கணைக்கும், மாறுகொண்டு - பகைமைகொண்டு, ஓடும் - ஓடாநின்ற, விழி - கண்களையுடைய, மடவாய் - மாதே, மாலுக்கு - திருமாலுக்கு, நல் மனையாள்-நல்ல மனையாட்டியாகிய திருமகளது, மனை ஆகி - வீடாகி, வழங்கவல்ல - வழங்கல்வல்ல, கோலுக்குவல்ல - செங்கோலுங்குவல்ல, அண்ணாமலையார்கட்டு - அண்ணாமலையார் கட்டின, கோயில் அகப்பாலுக்கு - கோயிலின் உள்ளிடத்துக்கு, நம்வெங்கைப் பழமலைவந்தது - நமது வெங்கைப் பழமலை நாதர்வந்தார்.

க - ரை. வேலினையும் அம்பினையும் பகைத்து அவற்றை வெல்லவோடுகிற கண்களையுடைய மாதே! நம் வெங்கைப் பழமலைநாதர், அண்ணாமலையார் கட்டின கோயிலுக்கு எழுந்தருளினர் என்பதாம்.

வி - ரை. ஓடும் விழியென்றது வேலம்புகளை வருத்தவோடும் விழியென்றற்கு. மாலுக்கு நன்மனையாள் மனையென்றது செல்வப் பெருக்குள்ள மனையென்றபடி. வழங்கல்-கொடுத்தல். வழங்கவல்ல என்றமையால் கொடையிற் சிறந்தோன் என்பது விளங்கும். செங்

கோலுக்கு வல்ல என்றமையால் நடுவு நிலைமைய னென்பது தோன்றிற்று. அண்ணாமலையார் - அண்ணாமலை ரெட்டியார்: இவரது வரலாறு நீண்டு விரிப்பிற் பெருகுமாதலான் விடுக்கலாயிற்று. வெங்கைப் பழமலையென்றதற் கேற்ப வந்ததென வஃறிணை முடிபேற்று நின்றது. ஆயினும் பழமலை நாதர்வந்தார் என்பதே கருத்தாகக்கொள்க. கண்டாய்-முன்னிலையசை. பாங்கி வினயதற்கு நேர்விடை கூறாது வேறொன்றைத் தலைவி கூறுதலெற்றுக்கெனின், பூந்தழைக்கை யொருவரின்று நந்திருப்புனத்தே யடைந்தார், அவர்க்கு யாமென் செய்வோ மென்றவழி, இவள் பெருநாணின ளாதல்லானும், அவன் கருத்திற் கிணங்கச்செய்வோ மென்றறகாதாதலானும், கற்புக் கடன் பூண்டவளாதலானும், மறுக்கத் தகாதாதலானும், காமமொரு பாலும் நாணொருபாலு மீர்த்துச் சேறலான்ஒருபாற் சாரவொண்ணாமையானும்,என்செய்துமென மனங்கவன்று நடுவாக நின்றுளாகலின் பாங்கி வினவுக்குச் செவ்வனே விடை கூறாது அக்கணத்துத் தன் மனத்துத் தோன்றிய தொன்றைக் கூறலித்துறைக்கு மரபாதலி னென்க.

இவ்வாறு கூறாது வாளாவிருத்தலமையர்தோ வெனின், வாளாவிருப்பின் பாங்கி கூறியதற் குடம்பட்டாளாம். படின்மேற்கூறிய கிளவித்துறைகள் பலவற்றையு நீக்கல் வேண்டுதலான், இவ்வாறு அறியாள்போன்று வேறொன்று கூறலே மரபுந் தகுதியுமாமென்க.

பாங்கியிறையோற் கண்டமை பகர்தல்.

அதாவது—இவ்வாறு வேறொன்று கூறிய தலைவியை நோக்கி, தான் தலைவற்கண்டமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

போரையும் வேலையு மாற்றிதன் வெங்கையிற் போதக்
கண்டேன், வாரையுங்கீள்பெருங் கொங்கையின் மேன்மனம்
வைத்திருண்ட, காரையுஞ் சீறு மலர்க்குழ லாய்கரி யுங்கிரியு
ம், பேரையுஞ் சீரையுங் கேட்டுமுன்போந்த பெருந்தகையே.

ப - ரை. இருண்டகாரையும்-இருண்ட மேகத்தையும், சீறும்-கோவிக்கிற, மலர் குழலாய் - மலரை யணிந்த கூந்தலையுடையாளே, வாரையும் - கச்சினையும், கீள் - கிழிக்கின்ற, பெருங்கொங்கையின் மேல் - பெருந்தனத்தின்மீது, மனம் வைத்து - கருத்துவைத்து, கரியும் - யானையையும், கிரியும்-பன்றியையும், பேரையும் - பெயரையும், சீரையும் - சீரினையும், கேட்டு - வினவாநின்று, முன்போந்த -

முன்பு வந்த, பெருந்தகை - பெருந்தகையானவன், போரையும் - போரினையும், வேளையும்-(போர் செய்ய வந்த) மன்மதனையும், மாற்றி - எரித்தயனுகிய சிவபெருமானது, வெங்கையில் - திருவெங்கை நகரத்தில், போதக்கண்டேன் - வரக்கண்டேன், எ - று.

க - ரை: இருண்ட காரையுஞ் சீறுமலர்க்குழலாய்! முன்பு நம் பெருந்தனத்தின்மீது மனம்வைத்து, யானை முதலியவற்றை வினவி வந்த பெருந்தகை, இன்று மதநாரியாகிய சிவபிரானது திருவெங்கை நகரில் வரக்கண்டேன் என்பதாம்.

வி - ரை. மாற்றி - வினையாலணையும் பெயர். தன் - சாரியை. வாரையும் என்னு மும்மை யுயர்வு சிறப்பு; இறந்தது தழீஇயதுமாம் கீளல் - கிழித்தல். கார் - பண்பாகுபெயர். சீறுதல் - கோவித்தல். சீர் - சிறப்பு. பெருந்தகை - பெருங்குணமுள்ளவன். (கஉஉ)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

அதாவது—இறைவற் கண்டமை பாங்கி பகரக்கேட்ட தலைவி, அவளை நோக்கி, நீ யிவ்வாறு நிந்தைகூறத் தகாதென்றுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்—,

நாரணனுன்முகன் காணார்சதானந்தர் ஞானபரி
பூரணர்வெங்கைப்பழமலைவாணர்பொருப்பின்மலர்த்
தாரணிவார்குழலாய்நிந்தைகூறத்தகாதுகண்டாய்
காரணமின்றிக்கலுழ்வாரொருவரைக்கண்டுகொண்டே.

ப - ரை. மலர்த்தார் - பூமாலையை, அணி - அணிந்த, வார்குழலாய்-நீள்குழலாய், நாரணன்-திருமாலும், நான்முகன்-பிரமனும், காணார் - காணவொண்ணாதவர், சதாநந்தர் - சதாநந்தத்தையுடையவர், ஞானபரிபூரணர் - பரிபூர்ண ஞானத்தையுடையவர், வெங்கைப்பழமலைவாணர்—, (அவரது) பொருப்பில் - மலையினிடத்தே, காரணம் இன்றி - ஹேதுவில்லாமல், கலுழ்வார் ஒருவரை - கலங்குவாரொருவரை, கண்டுகொண்டு - பார்த்து, நிந்தை - நிந்தனையை, கூறத்தகாது - சொல்லத்தகாது, எ - று.

க - ரை. மலர்த்தாரணி வார்குழலாய்! நாரண னுன்முகன் காண வொண்ணாதவரும், சதாநந்தரும், ஞான பரிபூரணருமாகிய வெங்கைப்பழமலைவாணர்மலையில், காரணமின்றிக் கலுழ்வாரொருவரைக் கண்டு, இப்படிப்பட்ட பழிச்சொற்களைக் கூறுதல் தகாது என்பதாம்.

வி - ரை. நாரணன் - நாராயணன் என்பதன் சிதைவு; மரூஉ வெனினுமாம். இதற்கு, நாரத்தை யிடமாகக்கொண்டவன் என்றும், அதற்குத்தானிடமா யிருப்பவனென்றும் பொருள் கூறுவர் வடநூலார். நாரம் - நரசமூகம். (உயிர்த்தொகை) நாரம் நீராதலால் நீரை யிடமாகக் கொண்டவனென்றலு மொன்று. சதாநந்தர் - இடையீடில்லாவின்புடையவர். பரிபூரணர்-மிகுநிறைவுள்ளவர். பொருப்பு - மலை. தார்-மாலை. வார்-நீட்சி. கலுழ்தல்-மனங்கலங்குதல். (கஉந)

பாங்கியென்னை மறைப்பதேன்னெனத்தழால்.

அதாவது—பாங்கி, இவ்வாறு மறைத்துக்கூறிய தலைவியை நோக்கி, உனக்கு நான் வேறோவென்று உவகையாய்த் தழுவிக்கொண்டு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மேலில்லையென்னவுயர்ந்தார்திருவெங்கைவெற்பிலுள
மாலில்லையென்னவென்னைமறைத்தாய்திருமாலுறங்கு
மாலிலையன்னவயிற்றணங்கேயருந்தாய்க்கொளித்த
சூலில்லைநெஞ்சறியாவஞ்சகமில்லைச்சொல்லுதற்கே.

ப - ரை. திருமால்உறங்கும் - திருமால் நித்திரை செய்கிற, ஆல்இலை அன்னவயிறு-ஆல்இலைபோலும் வயிற்றினையுடைய, அணங்கே - மாதே, மேல்இல்லையென்ன-தமக்கு மேலோர் தெய்வமில்லையென்னும்படி, உயர்ந்தார் - உயர்ந்தவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், உள்ளம் - உன்மனத்தில், மால் இல்லையென - ஆசையில்லை யென்னும்படி, என்னை மறைத்தாய் - எனக்கொளித்தனை, அருந்தாய்க்கு ஒளித்த - அருமையாகியதாய்க்கு ஒளித்த, சூல்இல்லை - கருப்பமில்லை, நெஞ்சு அறியா-மனமறியாத, வஞ்சகம் இல்லை - வஞ்சமில்லை, சொல்லுதற்கு-சொல்லுவதற்கு, எ - று.

க - ரை. திருமாலுறங்கும் ஆலிலையன்ன வயிற்றணங்கே! நீயென்னைமறைப்பது தகாது, தாய்க்கொளித்த சூலில்லை, நெஞ்சறியா வஞ்சமில்லை யாதலாலென்பதாம்.

வி - ரை. திருமால் - ஸ்ரீமந்நாராயணன். ஆலிலை-வடபத்ரம். மேல்-பண்பாகுபெயர். மால்-தலைவன் மேலாசை; "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" எனவும், "அன்னை பிதா இல்லாததாலல்லவோ" என்றும், "மாதாவினைப் பிதுவை" என்றும், "அன்னை தயை

யும்' என்றும் ஆன்றோர் தாயினருமை பலபடக் கூறலால், இவரும் 'அருந்தாய்' என்றார். "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" என மேலோர் கூறியிருத்தலால் இவரும், 'நெஞ்சறியா வஞ்சக மில்லை' என்றார். (கஉ௪)

பாங்கிகையுறைபுகழ்தல்.

அதாவது—பாங்கி, தலைவனது கையுறையேற்று, அதனைப்புக ழாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீரையணியுந்திருச்சடையார்வெங்கைநித்தர்வெற்பிற்
றாரையணியுமதன்றேர்கண்டம்மதழைத்ததுகாண்
வாரையணியுமுகிண்முலையாயணிவாய்த்தவல்குற்
றேரையணியுந்தகுதியதாமிந்தச்செந்தழையே.

ப - ரை. நீரை - கங்கையை, அணியும் - தரித்த, திருச்சடையார் - அழகிய சடையையுடையவர், வெங்கை நித்தர் - திருவெங் கைப்பதியிலெழுந்தருளிய சாசுவதர், (அவரது) வெற்பில் - மலையில் உள்ள, வாரை அணியும் - வாரினையலங்கரிக்கிற, முகிழ்முலையாய் - தாமரை யரும்பு போலுந்தனத்தை யுடையாளே, தாரை அணியும் - மலர்களையலங்கரிக்கிற, மதன்தேர்கண்டு-மன்மதரதத்தைக்கண்டு, தழைத்தது - செழித்தது, (ஆதலால்) இந்தச்செந்தழை - இந்தச் செந்தழையானது, அணி வாய்த்த - அழகு பொருந்திய, அல்குல் தேரை-அல்குலாகியரதத்தை, அணியுந்தகுதியதுஆம் - அலங்கரிக் கும் தகுதியை யுடையதாகும், எ - று.

க - ரை. கங்காதரராகிய சிவபெருமானரது வெங்கைமலையில் வாழ்கின்றமாதே! இந்தச் செந்தழை யானது நமது அல்குற்றேரை யலங்கரிக்குந்தகுதியுடையது, இது தென்றற் சாற்றுப்பட்டு மிகச் செழித்தது, இதனையாமேற்றுக் கோடற்குதியாமென்பதாம்.

வி - ரை. அணியும் திருச்சடையார் என மேல் வருதலால் நீர் என்றது ஆகாயகங்கையை; அது உலகமுழுதும் அழிக்காமல் தன் னிடத்தடக்கினதனால் அச்சடையைத்திருச்சடை என்றார். தார் - மலர். மதன்றேர் - தென்றற்காற்று. இதன்பரிசத்தால் எல்லாத் தழைகளுந் தழைத்த லியல்பாதலால், 'மதன்றேர் கண்டம்மதழைத் தது' என்றார். மதன்றேர்கண்டு தழைத்ததழை அல்குற்றேரை யல ங்கரிப்பது தகுதியாமென்றற்கு அல்குற் றேரையணியுந் தகுதிய

தாமிந்தச் செந்தழை தாரை யணியு மதன்றேர் கண்டு தழைத்தது என்றாள். அம்ம, காண் என்பன அசைகள். (கஉரு)

தோழி கிழவோன்றுயர் நிலை கிளத்தல்.

அதாவது—பாங்கி தலைவனது துயர் நிலையைத் தலைவிக்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வளங்கனிவெங்கைப்பழமலைவாணர்வரையினவ
ருளங்கனிவெண்மருப்போர்மதயானையொளிர்நுதலாய்
களங்கனியன்னமடப்பிடிவாயிற்கனிந்துவிழும்
விளங்கனிநல்கக்கண்டானாரஃதுண்விளங்கனியே.

ப - ரை. ஒளிர்நுதலாய் - விளங்குகின்ற நெற்றியையுடையவளே, வளம்கனி - எல்லா வளங்களுமிகுந்த, வெங்கைப்பழமலைவாணர் - திருவெங்கைப் பழமலைவாணரது, வரையினவர் - வெற்பினையுடையவர், உள்ளம் - தம்மனம்போல, கனி - முதிர்ந்த, வெண் மருப்பு - வெள்ளைக்கொம்பினையுடைய, ஓர் மதயானை ஒரு மதயானையானது, களங்கனி அன்ன - களாக்கனியை நிகர்த்த, மடப்பிடிவாயில் - இளமைபொருந்திய பெண்யானையின் வாயில், கனிந்துவிழும் - கனிந்துவிழுகின்ற, விளங்கனி நல்கக்கண்டு - விளாம்பழத்தை யூட்டக் கண்டு, அஃது - அந்த யானையானது, உண் - உண்ட, விளங்கனி ஆனார் - விளாம்பழமேயாயினர்.

க - ரை. மாதே! வெங்கைப் பழமலைவாணரது மலையில் வாழ்பவராகிய தலைவர் ஒருமதயானையானது, களாப்பழத்தை நிகர்த்த தன் பிடியின்வாயில் ஒரு விளாம்பழத்தை யூட்டக்கண்டு அந்த யானையுண்ட விளாங்கனியேயாயினர் என்பதாம்.

வி - ரை. முதலடியிலுள்ள கனி மிகுதிப்பொருட்டு. இரண்டாமடியிலுள்ள கனி முதிர்ச்சிப்பொருட்டு. 'வளங்கனி வெங்கைப் பழமலைவாணர் வரையினவர்' என்றது தலைவனை. மருப்பு - கொம்பு. ஒளிர்தல் - பிரகாசித்தல். மடம் - இளமை. பிடி - பெண்யானை. விழும் என்றது தானே வீழ்கின்ற என்றபடி. 'அஃதுண் விளங்கனி யானார்' என்றது யானையுண்ட விளங்கனி அதன் வயிற்றிற் சென்று தங்கி உள்ளீடு முழுதும் சமித்த பிறகு ஓடுமாத்திரம் அதோ முகத்தால் வெளிப்படுதல்போல தலைவனும் தன்னுள்ளீடாகிய 'வுயிரில்லாமல் வெற்றுடம்பாயினான் என்றவாறு. (கஉசு)

மறுத்தற்கருமைமாட்டல்.

அதாவது—இவ்வாறு கூறிய சொற்களுக்கு விடையின்மையால், இனி அவர் வரின் என்னால் மறுத்தற் கரிதெனக் கூறுகிற்றல். (மாட்டல்-பொருத்தல்.) அதற்குச்செய்யுள்,—

நந்தாவொளியர்திருவெங்கைநாட்டினமக்களிப்பச்
சந்தாடவியுளிறைவர்கொய்யாப்பைந்தழையுமில்லை
முந்தாவவர்க்கெதிர்நானுரையாப்பொய்ம்மொழியுமில்லை
வந்தாலினியெனக்கில்லைபெண்ணேயொருவார்த்தையுமே.

ப-ரை. பெண்ணே-மாதே, நந்தா ஒளியர் - கெடாதவொளியையுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை நாட்டில்—, நமக்கு அளிப்ப-நமக்குக் கொடுக்கும் பொருட்டு, இறைவர்-தலைவர், கொய்யா - பறிக்காத, பைந்தழையும் - பசுந்தழையும் - சந்தம் அடவியுள் - சந்தனக் காட்டில், இல்லை—, முந்தா-முன்பு, அவர்க்கு எதிர் - அவர்க்கெதிரே, நான் உரையா - நான் சொல்லாத, பொய்மொழியும்-பொய்யாகிய வார்த்தைகளும், இல்லை—, இனிவந்தால் - இனி அவர் வந்தால், ஒரு வார்த்தையும் - ஒரு சொல்லும், எனக்கு இல்லை - என்னிடத்திலில்லை, எ - று.

க-ரை. மாதே! ஒளி யுருவினராகிய சிவபெருமானாரது வெங்கைநாட்டில், நமக்குக் கொடுக்கும் பொருட்டுத் தலைவர் பறிக்காத பைந்தழையுமில்லை, அவருக்கு நான் சொல்லாத பொய்ம்மொழியுமில்லை, இனி அவர்வரின், அவரோடு நின்று பேசுவதற்கு என்னிடத்தொரு பேச்சுமில்லை யென்பதாம்.

வி-ரை. சோம சூரியாக்கினிக ளொளிமழுங்கினும் மழுங்காதவொளியுருவின ராதலால் இறைவரை 'நந்தாவொளியர், என்றாள். ஒளி யென்பதற்குக் கீர்த்தியென்னும் பொருளுண்மையால் கெடாதகீர்த்தியை யுடையவர் எனினும் பொருந்தும். நந்துதல்-கெடுதல். அளித்தல் - கொடுத்தல். சந்தம் அடவி - சந்தனமரக்காடு. (காடு - சோலை) அடவி - வடசொல். இறைவர் கொய்யாப் பைந்தழையு மில்லை, என்றதனால் எல்லாத்தழையுங் கொய்துவிட்டாரென்றும் நானுரையாப் பொய்ம்மொழியுமில்லை, என்றதனால் எல்லாப்பொய்யுஞ் சொல்லிவிட்டேனென்றும் பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க. ஏ - இரங்கற்குறிப்பு. (கஉஎ)

தலைவன்குறிப்புவேறாக நெறிப்படக்கூறல்.

அதாவது—பாங்கி, தலைவனது குறிப்புநோக்குங்கால், நம்பக்கல் இரப்பவன்போற் றோன்றவில்லை, வேறு நினைப்பினனாகத் தோன்றுகின்றதென்று ஒழுங்குபெறக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்;—

போருடையானுடையார்வெங்கைவாணர்பொருப்பின்மணித்
தேருடையார்கருத்தேதோவறிந்திலந்தேமொழியா
யாருடையானினும்வேம்புடையானினுமையபனைத்
தாருடையானலனோமதிமானெனச்சாற்றினரே.

ப - ரை. தேம்மொழியாய் - தேன்போலும் இன்சொல்லையுடையவளே, போர்உடை-போர்த்தொழிலையுடைய, ஆன் உடையார்-இடபவாகநத்தையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில்வாழ்பவர், (அவரது) பொருப்பில் - மலையில்வாழ்கின்ற, மணி - நவமணிகள்பதித்த, தேர்உடையார் - தேரையுடையவராகிய நம் தலைவரது, கருத்து-எண்ணம், ஏதோ-யாதோ, அறிந்திலம் - அறிந்திலேம், (என்னெனின்) ஆர் உடையானினும் - ஆத்திமாலையையுடையவனினும், வேம்பு உடையானினும் - வேப்பமாலையுடையவனினும், மதிமான் - புத்திமானாயிருப்பவன், ஐய - அழகினையுடைய, பனைத்தார் உடையான் அல்லனோ - பனைமாலையை யுடையவனல்லவா, எனச்சாற்றினர் - என்று சொல்லினராதலால், எ - று.

க - ரை. மாதே! இடபவாகநத்தை யுடையவராகிய திருவெங்கைவாணரது மலையில் வாழ்பவராகிய நம் தலைவர் ஆத்திமாலை, வேப்பமாலை என்பவற்றையுடையாரினும் பனைமாலையையுடையவ னல்லவா புத்திமானென்றார், ஆதலால் அவர் கருத்தின்னதென்றறிந்திலே மென்பதாம்.

வி - ரை. போர் - போர்த்தொழில். அதனையுடைய தென்பது தோன்ற, 'போருடையான்' என்றார். மணித்தேர் - அழகிய தேர் எனினுமமையும் மணித்தேருடையார் என்றது தலைவரை. ஆர், வேம்பு, பனையென்பன ஆகுபெயர்கள். ஆருடையான் - சோழன். வேம்புடையான் - பாண்டியன். பனைத்தாருடையான்-சேரன். மதி-புத்தி. சாற்றுதல் - சொல்லுதல். ஐ - அழகு. இவ்வாறு கூறலால் தலைவன் மடலூரக்கருதினன் போலுமென்றவாறாயிற்று. தேமொழி என்றது தலைவியை. ஆருடையான்-சிவபெருமானென்றும், வேம்புடையான் விநாயகன் என்றும், பனைத்தாருடையான் பலதேவனென்றும் வேறொரு பொருடோன்றுமாறுமாறறிக. ஏ - வியப்பு. (கஉஅ)

தலைவியை முனிதல்.

அதாவது—இவ்வாறு கூறிய பாங்கியைத்தலைவி வெறுத்துரையாடுதலும், பாங்கி தலைவியை முனிந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்;—

மறியேறியகைத்திருவெங்கைவாணர்மணிவரைமேற்
சிறியேனம்மெய்களிரண்டினும்வாழ்ந்திடுஞ்செய்யவுயி
ரெறியேரயில்விழியாயின்றுகாறுமிரண்டென்பதை
யறியேனறிந்தனனே லுரையேனிவ்வடாதனவே.

ப - ரை. எறி - (பகைவர்மீது) எறியப்படுகிற, ஏர் - அழகிய, அயில் - வேற்படைபோன்ற, விழியாய்-கண்களையுடையவளே, மறிஏறியகை - மறியேறிய திருக்கரத்தையுடைய, திருவெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, மணிவரைமேல் - அழகாகிய மலையின்மேலுள்ள, சிறியேன் - சிறியனேன், நம்மெய்கள் இரண்டினும் வாழ்ந்திடும் - நமதிரண்டுடம்புகளிலும் வாழ்கின்ற, செய்யஉயிர் - செவ்வியவுயிரானது, இரண்டு என்பதை - இரண்டாயிருப்பதை, இன்றுகாறும் - இந்நாளளவும், அறியேன்-அறிந்திலேன், அறிந்தனனேல்-அறிந்திருப்பேனாயின், இ - இந்த, அடாதன - தகாதசொற்களை, உரையேன் - சொல்லேன், (பொறுத்தருள்க,) எ - று.

க - ரை. எறியேரயில்விழியாய்! மறியேறியகைத் திருவெங்கைவாணர் மணிவரைமேல், நம்மெய்களிரண்டினும் வாழுமுயிர் இரண்டென்பதைச் சிறியே னின்றுகாறுமறிந்திலேன், அறிந்திருப்பேனாயின் இந்தத்தகாத சொற்களைச் சொல்லேன் என்பதாம்.

வி - ரை. மறி - மான்கன்று. மெய் - உடம்பு. அயிலெறிதற்கிலக்காயிருப்பவர் பகைவராதலால், எறியென்பதற்குப் பகைவர்மீதெறியப்படுகிற என்றுரைக்கலாயிற்று. அடாதன-தகாதவார்த்தைகள். பொறுத்தருள்கவென்ப திசையெச்சமாய் விருவித்துரைக்கலாயிற்று. (கஉக)

தலைவி பாங்கியை முனிதல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு முனிந்துகூறக் கேட்ட தலைவி, பாங்கியை முனிந்து தன்னுட் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நாட்டுமுலிபுகழ்வெங்கைபுரேசர்நயந்துகதி
காட்டுமமலரருளான்முன்றெய்வங்கடைப்பிடித்துக்
கூட்டுமொருவரைத்தானேநடுநின்றுகூட்டுதல்போ
லீட்டுமொழிகள்பலபகர்ந்தாளிவட்கென்சொல்வதே.

ப-ரை. (நெஞ்சே-மனமே), நாட்டும் - நிலைபெறுத்தப்பட்ட, மலி புகழ் - மிக்க புகழினையுடைய, வெங்கைபுரேசர்—, நயந்து-விரும்பி, கதி - முத்தியை, காட்டும் - (தம் அன்பருக்குக்) காட்டுகின்ற, அமலர் - பரிசுத்தர், (அவரது) அருளால் - திருவருளால், முன் - முன்பே, தெய்வம்-ஊழானது, கடைப்பிடித்து-உறுதியாகப்பற்றி, கூட்டும் - நம்மோடு சேர்த்த, ஒருவரை - ஒப்பற்றவரை, தானே நடுநின்று கூட்டுதல்போல் - தானிடையேநின்று சேர்ப்பதுபோல, பல ஈட்டும் மொழிகள் பகர்ந்தாள்-பலவாகச் சேர்க்கப்பட்ட மொழிகளை மொழிந்தாள், இவட்கு என்சொல்வது - இவளுக்கு யாது சொல்லுவது, எ - று.

க-ரை. நெஞ்சே! திருவெங்கைவாணரது திருவருளால், முன்பே தெய்வத்தால் கூட்டப்பெற்ற தலைவரை, இவள்தானிடைநின்று கூட்டுதல்போலப் பல சொற்களைச் சொல்லாநின்றாள், இவளுக்கு யாம் சொல்வது யாது? என்பதாம்.

வி-ரை. நாடு-பல நாடுகளைக்கொண்ட வுலகமெனக்கொண்டு, நாட்டு மலிபுகழ் என்பதற்கு உலகில் மிகுந்த புகழ் என் றுரைத்தலுமாம். நாட்டினை யுலகமெனக்கொண்டது சினையாகுபெயர். நயத்தல் - விரும்புதல். காட்டு மமலர் என மேல்வருதலால் கதியென்பதீண்டு நற்கதியைக் குறித்தது. நற்கதி - மோக்கம். தெய்வம்-ஊழ். ஒருவர் என்றது தலைவரை. பகர்தல் - சொல்லுதல். என்சொல்வது என்றது யாதும் சொல்லலாகாது என்றவாறு. (கரு0)

தலைவி கையுறையேற்றல்.

அதாவது—இவ்வாறு பாங்கியை முனிந்த தலைவி, பாங்கியை நோக்கி, அலர்தூற்றுவதொன்றாயினுமாக, காமநோய்க்கு மருந்தாமாயின், தலைவன் கொணர்ந்த மாந்தழையைத் தருகவெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பலர்செய்தமென் றுதியாயினுங்கொச்சையம்பாலன்முதற்
சிலர்செய்தவின்றமிழ்ச்சையினூர்திருவெங்கையன்னு
யலர்செய்துநிற்பதொன்றாயினுமாகவனங்கனெய்யு
மலர்செய்தநோய்மருந்தாமாயினல்குகமாந்தழையே.

ப - ரை. மெல் துதி - மெல்லிய துதிகள், பலர் செய்த ஆயினும் - பலராற் செய்யப்பெற்றனவாயினும், கொச்சையம் பாலன் முதல் - சம்பந்தர் முதலிய, சிலர்செய்த - சிலராற் செய்யப்பெற்ற,

இன் - இனிய, தமிழ் - தமிழ்மாலைகளில், இச்சையினர் - விருப்பமுள்ளவராகிய சிவபிரானரது, திருவெங்கை அன்னாய்-திருவெங்கைப் பதியை நிகர்த்தவளே, அலர்செய்து நிற்பது - அலர்தூற்றி நிற்பதாகிய, ஒன்றுஆயினும் ஆக - ஒருபொருளாயினுமாகுக, அநங்கன் எய்யும் - மன்மதன் எய்கின்ற, மலர் - மலரானது, செய்த - உண்டாக்கின, நோய் - பிணிக்கு, மருந்துஆம்ஆயின் - மருந்தாகுமானல், மாந்தழை - மாந்தழையை, நல்குக-தருக, எ - று.

க - ரை. பலர் பலதுதிகள்செய்யினும், சம்பந்தர் முதலாகிய சிலர் துதிகளில் மிகு விருப்பங்கொண்டவராகிய சிவபெருமானரது திருவெங்கையன்னவளே! அலர்தூற்றுவதாயினுமாகுக, அநங்கன் எய்யு மலர்க்கணை செய்யு நோய்க்கு மருந்தாமாயின், தலைவன் கொணர்ந்த மாந்தழையைத் தருவாயாக வென்பதாம்.

வி - ரை. மென்றுதி யென்பதில் மென்மை இனிமை குறித்தது. கொச்சை-சீகாழி. கொச்சையம்பாலன் என்றது அந்தத் திருப்பதியி லவதரித்த சம்புந்தமூர்த்தி நாயனரை. கொச்சையம்பாலன் முதற் சிலர் என்றது வாகீசர், சுந்தரர் என்பவரை. திருவாதவூரடிகளையுங் கோடலமையும். அலர்செய்தல் - பழிமொழியை யுண்டாக்கல். அநங்கன் - உருவிலி. மலர் - மலர்க்கணை. நல்குதல் - தருதல்.

இவற்றுள் பாங்கி கூற்ருயினவெல்லாம் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்ருயினவெல்லாம் குறை நேர்தற்கும் உரியவாயினவாறு காண்க. (கரு௧)

இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தல்.

அதாவது—தலைவி கையுறை யேற்றுக்கொண்டமை, பாங்கி, தலைவற் குணர்த்தா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

இரைத்துப்பொருகங்கைவேணியர்வெங்கையிறைதழையென்
றுரைத்துக்கொடுத்தலுமோடிவந்தேற்றதுயிர்த்துமுத்த
நிரைத்துக்கிடக்குமுலைமேல்முழத்தினணோரிழைதா
னரைத்துக்குடித்திலளன்பசெய்யாததுமவ்வளவே.

ப-ரை. அன்ப - அன்பனே, இரைத்து - சத்தித்து, பொரு-அலைமோதுகின்ற, கங்கை - கங்கா நதியையணிந்த, வேணியர் - சடாபாரத்தை யுடையவராகிய சிவபெருமானரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, இறை - இறைவரது, தழையென்று உரை

த்து'- தழையென்று சொல்லி, கொடுத்தலும் - யான் தருதலும், ஓடிவந்து எற்று—, அது - அதனை, உயிர்த்து - மோந்து, முத்தம் - முத்துமாலைகள், நிரைத்துக் கிடக்கும் - வரிசையாய்க் கிடக்கிற, முலைமேல் அழுத்தினள் - முலைமீதணைத்துக் கொண்டாள், நேரிழை - எமது தலைவி, அரைத்துக் குடித்திலள்—, செய்யாததும் - அவள் செய்யாதிருந்ததும், அவ்வளவே - அத்துணையேயாம், எ-று.

க-ரை. அன்பனே! கங்காதரராகிய சிவபெருமானாரது திருவெங்கைப் பதியிலுள்ள இறைவரது தழையென்று சொல்லிக் கொடுத்தலும், அத்தழையை யோடிவந்தேற்றுத் தன்முலைமீதணைத்துக்கொண்டாள், அரைத்துக் குடிக்காத குறையொன்றே, மற்றெல்லாவற்றையுஞ் செய்தாள் என்பதாம்.

வி-ரை. பொருதல்-கரையைமோதுதல் எனினுமாம். இறை - பண்பாகு பெயர். உயிர்த்தல் - மூச்சுவிடுதல்; அது இங்கு மோத்தலென்னும் பொருட்டு. முத்தம்-முத்தத்தானியன்றமாலை; இது கருவியாகு பெயர். நேரிழை-அன்மொழித்தொகை. நீ வந்துழிச்செய்யுமுபசாரம்யாவும் உன்றழைக்குச் செய்தாளென்பதுஇச்செய்யுட்பொருள். (கநஉ)

பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல்.

அதாவது—பாங்கி, பகற்குறி யிடத்தே தலைவன் தலைவியைக் கூடுமிடத் தடையாளங் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அகலிருக்குஞ்சுடரெனவெங்கையகத்திருக்கும்
புகலிருக்கும்பொருளனையார்தம்பொருப்பருகே
யிகலிருக்குங்கதிர்வேலிறைவவிரவுகடும்
பகலிருக்கும்பொழில்பகல்யாங்கள்பயிலிடமே.

ப-ரை. அகலில் இருக்கும் சுடர் என - அகலினிடத்திருக்கும் தீபம்போல, வெங்கையகத்து இருக்கும் - திருவெங்கைப் பதியில் நீங்காதிருக்கிற, புகலில் இருக்கும் - சொல்லினிடத்தே யிருக்கிற, பொருள் அனையார் - பொருள்போல்பவராகிய சிவபெருமானரது, பொருப்பு அருகே-மலையருகே வாழ்கின்ற, இகலில் இருக்கும்- பகைவர்மீதே நாட்டமா யிருக்கிற, கதிர் வேல் இறைவ - ஒளிவேலிறைவனே, பகல் - பகற்காலத்தில், யாங்கள் பயில் இடம் - யாம் விளையாடுமிடம், இரவு-இராக்காலமானது, கடும்பகலில் இருக்கும் - கடும்பகலிலிருக்கிற, பொழில் - சோலையேயாம், எ-று.

க-ரை. திருவெங்கைப் பதியிலிருக்கு மிறைவனே! யாம் பகற்காலத்தில் விளையாடுமிடம், கடும்பகலில் இராவிருக்கிற சோலையேயா மென்பதாம்.

வி-ரை. அகல் - தகழி. சுடர் - ஒளி; அது அகலிலிருக்குஞ் சுடர் என்றமையால் தீபம் என்னும் பொருளைக் குறித்தது. புகல் - சொல். பொருள் - அர்த்தம். தம்-சாரியை. இகல்-பகை, வலியெனினுமாம். கதிர் - ஒளி. கடும்பகல் - உச்சிக்காலம். பொழில் - சோலை. இரவு கடும்பகலி லிருக்கும் பொழில் என்றமையால் மிகவிருண்ட சோலையெனக் கொள்க. இங்ஙன மிருளுதற்குக் காரணமென்னெனின், மரச்செறிவும், சோம சூரியர்களுடைய கதிர்கள் உட்புகப் பெறுமையுமேயா மென்க. பகற்கால மாதலானும் நிகழ்வது களவொழுக்கமாதலானும் இவர் கூட்டத்திற் கித்தன்மைத்தாய பொழிலே தகுதியாமென்பது விளங்கிற்று. இருண்ட சோலையென்றற்கு, "சேதானன்று பொழில்" என்றார் பிறரும். (கரு௫)

பாங்கி குறியிடத் திறைவியைக்கொண்டு சேறல்.

அதாவது—பாங்கி தலைவியைக் குறியிடத்துக் கொண்டு செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

புணர்பூத்தவார்முலையாய்மலர்தாங்கொய்யப்போதுவமந்
தணர்பூத்தசொன்மலர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
னிணர்பூத்தகட்கவர்வண்டிசைகூருமிளங்கொடிப்பெண்
டுணர்பூத்தகொம்பர்க்கொழுநரொடாடியசோலையிலே.

ப - ரை. புணர்பூத்த - நெருக்கத்தைக்கொண்ட, வார் முலையாய் - கச்சணிந்த முலையையுடையாளே, அந்தணர் பூத்த-அந்தணர் சொல்லுகிற, சொல் மலர்-சொல்லாகிய மலர்களையுடைய, வெங்கைபுரேசர் - திருவெங்கை யீசரது, தடம் சிலம்பில் - பெரியமலையினிடத்தே, இணர் பூத்த - பூங்கொத்துக்களி லுண்டாகிய, கள் கவர் - தேனைக் கிரகிக்கிற, வண்டு - வண்டுகள், இசைகூரும் - இசையைப் பாடுகிற, இளங்கொடி பெண் - இளங்கொடியாகிய பெண், துணர் பூத்த - மலர்க்கொத்துக்க ளலர்ந்த, கொம்பர்-மரக்கொம்புகளாகிய, கொழுநரொடு-கணவரோடு, ஆடிய சோலையிலே-விளையாடுகிற சோலையின்கண், மலர்கொய்யப் போதுவம்-பூப்பறிக்கப் போவோம் (வருவாயாக), எ - று.

க - ரை. புணர்பூத்த வார்முலையாய்! அந்தணரது சொல்லாகிய மலர்களை யேற்றுக்கொள்ளுகிற வெங்கைபுரேசரது பெரியமலையில்,

தேனைப் பூங்கொத்துக்களினின்றும் கவர்கின்ற வண்டுகளிசைபாடுகிற இளங்கொடிகளாகிய பெண்கள், பூங்கொத்துக்களலர்ந்த மரக்கொம்புகளாகிய கணவரோடு கூடி விளையாடுஞ் சோலையிற் சென்று பூப்பறிப்போம், வருவாயாக வென்பதாம்.

வி-ரை. புணர்-முதனிலைத் தொழிற்பெயர். வார்-கச்சு. (முலைக்கட்டு) தாம் - அசை. அந்தணர் - அழகிய தட்பத்தினையுடையார்; (வேதியர்) அன்பருமாம். சொல் மலர் - வேத மந்த்ரங்களாகிய மலர்கள்; இவ்வாறன்றி வேத வாக்கியங்கள் விரிகின்ற எனினுமமையும். இணர்பூத்த கள்-பூந்தேன். கொம்பர்-மரக்கிளைகள். இணர்பூத்த கட்கவர் வண்டிசை கூரும் இளங்கொடிப்பெண் துணர்பூத்த கொம்பர்க் கொழுநரொ டாடிய சோலையிலே மலர்கொய்யப் போதுவம்வா என்றமையால் நீயும் இளங்கொடிபோலும் பெண்ணுதலாற் பூப்பறிப்பை முன்னிட்டுத் தலைவனோடுகூடி விளையாடப்பெறுதி வருவாயாக வென்றதாயிற்று. ஆடிய - ஆட. (கசுச)

குறியிடத்துய்த்து நீங்கல்.

அதாவது—மலர்கொய்யப் போதுவம் வாவெனத் தலைவியைக் கொண்டு சென்றபாங்கி, அவளை, இங்குமயிலாடலை நோக்கி நிற்கக்கடவையெனக்குறியிடத்து நிறீஇ யகன்றுபோகாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மானேநின்கண்ணிகல்பெற்றுளவாவிமருவலரை
யானேயளியினம்பின்றொடர்ந்தார்ப்பக்கொண்டிங்குறுவே
னானேறுடையர்திருவெங்கைவாணரருண்முருகன்
றானேமுறுமயிலாடல்கண்டேநிற்கதண்பொழிற்கே.

ப - ரை. மானே - மான்போல்வாளே, நின் கண் - உன் கண்களோடு, இகல்பெற்றுள்ள - பகைமையைக் கொண்டிருக்கிற, ஆவி மருவு அலரை - தடாகத்திற் பொருந்திய நீலமலர்களை, யானே - நானே, அளியினம் - வண்டுக்கூட்டம், பின்தொடர்ந்து ஆர்ப்ப - பின்னே தொடர்ந்து சத்திக்க, கொண்டு - பறித்துக்கொண்டு, இங்கு உறுவேன் - இங்குவருவேன், (நீ) ஆனேறு உடையர் - ஆனேற்றினையுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவர்) அருள் - ஈன்றருளின, முருகன் - முருகவேள். ஏமுறும் - மகிழ்தற்குரிய, மயில் ஆடல்கண்டே - மயிலாடலைப்பாராநின்றே, தண்பொழிற்கு - குளிர்ச்சியாகிய இச்சோலையில், நிற்க-நிற்பாயாக, எ - று.

க-ரை. மானே! இடபவூர்தியாகிய திருவெங்கைவாணர் அருளிய முருகக்கடவுளது பயிலாடல் கண்டு கொண்டே யிந்தக் குளிர்ச்சியாகிய சோலையில் நிற்கக்கடவை. நானேசென்று, உன்கண்ணுக்குப் பகையான நீலமலர்களைத் தடாகத்தினின்றும் பறித்து வருகிறேன் என்பதாம்.

வி-ரை. மான் - உவமையாகுபெயர்; இது மருணோக்கானுவமை. நின் கண்ணிகல் பெற்ற-உன்னிடத்துப் பகைகொண்ட என்றுமாம், ஆவிமருவலரை-தடாகத்திலுள்ள மலர்களை; அவைதாமரை, நீலம், குமுதம் என்பன. (மருவலர்-மணமுள்ளமலர்கள்.) நின் கண்ணிகல் பெற்றுளவாவி மருவலரையானேயரியினம் பின்றொடர்ந்தார்ப்பக்கொண்டிங் குறுவேன் என்பதற்கு, உன்னிடத்துப்பகை கொண்டபகைவரையானே சென்றுபற்றி அன்புள்ள சுற்றம்பின்றொடர்ந்தார்ப்பக்கொண்டிங்கு வருவேனெனவேறு மொருபொருள் தோன்றுமாறறிக. ஆனேறு - இடபவேறு. முருகன் ஏமுறும் - முருகன் களித்து நின்றுன்னை வருத்துவன் ஆதலால் நீ வாரற்க என்றுரைத்தலுமாம். "செவ்வேள் மராத்தண்சாயை நின்றணங்குந் தையனீநிற்க சாரலிலே" என்றார் பிறரும். (கஙரு)

இறையோனிடத் தெதிர்ப்படுதல்.

அதாவது—இவ்வாறு பாங்கி தலைவியைக்குறியிடத்துய்த்துநீங்குதலும், தலைவி தலைவன் கண்ணுக்கெதிர்ப்படாநிற்றல். அதற்குச் செய்யுள்;—

இயலோடுமல்குந்திருவெங்கைவாணரிமயவெற்பிற்
கயலோடும்வள்ளைக்கொடியோடுமோர்பைங்கமுகணங்கும்
புயலோடுநல்லிளநீரோடுநின்றுபுடைபெயருஞ்
செயலோடுநிற்பவிங்கின்றுகண்டேனொருதீங்கரும்பே.

ப-ரை. இயலோடு மல்கும் - இயலோடு பொருந்திய, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, இமயவெற்பில் - இமயமலையில், கயலோடும் - கயல்மீனோடும், வள்ளைக் கொடியோடும் - வள்ளைக்கொடியுடனும், ஓர் பைகமுகுஅணங்கும்-ஒருபசியகமுகினை வருத்துகிற, புயலோடும் - புயலுடனும், நல் இளநீரோடும் - அழகிய இளநீர்களோடும், நின்று - நிலைபெற்று, புடைபெயருஞ் செயலோடும் - சஞ்சரிக்கும் செயலோடும், நிற்ப - நிற்க, இங்கு - இவ்விடத்தில், இன்று - இப்பொழுது, ஒரு தீங்கரும்பு - ஒரு இனிய கரும்பினை, கண்டேன் - யான் கண்டேன், எ-று.

க - ரை. திருவெங்கை வாணர திருமலையில், ஓர்கரும்பானது கயல், வள்ளைக்கொடி, மேகம், இளநீர், புடைபெயருஞ்செயல் என்பவற்றோடும் இன்று நிற்கக் கண்டேன், இதென்ன வியப்பென்பதாம்.

வி-ரை. இயல்-உலகியல், வீட்டியல் என்னுமிருவகை யொழுக்கத்தின்மேலது. இவ்விரண்டியலுந்திருவெங்கைவாணர்க்குண்டாதலான், "இயலோடுமெல்குந் திருவெங்கைவாணர்" என்றார். திருவெங்கைவாணர்க்கு உலகியலாவது மலைமகளைவதுவை செய்தல் முதலாயின. வீட்டி லாவது சநகாதியர்க்குக் கல்லாலின் புடையமர்ந்து முத்திநெறியைக் கைகாட்டா னுணர்த்தன் முதலாயின. அணங்குதல்-வருத்துதல். புயல் - மேகம். ஒரு தீங்கரும்பு கயல் முதலியவற்றைக்கொண்டுநிற்க, இன்று கண்டேன் என்றமையால் இதற்கு முன்னெல்லாம் கண்டிலே னென்றவாறாயிற்று. ஒரு தீங்கரும்பு என்றது தலைவியை. கயல் என்றது கண்ணை. வள்ளைக்கொடி யென்றது செவியை. ஓர் பைங்கமுகு என்றது கழுத்தை. புயல் என்றது கூந்தலை. (புயல் - மேகம்.) நல்லிளநீர் என்றது தனத்தை. புடைபெயருஞ் செயல் என்றது இயங்குதலை. (கஉக)

புணர்ச்சியின் மகிழ்தல்.

அதாவது—தன்னிடத் தெதிர்ப்பட்ட தலைவியின் அவயவத்தழகைக் கண்ட தலைவன் அவளைக் கூடி யின்பநுகர்ந்த பின்னர், அப்புணர்ச்சியான் மகிழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மற்றின்பமுண்டென்பதன் றுலிவடரவந்தவின்பஞ்
சிற்றின்பமென்பதுதென்வெங்கைவாணர்திருநடன
முற்றின்பஞ்செய்யுஞ்சிதாகாசந்தன்னையுணர்வுடைமை
பெற்றின்பமெய்தினர்சொல்வர்சிற்றம்பலப்பேர்புனைந்தே.

ப - ரை. தென்வெங்கைவாணர் - தென்வெங்கைத் திருப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானார், திருநடனம் உற்று - திருக்கூத்தாடி, இன்பம் செய்யும் - கண்டார்க் கின்பஞ்செய்கிற, சிதாகாசந் தன்னை - ஞானகாயத்தை, உணர்வுடைமை பெற்று - அறிவுடைமையைப் பெற்று, இன்பம் எய்தினர் - ஆநந்தமடைந்தவர், சிற்றம்பலப்பேர் புனைந்துசொல்வர் - சிற்றம்பலமென்னும் பெயர்சூட்டிச் சொல்லாநிற்பர், (அது எதுபோலவெனின்) இவள்தர - இவள் தருதலால், வந்த இன்பம்-எமக்குக் கிடைத்த இன்பம், சிற்றின்பம் என்

பது-சிற்றின்பமென்று சொல்லப்படுவதுபோலும், மற்றின்பம் உண்டென்பது அன்று - பேரின்பமொன் றுண்டென்பதன்று, எ-று.

க-ரை. தென்வெங்கைத் திருப்பதியில் வாழ்கின்ற சிவபெருமானார் திருநடனஞ்செய்து கண்டார்க் கின்பஞ்செய்யுஞ் சிதாகாசத்தை, அறிவுடையோர் சிற்றம்பலமென்று சொல்லுவர், அதுபோல இவள் தந்த இன்பஞ் சிற்றின்பமென்று சொல்லப்படுவது வேறொரு பேரின்ப முண்டென்று கருதியன்றென்பதாம்.

வி-ரை. "சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே, மற்றின்பம் வேண்டு பவர்" என்னுந்திருக்குறளில், மற்றின்பம் என்பது பேரின்பப் பொருடரல்போல இச்செய்யுளிலும் மற்றின்பம் என்றது பேரின்பப்பொருளையே குறித்தது. சிற்றின்பம்-சின்னீரவின்பம். சிதாகாசம் என்பது சித்து ஆகாசம் எனப் பிரிக்கப்பட்டு ஞானகாசமெனப் பொருள்பட்டு நின்றது. பேரம்பலமாகிய இதனைச் சிற்றம்பலமென வான்றோர் கூறுதல்போல, இவள் தந்த பேரின்பத்தைச் சிற்றின்பமென்று வழங்குவதேயன்றி இதிற் சிறந்தவின்ப மொன்றுண்டென்றநோக்கி யன்றென்பதிச்செய்யுட் பிண்டப்பொருள். ஆல்-அசை. (கநஎ)

புகழ்தல்.

அதாவது—புணர்ச்சியின் மகிழ்ந்த தலைவன், தலைவியின் கண்ணழகைப் புகழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வெங்கைப்பழமலையெம் மானுமையும்விளங்குமவன்
பங்கைப்பெறுமுமைசெங்காவியுமவள்பாலனொரு
செங்கைக்கதிர்வடிவேலுந்தரிப்பதுசெப்பிலிந்தக்
கொங்கைக்குடமுடையாள்விழிகாட்டுங்குறிப்பதுவே.

ப-ரை. வெங்கைப்பழமலை - திருவெங்கைப் பழமலையிலெழுந்தருளியிருக்கிற, எம்மான் - எம்பெருமான், உமையும் - மானையும், விளங்கும் - பிரகாசிக்கிற, அவன் - அந்தப் பெருமானது, பங்கை - பாகத்தை, பெறும் - பெற்றிருக்கிற, உமை - உமாதேவியானவள், செங்காவியும் - செங்காவிமலரையும், அவள் - அவளது, பாலன் - பாலகனாகிய முருகக்கடவுள், ஒரு - ஒப்பற்ற, செங்கை - செங்கையினிடத்து, கதிர் - ஒளியையுடைய, வடிவேலும் - வடிவேலையும், தரிப்பது - தாங்குவதை, செப்பில் - சொல்லுமிடத்து, இந்த - இந்த, கொங்கை குடம் உடையாள் - கொங்கைக் குடமுடையவ

ளது, விழிகாட்டும் குறிப்பதுவே-கண்ணழகைக் காட்டுங் குறிப்பேயாம், எ-று.

க-ரை. திருவெங்கை நாதர் மானினையும், உமாதேவி செங்காவியினையும், முருகக்கடவுள் வடிவேலினையும் தரிப்பது, இவளது கண்ணழகைக் காட்டுங் குறிப்பேயாம் என்பதாம்.

வி-ரை. உழை - மான். பங்கு - பாகம். (இடப்பாகம்), வடிவேல் - வடித்தவேல். செப்புதல் - சொல்லுதல், கொங்கைக்குடம் - ஸ்தநகும்பம். குறிப்பு - சின்னம். (அடையாளம்) "ஈசற்கியாம்வைத்த வன்பி னகன்றவன் வாங்கிய வெம், பாசத்திற் காரென்ற வன்றில்லை யின்னொளி போன்றவன்றோள், பூசத் திருநீறெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம், பேசத் திருவார்த்தையிற்பெரு நீளம் பெருங்கண்களே" என்றபடியே விளங்குகிற இவளது கண்ணழகு மிகச்சிறந்திருத்தலால், தலைவனிவ்வாறு புகழ்ந்தானென்க. ஈற்றேகாரம் - தேற்றம்; பிரிநிலையுமாம். (கரு௮)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

அதாவது—இவ்வாறு புகழ்ந்த தலைமகன், தலைமகளை ஆயத்துச் செலுத்தா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

நீயாவிவந் தளித்தாய்தமியேற்குநிலாமலினிப்
போயாவிநல்கிநிற்காணுதலமரும்பூவையர்க்கு
மாயாவிநோதர்திருவெங்கைவாணர்வரையினெதிர்
கூயாவிமென்மலர்கொய்துநின் றாடுகோமளமே.

ப-ரை. கோமளமே,— நீவந்து,— தமியேற்கு - தமியனாய்த் தளர்ந்து நின்ற வெனக்கு, ஆவி அளித்தாய் - உயிர்தந்தனை, இனி நில்லாமல்போய் - இனியிங்கு நில்லாது சென்று, நிற்காணுது - உன்னைக்காணுமல், அலமரும் - வருந்தா நின்ற, பூவையர்க்கு - ஆயத்தார்க்கு, ஆவி நல்கி - உயிர்கொடுத்து, மாயாவிநோதர்,— திருவெங்கைவாணர்,—(அவரது) வரையின் எதிர்கூய் - மலைக்கெதிர்கூவி, ஆவி-தடாகங்களிலுள்ள, மெல்மலர் - மெல்லியமலர்களை, கொய்து - பறித்து, நின்று ஆடுக - நின்று விளையாடுவாயாக, எ-று.

க-ரை. கோமளமே! நீவந்து எனக்குயிர் தந்தனை, இனியிங்கு நில்லாது சென்று, உன்னைக்காணுது வருந்தும் ஆயமாதருக் குயிர் தந்து, திருவெங்கை வாணரது மலைக்கெதிரே கூவி மெல்லிய நீர்ப் பூப்பறித்து நின்று விளையாடுவாயாக வென்பதாம்.

வி-ரை. ஆவி - உயிர். அளித்தல் - கொடுத்தல். அலமரல் - மனங்கலங்க லெனினுமமையும். பூவையர் - பூவைபோல்வார்; (உவமையாகு பெயர்) மாயர்விநோதர் - மாயையே ஜக துத்பத்தி ஸ்திதி லயங்களாகிய தமது திருவிளையாடலுக்குக் கருவியாக வுடையவர். வரையினெதிர் கூவுதல் - சிலம்பெதிர் கூவுதல். ஆவிமென்மலர் - நீர்ப்பூ. கோமளம் - மெல்லியல்; (ம்ருதுஸ்வபாவை). (கஙக)

பாங்கிதலைவியைச்சார்ந்து கையுறை காட்டல்.

அதாவது—தலைமகனால் ஆயத்துச் செலுத்தப்பெற்ற தலைவியைப்பாங்கி சார்ந்து கையுறைகொணர்ந்தாள் போன்று அவளுக்குக் காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நஞ்சமமுதுசெய்வெங்கைபுரேசர்நன்னாடனையா
யஞ்சமுறவளியெல்லாமடக்கியமுதவொளி
விஞ்சுமதிகண்டிதழ்மூடியோகம்விளைத்ததனாற்
கஞ்சமிதுமுகசாரூபம்பெற்றதுகைக்கொள்கவே.

ப - ரை. நஞ்சம் - நஞ்சத்தை, அமுதுசெய்-திருவமுதுசெய்த, வெங்கைபுரேசர்—,நல்நாடு அனையாய்-நல்லநாட்டை நிகர்த்தவளே, கஞ்சம் இது-தாமரைமலராகிய இது, அஞ்சம் உற - ஹம்ஸமந்த்ரம் பொருந்த, வளியெல்லாம் அடக்கி - வாயுமுழுதும் அடக்கி, அமுத வொளி விஞ்சும் - அமிர்த கிரணங்கள் அதிகரித்த, மதிகண்டு-முழு மதியைக் கண்டு, இதழ் மூடி - இதழ்களை மூடிக்கொண்டு, யோகம் விளைத்ததனால் - யோகஞ்செய்தமையால், முகசாரூபம் பெற்றது - உன்முக சாரூபத்தைப்பெற்றது, (ஆதலால் இதனை) கைக்கொள்க - நீகைக்கொள்வாயாக, எ-று.

க - ரை. நஞ்சமமுதுசெய் வெங்கை புரேசர் நன்னாடனையாய்! இந்தத் தாமரைமலரானது யோகம் பயின்று முடித்து உன்முக சாரூபம் பெற்றது, ஆதலால் நீயிதனைக் கைக்கொள்வாயாக வென்பதாம்.

வி - ரை. நஞ்சமமுது செய் என்பதற்கு நஞ்சை யமிர்தாகச் செய்த என்றுரைத்தலுமாம். "ஆலத்தினை லமிர்தாக்கிய கோன்" என்றார் பெரியாரும். "அஞ்ச முறவளி யெல்லா மடக்கி யமுதவொளி, விஞ்சு மதிகண் டிதழ்மூடி" என்னுந் தொடருக்கு யோகிகட் கியையப் பொருளுரைக்கலாயிற்று. அவர்கள் பெறும்பேறாகிய சாருபப் பதவியும் சொல்லி முடிந்தது. இனித் தாமரைக்கேற்ப, அஞ்சம் உற - அன்னப்பறவை பொருந்த, அளி

யெல்லாம் அடக்கி - வண்டுகளெல்லாவற்றையுந் தனக்குள்ளடக்கி, அமுதவொளி விஞ்சுமதிகண்டு - அமுத கிரணங்கள் நிரம்பின பூர்ணசந்திரனைக்கண்டு, இதழ்மூடி - இதழ்குவிந்து, யோகம் விளைத்தல் - நீரிலொற்றைக் கான்மேனிற்றல் என்றுரைத்துக்கொள்க.

யோகியர் வாயுநிரோதந முதலியவைசெய்து சிவசாரூபம் பெறுவதுபோல, இந்தத்தாமரையும் அளியடக்கல் முதலியவை செய்து முக சாரூபம் பெற்றதாதலால், நீயிதனைக் கைக்கொள்ளவேண்டுமெனப் பாங்கி கூறியவாறு. (கச0)

தலைவியைப் பாங்கிற்கூட்டல்.

அதாவது—தலைவியைச் சார்ந்து கையுறை காட்டின பாங்கி, அவளை பாங்கிக் கூட்டத்திற் சேர்த்தல். அதற்குச்செய்யுள்,—

கங்கைவிழியுமுகமுஞ்செவ்வாயுங்கரந்துமைக்குச்
செங்கயலுஞ்செங்கமலமுமாம்பலுஞ்செப்புமவர்
வெங்கையனையவிலங்கிலைவேற்கண்விளங்கிழையாய்
மங்கையரையடைந்தம்மனையாடுகம்வந்தருளே.

ப-ரை. கங்கை - கங்காதேவியின், விழியும் - கண்களையும், முகமும் - முகத்தையும், செவ்வாயும் - செவந்தவாயையும், கரந்து - ஒளித்து, உமைக்கு - உமாதேவியார்க்கு, செங்கயலும் - செங்கயல் மீனும், செங்கமலமும் - செந்தாமரைமலரும், ஆம்பலும் - செவ்வல்லி மலருமாக, செப்புமவர் - சொல்லுவோராகிய சிவபெருமானரது, வெங்கை அனைய - திருவெங்கைப் பதியை நிகர்த்த, இலங்கு - விளங்குகின்ற, இலை - இலைவடிவினதாகிய, வேல் - வேல்போன்ற, கண் - கண்களையுடைய, விளங்கிழையாய்-பெண்ணே, மங்கையரை அடைந்து - ஆயமாதரை யடைந்து, அம்மனையாடுகம்-அம்மனையாடுவோம், வந்தருள் - நீவந்தருள்வாயாக, எ-று.

க-ரை. உமாதேவிக்குப் பொய்சொல்லுகிற சிவபிரானாது திருவெங்கைப்பதியை நிகர்த்தமாதே! நாம் ஆயமாதரோடுகூடி அம்மனையாடுவோம், வந்தருள்வாயாக வென்பதாம்.

வி-ரை. காத்தல் - மறைத்தல்; (ஒளித்தல்). விளங்கிழை - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர். மங்கையர் என்றது பருவங்குறியாது மாதரென்னுந் துணையாய்நின்றது. இலை - அச்சவடிவு. (கசக)

நீங்கித்தலைவற் கோம்படைசாற்றல்.

அதாவது—பாங்கி தலைமகளை யாயத் துய்த்து மீண்டு வந்து தலைவனைநோக்கி, நின்பொருட்டு இடைப்பட்ட வென்னை யெஞ்ஞான்று மறவாதிருக்கக் கடவையென்று ஓம்படைசாற்றல். ஓம்படை-கையடை. (மறவாமை) அதற்குச் செய்யுள்,—

பிறவாவடிவன் றிருவெங்கைமேவும்பிரானொடுபோ
யுறவாருயிருறவேயாக்குஞ்சத்தியையொப்பவின்று
குறவாணர்தங்கண்மடமாதைநின்னொடுகூட்டுமெனை
மறவாதிருமன்னவாவிதுவேநல்வரமெனக்கே.

ப-ரை. ஆர் உயிர் - அரியவுயிர்கள், பிறவாவடிவன் - பிறவாத திருவுருவத்தை யுடையவனாகிய, திருவெங்கைமேவும் பிரானொடும் போய்உற - திருவெங்கைப் பெருமானோடுபோய்ச்சேர, உறஆக்கும்-மிகுதியாய்ச் செய்கிற, சத்தியைஒப்ப-சிவசத்தியைநிகர்க்க, இன்று-இந்நாள், குறவாணர் தங்கள் - குறவாணருடைய, மடமாதை-இளம் பெண்ணை, நின்னொடுகூட்டும் என்னை-உன்னோடு சேர்த்தவென்னை, மறவாதிரு - மறவாதிருக்கக் கடவை, மன்னவா - அரசனே, எனக்கு—, இதுவே நல்வரம்,— எ-று.

க-ரை. இடையேநின்று எல்லாவுயிர்களையும் சிவமெனும் பொருளோடு சேர்க்கிற சிவசத்திபோல, இடையேநின்று குறப் பெண்ணினை யுன்னோடு கூட்டினவென்னை எஞ்ஞான்று மறவா திருக்கக்கடவை, அரசனே! இதுவே நீயெனக்கருளும் நல்லவர மென்பதாம்.

வி-ரை. பிறவாவடிவன் என்றமையால் இறவாமையுந்தானே யமையும். என்னை, "பிறந்த துண்டாகு லன்றே பிறகு சாவது தானுண்டா" மாதலினென்க. பிரான் - உபகார குணமுள்ளவன். இங்கு உபகாரகுணமாவது ஆன்மாக்களெளிதிற் கண்டுய்யுமாறு திருவெங்கையி லெழுந்தருளினமை. குறவாணர் தங்கள் மடமாது - தலைவி. நல்வரம்-சிறந்த வரம். (௧௭௨)

உலகியன்மேற்பட விருந்துவிலக்கல்.

அதாவது—உற்றூர் அயலூரிலிருந்து வந்தால் அவர்க்கு உணவு கொடுத் துபசரித்த லுலகியலாதலால், அவ்வுலகியல்பெருமைப்படத் தலைமகனைநோக்கி, எம்மூர்க்கு வந்திருந்து விருந்துண்டு நாளை நின்னூர்க்குச் செல்வாயாகவெனப்பாங்கி பகற்குறியை விலக்கல். (விருந்து - உணவு.) அதற்குச் செய்யுள்,—

மாயற்கரியர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லீயற்பொரியுங்குறும்பூழ்க்குழம்புடனேனமெல்லூன்
றீயற்கறியுந்தினைமூரலுமெஞ்சிறுகுடில்வாய்
நேயத்திவண்மிசைந்தேகிலென்னாகுநெடுந்தகையே.

ப - ரை. நெடுந்தகையே - நெடுந்தகாய், மாயற்கு அரியர்-திருமாலுக்கும் அரியராயிருந்தவர், திருவெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) மணி - அழகிய, வரைமேல் - மலையின் மீது, ஈயல் பொரியும் - இந்திரகோபப்பொரியலும், குறும்பூழ்குழம்புடன் - காடைக்குழம்புடனே, ஏனம் - பன்றியின், மெல்ஊன் - மெல்லியதசையாற்செய்யப்பெற்ற, தீயல்கறியும்-வறற்கறியும், தினைமூரலும் - தினையரிசிச்சோறும், எம் சிறுகுடில்வாய் - எமது சிறுகுடிலின்கண், நேயத்து - அன்போடு, இவண் மிசைந்து - இப்போதுண்டு, ஏகின் - நாளை நின்னூர்க்குச்செல்லுவையாயின்,என் ஆகும்-உனக்கென்ன குறையுண்டாகும், எ - று.

க - ரை. திருவெங்கைவாணரது மலைமேல் வாழ்கின்ற நெடுந்தகையே! எம்மூர்க்குவந்து எமது சிறுகுடிலில், ஈயற்கறியும், குறும்பூழ்க்குழம்பும், ஏனமெல்லூன்றீயற் கறியும், தினை மூரலுமுண்டு இன்றிராத்தங்கி, நாளைநின்னூர்க்குச் செல்வாயாக வென்பதாம்.

வி - ரை. மாயற்கு என்பதனீற்றி லுயர்வுசிறப்பும்மைதொக்கது. மாயற்கரியராயினும் அடியார்க்கெளியர் என்பது தோன்ற திருவெங்கைவாணர் என்றார். மாயற்கரியரும் திருவெங்கை வாணருமாயிருப்பவராகிய சிவபெருமானார்க்கிடமா யிருத்தலால் அவரது மலையை 'மணிவரை' என்றார். ஈயல்-இந்திரகோபம். குறும்பூழ் - காடை ஏனம் - பன்றி. மூரல் - சோறு. நேயம் - அன்பு. மிசைதல் - உண்டல். நெடுந்தகை - பெருந்தகை. (பெருங் குணமுள்ளவன்) ஒரு குறையு முண்டாகாதென்றற்கு 'என்னாகும்' என்றார். இங்ஙனங் கூறியது இரவுக்குறியை விலக்கற் பொருட்டென்க. என்னை; தினை விளைந்தால் நாளை யதனைக் கொய்து யாம் எம் மூர்க்குச் செலலுதலால் நீயும் அங்கு வாவென்று கூறி, வரின், இரவுக்குறியிற் றலைவியைக் கூட்டுவேன் என்னுங் குறிப்புத்தோன்றக் கூறியதன்றி விருந்து கூறியதன்றெனவுணர்க. (கசரு)

விருந்திறைவிரும்பல்.

அதாவது—பாங்கிகூறின விருந்தைத் தலைமகன் விரும்பல். அதற்குச் செய்யுள்,—

நானக்களபமுலேயீரெனக்குநவில்வதென்னீர்
வானத்தவர்தொழுதேத்துறுஞ்சீர்வெங்கைவாணர்க்குங்கள்
கானக்குறவரிறைமகன் முன்முனங்கல்லேயிற்பெய்
யேனத்தசைக்கறியன்றோமிகவுமினியதுவே.

ப - ரை. நானம் - கஸ்தூரி கலந்த, களபம் - கலவைச் சந்தந மணிந்த, முலேயீர் - ஸ்தநங்களேயுடைய மாதரே, எனக்கு நீர்நவில்வது என் - எனக்கு நீங்கள் சொல்லுவதென்ன, வானத்தவர்-விண்ணுடராகிய தேவர், தொழுது எத்துறும் - வணங்கித் துதிக்கின்ற, சீர் - சிறப்புவாய்ந்த, திருவெங்கை வாணர்க்கு - திருவெங்கைவாணராகிய சிவபெருமானுர்க்கு, உங்கள் - உமது, கானம் - காட்டில் வாழ்கின்ற, குறவர் - குறவருக்கு, இறைமகன் - தலேவனுகிய திருக்கண்ணப்பன், முன்னம் - முன்னுளில், கல்லேயில் பெய் - இலேக்கலத்திலிட்ட, ஏனம் தசைகறி அன்ரே - பன்றியின் தசைக்கறியல்லவா, மிகவும் இனியது - மிகவுமினிதாயிருந்தது, எ - று.

க - ரை. நானக்களப முலேயீர்! நீங்களெனக்குச் சொல்லவேண்டுமோ, திருவெங்கை வாணர்க்கு முன்னுளில் கண்ணப்பநாயனுர் இலேக்கலத்திலிட்ட, ஏனத்தசைக்கறியன்ரே மிகவு மினிதாயிருந்தது என்பதாம்.

வி - ரை. நானம் - கஸ்தூரி. களபம் - கலவைச்சந்தநம். நவில்வது-சொல்லுவது. வானம் இடவாகு பெயராய் விண்ணுலகத்தைக் குறித்தது. கானம்-காடு. இறைமகன்-அரசன். கல்லே - இலேக்கலம். (தொன்னே) பெய்தல்-இடல். ஏனம் - பன்றி. இவ்வாறு பாங்கிகூறுதலும் தலேவன் அக்கூற்றின் குறிப்பினேயறிந்து உடம்பட்டுக் கூறியது, இதனுனன்றே பகற்குறி யிடையீடுண்டாயதென் றுணர்க. பாங்கிகூற்ருயின வெல்லாம் கூட்டற்கும், பாங்கிற் கூட்டற்கும், தலேவன் கூற்ருயினவெல்லாம் கூட்டற்கும், வேட்டற்கு முரியவாமாறுகாண்க. (கசச)

பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலேயம் பொழுதுகண்டிரங்கல்.

அதாவது—தலேமகன் பிரிந்துழித் தலேமகள்மாலேயம்பொழுது கண்டிரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நந்தாமதுகைப்பழமலையார்வெங்கைநாடனையாய்
வந்தாவியம்புயம்வாட்டுமுன்னாளிலம்மாலையன்று
சிந்தாகுலமுறவேதனித்தாரைச்செறுக்குமதன்
செந்தாமலரையைமலர்த்துமிம்மாலைச்சிறுபொழுதே.

ப-ரை. நந்தா - கெடாத, மதுகை - வலிமையுள்ள, பழமலையார் - பழமலையாரது, வெங்கைநாடு அனையாய் - திருவெங்கை நாட்டை நிகர்த்தவளே, சிந்தாஆகுலம்உற - மனவருத்தமுண்டாக, தனித்தாரை - தனித்திருப்பவரை, செறுக்கும்-வருத்துகிற, மதன்-மன்மதன்கையிலுள்ள, செந்தாமரையை - செந்தாமரையினை, மலர்த்தும் - மலர்த்துகிற, இ - இந்த, மாலை சிறுபொழுது - மாலையாகிய சிறுபொழுதானது, முன்னாளில் - முற்காலத்தில், வந்து—,ஆவி-தடாகங்களிலுள்ள, அம்புயம் - தாமரையை, வாட்டும் - வாட்டின, அ மாலை அன்று - அந்தமாலைப் பொழுதன்று. எ - று.

க-ரை. பழமலைநாதரது திருவெங்கைநாட்டை நிகர்த்தவளே! இன்று மன்மதன்கையிலுள்ள தாமரையைமலர்த்துகிற இந்தமாலைச் சிறுபொழுதானது, முன்னாளில் தடாகத்துத்தாமரையை வாட்டின அந்தமாலைப்பொழுதன்று என்பதாம்.

வி-ரை. நந்துதல் - கெடுதல். மதுகை - வலி. ஆவி - தடாகம். அம்புயம்-அம்புஜம் என்னும் வடசொற்றிரிபு; அதற்குநீரிற்றோன்றுவதென்பதுபொருள். வாட்டுதல் - வாடச்செய்தல். தனித்தார்-தனித்திருப்பவர்.(தணந்தவராகியதலைமகன், தலைமகள்என்பவர்) செறுத்தல்-வருத்துதல்; கொல்லுதலுமாம். மதன் செந்தாமரை யென்றது, மன்மதன் கையம்பாகிய தாமரைமலரை. இக்கிளவிபாங்கியைநோக்கிக்கூறுதலும், மாலையம் பொழுதை நோக்கிக் கூறுதலும், தன்னுட்கூறுதலும் என மூவகைப்படும். இவற்றுள் இச்செய்யுள் பாங்கியை நோக்கிக் கூறியது. "புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள் போல் வன்கண்ண தோநின் றுணை" திருக்குறள், இது மாலையுடன் கூறியது. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" திருக்குறள், இது தன்னுட் கூறியது. (கசரு)

பாங்கி புலம்பல்.

அதாவது—இவ்வாறு மாலையம்பொழுதுகண் டிரங்கின தலைவிக் கிரங்கின பாங்கி தன்னுட் புலம்பா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

அருந்தாவிடமுமருந்தியவ்வானவராருயிரைத்
தருந்தாருவெங்கையிலெவ்வகையானுந்தனைத்தப்பியே
யிருந்தாலுமாவிகவர்வான்மதிப்பிள்ளையீன்றுவைக்கும்
பெருந்தாபமாலைக்கிவளென்கொலோபிழைசெய்ததுவே.

ப-ரை. அருந்தா - ஒருவரானு முண்ணப்படாத, விடமும் - நஞ்சையும், அருந்தி - உண்டு, அ - அந்த, வானவர் - தேவர்களுடைய, ஆர் உயிரை - அரியவுயிரை, தரும் - தந்த, தாரு - கற்பகத் தருவை நிகர்த்த சிவபெருமானது, வெங்கையில் - திருவெங்கைப் பதியில், எவ்வகையானும் - எவ்வகையாலாயினும், தன்னை தப்பி யிருந்தாலும்-தன்னைத்தப்பிப் பிழைத்திருந்தாலும், ஆவி கவர்வான்- உயிர் கவரும்பொருட்டு, மதிப்பிள்ளை - மதிப்பிள்ளையை, ஈன்று வைக்கும் - பெற்றுவைக்கின்ற, பெருந்தாபம் - பெருவெப்பத்தைச்செய்கிற, மாலைக்கு - மாலைப்பொழுதினுக்கு, இவள் - இத்தலைமகள், பிழைசெய்தது என்கொலோ - தவறு செய்ததுயாதோ, (அறிகிலேம்) எ-று.

க-ரை. அருந்தவொண்ணு நஞ்சுண் டமரருயிர்தந்த சிவபெருமானது திருவெங்கைப் பதியிலுள்ள இந்தத் தலைமகளது உயிர், தனக்குத் தப்பியிருந்தாலும் அதனைக் கவரும்பொருட்டு மதிப்பிள்ளையை யீன்றுவைக்கிற மாலைப்பொழுதிற்கு இவளிழைத்த பிழை யாதோ அறிகிலே மென்பதாம்.

வி-ரை. விடமும் என்ற வும்மை யிறந்தது தழீஇயவெச்சம். வானவர் - விண்ணுலகத்துள்ள தேவர்; எழுவகைப் பிறவியிற் சிறந்தவராதலால் அவருயிரை 'ஆருயிர்' என்றாள். தாரு - உவமையாகு பெயர். கவர்வான் - கவர. (செயவெனெச்சம்) மதிப்பிள்ளை - மதியாகியபிள்ளை. (இளம்பிறை) ஈன்று என்பதற்கு பகுதி ஈன். தாபம் - வடசொல்; வெப்பம் என்பதுபொருள். மாலை - மாலைக்காலம். "பால்வாய்ப் பிறைப்பிள்ளை யொக்கலைக் கொண்டு பகலிழந்த, மேல்பாற் றிசைப்பெண் புலம்புறுமாலை" என்று பெரியாரும் பணித்தருளினர். ஈற்றேகாரம் இரங்கற் குறிப்பு. (கசசு)

தலைவனீடத்தலைவிவருந்தல்.

அதாவது—தலைவன் வாராது காலநீட்டித்துழித் தலைவி வருந்திக்கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

கருமுன்படுந்துயர்தீர்ப்பார்நற்கட்செவிக்கங்கணவி
ரிருமுன்கரமுடையார்வெங்கைவாணரிமயவெற்பி
லொருமுன்மணியும்புனைபூந்துகிலுங்கொண்டாயவெள்ளம்
வருமுன்வந்தாரிலையேயணிகோலநம்மன்னவரே.

ப-ரை. கருமுன் - கருப்பத்தில், படும் - உண்டாகிற, துயர் - துன்பத்தை, தீர்ப்பார் - ஒழிப்பவர், நல் - சிறந்த, கட்செவி - பாம்பாகிய, கங்கணம் - கங்கணமணிந்த, ஈரிரு முன்கரம் உடையார் - நான்கு முன்னங்கையை யுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர், (அவரது) இமயவெற்பில் - இமயமலையில், அரு - அருமையாகிய, முன்மணியும் - முதன்மணியையும், புனை - அலங்கரிக்கப்பட்ட, பூந்துகிலும்-அழகிய ஆடையையும், கொண்டு—, ஆயவெள்ளம் வருமுன்—, நம்மன்னவர்—, அணைகோல-அணைகட்ட, வந்தார் இல்லையே - வந்தனரில்லையே, எ-று.

க-ரை. பிறவித்துன்பத்தை யொழிப்பவரும், நாககங்கணரும் ஆகிய சிவபெருமானரது திருவெங்கைவாண ரிமயவெற்பில் ஆயவெள்ளம், மணிப்பணி, புனை பூந்துகில் என்பவற்றைக் கொண்டுவருமுன்னமே நம் மன்னவர் அணைகோல வந்திலரே யென்பதாம்.

வி-ரை. கருமுன் என்பதில்முன்-எழனுருபு.கரு-கருப்பம்;அது கர்ப்பவேதனை யென்றேனும், பிறவியென்றேனும் பொருள்கொள்ள நின்றது. கட்செவி - கண்ணேயே செவியாகவுமுடையது. (பாம்பு) கங்கணம் - முன்கையணி. ஈரிருகரம்-நான்குதிருக்கை. முன்மணி - முத்து; அது அதனுலாகிய மாலையைக் குறித்தது. பூந்துகில் - பூத்தொழிலமைந்த ஆடை; பூவாகிய ஆடை. ஆயவெள்ளம் - ஆயக்கூட்டம். வெள்ளம்-மிகுதிப்பொருளது. வெள்ளம் என்றதற்கேற்ப அணைகோல என்றாள். அணைகோல என்பதற்கு அணைமீது நம்மைவளைக்க என்றும் பொருளுரைத்துக் கொள்க. அணை - சயனம். ஆயக்கூட்டம் மணியுந்துகிலுங் கொண்டணைவதன் முன்னம் நம்மன்னவர்வந்தணைந்திலர் என்றவாறு. வெள்ளம் மணியையும் பூந்துகிலையும் வாரிக்கொண்டு வருதலியல்பென்பதுந் தோன்றிற்று. "வனைதுகில் வாருநீரால்" என்றார் பிறரும். (கசஎ)

தலைவியைப்பாங்கிகழறல்.

அதாவது—இவ்வாறு வருந்தின தலைவியைப் பாங்கி நோக்கி, இங்ஙன நீவருந்தன் முறைமையன்றெனக் கட்டுரைத்தல். (கட்டுரைத்தல் - இடித்துக்கூறல்.) அதற்குச்செய்யுள்,—

புணர்ந்தாருள்வெங்கைபுரநாதர்பாகம்புணர்ந்தநறு
மணந்தாழ்குழலுமைமங்கையல்லாமன்மகிழ்நர்தமைத்
தணந்தாரமைகிலர்நீதரியாமற்றளர்ந்தனையேற்
பணந்தாழகலல்குலாய்நகுவார்நினைப்பார்த்தவரே.

ப-ரை. பணம்தாழ் - பாம்பின்படம் தாழ்தற்குரிய, அகல்அல்குலாய்-அகன்ற அல்குலையுடையாளே, புணர்ந்தாருள் - புணர்ந்தவர்களுக்குள்ளே, வெங்கைபுராநாதர் - திருவெங்கை நகர்க்கதிபராகிய சிவபெருமானாரது, பாகம்புணர்ந்த - பாகத்தைச்சேர்ந்த, நறுமணம் தாழ்குழல் - மணந்தங்கிய கூந்தலையுடைய, உமைமங்கையல்லாமல் - உமாதேவியல்லாமல், மகிழ்நர்தமை - கொழுநரை, தணந்து-பிரிந்து, அமைகிலர்ஆர் - அமைந்திராதவர்யார், நீதரியாமல்-நீயமைந்திராமல், தளர்ந்தனையேல் - மனந்தளர்ந்தனையாயின், நின்னைபார்த்தவர் நகுவார் - உன்னைப்பார்த்தவர் சிரிப்பார்கள், எ - று.

க - ரை. பணந்தாழகலல்குலாய்! திருவெங்கைச் சிவபெருமானது பாகத்தை நீங்கியமைந்திராதவள் உமாதேவி யொருத்தியேயன்றி, மற்றெல்லாமாதரும் தம் கொழுநரைப் பிரிந்து தரித்திருப்பார், அங்ஙனமாக,நீதரியாதுவருந்துதறகாது, நீவருந்துதலைக்காண்போர் நகைப்பார் என்பதாம்.

வி - ரை. புணர்ந்தார் - கூடினவர். (தலைவி, தலைவன்) பாகம் - இடப்பாகம். தாழ்தல் - தங்குதல். குழலுக்கியற்கைமண முண்மையால் தாழ்தல் வணங்குதல் எனினுமாம். நறுமணந்தாழ்குழல் என்பதற்கு நறுமணத்தையுடைய நீள்குழல்எனினுமமையும். உமைமங்கையல்லாமன் மகிழ்நர் தமைத்தணந்தா ரமைகிலர் என்றது, உமாதேவியொருத்தியே சிவபெருமானது பாகம் பிரிந்தமைந்திராதவள், மற்றைமாதரெல்லாரும் அமைந்தே யிருப்பரென்றவாறு. தணத்தல் - பிரிதல். தரித்தல் - ஆற்றியிருத்தல். நகுதல் - சிரித்தல். பணம் - பாம்பின்படம்; அது உருவமுதலியவற்றால் நிகர்க்காமையால் தாழ்வதாயிற்று. தாழ்தல் - வணங்குதல். உமாதேவியை, 'உமைமங்கை' என்றது எஞ்ஞான்றும் இளமைமுதிராதொருபெற்றியளா யிருத்தல் பற்றியென்க. (கசஅ)

தலைவிமுன்னிலைப் புறமொழிமொழிதல்.

அதாவது—பாங்கி முன்னிலையாய்நிற்க, தலைவி அவள்மேல் வெறுப்பால், அவளைநோக்கிக் கூறாது புறமாய்க் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

உரையாதமுன்னமுணர்வார்தமக்கன் றியுற்றதங்நோய்
வரையாமலுள்ளவெல்லாமுரைத்தாலுமதித்துமனங்
கரையார்தவர்கட்குரைப்பதின்வெங்கைக்கடவுளுண்ட
திரையாலமுண்டுயிர்நீத்தாலுநன்றுதெரிந்தவர்க்கே.

ப-ரை. உரையாத முன்னம்-சொல்லாததன் முன்னமே, உணர்வார் தமக்கு அன்றி - (குறிப்பால்) அறியவல்லார்க்கேயன்றி, உற்ற-நேரிட்ட, தம்நோய் - தமது துன்பத்தை, வரையாமல் - அளவறுக்காமல், உள்ள எல்லாம் உரைத்தாலும் - உள்ளனயாவுஞ் சொன்னாலும், மதித்து - உட்கொண்டு, மனம் கரையாதவர்கட்கு - மனமுருகாதவர்களுக்கு, உரைப்பதின் - சொல்வதினும், வெங்கைக்கடவுள் உண்ட - திருவெங்கைச் சிவபெருமான் திருவமுதுசெய்த, திரை ஆலம்உண்டு - பாற்கடலிற்றோன்றின நஞ்சையுண்டு, உயிர்நீத்தாலும் - உயிர்விட்டாலும், நன்று - நன்றாகும், தெரிநதவர்க்கு, அறிவறிந்தவர்க்கு, எ-று.

க-ரை. சொல்வதன் முன்னங் குறிப்பறிந்திரங்காத அறிவிலிகளிடத்துச் சென்று தமது துன்பமுழுதுஞ் சொல்லிக்கொள்வதினும் நஞ்சுண்டுயிர் துறத்தல் விவேகிகளுக்கு நன்மையாம் என்பதாம்.

வி-ரை. உணர்வார் - குறிப்பறிவோர். வரைதல் - அளவுபடுத்தல். உரைப்பதின் என்பதில் இன் ஐந்தாவதனுறழ்ச்சிப் பொருட்டு. கடவுள் - தொழிலாகு பெயர்; எல்லாத் தத்துவங்களையுங் கடந்தவன் என்பது பொருள். (கட - பகுதி, உள் - தொழிற்பெயர் விகுதி.) இது விக்குள் என்றாற்போல்வது. திரை-அலை; அது கடலையுணர்த்தலால் சினையாகுபெயர்; அது வெங்கைக் கடவுளுண்ட ஆலம் என்பதனால் பாற்கட லென்றுரைக்க லாயிற்று. (கசகூ)

பாங்கியோடு பகர்தல்.

அதாவது—தலைவி முன்னிலைப்புறமொழி மொழியக் கேட்ட பாங்கி, அவளையுபசரித்து அவளது வெறுப்புத் தீர்த்தலும், அவள் பாங்கியை வெறுத்தலொழிந்து இதங் கூறுகின்றல். அதற்குச் செய்யுள்,—

வன்பந்தகனையழைக்குநஞ்சூணின்மறைப்பவர்போன்
மூன்பந்தனையிலர்வெங்கையின்மேவிமுயங்குறுபே
ரின்பந்தருமவரவ்வின்பமூடுறவின்றுபிரி
துன்பங்கலந்தளித்தாரறிந்தேனிலைத்தூமொழியே.

ப-ரை. தூமொழியே - தூமொழியையுடையவளே, வன்பு - வலிமையுள்ள, அந்தகனை - யமனை, அழைக்கும் - அழைக்கின்ற, நஞ்சு - விடத்தை, ஊணில் - உணவில், மறைப்பவர்போல் - ஒளிப்பவர்போல, முன் - முன்பே, பந்தனை இலர் - பந்தமில்லாதவராகிய

சிவபெருமானாரது, வெங்கையில் - திருவெங்கைப்பதியில், மேவி - வந்து, முயங்குறு - புணர்தலாகிய, பேரின்பம் தருமவர் - பேரின்பந்தருவோராகிய நந்தலைவர், அ - அந்த, இன்பமூடு - இன்பத்தினுள்ளே, உற - மிகுதியாக, இன்றுயிரிதுன்பம் - இன்று பிரிந்த துன்பத்தை, கலந்துஅளித்தார் - கலந்து தந்தார், அறிந்தேனில்லை - (இச்செய்தியை அன்றே) அறிந்திலேன், எ - று.

க - ரை. தூமொழியே! வலியயமனை யழைக்கிற நஞ்சை யுணவின் மறைத்தூட்டுவோர்போல, திருவெங்கையில் வந்து எம்மைப் புணர்ச்சிப்பேரின்பந் தருவோராகிய நமது தலைவர் அவ்வின்பத்தூடே பிரிவென்னும் துன்பத்தையுங்கலந்து தந்தார் அதனை அப்பொழுதறிந்தேனில்லை யென்பதாம்.

வி-ரை. வன்பு - வன்மை. அந்தகன் - யமன்; வடசொல்; உயிர்க்கிறுதி செய்வோனென்பது பொருள். அந்தகனை யழைத்தலாவது- மரணத்துக் கேதுவாதல். முன்பந்தனையிலர்என்றது அநாதியாகவே பாச விமுக்தர் என்றபடி. ஊடு - உள்; நடுவெனினுமாம். அளித்தல்- தருதல். அறிந்தேனில்லை யென்றமையால் அறிந்திருப்பின் அன்றே யதனைப் பரிகரிக்க முயன்றிருப்பேனென்ற வாறாயிற்று. தூமொழி- பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர்; இதற்குத் துன்பங் கலவாத இன்மொழியென்பது பொருள். அறிந்தே னிலையென்ற சொல்லாற்றலால் அவர் அன்றளித்த புணர்ச்சியின்பத்தினும் இன்றளித்த பிரிவுத் துன்ப மிகப் பெரிதென்பதும் வெளியாயிற்று. "இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற், றுன்ப மதனிற் பெரிது" என்பது திருக்குறள். இதனால், பெற்ற வின்பத்தோடொத்து வரினுற்றலாம். இன்றுற்ற துன்பமத்னளவன் றென்பது பெறப்பட்டது. (கருப)

பாங்கியச்சுறுத்தல்.

அதாவது—பாங்கி தலைவியையச்சுறுத்திக் கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,—

சுனைக்காவியன்னவிழிநீபுனத்திற்சுகங்கடியா
துனைக்காதல்செய்தவர்தம்பொருட்டாகவுலைதல்கண்டு
வினைக்காடெறியுமழுவார்திருவெங்கைவெற்பிலன்னை
தினைக்காவன்மற்றொருவர்க்களித்தாலென்னைசெய்குவையே.

ப - ரை. சுனை - சுனையிலலர்ந்த, காவியன்ன - காவிமலர் போன்ற, விழி-கண்களையுடைய, நீ—, புனத்தில்-தினைப்புனத்தில்,

சுகம்கடியாது - கிளிகடியாமல், உன்னைகாதல் செய்தவர் தம்பொருட்டாக - உன்னை யிச்சித்தவராகிய தலைவர் பொருட்டு, உலைதல் கண்டு - உலைவதைக்கண்டு, வினைக்காடு எறி - வினைக்காட்டினை யெறிகிற, மழுவார் - மழுவாளராகிய சிவபெருமானாரது, திருவெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில் உள்ள, அன்னை - நம்மன்னையானவள், தினைக்காவல் - தினைக்காவலை, மற்றொருவர்க்கு அளித்தால் - வேறொருவர்க்குக் கொடுத்தால், என்னை செய்குவை - யாது செய்குவாய், எ - று.

க - ரை. சுனைக்காவியன்ன விழிமடவாய்! நீ கிளிகடியாது உன்னைக்காதலித்தவராகிய தலைவர்மேல் மனம்வைத்துலைதல்கண்டு நம்மன்னையானவள் இந்தத்தினைக்காவலை வேறொருவர்க்களித்தால், நீயாதுசெய்குவை யென்பதாம்.

வி - ரை. காவி - நீலமலர்; இதனை இடப்பொலிவு தோன்றச் 'சுனைக்காவி' என்றாள். விழிநீ - விழியையுடைய நீயெனவிரியும். புனம் - தினைப்புனம். சுகம் - வடசொல். கடிதல் - ஓட்டுதல். காதல் செய்தல் - இச்சித்தல்; இது ஒரு சொல். தம் - சாரியை. உலைதல் - வருந்துதல். வினைக்காடு - பாவக்காடு; வினை இங்குத் தீவினைக்காயிற்று எறிதல் - அறக்களைதல். மழு - பரசு. தினைக்காவல் - தினைப்புனங் காக்குந்தொழில். (கருக)

நீங்கற்கருமைதலைவி நினைந்திரங்கல்.

அதாவது—தலைவனைவிட்டு நீங்கற் கருமையை தலைவி நினைந்திரங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

தம்மாவியுந்தந்தலைவரும்வேறுதருமவரே
யம்மாவுலகிற்பிரிந்திருப்பாரளிமூசுமதக்
கைம்மாவுரியர்திருவெங்கைவாணர்கனகவெற்பி
லெம்மாவியேயவரென்றாற்பிரிகுவதெவ்வண்ணமே.

ப - ரை. தம் ஆவியும் - தம்முயிரும், தம்தலைவரும் - தந்தலைவரும், வேறுதருமவரே - வேறாகவறிந் திருப்பவரே, உலகில் - இவ்வுலகத்தில், பிரிந்திருப்பார் - நீங்கியிருப்பார், அளிமூசும் - வண்டுகள் மொய்க்கின்ற, மதம் - மதநீரையுடைய, கைம்மா உரியர் - யானைத்தோலையுடையவராகிய, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, கனகவெற்பில் - பொன்மலையில், அவர் - அந்தத்தலைவர், எம் ஆவியே என்றால் - எமதுயிரேயெனின், பிரிகுவது - பிரிதல், எவ்வண்ணம் - எவ்விதம், எ - று.

க - ரை. தம்முயிரும் தம்தலைவரும் வேறாக வுணர்ந்திருப்ப வரே இவ்வுலகில் பிரிந்திருப்பர், கைம்மாவுரியராகிய திருவெங்கை வாணர் கநகவெற்பிலுள்ள அவர் எம்முயிரே யானபோ தெவ்வாறு பிரிந்திருப்ப தென்பதாம்.

வி - ரை. தம்மாவி யென்றது தலைவியருயிரை. அம்மா - வியப்பிடைச்சொல். அளி - வண்டு. மூசல் - மொய்த்தல்; கைம்மா-யானை. (துதிக்கையையுடைய விலங்கு) உரி-தோல். கநகம்-பொன். ஆவி - உயிர். ஏ - இரங்கற் குறிப்பு. (கருஉ)

தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றல்.

அதாவது—அத்தலைவனது வருகையைப் பாங்கி தலைவிக்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கடிக்குங்கரும்புமதவேள்சிலையவன்கைப்பகழி
முடிக்குங்கடிமலராமினிக்கேள்வெம்முயலகன்மே
னடிக்குங்கமலபதத்தார்திருவெங்கைநாடனையாய்
வடிக்குஞ்சுடரிலைவேலன்பர்தேரின்மணிக்குரலே.

ப - ரை. வெம் - வெவ்விய, முயலகன்மேல் நடிக்கும் - முயலகன்மீது நடனஞ்செய்த, கமலம் - தாமரைமலர்போன்ற, பதத்தார் - திருவடியையுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை நாடு அனையாய்-திருவெங்கை நாட்டை நிகர்த்தவளே, வடிக்கும்-வடித்த, சுடர் - ஒளியுள்ள, இலை - அச்சவடிவினதாகிய, வேல் - வேற்படையையுடைய, அன்பர் - நமதன்பரது, தேரின் - ரதத்தின், மணிக்குரல் - மணியோசையை, கேள் - கேட்கக்கடவை, இனி - இனி, மதவேள்சிலை-மன்மதனதுவில், கடிக்கும் கரும்பு ஆம்-நீ கடித்துண்ணுங் கரும்பாகும், அவன் கைபகழி - அவன் கரத்துள்ள அம்புகள், முடிக்கும் - நீ முடித்துக்கொள்ளுதற்குரிய, கடிமலர் ஆம் - வாசனையுள்ள மலர்களாகும், எ-று.

க - ரை. வெம்முயலகன்மேல் நடிக்கும் கமலபதத்தார் திருவெங்கை நாடு அனையாய்! நமதன்பரது தேரிற்கட்டின மணியோசையைக் கேட்பாயாக; இனி மன்மதன் வில்லாகிய கரும்பு நீ கடித்துண்ணுங் கரும்பாகும், அவன் கையம்பாகிய மலர் நீ முடித்துக் கொள்ளுகிற மலராகும் என்பதாம்.

வி - ரை. கடித்தலுண்டற்கே யாதலால் கடிக்கும் கரும்பு என்பதற்குக் கடித்துண்ணும் கரும்பு என்றுரைக்கலாயிற்று. சிலை-வில்.

பகழி - அம்பு. கடி - மணம். ஆம் என்பது கரும்பென்பதனோடுஞ் சேர்க்கப்பட்டது. அன்பர் என்றது தலைவரை. கமலபதம் வடநூன் முடிபாதலா லியல்பாயிற்று.

வடிக்குஞ் சுடரிலை வேலன்பர் தேரின் மணிக்குரல் கேள் என்றமையால், தலைவன் வருகையாவர்க்கும் புலனாமே, ஆகவே களவென்பதனோடு மாறுகொள்ளுமேயெனின், கொள்ளாது. என்னை நால்வகைப் புணர்ச்சியினும் தலைவன் தேரோடும் சேனையோடும் வந்தானல்லது தமியனாய் வந்தானல்லன். எவ்வாறெனின்; காட்சியிற், கூறிய தானறிக. அன்றியும் பிரிவுழி மகிழ்ச்சியில், பாகனொடுசொல்லுதலானும், பாங்கியிற் கூட்டத்தில் தலைவி பாங்கியை முனிதலானும், வரைவிடை வைத்துப்பொருள் வயிற்பிரிவோன், மீண்டுவருங்கால் பாகனொடு தேர்விரைந்து செலுத்தென்றலானும் தேரோடுஞ் சேனையோடும் வந்து, குறியிடத்துத் தமியனாய் வந்தானென்றுணர்க. (கருரு)

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

அதாவது—தலைவன் சிறைப்புறமாகக் குறியிடத்துவர, தோழி தங்களுக்குள்ள செறிப்பை யறிவுறுத்திக் கூறுநிற்றல். (சிறைப்புறம் - வேலிப்புறம்) இது, "சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" என்பதனா லுணர்க. அதற்குச் செய்யுள்.—

தழலாற்கடியவளியேநறுமென்றழைகள்கொய்யக்
கழலார்ப்புறுமென்பதத்தார்புனத்தினுங்காவகத்துஞ்
சுழலாத்திரியுங்கிளிகாளினிவெங்கைச்சோதிவெற்பி
னிழலாற்பொலிந்தவிளம்பொழிற்கேயிருநெஞ்சுவந்தே.

ப - ரை. அளியேம் - எளியேம், தழலால் - கவண்கல்லினால், கடிய - ஓட்டலானும்; கழல் ஆர்ப்புறும்-சிலம்புகள் சத்திக்கிற, மென்பதத்தார் - மெல்லடியையுடைய மாதர்; புனத்தினும் காவகத்தும் - புனத்திலுஞ் சோலையிலும், நறுமென் தழைகள் கொய்ய - நறுமென்றழைகளைப் பறித்தலானும், சுழலாத்திரியும் - சுழன்று திரிகிற, கிளிகாள் - கிள்ளைகளே, இனி—, வெங்கைச்சோதி வெற்பில் - திருவெங்கையிலுள்ள ஒளிபொருந்திய மலையில், நிழலால் பொலிந்த - நிழலாற் பொலிவடைந்திருக்கிற, இளம்பொழிற்கு - இளஞ்சோலையில், நெஞ்சு உவந்து இரும் - மனமகிழ்ந்து வாழ்ந்திருங்கள்; எ - று.

க - ரை. யாம்கவண்வீசலானும் மாதர் தழைகொய்தலானும் புனத்தினும் சோலையினும் சுழன்று திரிகின்ற கிள்ளைகளே! இனி வெங்கைச்சோதி வெற்பில், இளஞ்சோலையில் மனமகிழ்ந்திருங்கள் என்பதாம்.

வி - ரை. தழல் - கவண்; கிளிகடிகோல் எனினுமாம். கொய்தல் - பறித்தல். பதம் - பாதம். கா - சோலை. சுழலா - சுழன்று; செய்யாவெனெச்சம். வெங்கைச்சோதி-வெங்கையி லெழுந்தருளின ஒளியுருவாகிய சிவபிரான் எனினுமமையும். வெற்பு-மலை. பொழிற்கு-உருபுமயக்கம். நெஞ்சுவந்துஇரும்என வியையும். இங்ஙனங்கூறலால் எமர் தினைகொய்யவந்தனர், இன்று யாமெமதூருக்குச் செல்லாநின்றேமெனச்செறிப்பறி வுறுத்தவாறாயிற்று. (௧௫௪)

முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

அதாவது—தலைவன் முன்னிலையாய் நிற்புழித் தோழி தலைமகளைக்காணுள்போல, புறமொழியாய் புட்களை நோக்கிக் கூறுவாள் போன்று செறிப்பறிவுறுத்தல். அதற்குச் செய்யுள்,—

தொண்டாவெமையுடையான்வெங்கைசூழிளஞ்சோலையிற்பூந்
தண்டாதளவுமளிகாளுமக்குத்தகாதுகண்டீர்
கண்டானினைந்துபின்காணாதபோதெங்களைமறக்கும்
வண்டாரிறைவரொடுகூடியெம்மைமறப்பதுவே.

ப - ரை. எம்மை - எங்களை, தொண்டா உடையான் - அடிமைகளாகவுடையவனாகிய சிவபெருமானது, வெங்கை - திருவெங்கையை, சூழ் - வளைந்த, இளஞ்சோலையில்—, பூ - மலர்களின், தண் தாது அளவும்-குளிர்ந்த மகரந்தத்தையளாவுகின்ற, அளிகாள்-வண்டுகாள், கண்டால் நினைந்து—, பின்காணாதபோது—, எங்களை மறக்கும்-எம்மை மறந்தேவிடுகிற, வள்தார்-வளவிய பூமாலையைத்தரித்த. இறைவரொடுகூடி - தலைவரோடுகூடி, எம்மை மறப்பது - எங்களை மறந்துபோவது, உமக்குத்தகாது - உங்களுக்குத்தகாது, எ - று.

க - ரை. எம்மைத் தொண்டாக வுடையவராகிய சிவபிரானது திருவெங்கையைச்சூழ்ந்த சோலையிற் சஞ்சரிக்கும் வண்டுகளே! கண்டால் நினைப்பதும் காணாவிடின் மறப்பதும் தமதுதொழிலாகக் கொண்ட தலைவரோடுகூடி எம்மைமறப்பது உங்கட்குத்தகாது என்பதாம்.

வி - ரை. தொண்டு - ஆகுபெயர். அளவுதல் - அளைதல். அளிகாள் உமக்குத்தகாது என்றமையால் இறைவர்க்குத் தகுமென்ற

தாயிற்று. கண்டீர் - முன்னிலையசைச்சொல். இச்செய்யுளானும் யாமெம்மூர்க்குச் செல்லாநின்றேமெனச்செறிப்பறிவுறுத்தவாறு. ()

முந்நின்றுணர்த்தல்.

அதாவது—தோழி தலைமகன் முன்னின்று இற்செறிப்பறிவுறுத்தல். அதற்குச் செய்யுள்;—

நனைகாத்தபூமடவார்விழியாகநயந்தருளங்
கனைகாத்தபாகர்தம்வெங்கையிலேவண்டுகாவிமலர்ச்
சுனைகாத்தவெற்பெமர்வேலண்ணலேயிச்சுகங்கடிந்து
தினைகாத்தவெம்மைத்துயர்புகக்காப்பர்செறித்தினியே.

ப - ரை. வேல்-வேற்படையையுடைய, அண்ணலே-பெரியோனே, நனைகாத்த - ஈரங்காத்த, பூமடவார் - மலர்மடவார், விழியாக-தமக்குக்கண்களாக, நயந்தருள்-விரும்பியருள்கின்ற,அங்கனைகாத்த-உமாதேவியாரால் காக்கப்பட்ட, பாகர் - பாகத்தையுடையவராகிய சிவபெருமானாது, வெங்கையிலே—, வண்டு—, காவிமலர் - நீலமலர்களையுடைய, சுனைகாத்த - சுனைகளைக்காத்துக் கொண்டிருக்கிற, வெற்பு - மலையிலுள்ள, எமர் - எம்மவர், இ - இந்த, சுகங்கடிந்து - கிளிகடிந்து, தினைகாத்த எம்மை - தினைப்புனத்தைக் காத்த எங்களை, இனிசெறித்து - இனி யிற்செறித்து, துயர்புகக்காப்பர் - துன்பமுண்டாகக்காவாநிற்பர், எ - று.

க - ரை. வேலண்ணலே! திருவெங்கை வெற்பினராகியஎமர், தினைகாத்தவெம்மை யிற்செறித்துத் துயர்புகக் காப்பரென்பதாம்.

வி - ரை. பூமடவார்என்றது திருமகள், கலைமகள், மண்மகள் என்பவரை. இம்மூவரையுந் தமக்கு முக்கண்களாகக்கொண்ட வுமாதேவியார் என்றும், இம்மூவரும் தமக்குக்கண்போலக்கொண்டு பாராட்டுதற்குரியஉமாதேவியார்என்றும் இருவகையாயுரைத்துக்கொள்க. அங்கனை - பெண்; இதுவடசொல். காவிமலர் - நீலமலர். செறித்து-இற்செறித்து. காப்பர் - காவல் செய்வர். (கருரு)

முன்னின்றுணர்த்தியோப்படைசாற்றல்.

அதாவது—அவ்வாறு முன்னின்றுணர்த்தின பாங்கி யெம்மை மறவாமை வேண்டுமெனக் கூறுதல். அதற்குச் செய்யுள்,—

அந்திப்பொழுதிற்பெடைதாமரையுளகப்படநோம்
புந்திச்சுரும்புகதிர்வருங்காறும்புறந்திரியு
நந்திக்கொடிவலங்கொண்டோன்றிருவெங்கைநாட்டினறவ
சிந்தித்தெமைமறவாதிருநீநின்றிருவுளத்தே.

ப-ரை. அந்திப்பொழுதில் - அந்திக்காலத்தில், பெடை - பெண்வண்டு, தாமரையுள் - தாமரைமலரினுள்ளே - அகப்பட - சிக்கிக்கொள்ள, நோம் - வருந்துகிற, புந்தி - அறிவுள்ள, சுரும்பு - ஆண்வண்டு, கதிர்வருங்காறும் - சூரியனுதிக்குமளவும், புறம்திரியும் - (அத்தாமரை மலரின்) புறத்தே திரிகிற, நந்திக்கொடி - இடபக் கொடியை, வலம்கொண்டோன் - வலப்புறத்தே யுயர்த்தவனாகிய சிவபிரானது, திருவெங்கை நாட்டு இறைவ - திருவெங்கை நாட்டுக் கதிபனே, நீ—, நின்திருவுளத்தே - உன்திருவுளத்தில், எம்மை சிந்தித்து - எம்மை நினையாநின்று, மறவாதிரு - மறவாதிருப்பாயாக, எ - று.

க-ரை. இடபவாகநராகிய சிவபெருமானாரது திருவெங்கை நாட்டிறைவனே! நின் திருவுளத்தில் எம்மை யெஞ்ஞான்று மறவா திருக்க வேண்டுமென்பதாம்.

வி-ரை. சூரியன் அஸ்தமித்தலும் தாமரை குவிவது இயல் பாதலானும், தேனுண்ட வண்டுகளிற் சிலவுள்ளிடத்தே யகப்பட்டுக் கொடலியல் பாதலானும் "அந்திப்பொழுதிற் பெடைதாமரையுளக ப்பட" என்றும், அந்தப் பெடையினிடத் தன்புள்ள ஆண்வண்டு சூரியோதயத்தளவும் அத்தாமரையின் புறத்தேதிரித வியல்பாத லால் "நோம்புந்திச் சுரும்பு கதிர்வருங்காறும் புறந்திரியும்" என் றும் கூறினர். 'அந்திப்பொழுதிற் பெடை தாமரையுளகப்பட நோம் புந்திச் சுரும்பு கதிர்வருங்காறும் புறந்திரியும் திருவெங்கை நாடு' எனவும், 'நந்திக்கொடி வலங்கொண்டோன் திருவெங்கைநாடு' எனவுமியையும். நந்தி - இடபம். வலம்-வெற்றியெனினுமாம். புந்தி- புத்தி; அது ஈண்டன்பின்மேற்று. (கடுள)

கிழவோன் நஞ்சப்பெறாது நெஞ்சோடுகிளத்தல்.

அதாவது—பாங்கியிவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேறோர் பற்றுக்கோடும் பெறாது தன்னெஞ்சொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தூற்றிக்கடிமலர்ப்பைந்தேன்கவர்ந்துசுரும்பினங்க
ளேற்றிக்குவடுறவைத்நாங்கிதணினிருந்தவரை
நீற்றிற்றிகழ்வடிவார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
போற்றிக்குறவர்வைத்தான்மனமேயென்புரிகுவமே.

ப-ரை. மனமே - நெஞ்சே, சுரும்பு இனங்கள் - வண்டுக்கூட்டங்கள், கடிமலர் - மணமலரின், பைந்தேன் - பசியதேனை, தூற்றி -

இறைத்து, கவர்ந்து - கிரகித்து, குவடூஉற - மலைமேற் பொருந்த, ஏற்றிவைத்தாங்கு - ஏற்றிவைத்தாற்போல, இதணில் இருந்தவரை - பரண்மீதிருந்தவரை, நீற்றின் - திருநீற்றினால், திகழ்-விளங்குகிற, வடிவார்—, வெங்கைவாணர்-திருவெங்கைவாணர், (அவரது) நெடுஞ் சிலம்பில் - நெடியமலையிலுள்ள, குறவர்-குறவர்கள், போற்றிவைத் தால் - சிறைப்படுத்தி வைத்தால், என்புரிகுவம் - யாம் என்செய் வோம், எ - று.

க - ரை. மனமே! வண்டுக்கூட்டங்கள் தேனையீட்டி மலைமேல் வைத்தாற்போலப் பரண்மேலிருந்தவரை திருவெங்கைவாணரது மலையிலுள்ள குறவர் சிறைப்படுத்திவைத்தால், யாமென் செய்வோம் என்பதாம்.

வி - ரை. தூற்றுதல் - இறைத்தல். கடி - வாசனை. பரண்மீ திருந்தவர் என்றது தலைவியை. நீற்றின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது. வடிவு - திரு மேனி. போற்றுதல்-சிறைப்படுத்தல். புரிதல்-செய்தல். குவட்டின் மீதுவைக்கப்பட்ட தேன் இதண்மீதிருந்த தலைவிக்குவமையாகக் கொள்க. ஏ - இரங்கல்.

கிழவோன் பிரிந்துழிக்கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்க லும், பாங்கி புலம்பலும், தலைவனீடத்தலைவி வருந்தலும், முன் னிலைப் புன்மொழி மொழிதலும், பாங்கியொடு பகர்தலும், நீங்கற் கருமைதலைவி நினைந்திரங்கலும், கிழவோன் றஞ்சம்பெறுது நெஞ் சொடு கிளத்தலும் ஆகிய ஏழும் இரங்கற்குரிய வாமாறும், தலைவி யைப்பாங்கி கழறலும், தலைவியைப் பாங்கியச் சுறுத்தலும், தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும், ஆகிய மூன்றும் வன்புறைக்குரிய வாமாறும், சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல் முதலிய நான்கும் இற்செறிப் புணர்த்தற்குரிய வாமாறும் காண்க. (கருஅ)

பகற்குறியிடையீடு.

அதாவது—பகற்குறிக்கண்வந்ததலைமகன் குறிக்கட்செல்லாது இடையீடு பட்டுப்போதல், "விலக்கல் சேறல் கலக்கமென்றுங், கிளப் பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு" என்னும் விதியால் பகற் குறி யிடையீடு மூவகைப்படும்.

இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கல்.

அதாவது—தலைமகனைப் பாங்கி குறியிடத்து வாரற்கவெனப் பகற்குறி விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கானக்குறவர்திருவெங்கைவாணர்கனகவெற்பி
லேனற்குரலரிவான்குறித்தாரன்னையென்பவளு
மானக்கயல்விழியாள்குரலீரவருவதுபோற்
றேனக்கலர்தொடையாய்வருவாளித்தினைப்புனத்தே.

ப - ரை. தேன்நக்கு அலர் தொடையாய் - தேனோடு மலர்ந்து விளங்குகிற பூமாலையையுடையவனே, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, கனகவெற்பில் - பொன்மலையிலுள்ள, கானக்குறவர் - காட்டு வாழ்வினராகிய குறவர்கள், ஏனல் குரல் - தினைக்கதிர்களை, அரிவான் - கொய்ய, குறித்தார் - நினைத்தார்கள், மானம் - பெருமை பொருந்திய, கயல்விழியாள் - சேல்விழியாளாகிய, அன்னை என்பவளும் - தாயென்பவளும், குரல் ஈரவருவதுபோல் - தினைக்கதிர் கொய்ய வருதல்போல, இத்தினைப்புனத்து வருவாள் - இந்தத் தினைப்புனத்திற்கு வருவாள், (ஆதலால் இனி நீ யிங்குவாரற்க) எ - று.

க - ரை. தேனோடு மலர்ந்து விளங்குகிற பூமாலையையுடையவனே! இந்நிலத்தவராகிய குறவர் தினைக்கதிர் கொய்ய நினைத்திருக்கின்றனர், தாயும் தினைக்கதிர்கொய்ய வருவாள்போல் இந்தப்புனத்திற்கு வருவாள், ஆதலால் நீ இனி யிங்குவரற்பாலையல்லை யென்பதாம்.

வி - ரை. கானம் - காடு. அரிவான் - அரிய. (செயவெனெச்சம்) அரிதல் - கொய்தல். குறித்தல் - நினைத்தல். குரல் - தினைக்கதிர். ஈர்தல் - கொய்தல். நகுதல் - விளங்குதல். அலர்தல் - மலர்தல். தொடை - மாலை; தொடுக்கப்படுவது; தொழிலாகுபெயர். ஏகாரம் ஈற்றசை. (கருக)

இறைவியைக் குறிவரல்விலக்கல்.

அதாவது—தலைமகளைப் பாங்கி குறியிடத்து வாரற்கவெனப் பகற்குறிவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்,—

மாடுண்டவீரப்பிறையார்தென்வெங்கைவரையினிலுன்
சேடுண்டகொங்கைப்பசலைகண்டேதினைக்காப்பயிர்த்துந்
தோடுண்டகாதுடையாயன்னைதானுந்துணிந்திலளீ
யோடுண்டகூழைவேழுறுகாநிற்குமுள்ளமுமே.

ப - ரை. தோடுண்டகாது உடையாய் - தோடணிந்த செவியையுடையாளே, மாடுண்ட - செல்வமாகக் கொண்ட, ஈரப்பிறை

யார் - குளிர்ச்சியாகிய பிறையை யணிந்தவராகிய சிவபெருமானாரது, தென்வெங்கை வரையினில் - தென்வெங்கை மலையில் வாழ்கின்ற, அன்னைதானும் - நமது தாயும், உன் - உனது, சேடுண்ட - பெருமைபொருந்திய, கொங்கை - தனத்தின்மேலுள்ள, பசலைகண்டு - பசலையைக்கண்டு, தினைக்காப்பு - உன்தினைக்காவலை, அயிர்த்து - சந்தேகித்து, துணிந்திலள் - துணியாதவளாகி, ஈயோடு உண்ட - ஈயுடனேயுண்ட, கூழ் எனவே - உணவுபோலவே, உள்ளமும் மறுகாநிற்கும் - மனமுமயங்காநிற்கிறாள், எ-று.

க - ரை. தோடுண்ட காதுடையாய்! அன்னையானவள் உன் கொங்கைப் பசலைகண்டு ஐயுற்று, இன்னதெனத் துணியாதவளாகி, ஈயோடுண்ட கூழ்போல மயங்காநின்றாளென்பதாம்.

வி-ரை. மாடு - பொன் ஆதலால் பொன்போற் கருதிய வெனினுமாம். ஈரம் - குளிர்ச்சி. சேடு - அழகு இளமை திரட்சியென்பனவுமாம். பசலை - பசலைநிறம்; பசப்பு மாமை யென்பனவு மிதன் பரியாயப்பெயர்கள். இதனை வைவர்ண்யம் என்பர் வடநூலார். அயிர்த்தல் - ஐயுறல். தோடு - குழை. (காதணி) துணிதல் - நிச்சயித்தல். மறுகுதல் - மயங்குதல். காப்பு-காவல். (கசுO)

இறைமகள் ஆடிட நோக்கியழுங்கல்.

அதாவது—தலைமகள், தான் ஆடுமிடத்தை நோக்கி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீடுந்தினையிற்கிளிநோக்குதலெனநின்றுநம்மோ
டாடுந்தலைவர்வரனோக்கிதனுமவருடனே
கூடுந்தொழின்மறைக்குஞ்சுனையோடலர்கொய்யுமலர்க்
காடும்பிரிவுறச்செய்வதென்னோவெங்கைக்கண்ணுதலே.

ப - ரை. வெங்கை- திருவெங்கைப்பதியிலெழுந்தருளிய, கண்ணுதல் - நுதற்கண்ணராகிய சிவபெருமானார், நீடும் - நீண்ட, தினையில் - தினைப்புனத்தில், கிளிநோக்குதல் என நின்று - கிளிகளைப் பார்ப்பதுபோல நின்று, நம்மோடு - நம்முடனே, ஆடும் - விளையாடுகிற, தலைவர்வரல் - தலைவரது வரவை, நோக்கு-பார்த்தற்குரிய, இதணும் - பரணினையும், அவருடனே - அத்தலைவருடனே, கூடும்தொழில்-யாம்புணருந்தொழிலை, மறைக்கும்-மறைக்கின்ற, சுனையோடு - சுனைகளுடனே, அலர் கொய்யும் - பூப்பறிக்கின்ற, மலர்க்காடும் - பூஞ்சோலையினையும், பிரிவுற - விட்டுப்பிரியுமாறு, செய்வது - செய்தற்குக்காரணம், என்னோ - யாதோ (அறிகிலேம்) எ - று.

க - ரை. திருவெங்கைக் கண்ணுதலார், நமது தலைவர் வரவு நோக்குதற்குரிய இதண்,நம்புணர்ச்சிக் குறியை மறைக்கின்ற சுனை, யாம் மலர்கொய்யும் பூஞ்சோலை ஆகிய எல்லாவற்றையும் பிரியுமாறு செய்வதற்குக் காரணம் யாதோ அறிகிலேம் என்பதாம்.

வி - ரை. தினையில் - தினைப்புனத்தில். வரல்-வரவு. இதண் - பரண். (அட்டாலை). கூடுந்தொழில் - புணர்ச்சித்தொழில். அலர் - மலர். என்னோவென்னு மோகாரம் இரங்கல். (கசுக)

பூங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறல்.

அதாவது—பாங்கி, விளையாடுமிடம் விட்டுநீங்கித் தலைவியைக் கொண்டு தம்மூர்க்குச் செல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

வயிரோசனனுக்குலகீந்தவர்வெங்கைமன்னனுக்குப்
பயிரோடுறவறநீத்தாளென்றெண்ணிப்பழுதுரையல்
செயிரோசிறிதுமிலாக்கிளிகாடன்சிறுகுடிலுக்
குயிரோடரிவைநடந்துசென்றாளென் றுரைமின்களே.

ப-ரை. செயிர் - குற்றம், சிறிதும் இல்லா - அற்பமுமில்லாத, கிளிகாள் - கிள்ளைகளே, வயிரோசனனுக்கு - மஹாபலிக்கு, உலகு - பாதாளலோகத்தை, ஈந்தவர் - கொடுத்தருளினவராகிய சிவபெருமானாது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, மன்னனுக்கு - அரசனுக்கு, பயிரோடுஉறவு - தினைப்பயிரோடுறவினை, அற நீத்தாளென்று எண்ணி - அறநீக்கினாளென்று நினைத்து, பழுது உரையல் - பழுது சொல்லற்க, அரிவை - தலைவியானவள், தன்சிறுகுடிலுக்கு - தனது சிறுகுடிலுக்கு, உயிரோடு - உயிருடனே, நடந்து சென்றாள் என்று - நடந்து போயினாளென்று, உரைமின்கள் - சொல்லுங்கள், எ - று.

க - ரை. செயிர் சிறிதுமில்லாத கிளிகளே! வயிரோசநனுக் குலகீந்தவர் வெங்கை மன்னனுக்கு, தலைவியானவள் தினைப்பயிரை யற நீத்தாளென்றுரையற்க, தன்சிறுகுடிலுக்கு உயிரோடு நடந்து சென்றாளென்று சொல்லுங்கள் என்பதாம்.

வி-ரை. மஹாபலி விரோசநன் புத்திரனாதலால் இவன் வயிரோசநன் எனப்பட்டான். உலகு என்றது பாதாள லோகத்தை. உறவு - உறவாந்தன்மை. அறநீத்தல் - பற்றறவொழிதல். பழுது - குற்றம். உரையல் - வியங்கோள். செயிர் - குற்றம். அரிவை ஈண்டுப் பருவங் குறியாது மாது என்னுந் துணையாய் நின்றது. இத்துணையும் ஆறுநாட் செய்தியென் றுணர்க. (கசுஉ)

பின்னாள்நெடுந்தகை குறிவயின் வீடுசென்றிரங்கல்.

அதாவது—ஏழாநாள், தலைவன், குறியிடமாகிய மாதவிப் பந்தரிடத்து வந்து நீட்டித்து நினைந்திரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தன்னோடிருந்தபொழுதிளஞ்சோலைசெய்தன்மைகண்டேற்
கன்னோதனியிருந்தாற்செய்யுமாறுமறிவிக்கவோ
மின்னோவெனநின்றவிர்சடையார்திருவெங்கைவெற்பி
லென்னோவறிந்தருள்செய்வாள்வராமலிருந்ததுவே.

ப - ரை. மின்னோ எனநின்று - மின்கொடியோ வென்னுமாறு நின்று, அவிர் - விளங்குகிற, சடையார் - சடாபாரத்தையுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில், என்நோவு - என்வருத்தத்தை, அறிந்து - உணர்ந்து, அருள் செய்வாள் - அருள்செய்பவளாகிய தலைவி, வராமலிருந்தது - வாராதிருந்தது, தன்னோடு இருந்தபொழுது - யான்தன்னோடு கூடியிருந்த காலத்தில், இளஞ்சோலை செய்தன்மை - இளம்பொழில் செய்த தன்மையை, கண்டேற்கு - அறிந்த வெனக்கு, தனியிருந்தால் - தனித்திருப்பின், செய்யுமாறும்-செய்யுந்தன்மை யினையும், அறிவிக்கவோ - அறிவிக்கத்தானோ, எ - று.

க - ரை. தன்னோடு நான் கூடியிருந்த காலத்தில் இப்பொழிலின் செய்கையைக் கண்டவெனக்குத் தனியிருந்தாற் செய்யுஞ்செய்கையு மறிவிக்கத்தானோ? என்னோவறிந் தருள்செய்வாள் வராமலிருந்தது என்பதாம்.

வி - ரை. தன்னோடு - தலைவியோடு. இளஞ்சோலை செய்தன்மை - இன்பம். தனியிருந்தாற் செய்யுமாறு - துன்பம். அன்னோ - இரங்கற் குறிப்பு; அதிசயவிடைச் சொல்லுமாம். இறைவரது சடை மின் கொடித்திரள்போன்று விளங்குவதாதலால், 'மின்னோவென நின்றவிர்சடை, என்றார். "பொலிந்திலங்கு மின்வண்ண மெவ்வண்ணமவ்வண்ணம் வீழ்சடை" என்றார் மேலோர். நோவறிந்தருள் செய்பவள் அதனைச் செய்யாதிருத்தல் இரங்கற்கும் அதிசயித்தற்கு மேதுவாயிற்று. (கசுரு)

வறுங்களநாடிமறுகல்.

அதாவது—தலைவன், தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பெறுங்களநஞ்சமுடையாரடியவர்பிள்ளைதன்னை
யறுங்களமென்னுமொருவெங்கைவாணரணிவரைமே
னறுங்களவன்னகுழனீங்கமங்கலநாணிழந்த
வறுங்களமென்னவிருந்ததந்தோவிம்மணியிதணே!

ப-ரை. நஞ்சம்பெறும் - நஞ்சத்தை யணியப்பெற்ற, களம் உடையார் - கண்டத்தை யுடையவர், அடியவர்பிள்ளை தன்னை - தொண்டரது பிள்ளையை, களம் அறும் என்னும் - கழுத்தறுங்களென்ற, ஒரு வெங்கைவாணர் - ஒப்பற்ற வெங்கைவாணர், (அவரது) அணிவரைமேல் - அழகிய மலையில் வாழ்கின்ற, நறுங்கள அன்ன குழல் - நறியகளங்கனியை நிகர்த்த கூந்தலையுடையாள், நீங்க-நீங்குதலால், இ - இந்த, மணி இதண் - அழகிய பரணானது, மங்கல நாண் இழந்த - மங்கல சூத்திரத்தை யிழந்த, வறுங்களம் என்ன இருந்தது - வெறுங்கழுத்துப் போன்றிருந்தது, எ - று.

க-ரை. கறைக்கண்டரும், திருவெங்கைவாணருமாகிய சிவபெருமானது மலையிலுள்ள கருங்குழலாள் நீங்குதலால் இந்த அழகிய இதணானது மங்கல சூத்திரத்தை யிழந்த வெறுங்கழுத்தை நிகர்த்திருந்தது என்பதாம்.

வி-ரை. களம் - வடசொல். அடியவர் என்றது சிறுத்தொண்டரை. பிள்ளை யென்றது சீராளனை. கள-களா என்பதன் குறுக்கம். கள-களம்பழத்தை யுணர்த்தலால் முதலாகுபெயர். நறுமை இனிமை மேற்று. நறுங்கள வன்னகுழல்-அடைபல வடுத்தவாகுபெயர். நீங்க-காரணப்பொருட்டாகிய செயவெனெச்சம். நாண் - கயிறு. அந்தோ-இரங்கற் குறிப்பிடைச்சொல். 'நறுங்களவன்ன குழனீங்க மங்கல நாணிழந்த 'வறுங்களமென்ன விருந்ததந்தோ விம்மணியிதண்' என்றமையால் அவள் நீங்கு முன்னே மங்கல நாணோடுகூடின களம்போன்றழகாயிருந்ததென்பது பெறப்பட்டது. (கசுச)

குறுந்தொடிவாழூர்நோக்கிமதிமயங்கல்.

அதாவது—தலைவியின் ஊர்தேடிச் சேறுமெனின் வழியறிந்திலமேயெனத் தலைவன் மதிமயங்கிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அறத்தாறுடையர்நகர்பெரும்போகமறமறியா
மறத்தாறுடையர்விரும்புதல்போலும்வளர்சடையின்
புறத்தாறுடையர்திருவெங்கைவாணர்பொருப்படைந்த
குறத்தாறுடையர்மடமாதுமேவக்குறிப்பதுவே.

ப-ரை. வளர்சடையின்புறத்து - நீண்ட சடையினிடத்து, ஆறு உடையர் - கங்கை யாற்றை யுடையவர், திருவெங்கைவாணர்- திருவெங்கையில் வாழ்பவர், (அவரது) பொருப்பு அடைந்த - பொருப்பைச்சேர்ந்த, குறத்து ஆறு உடையர் - குறவரது மரபையுடையவரது, மடமாதை - இளம்பெண்ணை, மேவ - அடைய, குறிப்பது - யாம் நினைப்பது, அறத்து ஆறு உடையர் - தருமமார்க்கத்தை யுடையவர், நுகர் - நுகர்தற்குரிய, பெரும்போகம் - பேரின்பத்தை, அறம் அறியா மறத்து ஆறு உடையர் - தருமமார்க்கத்தை யறியாத அதருமமார்க்கத்தை யுடையவர், விரும்புதல்போலும் - இச்சித்தலை நிகர்க்கும், எ-று.

க-ரை. திருவெங்கை வாணரது மலையிலுள்ள குறப்பெண்ணையாம் நினைத்தல், புண்ணியர் நுகர்தற்குரிய போகத்தைப் பாவிகளுடைய விரும்புதல்போலும் என்பதாம்.

வி-ரை. அறத்தாறு - அறநெறி. நுகர்தல் - அநுபவித்தல். பெரும்போகம் - பேரின்பம். அறமறியா மறத்தாறு உடையவர் - பாவிகள். சடையின் புறத்து என்பதில் புறம் ஏழனுருபு. ஆறு எனவாளா கூறினும் சடையின் புறத்து என்றமையால் ஆகாய கங்கையைக் குறித்தது. குறத்தாறு - குறவர் மரபு. குறிப்பது - நினைப்பது.

இடமணித் தென்றற் றுறையில் தன்னூரும்அவனூரும் ஒரெல்லையி லுள்ளனவெனக் கூறினவன் இங்ஙனம் அவளூரறியேனெனக் கூறுதல் முரணுமேயெனின், மதிமயங்கிக் கூறுதலான் முரணாதென்றுணர்க. இவற்றுள் முன்னைய விரண்டும் விலக்கற் குரியன. பாங்கியாற்கூட்டம் விடுத்துக்கொண்டகறல் ஒன்றும் சேரற்குரித்து. ஏனைய நான்கும் கலக்கத்திற் குரியன. (கசுடு)

இரவுக்குறி.

அதாவது—தலைவன் தலைவியை இரவுக்குறியிற்கூடுதல். 'வேண்டன் மறுத்த லுடன்படல் கூட்டல், கூடல் பாராட்டல் பாங்கிற் கூட்டல், உயங்க னீங்கலென் றுன்பது வகைத்தே, இயம்பிப் போந்த விரவுக்குறிதானே'' என்னும் விதியால் இரவுக்குறி ஒன்பது வகைப்படும். அவற்றுள்,

இறையோனிருட்குறிவேண்டல்.

அதாவது—தலைவன் இருட்குறியை விரும்பிப் பாங்கியுடன் கூறல். அதற்குச் செய்யுள்,—

பொருந்தாரரணம்பொடித்தோர்பவப்பிணிபோக்குதற்கு
மருந்தாமிறைவர்திருவெங்கைவாணர்வரையனையீர்
திருந்தார்கலியிற்புகுந்துநன்மீன்வரச்செய்துமக்கு
விருந்தாகவைத்தகன்றானளியேனையவ்வெய்யவனே.

ப - ரை. பொருந்தார்-பகைவரது, அரணம்-மதில்களை, பொடித்தோர் - பொடிபடுத்தினவர், பவப்பிணி-பிறவிப்பிணியை, போக்குதற்கு - ஒழிப்பதற்கு, மருந்து ஆம் இறைவர் - மருந்தாகிய இறைவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) வரை அனையீர் - மலையை நிகர்த்தவரே, அவ்வெய்யவன்-அந்தச் சூரியன், திருந்து - திருத்தமாகிய, ஆர்கலியில் புகுந்து - கடலிற் பிரவேசித்து, நல் மீன் வரச்செய்து - நல்ல மீன்களை வரப்பண்ணி, அளியேனை - எளியேனை, உமக்கு விருந்தாகவைத்து - உமக்கு விருந்தினனாகவைத்து, அகன்றான் - நீங்கினான், எ - று.

க - ரை. திருவெங்கைவாணர் வரையனையீர்! அந்த வெய்யவன் கடலிற் புகுந்து நல்ல மீன் வரச்செய்து எளியேனை நுமக்கு விருந்தாகவைத்து நீங்கினான், என்பதாம்.

வி - ரை. பொருந்தார் - பகைவர். அரணம் பொடித்தார் என மேல் வருதலால் அவர் முப்புரத்தார் என்பது பெறப்பட்டது. முப்புரம் இரும்பு, வெள்ளி, பொன் என்பவற்றானியன்று ஜங்கமமதிலுருவா யிருத்தலான் அரணமென்றே கூறினர். பொடித்தல் - நீறாக்குதல். பவம் - பிறவி. ஆர்கலி - கடல். மீன்-உடுக்கள் ; மீன்கள். விருந்து - புதுமை; அது புதியவன் என்னும் பொருள் பயந்துநின்றது. விருந்தினர் பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறியாது வந்தாரும் என இருவகையர். அளியேனை - எளியேனை, தயையுள்ளவனை, கொடாதவனை. வெய்யவன்-சூரியன். கொடியவன்- கோபமுள்ளவன். (கசுசு)

பாங்கி நெறியினதருமைகூறல்.

அதாவது—பாங்கி நெறியின தருமையைத் தலைவற்குக் கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அங்கமுழுவணியானென்றென்வெங்கையரனருண்மா
தங்கமுழுமதயானையன்றுட்கற்சாடுமொரு
சிங்கமுழுவரியன்றெனவேழமுஞ்சியமுஞ்சேர்
துங்கமுழுவனமெவ்வாறிருள்வரச்சொல்லுவதே.

ப-ரை. (மன்னனே) அங்கம்-என்பு மாலைகளையே, முழுஅணி ஆனேன் - தொழின்முற்றிய ஆபரணமாகக் கொண்டவன், தென் வெங்கை அரன் - தென்வெங்கைச் சிவபெருமான், (அவன்) அருள்-ஈன்றருளின, மாதங்கம் - யானையானது, முழுமதயானை அன்று - முழுமதயானையல்ல, ஆடகன் - இரணியனை, சாடும் - கொன்ற, ஒரு - ஒப்பற்ற, சிங்கம் - சிங்கமானது, முழுஅரிஅன்று - முழுச் சிங்கமல்ல, என - என்னும்படி, வேழமும் - யானைகளும், சீயமும்-சிங்கங்களும், சேர்-கூடியிருக்கிற, துங்சம்-உயர்வாகிய, முழுவனம்-பெருங்காட்டில், இருள் - இருட்காலத்தில், வரச்சொல்லுவது - உன்னையாம் வரச்சொல்லுதல், எவ்வாறு - எப்படி, எ - று.

க - ரை. மன்னனே! என்புமாலைகளை ஆபரணமாகக்கொண்ட சிவபெருமானீன்றருளின யானை முழுமதயானையன்று, இரணிய னைக் கொன்ற சிங்கம் முழுச்சிங்கமன்று என்னும்படி, யானைகளும், சிங்கங்களும் கூடியிருக்கிற பெருங்காட்டில் உன்னை யெவ்வாறிருட் காலத்தில் வரச்சொல்லுவது என்பதாம்.

வி-ரை. அங்கம்-என்பு; அது அதனாணியன்ற மாலைக்காயிற்று. முழுஅணி - தொழில் முற்றியஆபரணம். அரனருள் மாதங்கம்-விநாயகர்; அவர்க்கு மும்மதமின்மையால் முழுமதயானையன்று என்றும், ஆடகற் சாடுமொருசிங்கம், அது பாதி நரரூபமாதலால் அதனை முழுவரியன்று என்றும் கூறினார். ஆடகம் - பொன்; இதன்பரியாயம் ஹிரண்யமாதலால் இவனை யிரணியனென வழங்கலாயினர். வேழம் - யானை. சீயம் - சிங்கம். முழுவனம் - பெருங்காடு. எவ்வாறிருள்வரச் சொல்லுவது என்றது, சொல்லுவது எமக் கடாதென் றவாறாயிற்று. (கரு௭)

இறையோன் நெறியினை தெளிமைகூறல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவன் நெறியினை தெளிமையைக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பங்கந்தனக்கிலன்வெங்கையிலேநும்பணைமுலைமா
தங்கந்தனக்குமம்மாதங்கபாரந்தரிக்குமிடைச்
சிங்கந்தனக்குந்தளர்வதல்லாமற்சினவிலங்கின்
சங்கந்தனக்கொருநாளுந்தளர்குவன்றாழ்குழலே.

ப-ரை. தாழ்குழலே-தாழ்குழால்; தனக்கு—, பங்கம் இலன் - ஒருகாலும்அழிவில்லாதவனாகிய சிவபெருமானது,வெங்கையிலே—, நும் - உம்முடைய, பணைமுலை - பருத்த முலைகளாகிய, மாதங்கம்

தனக்கும் - யானைக்கும், அ - அந்த, மாதங்கபாரம் - யானையின் பொறையை, தரிக்கும் - தாங்குகிற, இடை - இடையாகிய, சிங்கம் தனக்கும்-சிங்கத்துக்கும், தளர்வதுஅல்லாமல் - தளர்வதேயன்றி, சினம் - கோபத்தையுடைய, விலங்கின் சங்கம் தனக்கு - விலங்கின் கூட்டத்திற்கு, ஒரு - ஒப்பற்ற, நானோதளர்குவன் - நானோ தளர்வேன், எ - று.

க-ரை. தாழ்குழால் ! அழிவற்றவனாகிய சிவபெருமானது திருவெங்கையிலுள்ள நுமது பருத்த முலையானைக்கும், அந்தயானைப் பொறையைச் சுமக்கின்ற இடைச்சிங்கத்துக்கும் தளர்வதேயன்றி விலங்குக் கூட்டத்திற்கு நானோதளர்வேன் என்பதாம்.

வி - ரை. எஞ்ஞான்றும் அழிவற்றவனாதலால் இறைவனை பங்கந்தனக்கிலன் என்றார். பணைத்தல் - பருத்தல். தரித்தல் - சுமத்தல். விலங்கு - மிருகம். சங்கம்-கூட்டம். நானோவென்னு மோகாரம் எதிர்மறை; தளரேன் என்றதாயிற்று. (கஅ)

பாங்கியவனாட்டணியியல் வினாதல்.

அதாவது—பாங்கிதலைவனது நாட்டின் அணியியல் கவினா வாசிற்றல். அதற்குச் செய்யுள்,—

போதேதுகொய்வரிழையேதணிவர்பொழில்விளையாட்
டேதேதுசெய்வர்புனலேதுதோய்வரெமைத்துதிப்பிற்
றீதேதுமில்லையெனும்வெங்கைவாணர்செழுஞ்சிலம்ப
சூதேதெனுமுலையாருங்கணாட்டியல்சொல்லுகவே.

ப - ரை. எம்மைதுதிப்பின் - எம்மைத்துதித்தால், தீதுஏதும் இல்லையென்னும் - தீமையாது மில்லையென்கிற, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, செழுஞ்சிலம்ப - செழியசிலம்பனே, சூது-சூதாடுகருவி, ஏது என்னும் - யாதென்று வினவுகிற, முலையார் - முலையையுடைய மாதர், போதுஏது கொய்வர் - எந்த மலரைப்பறிப்பார், இழைஏது அணிவர் - எந்த ஆபரணமணிவார்கள், ஏது ஏது - எந்தெந்த, பொழில்விளையாட்டு செய்வர் - பொழில் விளையாடலைச் செய்வர், புனல்ஏது தோய்வர்-எந்தநீரில் மூழ்குவர், (இங்ஙனமாய) உங்கள் நாட்டியல் சொல்லுக - உங்கள் நாட்டியலைச்சொல்லுக, எ - று.

க - ரை. திருவெங்கைவாணர் செழுஞ்சிலம்பனே ! உங்கணாட்டு மாதர், எந்த மலரைப்பறிப்பார்கள்? எவ்வணியை யணிவார்கள்?

எந்தப்பொழில் விளையாடலைச்செய்வார்கள்? எந்த நீரிற்குடைவார்கள்? இவையாவும் விரிவாய்க்கூறுக வென்பதாம்.

வி-ரை. இழை - ஆபரணம். பொழில் - சோலை. தோய்தல் - மூழ்குதல். சூது - சூதாடுகருவி. (சொக்கட்டான்காய்) இதனைவல் என்றுங்கூறுப. தலைவன்நெறியினதெளிமைகூறியவழி, நன்றென்று கூட்டற்குடம்பட்டுக்கூறுது அணியியல்வினுதல் வினுவமுவெனின், அன்று. என்னை ; தலைவனை அவனுட்டணி வினுவழித்தலைவன் தன்னுட்டணியியல்வினுவும், வினுவழி, அணியியல் கூறும்வழி அது வேறறியிடமாகக் கூறலாமெனக் கருதிப் பாங்கி வினுவினுளாதலானென்க. அணி - ஆபரணம். இயல் - புனைதல், முடித்தல், விளையாடிடம் முதலாயின. (கசுகூ)

கிழவோன் அவனுட்டணியியல் வினுதல்.

அஃதாவது—பாங்கிகுறிப்பறிந்து அவனுட்டணியியலைத் தலைவன் வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

என்னுட்டணியியலென்னுயினென்னுனக்கென்றனக்குப்
பொன்னுட்டணியியலெல்லாங்கவர்ந்துபுகழ்மலிந்த
சொன்னுட்டணியியல்வெங்கைபுரேசர்சுடர்க்கிரிசூழ்
நின்னுட்டணியியலெல்லாமுரைத்தருணேரிழையே.

ப - ரை. நேரிழையே-நேரிழாய், என்நாட்டு-எனது நாட்டின், அணி இயல் - அணியியல்கள், என்ஆயின் - என்னவாயினும், உனக்குஎன் - உனக்குயாது பயன், பொன்நாட்டு - பொன்னுலகத்தின், அணிஇயல் எல்லாம் - அணியியல்களெல்லாவற்றையும், கவர்ந்து - கவர்ந்துகொண்டு, புகழ்மலிந்த - புகழ்மிகுந்த, சொல்நாட்டு - சொல்லைநிலைபெறுத்தின, அணிஇயல் - அழகுவாய்ந்த, வெங்கைபுரேசர்- வெங்கைப்பதிக்குப் பதியாராகிய சிவபெருமானுரது, சுடர் - ஒளி பொருந்திய, கிரிசூழ்-மலையைச்சூழ்ந்த, நின்நாட்டு - உன்னுட்டின், அணி இயல் எல்லாம் - அணியியல்கள் யாவும், என்றனக்கு-எனக்கு, உரைத்தருள் - சொல்லியருள்வாயாக, எ - று.

க - ரை. நேரிழையே! என்னுட்டணியியல்களை வினவலால் உனக்குண்டாகும் பயன்யாது? திருவெங்கை ஈசரதுமலையைச்சூழ்ந்த வுன்னுட்டணியியல்களெல்லாம் எனக்குரைத்தருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. நேரிழை - அன்மொழித்தொகை; நேரிய ஆபரண மணிந்த மாதேயென்பதுபொருள். பொன்னுலகம்-சுவர்க்கலோகம்,

(அமராவதி). கவர்தல் - கிரகித்தல். மலிதல் - மிகுதல். இயலல் - பொருந்தல். (கஎ0)

அவற்நந் தன்னுட்டணியியல் பாங்கிசாற்றல்.

அதாவது—அவ்வாறு வினவிய தலைவனுக்குப் பாங்கி தன்னுட்டணி யியல்களைக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

பிறைக்கோலஞ்செய்யுநுதற்சூட்டணிதுவர்பெய்வளையா
லிறைக்கோலஞ்செய்வர்சுனையாடுவரவ்விரதிதனைச்
சிறைக்கோலஞ்செய்யும்விழியார்தம்வெங்கைச்சிலம்பமத
னறைக்கோலஞ்செய்ய நறைக்கோலஞ்செய்வரென் னுட்டவ
[ரே.

ப-ரை. அ-அந்த, இரதிதனை - இரதியை, சிறைக்கோலம் செய்யும் - சிறைக்கோலஞ்செய்த, விழியார்தம்-நுதற்கண்ணையுடையவராகிய சிவபெருமானரது, வெங்கைச் சிலம்ப - திருவெங்கைச் சிலம்பனே, என்நாட்டவர் - என்னுட்டு மாதர்கள், பிறைக்கோலம் செய்யும் - பிறையி னுருவத்தைக் கொண்ட, நுதற்சூட்டு அணிகுவர் - நெற்றிச்சுட்டி யணிவார்கள், பெய்வளையால் - இடப்பட்டவளையலால், இறைக்கோலம் செய்வர் - முன்கையை யலங்கரிப்பார்கள், சுனையாடுவர் - சுனை குடைவார்கள், மதன் - மன்மதனுனவன், அஞ்சு நறைக்கோல் எய்ய - ஐந்து மலர்க்கணைகளை யெய்ய, நறைக்கோலம் செய்வர் - மணக்கோலம் செய்து கொள்வார்கள், எ-று,

க-ரை. இரதிதேவியைச் சிறைப்படுத்தின நுதற்கண்ணராகிய சிவபிரானரது மலையில் வாழ்கின்ற இறைவனே! என்னுட்டு மாதர்கள் பிறைவடிவினதாகிய நெற்றிச்சுட்டி யணிவார்கள், முன்கையில் வளையலணிவார்கள், சுனையாடுவார்கள், மன்மதன் மலர்க்கணைகளைந்து மெய்யுமாறு மணக்கோலம் செய்து கொள்வார்கள் என்பதாம்.

வி-ரை. பிறை - மூற்பக்கத் தட்டமிச்சந்திரன். கோலம் - அழகுமாம். நுதல் - நெற்றி. சூட்டு - சுட்டி. பெய்தல் - இடுதல். இறை - முன்கை. சுனை - சுனைநீர். ஆடுதல் - குளித்தல். சிறைக்கோலம் - சிறைவேடம். சிலம்பன்-வெற்பன். நறைக்கோல் - மணமுள்ளபாணம். (புஷ்பபாணம்) நறை-மணமாதலால் நறைக்கோலம் என்பதற்கு மணக்கோல மென்றுரை யுரைக்கலாயிற்று. (கஎக)

இறைவிக்கிறையோன் குறையறிவுறுத்தல்.

அதாவது—பாங்கி தலைவனை யோரிடத்தி னிறுவி, தலைவிபாற்சென்று, தலைமகன் குறையை யவட்குக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

வன்மானுமென்முலைச்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
வின்மான்மதிக்கையரவிந்தம்வாடவவ்வேள்விதரு
நன்மான்கரத்தர்தம்வெங்கையிலேயிற்றைநாளிரவி
னின்மான்மதிமுகங்காண்பான்விரும்புநெடுந்தகையே.

ப-ரை. வல்மானும் - வல்லினை நிகர்த்த, மெல்முலை - மெல்லிய தனங்களையும், சேயரி - செவ்வரிபரந்த, வாள்கண் - வாள்போலுங் கண்களையுமுடைய, மடந்தை நல்லாய் - மாதரசே, வில் - ஒளியையும், மான்-மானையுமுடைய, மதிக்கு—, ஐ-அழகினையுடைய, அரவிந்தம்வாட - தாமரைமலர் வாடும்படி, அ-அந்த, வேள்விதரும் - வேள்வியால் தரப்பெற்ற, நல் - சிறந்த, மான் - மானைத்தாங்கிய, கரத்தர் - திருக்கரத்தை யுடையவராகிய சிவபிரானாரது, வெங்கையிலே - திருவெங்கைப் பதியிலுள்ள, நெடுந்தகை - பெருந்தகையானவன், இற்றைநாள் இரவில்-இன்றிராக்காலத்தில், நின் - உனது, மான்மதி - மானையுடைய சந்திரன்போன்ற, முகம் - முகத்தை, காண்பான் விரும்பும் - காணவிரும்புகிறான், எ-று.

க-ரை. வன்மானு மென்முலைச் சேயரிவாட் கண்மடந்தை நல்லாய்! சந்திரனுக்குத் தாமரை மலர் வாடாநிற்க, அவ்வேள்வியிற் றோன்றின மானைத் தரித்தவராகிய சிவபெருமானாரது திருவெங்கைப் பதியிலுள்ள நெடுந்தகையானவன் இன்றிரவில் உன்மான் மதிமுகங்காண விரும்புகிறான் என்பதாம்.

வி-ரை. மானல் - நிகர்த்தல். மடந்தை நல்லாய் என்றது மாதரிற் சிறந்தவளே யென்றபடி. வில்மான்மதி - ஒளியையும் பெருமையையுமுடைய மதியெனினுமாம். அவ்வேள்வி யென்றது அந்தத் தாருகாவனத் திருடியர்செய்த அபிசாரயாகத்தை. மான்மதிமுகம் என்பதில் மான் கண்ணை யென்றுணர்க. காண்பான் - காண; செயவெனெச்சம். நெடுந்தகை - பெருந்தகை. (பெருங்குணத்தை யுடையவன்.) (கஎஉ)

நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவி, அதற்குடம்படாது தன்னெஞ்சொடு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஒலியாலசையச்சருகெழத்தோகையுடன்குதிப்பப்
புலியாவெனவெழக்குஞ்சரமோடப்புளிஞரெல்லா
மெலியாவிரையும்வனத்தேயிறைதிருவெங்கைவெற்பர்
மலியாரிருள்வரநெஞ்சமெவ்வாறுவலிப்பதுவே.

ப-ரை. இறை - இறைவராகிய சிவபெருமானாரது, திரு வெங்கை வெற்பர் - திருவெங்கை வெற்பரானவர், ஒலியால் அசை - ஒலியோடசையாநின்ற, அச்சருகுஎழ - அந்தச்சருகுகள் மேலே யெழ, உடன் - அவற்றுடனே, தோகை குதிப்ப - மயில்கள் குதிக்க, புலி - புலிகள், ஆ என எழ - ஆவென்றுதாவ, குஞ்சரம் ஓட - யானைகளோடாநிற்க, புளிஞர் எல்லாம்-வேடரெல்லாரும், மெலியா - மெலிந்து, இரையும் - சத்திக்கிற, வனத்தே - காட்டில், மலி ஆர் இருள்வர-மிகவும் நிறைந்த இருளில்வருதற்கு, நெஞ்சம்-நெஞ்சமே, எவ்வாறு வலிப்பது - நீ யெவ்வாறு வலிந்திருப்பது, எ - று.

க-ரை. நெஞ்சமே! இறைவராகிய சிவபெருமானாரது திரு வெங்கை வெற்பரானவர், சருகுகள் உதிருமொலியால், மயில்கள் குதிக்கவும், புலிகள் ஆவென்று தாவவும், யானைகள் ஓடவும், வேட ரெல்லாரும் மெலிந்து சத்திக்கிற காட்டில் நிறைந்த மிக்க இரு ளில் வருதற்கு நீயெவ்வாறு வலிந்திருப்பது என்பதாம்.

வி-ரை. அசை - வினைத்தொகை. சருகு - உலர்ந்த இலை. தோகை - சினையாகுபெயர். குஞ்சரம்-யானை; வடசொல். மெலியா- இளைத்து; செயவெனெச்சம்; இளைத்து என்பது பயந்து என்றபடி. இரைதல் - சத்தித்தல். இறை - பண்பாகுபெயர். நெஞ்சம் - அண் மைவிளி. மலியார் இருள் - மிகப்பெரிய இருள். வலிப்பது - உறு திகொண்டிருப்பது. (கஎங)

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

அதாவது — நெஞ்சொடு கூறினதலைவி, பாங்கியோடுடன் பட்டுக்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்னோடுவந்தவிரிசடையோன்றிருவெங்கைவெற்பின்
மன்னோடுநீயிருள்வந்தேகெனச்சொன்மடந்தைநல்லா
யென்னோடுகூடியிருப்பதுபோலவிருந்துமன
முன்னோடுகூடினினியேதுநானிங்குரைப்பதுவே.

ப-ரை. மின்னோடுவந்த - மின்னோடு கூடிவிளங்குகிற, விரி சடையோன் - விரிசடையை யுடையவனாகிய சிவபிரானது, திரு

வெங்கை வெற்பில் - திருவெங்கை மலையிலுள்ள, மன்னோடு - தலைவனோடு, நீஇருள் - நீயிருட்பொழுதில், வந்து ஏகு எனசொல் - வந்து போவென்று சொல்லுவாயாக, மடந்லத நல்லாய் - மாதரசே, என்னோடுகூடி யிருப்பதுபோல இருந்து—,மனம்-என்மனமானது, உன்னோடுகூடின் - உன்னோடுகூடிக்கொண்டால், இனி—,நான்—, இங்கு உரைப்பது - இவ்விடத்துச் சொல்லவேண்டுவது, ஏது - யாது, எ - று.

க-ரை. மடந்தைநல்லாய்! மின்போலும் விரிசடையராகிய திருவெங்கைநாதரது மலையிலுள்ள நம் தலைவரை இருட்பொழுதில் வந்துபோமாறு சொல்லக்கடவை, என்மனம் என்னோடு கூடியிருப்பது போலிருந்து உன்னோடு கூடிக்கொண்டால் இனி நான் சொல்லவேண்டியது யாது என்பதாம்.

வி - ரை. மின்னோடுவந்த என்றது மின்கொடியை நிகர்த்த என்றபடி. இருள்வந்து - இருளில்வந்து. மனம் - என்மனம். உன்னோடு கூடின் என்றது, உடன்படாது மறுத்த நான் இப்பொழுது உன் சொற்குடன்படின் என்றவாறு. இனியேது நானிங்குரைப்பது என்றமையால் இனிநான் சொல்லத்தகுந்த வார்த்தை யொன்றுமில்லை, உன்சொற் குடன்பட்டேன், இனித்தலைவற்கு என் உடன் பாட்டை யறிவிக்கக் கடவை யென்றவாறாயிற்று. (கஎச)

நேர்ந்தமைபாங்கி நெடுந்தகைக்குரைத்தல்.

அதாவது—தலைவி நேர்ந்தமையைப் பாங்கி தலைவற்குக் கூறி நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொலையைக்குறித்தவிலைவேலவநின்குறிப்பிசைய
முலையைப்புணர்மென்கொடியிடையாடன்முரணுமனச்
சிலையைக்கரைத்துவந்தேனொருநான்வெங்கைச்செல்வரைப்
மலையைக்குழைக்கவும்வல்லேனினியிந்தமாநிலத்தே. [போன்

ப - ரை. கொலையைக்குறித்த - கொலைத்தொழிலையே நினைத்துக்கொண்டிருக்கிற, இலை - அச்சவடிவாகிய, வேலவ - வேற்படையுடையவனே, ஒருநான் - ஒப்பற்றநான், நின்குறிப்பு இசைய - உன் கருத்துக்கிணங்க, முலையைப்புணர்மென் கொடியிடையாள் - முலையையுடைய மென்கொடிபோலும் இடையினை யுடையாளது, முரணும் - மாறுபட்ட, மனச்சிலையை - மனமாகியகல்லை, கரைத்து வந்தேன் - கரையச் செய்துவந்தேன், இனி இந்தமாநிலத்து - இனி

யிந்தப்பெரிய நிலவுலகின்கண், வெங்கைச் செல்வரைப்போல் - திருவெங்கைச் செல்வரைப்போல, மலையைக் குழைக்கவும் வல்லேன் - மலையைவளைக்கவும் வல்லேன், எ - று.

க - ரை. கொலையைக்குறித்தவிலை வேலவனே! நின்கருத்துக்கிணங்க, முலையைப்புணர்மென் கொடியிடையாளது மனக்கல்லைக் கரைத்துவந்தேன், இனித்திருவெங்கைச் செல்வரைப்போல மலையைவளைக்கவும் வல்லேன் என்பதாம்.

வி-ரை. "பண்டொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற, னுடல்சுவை யுண்டார் மனம்" என்றவாறே எப்பொழுதும் கொலைத்தொழிலையே கருதியிருத்தலால் 'கொலையைக்குறித்த விலைவேலவ' என்றாள். குறிப்பு-கருத்து. முலையைப்புணர்மென்கொடியிடையாள் - முலையையுடைய மென்கொடி யொன்றிருக்குமாயின் அதனை நிகர்த்த இடையாள்; இது இல்பொருளுவமை; அபூதோபமம் என்பர் வடநூலார். தன் - சாரியை. உபயவிபூதி நாயகராதலால் சிவபிரானை 'வெங்கைச்செல்வர்' என்றாள். வெங்கைச்செல்வர் பொன்மலையைக்குழைத்ததுபோல இவளது கன்மனத்தைக்குழைத்துவந்தேனென்றவாறு. வேறொரு பொன்மலை யிருக்குமாயின் அதனையும் குழைக்கவல்லேன் என்றலுமாம். குழைத்தல் - வளைத்தல். குழைக்கவும்வல்லேன் என்பதில் உம்மையிறந்தது தழீஇயது; உயர்வுசிறப்புமாம். "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனியன்" "கல்லைமென்கனியாக்கும் விச்சைகொண்டென்னை நின்கழற் கன்பனாக்கினாய்" என்றாற்போல. தலைவியின் முரணு மனக்கல்லைக் கரைத்த பயிற்சியால் இனி மலையைக் குழைக்கவும் வல்லேன் என்றாளெனினுமாம். (௧௭௫)

குறியிடைநிறீஇத் தாய்துயி லறிதல்.

அதாவது—பாங்கி, தலைவனைக் குறியிடத்தே நிறுத்தித்தாயினது நித்திரையை யறியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விந்தாசலமுனிமாதவன்போற்றரன்வெங்கைவெற்பிற்
சந்தாடவிகண்முறித்தெறிவேலொடுதண்புனத்தில்
வந்தாகுலநமக்காக்கியவாரணம்வந்துற்றதோ
நந்தாவனத்திற்பறவையெல்லாமுரல்கின்றவே.

ப - ரை. விந்தாசலம் - விந்தமலையை, முனி - கோபித்த, மாதவன் - பெருந்தவத்தினன், போற்று - வழிபடுகிற, அரன் - சிவபிரா

னது, வெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில், சந்தாடவிகள் - சந்தனக்காடுகளை, முறித்து—, எறி-எறியப்பட்ட, வேலொடு-வேலுடனே, தண்புனத்தில்வந்து-தண்ணியபுனத்திடத்தேவந்து, நமக்கு ஆகுலம் ஆக்கிய-நமக்கு வருத்தத்தையுண்டாக்கின, வாரணம்-யானையானது, வந்துற்றதோ-வந்தடைந்ததோ, நந்தாவனத்தில் - நந்தவனத்திலுள்ள, பறவையெல்லாமும் - எல்லாப்பறவைகளும், நரல்கின்றவே - நரலாநின்றனவே, எ - று.

க-ரை. அகத்தியமுனிவரால் பூசிக்கப்படுகிற சிவபெருமானது திருவெங்கை மலையிலுள்ள,சந்தனக்காட்டை முறித்து எறிவேலொடு தண்ணியபுனத்தேவந்து நமக்கு வருத்தத்தையுண்டாக்கின யானையானது வந்தடைந்ததோ, நந்தவனத்துப் பறவைகள் யாவும் நரலாநின்றனவே யென்பதாம்.

வி - ரை. விந்தம் அசலம் விந்தாசலமென்றாயிற்று; இது வடசொற்சந்தி; விந்தமென்னும் பெயரையுடையமலை; சலம்-அசைவது. அசலம் அசையாததாதலால், அசையாது நிலைபெற்றிருத்தல் பற்றி மலையை அசலம் என்பர்வடநூலார். மாதவன் - பெருந்தவத்தினன். விந்தமலையை முன்னொருகாலத்தில் அடக்கினமையால் அகத்தியனை 'விந்தாசல முனிமாதவன்' என்றார். விந்தாசல முனிமாதவன்' என்றது தவ வலியை யுணர்த்தற்கென்க. அரன் - ஹரா: என்னும் வடசொற்றிரிபு; இதற்கு சர்வசம்ஹாரகாலத்தில் எல்லாவற்றையும் அழிப்பவன் என்பதுபொருள். சந்தம் அடவி சந்தாடவி யென்றாயிற்று. சந்தம் - சந்தனமரம். அடவி - காடு. கண்முறித்து எறிவேலொடு எனப்பிரித்து கணுக்களை முறித்தெறியப்பட்டமூங்கிலுடன் என்றுமாம். வேல்-மூங்கில். "சந்தாடவிகண் முறித்தெறி வேலொடு தண்புனத்தே வந்தாகுல நமக்காக்கிய வாரணம்"என்பதற்கு, யானைக்கேற்ப, சந்தநக்காட்டை முறித்து கணுக்களையுடைய மூங்கிலாகிய குத்துக்கோலோடு என்றும், தலைவனுக்கேற்ப, சந்தநச்சோலைத் தழைகளைப்பறித்துப் பகைவரை யெறியாநின்ற வேற்படையோடு என்றும் பொருளுரைத்துக் கொள்க. வாரணம் தலைவனைக்குறிக்குங்கால் உவமையாகுபெயர் என்க. ஓகாரம்-ஐயம். நரலல் - சத்தித்தல். பறவை-தொழிலாகு பெயர். நந்தவநம் நந்தாவனம் என்றாயிற்றெதுகையின்பநோக்கி யென்க. (கஎகூ)

இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தல்.

அதாவது—பாங்கி, குறியிடத்துத் தலைவன் வந்து நிற்றலைத் தலைவிக் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மேனைக்குரியமருமகனார்திருவெங்கைவெற்பின்
மானைக்கடந்துசெவியளவோடுமதர்விழியா
யானைக்கரியுமரிக்குச்சரபமுமாகியிந்தக்
கானைக்கடந்துவந்தாருயிர்போலுநங்காவலரே.

ப - ரை. மேனைக்கு—, உரிய - தகுதியாகிய, மருமகனார் - மருகராகிய சிவபெருமானாரது, வெங்கை வெற்பில்-திருவெங்கை மலையிலுள்ள, மானை கடந்து - மானினைவென்று, செவியளவு ஓடும்-காதளவாக வோடுகிற, மதர் விழியாய் - மதர்த்த கண்களையுடையவளே, உயிர்போலும்-நம்முயிர்போன்ற, நம் காவலர்-நமது தலைவர், யானைக்கு அரியும் - யானைக்குச் சிங்கமும், அரிக்கு சரபமும் ஆகி - சிங்கத்துக்குச் சரபமுமாகி, இந்தக் கானைக் கடந்துவந்தார் - இந்தக் காட்டைக் கடந்துவந்தனர், எ - று.

க - ரை. மேனைக்கு மருகராகிய சிவபெருமானாரது திருவெங்கை வெற்பிலுள்ள, மானைக்கடந்து செவியளவோடு மதர்விழியாய்! நம்முயிர்போலும் நங்காவலர், யானைக்குச் சிங்கமும், சிங்கத்துக்குச் சரபமும் போன்று இந்தக் காட்டைக் கடந்துவந்தார் என்பதாம்.

வி-ரை. மேனை-மேருபுத்ரி; மலையரையன் மனைவி; இவளுக்கு மநோரமையென்று நாமாந்தரமுமுண்டு. கங்கையும், பார்வதியும் இவளீன்ற புதல்வியர். இவ்விருவருள் பார்வதியை மணந்தவராதலால் சிவபிரானாரை 'மேனைக்குரிய மருமகனார்' என்றார். உரிமையாவது மலைவாழ்வு. மானையென்றது மானினது மருட்சிநோக்கத்தையாதலால் ஆகுபெயர். கண்கள்பிறழுந்தோறும் காதளவோடுதலால், 'செவியளவோடு மதர்விழியாய்' என்றார். "காதளவோடிய கலகப்பாதகக் கண்ணியர்" என்றார் திருவெண்காட்டடிகளும். அரி-சிங்கம். சரபம் - சிங்கத்தை வெல்லுவதோர் பறவை; இதற்குக் காலெட்டு. "சிங்கத்தையொத்தெனைப்பாய வருவினையினைச் சேதிக்க வருசிம்புளே"என்றார் பெரியாரும். சிம்புள் - சரபம். இதற்கு வாருண்டகம், சம்பரம், துரோணம் என வேறு பெயர்களுமுண்டு. காட்டின்கடுமைதோன்ற இந்தக் கான், என்றாள். உயிர்போலு நங்காவலர் என்றமையால் உடல்போலும் யாம் அவரையின்றி யமையுமாறிலம் என்பதுந் தோன்றிற்று. 'மானைக்கடந்து செவியளவோடு மதர்விழியாய்' என்றது தலைவியை. (கஎஎ)

அவட்கொண்டுசேறல்.

அதாவது—தலைமகளைப் பாங்கி குறியிடத்துக்கொண்டு செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முருந்தாநகையுமைபங்காளர்வெங்கைமுதுகிரிமே
லிருந்தாமரைகண்மறுத்தவிப்போதிலிதழ்திறந்து
விருந்தாமளிகட்கினிதூட்டுமல்லிகைமென்மலர்கொய்
தருந்தாரணிகுவனில்லாதெழுந்தருளாரணங்கே.

ப - ரை. ஆர் அணங்கே - அருமையாகிய தெய்வப்பெண்ணே, முருந்து ஆம் - முருந்தை நிகர்த்த, நகை-பல்லையுடைய, உமை பங்காளர் - உமைபங்கராகிய சிவபெருமானாரது, வெங்கை முதுகிரி மேல் - திருவெங்கைப் பழமலைமீது, இரு - பெருமைபொருந்திய, தாமரை-தாமரை மலர்கள், கள்மறுத்த இப்போதில்-தேன்மறுத்த இவ்விராக்காலத்தில், விருந்து ஆம் அளிகட்கு-விருந்தாகிய வண்டுகளுக்கு, இதழ் திறந்து - இதழ்களைத் திறந்து, இனிது ஊட்டும் - இனிதாயுண்பிக்கிற, மல்லிகை-மல்லிகையின், மெல் மலர்கொய்து-மென் மலர்களைப் பறித்து, அரு தார்-அருமையாகிய மாலைகளாக்கி, அணிகுவன்-உனக்கணிகுவேன், நில்லாது-நில்லாமல், எழுந்தருள்-எழுந்தருள்வாயாக, எ - று.

க - ரை. ஆரணங்கே! உமைபங்கராகிய சிவபிரானாரது திருவெங்கைப் பழமலைமேல், தாமரை தேன்மறுத்த இவ்விராக்காலத்தில் விருந்தாய்வந்த வண்டுகளுக் கினிதூட்டுகிற மல்லிகை மென்மலர் கொய்து அருமையாகிய மாலை சமைத்தணிகுவேன், இங்கு நில்லா தெழுந்தருளக்கடவை யென்பதாம்.

வி - ரை. முருந்து - மயிலிறகினடி. பங்காளர்-இடப்பாகத்திலுடையவர். முதுகிரி - பழமலை. கள் - தேன். மறுத்தல் - இல்லையெனல். இருந்தாமரைகண் மறுத்தவிப்போது, என்றமையால் இராக்காலமென்பது பெறப்பட்டது. கண்மறுத்த என்பதற்கு கண் மூடின (குவிந்த) என்றுரைத்தலுமாம். இதழ் - இதழாகிய கதவு. அளிகள் - வண்டுகள், ஏழைகள். இனிதூட்டல் - முகமலர்ச்சியோடும், இன்சொல்லோடும் இன்னமுதூட்டல். அருந்தார்-பிறர் சமைத்தற்கரிய மாலை. உருவத்தாற் பெரிதாகிய தாமரை விருந்தோம்பாதிதழ்க்கத வடைத்தலானும், உருவத்தாற் சிறிதாகிய மல்லிகை இதழ்க்கதவு திறந்து அளிவிருந் தோம்பலானும், உருவுகண்டெள்ளாமை வேண்டுமென்பது மிதனால் விளங்கியவாறறிக. நில்லாது - தாமதிக்காமல். ஆரணங்கு ஒருசொல்லாகக் கோடலுமமையும்; அதுவும் பெண் பொதுவையே யுணர்த்தும். (களஅ)

குறியுய்த்தகறல்.

அதாவது—பாங்கி, குறியிடத்துத் தலைமகளை நிறுத்தி தானகன்றுபோதல். அதற்குச்செய்யுள்,—

காதாரமுதம்பெறவேண்டியன்றொருகாரிகைபாற்
றாதாய்நடந்ததிருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
போதார்மலர்மல்லிகையோடுமுல்லையும்போய்க்கொணர்வேன்
பாதாரவிந்தம்வருந்தாதிவணிற்கபைங்கொடியே.

ப-ரை. பைங்கொடியே - பசுமையாகிய பூங்கொடி போல்வாளே, ஆர் - அரிதாகிய, காது அமுதம் - செவி யமுதத்தை, பெற வேண்டி - பெறவிரும்பி, அன்று - அந்நாளில், ஒரு காரிகைபால் - ஒரு பெண்ணிடத்தே, தூது ஆய்நடந்த - தூதாகிநடந்த, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, சுடர்க்கிரிமேல் - ஒளியையுடைய மலைமீது, போது ஆர்மலர் மல்லிகையோடு - அரும்பாயிருந்து காலத்தே மலர்கின்ற அரிய மல்லிகை மலர்களோடு, முல்லையும் - முல்லை மலர்களையும், போய்க்கொணர்வேன் - சென்று கொணர்வேன், பாதாரவிந்தம் - உன்பாத தாமரை, வருந்தாது - வருந்தாமல், இவண் நிற்க - இவ்விடத்து நிற்கக்கடவை, எ-று.

கு-ரை. செவியமுது பெறவேண்டி அக்காலத்தில் ஒரு பெண்ணிடத்தே தூதுசென்ற திருவெங்கைவாணர் சுடர்க்கிரிமேலுள்ள, பைங்கொடியே! உன் பாதாரவிந்தம் வருந்தாது இவ்விடத்தே நிற்கக்கடவை, யான்போய், மல்லிகைமலர், முல்லைமலர் என்பவற்றைப் பறித்துக் கொணர்வேன் என்பதாம்.

வி-ரை. காதாரமுதம் என்பதை காது ஆர் அமுதம் எனப் பிரித்துச் செவியினால் வாயினாலுண்ணப்படுகிற அமிர்தமென் றுரைத்தலு மமையும். ஆர்தல் - உண்டல். காதாரமுதம் என்றது சுந்தரரது திருவாக்காகிய தேவாரப் பதிகங்களை. ஒரு காரிகை யென்றது பரவையாரை. போது-பேரரும்பு. பாதாரவிந்தம் என்பதைப் பாதம் அரவிந்தம் எனப் பிரித்துக் கொள்க. தாமரை மலர்போலும் பாதம் என்பது கருத்து. பாதமாகிய தாமரையென்றலே பாதத்தின் மென்மையை மிக விளக்குவ தென்ப துய்த்துணர்க. (கஎக)

வன்புறைதாரோன் வந்தெதிர்ப்படுதல்.

அதாவது—தலைவன் அக்குறியிடத்தே வந்து தலைவியை யெதிர்ப்படுதல். அதற்குச் செய்யுள்,—

தாட்டாமரையென்றலை சூணிவோன்வெங்கைத்தண்சிலம்பி
றிட்டாமொருநங்கையே [illegible]ரூபம்போலுந்திருவுருவிற்
ராட்டாமெ[illegible] [illegible]ரந்தவடைத்தாங்கதன்மேற்
பூட்டாம[illegible] [illegible]ன்றோவுங்கள்பூவகமே.

ப-ரை. தாள் தாமரை - தன் திருவடித் தாமரையை, என் தலைக்கு அணிவோன் - என்தலையின் கண் தரிப்பவனாகிய சிவபிரானது, வெங்கைத் தண்சிலம்பில் - திருவெங்கைத் தண்ணியமலையில் உள்ள, தீட்டா - ஒருவராலும் எழுதவொண்ணாத, ஒரு - ஒப்பற்ற, நடை ஓவியம்போலும் - நடைப்பாவைபோலும், திருவுருவீர் - திருவுருவத்தை யுடையவரே, உங்கள்பூ அகம் - உங்கள் மலர்வீடு, தான் ஆள் என்னும் கதிர் - தானேயாளென்னும்படியான சூரியனானவன், ஏடு ஆம் - இதழ்களாகிய, கதவு அடைத்து - கதவை யடைத்து, ஆங்கதன்மேல் - அதன்மீது, அளியாம் பூட்டு - வண்டாகிய பூட்டை, உற - மிகுதியாகப்பொருந்த, பூட்டிற்றன்றே - பூட்டப்பட்டதல்லவோ, எ - று.

க-ரை. தன்திருவடித் தாமரையை யென்றலைக் கணிவோனாகிய சிவபெருமானது தண் சிலம்பிலுள்ள, ஒருவரானு மெழுதவொண்ணாத நடை யோவியம்போலுந் திருவுருவீர்! சூரியனாகிய ஆள் இதழாகிய கதவைமூடி வண்டாகிய பூட்டை நன்றாகப் பூட்டியிருப்பதன்றோ உமது மலர்வீடு என்பதாம்.

வி-ரை. தாட்டாமரை - தாளாகிய தாமரை; தாமரை மலர்போலுந் தாள். அணிவோன் - அணியாக்குவோன் எனினுமாம். தீட்டல் - எழுதுதல். நடையோவியம் - நடையையுடைய சித்திரப்பாவை. கதிர் - கிரணம்; அது அதனை யுடையவனை யுணர்த்தலான் ஆகுபெயர். ஏடு - இதழ். அடைத்தல் - மூடுதல். ஆங்கது - ஒருசொல். அளி - வண்டு. பூ அகம் - தாமரைமலராகிய வீடு. கதிரவன் பூட்டிச் சென்றவுங்கள் பூவகத்தை அவனில்லாத விப்பொழுது திறந்தவர் யாவர்? நீயி ரெவ்வாறு வெளிப்பட்டீரென்ப திச்செய்யுட் பிண்டப்பொருள். பூவகம் என்றதற்கேற்பத் திருவுருவீர் என்றுங் கூறினான். (கஅ௪)

பெருமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கல்.

அதாவது—தலைவி, தலைவன் வரும்வழியினது அருமையை நினைந்திரங்கா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

விண்டெரியாதுமுகிலான்முகில்பொழிவெள்ளத்தினன்
மண்டெரியாதெவ்வகையடைந்தாயன்பமாறன்வயற்
கண்டெரியாவிருளிற்போமருமைகருதியன்றோ
பண்டெரியாயொளிர்வெங்கைப்பிரான்பதம்பாலித்ததே.

ப-ரை. அன்ப - அன்பனே, முகிலான் - மேகங்களால், விண் தெரியாது - ஆகாயந்தெரியாது, முகில்பொழிவெள்ளத்தினல் - மேகஞ் சொரிகின்ற நீர்ப்பெருக்கால், மண் தெரியாது - மண்ணுந்தெரியாது, (இச்சமயத்தில்) எவ்வகை அடைந்தாய் - எவ்வாறு வந்தனை, எ-று. இது தலைவிவினா.

ஏ - ஏமாதே, மாறன் - இளையான் குடிமாறன், வயல் - வயலுக்கு, கண்தெரியா - கண்தெரியாத, இருளில் - இருட்பொழுதில், போம் - போன, அருமை கருதி அன்றே - அருமையைக் கருதியல்லவா, பண்டு - முற்காலத்தில், எரி ஆய் ஒளிர் - நெருப்புருவாகிப் பிரகாசித்த, வெங்கைபிரான் - திருவெங்கைப் பிரானுனவன், பதம் - பதத்தை, பாலித்தது - பாலித்தருளினது, எ-று. இது தலைவன் விடை.

க-ரை. தலைவியானவள் தலைவனை நோக்கி, மேகத்தால் ஆகாயந்தெரியாது, மழையால் மண்தெரியாது, இக் காலத்தில் நீயெவ்வாறு வந்தனையென்று வினவ, தலைவன் அவளை நோக்கி, பண்டைக் காலத்தில் இருட்பொழுதில் கண்தெரியாதிருந்தும் வயலிற்சென்ற அருமையை நோக்கியன்றே திருவெங்கைப்பிரான் இளையான் குடி மாறனுக்குப் பதம் பாலித்தது என்று விடை கூறினன் என்பதாம்.

வி-ரை. முகில் - மேகம். வெள்ளம் - நீர்ப்பெருக்கு. அன்ப - எம்மிடத் தன்புடையானே. மாறன் - இளையான்குடி மாறநாயனர். வெங்கைப்பிரான் பண்டு எரியா யொளிர்ந்தது அருணையம் பதியின் வரலாற்றைக் குறித்தது. பதம் - பதவி, திருவடி. பாலித்தல் - தந்தருளல்.

இச்செய்யுள் வினவுத்தரமாகக் கூறப்பட்டது. மேல்வருஞ் செய்யுளில் தலைவன் விடை தோன்றுநிற்க இவ்வாறுகூறல் முரணு மென்பார்க்கு இது முழுதும் தலைவி கூற்றாகவே கொண்டுரைக்குங் கால்பொருள் சிறவாமையை மெய்க்காட்சியார் உய்த்துணர்க. (கஅக)

புரவலன் தேற்றல்.

அதாவது—இவ்வாறு வினவின தலைவியைத் தலைவன் தேற்றுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முன்காட்டுபந்தமும்விடுமுள்ளோன்வெங்கைமொய்வரைசூ
ம்கான்காட்டியுன்குழல்போலேயிருண்டவிக்கூரிருள்வாய்[ழ்
பொன்காட்டுநல்லெழிலுன்னிடைபோலப்புயனுடங்கு
மின்காட்டிவந்ததிங்குன்னூர்வழியைவிழியினுக்கே.

ப - ரை. (மாதே - பெண்ணே), முன் காட்டு பந்தமும்-(உயிர்களுக்கு) முன்னே காட்டுகின்ற பந்தத்தினையும், வீடும் - பின்னே காட்டுகின்ற வீட்டினையும், உள்ளோன் - உடையவனாகிய சிவபெருமானது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, மொய் - வலிய, வரைசூழ் - மலையைச் சூழ்ந்த, கொன் - பெருமைபொருந்திய, காட்டில் - காட்டினிடத்தே, உன் குழல்போலே இருண்ட - உன் கூந்தலைப்போல இருண்டிருக்கிற, இ - இந்த, கூர் இருள்வாய் - மிக்க இருளினிடத்து, பொன்காட்டு - திருமகள்போலக்காட்டுகிற, நல் எழில் - சிறந்த அழகினையுடைய, உன் இடைபோல - உன் மருங்குல்போல, புயல் - மேகத்தில், நுடங்கும் - துவளாநின்ற, மின் - மின்கொடியானது, இங்கு - இவ்விடத்துள்ள, உன் ஊர் வழியை - உனது ஊரின்வழியை, விழியினுக்கு - என் கண்களுக்கு, காட்டி வந்தது - காட்டா நின்றுவந்தது. எ-று.

க - ரை. மாதே ! உயிர்கட்குப் பந்தமோக்ஷங்களை யளிப்பவனாகிய சிவபெருமானது திருவெங்கை மலையைச் சூழ்ந்த பெருங்காட்டில், உன் குழல்போ லிருண்ட இம் மிக்கிருள்வாய் திருமகள் போலும் அழகுள்ள வுன்னிடைபோல மேகத்தில் அசைந்து துவளாநின்ற மின்கொடிகள் உன்னூர்வழியை என் கண்ணுக்குக் காட்டலால் இங்குவந்தடைந்தேன் என்பதாம்.

வி-ரை. பந்தம் - கட்டு (பிறவிப்பிணிப்பு). வீடு - மோக்கம். மொய் - வலி. மொய்வரை - நெருங்கின மலையெனினுமாம். கொன் - பெருமை. கூர் - மிகுதி. வாய் - ஏழனுருபு. பொன் - திருமகள். எழில் - அழகு. புயல் - மேகம். நுடங்கல் - அசைதல், துவளல். மின்-முதனிலைத் தொழிலாகுபெயர். (கஅஉ)

புணர்தல்.

அதாவது—இவ்வாறு தலைவியைத் தேற்றின தலைவன் அவளை முயங்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஓர்போதெனும்பிறைவேணியிற்சூடுமொருவர்வெங்கைத்
தேர்போலகன்றமணியல்குலாயிருசெய்யவிள
நீர்போலமைந்தின்பமேதிரண்டாங்குறுநின்முலைக்கண்
மார்போடழுந்தத்தழுவவென்னான்செய்தமாதவமே.

ப-ரை. ஓர்போது என்னும்பிறை-ஒருநாளென்னும் பிறையை, வேணியில் சூடும் - சடையிற்றரித்த, ஒருவர் - ஒப்பற்றவராகிய சிவ

பெருமானாரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, தேர்போல் அகன்ற - தேர்த்தட்டுப்போலகன்ற, மணி அல்குலாய்-அழகிய அல்குலையுடையாளே, இரு - இரண்டாகிய, செய்ய இளநீர்போல் அமைந்து - செவ்விளநீர்போ லமைந்து, இன்பமே திரண்டாங்கு - இன்பமே திரண்டிருந்தாற்போல, உறும்-பொருந்தியிருக்கிற, நின்முலைக்கண் - உன் முலைக்கண்கள், மார்போடு அழுந்த தழுவ - என் மார்பிலழுந்துமாறு தழுவுதற்கு, நான் செய்த மாதவம் என் - யான் செய்த மாதவம் யாது, எ - று.

க - ரை. ஒற்றைக் கலையாகிய சந்திரனைச் சடையிற்றரித்த சிவபெருமானது திருவெங்கைமாதே! செவ்விளநீர் போலத்திரண்டு இன்பமே யுருவெடுத்தாற் போன்றிருக்கிற நின்முலைக்கண்கள் என் மார்பிலழுந்துமாறு தழுவுதற்கு யான்செய்த மாதவம் யாதோவென்பதாம்.

வி - ரை. ஓர்போதெனும்பிறை - ஒரு கலையாகிய சந்திரன்; இது 'தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த காரென்ன வாருங் கறைமிடற் றம்பலவன்" என்னுந் திருக்கோவையார் செய்யுளுரையானு மினிது விளங்கும். வேணி - சடை. தேர் - தேர்த்தட்டு. அகறல் - விசாலித்தல். மணி - அழகு. முலைக்கண் - முலைநுனி; இதனை வடநூலார் ஸ்தநாக்ரம் என்பர். மார்போடு - உருபுமயக்கம். மாதவம் - பெருந்தவம். (கஅரு)

புகழ்நல்.

அதாவது—தலைமகளைப்புணர்ந்த தலைமகன் அவளதுபுணர்ச்சியின்பத்தா லுளதாகிய மகிழ்ச்சியால் அவளைப் புகழ்ந் துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பெண்காட்டியவொருபங்குடையாருதிர்பிட்டினுக்கா
மண்காட்டியபொன்முடியார்திருவெங்கைவாணர்வெற்பிற்
றண்காட்டியமலர்க்கோதாய்குரும்பைகடாமொருமுக்
கண்காட்டுமாயினுமொவ்வாதினதொருகண்முலையே.

ப - ரை. பெண்காட்டிய - பெண்ணைத்தோற்றுவிக்கிற, ஒரு பங்கு உடையார் - ஒருபாகத்தையுடையவர், உதிர்பிட்டினுக்காக - உதிர்ந்த பிட்டின்பொருட்டு, மண்காட்டிய - மண்ணைக் காட்டின, பொன்முடியார் - பொன்முடியையுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) வெற்பில் - மலையில்,

தண்காட்டிய - குளிர்ச்சியை யுடைய, மலர்க்கோதாய்-மலர்க்குழலை யுடையவளே, குரும்பைகள்-தென்னங்குரும்பைகள், ஒரு-ஒப்பற்ற, முக்கண்காட்டுமோயினும் - மூன்று கண்களைக் காட்டுவனவாயினும், நினது ஒரு கண்முலை - உன்னொரு கண்ணையுடைய முலையை, ஒவ்வா - ஒத்திரா, எ - று.

க - ரை. பெண்பாகரும், உதிர்ந்த பிட்டின் பொருட்டு மண் சுமந்தவரும், திருவேங்கைப்பதியில் வாழ்பவருமாகிய சிவபிரானது மலையிலுள்ள தண் பூங்குழால்! தென்னங்குரும்பைகள் மூன்றுகண் களையுடையனவாயினும் ஒரு கண்ணையுடைய உன் முலையை நிகரா வென்பதாம்.

வி - ரை. பெண் - உமாதேவி. பெண்காட்டிய வொருபங்கு என்றது இடப்பாகத்தை. உதிர்பிட்டினுக்கா மண்காட்டிய பொன் முடியார் என்றது, தென்மதுரையில் வையையாறடைக்குங்காலத்து நிகழ்ந்த, செம்மனச் செல்வியென்னும் மாதரசியின் சரிதத்தைக் குறித்தது. மண்காட்டிய-மண் சுமந்த. பொன்முடி-அழகியதிருமுடி. தண்மை-மைவிகுதிகுறைந்து தண் என நின்றது. வேறு குரும்பைக ளுளவேனும் முக்கண்காட்டுமென்றமையால் குரும்பைகள் என்றது தென்னங் குரும்பைகளுக்கே யாயின. நினது முலை, ஒருகண்முலை யென்றியைத் துரைத்துக்கொள்க. (கஅச)

இறைமகள் இறைவனைக் நறிவரல் விலக்கல்.

அதாவது—தலைவி தலைவனைக் குறியிடத்து வருதலை விலக்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

அரவெளிதோவவ்வனமெளிதோவன்றியாற்றின்மடுக்
கரவெளிதோநந்திருவெங்கைவாணர்களமருட்டு
மிரவெளிதோவிவையெல்லாங்கடந்திங்கெனையளிப்ப
வரவெளிதோவென்னுயிர்க்கரணாகியமன்னவனே.

ப - ரை. என் உயிர்க்கு அரண் ஆகிய மன்னவனே - என்னுயிர்க்காவலாகிய அரசனே, அரவு எளிதோ-பாம்புகள் எளிதாமோ, அவ்வனம் எளிதோ - (அவைசஞ்சரிக்கிற) அந்தக்காடு எளிதாமோ, அன்றி - அன்றியும், யாற்றின்மடு - யாறுகளின் மடுக்களிலுள்ள, கரா எளிதோ - முதலையெளிதாமோ, நம்திருவெங்கைவாணர் - நமது திருவெங்கைவாணரது, களம் மருட்டும் - கண்டத்தை மருட்டுகிற, இரவு எளிதோ-இராக்காலம் எளிதாமோ, இவையெல்லாம் கடந்து-

இவையாவையுந்தாண்டி, இங்கு-இங்கேயுள்ள, என்னைஅளிப்பவரவு-என்னைகாக்கவருதல், எளிதோ-எளிதாமோ, (இனி யிவ்வாறு வரற்பாலையல்லை), எ - று.

க - ரை. என்னுயிர்க்கரணாகிய மன்னவனே! அரவு, காடு, யாற்றுமடுக்கரா, திருவெங்கைவாணர் களமருட்டும் இரா என்பனயாவும் கடந்து என்னைக் காக்க வருதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

வி - ரை. அரவு-குறியதன் கீழாக்குறுகி உகரமேற்றது. யாறு-காறு. கரவு - இதுவும் அரவுபோல்வது. இரவு - இதுவுமது. களம் - வடசொல். மருட்டுதல் - அச்சுறுத்தல். வரவு - வருதல். அரண் - காவல். (கஅ௫)

அவனிறைவியையில்வயின் விடுத்தல்.

அதாவது—தலைவன் தலைவியை இல்வயிற் செல்கெனக் கூறி விடுத்தல். அதற்குச் செய்யுள்,—

வலம்பொலிவீரமழுவாளன்வெங்கைமணிவரைமே
னலம்பொலிவாணுதல்வேற்கணல்லாயுன்னடைவிரும்பி
யலம்பொலியோடுதொடரோதிமமிலையஞ்சலைதாட்
சிலம்பொலியாமற்பரிகரித்தேகுன்றிருமனைக்கே.

ப - ரை. வலம் பொலி - வெற்றிமிகுந்த, வீரமழுவாளன் - வீரமழுவையாள்பவனாகிய சிவபிரானது, வெங்கைமணிவரைமேல்-திருவெங்கையிலுள்ள அழகிய மலைமீது, நலம் பொலி - அழகு மிகுந்த, வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றியையும், வேல்கண் - வேல்போலுங் கண்களையு முடைய, நல்லாய் - மாதே, உன் - உனது, நடை விரும்பி - நடையையிச்சித்து, அலம்பு ஒலியோடு - சத்திக்கிறவொலியோடு, தொடர் - தொடர்கின்ற, ஓதிமம் இல்லை - அன்னப்பறவைகளில்லை, அஞ்சலை - அஞ்சற்பாலையல்லை, தாள் சிலம்பு ஒலியாமல் - பாதச்சிலம்பு ஒலிக்காமல், பரிகரித்து - அடக்கி, உன் திருமனைக்கு-உன் திருமாளிகைக்கு, ஏகு - செல்லுவாயாக, எ-று.

க - ரை. வெற்றியைத் தருகிற மழுப்படையை யுடையவராகிய திருவெங்கைச்சிவபெருமானாதுமலைமீதுள்ள நலம்பொலிவாணுதல் வேற்கணல்லாய்! உன்னடையை யிச்சித்து ஒலியோடு தொடர்கின்ற அன்னப்பறவைகளில்லை யாதலால், நீயஞ்சாது, உன் காற்சிலம்பையடக்கி, உன்றிருமாளிகையைச் சென்று சேரக்கடவையென்பதாம்.

வி - ரை. வலம்-வெற்றி. வீரம் - வீரத்தன்மை. மழுவாளர் - சிவபிரான். பனி - குளிர்ச்சி; பனி தவழ்கின்ற எனினுமாம். நலம் - அழகு. பொலிதல் - மிகுதல். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. அலம்புதல் - சத்தித்தல். ஓதிமம் - அன்னப் பறவை. தாட்சிலம்பு - பாதஜாலம். பரிகரித்தல் - அடக்குதல். (கஅசு)

இறைவியை யெய்திப் பாங்கி கையுறைகாட்டல்.

அதாவது—பாங்கியானவள் தலைவியையடைந்து, தான்கொணர்ந்த கையுறையைக் காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முட்டுப்படாததிருவாளன்வெங்கைமுளரிமுகை
நட்டுப்படாதவிளமுலையாயுன்னகையுடனே
மட்டுப்படாமலிகலுந்தளவின்றுமட்டுப்பட்டுக்
கட்டுப்படாமலென்கைக்கேவந்துற்றதுகண்டருளே.

ப - ரை. முட்டுப்படாத - குறையுண்டாகாத, திருவாளன் - திருவாளனாகிய சிவபெருமானது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, முளரி முகை - தாமரை மொட்டினை, நட்டு - நட்புக்கொண்டு, படாத-சாயாத, இளமுலையாய் - இளமுலையை யுடையாளே, உன் நகையுடனே - உன் பல்லுடனே, மட்டுப்படாமல் இகலும் - அளவு கடந்து பகைக்கின்ற, தளவு - முல்லையரும்பானது, இன்று - இப்பொழுது, மட்டுப்பட்டு - அளவுக்கடங்கி, கட்டுப்படாமல் - கட்டுக் கடங்காமல், என்கைக்கே - என் கையினிடத்தே, வந்துஉற்றது - வந்தடைந்தது, கண்டருள்-(அதனை) கண்டருள்வாயாக, எ-று.

க-ரை. அகண்டைசுவரியனாகிய சிவபெருமானது திருவெங்கையிலுள்ள, சாயாத இளமுலையாளே! உன்பல்லோடு பெரும்பகை கொண்ட முல்லையரும்பானது இப்பொழுது பகையொழிந்து என் கையிலகப்பட்டது, இதனை நீ கண்டருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. முட்டு - குறை. திருவாளன் - செல்வன். முளரி - தாமரை. முகை - அரும்பு. நட்டல் - சிநேகித்தல். படுதல் - சாய்தல். நகை - பல். மட்டு - அளவு. இகலல் - பகைத்தல். தளவு - முல்லை. மட்டு - தேன்; அளவு. கட்டுப்படாமல் - பிணிக்கப்படாமல், தொடுக்கப்படாமல். கண்டருள் - ஒருசொல். (கஅஎ)

இற்கொண்டேகல்.

அதாவது—பாங்கி தலைவியை, இல்லிற்கொண்டு செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சூடுந்துளபமணிநீலவெற்புந்தொடர்ந்துமுன
நாடுந்திருவடியெம்மான்றிருவெங்கைநாடனையா
யாடுங்கலாபமயில்போலுறங்குநம்மன்னையினற்
றேடும்பொருளல்லமோசெல்லுவோநந்திருமனைக்கே.

ப-ரை. சூடும் - சூடுதற்குரிய, துளபம்-துளசிமாலையை, அணி - தரித்த, நீலவெற்பும்-நீலமலையும், முன்னம்-முற்காலத்தில், தொடர்ந்து நாடும் - தொடர்ந்து தேடின, திருவடி - திருவடியையுடைய, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கைநாடு அனையாய் - திருவெங்கை நாட்டை நிகர்த்தவளே, ஆடும் - விரித்தாடுதற்குரிய, கலாபம் - தோகையையுடைய, மயில்போல் உறங்கும் - மயில்போலுறங்குகிற, நம் அன்னையினால் - நம் தாயினால், தேடும் - தேடுதற்குரிய, பொருள் அல்லமோ - பொருளல்லேமோ, (ஆதலால் அவள் தேடு தற்கு முன்பே) நம் திருமனைக்கு செல்லுவோம் - நமது திருமாளிகைக்குப்போவோம் (யாம்) எ-று.

கு-ரை. துளபமாலையணிந்த நீலமலையுந் தொடர்ந்து தேடின திருவடியையுடைய சிவபெருமானது திருவெங்கை நாடனையாய்! கலாபத்தையுடைய மயிலுறங்குதல்போ லுறங்குகிற நம் அன்னையினால் தேடுதற்குரிய பொருளல்லேமோ, ஆதலால் அவள் தேடு தற்கு முன்பே யாம் நமது திருமாளிகைக்குப் போவோம் என்பதாம்.

வி-ரை. நீலவெற்பு - நீலமலை; அது சூடுந் துளபமணி என்ற விசேடணத்தால் திருமாலைக்குறித்தது. நாடுதல் - தேடுதல். கலாபம் - தோகை. பொருள் - திரவியம். திருமனை - திருமாளிகை. (வீடு) ஆதலால் அவள் தேடுதற்கு முன்பே என்பது வருவித்துரைக்கலாயிற்று. அல்லமோ என்னும் வினா ஆம் என்னும் பொருளது.

பிற்சென்றிறைவனை வரவுவிலக்கல்.

அதாவது—பாங்கி தலைமகளை இல்லில் விடுத்தபின்பு தலைமகன் பாற்சென்று, இவ்விருளில் நீ வாரலென்று, வரவுவிலக்கிக் கூறிநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தம்மேற்பணிபுனைவெங்கைபுரேசரைச்சார்கிலர்போற்
கைம்மேற்பொருபிடரியாவிருள்வாய்வெங்கரியுடனே
தெம்மேற்புலிதிரியுங்காட்டினீயிச்சிறுவழிவந்
தெம்மேற்பழிசுமத்தாதொழிவாயெம்மிறையவனே.

ப-ரை. எம்இறையவனே - எமது தலைவனே, தம்மேல் - தமது திருமேனியின்மீது, பணி - பாம்புகளை, புனை - தரிக்கிற, வெங்கை புரேசரை - திருவெங்கையீசரை, சார்கிலர்போல் - அடுக்காதவர் போல, கைமேல் பொருள்தெரியா - கையின்மீதுள்ள பொருளுந் தெரியாத, இருள்வாய் - இருளின்கண், வெம்கரியுடனே - வெவ்விய யானைகளோடு, புலி-புலிகளும், தெம்மேல் திரியும்-போர்த்தொழில்மேல் திரிகிற, காட்டில்-ஆரணியத்தில், நீ இச்சிறு வழிவந்து-நீ இந்தச சிறநெறியில் வந்து, எம்மேல் - எம்மீது, பழிசுமத்தாது ஒழிவாய் - பழியேற்றாது தொழிவாயாக; எ - று.

க - ரை. எமது தலைவனே! நாகாபரணராகிய சிவபெருமானாரை அடுக்காதார்போல, கைமேலுள்ள பொருளுந்தெரியாத இருளில் யானை புலி முதலியவை திரியாநின்ற காட்டில் இச்சிறுவழியில் நீவந்து, எம்மீது பழி சுமத்தா தொழிவாயாக வென்பதாம்.

வி - ரை. பணி - பாம்பு; வடசொல்; படத்தையுடைய தென்பதுபொருள். புனைதல் - அலங்கரித்தல் எனினுமாம். சார்கிலர் போல் வந்து என வியையும். சார்தல் - ஆசிரயித்தல். கைம்மேற் பொருடெரியாவிருள் என்றது மிக்கவிருளென்றவாறு. கரி - யானை; வடசொல்; துதிக்கையினை யுடையதென்பது பொருள். தெவ் - போர். பழி - பழிச்சொல். (நிந்தை) சுமத்தாது - ஏற்றாமல். அகல்வாய் என்றும் பாடம். இப்பாடப்பொருள் சிறவாமை யுய்த்துணர்க. (கஅ௯)

பெருமகன் மயங்கல்.

அதாவது—பாங்கி இவ்வாறு இரவுக்குறிவிலக்கிய சொற்கேட்டுத் தலைமகன் மயங்கிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்—,

ஆய்வாரளவினளவாகும்வெங்கையமலர்வெற்பிற்
றேய்வானுடங்கிடையாயறிந்தாரைச்செலவிடுப்போர்
போய்வாவென்பாரிவ்வுலகினிற்போவெனவேமுடித்து
நீவாவென்றுபிலைகண்ணோட்டமில்லைகொனின்றனக்கே

ப - ரை. ஆய்வார் - தம்மையாராய்வோரது, அளவின் அளவு ஆகும் - பரிபக்குவத்தின் அளவேயாகின்ற, வெங்கை அமலர் வெற்பில் - திருவெங்கை யமலர் மலையிலுள்ள, தேய்வான் - தேய்ந்த ஆகாயம்போல, நுடங்கு இடையாய்-துவளாநின்ற இடையையுடையாளே, இவ்வுலகினில்-இவ்வுலகத்தில், அறிந்தாரை-அறிந்தவரை,

செல்ல விடுப்போர், அனுப்புவோர், போய்வா என்பார் - போய்வாவென்பார், நீ—,போ எனவேமுடித்து-போவென்றே முடிவுசெய்து, வாஎன்றாயில்லை - வாவென்று சொன்னாயில்லை, நின்றனக்கு - உனக்கு, கண்ணோட்டம் இல்லைகொல் - தாக்ஷிண்ய மென்பதே யில்லைபோலும், எ-று.

க-ரை. தம்மையாராய்வாரது பரிபக்குவத்தி னளவேயாயிருக்கிற திருவெங்கையமலர் மலையிலுள்ள, ஆகாயம்போலத் தேய்ந்ததுவளாகின்ற இடையினையுடையாளே! இவ்வுலகத்தில் அறிந்தவரையனுப்புவோர் போய்வாவென்பார், நீ போவென்றே முடிவுசெய்து வாவென்றாயில்லை, ஆதலால் உனக்குக் கண்ணோட்ட மென்பதேயில்லைபோலும் என்பதாம்.

வி-ரை. ஆய்வார் என்றது பக்குவிகளை. அப்பக்குவம் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகைப்படும். இதின் விரிவெல்லாம் பெருநூல்களிற்காண்க. அமலர்-மலரஹிதர். (பரிசுத்தர்) தேய்வான் இடை, நுடங்கிடை என்றியைத் துரைத்துக்கொள்க. தேய்வான் இடையென்பதற்கு மிகவுஞ் சிறுத்த இடையென்பது கருத்து. செலவிடுத்தல் - அனுப்புதல். கொல் - ஐயப்பொருட்டு.

தோழிதலைமகடுயர் கிளந்துவிடுத்தல்.

அதாவது—தோழியானவள், தலைமகனுக்குத் தலைமகளது துயரைக்கூறி, நீபுன்னூர்போய்ச் சேர்ந்த செய்தியை யாமறியுமாறு குறிகாட்டுவாயாக வெனக்கூறி விடுத்தல். அதற்குச் செய்யுள்,—

வம்புகுறித்துவருமாரளியினமல்லிகைப்பூங்
கம்புகுறிக்கும்பொழுதில்வெங்கேசரைக்கைதொழுது
நம்புகுறிக்கண்வருமண்ணலேநின்னகரினிற்போய்க்
கொம்புகுறித்துவரக்காட்டொலியையெங்கொம்பினுக்கே.

ப-ரை. வம்புகுறித்துவரும் - மணத்தைக்குறித்து வருகிற, ஆர் அளி இனம்-நிறைந்த வண்டுக் கூட்டம், மல்லிகைப்பூங்கம்பு-மல்லிகைப்பூங்கொடியில், குறிக்கும்பொழுதில்-ஊதுங்காலத்தில், வெங்கேசரை- திருவெங்கை யீசரை, கைதொழுது-கைகூப்பி வணங்கி, நம்பு-நம்புதற்குரிய, குறிக்கண்வரும் - குறியிடத்தேவந்த, அண்ணலே-பெரியோனே, நின்-உனது, நகரினில்போய்-நகரத்திற்சென்று, கொம்புகுறித்து - கொம்பையூதி, ஒலியை - அதனொலியை, எம்கொம்பினுக்கு-எமது கொம்புக்கு, வரக்காட்டு - வரக்காட்டுவாயாக, எ-று.

க - ரை. மணங்குறித்து வருகிற வண்டுக்கூட்டம் மல்லிகைப் பூங்கொம்பினிடத்தே யூதுகிற காலத்தில், திருவெங்கையீசரைக் கைதொழுது, நம்புதற்குரிய குறியிடத்தேவந்த அண்ணலே ! நீயுன்னகரிற் போய்ச் சேர்ந்து கொம்பூதி அதனொலியை யெங்கொம்பினுக்குவரக் காட்டுவாயாக வென்பதாம்.

வி - ரை. வம்பு - வாசனை; சண்டையுமாம். அளி - வண்டு. மல்லிகைப்பூங்கம்பு-மல்லிகைப் பூங்கொடி. குறித்தல்-ஊதுதல். குறி-குறியிடம். நகர்-நகரம் (ஊர்). கொம்பு-ஊதுகொம்பு; இதனை வயிர் எனவுங்கூறுப. எங்கொம்பினுக்கு என்றது எமதாது கொம்பினிடத்தென்றும், எமது தலைவிக்கென்றும் இருவகைப்பொருள் கொள்ளக் கிடந்தது. (கசுக)

திருமகட்புணர்ந்தவன் சேறல்.

அதாவது—திருமகளை (தலைவியைப்) புணர்ந்தவனாகிய தலைமகன் தன்னகரத்துக் கேகாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முப்போதினுமந்தணர்தொழுதேத்துமுத்தலைவே
லப்போதகன்றிருவெங்கையன்னாளல்குற்காடரவ
மொப்போதெனவொண்மணிவிளக்கேற்றியுதவிசெய்யுஞ்
செப்போதிளமுலையாய்செல்லுவேனென்றிருநகர்க்கே.

ப - ரை. முப்போதினும் - மூன்றுகாலத்திலும், அந்தணர் - வேதியர், தொழுது - வணங்கி, ஏத்தும் - துதிக்கின்ற, முத்தலைவேல் - முத்தலைவேலினையுடைய, அ - அந்த, போதகன் - ஞானசாரியனாகிய சிவபிரானது, திருவெங்கை அன்னாள் - திருவெங்கையை நிகர்த்தவளாது, அல்குற்கு-நிதம்பத்துக்கு, ஒப்புஓதுஎன-எம்மை உவமைசொல்லென்று, ஆடு அரவம் - ஆடு மியல்பையுடைய பாம்புகள், ஒள்-ஒட்பமாகிய, மணிவிளக்கு ஏற்றி - மாணிக்கத்தீபமேற்றி, உதவிசெய்யும்-உதவிபுரியும், (ஆதலால்) செப்பு ஓது இளமுலையாய் - செப்பென்று சொல்லுதற்குரிய இளமுலையை யுடையாளே, என் திருநகர்க்கு - என் அழகிய நகரத்திற்கு, செல்லுவேன் - (இடையூறின்றி) செல்லுவேன், (நீ கவலற்க) எ - று.

க-ரை. பாம்புகள்,முப்போதும்அந்தணர் தொழுதுவழுத்துகிற, த்ரிசூலதாரியாகிய சிவபிரானது திருவெங்கை யன்னாளது அல்குற் கொப்புரை யென்று மாணிக்க விளக்கேற்றி யுதவிபுரிதலால், செப்போதிளமுலையாய், என்றிருநகர்க்குச் செல்லுவேன் என்பதாம்.

வி - ரை. முப்போது - காலைமாலையுச்சி யென்னும் மூன்று பொழுது; இறப்பு நிகழ்வு எதிர்வு என்னு முக்காலமெனினு மாம். போதகன்-போதகாசாரியன். மணிவிளக்கு-மாணிக்கமாகிய தீபம். நீ கவலற்க வென்பதிசை யெச்சம்.

இறையோனிருட்குறி வேண்டலும், நெறியினதெளிமை கூறலும், தலைமகன் அவளூட் டணியியல்வினாதலும், பாங்கியிறைவிக்கு இறையோன் குறியறிவுறுத்தலும் ஆகியநான்கும் வேண்டற்குரியன. பாங்கி நெறியினதருமை கூறலும், இறைமகள் இறைவனைக் குறிவரல்விலக்கலும், பாங்கி இறைவனை வரவுவிலக்கலும் ஆகிய மூன்றும் மறுத்தற்குரியன. பாங்கி அவளூட்டணியியல்வினாதலும், அவற்குத் தன்னூட்டணியியல் பாங்கி சாற்றலும், நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தலும் ஆகிய மூன்றும் உடன்படற்குரியன. தலைமகனேர்ந்தமை பாங்கி தலைவற் குணர்த்தலும், குறியிடை நீரி இத்தாய் துயிலறிதலும், இறைவிக்கு இறைவன் வரவறிவுறுத்தலும், அவட்கொண்டு சேறலும் ஆகிய நான்கும் கூட்டற்குரியன. தலைமகன் தலைமகளை யெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர்தலும் ஆகிய மூன்றும் கூடற்குரியன. தலைமகன் புகழ்தலும், கையுறை காட்டலும் ஆகிய இரண்டும் பாராட்டற்குரியன. தலைமகன் தலைவியை இல்வயின் விடுத்தலும், பாங்கிதலைமகளை இற்கொண்டேகலும் ஆகிய இரண்டும் பாங்கி கூட்டற்குரியன. நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தலும், தலைமகளாற்றினதருமை நினைந்திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழிதலைமகள் துயர்கிளந்து விடுத்தலும் ஆகிய நான்கும் முயங்கற்குரியன. பாங்கி குறியுய்த்தகறலும், திருமகட் புணர்ந்தவன் சேறலும் ஆகிய விரண்டும் நீங்குதற்குரியன.

இத்துணையும் எழாநாட்செய்தி யென்றுணர்க. (கசூஉ)

இரவுக்குறியிடையீடு.

அதாவது—எட்டாநாளிரவுக் குறிக்கண் வந்த தலைமகன் அல்ல குறிப்படுதலால் இடையீடு பட்டுப்போதல்.

"அல்ல குறிவருந் தொழிற்கருமை யென்றாங்
கெல்லிக் குறியிடையீ டிருவகைத் தாகும்".

என்னுஞ்சூத்திரவிதியால்இரவுக்குறியிடையீடிருவகைப்படும். அல்லகுறி யென்பது - தலைவியால் நிகழ்த்தப் படுவனவாகிய, புள்ளெழுப்பல் முதலியன. எனவே நீரிற் கல்லெறிதல், இளநீர் வீழ்த்தல் முதலியனவுங்கொள்க.

வருந்தொழிற் கருமையென்பது-தலைமகன் வருகின்ற தொழிற் கருமை.

அல்லகுறி.

இறைவிக்கி தலையிறைவரவுணர்த்தல்.

அதாவது—தலைமகட்குத் தோழி இறைவனது வரவையறிவியா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

வள்ளலம்பாகுமரியாளன்வெங்கைமணிவரைமேல்
விள்ளலம்பானல்விழியாய் துணைபுணர்மென்சிறக
ருள்ளலம்பாது துயில்கூர்தருதலொழிந்தெழுந்து
புள்ளலம்பாநின்றதென்னோநமதிளமபூம்பொழிற்கே.

ப - ரை. வள்ளல் அம்புஆகும் - வள்ளலம்பாகிய, அரியாளன் - அரியையுடையவனாகிய சிவபிரானது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, மணிவரைமேல் - அழகிய மலையின் மீது வாழ்கின்ற, விள்ளல் - மலர்தலையுடைய, அம் - அழகாகிய, பானல்-நீலமலர்போலும், விழியாய் - கண்களையுடையாளே, புள் - புட்கள், துணை-தம்துணையின், புணர் - நெருங்கிய, மென்சிறகருள் மெல்லிய சிறகினுள்ளே, அலம்பாது - சத்தியாமல், துயில் கூர்தருதல் ஒழிந்து எழுந்து - நித்திரைசெய்தலை நீங்கி யெழுந்து, நமது - நம்முடைய, இளம்பூம்பொழிற்கு - இளம்பூஞ்சோலையில், அலம்பாநின்றது-சத்தியா நிற்றற்கு, என்னோ - யாதுகாரணமோ. எ - று.

க - ரை. திருவெங்கைப்பதியிலுள்ள அழகிய மலைமேல் வாழ்கின்ற, விள்ளலம் பானல்விழியாய்! நமது பூம்பொழிலிற் புட்கள் சத்தியாமல் அசைவறத் தூங்குதலொழிந் தெழுந்து ஒருசேரச் சத்தியாநின்றன, இதற்குக் காரணம் யாதோ வென்பதாம்.

வி - ரை. அரி - திருமால். வள்ளலம்பாகுமரியாளன் - திருமாலை வலிய அம்பாகவுடையவன்; திருமாலையம்பாகக்கொண்டது திரிபுரசங்கார காலத்தில். மணி-அழகு. விள்ளல்-மலர்தல். பானல்-கருங்குவளை. துணை - பெண்புள். புணர்தல் - நெருங்குதல். சிறகு-சிறகர் எனப்போலியாயிற்று. அலம்பல் - சத்தித்தல். துயில்கூர்தருதல் ஒருசொல்லாய் தூங்குதலென்னும் பொருள் பயந்துநின்றது. பொழிற்கு-உருபு மயக்கம். (உகூரு)

தான்குறிமருண்டமைதலைவியவட்குணர்த்தல்.

அதாவது—தலைவி தான் அல்லகுறியிட்டுநின்று தலைவனைக் காணாமையால் மீண்டு, விடியற்காலத்து வந்து பாங்கியொடு கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கானலைவேனின் முதிர்வாலெதிருறக்கண்டுமறி
மானலைநீரெனவோடுதல்போல்வெங்கைவாணர்வெற்பிற்
றேனலைவார்தொடையார்குறியாமெனச்சென்றுநைந்தேன்
பானலைவென்றகண்ணாய் குறிவேறுறப்பைம்பொழிற்கே.

ப-ரை. பானலை வென்ற கண்ணாய்-கருங்குவளை மலரைவென்ற கண்களையுடையாளே, பைம்பொழிற்கு-நமது பசுமையாகிய சோலையில், வேறு குறிஉற - வேறுகுறியுண்டாக, வேனில் முதிர்வால் - வேனிற்கால முதிர்வால் உண்டாகிற, கானலை - கானலை, எதிருறக் கண்டு - எதிரே தோன்றக்கண்டு, மறிமான் - மறிமான்கள், அலைநீர் என - அலைகளையுடைய நீரென்றெண்ணி, ஓடுதல்போல் - ஓடுவது போல, வெங்கைவாணர் வெற்பில் - திருவெங்கைவாணர் மலையில் உள்ள, தேன் அலை-தேனோடுகூடி யசையாநின்ற, வார்தொடையார்- நீண்ட பூமாலையை யணிந்த தலைவரது, குறிஆம் என சென்று-குறியாகுமென்றெண்ணிப்போய், நைந்தேன் - வருந்தினேன். எ - று.

க - ரை. பானலைவென்ற கண்ணாய்! நமது பசும்பொழிலில் வேறு குறியுண்டாக, அதனைத் தலைவரது குறியென்றெண்ணி, வேனின் முதிர்ச்சியினா லுண்டாகிற கானலை நீரென்றெண்ணி மான்கள் ஓடுவதுபோல விரைந்துபோய் அவரைக்காணாது நைந்து மீண்டு வந்தேன் என்பதாம்.

வி - ரை. கானல் - கானனீர்; இதுவேனின் முதிர்ச்சியாலுண்டாவது; இது பேய்களுக்குத் தேராதலால் இதனைப்பேய்த்தேரென்பர், "பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணமாகாமே" என்றும், "அலைத் தேரினலமருகாலும்" என்றம் மேலோர் கூறுதல் காண்க. வடநூலார் இதனைப் பசாசரதம் என்று கூறுவர். மறிமான் - மான் கன்று. அலைதேன்வார் தொடையார் என நிறுத்தி அசையாநின்றதேனொழுகும் பூமாலையையுடையவர் என்றும், தேனலை என்பதற்கு வண்டுகள் தேனின்பொருட்டலையாநின்ற என்றும் வண்டோடடையாநின்ற என்றும் உரைத்துக்கொள்க. பானல் - ஆகுபெயர். பொழிற்கு - உருபு மயக்கம். (ககசு)

பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்.

அதாவது—பாங்கி, தலைவனது தீமையை யெடுத்துரையா நிற்றல். அதற்குச்செய்யுள்—,

மறிக்கும்புலனுடையன்பார்தம்பாவமரமுறியத்
தறிக்குங்கனன்மழுவெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
வெறிக்குந்துமமுலைமெல்லியலாயிந்தமேதினியோர்
குறிக்குங்குறிசெய்வரோநமையாளக்குறித்தவரே.

ப-ரை. மறிக்கும் புலன் உடை - தடுத்த புலனையுடைய, அன்பர் - அன்பரது, பாவம் - பாவமாகிய, மரம் - மரமானது, முறிய - முறியும்படி, தறிக்கும் - வெட்டுகிற, கனல் மழு - நெருப்புருவாகிய மழுவைத் தரித்த, வெங்கைபுரேசர் - திருவெங்கை யீசரது, தடம் சிலம்பில் - பெரிய மலைமேலுள்ள, வெறி - மணமுள்ள, குங்குமம் - குங்குமச்சேறணிந்த, முலை - ஸ்தனங்களையுடைய, மெல் இயலாய் - மெல்லியலையுடையாளே, நம்மை ஆள குறித்தவர் - நம்மையாள நினைத்தவர், இந்த மேதினியோர் - இவ்வுலகத்தார், குறிக்கும் குறிசெய்வரோ - செய்யுங் குறியைச் செய்வரோ, (செய்யார்) என்று.

க-ரை. அன்பரது பாவமரத்தை வெட்டுகிற மழுவாளராகிய திருவெங்கை யீசரது மலைமீதுள்ள, குங்குமச் சேறணிந்த முலை மடவாய்! நம்மையாள நினைத்தவராகிய தலைவர், இவ்வுலகத்தார் செய்யுங் குறியையோ செய்வர் என்பதாம்.

வி-ரை. மறிக்கும் புலன் என்பதைப் புலன் மறிக்கும் என முன்பின்னாக மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது; இது வடநூலார் மதம்; அதற்குதாரணம், ஜிதேந்த்ரியன், கதகல்மஷன், அவாப்த சமஸ்தகாமன் என்றற்றொடக்கத்தன. அன்பர்தம் என்பதில் தம்-சாரியை. முறிதல் - ஒடிதல். தறித்தல் - வெட்டுதல். குங்குமம் - குங்குமக்குழம்பு. மெல்லியல் - ம்ருதுஸ்வபாவை. குறித்தல் - செய்தல், நினைத்தல். செய்வரோ வென்னுமோகாரம் எதிர்மறை. இதில் தலைவன் றீங்கெடுத் தியம்பியவா றெங்ஙனமெனின், உலகத்தாரெல்லாரும் செய்யுங் குறிபோலாத வேறு குறிசெய்து, நம்மை யலையுமாறு புரிந்தனர் என்பதேயாமென்க. (கசுரு)

புலந்தவன் போதல்.

அதாவது—தலைவன் தான்குறித்த குறியில்வந்திருந்து, தலைவி அல்ல குறிப்பட்டு வாராமையால் தன்னெஞ்சொடு புலந்துதன்னூர்க்குப் போகாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

மறந்தடுக்குஞ்செயல்வெங்கைபுரேசர்மறைவனத்தி
லறந்தழைக்குந்திருவாலயம்போலுலகாரிருளைப்
பிறந்தழித்தென்றுமொளியோடுலாவரும்பேரிருளைத்
திறந்துடைக்கின்றதன்றோநெஞ்சமேநந்திருமனையே.

ப-ரை. நெஞ்சமே - மனமே, நம் - நமது, திரு - திருமகளது, மனை - வீடானது, மறம்தடுக்கும்செயல் - பாவத்தை யொழிக்குஞ்

செயலையுடைய, வெங்கைபுரேசர் - திருவெங்கை யீசரது, மறைவனத்தில் - திருமறைக் காட்டிலுள்ள, அறம் தழைக்கும் - தருமம் செழிக்கின்ற, திருவாலயம்போல் - திருக்கோயில்போல, உலகுஆர் இருளை - உலகில் நிறைந்த இருட்டை, பிறந்து அழித்து - தாம் உதித்தழித்து, என்றும் - எக்காலத்தும், ஒளியோடு உலாவரும் - ஒளியோடுலாவுகின்ற, பேரிருவர் - பெருமைபொருந்திய இருவர், திறந்து அடைக்கின்றது அன்றோ - திறந்து மூடுவதன்றோ. எ-று.

க-ரை. மனமே! நம் தலைவியதுவீடு திருமறைக்காட்டெம்பெருமானது திருக்கோயில்போல, இருவர் திறந்து மூடுவதன்றோவென்பதாம்.

வி-ரை. மறம்தடுத்தல் - பாவத்தைத் தடுத்தல் எனினுமாம். மறைவனம் - திருமறைக்காடு; இதனை வேதாரண்யம் என்பர் வடநூலார். திருவாலயம் - திருக்கோயில். பிறத்தல் - உதித்தல். ஒளி - காந்தி, புகழ். இருவர் - சூரிய சந்திரர்; வாகீசர் சம்பந்தர். திருப்போல்வாளைத் திருவென்றார் ஆகுபெயரான்.

இவ்வாறு புலந்துபோந் தலைமகன் தான்வந்து குறியிடத்து நின்றுபோயதற்குக் குறியாகத் தன்மாலையை அங்குளதோர் மாதவிமேல் வைத்துப்போயினு னென்பது மேல்வருஞ் செய்யுளிற் றோற்றியதென்பது. (௧௬௬)

இத்துணையும் எட்டாநாட்செய்தியென்றுணர்க.

புலர்ந்தபின் வறுங்களந்தலைவி கண்டிரங்கல்.

அதாவது—ஒன்பதாநாள் இருள் புலர்ந்தபின் தலைவி வறுங்களங் கண்டிரங்கா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

பணஞ்செய்பொறியிளநாகாபரணர்பகைதடிந்து
நிணஞ்செய்சுடர்மழுவெங்கைபுரேசர்நெடுஞ்சிலம்பிற்
குணஞ்செய்கதிரிலைவேலன்பர்தாங்குளிர்மாலையிட்டு
மணஞ்செய்தனரெனவோதழைந்தாய்மலர்மாதவியே.

ப-ரை. மலர் மாதவியே - மலர்களையுடைய மாதவியே, பொறி - புள்ளிகளை, பணஞ்செய் - படத்திற் கொண்டிருக்கிற, இளநாகம் - இளநாகங்களாகிய, ஆபரணர் - பூணினர், பகைதடிந்து - பகைவரைக்கொன்று, நிணம்செய் - அவரது நிணமலைந்த, சுடர் மழு - ஒளியையுடைய மழுப்படையை யேந்திய, வெங்கைபுரேசர் - திருவெங்கையீசரது, நெடுஞ்சிலம்பில் - பெரிய மலையிலுள்ள, குண

ம்செய் - நன்மையைச் செய்கிற, கதிர் - ஒளியுள்ள, இலை - அச்சுவடிவினதாகிய, வேல் - வேற்படையையுடைய, அன்பர் - அன்பரானவர், குளிர் - குளிர்ந்த, மாலையிட்டு - மாலைசூட்டி, மணம்செய்தனர் எனவோ - மணஞ்செய்தாரென்றோ, தழைந்தாய் - செழித்திருக்கின்றனை. எ-று.

க-ரை. மலர் மாதவியே! படப்பொறிகளையுடைய நாகமாகிய ஆபரணம் பூண்டவரும், பகைதடிந்து நிணமலைந்த மழுப்படையையுடையவருமாகிய திருவெங்கை யீசரது நெடுஞ்சிலம்பில் வாழ்கின்ற கதிரிலை வேலன்பர், குளிர்மாலையிட்டு மணஞ்செய்தா ரென்றோ, நீதழைந் தென்னெதிரே நிற்பது என்பதாம்.

வி-ரை. பணம் - படம். பொறி - புள்ளி. தடிதல் - வெட்டுதல். நிணம் - கொழுப்பு. சிலம்பு - மலை. மாதவி - குருக்கத்தி. பெரிய தவப்பெண்ணே! நீ செய்த பெருந்தவப் பயனன்றோ எம்மன்பர் உனக்குத் தமது குளிர்மாலை சூட்டினதென வேறொருபொருடோன்று மாறுங்காண்க. (கக௭)

தலைமகள் பாங்கியோடுரைத்தல்.

அதாவது—மாதவியோ டுரையாடி மீண்ட தலைமகள் பாங்கியோடு கூறா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

நல்லார்தொடர்பிளங்காய்முதிர்வாமெனநாடுரைப்ப
வல்லார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கையாதிவெற்பின்
மல்லார்திணிபுயத்தன்பர்நம்பான்முனம்வைத்தநட்பு
வில்லார்சிறுமென்றளிர்முற்றலாகிவிளைந்ததுவே.

ப-ரை. (பாங்கி - பாங்கியே) நல்லார் தொடர்பு - நல்லோரது நட்பானது, இளங்காய் முதிர்வு ஆம் என - இளங்காய் முதிர்தல் போலுமென்று, நாடு உரைப்ப - நாட்டார் சொல்லுவர், (அவ்வாறே) அல் ஆர் - இருள் நிறைந்த, மணிமிடறு - நீலமணிபோலுங் கண்டத்தையுடைய, எம்மான் - எம்பெருமான், திருவெங்கை ஆதி - திருவெங்கை முதல்வன், (அவனது) வெற்பில் - மலையிலுள்ள, மல் ஆர் - மற்றொழிலமைந்த, திணிபுயத்து - திணிதோள்களையுடைய, அன்பர் - அன்பரானவர், நம்பால் - நம்மிடத்து, முனம்வைத்த நட்பு - முன்னே வைத்த நட்பாகிய, வில் ஆர் - ஒளிபொருந்திய, சிறுமெல் தளிர் - சிறுமென்றளிரானது, முற்றலாகி விளைந்தது - முற்றித்தழைந்தது, எ-று.

"நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றுரு மல்லார் கேண்மை யாகாசே - நல்லாய்! கேள் காய்முற்றிற் றின்றீங் கனியாம் இளந்தளிர்நாள் போய்முற்றிச் சருகாய் வீழும்." என்பதும் காண்க.

க-ரை. பாங்கி! நல்லோர் தொடர்பு இளங்காய் முதிர்தல் போலு மென்று நாட்டார் சொல்லுவர், அவ்வாறே, திருவெங்கை யாதி வெற்பிலுள்ள நம்மன்பர் நம்பால்வைத்த நட்பாகிய சிறுமென் றளிர் முற்றிச் செழித்த தென்பதாம்.

வி-ரை. தொடர்பு - நட்பு. முதிர்வு - முதிர்தல். நாடு - நாட்டார், (உலகத்தார்). அல் - இருள். மணி - நீலமணி. மிடறு - கண்டம். ஆதி - முதல்வன். மல் - மற்றொழில். திணி - திண்மை, வலி. வில் - ஒளி. பாங்கி-முன்னிலையெச்சம். (ககஅ)

தலைமகள்வலப்பாங்கிதணித்தல்.

அஃதாவது—தலைமகளது துன்பத்தைப் பாங்கி தணித்துக்கூறி நிற்றல். அதற்குச்செய்யுள்,—

தீங்கையொன் றானுமுறுகிலர்போற்றுந்திருவடியான்
காங்கையன் றாதைதன்வெங்கையிலேபைங்கனகநிறக்
கோங்கைவென் றோங்குமுலையாய்நம்மன்பர்குறிபிழையார்
வேங்கையென் றாயினும்பூத்ததுண்டோமுல்லைமென்மலரே.

ப-ரை. ஒன்றானும் - ஒன்றினாலும், தீங்கை-தீமையை, உறுகிலர்-அடையாதவராகிய அன்பர், போற்றும்-வழிபடுதற்குரிய, திருவடியான் - திருவடியையுடையவன், காங்கையன் தாதை - காங்கேயனுக்குத் தந்தை, (அவனது) வெங்கையிலே - திருவெங்கைப்பதியிலுள்ள, பைங்கனக நிறம்-பசும்பொன்னிறத்தையுடைய, கோங்கை வென்று - கோங்கரும்பைவென்று, ஓங்கும் - உயர்ந்த, முலையாய் - முலையையுடையாளே, நம் அன்பர்—,குறிபிழையார் - குறிபிழைக்கமாட்டார், வேங்கை - வேங்கைமரம், என்று ஆயினும் - எந்நாளாயினும், மென் - மெல்லிய, முல்லைமலர் பூத்ததுண்டோ - முல்லைமலரைப் பூத்ததுண்டோ, எ - று.

க-ரை. ஒன்றினாலும் தீங்கடையாதவர் வழிபடுகின்ற திருவடியையுடையவனும், சுப்பிரமணியனுக்குத் தந்தையுமாகிய சிவபெருமானது திருவெங்கைப்பதியிலுள்ள கோங்கை வென்றோங்கு முலையாளே! நம்மன்பர் குறிபிழையார், வேங்கைமரம் எக்காலத்தேனும் முல்லைமலரைப் பூத்ததுண்டோ வென்பதாம்.

வி-ரை. ஒன்றானுந் தீங்கு என நிறுத்தி ஒரு தீமையையாயினும் என்றுரைத்தலுமாம். தீங்கையொன்றானு முறுகிலர் என்றது ஒரு புலனானும் தீமையணுகாதவரென்றும், அற்பமுந் தீங்கணுகாத

வர் என்றும் பொருள்கொள்ளக் கிடந்தது. போற்றல் - முக்கரணத்தானும் வழிபடல். கங்காபுத்ரனாதலால் முருகருக்குக் காங்கேயன் என்னும் பெயர் வழங்குவர். அது இங்கு எதுகை யின்பங்கருதிக் காங்கையன் என்றுரைக்கப்பட்டது. கோங்கு - ஆகுபெயர். (கக௯)

இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல்.

அதாவது—ஒன்பதாநாள் இரவுக் குறியில்வந்த தலைமகன்மீது, பாங்கி, அல்லகுறிப்பட்ட குற்றமேற்றிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொருவேவாவிலர்திருவெங்கையிலேமுன்புனத்திலெமை
யுருவோடுயிரமுதென்றுபொய்கூறியுழன்றவரே
வெருவோமிரவும்பழியுமும்மூர்க்குவினவிவழி
வருவோம்வரினுமெமைநோக்குறீரென வந்திலமே.

ப - ரை. பொருவு இலர் - ஒப்பில்லாதவராகிய சிவபெருமானரது, திருவெங்கையிலே - திருவெங்கைப்பதியில், முன் - முற்காலத்தில், எம்மை-எங்களை, புனத்தில்-தினைப்புனத்தில், உருவோடு - உருவோடு கூடிய, உயிர் அமுது என்று - ஜீவாமிர்தமென்று, பொய் கூறி - பொய்ச்சொற்சொல்லி, உழன்றவரே - திரிந்தவரே, இரவும் பழியும் - இரவிற்கும் பழிக்கும், வெருவோம் - அஞ்சோம், உம் ஊர்க்குவழி வினவிவருவோம் - உம்மூர்க்கு வழிகேட்டு வருவோம், வரினும்-வந்தாலும், எம்மை நோக்குறீர் என - எங்களை நோக்கமாட்டீரென்று, வந்திலம் - யாம் வந்திலேம், எ - று.

க - ரை. ஒப்பற்றவராகிய சிவபெருமானரது திருவெங்கைப் பதியில், முன்னே தினைப்புனத்தில் உருவோடுயிரமுதென்று பொய் கூறி யுழன்றவரே! இரவிற்கும் பழிக்கும் யாமஞ்சோம், உம்மூர்க்கு வழிவினவி வருவோம், வரினும் எம்மைக் கண்ணால் நோக்குதலுஞ் செய்யீரென்று யாம் வந்திலேம் என்பதாம்.

வி - ரை. உருவோடு கூடிய வுயிரமுதொன்றின்மையால் அவ்வாறு தலைவன்புனைந்துரைத்தமை பொய் யென்றலை விளக்குவான், 'உருவோடுயிரமுதென்று பொய்கூறி யுழன்றவரே, என்றாள். வெருவல் - அஞ்சல். வினவி - வழிப்போக்கரை வினவி. (உ00)

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்.

அதாவது—தலைவிமேல் அல்லகுறிப்பட்ட குற்றமேற்றிக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

நறவேயிதழியுங்கங்கையும்பாம்புநகைமதியு
முறவேயணியுமணிமுடியார்வெங்கையூரனைய
புறவேயிளமயிலேயமுதேபசும்பொற்கொடியே
மறவேனுனையென்றுநீநினையாமன்மறப்பினுமே.

ப - ரை. நறவு எய்-தேன்பொருந்திய, இதழியும் - கொன்றையையும், கங்கையும் - கங்கையையும், பாம்பும் - பாம்பையும், நகைமதியும் - ஒளியையுடைய சந்த்ரகண்டத்தையும், உறவே அணியும் - பொருந்துமாறே யணிந்த, மணிமுடியார் - அழகிய சடாபாரத்தையுடையவராகிய சிவபிரானுரது, வெங்கையூர் அனைய-திருவெங்கை நகரை நிகர்த்த, புறவே - புறவே, இளமயிலே—, அமுதே—, பசும்பொற்கொடியே—, நீநினையாமல் மறப்பினும் - நீயென்னை நினையாமல் மறந்தாலும், உன்னை என்றும் மறவேன் - உன்னை யெந்நாளும் நான்மறவேன், எ - று.

க - ரை. கொன்றை, கங்கை, பாம்பு, நகைமதி என்பவற்றைப் பொருந்துமாறணிந்த சடாபாரத்தையுடையவராகிய சிவபிரானுரது திருவெங்கை நகரை நிகர்த்த புறவே! இளமயிலே! அமுதே! பசும்பொற்கொடியே! நீயென்னை நினையாமல் மறந்தாலும், உன்னை நான் எந்நாளுமறவேன் என்பதாம்.

வி - ரை. நறஎனக்கோடலுமாம். இதழி முதலாகுபெயர். கங்கை - ஆகாயகங்கை. நகைமதி-ஒளியுள்ள இளம்பிறை. உறவேயணியுமணிமுடியார் என்றது, இவற்றைத் தரித்தற்குரிய விடத்தில் தரித்து என்றபடி. இது "செய்வவுத்தியொடு வலம்புரி வயின்வைத்து" என்புழி நச்சினார்க்கினியர் வரைந்தருளின வரையாலினிது விளங்கும். அணிமுடியார் எனவும் பிரிக்கலாம். இறைவரது திருமுடிக்கியற்கை யழகிருப்பினும் அதன்மேலும் இதழி முதலிய வணிகையானேர் பேரழகுண்டாயிற்றென்பார். 'நறவே யிதழியுங் கங்கையும் பாம்பு நகைமதியு, முறவேயணியு மணிமுடியார்' என்றார். புறவு முதலிய நான்கும் முறையே நடை, சாயல், சுவை, துவட்சியென்பவற்றானுவமை. (உ0க)

தலைவிகுறிமருண்டமைபாங்கிதலைவற்குணர்ந்தல்.

அதாவது—தலைவி குறி மயங்கியதைப் பாங்கி தலைவற்குணர்த்தல். அதற்குச் செய்யுள்,—

ஈயாதவரைக்கண்டிவாரெனச்செல்லிரவலர்போற்
போயரவியிற்சிறுமாங்கனிவிழப்புரவலனே
நீயாலியிற்செய்குறியெனவேசென்றுநிந்தார்வெங்கை
வியாமலர்க்குழலாள்வறிதேமொந்துமீண்டனளே.

ப - ரை. புரவலனே - அரசனே, நித்தர் - சாசுவதராகிய சிவபிரானது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, வீயாமலர்க்குழலாள் - நீங்காத மலரை யணிந்த கூந்தலையுடையவளாகிய எமது தலைவியானவள், ஈயாதவரைக்கண்டு - பொருள் கொடாதவரைக்கண்டு, ஈவார் என - கொடுப்பவரென்றெண்ணி, செல் - அவரிடத்தே செல்லாநின்ற, இரவலர்போல் - யாசகர்போல, போய் - சென்று, ஆவியில் - தடாகத்தில், சிறுமாங்கனிவீழ - சிறிய மாம்பழம்விழ, நீ—, ஆவியில் செய்குறி எனவே சென்று - தடாகத்திற் செய்த குறியென்றே யெண்ணிச்சென்று, வறிதே நொந்து மீண்டனள் - வீணே நொந்து திரும்பினாள், எ - று.

க - ரை. புரவலனே! நித்தர் வெங்கை வீயாமலர்க் குழலாளாகிய எமது தலைவியானவள், ஈயாவுலோபரை ஈவோரென்றெண்ணிச் சென்றலையுமிரவலர் போலச்சென்று, தடாகத்திலோர் சிறுமாங்கனி வீழ, அதனை நீசெய்த குறியென்றே யெண்ணி நெடிது நின்று வறிதே நொந்து மீண்டனள் என்பதாம்.

வி - ரை. ஈயாதவர் - உலோபர். ஈவார் - கொடையாளர். இரவலர் - யாசகர் (ஏற்போர்). ஆவி - தடாகம். குறி - அடையாளம். நித்தர் - அழியாதவர். வீயாமலர்க்குழலாள் - மலர் நீங்காத கூந்தலையுடையாள். வீ ஆம்மலர் என்பதற்கு - வண்டுகள் மொய்க்குமலர் என்றுரைப்பினுமாம். வறிதே - பயனடையாதே. நொந்து - மனம்வருந்தி. மீளல் - திரும்பல். எ - இரங்கல். (உ0உ)

அவன்மொழிக்கொடுமைபாங்கியவட்கியம்பல்.

அதாவது—தலைவன் சொல்லிய கடுமொழியைப் பாங்கி தலைவிக்குச் சொல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கள்ளெழுங்கொன்றையர்வெங்கையிலேமைக்கடலின்மதி
நள்ளெழுங்காலம்பெறவேகுறியிடநான்மருவி
யுள்ளெழுங்காமமருந்துபெறுமலுழன்றுமசென்றேன்
புள்ளெழுங்காலையென்றாரன்பர்தாமிளம்பூங்கொடியே.

ப - ரை. இளம்பூங்கொடியே - இளமையாகிய பூங்கொடிபோல்வாளே, அன்பர் - நமது தலைவர், கள்ளெழுங்கொன்றையர் - தேன் பெருகுகின்ற கொன்றைமலர்மாலையை யணிந்தவராகிய சிவபிரானது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், மைக்கடலின் நள் - கருங்கடலினடுவே, மதிஎழும் காலம்பெற - சந்திரனுதிக்குங்காலம் வருதலும், நான்குறியிடம் மருவி - நான்குறியிடத்தை யடைந்து,

உள்ளெழும் - மனத்துண்டாகிய, காமம்-காமநோய்க்கு, மருந்துபெறுமல் - மருந்தினைப்பெறுமல், உழன்று - திரிந்து, புள்ளெழும்காலை - புட்களெழுங்காலத்தில், சென்றேன் என்றூர் - மீண்டுபோயினேனென்றனர், எ - று.

க - ரை. இளம்பூங்கொடியே! நமதன்பர், சிவபெருமானூரது திருவெங்கைப்பதியில், கருங்கடலிடையே மதிதோன்றுங் காலத்தில் குறியிட மடைந்து நெடிதேயுழன்றுங் காமமருந்து பெருமையால் புட்களெழுங்காலத்தே மீண்டு சென்றேனென்றூர் என்பதாம்.

வி - ரை. கள் - தேன். எழுதல் - பெருகுதல். மை - கருமை. நள் - நடு. மதி-மதுவையுடையது, (மது-அமுதம்). மருவல்-பொருந்தல். உள் - உள்ளிடம் (மனம்). மருந்து என மேல்வருகையால் காமம் என்பதற்குக் காமநோயென் றுரை யுரைக்கலாயிற்று. காமமருந்து-தலைவி; தலைவியின் அதாரமிர்தம் எனினுமமையும். உழலல்-இங்குமங்குமாகத் திரிதல். புள்ளெழுங்காலை - புள்ளெழுந்தலம்புங்காலம் (வைகறை). புள்ளெழுங்காலைப் பொழுதென்றலுமாம். நம்மிடத்தன்புடையராதலால் இவ்வாறுழன்று சென்றூர்போலு மென்றவாறு. (உ0௬)

என்பிழைப்பன் றென் றிறைவி நேர்தல்.

அதாவது—குறிபிழைத்தது என்பிழையன்றென்று இறைவி பாங்கியை நேர்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அஞ்சாமதற்றெறும்வெங்கைபுரேசரணிமிடற்றி
னஞ்சாமிருளிற்குறிபிழையாதொருநான்குறித்துத்
துஞ்சாதிருந்துந்துஞ்சுற்றுளெனவவர்தூற்றப்பட்டே
னெஞ்சாவமுதனையாயினிநானிதற்கென்செய்வதே.

ப - ரை. எஞ்சா அமுது அனையாய்-குறையாத அமுதுபோல்வாளே, அஞ்சா - அஞ்சாத, மதன் - மன்மதனை, தெறும் - வென்ற. வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க் கதிபராகிய சிவபெருமானது, அணிமிடற்றின் - அழகிய கண்டத்திலுள்ள, நஞ்சுஆம் - நஞ்சுபோல்கின்ற, இருளில் - இருட்போதில், குறிபிழையாது-குறிபிழையாமல், ஒரு நான் குறித்து - தனியேனாகிய நான்நினைத்து, துஞ்சாது இருந்தும் - தூங்காதிருந்தும், துஞ்சுற்றுள் என-தூங்கினாளென்று, அவர் தூற்றப்பட்டேன் - அவராலே தூற்றப்பட்டேன், இனி நான் இதற்கு என் செய்வது - இனி நானிதற்கு யாது செய்வது, எ - று.

க - ரை. எஞ்சாவமுதனையாய்! மதநசத்ருவாகிய திருவெங்கையினறவரது அணிமிடற்றி னஞ்சுபோன்ற இருட்காலத்தில், நான் அவரை நினையாநின்று குறிபிழையாமலும், தூங்காமலுமிருந்தும், நான் தூங்கினேனென்று அவராலே தூற்றப்பட்டேன், இனியிதற்கு யான்செய்தற் குரியதுயாது என்பதாம்.

வி-ரை. அஞ்சா என்றது இறைவர் யோகமமர்ந்திருந்த நிலையினுக்குமஞ்சாத என்றவாறு. தெறல் - அழித்தல். அணிமிடறு என்றார் இமையோர் முதலானோரைக் காத்தனோக்கி. நஞ்சாம் என்பதில் ஆம்-உவமவுருபு. இருள் - இராக்காலம். குறித்தல்-நினைத்தல். துஞ்சல் - உறங்கல். துஞ்சுறல் - ஒருசொல்; தூங்கலென்பதுபொருள். எஞ்சாவமுது - குறையாத அமிர்தம். (நிறைந்த அமிர்தம்) ஆக்கத்திற் கேதுவாகிய அமிர்தம். இத்துணையும் பகற்செய்தி யென்றுணர்க. (உ0ச)

வருந்தொழிற்கருமை.

தாயி துஞ்சாமை.

அதாவது—தலைமகள், தன்று யுறங்காமையைப்பற்றிப் பாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கயிற்றணிகழரவம்போற்சகந்தனிற்கற்பனையாக்
குயிற்றுநிகழிறைவெங்கையிலேயெழுங்கூன்பிறையோர்
றெயிற்றணிகழுமிளம்பேதையாமிவ்விரவுவந்து
துயிற்றவன்னைதன்னைவெங்காலதூதர்துயிற்றுகவே.

ப - ரை. (தோழீ - பாங்கி) கயிற்றல்-கயிற்றில், நிகழ்-தோற்றுகிற, அரவம்போல் - பாம்புபோலும், சகந்தனில் - சகத்தை. கற்பனையாகுயிற்று - கற்பனையாயுண்டாக்கி, நிகழ்-நிகழ்த்துகிற, இறை-இறைவரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், எழும்-தோற்றுகிற, கூன்பிறை - கூனற்பிறையாகிய, ஓர் எயிற்றல் நிகழும்-ஒற்றைப்பல்லோடு கூடி விளங்குகிற, இளம்பேதை ஆம் - இளஞ்சிறுமியாகிய, இவ்விரவு வந்து - இவ்விராக்காலம் வந்து, துயிற்று - துயில்விக்காத, அன்னை தன்னை - நமது தாயை, வெம் - வெவ்விய, காலதூதர் - யமபடர், துயிற்றுக - துயில்விக்கக் கடவர், எ - று.

க - ரை. பழுதையிற்பாம்புபோலும் பொய்யாகிய சகத்தைக் கற்பனையாகத் தோற்றுவித்து நிகழ்த்துகிற இறைவரது திருவெங்கைப்பதியில், கூன்பிறையாகிய வொற்றைப்பல்லினையுடைய இளம்

பெண்ணாகிய இவ்விரவுவந்து துயில்விக்காத நம்மன்னையை வெங்காலதூதர் வந்து துயிற்றுக வென்பதாம்.

வி - ரை. கயிற்றால் - உருபுமயக்கம். கயிறு-பழுதை. அரவம் - பாம்பு. சகம் - தோன்றியழிதன் மாலையதாகிய வுலகம். கற்பனை - இல்லதையுள்ளதுபோற் கற்பித்தல். குயிற்றல் - செய்தல். குயிற்று - செயவெனெச்சம். கூன்பிறை - வளைவாகிய பிறை. எயிறு - பல். பேதை - பருவங் குறியாது பெண்ணென்னுந் துணையாய் நின்றது. துயிற்றல் - தூங்குவித்தல். வெங்காலதூதர் துயிற்றுக வென்றது, யமபடர் இவளைக்கொல்லக்கடவர் என்றபடி. வெங்கால தூதர் என்பதில் வெம்மை இயற்கை யடை. (உ0கு)

நாய்துஞ்சாமை.

அதாவது—தாய் துஞ்சியபின், ஊரிலிருக்கும் நாய்கள் துஞ்சாமையைக் குறித்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சுளைவாய்மடைதிறக்கும்பலவான்வயற்றோன்றுசெந்நெல்
விளைவாய்மலியுந்திருவெங்கைவாணர்தம்வெற்பிடைமா
தளைவாய்மடமயிலேதனிவேழந்தனையொருபுல்
வளைவான்ஞமலிகுரைத்திங்குறாமன்மறித்ததுவே.

ப - ரை. சுளை - சுளைகள், வாய் மடைதிறக்கும் - வாயாகிய மடையைத் திறக்கின்ற, பலவான் - பலாக்கனியின் சாற்றினால், வயல்தோன்று செந்நெல்-வயலினிடத்து முளைத்த செந்நென் முளைகள், விளைவு ஆய் மலியும் - விளைந்து மிகாநின்ற, திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானது, வெற்பிடை - மலையிலுள்ள, மாதளைவாய் - மாதளைக்கனிபோலும் வாயினையுடைய, மடமயிலே - இளமயிலே, தனிவேழந்தன்னை-ஒப்பற்றயானையை, ஒருபுல் வளைவால் ஞமலிகுரைத்து, ஒரு புல்லிய வளைந்தவாலினையுடைய நாய் குரைத்து, இங்கு உறாமல் மறித்தது-இங்கு வரவொட்டாமல் தடுத்தது, எ - று.

க - ரை. சுளைகள் வாயாகிய மடையைத்திறந்து பெருக்குகின்ற பலாக்கனிச்சாற்றினால் செந்நெல்விளைவு மிகாநின்ற திருவெங்கை நாதரது மலையில், ஒருவளைவால் நாயானது குரைத்து ஒப்பற்ற யானையை இங்குவரவொட்டாமல் தடுத்ததென்பதாம்.

வி - ரை. சுளை - பலவின்சுளை. பல - பலா; இது இதன் சாற்றுக்காயிற்று. விளைவு - விளைதல். மலிதல் - மிகுதல். வெற்பிடை

யென்பதில் இடை-யேழனுருபு. மாதளைவாய்-மாதுளங்கனிபோலும் வாய். மாதளை-மாதுளம் பூவுமாம். வாய் என்பதை யிடவாகு பெயராக்கி வாயிலுள்ள பல்லென்றுரைத்தலுமாம். இப்பொருட்கு மாதளை யென்றது மாதுளம் விரையையென்க. வேழம் - யானை. தம் - சாரியை. ஞமலி - நாய். மறித்தல் - தடுத்தல். தனிவேழம் என்றது தலைமகனை. முன்னெல்லாம், 'சினவிலங்கின் சங்கந்தனக்கொரு நாணே தளர் குவன்' எனத்தன் வீராலாபஞ் செய்த கூர்வேலண்ணல் இன்றொரு புல்லவனான் ஞமலி குரைத்தற் கஞ்சுதல் அசங்கதமாமெனின், அன்று. நிகழ்வது களவொழுக்கமாதலாலும், இது பலரறியவொண்ணுதென்னு நாணத்தானுமேயன்றி ஞமலிகுரைக்கஞ்சினனல்ல னென்றுணரப் படுதலானென்க. (௨௱௬)

ஊர்துஞ்சாமை.

அதாவது—நாய் துஞ்சினும் ஊரிலுள்ளார் துஞ்சாதிருத்தலைக் குறித்துத் தலைவி பாங்கியொடு கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

நீர்துஞ்சுசெஞ்சடையார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பில்
வார்துஞ்சுமென்முலைக்கோமளமேவந்துமால்வரைமேற்
கார்துஞ்சமாவினமெல்லாமுன்றுஞ்சக்கடலுந்துஞ்ச
வூர்துஞ்சிலாததென்னோவிதுநான்செய்தவூழ்வினையே.

ப-ரை. நீர்துஞ்சு செஞ்சடையார் - நீர்துஞ்சுஞ் செஞ்சடையையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர், (அவரது) நெடுஞ்சிலம்பில்-நெடியமலைமீதுள்ள, வார்துஞ்சும் - கச்சுத்தங்கிய, மென்முலை - மெல்லிய தனங்களையுடைய, கோமளமே - மெல்லியலே. மால்வரைமேல்வந்து - பெரிய மூங்கிலின்மேல் வந்து, கார்துஞ்ச - மேகங்களுறங்கா நிற்கவும், மா இனம் எல்லாம் - விலங்கினமெல்லாம், முன் துஞ்ச - முன்னமே துஞ்சா நிற்கவும், கடலும் துஞ்ச - கடலுந்துஞ்சா நிற்கவும், ஊர்துஞ்சிலாதது - ஊர்துஞ்சாமைக்குக் காரணம், என்னோ - யாதோ, இது நான்செய்த ஊழ்வினையே - இது நான்செய்த ஊழ்வினைப்பயனேயாம், எ-று.

க-ரை. நீர்துஞ்சு செஞ்சடையாராகிய திருவெங்கைவாணரது நெடுங்கிரி மேலுள்ள, வார்துஞ்சு மென்முலைக் கோமளமே! மூங்கிலின்மேல் மேகங்கள்வந்து துஞ்சாநிற்கவும், விலங்கினங்களெல்லாந் துஞ்சா நிற்கவும், கடல் துஞ்சா நிற்கவும், ஊர்துஞ்சா திருப்பதற்குக் காரணம் யான்செய்த ஊழ்வினைப் பயனேயாமென்பதாம்.

வி-ரை. ஊர் - ஊரி லுள்ளாரை யுணர்த்தலால் ஆகுபெயர். நீர் - ஆகாயகங்கை. வார் - கச்சு. கோமளம் - மெல்லியலை யுடையாள். வரை - மூங்கில். கார் - மேகம்; பண்பாகுபெயர். மா - விலங்கு. துஞ்சல் - உறங்கல். வார்துஞ்சு மென்முலைக் கோமளம் என்றது பாங்கியை. (உ0எ)

காவலர்கடுகுதல்.

அதாவது—நகர்காவலர், பறையடித்து ஊர்சுற்றிக் கடுகி வருதலைக் குறித்துக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

தேவாதிதேவர்திருவெங்கைவாணர்சிலம்பர்நமை
மேவாதவண்ணங்கதிர்வேன்மருட்டும்விழிமடவாய்
கூவாமறுகிற்றிரிகாவலர்கையிற்கொட்டுபறை
வாவாவெனநெய்தலம்பறைகூவுநம்வாய்தனுக்கே.

ப-ரை. கதிர்வேல் மருட்டும் - ஒளியுள்ள வேற்படையை மருட்டுகின்ற, விழி - கண்களையுடைய, மடவாய் - பெண்ணே, தேவாதிதேவர் - தேவர்களுக் கதிதேவரும், திருவெங்கைவாணர் - திருவெங்கை வாணருமாகிய சிவபெருமானது, சிலம்பர்-மலையிலுள்ள நம்மன்பர், நம்மை மேவாத வண்ணம் - நம்மைச் சேராத வண்ணம், கூவா - கூவி, மறுகில்திரி - தெருக்களில் திரிகிற, காவலர் - ஊர்காவலர், கையின் - கையினால், கொட்டுபறை - கொட்டப்படுகிற பறையானது, வாவா என - வாவாவென்று, நெய்தலம்பறை - நெய்தற்பறையை, நம்வாய்தனுக்கு - நமது வாயிலிடத்து, கூவும் - வரக்கூவா நிற்கும், எ-று.

க-ரை.- கதிர்வேன் மருட்டும் விழிமடவாய்! திருவெங்கைவாணர் மலையிலுள்ள சிலம்பர் நம்மைச் சேராதவண்ணம், ஊர்காவலர் கொட்டும் பறையானது நெய்தற்பறையை நமது வாயிலுக்கு வரக்கூவா நிற்கும் என்பதாம்.

வி-ரை. தேவாதிதேவர் - தேவர்களுக்கெல்லா முதற்றேவர் எனினுமாம். சிலம்பர் - வெற்பர். மேவல் - கூடல். மருட்டல் - வெருட்டல். கூவா - கூவி; செயவெனெச்சம். கையின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது. கொட்டுதல் - அறைதல் (அடித்தல்). பறை - வாச்சியம். நெய்தற்பறை - சாப்பறை. வாவாவென் நெய்தலம்பறை கூவும் என்பதற்கு, நெய்தற்கணையை வாவாவென்று நம் வாயிலுக்கு அறை கூவும் என்றுரைத்தலு மொன்று. அறைகூவுதல் - வலிந்தழைத்தல். இவ்வாறு

கூற்லால் தலைவர் நம்மைச் சேராமையால் இறந்துபடுவே மென்றதாயிற்று. (௨௦௮)

நிலவுவெளிப்படுதல்.

அதாவது—தலைவன் வருகைக்கிடையூறாய் நிலவு வெளிப்பட, தலைவிவருந்திப் பாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஒழுங்கியிருந்தசடையாளர்வெங்கையொருவர்வெற்பிற்
புழுங்கியிருந்தமனத்தன்பர்தாம்வந்துபோமளவு
மழுங்கியிருந்துமிளிர்திங்களையொருவாளரவம்
விழுங்கியிருந்துவிடாதுகொலோதளிர்மெல்லியலே.

ப - ரை. தளிர்மெல் இயலே-தளிர்போலு மெல்லியலை யுடையாளே, ஒழுங்கி யிருந்த சடையாளர் - நிரல்பட்டிருந்த சடையையுடையவர், வெங்கை ஒருவர் - திருவெங்கைப் பதியிலுள்ள ஒப்பற்றவர், (அவரது) வெற்பில் - மலையில், புழுங்கியிருந்த மனத்து-நொந்திருந்த மனத்தினையுடைய, அன்பர் - நம்மன்பரானவர், வந்து போம் அளவும்-வந்துபோகிறவரைக்கும், மழுங்கியிருந்து மிளிர்-மழுங்கியிருந்து விளங்குகிற, திங்களை - சந்திரனை, ஒருவாள் அரவம் - ஒருவாளரவானது, விழுங்கியிருந்து விடாதுகொலோ-விழுங்கி அவ்வண்ணமே யிருந்துவிடாதோ, எ - று.

க - ரை. தளிர் மெல்லியலே! ஒழுங்கி யிருந்த சடையாளரும் வெங்கை யொருவருமாகிய சிவபெருமானாரது மலையிலுள்ள நம்மன்பர் வந்து போமளவும், மழுக்கமாய் விளங்குகிற சந்திரனை யொருவாளரவம் விழுங்கி யுமிழாமலே யிருந்துவிடாதோ வென்பதாம்.

வி - ரை. ஒழுங்கி - ஒழுங்காகி (வரிசையாகி). புழுங்குதல் - வருந்துதல். தாம் - அசை; தமியராய் எனினுமாம். மழுங்கி - ஒளிகுன்றி. மிளிர்தல் - விளங்குதல். வாள் - ஒளி. அரவம்-பாம்பு. (ராகு கேது) இருந்துவிடாதோ என்றது மீட்டுமுமிழாதிருந்து விடாதோ வென்றபடி. உமிழாதிருப்பின் நம்மன்பர் வருகைக்குத் தடைநேராது யாமுமின்புறலா மென்றவாறு. மழுங்கி யிருந்துமிளிர் திங்கள் என்றது பதினான்கு நாழிகைக்குமேல் வெளிப்படுந்திங்களை. என்னை, மதித்திங்களும் பிறைத்திங்களும் தம்மிற் கலக்கின்றநாள் அப்பதினைந்தில் இது மதித்திங்களாதலால் இம்மதித் திங்கட்குப் பிற்கூறும் சளவு இரவுக்குறிக் குரித்தாகலானும் மற்றைத்தினம் அட்டமித்திதியாதலானும் என்றுணர்க. இது, "திங்க ளிரண்டி னகமென மொழிப" என்னும் இறையனா ரகப்பொருட் சூத்திரவுரையானுமினிது விளங்கும். (௨௦௯)

கூகைதுழறுதல்.

அதாவது—கூகைகுழறக்கேட்ட தலைவி, இஃதோர் சருநத்தடையாமே யெனவருந்திக் கூகையை முன்னிலையாக்கிக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

நாகாபரணர்திருவெங்கைநாயகர்நல்லடிக்கன்
பாநாதவரெனக்கூகூவென்றத்தியதிலிருந்து
நீகாவலரைவிலக்குகின்றாயுயிர்நீத்திலனேற்
கூகாய்நினதட்டல்காண்பேன்விடியிற்கொடிமுன்னமே.

ப - ரை. கூகாய் - கூகையே, நாகாபரணர்-சர்ப்பாபரணத்தையுடையவர், திருவெங்கை நாயகர் - திருவெங்கை நாதர், (அவரது) நல்அடிக்கு - நன்மையைத் தருகிற திருவடிக்கு, அன்பு ஆகாதவர் என - அன்பராகாதார்போல, அத்தியதிலிருந்து - அத்திமரத்தின் மீதிருந்து, கூகூவென்று - கூகூவென்று குழறி, நீ காவலரை விலக்குகின்றாய்- நீ யெம்மரசரை விலக்கா நின்றனை, உயிர் நீத்திலனேல்- உயிர் விடேனாயின், விடியின் - பொழுது விடிந்தால், கொடிமுன்னம்-காகத்துக் கெதிரே, நினது அடல்காண்பேன் - உன்வலியைக் காண்பேன், (யான்) எ - று.

க - ரை. கூகையே! நாகாபரணராகிய திருவெங்கைச் சிவபெருமானது திருவடிக் கன்பராகாதவர்போல, அத்திமரத்தின்மேலிருந்து கூகூவென்றலறி எம்மன்னவர் வரவுக்கிடையூறு செய்கின்றனை, நான் உயிரோடிருந்தால், பொழுதுவிடிந்த பிறகு, காக்கைக்கெதிரே உன்வலியைக் காண்பேன் என்பதாம்.

வி - ரை. பிறவிப்பெருங் கடற்கோர் மரக்கலமாதலால் இறைவர் திருவடியை 'நல்லடி' என்றார். அன்பு-ஆகுபெயர். அத்தியதில் என்பதில் அது - பகுதிப்பொருள் விகுதி. காவலர்-அரசர்(தலைவர்). விலக்கல் - தடுத்தல். உயிர்நீத்தல் - உயிர்விடல். கொடி - காகம். ()

கோழிகுரல்காட்டுதல்.

அதாவது—இருவர்க்கு மிடையூறாய்க் கோழிகள் கூவாநிற்றல் பற்றி, அவற்றை முன்னிலையாக்கித் தலைவி கூறு நிற்றல். அதற்குச் செய்யுள்,—

வாய்மையெனினும்புலரிபைக்கூவுதல்வாரணங்காள்
சேய்மையபறுநங்கொழுநர்தங்கூட்டஞ்சிதைத்தெமக்குத்
திமைபயந்தமையால்வெங்கைநாயகர்செய்தவறத்
தூய்மையுணர்ந்தவர்வாய்மையன்றுமெனச்சொல்லுவரே.

ப-ரை. வாரணங்காள் - வாரணங்களே, புலரியைக் கூவுதல் - வைகறையை நீங்களழைத்தல், வாய்மையெனினும் - மெய்யே யாயினும், சேய்மை அறும் - சமீபித்த, நம்கொழுநர் கூட்டம் - எமது தலைவரது கூட்டத்தை, சிதைத்து - கெடுத்து, எமக்கு - எங்களுக்கு, தீமை பயந்தமையால் - தீமை செய்ததனால், வெங்கை நாயகர் - திருவெங்கை நாதர், செய்த - விதித்த, அறத்தூய்மை உணர்ந்தவர் - அறத்தின் தூய்மையை யறிந்தவர், வாய்மை அன்று ஆம் எனச்சொல்லுவர் - (உங்களுண்மையை) உண்மையன்றாமென்று கூறுவர், எ-று.

க-ரை. வாரணங்காள்! நீங்கள் வைகறையை யழைத்தலுண்மையேயாயினும், அவ்வுண்மை எமது கூட்டத்தைச் சிதைத்துத் தீமை தருதலால், அதனை உண்மை யன்றென்று அறத்தூய்மை யுணர்ந்தவர் சொல்லுவ ரென்பதாம்.

வி-ரை. வாரணம் கோழிக்குப் பொதுப்பெயராயினும் இங்குக் கூவுதல் என்றதனால் சேவலைக் குறித்தது. வாய்மை - உண்மை. புலரி - வைகறை (அருணோதயம்). சேய்மை - தூரம். சேய்மையறும் என்றமையால் சமீபம் எனப்பட்டது. கொழுநர் - கணவர். கூட்டம் - கூடுதல் (புணர்ச்சி). சிதைத்தல்-கெடுத்தல். தீமைபயத்தல் - தீமைதரல். வாய்மையன்றாமெனச் சொல்லுவர் என்றமையால் பொய்மையா மென்று சொல்லுவர் என்றவா றாயிற்று. "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்பது திருக்குறள். (௨௧௧)

வரைதல்வேட்கை.

அதாவது—இவ்வாறு இடையீடுபட்டதனால், பத்தாநாள் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுவது.

"அச்ச முணர்த்த லாற்றா மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால் வரைதல் வேட்கை மூவகைப்படும்.

தலைமகளைப்பாங்கிபருவரல்வினவல்.

அதாவது—தலைமகள் வேறுபாடுகண்ட பாங்கி அவளை யவ்வேறுபாட்டிற்குக் காரணமென்னென வினவா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

என்னிடத்துற்றகுறையுளவோநம்மையீன்றவன்னை
தன்னிடத்துற்றமுனிவோவுலகந்தருமிமய
மின்னிடத்துற்றபழமலையார்திருவெங்கையன்னாய்
நின்னிடத்துற்றதென்னோவுரையாய்நின்னினைவினையே.

ப-ரை. உலகம் தரும் - உலகங்களெல்லாவற்றையு மீன்ற, இமயமின் - உமாதேவியை, இடத்து உற்ற-தம்மிடப்பாகத்தி லிருக்கப்பெற்ற, பழமலையார் - பழமலை நாதரது, திருவெங்கை அன்னாய்-திருவெங்கைப்பதியை நிகர்த்தவளே. என்னிடத்துற்ற குறை உளவோ - என்னிடத்துண்டான குறைகள் உள்ளனவோ, நம்மை ஈன்ற - நம்மைப்பெற்ற, அன்னை தன்னிடத்துற்ற முனிவோ - தாயினிடத்தேயுண்டான கோவமோ, நின்னிடத்து உற்றது என்னே - உன்னிடத்துண்டான குறையென்னவோ, நின்நினைவினை - உன்கருத்தை, உரையாய் - சொல்லுவாயாக, எ-று.

க-ரை. எல்லா வுலகங்களையு மீன்றருளின வுமாதேவியாரை யிடப்பாகத்தி லமைத்துக்கொண்ட பழமலைநாதரது திருவெங்கைப் பதியை நிகர்த்தவளே! என்னிடத்துண்டான குற்றங்களுளவோ? நம் மன்னையின்மீது கோவமோ? உன்னிடத்துண்டான குறையாதோ? உன்கருத்தை யெனக்குச் சொல்லுவாயாக வென்பதாம்.

வி-ரை. நம்மை யீன்றவன்னை யென்றாள் தலைவிக்குந் தனக்கும் ஒற்றுமை யுண்மைகருதி. முனிவு - கோவம். இமயமின் - மலையரையனீன்ற மின்கொடி போல்வாள். இடம் - இடப்பாகம். நினைவு - கருத்து. (உகஉ)

அருமறைசெவிலியறிந்தமைகூறல்.

அதவாது—தலைவி, அரிய தன் களவொழுக்கத்தைச் செவிலி யறிந்தமை பாங்கிக்குக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

வேலையிலேவருநஞ்சமுண்டார்திருவெங்கைவெற்பின்
மாலையிலேவண்டிசைபாடுமென்குழல்வாணுதலாய்
சோலையிலேநங்கொழுநர்வந்தேகதிர்தோன்றுசிறு
காலையிலேதருமாலையன்னோவன்னைகண்டனளே.

ப-ரை. வேலையிலே வரும் - பாற்கடலிலுண்டாகிய, நஞ்சம் உண்டார் - நஞ்சுண்டவராகிய சிவபெருமானது, திருவெங்கை வெற்பில்-திருவெங்கை மலையில், மாலையிலே - பூமாலையில், வண்டு-வண்டுகள், இசைபாடும்-இராகங்களைப் பாடுகிற, மெல்குழல் - மெல்

லிய கூந்தலையுடைய, வாணுதலாய்-வாணுதலே, சோலையிலே - பூஞ்சோலையில், நம்கொழுநர் வந்து - நம் தலைவர் வந்து, கதிர்தோன்று - சூரியனுதிக்கிற, சிறுகாலையிலே - சிறுகாலைப்பொழுதில், தரும் - தந்த, மாலை - மாலையை, அன்னை - செவிலித்தாயானவள், கண்டனள் - கண்டாள், எ - று.

க - ரை. திருப்பாற் கடனஞ்சமுதாக வுண்டருளின சிவபெருமானுறைது திருவெங்கை மலையில், பூமாலையில் வண்டுகளிசை பாடுதற்குரிய மென்குழல் வாணுதலாய்! நம்கொழுநர்வந்து சோலையிலே சிறுகாலையில் மாலைதருதலைச் செவிலித்தாய் கண்டாள் என்பதாம்.

வி - ரை. வேலை-வேலா என்னும் வடசொல்லீற் றுகாரம் ஐகாரமாயிற்று; இது வடசொற்றிரிபு. மாலை - பூமாலையைக் குறித்தது வண்டிசை பாடுமென்குழல் என்றமையால். வாணுதலாய் - ஒளிபொருந்திய நெற்றியை யுடையாளே. சிறுகாலையென மேல்வருதலால் கதிர் சூரியனுக் காயிற்று. சிறுகாலை-சூரியோதயகாலம். அன்னோ - இரங்கல். களவில் தாயறிந்தாளென்று கூறல் வழுவெனின், வழுவன்று. என்னை, இரவுக் குறியினிடையீடு பட்டதனால் வரைதல் வேட்கை தலைவிக் குண்டாயிற்று. உண்டாகவே, பாங்கியொடு, வருந்தொழிற் கருமை சாற்றல் முதலியவற்றால் தலைமகன் வரவை விலக்குவித்தலின், அருமறை செவிலியறிந்ததாகக் கூறவே, தலைவன் விரைந்து வரைந்து கொள்வனெனக்கருதித் தலைவிதானே கூறியதல்லது செவிலியறிந்தா ளல்லளென்றுணர்க. அன்றி, அறிந்தாளெனின், வரைவியலில் 'தலைவி வேற்றுமை செவிலி பாங்கியை வினாதல்' என்னுங் கிளவிக்குவழுவாம். அன்றியும், செவிலி வெறியாடுதல் முதலியவற்றால் தலைவிக்குற்றநோய் யாதோவென்று வினாவினளென் றுண்டுக் கூறலின், ஈண்டறிந்து வைத்து அங்ஙனம் வினாவின் வினாவழுவுளதா மாதலானும் செவிலி யறிந்தாளல்லளென்றுணர்க. (௨௧௫)

தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

அதாவது—தலைவி, தலைவன் வருந்தொழிற் கருமையைப் பாங்கிக்குக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

தாயுஞ்சுணங்கனுமூரும்வெங்காவலுஞ்சந்திரனுந்
தீயுங்குடிஞையுஞ்சேவலுந்தப்புஞ்செயலெல்லிதோ
பாயுஞ்சினவிடையார்வெங்கைவாணர்பணிவரைமேற்
காயுங்கதிரிலைவேல்வீரர்நம்மைக்கருதினுமே.

ப-ரை. (பாங்கி-தோழீ,) பாயும்-பாய்கின்ற, சினம்-கோபத்தை யுடைய, விடையார்-இடபவாகனத்தையுடையவர், வெங்கைவாணர்-திருவெங்கைவாணர்(அவரது), பனிவரைமேல்-குளிர்ச்சியாகிய மலைமீதுள்ள, காயும் - (பகைவரை) சினவுகிற, கதிர்-ஒளியுள்ள, இலை - இலைவடிவினதாகிய, வேல் - வேற்படையை யுடைய, வீரர் - வீராகிய நந்தலைவர், நம்மைக் கருதினும் - நம்மை நினைத்தாலும், தாயும்-நம்மன்னையும், சுணங்கனும் - நாயும், ஊரும் - ஊராரும், வெங்காவலும் - கொடிய காவலும், சந்திரன் ஆம்தீயும் - சந்திரனாகிய நெருப்பும், குடிஞையும்-கூகையும், சேவலும் - கோழியும், (ஆகிய இவற்றையெல்லாம்) தப்பும்செயல் - தப்புவித்துக் கொள்ளுஞ் செய்கை, எளிதோ - எளிதாமோ, எ - று.

க - ரை. பாங்கி! பாய்கின்ற சினவிடையுடையவராகிய திருவெங்கைவாணரது பனிவரைமேலுள்ள, காயுங் கதிரிலை வேலன்பர் நம்மைக்கருதினும், தாய், நாய், ஊரார், காவல், சந்திரன், குடிஞை, சேவல் என்பவற்றை யெவ்வாறு தப்புவது, என்பதாம்.

வி - ரை. தாயென்றது நற்றாயை. சுணங்கன் - நாய். ஊர் - ஆகுபெயர்.(ஊரார்). காவல் - காவலர்; ஆகுபெயர். குடிஞை-கூகை. பாயுஞ் சினவிடை யென்றது பகைவரிடத்துப் பாய்வதும், சினப்பதும் செய்வதாகிய விடையென்றபடி. "இகலிடந் தாவிடை யீசன்" என்றார் பெரியாரும். (உகச)

தலைமகனூர்க்குச்செலவொருப்படுதல்.

அதாவது—பாங்கி தலைமக னூர்க்குச்செல்ல மனந்துணிந்து கூறா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

அறிவேயொருவடிவாமீசர்வெங்கையிலன்னமன்னா
யெறிவேலிறைவர்தம்மூர்க்கேகியாங்கவரெண்ணமெல்லா
மறிவேமவரன்பிலாமைகண்டாலுரையாடலமாய்
மறிவேமறிந்தபினந்தகனூர்க்குவழிக்கொள்வமே.

ப-ரை. அறிவே ஒரு வடிவு ஆம் - அறிவே யோருருவாகிய, ஈசர் - சிவபெருமானாரது, வெங்கையில் - திருவெங்கையிலுள்ள, அன்னம் அன்னாய் - அன்னத்தை நிகர்த்தவளே, எறி - பகைவர்மீதே யெறிதற்குரிய, வேல் - வேற்படையையுடைய, இறைவர் - நமது தலைவரது, ஊர்க்கு ஏகி - ஊருக்குப்போய், ஆங்கு - அவ்விடத்தில், அவர் எண்ணம் எல்லாம் - அவர் கருத்து முழுதும், அறிவேம் - அறிவோம், அவர் அன்பிலாமை கண்டால் - அவரது அன்

பிணமையைக் காண்பே மாயின், உரையாடலம் ஆய் - சொல்லாடா தவர்களாகி, மறிவேம் - மீள்வோம், மறிந்தபின் - மீண்டபிறகு, அந்தகன் ஊர்க்கு - யமனூருக்கு, வழிக்கொள்வம் - பிரயாணப்படுவோம், எ-று.

க-ரை. அறிவுருவாகிய இறைவரது திருவெங்கையி லுள்ள அன்னத்தை நிகர்த்தவளே! வேற்படையையுடைய நம்மிறைவரது ஊர்க்குப்போய் அவரது கருத்து முழுது மாராய்வோம், அவர் நம்மிடத் தன்பின்மையைக் காணின், சொல்லாடாது மீள்வோம், மீண்டபின், யமனூர்க்குச் செல்வோ மென்பதாம்.

வி-ரை. இறைவர் அறிவே யுருவாகப் பெற்றவ ராதலால் 'அறிவே யொருவடிவா மீசர்' என்றாள். அன்னமன்னாய் என்றது அன்னம்போலு நடையுடையாளே யென்றபடி. ஆங்கவர் என்பதை ஒரு சொல்லாகக் கோடலுமாம். மறிதல் - மீடல். உரையாடலமாய்- ஒருசொல்; பேசாமல் என்பதுபொருள். அறிதல் - ஆராய்தல். அந்தகன் - யமன்; உயிர்கட் கிறுதிசெய்பவன் என்பது பொருள். (உகடு)

பாங்கியிறைவனைப்பழித்தல்.

அதாவது—பாங்கி இறைவனைப் பழித்துரையா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

வன்பற்றவர்தொழும்வெங்கைபுரேசர்மணிவரைமே
னின்பற்றிலர்கைவிடுத்தாரிறையவர்நீயவர்மே
லன்பற்றிலையணங்கேசிறிதேனுமன்பற்றவரைப்
பின்பற்றுவருளரோவிதுதான்மிகப்பேதைமையே.

ப - ரை. வன்பற்றவர் - வலிய பற்றினையுடையவர், தொழும் - வணங்குகின்ற, வெங்கைபுரேசர் - திருவெங்கை நாயகரது, மணிவரைமேல் - அழகிய மலையில் வாழ்கின்ற, இறையவர் - நந்தலைவர், நின்பற்று இலர் - உன்பற்றற்றவராய், கைவிடுத்தார்-கைவிட்டார், நீ அவர்மேல் - நீயவர்மீதுவைத்த, அன்பு அற்றிலை - அன்பு நீங்கிலை, அணங்கே - மாதே, சிறிதேனும்-சிறிதாயினும், அன்பு அற்றவரை - அன்பில்லாதவரை, பின்பற்றுவர் - பின்றொடர்வோர், உளரோ - இவ்வுலகில் உளரோ, இதுதான்-இதுவே, மிக்கபேதைமை - மிகுந்த அறியாமை, எ - று.

க - ரை. வலியபற்றுடையார் தொழுகின்ற வெங்கை புரேசர் மணிவரைமேலுள்ள நந்தலைவர் நின்பற்றிலராகி நின்னைக்கைவிட்

டார், அங்ஙனமாகவும் நீயவர்மேல் அன்பற்றிலை, அணங்கே! சிறிதும் அன்பில்லாதவரைப் பின்றொடர்வாருளரோ, இதுதான் மிக்கபேதைமை யென்பதாம்.

வி - ரை. வன்பு - வன்மை. வலியபற்று - மிக்க அன்பு. இவ்வாறன்றி வன்பற்றவர் என்பதனை வன்பு அற்றவர் எனப்பிரித்து பொறிகளின் வன்மையை வென்றவர் எனினுமாம். பின்பற்றுதல் - பின்றொடர்தல். பேதைமை-அறியாமை. ஏ-இரங்கற்குறிப்பு.(உகசு)

இறைவிஇன்றயோன்றன்னைநேர்ந்தியற்படமொழிதல்.

அதாவது—பாங்கி தலைவனைப்பழித்தது பொறாமல் தலைவி இயற்பட மொழியா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

சுரும்புகளிக்கும்பொழில்வெங்கைவாணர்சுடர்க்கிரிமே
லரும்புகடுக்குமுலையாயுலகுளவாவியெல்லாம்
விரும்புகொடைத்தண்ணளிவேந்தர்நம்மைவெறுப்பவரோ
கரும்புகசப்பதுவாய்க்குறையேயிந்தக்காசினிக்கே.

ப - ரை. சுரும்பு - வண்டுகள், களிக்கும் - களித்தற்கிடமாகிய, பொழில் - சோலைகள் சூழ்ந்த, வெங்கைவாணர் - திருவெங்கையில் வாழ்பவராகிய சிவபெருமானரது, சுடர்கிரிமேல் - ஒளியையுடைய மலைமேலுள்ள, அரும்புகடுக்கும் முலையாய் - அரும்புபோலுந் தனங்களையுடையாளே, உலகு உள்ள - உலகிலுள்ள, ஆவியெல்லாம் - உயிர்களெல்லாம், விரும்பு - விரும்புகிற, கொடை-ஈகையையுடைய, தண்ணளிவேந்தர்-தயையுள்ளநம்மன்னவர், நம்மைவெறுப்பவரோ—, இந்தக்காசினிக்கு - இவ்வுலகில். கரும்பு கசப்பது-கரும்புகைப்பது, வாய்க்குறையே - வாயின்குற்றமேயாம், எ - று.

க - ரை. வண்டுகள் களித்தற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த வெங்கைவாணர் சுடர்க்கிரிமேல், அரும்புகடுக்கு முலையாய்! உலகிலுள்ள எல்லாவுயிர்களும் விரும்புதற்குரிய கொடையையுடைய நமது தண்ணளிவேந்தர் நம்மை வெறுப்பவரோ? இவ்வுலகில் கரும்பு கசப்பது வாய்க்குறையேயா மென்பதாம்.

வி - ரை. அரும்பு - தாமரை யரும்பு; கோங்கரும்புமாம். கடுத்தல் - நிகர்த்தல். தண்ணளி - கருணை. (ஒருசொல்.) வெறுப்பவரோ என்னு மோகாரம் எதிர்மறை. வாய்க்குறையே என்னு மேகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். காசினிக்கு - உருபு மயக்கம். (உகஎ)

கனவுநலிபுரைத்தல்.

அதாவது—தலைவன் கனவிற் கூடினனாக, விழித்த பின்பு அது பொய்யாய்ப் போன துன்பத்தைப் பாங்கியுடன் கூறுநிற்றல். (இது பதினொன்றுநாட்செய்தி.) அதற்குச்செய்யுள்,—

ஓடுஞ்செயல்செயுமாசைத்தளையையொடித்திருத்தல்
கூடும்படிசெயும்வெங்கைபுரேசர்குவட்டில்விழி
மூடும்பொழுதெதிர்தோன்றிநிற்பார்கண்முகிழ்திறந்தா
னீடும்புகழுடையாரெதிர்தோன்றிலர்நேரிழையே.

ப - ரை. நேரிழையே-நேரிழாய், நீடும்புகழ் உடையார்-பெரும் புகழையுடைய நந்தலைவர், ஓடும் செயல்செயும்-விடயங்களில் ஓடுஞ் செயலைச் செய்யாநின்ற, ஆசைத்தளையை - ஆசையாகிய பிணிப்பை, ஒடித்திருத்தல் - அறுத்திருத்தல், கூடும்படிசெயும்-உண்டாகும்படி செய்கிற, வெங்கைபுரேசர் குவட்டில் - திருவெங்கையீசர் மலையில், விழிமூடும்பொழுது - கண்மூடும்போதில், எதிர்தோன்றி நிற்பார் - எனக்கெதிரேவந்து நிற்பார், கண்முகிழ் திறந்தால் - கண்ணிதழ்திறந்தால், எதிர்தோன்றிலர் - எனக்கெதிரே தோன்றிற்றிலர், எ - று.

க - ரை. நேரிழையே! திருவெங்கை புரேசர் மலையில், பெரும் புகழுடையவராகிய நந்தலைவர், நான்கண்ணுறங்கும்போது எதிர்நிற்பர், கண்விழித்தால் எதிர்தோன்றிலராகி மறைவார் என்பதாம்.

வி - ரை. ஓடுஞ்செயல் செயுமாசைத்தளை - ஐம்பொறிகள் ஐந்தாசைகளிலோடும் செய்கையாகிய தளை. ஒடித்திருத்தல்-அறுத்திருத்தல். (அதாவது ஜிதேந்த்ரியத்வம்) இதனை ஐம்புலவெற்றி யெனவுங் கூறுப. கூடும்படி - உண்டாம்படி. குவடு - மலை. விழிமூடல் - கண்ணுறங்கல். கண்முகிழ். கண்ணிமை. நேரிழை - அன்மொழித்தொகைக் காரணப்பெயர். "துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால், நெஞ்சத்த ராவர் விரைந்து" என்பது திருக்குறள்.(உகஅ)

கவினழிபுரைத்தல்.

அதாவது—தலைவி, விரகவேதனையால் தன்னழகிழந்தமையைப் பாங்கிக்குக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

யார்பொருளுமிறையாக்கின்றுமெனத்துணைவர்
தோயாமுலைகணலமிழந்தேன்மதிசூடுமொரு
மாயாமயமலர்வெங்கைபுரேசர்மணிவரைமேல்
வேயாம்பணைபுரைமென்றோட்கருங்கண்விளங்கிழையே.

வேய் ஆம்-மூங்கில் போன்ற பணை-பருத்த; புரை-உயர்ச்சிபொருந்திய;-மென்றோள் என்க.

ப - ரை. மதிசூடும் - சந்த்ரகண்டத்தைத்தரித்த, ஒரு - ஒப்பற்ற, மாயாமயம் அலர் - மாயாமயமல்லாதவராகிய சிவபெருமானார், வெங்கைபுரேசர் - திருவெங்கையீசர், (அவரது) மணிவரைமேல் - அழகிய மலைமீதுள்ள, வேய் ஆம் - வேயாகிய, பணைபுரை - மூங்கிலையொத்த, மெல்தோள் - மெல்லியதோள்களையும், கருங்கண் - கரிய கண்களையுமுடைய, விளங்கிழையே-விளங்கிழாய், ஈயார்பொருளும் - கொடாதாருடைய பொருளும், இறையாகிணறும்-இறைக்காதகிணறும், என - போல, துணைவர் - நந்தலைவர், தோயா - அணையப்பெறாத, முலைகள் - தனங்களின், நலம் இழந்தேன் - அழகிழந்தேன், எ - று.

க - ரை. மதிசூடு மொரு மாயாமயமலர் வெங்கைபுரேசர் மணிவரைமேல் வேயாம் பணைபுரைமென்றோட் கருங்கண் விளங்கிழையே! ஈயார்பொருளும் இறையாக்கிணறும்போல, நந்தலைவர் தோயா முலைகளின் அழகிழந்தேன் என்பதாம்.

வி - ரை. ஈயார் - உலோபர். துணைவர் - தலைவர். தோய்தல் - புணர்தல். நலம் - அழகு. மதி - சந்த்ரகண்டம். மாயாமயமலர் - மாயையைக்கடந்தவர். வேய் - மூங்கில். பணை-மூங்கில். வேயாம்பணை- இருபெயரொட்டு. விளங்கிழை - அன்மொழித்தொகைக் காரணப் பெயர். (உகக)

தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்.

அதாவது—தலைவி, தன்றுயரைத் தலைவற்குணர்த்தல் வேண்டுமெனப் பாங்கியோடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விழிக்கிடனாகுநுதலார்தம்வெங்கையில்வேந்தொடுபெண்
பழிக்கலையென்றொருவார்த்தையையாரும்பகர்ந்துமிகுஞ்
சுழிக்கிடனாகுந்திருப்பாற்கடலெனத்தோன்றுபுகழ்
மொழிக்கிடனாகுதுமென்பாரைக்கண்டிலமொய்குழலே.

ப - ரை. மொய்குழலே - மொய்குழால், விழிக்கு-கண்ணுக்கு, இடன்ஆகும் - இடமாகிய, நுதலார் - நெற்றியையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையில் - திருவெங்கையிலுள்ள, வேந்தொடு - நம்மரசரோடு, பெண்பழிக்கு - பெண்பழியை யேற்றுக்கோடற்கு, அல்லை யென்று - நீயுரியையல்லை யென்று, ஒருவார்த்தையை - ஒருசொல்லை, யாரும் - எவராயினும், பகர்ந்து-சொல்லி, மிகும் சுழிக்கு - மிகுதியாகிய சுழிகளுக்கு, இடன்ஆகும்-இடமாகிய, திருப்பாற்கடல் என - திருப்பாற்கடல்போல, தோன்று - தோற்றுகிற, புகழ்மொழி

க்கு - புகழ்ச்சொல்லுக்கு, இடன் ஆகுதும் என்பாரை - இடமாவோ மென்பவரை, கண்டிலம் - கண்டிலேம். எ - று.

க - ரை. மொய்குழலே! கண்ணுதலாராகிய சிவபெருமானாரது திருவெங்கையிலுள்ள நம்மரசரிடத்தே சென்று, நீபெண்பழிக்குரியையல்லை யென்றொரு வார்த்தை சொல்லி, திருப்பாற்கடல்போலும் பெரும்புகழுக் காளாவோ மென்பாரைக் கண்டிலே மென்பதாம்.

வி - ரை. மொய்குழல் - அன்மொழித்தொகை, விழிக்கிடனாகு நுதலார் என்றது கண்ணுதலார் என்றபடி. வேந்து - ஆகுபெயர். பகர்தல் - சொல்லுதல். பெண்பழி - பெண்கொலையா லுண்டாகும் பழி. (உ௨௦)

துன்புறல் பாங்கி நீசொல்லெனச் சொல்லல்.

அதாவது—யான் துன்புறுதலைத் தலைவற்கு நீசென்று சொல்லெனத் தலைவிசொல்ல, தலைவியை நோக்கிப் பாங்கிசொல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொறியாலயப்பொய்கைசூழ்வெங்கைவாணர்தம்பூங்கரத்தின்
மறியாமெனப்பிறழ்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
பிறியாதுன்னுள்ளத்திருப்பார்க்கயலவர்பேசுவதென்
னறியாதவர்தமக்கன்றேயொருவரறிவிப்பதே.

ப - ரை. பொறி ஆலயம் பொய்கைசூழ்-தாமரைத்தடாகங்கள் சூழ்ந்த, வெங்கை - திருவெங்கையில், வாணர் - வாழ்பவராகிய சிவபெருமானாரது, பூகரத்தில் - தாமரைமலர்போலுங் கையிலுள்ள, மறிஆம்என-மானேயாமென்னும்படி, பிறழ்-பிறழாநின்ற, சேயரி - செவ்வரிபடர்ந்த, வாள்கண் - வாள்போலுங் கண்களையுடைய, மடந்தைநல்லாய் - பெண்களிற் சிறந்தவளே, பிறியாது - நீங்காமல், உன் உள்ளத்து இருப்பார்க்கு - உன் மனத்தி லிருப்பவருக்கு, அயலார் பேசுவது என் - அயலவர் பேசுவது யாதுக்கு, அறியாதவர் தமக்கு அன்றே - அறியாதவர்கட்கல்லவா, ஒருவர் அறிவிப்பது - ஒருவர் அறிவிக்க வேண்டுவது, எ - று.

க - ரை. தாமரைப் பொய்கைகள் சூழ்ந்த திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானாரது தாமரைமலர்போலுந் திருக்கரத்திலுள்ள மானென்று சொல்லலாம் படியான வாட்கண்மாதே! உன்மனத்தைவிட்டு நீங்காதிருப்பவர்க்கு அயலார் சொல்லுவதென், அறியாதவர்க் கல்லவா ஒருவரறிவிக்கவேண்டுவது என்பதாம்.

வி - ரை. பொறி - திருமகள். ஆலயம்-இடம். திருமகளுக்கிடமாயிருப்பது தாமரைமலர் ஆதலால், பொறியாலயப் பொய்கை என்பதற்கு தாமரைத்தடாகமென் றுரை கூறப்பட்டது. பூ - தாமரைமலர்; இது "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பதனுலினிது விளங்கும். மறி - மான்; மான்கன்றுமாம். (உஉக)

அலர்பார்த்துற்றஅச்சக்கிளவி.

அதாவது—உற்றுருஞ்சொல்லும் அலரைக்கருதி, அதனாலுற்ற அச்சத்தால் தலைமகள் சொல்லுஞ்சொல். அதற்குச்செய்யுள்,—

கலராலறிவரியார்வெங்கைவாணர்கனகவெற்பிற்
பலராலணியும்புகழார்பிறப்பொன்றிற்பாவிமதன்
மலரால்வருந்துயர்நீக்குவராயினுமண்ணுளர்வா
யலரால்வருந்துயர்நீக்குகிற்பாரையறிந்திலமே.

ப - ரை. கலரால் - தீமக்களால், அறிவு அறியார்-அறிதற்கரியார், வெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) கனகவெற்பில் - பொன்மலையில், பலரால் - பலரானும், அணியும் - அலங்கரித்துப் பாடப்பெற்ற, புகழார்-புகழையுடையவராகிய நம்தலைவர், பிறப்பு ஒன்றில் - ஒரு பிறப்பில், பாவிமதன் - பாவியாகிய மன்மதனது, மலரால் வரும்துயர் - புஷ்பபாணத்தாலுண்டாகும் துயரத்தை, நீக்குவராயினும் - மாற்றுவர் ஆயினும், மண்ணுளர் - மண்ணுலகிலுள்ளாரது, வாய் அலரால் வரும்துயர் - வாயலராலுண்டாகிய துயரத்தை, நீக்குகிற்பாரை - நீக்கவல்லாரை, அறிந்திலம் - அறிந்திலேம், எ - று.

க - ரை. தீயோராலறிய வொண்ணுதவரும், திருவெங்கைப்பதியில் வாழ்வோருமாகிய சிவபெருமானரது பொன்மலையிலுள்ள நம்மன்னவர், இவ்வொரு பிறப்பில் அனங்கனலரால் விளையுந்துன்பத்தை யொழிப்பாராயினும் உலகத்தாரது வாயலரால் விளையுந் துன்பத்தை யொழிக்க வல்லவரை யாமறிந்திலே மென்பதாம்.

வி-ரை. கலர்-தீமக்கள்; இது, "மலரைப் பொருவடி மானுந் தமியண் மன்னும்மொருவன், பலரைப் பொருதென் றிழிந்தின் ருள்பள்ளி காமனெய்த, அலரைப் பொருதன் றழல்விழித்தானம் பலம்பணியாக், கலரைப் பொருச்சிறி யாளொன்னை கொல்லோ கருதியதே" என்னுந் திருக்கோவைச் செய்யுளுரையாலினிது விளங்கும். அறிவு - அறிதல். பலர் என்றது பலபுலவரை அணிதற்குரியாரவாதலான். மதன்மலர் - மதனது பூங்கணை. மண் உளர் - தரையிலுள்

ளார். வாயலர் - வாயால் பழிதூற்றுஞ் சொல். நீக்குகிற்பார் என்பதில் - ஆற்றற்பொருண்மை விகுதி. (உஉஉ)

ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

அதாவது—தலைமகன் வரும் வழியைப் பார்த்து, அவ்வழியே தத்தா லுண்டாகிய அச்சத்தால் தலைவி சொல்லுஞ்சொல். அதற்குச்செய்யுள்,—

ஒருகோடுதம்மிற்குறைந்தநல்வாரணமொன்றுமன்றி
யிருகோடுவந்துமிகுங்களிறேனுமிகன்மதமா
வருகோடுவெவ்வதரென்றாலும்வெங்கையமலர்தரு
முருகோடுறழும்வடிவாரிடைமனமுந்துறுமே.

ப-ரை. தம்மில் - தமக்குள்ளே, ஒரு கோடுகுறைந்த - ஒரு கொம்புகுறைந்த, நல்வாரணம் ஒன்றும் அன்றி - நல்ல யானை யொன்றுமே யன்றி, இருகோடு வந்து - இரண்டு கொம்புகளுண்டாகி, மிகும்களிறு எனும் - மிகுதியாகிய யானைகளாயினும், இகல் - போர் செய்கிற, மதமா - மதத்த விலங்குகள், அருகு ஓடு - அருகாக வோடுகிற, வெம் அதர் என்றாலும் - கொடியதாகிய வழியேயாயினும், வெங்கை - திருவெங்கைப்பதியி லெழுந்தருளிய, அமலர் - சிவபெருமானார், தரும் - தந்த, முருகோடு உறழும் - முருகரை நிகர்த்த, வடிவார் இடை - அழகினை யுடையவராகிய நம் மன்னவரிடத்தே, மனம் - என் மனமானது, முந்துறும் - முந்தா நின்றது, எ-று.

க-ண்ய. யானைகளும் ஒன்றோடொன்று போர்செய்தற் குரிய மிருகங்களும் அருகே யோடுகின்ற கொடுங் காடாயினும், திருவெங்கை யமலரீன்ற முருகவேளை நிகர்த்த அழகினை யுடையவராகிய நந்தலைவ ரிடத்தில் என் மனமானது முந்தா நின்றதென்பதாம்.

வி-ரை. வாரணம் - யானை. ஒருகோடு தம்மிற் குறைந்த நல் வாரணம் என்றது மூத்த நாயனாரை. களிறு - யானை. இகல் - பகையெனினுமாம். அதர் - வழி. முருகு - பண்பாகுபெயர். உறழ்தல் - ஒத்தல். வடிவு - உருவமெனினுமமையும். வடிவாரிடை யென்பதில் இடை யேழனுருபு. (உஉங)

காமமிக்க கழிபடர்கிளவி.

அதாவது—தலைவி தலைவனிடத்து வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ்சொல். அதற்குச்செய்யுள்,—

மாமாயனுந்தொழும்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
பாமாமுனிவன்மலயானிலமொருபாலசைய
வேமாயர்வேய்ங்குழலா லூதமேனிவிறகிற்பற்றுங்
காமாநலமவியாகடலேழுங்கவிப்பினுமே.

ப-ரை. மா - பெருமை பொருந்திய, மாயனும் - திருமாலும், தொழும் - வணங்குகின்ற, வெங்கைபுரேசர் - திருவெங்கையீசரது, மணிவரைமேல் - அழகிய மலைமீது, பாம் - எங்கும் வியாபித்த, மா - பெருமையையுடைய, முனிவன் - முனிவனது, மலயாநிலம் - தென்றற்காற்று, ஒருபால் அசைய - ஒரு பக்கத்தில் வீச, வேம் - வெந்த, வேய்ங்குழலால் - புள்ளாங்குழலால், ஆயர் - இடையர், ஊத - ஊதாநிற்க, மேனி - என்னுடம்பு, விறகின்-விறகாகக்கொண்டு, பற்றும் - எரிகிற, காமா நலம் - காமமாகிய நெருப்பு, கடலேழும் கவிப்பினும்-எழ்கடலும்வந்து மூடிக்கொண்டாலும், அவியா - தணியாது, எ-று.

க-ரை. திருமாலுந் தொழுகின்ற திருவெங்கை நாதரது மலைமீது, எங்கும் வியாபித்த பெருமையையுடைய முனிவனது தென்றற்காற் றொருபுறத்தே யசைய, இடையரது வேய்ங்குழ லொருபுறத்தூதா நிற்க, என்னுடம்பு விறகாகக்கொண்டு எரிகிற காமத்தீயானது, எழ்கடலும்வந்து மூடிக்கொண்டாலும் தணியாது என்பதாம்.

வி-ரை. மாமாயன் - லக்ஷ்மீ நாதனாகிய திருமால் எனினுமமையும். மாயனும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. பாவும் என்பது பாம் என இடைக்குறையாயிற்று. முனிவன் - அகத்தியன். மலயாநிலம் - மலயம் அநிலம் எனப் பிரிக்கப்பட்டுப் பொதியமலையிற் பிறந்த காற்று எனப் பொருள்படும். (மலயா நிலம் - தென்றற் காற்று) பால் - பக்கம். வேவும் என்பது வேம் எனக் குறைந்து நின்றது. வேய்ங்குழல் - மூங்கிற்குழல். மேனி - உடம்பு. பற்றல் - மூண்டெரிதல். காமம் அநிலம் - காமத்தீ. கவித்தல் - மூடல். ()

தன்னுட்கையா றெய்திடுகிளவி.

அதாவது—தலைவி தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன்மேல் வைத்துச் சொல்லுஞ்சொல். அதற்குச் செய்யுள்,—

வம்புற்றனைவெண்மதியாலொடுங்கினைவண்டிழந்தா
யம்புற்றனைமிகுகண்முத்துகுத்தனையம்புயமே
நம்புற்றரவணியெம்மான்றிருவெங்கைநாட்டிறையை
வெம்புற்றனையெனைப்போலென்பதின்றுவெளிப்பட்டதே.()

ப-ரை. அம்புயமே-தாமரையே, என்னைப்போல்-என்போலவே, வம்பு உற்றனை—,வெண்மதியால் ஒடுங்கினை—;வண்டு இழந்தாய்—, அம்பு உற்றனை—;இருகண்முத்து உகுத்தனை—, (ஆதலால்) புற்று அரவு அணி-புற்றுப் பாம்பைத்தரித்த,நம்எம்மான் - நமது எம்பெருமானது, திருவெங்கை நாட்டு இறையை-திருவெங்கை நாட்டிலுள்ள நந்தலைவரை, என்னைப்போல் - என்போலவே, வெம்புற்றனையென்பது - விரும்பினையென்பது, இன்று வெளிப்பட்டது-இன்று வெளியாயிற்று. எ - று.

க - ரை. தாமரையே! சர்ப்பாபரணராகிய சிவபிரானது திருவெங்கையில் எமக்குண்டான அவஸ்த்தா விசேஷங்கள்யாவும் உன்னிடத்தும் காணப்படுதலால், நீயும் அவ்வெங்கை நாடனை விரும்பினையென்பது இன்று வெளியாயிற்றென்பதாம்.

வி - ரை. வம்பு - தீச்சொல்; வாசனை. வெண்மதி - வெள்ளறிவு, வெள்ளியசந்திரன். வண்டு - வளையல், வண்டுகள். அம்பு-மன்மதன்கணை, நீர். இருகண்முத்து - இருகண்ணீர், பெருந்தேனும் முத்தும். வெம்புறல் - விரும்பல். அம்புயம் - அம்புஜம் என்னும் வடசொற்றிரிபு; நீரிற்றோன்றுவது என்பதுபொருள். திருவெங்கைநாட்டிறையென்றது தலைவனை. புற்றரவு என்பதில் புற்று-சாதியடை; "வங்கக் கடல் கடந்தமாதவனை" என்புழிப்போல. (உஉ௫)

நெறிவிலக்குவித்தல்.

அதாவது—தலைவி, தலைவன் வரும்வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீரலைவேணியர்வெங்கையில்வாழுநெடுந்தகையைச்
சீரலைவாய்வருஞ்செவ்வேண்முருகனுஞ்சேறலருஞ்
சாரலைமேவுமொருபெருங்காட்டுத்தனிவழியில்
வாரலைநீயென்பவர்க்கேவருவனவண்புகழே.

ப - ரை. நீர்அலை - கங்கைநீ ரசையாநின்ற, வேணியர் - சடாபாரத்தையுடையவராகிய சிவபெருமானது, வெங்கையில் வாழும் - திருவெங்கையில் வாழ்கின்ற, நெடுந்தகையை, பெருந்தகையை, சீரலைவாய்வரும் - திருச்சீரலையில் எழுந்தருளிய, செவ்வேள்முருகனும்-செவ்வேள் முருகக்கடவுளும், சேறல்அரும் - செல்லுதற் கரிதாகிய, சாரலைமேவும் - மலைச்சாரலிலுள்ள, ஒரு பெருங்காட்டுத் தனிவழியில்-ஒருபெரிய காட்டுத்தனிவழியிலே, நீவாரலை யென்பவர்க்கே-நீ

வரற்பாலே யல்லேயென்று சொல்லுவோர்க்கே, வண்புகழ்வருவன - வளவியபுகழ்க ளுண்டாவனவாம், எ - று.

க - ரை. கங்காத்ரராகிய சிவபெருமானாது திருவெங்கையில் வாழ்கின்ற நம்பெருந்தகையை, திருச்சீரலேயிலெழுந்தருளிய முருகக்கடவுளுஞ் செல்லுதற்கரிய மலேச்சாரற் காட்டுவழியில் தனியே நீவாரற்கவென்பார்க்கு வளவியபுகழ்கள் உண்டாவனவாம் என்பதாம்.

வி - ரை. நீர் - ஆகாயகங்கைநீர். வேணி - சடை. சீரலேவாய்- திருச்சீரலேவாய் (திருச்செந்தூர்.) செவ்வேள் முருகன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சேறல் - செல்தல். செவ்வேள் முருகனும் என்னுமும்மை உயர்வு சிறப்பு. செவ்வேள் முருகனுஞ் சேறலருஞ்சாரலில் மேவுமொரு பெருங்காடென்றது குறிஞ்சிநிலத்திறைவனுன முருகவேளும் சேறற்கரிய சாரலிலுள்ள பெருங்காடென்றதாயிற்று. இது, "குறவரு மருளுங்குன்றம்" என்றாற் போல்வது. வாரலே - வரற்பாலேயல்லே. வண்புகழ் - பெரும்புகழ். (உஉ௬)

குறிவிலக்குவித்தல்.

அதாவது—தலேவி, தலேவன்வரும் இரவுக்குறியை விலக்கெனப்பாங்கியொடு கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—

பிளவுமதிச்செஞ்சடையாளர்வெங்கைப்பெருந்தகைதான்
றளவுநகைக்கருங்கண்மடவாய்விண்டலமுகட்டை
யளவுபொழிற்குறிவந்தாற்றுயில்பொழுதார்க்கும்புள்ளாற்
களவுவெளிப்படினென்னுய்முடியுநங்காரியமே.

ப-ரை. தளவு - முல்லே யரும்புபோன்ற, நகை - பல்லேயும், கருங்கண் - கரிய கண்களேயு முடைய, மடவாய் - மாதே, பிளவுமதி - சந்த்ர கண்டத்தை யணிந்த, செஞ்சடையாளர் - செஞ்சடையை யுடையவராகிய சிவபிரானுரது, வெங்கை - திருவெங்கையில் வாழ்கிற, பெருந்தகை-பெருந்தகையானவர், விண்தலம் முகட்டை - ஆகாயமுகட்டை, அளவு - அளாவிய, பொழில் - சோலேயில், குறிவந்தால் - குறியிடத்துவந்தால், துயில்பொழுது - உறங்கவேண்டுங் காலத்தில், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, புள்ளால் - பறவைகளால், களவு வெளிப்படின் - களவொழுக்கம் வெளிப்படுமாயின், நம்காரியம் - நமது காரியம், என்னாய் முடியும்-என்னவாய் முடிவுபெறும், எ-று.

க-ரை. தளவு நகைக்கருங்கண்மடவாய் ! சிவபெருமானது திருவெங்கைப் பெருந்தகையானவர், ஆகாயத்தை யளாவிய சோலே

யிலே குறியிடத்து வருவாராயின், உறங்கவேண்டுங் காலத்தில் சத்திக்கிற பறவைகளால் களவொழுக்கம் வெளிப்படுமோயின் நங்காரியம் யாதாய் முடியு மென்பதாம்.

வி-ரை. பிளவுமதி - மதிப்பிளவு. பெருந்தகை - தலைவர். தளவு - முல்லை யரும்பு; முதலாகுபெயர். விண்டலம் - விண்ணாகிய தலம், இருபெயரொட்டு. அளவு - அளத்தல் எனினுமாம். துயிலல்- உறங்கல். ஆர்த்தல் - சத்தித்தல். களவு - களவொழுக்கம். என்னாய் முடியுமென்ற வினா முடியாதென்னும் பொருட்டு. (உ௨எ)

வெறிவிலக்குவித்தல்.

அதாவது—தன் தாயானவள் வெறியாடலைச் செய்ய முயன்றாளெனக் கேட்ட தலைவியானவள் தலைவன், வரவு விலக்கெனப் பாங்கியொடு கூறித் தலைவற் குணர்த்தி அவ் வெறியாடலை விலக்கா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

மறிகொண்டவங்கையர் வெங்கையிலேமென்மலர்ப்பொழில்வாய்க், குறிகொண்டவன் பர்தருநோயென்றன்னைகுறித்திலளாய், நெறிகொண்டதெய்வமணங்கிற்றென்றேதன்னினைவழிந்து, வெறிகொண்டனண்மற்றொருவிதியோவிதுமெல்லியலே.

ப-ரை. மெல்லியலே - மெல்லியால், மறிகொண்ட அங்கையர் - மானேந்திய திருக்கரத்தை யுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே - திருவெங்கைப் பதியிலே, மெல்மலர்ப் பொழில் வாய் - மெல்லிய பூஞ்சோலையில், குறிகொண்ட அன்பர் - குறியிடத்தேவந்த நம்மன்பர், தரும் - தந்த, நோய் என்று - நோயாமிதென்று, அன்னை - நமது தாயானவள், குறித்திலள் ஆய் - நினையாதவளாகி, நெறிகொண்ட - வழியிலுள்ள, தெய்வம் - தெய்வமானது, அணங்கிற்று என்று - வருத்திற்றென்று, தன் நினைவு அழிந்து - தன் கருத்தழிந்து, வெறிகொண்டனள் - வெறியாடலைப் பொருளென்று கொண்டாள், இது - இவ்வாறிவள் செய்தலாகிய இது, மற்றொருவிதியோ-வேறொருவிதியோ, எ-று.

க-ரை. மெல்லியலே! மானேந்திய திருக்கரத்தை யுடையவராகிய சிவபெருமானாரது திருவெங்கைப் பதியில், பூஞ்சோலையில் குறியிடத்துவந்த நம்மன்பர்தந்த நோயென்றறியாத நந் தாயானவள், தெய்வமணங்கிற்றென்றெண்ணி, வெறியாடலைச் செய்ய முயல்வாளாயினள், அதனை நீவிலக்கக் கடவை யென்பதாம்.

வி-ரை. பொழில் - சோலை. குறி - குறியிடம். குறித்தல்- நினைத்தல்; (அறிதலுமாம்). அணங்குதல்-வருத்துதல், ஆவேசித்தல். வெறி - வெறியாடல்;' பைத்தியம் பிடித்தல் என்றலுமாம். விதி - ஊழ் (முறை). வெறி - பைத்தியம், ஆடுஎனக்கொண்டு ஆட்டைக் கொண்டது பலியீதற்கென்றுரைக்க. தருங்காமநோயைக் குறித்திலளாய், என்றும் பாடம். இதில் ஆய் - தாய். தெய்வம் - வன்தேவதை. (உஉ அ)

பிறவிலக்குவித்தல்.

அதாவது—தலைவி பிறர்வரைதலைத் தலைவற்குக்கூறி, வரவுவிலக்கெனப்பாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அருங்கண்ணிவெண்மதிசூடும்பிரான்வெங்கையாவிமலர்க்
கருங்கண்ணிகங்கையின்மென்றூவியன்னங்கருதிவைத்த
பெருங்கண்ணியிற்புனற்காக்கைபட்டாங்குப்பிறர்நமதின்
மருங்கண்ணிவந்தனரென்பதுகேட்டின்னுமாய்ந்திலமே.

ப - ரை. வெண்மதி - வெண்மையாகிய சந்திரகண்டத்தை, அருகண்ணிசூடும் - அருமையான மாலையாகச்சூடிய, பிரான் - சிவபிரானது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, ஆவி - தடாகத்திற் பூத்த, மலர் - தாமரைமலர் போன்ற, கருங்கண்ணி - கரியகண்களையுடையாளே, கங்கையில் - கங்காநதியில், மெல் - மென்மையாகிய, தூவி-இறகையுடைய, அன்னம் கருதிவைத்த-அன்னத்தைக் குறித்துவைத்த, பெருங்கண்ணியில்-பெரியவலையில், புனல்காக்கை-நீர்க்காகம், பட்டாங்கு - சிக்கினாற்போல, பிறர் - அன்னியர், நமது இல்மருங்கு - நமதுவீட்டின் பக்கத்தில், அண்ணிவந்தனர் என்பது கேட்டு - கிட்டிவந்தார் என்பதைக்கேட்டு, இன்னும் மாய்ந்திலம் - இன்னமும்யாம் இறந்துபடேமாயினேம், எ - று.

க - ரை. அருங்கண்ணி வெண்மதி சூடும்பிரான் வெங்கையாவிமலர்க் கருங்கண்ணியே! கங்கையில் அன்னத்தைக் குறித்து வைத்தவலையில் நீர்க்காகம் சிக்கினதுபோல, பிறர் நமது வீட்டை நெருங்கினரென்பதைக் கேட்டு, இன்னும்யாம் மாயாது உயிரோடிருக்கின்றேமென்பதாம்.

வி - ரை. கண்ணி - மாலை. ஆவி - தடாகம். கண்ணி - கண்களையுடையவள் (பாங்கி). ஆவிமலர்க்கண்ணி யென்றும், கருங்கண்ணியென்று மியையும். அன்னம் - அன்னப்புள். அன்னம் கருதியென்றது அன்னம் பிடிக்க வெண்ணி யென்றபடி. கண்ணி - வலை.

(கண்களையுடையது, முடிச்சுக்களையுடையது) படுதல்-அகப்படுதல். இல் - வீடு. மருங்கு - பக்கம். அண்ணல் - கிட்டல். மாய்தல்-உயிர் விடுதல். கருங்கண்ணி-அண்மைவிளி. (உஉக)

குரவரைவரை வெதிர்கொளுவித்தல்.

அதாவது—பெரியோரை வரைவு கூறிவர, நமரெதிர் கோடலைச்செய்யென்று தலைவி பாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பூண்கொண்டமென்முலையாய்வெங்கைவாணர்பொதியவெற்பி
லேண்கொண்டநங்கருத்தீன்றவர்க்கோதுமிசைவுபெறு
நாண்கொண்டுநங்கற்பழிதனன்றேவன்றிநாணிழந்து
மாண்கொண்டவங்கற்புறுதனன்றேநம்மரபினுக்கே.

ப - ரை. பூண்கொண்ட-ஆபரணங்களைத் தாங்கிய, மெல்முலையாய் - மெல்லிய தனங்களையுடையாளே, வெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, பொதிய வெற்பில் - பொதியமலையிலுள்ள, நம்மரபினுக்கு - நமதுவமிசத்துக்கு, எண்கொண்ட - பெருமையைக்கொண்ட, நம்கருத்து - நமது கருத்தினை, ஈன்றவர்க்கு - பெற்றோர்க்கு, ஓதும் இசைவுபெறு - சொல்லுதற்கிணங்காத, நாண்கொண்டு-நாணத்தால், நம் கற்பு அழிதல் நன்றே - நமது கற்புக்கெடுவது நன்றே, அன்றி - அல்லது, நாண் இழந்து - நாணைவிட்டு, மாண்கொண்ட - மாட்சிமையைக்கொண்ட, அம் - அழகிய, கற்பு உறுதல் நன்றே - கற்பைக்கொண்டிருப்பது நன்றே, (நீ சொல்லுக) எ - று.

க - ரை. பூண்கொண்ட மென்முலையாய்! திருவெங்கைவாணரது பொதியமலையிலுள்ள நமது மரபுக்கு, நாணத்தால் குரவருக்குச் சொல்லாது கற்பழிதனன்றே, அன்றி நாணிழந்து கற்பைப் பெறுதல் நன்றே நீ சொல்லுக வென்பதாம்.

வி - ரை. பூண் - ஆபரணம். பூண்கொண்ட மென்முலையாய் என்றது பாங்கியை. ஈன்றவர் - தாய்தந்தையர். இசைவு - சம்மதம். நாண் - நாணம். மாண் - பெருமை. ஒகாரமிண்டும் ஐயப்பொருள். பருவரல் வினவியபாங்கிக் கிறைவி அருமறைசெவிலி யறிந்தமை கூறலும், தலைமகன் வருந்தொழிற் கருமைசாற்றலும், அலர்பார்த்துற்றவச்சக்கிளவியும், ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவியும், நெறிவிலக் குவித்தல் முதலிய நான்கும் அச்சத்திற்குரியன. பாங்கியிறைவனைப் பழித்தலும், துன்புறல் பாங்கிநீசொல்லெனச்சொல்லலும் உவர்த்தற்

குரியன. தலைமகனூர்க்குச் செல்லவொருப்படுதல்முதலியன ஆற்றாமைக்குரியன. (உரு0)

வரைவுகடாதல்.

அதாவது—பாங்கி தலைவனோடு வரைவு கூறிவினாதல்.

"பொய்த்தன் மறுத்தல் கழறன் மெய்த்தலென், றொருநால் வகைத்தே வரைவு கடாதல்" என்னுஞ் சூத்திர விதியால், வரைவு கடாதல் நான்குவகைப்படும்.

வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

அதாவது—முன்வரைதல் வேட்கையில் தலைவி அருமறை செவிலி யறிந்தமை கூறியவதனைத்தோழி தன்னை செவிலி வினவியதாகவும் அதற்குத் தான் மறைத்துக் கூறியதாகவும் தலைவற்குக் கூறுதல். இக்கிளவி முதல் கவினழிபுரைத்த லீறாகக் கூறிய கிளவிகள் பலவற்றுள்ளும் குறிப்பினானும் வெளிப்படையானும் வரைவு கடாவியவாறு கண்டுகொள்க. அதற்குச் செய்யுள்,—

வண்டுகலிக்குந்தொடையாயெம்மன்னையிம்மாது துயில்
விண்டுதரித்திலளென்கொலென்றாளரன்வெங்கைவெற்பிற்
பண்டுபுனத்தில்வருமதவாரணம்பாய்கனவு
கண்டுபின்னைத்துயின்றாளிலையென்றுகரந்தனனே.

ப - ரை. வண்டு - வண்டுகள், கலிக்கும்-சத்திக்கிற, தொடையாய் - மலர்மாலையை யுடையவனே, எம்அன்னை - எமது தாயானவள், இம்மாது - இந்தப்பெண், துயில்விண்டு - துயில்நீங்கி, தரித்திலள் - ஆற்றாதிருக்கிறாள், என்கொல் என்றாள் - இதற்குக் காரணம்யாதென்றாள், அரன் - சிவபெருமானது, வெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில், பண்டு - முற்காலத்தில், புனத்தில் வரும் - புனத்தில்வந்த, மதவாரணம் - மதயானையானது, பாய் - பாய்ந்த, கனவுகண்டு - கனாக்கண்டு, பின்னை - பிறகு, துயின்றாளில்லையென்று - உறங்கினாளில்லையென்று சொல்லி, கரந்தனன், மறைத்தேன், எ - று.

க - ரை. மலர்மாலையைத் தரித்தவனே! எமது தாயானவள், இந்தப்பெண் கண் விழித்துத் தரியாமைக்குக் காரண மென்னென்றாள், அதற்கு விடையாக, முன்னே புனத்திருந்துழி யெம்மேற் பாய்ந்த மதயானையின்று கனவில்வரக்கண்டஞ்சி, பின்னே யுறங்கினாளில்லை யென்று சொல்லி மறைத்தேன் என்பதாம்.

வி - ரை. கலித்தல் - சத்தித்தல். தொடை - மாலை. துயில் விண்டு - துயிலொழிந்து. தரித்திலள் - ஆற்றிலள். மதவாரணம் - மதயானை; இது தலைவனையுங் குறித்தது. கனவு - கனு. கரத்தல் - மறைத்தல். இவ்வாறு கரந்து கூறுவிடின் என்னுயிர்க்கேதமுண்டா மென்பது குறிப்பெச்சம். குறிப்பான் வரைவுகடாயவாறு. (உ௩௧)

அலரறிவுறுத்தல்.

அதாவது—ஊரில், தலைவியைத் தூற்று மலர் விரிந்ததென்று தலைவற்கறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கோட்டுமலைவில்விறலாளர்வெங்கைக்குளிர்சிலம்பிற்
றீட்டுமிலைமலிவேலண்ணலேநின்றிருக்கரத்தால்
வேட்டுமகிழ்செய்யணங்கெனவேயிவண்மென்குழலிற்
சூட்டுமலர்கண்டுலகமெலாமலர்சூட்டியதே.

ப - ரை. கோட்டும் - வளைத்த, மலைவில்-மலைவில்லையுடைய, விறலாளர் - வெற்றியையுடைய சிவபெருமானாரது, வெங்கை-திருவெங்கையிலுள்ள, குளிர்சிலம்பில் - குளிர்ந்தமலையிலுள்ள, தீட்டும்-தீட்டின, இலைமலி - அச்சவடிவுபொருந்திய, வேல் - வேற்படையையுடைய, அண்ணலே - பெரியோனே, நின் திருக்கரத்தால் - உன் திருக்கையால், அணங்கு - இப்பெண்ணை, வேட்டு - மணந்து, மகிழ்செய்யெனவே - உவப்பியென்றலும், இவள் மெல்குழலில் - இவளது மெல்லிய கூந்தலில், சூட்டும்-நீசூட்டின, அலர் கண்டு-அலரை நோக்கி, உலகமெல்லாம் அலர்சூட்டியது-உலகமுழுதும் அலர் சூட்டிற்று, எ - று.

க - ரை. கோட்டுமலைவில் விறலாளர் வெங்கைக் குளிர் சிலம்பில், தீட்டுமிலைமலி வேலண்ணலே! இவ்வணங்கை மகிழ்விக்க நீயிவள் கூந்தலிற் சூட்டிய அலர் கண்டு, உலகமுழுது மிவட்கலர் சூட்டிற்று என்பதாம்.

வி - ரை. கோட்டுமலை யென்பதற்கு, சிகரங்களையுடைய மலை யென்றுரைத்தலுமாம். விறல் - வெற்றி. தீட்டுதல் - கூராக்கல். அலர்இரண்டனுள் முன்னையதுமலர், பின்னையது பழிதூற்றல். உலகம் - ஆகுபெயர். உலகம்என்றதற் கேற்பச்சூட்டியது என்றாரேனும் உலகிலுள்ளா ரெல்லாரும் அலர் தூற்றினார்களென்பது கருத்தாகக் கொள்க. (உ௩௨)

தாயறிவுணர்த்தல்.

அதாவது—இக் களவொழுக்கத்தைத் தாயறிந்தாளெனப் பாங்கி தலைவற் கறிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீர்பூத்தசெஞ்சடையார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
கார்பூத்தவண்மைமடங்கலன்னாயன்னைகாலமன்றி
யேர்பூத்தபைந்தளிர்மெல்லியலாமிவ்விளங்கொடிமேற்
பீர்பூத்ததென்னைகொலோவறியேனெனப்பேசினளே.

ப - ரை. நீர்பூத்த செஞ்சடையார் - நீரையணிந்த செஞ்சடையையுடையார், வெங்கைவாணர்-திருவெங்கைவாணர், (அவரது) நெடுஞ்சிலம்பில் - பெரிய மலையிலுள்ள, கார்பூத்த - மேகத்தின் றன்மையமைந்த, வண்மை - ஈகையையுடைய, மடங்கல் அன்னாய் - சிங்கத்தை நிகர்த்தவனே, அன்னை - தாயானவள், காலம் அன்றி - காலமல்லாமல். ஏர்பூத்த - அழகு பொருந்திய, பைதளிர் - பசிய தளிர் போன்ற, மெல்லியல்ஆம் - மெல்லியலாகிய, இ இளங்கொடிமேல் - இந்த இளங்கொடிபோல்வாள்மீது, பீர்பூத்தது என்னைகொலோ - பசலைபோர்த்தற்குக் காரணம்யாதோ, அறியேன்என - அறிந்திலேனென்று, பேசினள் - சொல்லினாள், எ - று.

க - ரை. நீர்பூத்த செஞ்சடையார் வெங்கைவாணர் நெடுஞ்சிலம்பில் கார்பூத்த வண்மை மடங்கலன்னாய்! அன்னையானவள் காலமல்லாக் காலத்தில் இவ்விளங்கொடிமேல் பசலை பூத்ததற்குக் காரணம்யாதோ அறிந்திலேனென்றாள் என்பதாம்.

வி - ரை. நீர் என்றது கங்கையை. சிலம்பு - மலை. கார் - மேகம். வண்மை - வள்ளன்மை. (கொடை) மடங்கல்-சிங்கம். பீர்-பசலை; இதனை மாமையென்றுங்கூறுப. வடநூலார் வைவர்ண்யம் என்பர். ஏர்பூத்தபைந்தளிர் மெல்லியலாமிவ்விளங்கொடியென்றது தலைவியை. இவ்வாறு பாங்கி கூறியது தலைவன் விரைந்து வரைந்து கோடல் கருதியென்க. (உ௩௩)

வெறியச்சுறுத்தல்.

அதாவது—வெறியாட்டாளனைக் கூவி, வெறியாடுதலை எமர் கருதியிருக்கின்றாரெனப் பாங்கி தலைவற்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அலைமேற்கிளர்பொறிவாழ்வெங்கைவாணரணிவரைமேற்
சிலைமேற்பயில்கைத்தலத்தையநீயெமைச்செய்துயர்க்குத்
தலைமேற்படுமெறிக்கோர்கான்முடக்குந்தகைமையென்னக்
கொலைமேற்பயிலுமெமர்வெறியாடல்குறித்தனரே.

ப - ரை. அலைமேல் - திருப்பாற்கடலில், கிளர் - தோன்றின, பொறி - திருமகள், வாழ் - வாழ்கின்ற, வெங்கை - திருவெங்கைப் பதியில், வாணர் - வாழ்பவராகிய சிவபெருமானாரது, அணிவரைமேல்-அழகியமலைமேலுள்ள, சிலைமேல்பயில்-வில்லினிடத்தே பழகுகின்ற, கைத்தலத்து - கைத்தலத்தை யுடைய, ஐய - தலைவனே, நீ ஏம்மைசெய்துயர்க்கு - நீ எங்களைச் செய்த துன்பத்திற்கு, கொலைமேல் பயிலும் - கொலையினிடத்தே பழகாநின்ற, எமர் - எம்மவர், தலைமேல்படும் எறிக்கு - தலைமேற்படுமெடிக்கு, ஓர்கால் முடக்கும் தகைமையென்ன - ஒருகாலை முடக்குந் தன்மைபோல, வெறியாடல் குறித்தனர் - வெறியாடலைச் செய்ய நினைத்தார்கள், எ - று.

க - ரை. அலைமேற் கிளர்பொறிவாழ் வெங்கைவாணர் அணிவரைமேல், சிலைமேற்பயில் கைத்தலத்தைய! நீ யெமக்குண்டாக்கின துன்பத்துக்கு, கொலைபயிலுமெம்மவர், தலைமேற் படுமெடிக்கு ஒருகாலை முடக்குவது போல, வெறியாடலைச் செய்யக்கருதினர் என்பதாம்.

வி - ரை. அலை - சினையாகுபெயராய் அலைகளையுடைய கடலையுணர்த்திற்று; அது, அலைமேற்கிளர்பொறி யென்றமையால் திருப்பாற் கடலையுணர்த்திற்று. பொறி - திருமகள். கிளர்தல் - தோன்றல். சிலை - வில். பயிலல் - பழ்குதல். கைத்தலம் - கரதலம்; பூதலம் என்பனபோல வொருசொல்; கையென்பது பொருள். துயர்க்கு - துயரையொழித்தற்கு. எறி - அறை (அடி). கொலை - கொல்லுந்தொழில். குறித்தல் - நினைத்தல். படுபொறி யென்றும் பாடம். படுதல் - உண்டாதல். வெறியாடல் - வேலனாடல். (உ௩௯)

பிறர்வரைவுணர்த்தல்.

அதாவது.—பிறர், வரைவு கருதி வந்ததாகப் பாங்கி தலைவற்கறிவியா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

மகவானிறைஞ்சுந்திருவெங்கைவாணர்வரையணங்கின்
முகவாரிசமுமுலையுங்கண்டான்மிகுமோகமுறுஞ்
சுகவாழ்வினரையுரைப்பதென்யான்மறைசாற்றுகின்ற
சுதவாமதேவருமின்றேவிடுவர்துறவினையே.

ப-ரை. மகவான் - இந்திரன், இறைஞ்சும் - வணங்குகின்ற, திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானாரது, வரை - மலையில் வாழ்கின்ற, அணங்கின் - பெண்ணின், முகவாரிசமும் - முகமாகிய தாமரை மலரையும், முலையும் -

ஸ்தனங்களையும், கண்டால் - நோக்கினால், மிகுமோகம் உறும் - மிகுமோகத்தையடைகிற, சகவாழ்வினரை - பிரபஞ்ச வாழ்வினரை, யான் உரைப்பது என் - யான்சொல்ல வேண்டுவதியாது, மறை சாற்றுகின்ற - வேதங்கள் சொல்லுகின்ற, சுகவாமதேவரும் - சுகர் வாமதேவர் என்பவரும், துறவினை இன்றேவிடுவர் - துறவறத்தை யிப்பொழுதே விட்டுவிடுவர், எ-று.

க-ரை. இந்திரனால் பூசிக்கப்படுகிற திருவெங்கைவாணர் மலையில் வாழ்கின்ற பெண்ணின் தாமரைமலர்போலு முகத்தையும் தனத்தையும் காண்பராயின் காமாதுரராகிய இந்தச் சகவாழ்க்கைய ரைச் சொல்லுவானேன், சுகர்வாமதேவர் என்போரும் தமது துறவ றத்தை யின்றே விட்டுவிடுவர் என்பதாம்.

வி-ரை. மகவான் என்பதற்கு பூஜிக்கப்படுவோன் என்றும், யாகஞ் செய்வோன் என்றும் பொருள் கூறுவர் வடநூலார். இறை ஞ்சல் - வணங்கல். வரை - மலை. அணங்கு - பெண். வாரிசம் - தாம ரை; நீரிற்றோன்றுவது; வாரி - நீர். சம் - பிறப்பது. மறைசாற்றல் - வேதங்களாற் சொல்லப்படுதல்; வேதங்களை அத்யயநம் பண்ணுதல். சுகவாமதேவரும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. துறவு - துறத்தல்; இருவகைப் பற்றுக்களையுந் துறத்தல். இருவகைப்பற்று-அகப்பற்று புறப்பற்று. நான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று; இவற்றை அஹங்காரம் மமகாரம் என்பர் வடநூலார். இத்துறவினை முற்றத்துறத்தல் என்ப. வடநூலார் ஸந்யாஸம் என்பர். ஸம் - முற் றும், ந்யாஸம் - துறத்தல். (உகரு)

வரைவெதிர்வுணர்த்தல்.

அதாவது—பாங்கி தலைவனை நோக்கி, நீ வரைவுகூறி, எமது நகர்க்கு வருவையாயின், எமர் எதிர்கொண்டு வருவரெனக் கூறு கிற்றல். அதற்குச்செய்யுள்,—

கொன்னெறிவேற்குமரன்போலெமரெதிர்கொண்டுதரு
நன்னெறியாற்பெறலாகவுந்தென்வெங்கைநாதர்வெற்ப
செந்நெறியாற்செல்பதிக்கோர்கொடுநெறிசெல்பவர்போன்
மின்னெறிவேற்கண்ணியைக்களவாற்பெறவேண்டினையே.

ப-ரை. தென்வெங்கை நாதர்வெற்ப - தென்வெங்கை யிறை வர் வெற்பில் வாழ்பவனே, கொன் - பெருமை பொருந்திய, எறி - எறியப்படுகிற, வேல்-வேற்படையையுடைய, குமரன்போல் - முரு

கன்போல, எமர் எதிர் கொண்டுதரும் - எம்மவர் எதிர்கொண்டு தருகிற, நல்நெறியால்-நல்வழியால், பெறலாகவும்-பெற்றுக்கொள்வதாயிருக்கவும், செந்நெறியால் செல்பதிக்கு - செவ்வையாகிய வழியாற் போதற்குரிய வோரூருக்கு, ஓர்கொடு நெறி செல்பவாபோல் - ஒரு கொடுவழி செல்லுவோர்போல, மின் எறிவேல்கண்ணியை - மின்னலை வீசுகிற வேல்போலுங் கண்களை யுடையாளை, களவால் - களவொழுக்கத்தால், பெற வேண்டினையே - நீ பெற விரும்பினையே, எ - று.

க-ரை. தென்வெங்கை நாதர் வெற்பனே! குமரவேள்போலவுன்னை யெமரெதிர்கொண்டு தருநல்வழியாற் பெறலாயிருக்க, நீ களவொழுக்கத்தால் எம் தலைவியைப் பெறவிரும்பினை, இது ஓரூர்க்கு நல்லவழியிருக்க, அதைவிட்டுக் கொடுவழி செல்வதுபோன்றிருக்கின்றதென்பதாம்.

வி-ரை. கொன் - அச்சம் எனினுமாம். எறிதல் - வீசுதல். குமரன்போல் - குமரனை யெதிர்கொள்வதுபோல். செந்நெறி - நேர்வழி. பதி - ஊர். கொடுநெறி - கோணலாகியவழி. களவு-களவொழுக்கம். ஏ - இரங்கல். (உகசு)

வரையுநாளுணர்த்தல்.

அதாவது—மணஞ்செய்யு நாளையறிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பணிவாய்விரிசடைப்பெம்மான்றென்வெங்கைப்பனிவரை [மேற்
கணிவாய்மலர்ந்துமணநாளுரைப்புக்கடன்றரக்கிண்
கிணிவாய்மலரனையாண்மறிப்பாயிடுங்கீற்றெனவொண்
மணிவாய்புயத்தன்பவூர்கொண்டதால்வெண்மதியமுமே.

ப - ரை. ஒள் - ஒட்பமாகிய, மணி - மணிப்பூண்கள், வாய் - பொருந்திய, புயத்து-தோள்களையுடைய, அன்ப-அன்பனே, பணி - பாம்பு, வாய் - பொருந்திய, விரிசடை - விரிசடையையுடைய, பெம்மான் - எம்பெருமானது, தென்வெங்கை பனிவரைமேல் - தென்வெங்கையிலுள்ள குளிர்ச்சியாகிய மலையின்மேலோங்கிய, கணி-வேங்கை (வேங்கைமரம்), வாய்மலர்ந்து - வாய்திறந்து, மணநாள் உரைப்பு - வரையுநாள் சொல்லுதலாகிய, அக்கடன்தர - அந்தக்கடமையைச்செய்ய, கிண்கிணி வாய்மலர் - தாமரைமலரையுடைய, அனையாள் - அத்திருமகளை நிகர்த்தவளாகிய தலைவிக்கு, மறிப்பாய் இடும்

கீற்று என - அன்னை தடையாக இட்டகீற்றுப்போல, வெள்மதியமும் - வெண்மையாகிய சந்திரனும், ஊர்கொண்டது - பரிவேடத்தைக்கொண்டது, என்று.

க - ரை. ஒட்பமாகிய மணிப்பூணணிந்த தோள்களையுடைய அன்பனே! பணிவாய் விரிசடைப் பெம்மான்றென் வெங்கைப்பனிவரைமேலுள்ள கணிவாய் மலர்ந்து மணநாளுரைக்க, திருமகளை நிகர்த்தவளாகிய தலைவிக்குத் தடையாகக்கீறிய கீற்றுப்போல, வெண்மதியமும் பரிவேடத்தால் வளைக்கப்பட்ட தென்பதாம்.

வி - ரை. பணிவாய்விரி - பாம்பு வாய்திறக்கிற எனினுமாம்; அது வாய் திறத்தலெற்றுக்கெனின், மிகுபசியால் அருகே யிருக்கிற பிறையை விழுங்கற்கென்க. வாய்திறத்தலன்றி இறைவனுணையை யஞ்சிவிழுங்கிற்றிலை யென்றவாறு. கணி-சோதிடன், வேங்கைமரம். வாய்மலர்தல்-வாய்திறத்தல்,(வாய்விள்ளல்.)மணம்-வாசனை(வரைவு.) கிண்கிணிவாய்மலர் - கிண்கிணி வாய்போலும் வாயினையுடையமலர்; (தாமரைமலர்) "கிங்கிணி வாய்ச்செய்தலர்ந்த தாமரைப்பூப்போல" "வாகாரும் படிக்கிசைகிண் கிணிவாயென்ன மலர்ந்தமலர்" எனப் பெரியாரும் பணித்தார். மறிப்பு - தடை. கீற்று - கோடு. ஊர் - பரிவேடம். இவ்வாறு கூறியதனால், வேங்கைபூத்தலும் மதியைப்பரிவேடம் சூழ்தலுமாகிய இவையிற்றையுடைய நாளேவரையுநாளென்றதாயிற்று. கடன்தர-கடன்கொடுக்க. கணி-சோதிடன். கடன்பட்டாரைத் தடுத்தலியல்பாதலால், கடன்றரமறிப்பா யிடுங்கீற்று என்றெனினுமாம். வேங்கைமலர் பொன்போறலால் அது கடன்பட்டார் கொடுத்த பொன் எனக்கொள்க. (உ௩௭)

தலைமகளறிவறிவுறுத்தல்.

அதாவது—பாங்கி தலைமகளறிவு தலைமகற் கறிவுறுத்தல். அதற்குச்செய்யுள்,—

பிற்பழியாதுமிலராலசுந்தரர்பித்தவெனுஞ்
சொற்பழியாளர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
றற்பழியாகநின்றன்பழிநாணித்தலைவவறக்
கற்பழியாதுமடமாதெனையுங்கரந்தனளே.

ப - ரை. தலைவ - தலைவனே, பின்பழியாதும் இலர் - பிற்பழியொன்று மில்லாதவரும், ஆலசுந்தரர் - ஆலாலசுந்தரர், பித்த என்னும் - பித்தாவென்னும், சொல்பழியாளர் - சொற்பழிக்காளா யிருந்

தவருமாகிய, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, சுடர் கிரிமேல் - ஒளியையுடைய மலைமீதுள்ள, மடமாது - மடமாதான வள், நின்றன்பழி - உன்பழியை, தற்பழியாக - தன்பழியாகக் கொண்டு, நாணி - நாணமடைந்து, அறக்கற்பு அழியாது - அறக்கற் பழியாமல், என்னையும் கரந்தனள்-என்னையும் மறைத்தாள், எ - று.

க - ரை. தலைவனே ! ஆலால சுந்தரர் பித்தாவென்ற பழித் துரைக்காளாயிருந்தவராகிய திருவெங்கைவாணர் சுடர்க்கிரிமேலு ள்ள மடமாதானவள், உன்பழியைத் தன்பழியாகக்கொண்டு நாணி, அறக்கற்பழியாமல் என்னையுமறைத்தாள் என்பதாம்.

வி-ரை. யாதும்-சிறிதும். பிற்பழியாதுமிலர் என்றது ஆலால சுந்தரரை யெனினுமமையும். பழி நாணி - பழியைநாணி (பழிக்கு நாணி.) அறக்கற்பு - அறத்தோடு கூடிய கற்பு. கரத்தல் - தலைமகன் பிரிவால் பீர்பூத்தல், வளைகழலல் முதலியன புலப்படாவகை மறை த்தல். இவ்வாறு கூறியதனால் இங்ஙனமறிவுடையாளை நீ விரைந்து வரைந்து கொள்வாயாகவெனக் குறிப்பாற் கூறியவாறாயிற்று. ()

குறிபெயர்த்திடுதல்.

அதாவது—பாங்கி, தலைவனே இக்குறியிடை யினிநீவாரற்க, வேறு குறியிடை வருகவெனக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஐயுற்றெமர்தெளிவானிருந்தார்நும்மடிச்சுவடு
கொய்யுற்றபூம்பொழிலூடுகண்டேமென்குழலுமையாண்
மெய்யுற்றவங்கணர்வெங்கையிலேகுறிவேறுகொண்டு
மையுற்றகண்ணியொடும்விளையாடுகமன்னவனே.

ப - ரை. மன்னவனே - அரசனே, எமர் - எம்மவர், கொய்யு ற்ற - பறிக்கப்படுகிற, பூம்பொழிலூடு - பூஞ்சோலையினிடையே, நும்அடிச்சுவடு - நுமதடிச்சுவட்டினை, கண்டு - பார்த்து, ஐயுற்று - சந்தேகித்து, தெளிவான் இருந்தார் - அதனைத்தேர்ந்தறியக் கருதி யிருக்கின்றனர், (ஆதலால்) மெல்குழல் - மெல்லிய கூந்தலையுடைய, உமையாள் - உமையவள், மெய்உற்ற - தம்திருமேனியில் பொருந்தி யிருக்கப்பெற்ற, அங்கணர் - அங்கணராகிய சிவபெருமானரது, வெங்கையிலே-திருவெங்கைப்பதியில், வேறுகுறிகொண்டு-வேறோர் குறியிடங்கொண்டு, மை உற்ற - அஞ்சனமெழுதப்பெற்ற, கண்ணி யொடும்-கண்களையுடையவளாகிய எமது தலைவியோடும், விளையா டுக-விளையாடுவாயாக, எ - று.

க - ரை. மன்னவனே! எமர், இப்பூஞ்சோலையில் நும்மடிச் சுவடு கண்டு சந்தேகித்து அதனைத் தேர்ந்தறியக் கருதியிருக்கின்றனர், ஆதலால், உமாசஹிதராகிய சிவபெருமானாரது திருவெங்கையில், இனி இக்குறியிடம் விட்டு வேறோர் குறியிடத்துச் சென்று எமது தலைவியோடும் விளையாடுக வென்பதாம்.

வி - ரை. ஒளிவாலிருந்தார் என்றும் பாடம். ஐயுறல் - சந்தேகித்தல். தெளிவான் - தெளிய. (செயவெனெச்சம்) சுவடு-அடையாளம். கொய்தல் - பறித்தல். மெய் - திருமேனி; இது இடப்பாகத்தைக் குறித்தது. அங்கணர் - கருணைக்கண்ணர். (சிவபெருமானார்) கம - அஞ்சனம். இதனால் இக்குறிக்கண் வாரற்கவெனக் குறிப்பால் வரைவு கடாயவாறாயிற்று. (உகூக)

பகல்வருவானையிரவுவருகென்றல்.

இது பதின்மூன்றாநாட் செய்தி.

அதாவது—பகற்குறிக்கண் வருபவனாகிய தலைவனை இரவுக்குறிக்கண் வருவாயாக வெனப் பாங்கி கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நந்தேடவிழ்ந்துநறவூற்றிருக்குநளினமிசை
வந்தேறிமென்றுயில்கொள்வெங்கைவாணர்வ்வரையின்மலர்க்
கொந்தேறுமென்குழலாண்முகவாவிக்குமுதமலர்ச்
செந்தேனிரவினல்லாற்கிடையாதென்னசெய்யினுமே.

ப - ரை. (அன்பனே)—, நந்து - சங்குகள், ஏடு அவிழ்ந்து - இதழ்கள்விரிந்து, நறஊற்றிருக்கும்-தேன்சுரந்து கொண்டிருக்கிற, நளினமிசை - தாமரை மலரின்மேல், வந்து ஏறி—, மென் துயில் கொள் - அறிதுயில் கொள்ளுதற்குரிய, வெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானாரது, வரையில்-மலையின் மீதுவாழ்கின்ற, மலர்க்கொந்து ஏறிய - பூங்கொத்துக்களணியப்பெற்ற, குழலாள் - கூந்தலையுடையவளாகிய எமது தலைவியின், முகம் வாவி-முகமாகிய தடாகத்திலுள்ள, குமுதமலர் செந்தேன் - குமுதமலரின் சேந்தேனனது, என்ன செய்யினும் - நீ யென்ன முயற்சி செய்யினும், இரவில் அல்லாது - இராக்காலத்திலல்லாது, கிடையாது - கிடைக்கமாட்டாது, எ - று.

க - ரை. சங்குகள் தாமரைமலர் மேலேறித் துயில் கூர்தற்குரிய வயல்வளம் பொருந்திய திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய

சிவபெருமானாரது மலையிலுள்ள எமது தலைவியது முகவாவியிலுள்ள குமுதமலர்ச் செந்தேனனது, நீ யென்ன முயன்றாலும் இராப்பொழுதினன்றிக் கிடையாது என்பதாம்.

வி - ரை. நந்து - சங்கு. நறா - தேன்; அது நற எனக் குறுகிற்று. நளிநம் - தாமரை. முகவாவி யென்பதனை, முகம்வாவியென்றும், முகம் ஆவியென்றும் பிரிக்கலாம். குமுதம் - செவ்வல்லி மலர். இது தலைவியின் வாயை யுணர்த்திற்று. குமுதமலர்ச் செந்தேன் என்றது தலைவியின் அதராமிர்தத்தை. நந்து துயில்கொள் எனவியையும். (உசo)

இரவுவருவானைப்பகல் வருகென்றல்.

அதாவது—இரவுக்குறியில் வருபவனாகிய தலைவனை, பகல்குறியில் வருவாயாக வெனப் பாங்கி தலைவனை நோக்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சேல்கொண்ட தண்பணைசூழ்வெங்கைவாணர்தஞ்சேய்திருக்
வேல்கொண்டகண்ணிளம்பெண்ணோடுகூடவிருப்பமுறு[கை
மால்கொண்டவெங்களிறன்னாய்மலர்மனைவாய்திறக்குங்
கோல்கொண்டுவந்திலையேலரிதாமவட்கூடுதலே.

ப-ரை. சேல்கொண்ட - சேல்மீன்களைக்கொண்டிருக்கிற, தண்பணைசூழ் - தண்ணிய வயல்கள் சூழ்ந்த, வெங்கை - திருவெங்கைப்பதியில், வாணர் - வாழ்பவராகிய சிவபெருமானாரது, சேய் - புதல்வராகிய முருகவேளின், திருக்கை - திருக்கரத்திலுள்ள, வேல் கொண்ட - வேலின்றன்மையைக்கொண்ட, கண்-கண்களையுடைய, இளம் பெண்ணோடுகூட - இளமங்கையைப்புணர, விருப்பம் உறும்-விருப்பத்தையுடைய, மால் கொண்ட - மயக்கத்தையுடைய, வெம் களிறு அன்னாய் - வெவ்வியயானையை நிகர்த்தவனே, மலர்மனை-தாமரைமலராகியவீட்டின், வாய்திறக்கும் - வாயிலைத்திறக்கிற, கோல் - திறவுகோலை, கொண்டு வந்திலையேல் - கொண்டுவந்திலையாயின், அவட்கூடல் - அவளைச்சேர்தல், அரிது ஆம் - அரிதாகும், எ - று.

க - ரை. திருவெங்கைவாணரது திருக்குமாரராகிய முருகக்கடவுளின் திருக்கரத்து வேல்போலுங் கண்களையுடைய எமது தலைவியைச் சேரவிரும்பினையாயின் அவளது திருமாளிகையாகிய மலரின் வாய்தலைத்திறக்குங் கோல்கொண்டு வரக்கடவை யென்பதாம்.

வி - ரை. சேல் - ஓர் மீன் விசேடம். பணை - வயல். சேய் - முருகக்கடவுள். வேல்-ஆகுபெயர். மால்-மதமயக்கம். மலர்-தாமரை மலர். வாய் - வாயில். மலர்மனை வாய்திறக்குங்கோல் என்றது சூரிய கிரணத்தை. இங்ஙனங்கூறியது இரவுவருவானைப் பகல்வருகென்றவாறுயிற்று. திறக்குங்கோல் - திறவுகோல். (உசக)

பகலினு மிரவினும் பயின்றுவருகென்றல்.

இது பதினொன்காநாட் செய்தி.

அதாவது—பகற்காலத்தும் இராக்காலத்தும் அடுத்தடுத்துவருவாயாக வெனப் பாங்கி தலைவற்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சொல்லும்பொருளுமெனநிறைவாரிளஞ்சூன்மிடற்ற
நெல்லுங்கரும்புநிறைவெங்கைவாணர்நெடுஞ்சிலம்ப
வில்லும்பிறையும்பணிவாணுதற்றளிர்மெல்லியலை
யல்லும்பகலுமகலாதிவண்வந்தடைந்தருளே.

ப - ரை. சொல்லும் பொருளும் என - சொல்லும்பொருளும் போல, நிறைவார் - எங்கும் நிறைந்திருப்பவர், இளஞ்சூல்மிடற்ற - இளஞ்சூலைக்கொண்ட கழுத்தினையுடைய, நெல்லும் கரும்பும்நிறை- நெற்பயிரும் கரும்புப்பயிரும் நிறைந்த, வெங்கை - திருவெங்கைப் பதியில், வாணர் - வாழ்பவராகிய சிவபெருமானுர், (அவரது) நெடுஞ் சிலம்ப - நெடியமலையில் வாழ்பவனே, வில்லும் பிறையும் பணி - வில்லும் பிறையும் வணங்குகிற, வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றியினையும், தளிர்மெல் இயலை - தளிர்போலும் மெல்லியலினையும் உடையவளாகிய எமது தலைவியை, அல்லும் பகலும் - இரவினும் பகலினும், அகலாது - நீங்காமல், இவண்-இவ்விடத்து, வந்து அடைந்தருள் - வந்தடைந் தருள்வாயாக, எ - று.

க - ரை. சொல்லும் பொருளும்போல எங்கும் நிறைந்திருப்பவராகிய திருவெங்கைவாணரது சிலம்பில் வாழ்பவனே! வில்லும் பிறையும் பணிவாணுதற்றளிர் மெல்லியலை அல்லும் பகலும்நீங்காது வந்தடைந்தருளென்பதாம்.

வி - ரை. சர்வ வியாபி யென்பார் சொல்லும் பொருளுமென நிறைவார் என்றார். மிடற்ற வென்னும் பெயரெச்சம் நெல்லைக் கொண்டுமுடிந்தது. நெல்லும் கரும்பும் என்பவற்றும்மைகள் எண்ணும்மைகள். இளஞ்சூன் மிடற்ற நெல்லுங் கரும்பு நிறை என் விசேடணம் திருவெங்கைப் பெருவளத்தையினிது விளக்கிற்று. பணிதல் - தாழ்தல். பிறையென்றது முற்பக்கத்தட்ட மிச்சந்திரனை. (உசஉ)

பகலினுமிரவினுமகலிவணென்றல்.

அஃதாவது—பகலினு மிரவினும் இவ்விடத்திற்கு வரற்பாலையல்லையெனத் தோழி தலைவனை வரவு விலக்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

பாவலர்பாடும்புகழ்வெங்கைவாணர்பனிவரைமேன்
மேவலராருயிருண்டமைவேலவவெம்பகலி
லேவலராயநெருங்குமின்றேன்வண்டெனவிரவிற்
காவலர்சூழ்ந்துதிரிவார்பொன்காத்தகடியெனவே.

ப-ரை. பாவலர்பாடும் - பாவலர் பாடுதற்குரிய, புகழ் - கீர்த்தியையுடைய, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, பனிவரைமேல் - குளிர்ச்சியாகிய மலைமீதுள்ள, மேவலர் - பகைவரது, ஆர் உயிர் - அரியவுயிரை, உண்டு அமை-உண்டமைகின்ற, வேலவ - வேற்படையை யுடையானே, வெம்பகலில் - கடும் பகலில், எவலர் - எவலாளரும், ஆயம் - ஆயமும், இன்தேன் - இனிதாகிய தேனை, வண்டு என - வண்டு சூழ்வதுபோல, நெருங்கும் - நெருங்காநிற்கும், இரவில் - இராக்காலத்தில், காவலர் - காவலாளர், பொன்காத்த - பொன்னைக் காத்திருக்கிற, கடியென - பிசாசம்போல, சூழ்ந்து திரிவார் - சுற்றிக்கொண்டு திரிவார்கள், எ-று.

க-ரை. பாவலரால் பாடப்படுகிற புகழையுடைய வெங்கைவாணர் பனிவரைமேல், பகைவருயிரையுண்ட வேற்படையையுடையவனே! பகற்பொழுதில் எவலாளரும், ஆயமும் சூழ்ந்திருக்கும், இராப்பொழுதில் காவலர் பொன்காத்த பூதம்போலக் காத்துத் திரிவார்கள், ஆதலால் எமது தலைவியை வேட்டு நீ பகலிரா என்னும் இருபோதும் வரற்பாலையல்லை யென்பதாம்.

வி-ரை. பாவலர் என்றது சைவசமயாசாரியராகிய வாகீசர், சுந்தரர், சம்பந்தர், வாதவூரர் என்பவரை. மேவலர் - பொருந்தாதவர் (பகைவர்). உயிரிற் சிறந்த பொருளின்மையால் அதனை ஆருயிர் என்றார். உண்டமைவேல் என்றமையால் உண்டாலன்றி யமையாமை பெறுதும். ஆயம் - தோழிக்கூட்டம். காவலர்-ஊர் காவலர். (உசரு)

உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்.

அஃதாவது—பாங்கி தலைமகனை நோக்கி நீ வரைந்துகொள்ளாவிடின், உன் பெருமைமுதலியவற்றிற்குப் பழுதுநேருமெனக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

துதியுந்தொடையும்புனைபுயத்தாய்மணஞ்சூழ்ந்திலையே
னதியும்பணியும்புனைவேணியர்வெங்கைநாட்டினினின்
பதியுங்குலனுமரபுநல்வாய்மையும்பல்புகழு
மதியுங்களங்கமும்போலொழியாமன்மறுப்படுமே.

ப-ரை. துதியும்-பாமாலையையும், தொடையும்-பூமாலையையும், புனை-தரித்த, புயத்தாய் - தோள்களையுடையானே, மணம்சூழ்ந்திலையேல் - வரைந்துகொள்ளாயாயின், நதியும் பணியும்புனை - கங்கையையும் திங்களையும் தரித்த, வேணியர் - சடாபாரத்தை யுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கைநாட்டினில் - திருவெங்கை நாட்டில், நின் - உனது, பதியும் - ஊரும், குலனும் - குலமும், மரபும் - சந்ததியும், நல்வாய்மையும் - நல்லவுண்மையும், பல்புகழும் - பலவகையாகிய புகழும், மதியும் களங்கமும்போல் - மதியுமறுவும் போல, ஒழியாமல் - நீங்காமல், மறுப்படும் - குற்றப்படும், எ-று.

க-ரை. பாமாலையையும் பூமாலையையும் தரித்த தோள்களை யுடையவனே! நீ யெமது தலைவியை வரைந்து கொள்ளாவிடின் நின் பதிகுலன் முதலியவெல்லாம் பழுதுபட்டு, மதியின் மறுப்போல உலகமுழுதும் தோன்றா நிற்கும் என்பதாம்.

வி-ரை. துதியும் தொடையு மென்றமையால் பாமாலைபூமாலை யெனப் பொருளுரைக்கலாயிற்று. மணஞ்சூழ்தல் - வரைதல். ஒழியாமல் - எப்பொழுதும் நீங்காமல். மறு - குற்றம், களங்கம். படுதல்- உண்டாதல். ஒழியாமல் என்பதற்கு உலக முள்ளளவும் என்றுரைத்துக்கொள்க. பணியுமணி வெங்கைவாணர் நன்னாட்டினினின் என்றும் பாடம். (உசச)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

அதாவது—தலைமகன் வரும் வழியின் கடுமையை யஞ்சின தோழி, தலைவனை நோக்கிக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்.—

அரியும்பணியுந்திருவெங்கைவாணரடியரல்லார்
திரியும்பவநெறிபோன்றொழியாதிரைதேர்ந்துகொடு
வரியுங்கரியுஞ்செறியுஞ்சிறுவழிவாரலைநீ
புரியுங்கருங்குழலாள்பொருட்டாகப்புரவலனே.

ப-ரை. புரவலனே - அரசனே, புரியும் - விரும்புதற்குரிய, கருங்குழலாள் பொருட்டாக-கரிய கூந்தலையுடையவளாகிய எமது தலைவியின்பொருட்டாக, அரியும் - திருமாலும், பணியுட்-வணங்கு

கின்ற, திருவெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, அடியர் அல்லார் - தொண்டரல்லாதவர், திரியும் - சென்றலைகிற, பவநெறிபோன்று - பிறவி வழியை நிகர்த்து, கொடுவரியும் - புலிகளும், கரியும் - யானைகளும், ஒழியாது - இடையறாமல், இரைதேர்ந்து செறியும் - இரைதேடி நெருங்குகிற, சிறுவழி - சிறுநெறியில், நீவாரலை-நீவாற்பாலையல்லை, எ - று.

க - ரை. புரவலனே! திருமாலும் வணங்குதற்குரிய திருவெங்கைவாணரடியரல்லாதவர் திரியும் பிறவிவழிபோன்று, புலியானை இவை நெருங்கி யிரைதேடித்திரிகிற சிறுநெறியில், எமது தலைவியைநாடி நீவரற்பாலையல்லை யென்பதாம்.

வி - ரை. அரியும் என்ற வும்மை யுயர்வு சிறப்பு. அரி இந்திரனுக்கும் பெயராதலால் தேவாதிபனாகிய இந்திரனும் என்றுரைப்பினுமாம். அடியரல்லார் - பாவிகள். பவநெறி - பாவநெறியென்றலுமொன்று. இரைதேர்தல் - இரைதேடுதல். கொடுவரி - புலி; வளைவாகிய கீற்றுக்களையுடையதென்பது பதப்பொருள். கரி - யானை; துதிக்கையை யுடையதென்பது பதப்பொருள். செறிதல் - நெருங்கல். சிறுவழியாதலால் நெருக்கத்திற் கேதுவாயிற்று. புரிதல்-விரும்புதல். புரியும் என்பதற்கு சுருட்டிக்கட்டப்பட்ட என்றுரைத்தலுமாம். (உசரு)

ஆற்றத்தன்மையாற்றக்கூறல்.

அதாவது—தலைமகளது ஆற்றாத்தன்மையை யாற்றுதல் வேண்டுமெனத் தோழிதலைவற்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அழுவாண்மொழிதளர்வாளையகோவென்றலம்வருவாள்
விழுவாள்புரண்டெழுவாள்வெங்கைவாணரைவேண்டியடி
தொழுவாளநங்கன்கொடியனென்பாளுயிர்சோர்ந்திடுவாண்
முழுவாள்விழிமடமாதெண்ணமன்பமுடித்தருளே.

ப - ரை. அன்ப - அன்பனே, முழுவாள்-முழுவாள் போன்ற, விழி - கண்களையுடைய, மடமாது - இளம்பெண்ணாகிய எமது தலைவியானவள், அழுவாள்—, மொழிதளர்வாள் - சொற்சோர்வாள், ஐயகோவென்று—, அலம்வருவாள் - சுழல்வாள், விழுவாள்—, புரண்டு எழுவாள்—, வெங்கைவாணரை வேண்டி - திருவெங்கைவாணரை விரும்பி, அடிதொழுவாள் - (அவரது) திருவடியை வணங்குவாள், அநங்கன் - மன்மதன், கொடியன் என்பாள் - கொடியவன் என்று சொல்லுவாள், உயிர்சோர்ந்திடுவாள் - உயிர் தளர்வாள், எண்ணம் - அவளது எண்ணத்தை, முடித்தருள் - முடித்தருள்வாயாக, எ - று.

க - ரை. அன்பனே! எமது தலைவியானவள் அழுதல் முதலிய செயல்களைச் செய்கிறாளாதலால் அவளது எண்ணத்தை நிறைவேற்றியருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. மொழி தளர்தல் - சொற்குழறுதல். அல்ம் வரல் - சுழலல். அநங்கன் - அங்கமில்லாதவன், மன்மதன்; இவனை உருவிலியென்றுங் கூறுப. இவன் துன்பம்விளைத்தலால் கொடியனென்னப்பாளாயினள். எண்ணம்-கருத்து. முழுவாள்-பெரியவாள்; பேரொளியெனினுமாம். "அவன் றில்லை யின்னொளி போன்று" என்றார் மணிவாசகரும். எ - இரங்கற் குறிப்பு; அசையெனினுமாம். (உசகூ)

காவன்மிகவுரைத்தல்.

அதாவது—நீ குறியிடத்து வருவதற்கும், எமது தலைவி வருவதற்கும் இடையூறாகிய காவல் மிக்கிருக்கின்றதெனத் தோழி தலைவற்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஆக்குறுங்காரணர்வெங்கைபுரேசரணிவரையாய்
தாக்குறுஞ்சியமும்வேழமும்வேங்கையுந்தப்பிவந்து
மாக்குறுஞ்சோலையெம்மூர்புகுந்தாலுமனையருகு
காக்குறுங்காவலர்தம்மையெவ்வாறுகடப்பதுவே.

ப - ரை. ஆக்குறும் - (எல்லாப் பொருள்களையும்) தோன்றுவிக்கவல்ல, காரணர் - மூலகாரணர், வெங்கை புரேசர் - திருவெங்காபுரத்திறைவர். (அவரது) அணிவரையாய் - அழகியமலை நாடனே, தாக்குறும் - ஒன்றோடொன்று போர் செய்கிற, சியமும் - சிங்கத்தையும், வேழமும் - யானையையும், வேங்கையும் - புலியையும், தப்பிவந்து - தப்புவித்துக்கொண்டுவந்து, மாகுறுஞ் சோலை - மிகச் சிறுபொழில்கள் சூழ்ந்த, எம் ஊர் புகுந்தாலும் - எமதூரிற் பிரவேசித்தாலும், மனையருகு - வீட்டருகே, காக்குறும் காவலர் தம்மை - காத்துக்கொண்டிருக்குங் காவலாளரை, எவ்வாறு கடப்பது - எப்படி கடப்பது, எ - று.

க - ரை. திருவெங்கை யீசரது அழகிய மலையில் வாழ்பவனே! ஒன்றோடொன்று போரிடுகிற சிங்க முதலியவற்றைத் தப்புவித்துக்கொண்டு, எம்மூர்க்கு வருவையாயினும், எம் வீட்டருகே காவல் செய்கிற காவலாளரை, நீ தப்புவ தெவ்வாறு என்பதாம்.

வி - ரை. ஆக்குறும் - ஒருசொல். காரணர் - ஜகத்காரணர். வரை - ஆகுபெயர். தாக்குறும் - ஒருசொல்; ஒன்றோடொன்று

முட்டிப்பொருதல். சீயம் - சிங்கம். வேழம் - யானை. மாக்குறுஞ் சோலை - மிகச்சிறுபொழில். புகுந்தாலும் என்றது புகலருமை விள க்கிநின்றது. எவ்வாறு கடப்பது என்றது கடத்தலருமை விளக்கி நின்றது. எ - இரங்கல். (உசஎ)

காமமிக வுரைத்தல்.

அதாவது—தலைவியது வேட்கை மிகுதியைத் தோழி தலைவற் குரையாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

தாள்வலிகொண்டுபகடுந்துகாலன்றனைமருட்டு
மாள்வலிகொண்டவர்வெங்கைவெற்பாநின்னணியலர்கற்
றோல்வலிகொண்டுதவிர்ப்பினலாமற்றுயர்விளைக்கும்
வேள்வலிகொள்ளுந்துணையெங்கள்பேதைக்குவேறில்லையே.

ப - ரை. தாள்வலிகொண்டு - திருவடிவலியினால், பகடுஉந்து- பகட்டினைச் செலுத்துகிற, காலன்றன்னை - யமனை, மருட்டும்-மருட் டின, ஆள்வலிகொண்டவர் - ஆள்வலி கொண்டவராகிய சிவபிரா னாரது, வெங்கை வெற்பா - திருவெங்கை வெற்பனே, அணி - ஆப ரணங்கள், அலர் - விளங்குகிற, கல் - மலைபோன்ற, நின் தோள் வலிகொண்டு - உன்புயவலியால், தவிர்ப்பின் அல்லாமல் - ஒழிப்பி னல்லது, துயர்விளைக்கும் - துன்பத்தையுண்டாக்குகிற, வேள்வலி- மன்மதனது வலியை, கொள்ளும் - கவர்கின்ற, துணை - துணையா வது, எங்கள் பேதைக்கு - எமது பெண்ணுக்கு, வேறு இல்லை - மற் றொன்றில்லை. எ-று.

க - ரை. பகடுந்து காலனைத் தமது திருவடிவலியால் வென்ற வராகிய சிவபெருமானாரது திருவெங்கை வெற்பனே! ஆபரணமணி ந்து விளங்குகிற மலைபோலு முன்புயவலியால் ஒழிப்பினல்லது, துன்பத்தையுண்டாக்குகின்ற வேள்வலியடக்குந்துணையாவது எமது பெண்ணுக்கு வேறொன்றில்லை யென்பதாம்.

வி-ரை. பகடுந்துகாலன்றன்னை தாள்வலிகொண்டு மருட்டும் எனவியையும். பகடு - எருமைக்கடா. மருட்டல் - வெல்லல். ஆள் வலி - ஆளும்வலி. கல் - ஆகுபெயர். கொண்டு மூன்றுவதன் சொல் லுருபு. கொள்ளல் - கவர்தல். பேதை - பருவங்குறியாது பெண் பொதுவைக் குறித்தது. எ - இரங்கல். (உசஅ)

கனவுநலிபுரைத்தல்.

அதாவது—தலைவிக்குக் கனவினால் வந்த துன்பத்தைப்பாங்கி தலைவற் குரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மனவேயணியுந்திருவெங்கைவாணர்வரையணங்கு
சினவேலிறைவநின்றோளொடுகொங்கைதிளைக்கவருங்
கனவேயுயருந்துறக்கமென்பாணினைக்காண்பரிய
நனவேதுயரந்தருகின்றதீவெந்நரகென்பளே.

ப - ரை. சினம் - கோபத்தையுடைய, வேல் - வேற்படையை யேந்திய, இறைவ - தலைவனே, மனவு அணியும் - அக்குமணியை யணிகின்ற, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, வரை - மலையிலுள்ள, அணங்கு - எமது பெண்ணனவள், நின்தோளொடு - உன்புயத்தோடு,கொங்கை - தன்கொங்கைகள், திளைக்க-அணைக்கு மாறு, வரும் - உண்டாகிய, கனவே - கனவே, உயரும் - உயர்ந்த, துறக்கம் என்பாள்-சுவர்க்கமென்று சொல்லுவாள், நின்னை-உன்னை, காண்புஅரிய - காண்டலரிதாகிய, நனவே - நனவே, துயரம் தருகின்ற - துன்பத்தை யுண்டாக்குகிற, தீ - நெருப்புமயமாகிய,வெம்-வெவ்விய, நரகு என்பள் - நரகமென்று சொல்லுவாள், எ - று.

க - ரை. சினவேலிறைவனே! திருவெங்கைவாணர் வரையணங்காகிய எமது பெண்ணனவள், உன்றோள்களோடு தன் கொங்கைகளணையும்படி வருகிற கனவேதுறக்கமென்றும், உன்னைகாண்டலரிதாகியநனவே நரகமென்றும் சொல்லுவாள் என்பதாம்.

வி - ரை. சினவேல் என்றது இலக்கணை; (உடையானது சினம் வேலின்மீதேற்றிக் கூறுதல்.) மனவே, கனவே, நனவே என்பவற் றேகாரங்கள் தேற்றம். திளைத்தல் - அழுந்த லெனினுமாம். காண்பு - காண்டல். நனவு - ஜாக்ராவஸ்த்தை. ஈற்றேகாரம் இரங்கல். (உசக)

கவினழிபுரைத்தல்.

அதாவது—தலைவி அழகிழந்ததனைப் பாங்கி தலைவற்குக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

கருவரையெங்கடிருவெங்கைவாணர்தங்கண்ணழித்த
வொருவரையன்னவெழிலுடையீரிங்குமதருளா
லிருவரைபொன்றுமிருவேலழுத்தழுமீன்றனவாற்
குருவரையன்னமென்றோளுடையாட்குத்துறையென்னையே.

ப - ரை. கரு-கருப்பவேதனையை, வரை-ஒழிக்கின்ற, எங்கள் திருவெங்கைவாணர்-எமது திருவெங்கைவாணரது, கண் அழித்த - கண்ணனது நாசமாக்கின, ஒருவரை அன்ன - ஒப்பற்றவராகியஅன

ங்கன்றை நிகர்த்த, எழில் உடையிர் - அழகுடையவரே, இங்கு - இவ்விடத்து, உமது அருளால் - உமதுகருணையால், இருவரை - இரண்டுமலைகள், பொன்னும்-பொன்னையும், இருவேலை-இரண்டுகடல்கள், முத்தமும் - முத்துக்களையும், ஈன்றன - தந்தன, ஆல் - ஆதலால், குரு - ஒளியுள்ள, வரைஅன்ன-மூங்கிலைநிகர்த்த, மெல்தோள் உடையாட்கு - மெல்லிய தோள்களையுடையவளாகிய எமது தலைவிக்கு, குறைஎன்னை - குறையெது, எ - று.

க - ரை. கருப்பவேதனையைத் தவிர்த்தருள்கிற எமது திருவெங்கைவாணரது கண்ணனது அழிவுசெய்த மன்மதனை நிகர்த்த அழகுடையவரே! உமது கருணையால், இரண்டு மலைகள் பொன்னையும் இரண்டு கடல்கள் முத்துக்களையும் தந்தனவாதலால் எமதுதலைவிக்கு இனியென்ன குறையுளது என்பதாம்.

வி - ரை. கரு - கருப்பம்; அது இங்குப் பிறவியென்னும் பொருட்டு. வரைதல் - ஒழித்தல். தம் - சாரியை. கண்அழித்த - கண்ணை அழித்த எனினுமாம். கண் இங்கு நெற்றிக்கண்ணைக் குறித்தது. இருவரையென்றது இருதனத்தையும்,இருவேலையென்றதுஇருகண்ணையும் குறித்தன. பொன் - பசலை. முத்தம்-கண்ணீர்த்துளி. குரு - நிறமுமாம். வரைதல் கொள்ளலாதலால் குருவரையென்பதற்குமூங்கிலின் றன்மையைக்கொண்ட என்றுரைத்தலுமாம்.

வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகப்பிறர்வரைவுணர்த்தல் ஈருகக் கூறிய ஐந்தும் மறுத்தற்குரியன. உரவோனுடு மூருங்குலனுமரபும் புகழும் வாய்மையுங் கூறலொன்றும் கழறற்குரித்து. வரைவெதிர் வுணர்த்தல், வரையுநாளுணர்த்தல், அறிவறிவுறுத்தல், ஆறுபார்த் துற்ற வச்சங்கூறல், ஆற்ருத்தன்மை யாற்றக்கூறல்,காவன்மிகவுரைத்தல், காமமிகவுரைத்தல், கனவு நலிபுரைத்தல், கவினழிபுரைத்தல் ஆகிய ஒன்பதும் எய்தற் குரியன. இவையாவும் குறிப்பினுனும் வெளிப்படையானும் வரைவு கடாயவாறறிக.()

ஒருவழித்தணத்தல்.

அதாவது—கூறிய பாங்கியொடு, வரைதற்குடன்பட்ட தலைவன் தன்னூருக் கொருவழி போய் வருகிறேனென்று சொல்லிப் போதல்.

"செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற் றுவித்தல்

வந்துழி நேர்ந்துரை யெனவெழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்"

என்னுஞ் சூத்திர விதியால் ஒருவழித் தணத்தல்எழுவகைப்படும்.

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்.

அதாவது—தலைவன் தன்னூர்க்குச்சேறலைப் பாங்கிக்குரையா நிற்றல். அதற்குச்செய்யுள்—(அகற்சி-பிரிவு.)

என்மனநல்லிளம்பூங்கொடிபால்வைத்திளங்கொடிதன்
னன்மனமென்னொடுகொண்டூர்புகுந்திங்குநான்வருவேன்
வன்மனம்வந்துபுகாவிசர்வெங்கைமருவலர்போ
னின்மனமஞ்சலைசெங்கயல்வாட்கண்ணிரைவளையே.

ப-ரை. செங்கயல் - செங்கயல்கள்போலும், வாள்கண் - வாட்கண்களையும், நிரைவளையே - வரிசையாகிய வளையலையு முடையாளே, என் மனம் - என் மனத்தை, நல் இளம்பூங்கொடிபால் வைத்து - அழகிய இளம்பூங் கொடியினிடத்தே வைத்து, இளங்கொடி - இளங்கொடியினது, நல்மனம்-நன்னெஞ்சை, என்னொடுகொண்டு- என்னுடன்கொண்டு, ஊர்புகுந்து-என்னூரிற்புகுந்து, இங்கு நான் வருவேன்—, வல்மனம் - வலிய நெஞ்சில், வந்துபுகா - வந்து புகப் பெறாத, ஈசர் - ஈச்சுரரது, வெங்கை - திருவெங்கையை, மருவலர் போல் - அடையாதார்போல, நின்மனம் அஞ்சலை - உன்மன மஞ்சற்பாலையல்லை, எ-று.

க-ரை. செங்கயல் வாட்கண்ணிரைவளையே! என்மனத்தை யுன்னிளங்கொடியி னிடத்துவைத்து, உன்னிளங்கொடியின் மனத்தை நானுடன்கொண்டு என்னூர்க்குப் போய்வருகிறேன், இறைவரது திருவெங்கையை யடையாதவர்போல நின்மன மஞ்சற்பாலையல்லை யென்பதாம்.

வி-ரை. இளம் பூங்கொடி யென்றது தலைவியை. ஊர்புகுந்திங்கு நான் வருவேன் என்றது அங்குத் தாழ்க்காது விரைந்து வருவேன் என்றபடி. வன்மனம் - வன்னெஞ்சு. (கடிந ஏற்றுதயம்) வாள்கண் - வாள்போலுங்கண், ஒளி பொருந்திய கண். (உ௫க)

பாங்கிவிலக்கல்.

அதாவது—தலைவ னிவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, நீ யுன்னூர்க்குப்போனால் விரைந்து வராய், ஆதலால் நீ போகலை, யானிவடுயர்கண்டாற் கொண்டிடேனெனக் கூறிச் செலவுவிலக்கா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஊனருயிரி னுயிர்போலவேயவ்வுயிரி னுயிர்
தானுமொருவன்றிருவெங்கைவெற்பி லுன்றன்பதிக்குப்
போனல்விரைந்துவருவாயலையன்பபோகலைநீ
யானுயிழைதுயர்கண்டாவிகொண்டிங்கிருக்கிலனே.

- ப-ரை. அன்ப - அன்பனே, ஊன் ஆர் - உடம்பிற் பொருந்திய, உயிர்போலவே - உயிரை நிகர்த்தே, அவ்வுயிரின் உயிர் ஆம் ஒருவன் - அந்தவுயிர்க்குயிராகிய சிவபிரானது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கை மலையிலுள்ள, உன்பதிக்கு - உன்னூருக்கு, போனல் - சென்றால், விரைந்து வருவாயலை - கடுகி வருவாயல்லை, (ஆதலால்) நீ போகலை-நீ போகற்பாலையல்லை, (அப்படி நீ போவையாயின்) யான் - நான், ஆயிழை துயர்கண்டு - தலைவியது துன்பத்தைக்கண்டு, ஆவிகொண்டு - உயிரைத்தாங்கி, இங்கு இருக்கிலன் - இவ்வுலகிலிரேன், எ-று.

க-ரை. அன்பனே! உடலுக் குயிர்போல, உயிர்க்குயிராகிய சிவபிரானது திருவெங்கை வெற்பிலுள்ள வுன்னூருக்குப் போவையாயின் விரைந்து வருகின்றிலை, ஆதலால் நீ போகற்க, போவையாயின், தலைவியின் துயரங்கண்டு யானுயிரோடிரேன் என்பதாம்.

வி-ரை. ஊன் - ஆகுபெயர். தான்-அசை. ஒருவன் - ஒப்பிலி. தன் - சாரியை. பதி - ஊர். ஆவி - உயிர். ஆயிழை - அன்மொழித்தொகை. ஆவிகொண்டிங் கிருக்கிலன் என்றது இறந்துபடுவேனென்றபடி. ஏ-இரங்கல். கொண்டிங் கயர்கிலனே யென்றும்பாடம்.

தலைவன் நீங்கல்வேண்டல்.

அதாவது—தலைவன் பாங்கியை யுடன்படுத்தித் தான் நீங்கற்பொருட்டு அவளை வேண்டாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீர்புக்குவாழுநெடுமீனந்நீர்தனைநீங்கியுய்ந்தாற்
றார்புக்குவாழுமுலையாளையானுந்தணந்துய்குவேன்
மார்புக்குமாலையரவானவர்வெங்கைவாணர்வெற்பி
லூர்புக்குநான்வரவேண்டுமின்னேநின்னுளத்திசையே.

ப-ரை. மின்னே - மின்கொடிபோல்வாளே, நீர்புக்குவாழும் - நீரிற்புகுந்துயிர்வாழ்கின்ற, நெடு மீன் - நெடிய மீன்கள், அநீர்தனை நீங்கி - அந்தநீரைப்பிரிந்து, உய்ந்தால் - உயிர்வாழ்ந்தால், தார்புக்கு வாழும் - மாலைகள் பொருந்தி வாழ்கிற, முலையாளை - முலையையுடையவளாகிய உங்கள் தலைவியை, யானும் - நானும், தணந்து உய்

துவேன் - நீங்கி யுயிர்வாழ்வேன், அரவு - பாம்புகளே, மார்புக்கு - தமது திருமார்புக்கு, மாலையானவர் - மாலையாகக் கொண்டவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர் (அவரது) வெற்பு - மலையிலுள்ள, என் ஊர் புக்கு - என்னூருக்குட் சென்று, நான்வரல்வேண்டும் - நான் வருதல் வேண்டும், நின் உள்ளம் இசை - (இதற்கு) நீ மனமிசைதல் வேண்டும். எ-று.

க - ரை. மின்னே! நீரில் வாழ்கின்ற மீன்கள் அந்தநீரைவிட்டு வாழுமாயின், நான் உன் தலைவியை நீங்கியுய்வேன், அங்ஙனமாகவும், நான் திருவெங்கை வாணர் வரையிலுள்ள என்னூருக்குப் போய்வருதல் வேண்டுமாதலால், இதற்கு நீயுன் மனமிசைய வேண்டுமென்பதாம்.

வி - ரை. உய்தல்-உயிர்வாழ்தல். தார் - முத்துமாலை, பூமாலை. தணத்தல் - பிரிதல். மின் - உவமையாகுபெயர். உள்ளம் - மனம்; இது பண்பாகுபெயர். இசைதல் - சம்மதித்தல். இன்னே யெனப் பிரித்து இப்பொழுதே யென்றுரைத்தலுமாம். (௨௫௫)

பாங்கி விடுத்தல்.

அதாவது—பாங்கியானவள் தலைவனைநோக்கி, உன் செலவை யான் போய்த்தலைவிக்கு, நந்தலைவர் தந்நகர்க்கேகி வந்தாரென்று சொல்லுமாறு நீ யுன்னூர்க்குப் போய்வருகவென விடுத்தல். அதற்குச் செய்யுள்;—

கொந்தார்மலர்க்குழல்வெண்முத்தவாணகைக்கோமளத்தின்
சிந்தாகுலமுற்றுநீயறிவாயன்பதேமொழிக்கு
நந்தாமணிவிளக்கன்னார்தம்வெங்கைநகரினிற்போய்
வந்தாரெனச்சென்றுநான்கூறநீசென்றுவந்தருளே.

ப - ரை. அன்ப - அன்பனே, கொந்து - பூங்கொத்துக்கள், ஆர் - நிறைந்த, மலர்க்குழல் - மலர்க்குழலையும், வெள்முத்தம்வாள் நகை - வெள்ளிய முத்துப்போலும் ஒளியினையுடைய பல்லையுமுடைய, கோமளத்தின் - ம்ருது ஸ்வபாவையாகிய எம்பெண்ணினது, சிந்தா ஆகுலம் முற்றும் - மனவருத்த முழுதும், நீஅறிவாய் - நீயுணர்வாய், தேம்மொழிக்கு - தேன்போலும் இன்சொல்லையுடையாட்கு, நந்தா-அவியாத, மணிவிளக்கு அன்னார்-மணிவிளக்குப்போல்பவராகிய சிவபெருமானது, வெங்கை நகரினில் போய் வந்தார்-என - வெங்கை நகரத்திற்குப்போய் வந்தாரென்று, சென்று நான் கூற - போய்நான்சொல்ல, நீ சென்று வந்தருள் - நீ போய் வந்தருள்வாயாக. எ-று.

க - ரை. அன்பனே! நான் தலைவியிடத்திற்சென்று தலைவர் தம் நகருக்குப்போய் வந்தார் என்று சொல்லுமாறு நீ போய் வந்தருளல் வேண்டும் என்பதாம்.

வி-ரை. கொத்து கொந்து என மெலிந்துநின்றது. முத்தம் - மூக்தம் என்னும் வடசொற்றிரிபு. கோமளம் - பண்பாகுபெயர். சிந்தாகுலம் - வடநூன் முடிபு. தேமொழி - அன்மொழித்தொகை. மணி இங்கு மாணிக்கத்தைக் குறித்தது. வந்தருள் - ஒருசொல். ()

பாங்கிதலைவிக்கவன் செலவுணர்த்தல்.

அதாவது—பாங்கியானவள் தலைவிக்குத் தலைவனது செலவை யுணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அம்மூலகாரணர்வெங்கைபுரேசரணிவரைமேற்
செம்மூரிவேலவர்நீயாரணங்கின்முன்செல்லுமுன
மெம்மூர்புகுந்துவருவலென்றேகினரேந்திழையாய்
நம்மூர்மருங்குறவிந்நேரம்வந்துநணுகுவரே.

ப - ரை. ஏந்து இழையாய்-தாங்கப்பட்ட ஆபரணங்களையுடையாளே, அ - அந்த, மூலகாரணர் - மூலகாரணராகிய சிவபெருமான், வெங்கைபுரேசர் - திருவெங்கைநகர்க்கதிபர், (அவரது) அணிவரைமேல் - அழகிய மலையில் வாழ்கின்ற, செம்மூரிவேலவர் - செவந்த வலிமையுள்ள வேற்படையை யுடையவராகிய நந்தலைவர், (என்னை நோக்கி) நீ ஆரணங்கின்முன் செல்லுமுன்னம் - நீ தலைவிக்கெதிரே செல்லுதற்கு முன்பே, எம் ஊர் புகுந்து வருவல் என்று ஏகினர்-எம்மூர்க்குச் சென்று வருவேனென்று சொல்லிப்போயினர், இந்நேரம் - இந்நேரத்தில், நம் ஊர்மருங்குவந்து நணுகுவர் - நம்மூரருகே வந்து சேர்வர், எ - று.

க - ரை. ஏந்திழையாய்! திருவெங்கை யீசரது மலையில் வாழ்கின்ற நந்தலைவர், என்னை நோக்கி, நீ யாரணங்கின் முன் செல்லுமுன்னே யென்னூர்க்குப்போய் வருவேனென்று சொல்லிப்போயினர், இந்நேரம் நம்மூரருகேவந்திருப்ப ரென்பதாம்.

வி - ரை. மூலகாரணர் - ஜகதுத்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணபூதர். மூரி - வலி. ஆரணங்கு-பெண்ணென்னும் ஒரு சொன்னீர்த்து. ஏந்திழை-வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக்காரணப்பெயர். மருங்கு - அருகு. நணுகல் - சேர்தல். ()

தலைவி நெஞ்சோடு புலத்தல்.

அதாவது—தலைவி தன்மனத்தை நோக்கி, அன்று தலைவரென்னை நோக்கி. உன்னைப் பிரியே னென்று தெளிவித்தவர் பிரிவாராயின், இனியாம் என் செய்குவே மெனப்புலந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

விளித்தாருயிரையடிநீழல்வைப்பவர்வெங்கையிலே
யளித்தார்புனைகுழலாயகலேனென் றகந்தெளியத்
தெளித்தாரகன்றனரேலவர்வார்த்தைதெளிந்துமனங்
களித்தார்தமக்குளதோபிழைதானிந்தக்காசினிக்கே.

ப- ரை. விளித்தார் உயிரை - தம்மையழைத்தவருயிரை, அடி நீழல் வைப்பவர் - தம் திருவடி நிழலில் வைப்பவராகிய சிவபெருமானாது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், அளி - வண்டுகள் மொய்க்கின்ற, தார்புனை - பூமாலையை யணிந்த, குழலாய்-கூந்தலையுடையாளே, அகலேன்என்று-பிரியேனென்று, அகம்தெளிய-நமது மனந்தெளிய, தெளித்தார் - தெளித்தவர், அகன்றனரேல் - நீங்கினாராயின், அவர் வார்த்தை தெளிந்து - அவர் சொல்லைத் தெளிந்து, மனம்களித்தார் தமக்கு - மனங்களித்தவர்க்கு; இந்தக் காசினிக்கு - இவ்வுலகத்தில், பிழைஉளதோ - குற்றமுண்டோ, எ - று.

க - ரை. அளித்தார்புனை குழலாய்! உன்னைப்பிரியேனென்று என்னைத் தேற்றினவர், இன்று பிரிந்தனராயின், யாமென்செய்வோமென்பதாம்.

வி - ரை. விளித்தார் - மரணகாலத்தில் ஸ்மரித்தவர். விளிந்தார் என்பது விளித்தார் என வலித்தல் பெற்றதென்றலுமொன்று. விளிதல்-இறத்தல். அகம்-ஆகுபெயர். எல்-எனின் என்பதன்மரூஉ. காசினிக்கு - உருபு மயக்கம். (உ௫௬)

சென்றோனீடலிற்காமமிக்க கழிபடர்கிளவி.

அதாவது—தலைவன் மாலைக்காலத்தளவும் வராதுகாலம் நீட்டித்தலால், காமமிக்கு, அதனால் தலைவி கூறியசொல். அதற்குச் செய்யுள்,—

பூளையணியுஞ்சடையாளர்வெங்கைபுரேசர்வெற்பிற்
பாளைமணங்கமழ்பூந்திருப்பாளெனப்பச்சைமயிற்
காளையினையநங்காதலர்தாமலர்க்கால்வருந்த
நாளைவராமலிடம்போய்மறியுநன்னாரைகளே.

ப - ரை. நல் நாரைகளே - நல்ல நாரைப் பறவைகளே, பூளை அணியும் - பூளைப்பூவைத் தரிக்கின்ற, சடையாளர் - சடாபாரத்தை யுடையவர், வெங்கைபுரேசர் - திருவெங்கை புரிக்கீசர், (அவரது) வெற்பில் - மலையில், பாளை மணம்கமழ் - பாளைமணம் வீசுகிற, மாது - தலைவி, இருப்பாள்என - இருப்பாளென்று, பச்சைமயில் காளை அனைய - பச்சைமயிலையுடைய காளையாகிய முருகவேளை நிகர்த்த, நம்காதலர் - நம்தலைவர், மலர் - தாமரைமலர்போன்ற, கால் - பாதம், வருந்த - வருந்துமாறு, நாளை வராமல் - நாளை வரா திருக்கும்படி, இடம் போய்மறியும் - இடத்தேசென்று மறியுங் கள். எ - று.

க - ரை. நல் நாரைகளே! திருவெங்கையீசர் வெற்பில் பாளை மணங்கமழ்மா திருப்பாளென்றெண்ணி, முருகவேளை நிகர்த்த நம தன்பர் மலர்க்கால் வருந்த நாளை வராதிருக்கும்படி அவர்க்கிட த்தே சென்று மறிப்பீராக வென்பதாம்.

வி - ரை. பூளை - ஆகுபெயர். பச்சைமயில் என்ற விசேடணத் தால் காளை முருகவேளையுணர்த்திற்று. தன் காரியங் கோடற்கு நன்னாரைகளே யென்றாள். தலைவி யிறந்துபட்டாள் இனி நீ வருவ தெற்றிற் கென்பது தோன்ற, நன்னாரைகளே இடம்போய் மறியு மென்றாள். நாரையிடஞ்சேறல் தடுத்தற்குறியென்பது நிமித்த நூற்றணிபு. காதலராதலால் தானிறந்துபடு மெல்லையினும் அவர் கால் வருந்தப் பொறாளா யிங்ஙனங்கூறினாளென்க. இவ்வாறுள்ள முதலிய வற்றொடு கூறியும் புலம்பியும் அழுதும் பெறும்பயன் யாதோவெனின் மூடிவைத்து வேங்கலத்தை வாய்திறக்கின், ஆவி போதலால் உட்புழுக்கஞ் சிறிது குறைதல்போல, இவ்வாறு செய் தலால் தலைவிக்கு விரகக்கனலாற் புழுங்கும் புழுக்கம் சிறிது தணி வதேயாமென்க. (உருஎ)

தலைவியைப் பாங்கியாற்றுவித்தல்.

அதாவது—தலைவியது துயரைத் தணிக்கும் பொருட்டுப் பாங்கி இதங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பொலம்புரிவார்சடையார்வெங்கைவாணர்பொருப்பணங்கே
கலம்புரிமேனியிற்குங்குமந்தோய்தண்களபமென்ன
நலம்புரிகாதலர்தம்பதிநோக்கிநடந்தவழி
வலம்புரிதோன்றுமடிப்பொடிபூசுகவந்தருளே.

ப - ரை. பொலம் - பொன்னனது, புரி - விரும்புகிற, வார் சடையார் - நீள்சடையை யுடையவர், வெங்கை வாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) பொருப்பு - மலையில் வாழ்கின்ற, அணங்கே - பெண்ணே, கலம்புரி - ஆபரணங்கள் விரும்புகிற, மேனியில் - உன்மேனிமீது, குங்குமம் தோய் தண் களபம் என்ன - குங்குமமளாவிய தண்ணியகலவைச் சாந்துபோல, நலம்புரிகாதலர் - நமது நலத்தை விரும்புகிற அன்பர், தம்பதி நோக்கி - தம்மூர் நோக்கி, நடந்தவழி - நடந்த வழியில், வலம்புரி தோன்றும் - வலம்புரிரேகை தோன்றுகிற, அடிப்பொடி - காற்றுகளை, பூசுக - பூசிக்கொள்க, வந்தருள் - வந்தருள்வாயாக. எ - று.

க - ரை. பொலம்புரிவார் சடையார் வெங்கைவாணர் பொருப்பணங்கே! நங்காதலர் தம்மூர்நோக்கி நடந்த வழியில் அவரடிச்சுவடுபட்ட பொடியை, உன் மேனியிற் களபம் பூசிக் கொள்வதுபோலப் பூசிக்கொள்வாயாக, வந்தருள் என்பதாம்.

வி-ரை. பொலம் - பொன். பொலம்புரிவார் சடையென்றதனாற் பொன்னின்மிக்குப் பொலிவதிறைவர் சடையென்றவாறாயிற்று. கலம் - பூண். கலம்புரிமேனி யென்றமையால் இவள்மேனி அணிகலங்களுக் கழகு செய்வன வென்றவாறாயிற்று; அவை இவள் மேனியின்கணணியாவிடி னணிசெய்வன வாகாவென்பதும் பெறப்பட்டது. களபமென்னப் பூசுகவென்றியையும். வலம்புரிதோன்றுமடியென்றது உத்தமவிலக்கணமமைந்த வடியென்றற்கு. (உ௫அ)

தலைவன்வந்தமை பாங்கியுணர்த்தல்.

அதாவது—தலைமகன் வந்த செய்தியைப் பாங்கி தலைமகட்குக் கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்,—இது பதினாறுநாட்செய்தி.

மலையானைமாதுலனென்பார்தம்வெங்கைவரையிடைப்பூஞ்
சிலையானைவென்றவெழி லுடையார்நஞ்செழும்பதிக்குக்
கொலையானைமேற்பசும்பொன்னோடுவந்தனர்கோதைகமழ்
முலையானைமேற்பசும்பொன்னொழிவாய்மலர்மொய்குழலே.

ப - ரை. மலர் மொய் குழலே - மலர்கள் நெருங்கின கூந்தலையுடையாளே, மலையானை - மலையரையனை, மாதுலன் என்பார் - மாமனென்பவராகிய சிவபெருமானாரது, வெங்கைவரையிடை - திருவெங்கைமலையிலுள்ள, பூஞ்சிலையானைவென்ற - மன்மதனைவென்ற, எழில் உடையார் - அழகுடையவராகிய நந்தலைவர், கொலை - கொலைத்தொழிலையுடைய, யானைமேல் - யானைமீது சுமத்தப்பட்ட, பசும்

பொன்னோடு - பசும்பொற் சுமையோடு, நம் செழும்பதிக்கு வந்தனர் - நமது வளநகர்க்கு வந்தனர், (ஆதலால் இனி) கோதை கமழ்-பூமாலை மணக்கின்ற, முலையானைமேல்-முலையானைமேலுள்ள, பசும்பொன் ஒழிவாய் - பசும் பொன்னை யொருவுவாயாக, எ-று.

க-ரை. மலர்மொய்குழலே ! மலையரையனை மாமனாகப் பெற்ற சிவபெருமானது திருவெங்கைவெற்பிலுள்ள, நங்காதலர், கொலையானைமேற் பசும் பொன்னோடு வந்தனர், ஆதலால் நீ யுன்முலையானைமேற் பசும்பொன் னொழிவாய் என்பதாம்.

வி-ரை. மலையான் - மலையரையன். மலையானை மாதுலனென்றல் இறைவற்குத் தகுமோவெனின், தகும். என்னை; மாதுலரும் மருகரும் மலையாராதலினென்க. பூஞ்சிலையான் - மலர் வில்லையுடையான். மலர்வில், கரும்புவில், இரும்புவில் இம் மூன்று வில்லும் அநங்கனுள்வன. இவற்றுள் மலர்வில் தேவர்க்கும், கரும்புவில் மனிதர்க்கும், இரும்புவில் அரக்கர்க்கும் உபயோகிக்கப்படுவன. கமழ் என மேல் வருதலால் கோதை பூமாலைக்காயிற்று. முலையானைமேற் பசும்பொன் என்றது பசப்பை. வாய்மலர் மொய்குழலே என்பதற்கு வாய்மலரினையும் நெருங்கின கூந்தலினையு முடையாளே யென்றுரைப்பினுமாம். (உருக)

பாங்கி தலைவனோடு நொந்து வினாதல்.

அதாவது—பாங்கியானவள், வந்த தலைவனைநொந்து வினவா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

காரார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கைக்காரிகைதன்
பீரார்நுதலுமுடியாக்குழலும்பெருவிழியி
னீரார்நிறைகுடமுங்கண்ணுறுமைநன்னீதியென்றோ
வாராதொழிந்தனைநின்கருத்தேதுசொன்மன்னவனே.

ப-ரை. மன்னவனே - அரசனே, கார் ஆர் - கருமைபொருந்திய, மணி - நீலமணிபோலும், மிடறு - கண்டத்தையுடைய, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கை-திருவெங்கைப்பதியிலுள்ள, காரிகை - பெண்ணினது, பீர் ஆர் நுதலும் - பசலைபூத்த நெற்றியையும், முடியாக் குழலும் - முடியாத கூந்தலையும், பெருவிழியின் - பெருங்கண்களின், நீர் ஆர் - நீர்நிறைந்த, நிறைகுடமும் - நிறைகுடத்தையும், கண்ணுறுமை - நோக்காமை, நல்நீதியென்றோ - நல்லநீதியென்றெண்ணியோ, வாராதொழிந்தனை - வராதொழிந்தாய், நின் கருத்து ஏது - உன் எண்ணம் யாது, சொல் - சொல்வாயாக. எ-று.

க-ரை. மன்னவனே! காரார் மணிமிடற் றெம்மான் திருவெங்கைக் காரிகையின் பீரார்நுதல், முடியாக்குழல், பெருவிழியி னீரார் குடம் என்பவற்றை நோக்காமையே நல்ல நீதியென் றெண்ணியோ, வராதொழிந்தாய், உன்னெண்ணம் யாது? சொல்வாயாக வென்பதாம்.

வி-ரை. மணி - நவமணிக்கும் பொதுவாயினும் காரார் என்ற அடையால் நீலமணி யெனப்பட்டது. காரிகை - ஆகுபெயர். தன் - சாரியை. பீர் - பசலைநிறம். நுதல் - நெற்றி. பெருவிழியினீரார் நிறைகுடம் - தனம். கண்ணுறாமை - நோக்காமை; கண்ணுறு - பகுதி. (உகூ0)

தலைவன்பாங்கியோடுநொந்துவினுதல்.

அதாவது—தலைவன் பாங்கியொடு நொந்து வினுவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அலையாநிலையர்திருவெங்கைவாணரணிவரையீர்
கலையானிறைமதிவேய்ங்குழல்சோலைக்கருங்குயில்யாழ்
மலையானிலநல்லவோவல்லவோவம்மதனனெடுஞ்
சிலையானுமிழ்வதலரோவம்போவென்னசெப்புமினே.

ப - ரை. அலையாநிலையர் - சலிக்காத நிலைமையுடையார், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) அணிவரையீர் - அழகியமலையில் வாழ்பவரே, கலையால் நிறைமதி - கலைகளால் நிறைந்தசந்திரன், வேய்ங்குழல் - புள்ளாங்குழல், சோலைகருங்குயில் - சோலையிலுள்ள கரியகுயில், யாழ் - வீணை, மலையாநிலம் - தென்றற்காற்று, நல்லவோ அல்லவோ - நல்லனவோ தீயனவோ, அ - அந்த, மதநன் - மன்மதன், நெடுஞ்சிலையான் - நெடிய வில்லால், உமிழ்வது-சொரிவது, அலரோஅம்போ - மலரோ கணையோ, என்ன - யாது, செப்புமின் - சொல்லுங்கள், எ - று.

க - ரை. திருவெங்கை வாணரணிவரையீர்! பூர்ணசந்திரன், வேய்ங்குழல், சோலைக்கருங்குயில், யாழ், மலையாநிலம் என்பவைகள் நல்லவோ அல்லவோ? மன்மதன் வில்லினின்றும் வெளிப்படுவன அம்புகளோ அலர்களோ? சொல்லுங்களென்பதாம்.

வி - ரை. அலையாநிலையர் - ஸ்த்தாணு வென்னும் வடசொற் பொருளமைந்தவர். வரையீர் என்றது பாங்கியையும் தலைவியையும். கலையானிறைமதி - பூர்ணமதி. வேய்ங்குழல் - மூங்கிற்குழல்; இதனைப்புள்ளாங்குழலென வழங்குவர்; இதன் பூர்வரூபம் பொள்ளாங்குழல். பொள்ளல் - தொளைத்தல். கருங்குயில் என்பதில் கருமை

சாதியடை. யாழ் ஆகு பெயராய் அதனோசையைக் குறிக்கும். மலயம் பொதியமலைக்கும் அநிலம் காற்றுக்கும் பெயராதலால் தென்றற்காற்றை மலயாநிலம் என்றார். இது பொதிய மலையினின்றும் வருவதென்பது பெருவழக்கு. (உசுக)

தலைவியை யாற்றுவித்திருந்த அருமைசாற்றல்.

அதாவது—இவ்வாறு வினவின தலைவனை நோக்கி, பாங்கிதான் தலைவியையாற்றுவித்திருந்த அருமையைக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீர்மல்குகண்ணும்வளைதீர்ந்தகையும்வெங்னெட்டுயிர்ப்பும்
பீர்மல்குகொங்கையுமாய்ப்பின்னைவேறுபிழைப்பிலதா
யார்மல்குசெஞ்சடையார்வெங்கைவாணரருளதனாற்
றார்மல்குதோளண்ணலேபுரந்தேனின்றனியுயிரே.

ப - ரை. தார்மல்கு - மாலைகள் நிறைந்த, தோள் - புயங்களையுடைய, அண்ணலே - பெரியோனே, நீர்மல்குகண்ணும் - நீர்நிறைந்தகண்ணும், வளை தீர்ந்த கையும் - வளையல் கழன்றகையும், வெம் னெட்டுயிர்ப்பும் - வெவ்விய பெருமூச்சும், பீர் மல்கு கொங்கையும் ஆய் - பசப்புநிறைந்த கொங்கையுமாகி, பின்னை வேறு பிழைப்பு இலது ஆய் - பின்னை வேறோர் பிழைப்பிலதாகிய, நின் தனி உயிர் - உன் ஒப்பற்றஉயிரினை, ஆர்மல்கு செஞ்சடையார் - ஆத்திமலர்மாலை நிறைந்த செஞ்சடையை யுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர், (அவரது) அருளதனால் - திருவருளால், புரந்தேன் - காத்தேன், எ - று.

க - ரை. தார்மல்கு தோளண்ணலே! நீர்மல்குகண்ணும் வளைதீர்ந்தகையும் வெங்னெட்டுயிர்ப்பும் பீர்மல்கு கொங்கையுமாகி, வேறுய்யும் வழியு மிலதாகின்ற வுன்னொப்பற்ற வுயிர்போல்வாளாகிய தலைவியை, திருவெங்கைவாணர் திருவருளால் யான்காத்தேன் என்பதாம்.

வி - ரை. தார்எனப்பொதுப்படக் கூறினரேனும், பாமாலைபூமாலை பூண்மாலையென்பன யாவுமடங்கும். மல்கல் - நிறைதல். தீர்தல் - ஒழிதல். பிழைப்பு - உய்வு. (தப்புதல்) இலதாய் எனப்பாடமோதி ஆய் என்பதை ஆகவெனத் திரித்து, வேறு விளைதலிலதாக வென்றுரைத்தலுமொன்று. ஆர் - ஆகுபெயர். ஆர் - ஒளியாதலால் ஆர்மல்கு செஞ்சடையார் என்பதற்கு ஒளிநிறைந்த செஞ்சடையார்

என்றும், ஆர்-கொன்றையாதலால் கொன்றைமலர்மாலையைத் தரித்த செஞ்சடையார் என்றும் உரைத்துக்கொள்க. புரத்தல் - காத்தல்.

இவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றலும், பாங்கி தலைவிக் கவன் செலவுணர்த்தலும் ஆகிய இரண்டும் செலவறிவுறுத்தற் குரியன. தலைமகனைப்பாங்கி விலக்கலொன்றும் செலவுடன் படாமைக்குரித்து. நீங்கல் வேண்டல் செலவுடன்படுத்தற் குரித்து. பாங்கிவிடுத்தல் செலவுடன் படுதற்குரித்து. தலைமகள் நெஞ்சொடு புலத்தலும், காமமிக்ககழிபடர் கிளவியுமாகிய இரண்டும் சென்றுழிக் கலங்கற்குரியன. தலைமகளையாற்றுவித்தலும், தலைமகன் வந்தமை தலைமகட்குணர்த்தலுமாகிய இரண்டும் தேற்றி யாற்றுவித்தற்குரியன. பாங்கி வந்தோன்றன்னொடு நொந்து வினுதல் முதலிய மூன்றும் வந்துழிநொந்துரைத்தற் குரியன வெனக்கொள்க. (உசுஉ)

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்.

அதாவது—வரைவையிடையே வைத்து வரைதற்குவேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல்.

தலைவன் வரைதற்பொருள் காரணமாகப் பிரிந்தானெனின், பொருளிலனும், ஆகவே பொருவிறந்தானென்பதனோடு மாறுகொள்ளுமே யெனின், கொள்ளாது; பழங்கிடையாய்க் கிடக்குஞ் செம்பொருள் பலவுளவேனும் அதனை யெடுத்து நுகர்வோன் சிறியனாதலானும், ஆள்வினையுடைய னல்லனெனப்படுதலானும், இவன் தன்னூக்கத்தாலீட்டிய பொருளைப் பல்லாற்றானுநுகர்த லுத்தமவிலக்கணமெனக்கருதிப் பொருள்வயிற் பிரிந்தானென்றுணர்க. "பிரிவறிவுறுத்தல் பிரிவுடன்படாமை, பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல், பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை, வருவழிக் கலங்கல்வந்துழிமகிழ்ச்சியென், றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே, வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவே" என்னுஞ் சூத்திரவிதிபால் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் ஒன்பது வகைப்படும். அவற்றுள்.

என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்.

இதுவெளிப்படை.

இடைநிலையாம்பொருளுண்டேன்முதனிலையெய்தறமுங்
கடைநிலையாமின்பமுமேவுமென்றனர்காதலரென்
றடைநிலைபாம்பதத்தெம்மான் றிருவெங்கையாயிழைக்குத்
தொடைநிலைவார்குழற்பூங்கொடியேசென்றுசொல்லுகவே.

ப-ரை. தொடைநிலை - பூமாலை நிலைபெற்ற, வார்குழல்-நீண்ட கூந்தலையுடைய, பூங்கொடியே - பூங்கொடி போல்வாளே, இடைநிலையாம் பொருள் உண்டேல் - இடைநிலையாகிய பொருளுண்டாயின், முதனிலை யெய்து அறமும்-முதனிலையாகப் பொருந்திய அறமும், கடைநிலையாம் இன்பமும் - கடைநிலையாகிய இன்பமும், மேவும் - உண்டாகும், என்றனர் காதலர் என்று - என்று சொல்லினர் காதலர் என்று, அடைநிலை யாம் - (எல்லாப் பொருள்களுஞ்சென்று) அடைதற்குரிய நிலையாகிய, பதத்து - திருவடியையுடைய, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, ஆயிழைக்கு - தலைவிக்கு, சென்று சொல்லுக-போய்ச்சொல்லுக. எ - று.

க-ரை. தொடைநிலைவார் குழற்பூங்கொடியே! பொருளுண்டாயின் அறம் இன்பம் என்பவற்றை யெய்தலாமென்று காதலர் சொன்னாரென்று நுந்தலைவிக்குணர்த்துக வென்பதாம்.

வி-ரை. "வீடுவிலாவையத்து மன்னிய மூன்றனுள், நடுவணதெய்த விருதலையுமெய்தும்" "முனிவருமன்னரு முன்னுவ பொன்னோன் முடியும்" என்ற மேலோர் செய்யுட்கருத்திப்பாட்டின்கண் ணடங்கி யிருக்குமாறுணர்க. பூங்கொடி உவமையாகுபெயர். ஆயிழை அன்மொழித்தொகை. (உசுக)

நின்பொருட்பிரிவுரை நீயவட்கென்றல்.

அதாவது—இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, நின்பொருட் பிரிவை நீயே சென்று சொல்லுகவெனக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

என்னோடுசொல்லுகசெல்லாமையுண்டெனினீரமதி
தன்னோடுமல்குசடையாளர்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
பொன்னோடுசொல்லுகநீநின்செலவைப்பொருணினைந்து
முன்னோடுபின்னுமிழப்பான்கருதியமுன்னவனே.

ப-ரை. பொருள் நினைந்து-பொருளீட்டக்கருதி, முன்னோடு பின்னும்-முன்னுடனே பின்னையும், இழப்பான் கருதிய-இழக்கவெண்ணிய, முன்னவனே—, செல்லாமை உண்டு எனின்-செல்லாமையுண்டாயின், என்னோடு சொல்லுக - என்னுடன் சொல்லுக, நீ—, நின்செலவை - நின்போக்கினை, ஈரமதிதன்னோடு மல்கு-குளிர்ச்சியையுடைய சந்திரகண்டத்தோடு நிறைந்து விளங்குகிற, சடையாளர் - சடையாளராகிய சிவபிரானாரது, வெங்கைத்தடம் சிலம்பில் - திரு

வெங்கைப் பெரிய மலையிலுள்ள, பொன்னோடு சொல்லுக-பொன்னுடனே சொல்லுக, எ - று.

க - ரை. பொருள்ணினைந்து முன்னோடு பின்னுமிழப்பான் கருதிய முன்னவனே! நீ செல்லாமைச் செய்தியுண்டாயின் எனக்குச் சொல்லுக, செல்லற் செய்தியை ஈரமதி தன்னோடு மல்குசடையாளர் வெங்கைத் தடஞ்சிலம்பிற் பொன்னோடு சொல்லுக என்பதாம்.

வி-ரை. "செல்லாமையுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை" என்னுந் திருக்குறட் கருத்திச்செய்யுட் கண்ணமைந்திருத்தல் காண்க. முன் - அறம். பின் - இன்பம். பொன் - ஆகுபெயர். இழப்பான் - இழக்க; செயவெனெச்சம். முன்னவன் - தலைவன். (உசுச)

நீடேனென்றவனீங்கல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவன் அவளை நோக்கி, நான்சென்று காலநீட்டித்திராது விரைந்து வருவலெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மாணிக்கவாசகன்செந்தமிழ்மாலைமணக்குமுடி
வேணிக்கடவுளிடமாகியதிருவெங்கையன்னா
யாணிக்கனகமனையாள்செயலிங்கறிந்துசெல்வேன்
பாணிக்குமாறிருந்தாலென்னைப்போலிலைப்பாவிகளே.

ப - ரை. மாணிக்கவாசகன் - மாணிக்கவாசகனது, செந்தமிழ் மாலை - செந்தமிழ் மாலையானது, மணக்கும் - மணக்கின்ற, முடி வேணிக்கடவுள் - முடிவேணிக் கடவுளாகிய சிவபிரானது, திரு இடம்ஆகிய—, வெங்கை அன்னாய் - திருவெங்கைப் பதியை நிகர்த்தவளே, ஆணிக்கனகம் அனையாள் - ஆணிப்பொன்னை நிகர்ப்பவளாகிய தலைவியின், செயல் - செய்கையை, இங்கு அறிந்து செல்வேன் - இவ்விடத்தறிந்து போகின்றநான், பாணிக்குமாறு இருந்தால் - காலநீட்டிக்குமா றிருப்பேனாயின், என்னைப்போல் பாவிகள் இல்லை—, எ - று.

க - ரை. மாணிக்கவாசகன் செந்தமிழ் மாலைமணக்கு முடிவேணிக் கடவுளிடமாகிய திருவெங்கையன்னாய்! ஆணிப்பொன்போல்பவளாகிய தலைவியின் செயலையறிந்து செல்வேனாகியநான், காலநீட்டிப்பேனாயின், என்னைப்போலப் பாவிகளில்லையென்பதாம்.

வி - ரை. மாணிக்கவாசகன் - திருவாதவூரடிகள். மணத்தல்-பரிமளித்தல். முடிவேணி - திருமுடிச்சடை. இடம் - திருப்பதி.

ஆணிக்கனகம் - உரையாணிக் கிளைக்காத பொன். பாணித்தல்-தாழ்த்தல் (தாமதித்தல்.) (உ௬௫)

பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல்.

அதாவது—பாங்கியானவள், தலைவிக்குத் தலைவனது செலவை யுணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இருளாலயமன்னவார்குழலாய்நம்மிறைவரின்று
வெருளாலமுண்டதிருவெங்கைவாணர்தம்மெல்லடியை
யருளாலலதெய்தலாகாதவாறெனவானைமிசைப்
பொருளாலலதுனையெய்தவொண்ணாதென்றுபோயினரே.

ப - ரை. இருள்ஆலயம் அன்னவார்குழலாய் - இருளுக்கிருப்பிடம்போன்ற நீள்குழலாய், நம் இறைவர் - நமது தலைவர், வெருள்-யாவரும் அஞ்சுதற்குரிய, ஆலம்உண்ட - நஞ்சையுண்ட, திருவெங்கைவாணர் - திருவெங்கை வாணரது. மெல்அடியை - மென்மையாகிய திருவடியை, அருளால் அலது - அவரது திருவருளானே யன்றி, எய்தல் ஆகாத ஆறுஎன - அடையவாகாதவாறு போல, ஆனைமிசை - யானையின்மீதேற்றிக்கொணரும், பொருளால் அலது-பொருளாலேயன்றி, உன்னை—, எய்தவொண்ணாதென்ற-அடையவொண்ணாதென்றுசொல்லி, இன்றுபோயினர் - இன்று சென்றனர், எ - று.

க - ரை. இருளாலய மன்னவார்குழலாய்! நமது தலைவர், நஞ்சுணியாகிய திருவெங்கை வாணரது திருவடியை அவரது திருவருளாலேயன்றி யடையவாகாமைபோல, யானைச்சுமையாகிய பொன்னுனேயன்றி உன்னையடைய வொண்ணாதென்று சொல்லிப்போயினர் என்பதாம்.

வி - ரை. "இருட்டிற் புரிகுழல்" "நத்தங் கும்பிட்டகுழல்" என்றற்றொடக்கத்தான்றோர் செய்யுட்கிணங்க, இவரும், 'இருளாலய மன்னவார்குழலாய்' என்றார். தம்-சாரியை. ஆனைமிசைப்பொருள்-யானைச்சுமையாக்கிக் கொணரும்பொன். போயினர் - பொருளீட்டப் போயினர். (உ௬௬)

தலைவியிரங்கல்.

அதாவது—பாங்கியிவ்வாறு கூறக்கேட்ட தலைவியிரங்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொழியுமருளுடையார்வெங்கைவாணர்பொருப்பருவி
விழியுமெலிவும்பசப்பூர்முலையுமவ்வின் மதனு
லழியுமனமுநினைந்திலராயினுமாவொருபெண்
பழியுநினைந்திலரேபொருண்மேற்சென்றபாதகரே.

ப - ரை. பொழியும் அருள் உடையார் - பொழியாநின்ற, அருண்மழையையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர் (அவரது) பொருப்பு - மலையில், பொருள்மேல் சென்ற பாதகர் - பொருளீட்டத்தின்மேற் சென்றபாதகர், அருவிவிழியும் - அருவியாறுபோல நீரைச் சொரிகிற என் கண்களையும், மெலிவும் - இளைப்பினையும் பசப்பு ஊர் முலையும் - பசலைபரந்த கொங்கைகளையும், அ - அந்த, வில் - கருப்புவில்லையுடைய, மதனல்-மன்மதனல், அழியும் - அழியாநின்ற, மனமும் - மனத்தினையும், நினைந்திலராயினும் - நினையாரேயாயினும், ஆ - ஐயோ, ஒரு பெண்பழியும் நினைந்திலரே - பெண்பழியையாயினும் நினைந்தாரில்லையே, எ - று.

க - ரை. சிவபெருமானாது திருவெங்கையில் பொருள்மேற் சென்ற பாதகராகிய நந்தலைவர், என் அருவிவிழி முதலாயினவற்றை நினைந்திலரேனும், அந்தோ, ஒரு பெண்பழியையாயினும் நினைந்திதாரிலையே யென்பதாம்.

வி - ரை. இழிதல் - இறங்குதல் (உமிழ்தல்). பாதகர் - பாவத்தையுடையவர். ஏ - இரங்கல். பழியும் என்னு மும்மை இறந்தது தழீஇயது. பொருண்மேல் - பொருளீட்டத்தின்மேல். அறிந்திலராயினும் என்றும் பாடம். ஈற்றேகாரம் அசை. (உசுஎ)

தலைவியைப்பாங்கிகொடுஞ்சொற் சொல்லல்.

அதாவது—பாங்கி தலைவியை நோக்கி, நீயிவ்வாறிரங்குதல் தகாதெனக் கழறி யுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அரியாரறிதற்கரியார்திருவெங்கையாயிழையாய்
பிரியார்பிரியப்பட்டாரிலையோநின்பெருமணக்குக்
கரியார்பொருடரச்சென்றூர்பொருட்டுக்கயன்மருட்டும்
வரியார்கண்ணீர்யில்கலென்னைகொலோநின்றுமாழ்குவதே.

ப - ரை. அரியார் - திருமாலாரும், அறிதற்கு அரியார் - அறிதற்கரியவராகிய சிவபெருமானாது, திருவெங்கை - திருவெங்கைப் பதியில் வாழ்கின்ற, ஆயிழையாய் - பெண்ணே, பிரியார் - பிரியாதவரும், பிரியப்பட்டார் - பிரியப்பட்டவரும், இல்லையோ—, நின் -

உணத்து, பெருமணக்கு - பெரிதாகிய மணத்திற்கு, கரி ஆர்பொருள் தர-யானைச் சுமையாகிய பொன்னைக்கொணரும் பொருட்டு, சென்றார்பொருட்டு - சென்றவராகிய தலைவர்பொருட்டு, கயல்மருட்டும்-கயல்மீனை மருட்டுகிற, வரிஆர் - செவ்வரிநிறைந்த, கண் - கண்களில், நீர்மல்கல் - நீர் நிறைத்தல், என்னைகொலோ - என்னையோ, நின்று மாழ்குவதே - நின்று மயங்காநிற்ப தென்னையோ. எ-று.

க - ரை. திருமாலாரும் அறிதற்கரியவராகிய சிவபெருமானாரது திருவெங்கைப் பதியில் வாழ்கின்றமாதே ! இவ்வுலகத்தில் பிரியாதவரும் பிரியப்பட்டவரும் இல்லையோ, உன் பெருமணத்திற்குப் பெரும்பொருள் கொணர்தற் பொருட்டுச் சென்றவராகிய காதலர் பொருட்டு, நீ கண்ணீர்மல்குவித்தலும் மாழ்குதலும் என்னையோ வென்பதாம்.

வி - ரை. அரியார் என்பதனீற்றிலுயர்வு சிறப்பும்மைதொக்கது. ஆயிழை - அன்மொழித்தொகை. மணத்துக்கு எனற்பாலது அத்துச்சாரியை குன்றந்து மணக்கு எனநின்றது. கரி - வடசொல்; (யானை) காத்தை யுடையதென்பது பொருள். காம் - கை. (துதிக்கை) கயல் - மீன்விசேடம். மாழ்கல் - மயங்கல். பிரியார் பிரியப்பட்டார் என்பதற்குப் பிரியாத் தலைவர் பிரியப் பெற்றவள் என்றுரைத்தலுமாம். (உகுஅ)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கொடுஞ்சொற் சொல்லவும், தலைவிமனநொந்து பாங்கியைக் கொடுஞ்சொற் சொல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நீடறிவாய்நின்றவெம்மான் திருவெங்கைநேரிழையாய்
பீடறிவாய்நம்முயிரனையார்தம்பெரும்பணைநீர்
நாடறிவாய்பொருணச்சியிப்போதுநடந்தகொடுங்
காடறிவாய்துணிந்தாயுனைப்போலிலைக்கன்னெஞ்சரே.

ப - ரை. நீடு அறிவாய் நின்ற - பேரறிவுருவமாய் நின்ற, எம்மான்-எம்பெருமானது, திருவெங்கை-திருவெங்கைப்பதியில் வாழ்கின்ற, நேரிழையாய் - மாதே, நம்உயிர் அனையார்-நம்முயிர்போல்வாராகிய தலைவரது, பீடுஅறிவாய் - பெருமையை யறிவாய், பெரும்பணை - பெருவயல்கள் சூழ்ந்த, நீர் - நீர்வளமிக்க, நாடு அறிவாய் - நாட்டினை யறிவாய், இப்போது-இப்பொழுது, பொருள்நச்சி நடந்த - பொருளை விரும்பிச்சென்ற, கொடுங்காடு அறிவாய் - கொடுமையா

கிய காட்டினையுமறிவாய், (அங்஄னமாகவும்) துணிந்தாய் - (அவர் செல்லத்) துணிந்தனை, (ஆதலால் இவ்வுலகில்) உன்னைப்போல் கல் நெஞ்சர் இல்லை - உன்னைப்போலக் கன்மனத்தையுடையவர் இல்லை, எ - று.

க - ரை. பேரறிவுருவாய் நின்ற சிவபெருமானது திருவெங் கைப்பதியில் வாழ்கின்ற மாதே ! நம்முயிர்போல்வாராகிய தலைவரது பெருமை முதலியவற்றை நீயறிந்துவைத்தும் அவர் நம்மைப் பிரிந்து செல்லவுடன்பட்டுத் துணிந்தனை யாதலால் இவ்வுலகில் உன்போ லக் கன்னெஞ்சர் இல்லை யென்பதாம்.

வி - ரை. இறைவற்கு ஞானமே யுருவாதலால், நீடறிவாய் நின்ற வெம்மான், என்றார். நேரிழை - அன்மொழித்தொகை. தம் - சாரியை. நீர்நாடு - நீர்வளமிருந்த தேசம். நாடு ஊர் எனினுமாம். நச் சல் - விரும்பல். கொடுங்காடு - சிங்கம்யானை புலி முதலிய விலங்கு கள் சஞ்சரிக்கிற காடு. (உசுகூ)

வருதுவர்மீண்டெனப்பாங்கிவலித்தல்.

அதாவது—தலைவி யிவ்வாறு கொடுஞ்சொற் சொல்லக்கேட்ட பாங்கி தலைவியை நோக்கி, தலைவர் மீண்டு வருவரென வலியுறுத் திக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

வலையிற்படுகலைகண்டிளமான்பிணைமாழ்கிநிற்கு
நிலையிற்படர்வனஞ்சென்றநங்காதலர்நெஞ்சுருகிக்
கொலையிற்படுமழுவார்வெங்கைமாதுன்குளிர்தரள
மலையிற்படர்தனம்பீர்மீளமீண்டுவருகுவரே.

ப - ரை. கொலையில் படும் - கொலைத் தொழிலிற்பட்ட, மழு வார் - மழுவையுடையவராகிய சிவபிரானது, வெங்கை - திருவெங் கைப்பதியிலுள்ள, மாது - பெண்ணே, வலையில் படு - வலையிலகப் பட்ட, கலைகண்டு - கலையைப்பார்த்து, இளமான்பிணை - இளமை பொருந்திய பிணைமான், மாழ்கிநிற்கும் - மயங்கி நிற்கின்ற, நிலை யின் - நிலையினையுடைய, படர்வனம் சென்ற - பரந்த காட்டிடைச் சென்ற, நம்காதலர் - நமதன்பர், நெஞ்சு உருகி-மனமுருகி, உன் - உனது, குளிர் - குளிர்ந்த, தரளம் - முத்துவடமணிந்து, மலையின் - மலைபோல, படர்தனம் - பரந்ததனம், பீர்மீள-பீர்மீளும்படி, மீண்டு வருகுவர் - திரும்பி வருவார், எ - று.

க - ரை. கொலையிற் படுமழுவார் வெங்கைமாதே! வலையிலகப்பட்ட கலையை இளம்பிணைமான் கண்டு மாழ்கிநிற்கும் பெருஞ்சுரத்திற் சென்ற நம்மன்பர், உன் குளிர்ந்த முத்துவடமணிந்த மலைபோலும் தனங்களின்மீதுள்ள பீர்மீளத்திரும்பி வருவர் என்பதாம்.

வி - ரை. வலை - கண்ணி. படுதல் - அகப்படுதல். (சிக்குதல்) கலை - ஆண்மான். பிணை - பெண்மான். மான்பிணை - இருபெயரொட்டு. மாழ்கல் - மயங்கல்; வருந்தல் எனினுமாம். படர்வனம் - பெருங்காடு; வனம் இங்குச் சுரத்தைக் குறித்தது. கொலையில்படும் என்றது கொலைத்தொழிலமைந்த என்றபடி. மாது - அண்மைவிளி. தரளமலையின் - முத்துமலைபோல என்றுரைத்தலுமொன்று. பீர் - பசலை. பசலைமீள நங்காதலர் மீள்வர் என்றவாறு. இவர் நெஞ்சுருகி மீடற்குக் காரணம் 'வலையிற் படுகலை கண்டிளமான்பிணை மாழ்கிநிற்றல்'. ஆயின் இவர் வினை முடித்தன்றோ மீள்வரெனின், நம்மிடத்துக் காதலராதலானும், இளமான்பிணை மாழ்கிநிற்றல் கண்டனராதலானும் வினைமுடித்து விரைந்துமீள்வர் என்க. வலையிற்படு கலைகண்டிள மான்பிணை மாழ்கிநிற்றலைப் பாங்கி கண்டதெவ்வாறெனின், தலைவன் செல்லுங் காற்சுரத்தின் றன்மையிற்றெனக்கூறக் கேட்டறிந்திருந்தாளாதலி னிங்ஙனங் கூறினளெனக்கொள்க. (உ௭0)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

அதாவது—தலைவன் பிரியுங்கால், கார்ப்பருவத்திற்கு முன்னே வருகுவனெனக் குறிப்பாற் கூறிப்போயிதுகாறும் வாராமையானும் கார்ப்பருவந் தோன்றினமையானும் தலைவிபுலம்பிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பூட்டாதவில்வளைத்தார்த்தாங்கிடித்துப்புயலெழுந்து
தீட்டாதவம்புபொழியுமிக்காலந்தெரிந்திலரோ
காட்டாதநன்னிலையார்வெங்கைவாணர்கனகவெற்பி
லீட்டாதபொன்னனையாயகன்றார்பொருளீட்டுதற்கே.

ப - ரை. காட்டாத - ஒருவரானுங் காட்டவொண்ணாத, நல்நிலையார் - நல்லநிலையையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர். (அவரது) கனகவெற்பில் - பொன்மலையிலுள்ள, ஈட்டாத - ஈட்டவொண்ணாத, பொன் அனையாய் - பொன்னை நிகர்த்தவளே, பொருள் ஈட்டுதற்கு அகன்றார் - பொருளீட்டச் சென்றநங்காதலர், புயல் எழுந்து - மேகங்களெழுந்து, பூட்டாதவில்வளைத்து - நாண் பூட்டாத வில்லைவளைத்து, ஆர்த்து - முழங்கி, ஆங்கு - அவ்விண்

ணில், இடித்து - இடியிடித்து, தீட்டாதஅம்புபொழியும் - தீட்டாத கணைகளைச்சொரிகிற, இக்காலம் - இந்தக் காலத்தை, தெரிந்திலரோ - அறிந்திலரோ, எ - று.

க - ரை. ஒருவராலு முணர்த்தப்படாத நன்னிலையையுடைய வராகிய திருவெங்கைவாணரது பொன்மலையில் வாழ்கின்ற ஈட்டப் படாத பொன்னை நிகர்த்தவளே! பொருடேடச்சென்ற நங்காதலர் விண்ணில் புயல்களெழுந்து பூட்டாத வில் வளைத்து, ஆர்த்து, இடித்து, தீட்டாத கணைகளைச்சொரிகின்ற இக்காலத்தை யறிந்திலரோ வென்பதாம்.

வி-ரை. பூட்டாதவில் - வானவில். ஆர்த்தல் - ஆரவாரித்தல். தீட்டாதஅம்பு - நீர். இக்காலமென்றது இந்தக்கார்காலத்தையென் றபடி. தெரிந்திலரோ என்பதில் ஓகாரம் ஐயம்; வினாவெனினுமாம். காட்டாதநன்னிலை - இறைவரது தத்துவாதீத நிலை. வெற்பு-மலை. ஈட்டல் - சம்பாதித்தல். அகன்றார் என்பதில் பகுதி-அகல். ஏற்றே காரம் இரங்கல். (உஎக)

இருளைவம்பென்றல்.

அதாவது—தலைவி யிவ்வாறு புலம்பக்கண்டபாங்கி, தலைவியை நோக்கி, இது உண்மையான கார்காலமன்று, காலமல்லாத காலத் துப் புதுமையாய்த் தோன்றியவம்பு; நீகவலற்கவெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வெயிலேயெனமணிகண்டிதழ்கூப்பிவிரைக்குவளை
துயிலேபுரியுஞ்சுனைவெங்கைவாணர்சுடர்க்கிரியின்
மயிலேயுளங்கவலேலிதுதான்மழைவம்பொடுங்கிக்
குயிலேமருபருவத்தாற்பொழிதருங்கொண்டலன்றே.

ப - ரை. மணிகண்டு - மாணிக்கத்தைக்கண்டு, வெயிலேஎன - இது சூரியனே யென்றெண்ணி, விரைகுவளை - மணமுள்ள குவளை மலர்கள், இதழ்கூப்பி - இதழ்குவித்து, துயிலேபுரியும் - துயிலையே செய்கிற, சுனை - சுனைகளையுடைய, வெங்கை - திருவெங்கைப் பதியில், வாணர் - வாழ்கின்றவராகிய சிவபெருமானாரது, சுடர் கிரியில் - ஒளிபொருந்திய மலையில் வாழ்கின்ற, மயிலே - மயில் போல்வாளே, உள்ளம் கவலேல் - மனங்கவலற்க, மழைவம்பு இது தான் - மழை வம்பென்று சொல்லப்படுவது இதுவேயாம், குயில் - குயில்கள், ஒடுங்கி ஏமரு - ஒடுங்கியேமாநின்ற, பருவத்தால் - பரு வத்தில், பொழிதரும் - மழை பொழிகின்ற, கொண்டல் அன்று - மேகமன்று, எ - று.

க - ரை. வெயிலேயென மணிகண்டிதழ் கூம்பிவிரைக்குவளை துயிலே புரியுஞ்சுனை வெங்கைவாணர் சுடர்க்கிரியின்மயிலே! மனங் கவலற்க, இது மழைபோலத் தோன்றுவதோர் வம்பு, குயில்கள் கூவாது வாயடங்கியேமருகின்ற கார்காலத்துப் பொழியு மேகமன் றென்பதாம்.

வி-ரை. வெயிலே யென்னுமேகாரம் தேற்றம்; துணிவெனினு மாம். மணி நவமணியையு முணர்த்து மேனும் விரைக்குவளை யிதழ் கூப்பித் துயில் புரிதற் காரணமாதல் பற்றி மாணிக்கமென்றுரைக்க லாயிற்று. இது வெயில் விரித்தலாற்குவளை துயில்புரிவதாயிற்றெ ன்க. மயில் உவமையாகுபெயர். கவலல் - கலங்கல். வம்பு - காலமல் லாத காலத்துத் தோன்றுவது. எமரல்-கலங்கல். பருவத்தால்-உருபு மயக்கம். கொண்டல் - மேகம். (உஎஉ)

இறைமகள்மறுத்தல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவியானவள் அவள் வம்பெனக் கூறியதை மறுத்து, உண்மையாகிய கார்காலமே யென்றும் அதற்குக் குறியா யின்னின்ன பொருள்கள் தோன்றி யிருத்தலைப் பாரென்றுங் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொங்கைப்பசப்பெனக்கொன்றைகள்பூத்தகுருகொழிந்த
வங்கைத்தலமெனத்தோன்றியுந்தோன்றினவன்னவயல்
வெங்கைப்பதியிற்பழமலைநாதர்மிடறெனவே
மங்கைப்பருவத்தணங்கேமுகிலெழும்வம்பலவே.

ப - ரை. மங்கைப் பருவத்து - மங்கைப் பருவத்தையுடைய, அணங்கே - பெண்ணே, கொன்றைகள் - கொன்றைமரங்கள், கொ ங்கை பசப்பு என - கொங்கைப்பீர்போல, பூத்த - மலர்கள் மலர்ந் தன, குருகு ஒழிந்த - பறவைக ளொழிந்தன, தோன்றியும் - செங் காந்தண் மலர்களும், அங்கைத்தலம் என தோன்றின - அங்கை போலத் தோன்றின, அன்னம் - அன்னப்பறவைகள் வாழ்கின்ற, வயல் - வயல் சூழ்ந்த, வெங்கைப் பதியில் - திருவெங்கைப்பதியி லுள்ள, பழமலை நாதர் - பழமலைநாதரது, மிடறு எனவே, கண்டம் போலவே, முகில் எழும் - மேகங்கள் எழாநின்றன, (ஆதலால்) வம்பு அல்ல - இது வம்பன்று, எ - று.

க - ரை. மங்கைப் பருவப் பெண்ணே! கொன்றைகள் கொங் கைப் பசப்பெனப் பூத்தன. குருகுகளொழிந்தன. அங்கைத்தலம்

போலத் தோன்றிகளும்பூத்தன. திருவெங்கைவாணர் மிடறுபோல மேகங்களெழாநின்றன, ஆதலால் இது வம்பன்று என்பதாம்.

வி-ரை. கொங்கை - தனம். பசப்பு - பசலை (பீர்). குருகு - பறவை. அங்கை - அகங்கை (உள்ளங்கை); அழகிய கையெனலுமொன்று.' தோன்றி - செங்காந்தள். அன்னவயல் என்றமையால் நீர்வளம் விளங்கிற்று. மிடறு - கண்டம் (கழுத்து). அணங்கு-அழகின் மிக்கவள் எனினுமாம். முகில் - மேகம். எழுதல் - தோன்றுதல். வம்பு - காலமல்லாக் காலத்துத் தோன்றுவது; புதுமையுமாம். ஈற்றேகாரம் அசை. (உஎகூ)

அவர் தூதாகி வந்தடைந்த திப்பொழுதெனத்துணைவி சாற்றல்.

அதாவது—தலைவி, கார்காலம் வந்ததென்று கூறக்கேட்ட பாங்கியானவள், தலைவன் தான் வருகிற செய்தியை யறிவிக்க விடுப்ப, இப்பொழுது இக்கார் அவரது தூதாகி வந்தடைந்ததெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இணர்வார்சடைமுடியார்வெங்கைவாணரிமயவெற்பிற்
புணர்வார்முலையிளமென்கொடியேநம்புலம்புறுநோ
யுணர்வார்பொருளொடும்வந்தாரென்றோகையுரைத்துமுகில்
வணர்வார்குழலெழில்வாங்குதல்வேண்டிமுன்வந்ததுவே.

ப-ரை. இணர்-பூங்கொத்துக்களணிந்த,வார்-நீண்ட,சடைமுடியார்-சடைமுடியையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கைவாணர்.(அவரது) இமயவெற்பில்-இமயமலையிலுள்ள, புணர்-நெருங்கின, வார் - கச்சணிந்த, முலை - தனங்களையுடைய, இளமென்கொடியே - இளமையாகிய மெல்லிய கொடிபோல்வாளே, முகில் - மேகமானது, நம் - நமது, புலம்பு உறும் - துன்பமிகுதற் கேதுவாகிய, நோய்-காமநோயை, உணர்வார்-அறிவோராகிய நந்தலைவரானவர், பொருளொடும் - பொருளுடனே, வந்தார் என்று - வந்தனரென்று, ஓகை உரைத்து - சந்தோஷ சமாசாரத்தைச்சொல்லி, வணர்வார்குழல் - வளைவும் நீட்சியுமுள்ள கூந்தலின், எழில்-அழகினை, வாங்குதல் வேண்டி-பெறல்விரும்பி, முன் - அவர் வருதற்கு முன்பே, வந்தது - வந்துவிட்டது, எ - று.

க-ரை. இணர்வார் சடைமுடியார் வெங்கைவாணரிமயவெற்பில் புணர்வார் முலையிளமென்கொடியே! மேகமானது, நமது துன்பத்துக்கேதுவாகிய காமநோயை யறிபவராகிய நமது தலைவரது

னாதாகி, அவர் பொருளோடு வந்தாரென வுவகைச்சொற்கூறி, உன் கூந்தலழகைப்பெறவேண்டி, அவர் வருதற்கு முன்பே வந்துவிட்ட தென்பதாம்.

வி - ரை. இணர்-பூங்கொத்து. வெங்கைவாண ரென்றதனால், அவர்க்கேற்ப கொன்றைப்பூங்கொத்து, ஆத்திப்பூங்கொத்து, எருக் கம்பூங்கொத்து முதலியவை யெனக்கொள்க. சடைமுடியார்-சடை யோடு கூடிய திருமுடியையுடையவர். புணர்தல்-நெருங்குதல். இள மென்கொடி - அன்மொழித்தொகை. புலம்பு - துன்பம். நோய்-காம நோய். உவகை ஓகையென மரீஇயது. ஓகை - சந்தோஷசமாசாரம். வணர் - நெரிவுமாம். குழல்-ஆகுபெயர். வாங்குதல் - பெறுதல். ஏ - அசை. துணிவுபற்றி வந்தார் என்றுரைக்கப்பட்டது. (உஎச)

தலைமகளாற்றல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைமகள் தலைமக னது வருகை நோக்கி யாற்றியிருத்தலைக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொருநாண்மதனையழித்தேயிமயப்பொருப்பின்மணத்
திருநாளதிற்றரும்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பிற்
கருநாண்மலர்விழிமாதேயென்றாயினுங்காதலரீங்
கொருநாள்வருவரென்றேநின்றதாவியுடலகத்தே.

ப - ரை. பொரும்நாள் - சண்டைசெய்த நாளில், மதனை அழி த்து-மன்மதனை யழித்து, இமயப்பொருப்பில்-இமயமலையில், மணத் திருநாளதில் - மணத்திருநாளில், தரும் - அவனை யுயிர்ப்பித்துதந்த, வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க்கதிபராகிய சிவபிரானுரது, செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையில் வாழ்கின்ற, கரு - கரு மையாகிய, நாள்மலர் - நாள்மலர்போன்ற, விழி - கண்களையுடைய, மாதே - பெண்ணே, என்று ஆயினும்-என்றைக்காயினும், காதலர் - நம் அன்பர், ஈங்கு - இவ்விடத்திற்கு, ஒருநாள் வருவர் என்றே-ஒரு நாள் வருவரென்றெண்ணியே, ஆவி - என்னுயிரானது, உடலகத்தே நின்றது - என் உடம்பின் கண்ணே நின்றது, எ - று.

க - ரை. பொருநாண்மதனை யழித்தே யிமயப்பொருப்பின் மண த்திருநாளதிற் றரும் வெங்கைபுரேசர் செழுஞ்சிலம்பிற் கருநாண் மலர் விழிமாதே! நமதன்பர் என்றாயினு மொருநாளிங்கு வருவா ரென்றெண்ணியே, என்னுயிரானது என்னுடம்பில் தங்கியிருந்தது என்பதாம்.

வி - ரை. பொருதல் - போர்செய்தல். பொருநாள் என்றது இறைவர் யோகுசெய்திருந்தநாளை. அழித்தல் - நீறுபடுத்தல். மணத்திருநாள் - திருக்கலியாணநாள். நாளதில் என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. தருதல்-படைத்தல். சிலம்பு-மலை. நாள்-புதுமை. விழிக்குவளைமையாகப் புணர்க்கப்படுதலால் மலர் என்ற நீண்டுக்கருங்குவளை மலரைக்குறித்தது. ஆவி - உயிர். உடலகத்து - உடம்பினுள்ளே. ஏ - அசை. (உஎ௫)

அவனவட்புலம்பல்.

அதாவது—பொருளீட்டச்சென்ற தலைமகன், தன் கருமமுற்றிய பின்னே, அவ்விடத்துத் தலைவியை நினைந்து புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஓடுந்தடங்கண்மணற்கேணியாகவவ்வூற்றிறைக்கு
நீடும்புளினமுலையாக்குறைவுநிறைவுமின்றிச்
சூடும்பிறையர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுஞ்சுரும்பலர்மொய்குழறேம்பிப்பதைத்திடுமே.

ப - ரை. குறைவும் - குறைதலும், நிறைவும் - நிறைதலும், இன்றி - இல்லையாக, சூடும்பிறையர் - பிறையையணிந்தவர், திருவெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) சுடர்கிரிமேல் - ஒளியுள்ள மலைமீது வாழ்கின்ற, சுரும்புபாடும் - வண்டுகள் பாடுதற் கிடமாகிய, அலர்-மலரை யணிந்த, மொய்குழல்-நெருங்கின கூந்தலையுடையவளாகிய தலைவி, ஓடும் - ஓடுகின்ற, தடம்கண் - பெருங்கண்கள், மணல்கேணி ஆக - மணற்கிணறாகவும், முலை-தனங்கள், அ ஊற்றிறைக்கும் - அந்த ஊற்றை யிறைத்தற்குரிய, நீடும்புளினம்ஆ-நெடிய புளினங்களாகவுங்கொண்டு, தேம்பி பதைத்திடும்-தேம்பிப்பதைப்பாள், எ - று.

க - ரை. குறைவு நிறைவுமின்றிச் சூடும்பிறையர் திருவெங்கைவாணர் சுடர்க்கிரிமேற் பாடுஞ் சுரும்பலர் மொய்குழலானவள், ஓடுந் தடங்கண்கள் மணற்கேணியாகவும், தனங்கள் அவ்வூற்றிறைக்கு நீடும் புளினமாகவுங்கொண்டு, தேம்பிப்பதைத்திடுவாள் என்பதாம்.

வி - ரை. ஓடுதல் - காதளவோடுதல். "காதளவோடிய கலகப் பாதகக் கண்ணியர்" என்றார் மேலோரும். தடங்கண்-விசாலமாகிய கண் எனினுமாம். மணற்கேணி - மணற்கிணறு, ஊற்று. புளினம் - மணற்றிடர். பிறை - ஒருகலையாகிய திங்கள். பாடுதல் - இசைபாடுதல். அலர் - மலர். மொய்குழல் - அன்மொழித்தொகை. தேம்புதல்-வாடல்; அழுதலுமாம். பதைத்தல் - துடித்தல். (உஎ௬)

பாகனொடு சொல்லல்.

அதாவது—தலைவன் தன் கருமமுற்றி மீண்டுவரும்பொழுது பாகனை நோக்கி, நமது தேரை விரைந்து செலுத்துகவெனக் கூறு கிற்றல். அதற்குச்செய்யுள்,—

வார்கொண்டமென்முலையாளிடையேபொய்வருவலென்னுங்
கார்கொண்டவென்னிடையில்லைபொய்யென்னக்கடுக்கைநறு
தார்கொண்டசெஞ்சடையார்வெங்கைவாணர்தம்தருளாற் [ந்
றேர்கொண்டசீர்வலவாவிரைந்தேகச்செலுத்துகவே.

ப - ரை. நறு - நறுமணமுள்ள, கடுக்கை தார்கொண்ட - கொன்றைமலர்மாலையைத் தரித்த, செஞ்சடையார்-செஞ்சடையை யுடையவர், வெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவ ரது) அருளால் - கிருபையால், தேர்கொண்ட - தேரைச்செலு த்துந் தொழிலைக்கொண்ட, சீர்-சிறப்பினையுடைய, வலவா-பாகனே, வார்கொண்ட - கச்சணிந்த, மெல்முலையாள் - மெல்லிய தனங்களை யுடையவளாகிய தலைவியின், இடையே-இடையொன்றுமே, பொய் - பொய்யாகும், வருவல் என்னும் - வருவேனென்று சொல்லிய, கார் கொண்ட - காரின்றன்மையைக்கொண்ட, என்னிடை-என்னிடத் தில், பொய்இல்லையென்ன - பொய்யென்பதில்லை யென்று கண் டோர் சொல்லும்படி, விரைந்துஏக-விரைந்துசெல்லும்படி, செலு த்துக - (நமதுதேரை) செலுத்தக்கடவை, எ - று.

க - ரை. கொன்றைமலர்மாலையைத் தரித்த சிவபிரானுரது திருவெங்கைப் பதியில்வாழும் தேர்ப்பாகனே! தலைவியிடை பொய் யேயன்றி என்னிடை பொய்யில்லை யென்னும்படி நந்தேரை விரை ந்து செலுத்தக்கடவை யென்பதாம்.

வி - ரை. வார்கொண்ட மென்முலையாள் என்றது தலைவியை. இடை - மருங்குல். காரின்குணத்தைக் கார் என்றது ஆகுபெயரான். காரின்றன்மை கொடை. கடுக்கை-ஆகுபெயர். கொண்ட சீர்வலவா-சிறப்பைக்கொண்ட வலவனே, எனினுமமையும். சீர்கொண்ட வல வா, தேர்விரைந்தேகச் செலுத்துகவென்றியைத் துரைத்துக்கொள்க. செலுத்துக-வியங்கோள். (உஎஎ)

மேகத்தொடுசொல்லல்.

அதாவது—தலைவன் வினைமுற்றி மீண்டுவருங்காலத்து மே த்தை நோக்கிக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

சென்னிப்பிறையர்திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பின்
மன்னிப்படருங்கொடிபோற்றழைந்துமலர்வதன்றெங்
கன்னிப்பசுங்கொடிவாடுங்கண்டீர்மெய்கருகிநின்று
மின்னிப்பொழியிலெனையன்றுபோய்க்கருமேகங்களே.

ப - ரை. கருமேகங்களே - கருமையாகிய மேகங்களே, எம் - எம்முடைய, கன்னி - இளமையாகிய, பசுங்கொடி - பசுங்கொடியானது, சென்னி பிறையர்-சிரத்திற் பிறையைத் தரித்தவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையின்மீது, மன்னி-நிலைபெற்று, படரும் - படர்கின்ற, கொடிபோல் தழைத்து மலர்வது அன்று-கொடியை நிகர்த்துத்தழைத்து மலர்வதன்று, (ஆதலால்) என்னை அன்று போய் - என்னையன்றி நீங்கள் போய், மெய் கருகி நின்று - உங்களுடம்பு கறுத்து நின்று, மின்னி பொழியின் - மின்னி மழையைப் பொழிவீராயின், வாடும் - வாட்டமடையும், எ - று.

க - ரை. கரிய மேகங்களே! எமது கன்னிப்பசுங்கொடி, சென்னிப்பிறையர் திருவெங்கைவாணர் செழுஞ்சிலம்பில் மன்னிப்படருங் கொடிபோல்வதன்று, ஆதலால், என்னையன்றி நீங்கள் போய் மெய்கறுத்துமின்னி மழைபொழிவீராயின், அது வாடிவிடும். அங்ஙனஞ் செய்யாதொழிக வென்பதாம்.

வி - ரை. மெய்கருகி நின்று மின்னிப்பொழிதற்குரியவாதலால் கருமேகங்களே யென்றான். அன்றி யென்வினையெஞ்சிகரத்திரிபாதலால் அன்று போயென்றியல்பாயிற்று. கன்னி ஈண்டிளமை குறித்து நின்றது. திருவெங்கைவாணர் செழுஞ்சிலம்பிற் கொடி நீங்கள் மழைபொழியின் தழைத்துமலரும், எம் கன்னிப்பசுங்கொடி தழைக்காது வாடும், எனவே, நானுள்ளபோது நீங்கள் மழைபொழியின் எம் கன்னிப் பசுங்கொடி தழைத்து முகமலரும் என்றதாயிற்று. கன்னிப்பசுங்கொடி யென்பதற்கு கன்னியாகிய பசுங்கொடிபோல்வாள் என்றும், வாடும் என்பதற்கு வாடுவாள் என்று முரைத்தலுமாம். இப் பொருளில் கன்னிப் பசுங்கொடி அன்மொழித்தொகை. கண்டீர் - முன்னிலை யசையிடைச்சொல். (உஎஅ)

பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

அதாவது—பாங்கியானவள், தலைமகனது தேரிலுள்ள வலம்புரிச் சங்கினது தொனிகேட்டு, அவனது வரவைத் தலைவிக்கறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தெண்ணீர்முடியர்திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
புண்ணீர்முழுகுமிலைவேலிறைவர்பொற்றேரின்மிசைப்
பண்ணீர்மொழியணங்கேகிளர்ந்தார்க்கும்பணிலமுன்றன்
கண்ணீர்வழியடைத்தற்குரித்தாகியகல்லெனவே.

ப - ரை. பண்ணீர்மொழி அணங்கே-பண்ணின்நீர்மை யமைந்த மொழியினையுடைய மாதே, தெள் நீர் முடியர் - தெளிவாகிய நீரை யணிந்த முடியையுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) செழுஞ்சிலம்பில்-செழுமையாகிய மலையிலுள்ள, புண்ணீர் - உதிரத்தில், முழுகும் - படிகின்ற, இலை - அச்சவடிவினதாகிய, வேல் - வேற்படையையுடைய, இறைவர்-நம்மிறைவரது, பொன் - பொன்மயமாகிய, தேரின்மிசை-தேரின்மீது, பணிலம் - சங்கம், உன்றன் கண்ணீர்வழி-உன் கண்ணீர்வரும் வழியை, அடைத்தற்குரித்தாகிய-அடைத்தற்குரிய, கல்என-கல்போல, கிளர்ந்து ஆர்க்கும் - மிக்கு முழங்காநின்றது, எ - று.

க - ரை. பண்ணீர் மொழியணங்கே! நமது தலைவர் தேரில், சங்கமிக்கு முழங்காநின்றது, அம்முழக்கம் உன் கண்ணீர்வழியடைத்தற்குரிய கல்லாகுமென்பதாம்.

வி - ரை. தெண்ணீர் என்றது ஆகாயகங்கையை. முடி-சடை. புண்ணீர் - இரத்தம். (பகைவருடம் பிரத்தம்) முழுகும் என்றமையால் உதிரவெள்ளமென்பது பெறப்படும். பொற்றேர் - அழகியதேர் எனினுமாம். பண்ணீர் என்பதில் நீர்-குணம்; அது கேட்போர் செவிக்கினிமை பயக்குங் குணம். பணிலம் கிளர்ந்தார்த்தல் தலைவனது காரியமினிது முடிந்ததென்பதையுங் குறிப்பிக்கும். பணிலம்-வலம்புரிச்சங்கம்; இது ஆயிரஞ்சங்குஞ் சூழநடுநாயகமாயிருப்பதாகிய சங்கு விசேடம். கல்லென ஆர்க்கும் என்பதற்கு கல்லென் றொலிக்குமென்று முரைத்துக்கொள்க. கல் என்றது தடை. "வீழ்நாள்படாமை நன்றாற்றினஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங் கல்" என்பது திருக்குறள். கல்லெனவார்க்குமென் றியையும். ஆகியகல் என்பதில் ஆகியபெயரச்சம். ஆகிய ஆர்க்கும் என்பதில் ஆகிய வினையெச்சம்; (செய்யிய வென்னும் வினையெச்சம்). (உஎக)

வலம்புரிகிழத்திவாழ்த்தல்.

அதாவது—இவ்வாறு பாங்கி கூறக்கேட்டதலைவி, தலைவனது வலம்புரியொலி கேட்டுவந்து, அவ்வலம்புரியை வாழ்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வேயின்கவின்புரைதோளுமைபங்கர்தம்வெங்கைநகர்க்
கோயின்முனம்புகுஞ்சங்கெனவாழ்கநங்கொண்கர்சுரம்
போயின்றணைவலெனவோதியமொழிப்பொய்ம்மைபடா
வாயின்புகழ்திரண்டாலெனவார்க்கும்வலம்புரியே.

ப - ரை. நம்கொண்கர் - நமது தலைவர், சுரம்போய் - சுரத்தே சென்று, இன்று அணைவல் என ஓதிய - இன்று வருவேனென்று சொல்லிய, மொழி - சொல்லானது, பொய்ம்மைபடா-பொய்படாது, வாய் - பொருந்திய, இன்புகழ்திரண்டால் என - இனியபுகழ்திரண்டாற்போல, ஆர்க்கும் - ஒலிக்கின்ற, வலம்புரி - வலம்புரிச்சங்கமானது, வேயின்கவின்புரை - மூங்கிலின் அழகைத் தரித்த, தோள் - தோள்களையுடைய, உமைபங்கர் - உமாதேவியை யிடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானது, வெங்கைநகர் - திருவெங்கைநகரிலுள்ள, கோயில்முனம் - திருக்கோயிலுக்கெதிரில், புகும் - புக்கு முழங்குகிற, சங்குஎன - சங்கம்போல, வாழ்க - வாழ்வதாக, எ - று.

க - ரை. நமதுதலைவர், நான்சுரம் போயின்று வருவேனென்று சொன்னசொல் பொய்க்காமல் அவரதுபுகழ் திரண்டாற்போல முழங்குகிறவலம்புரியானது, உமைபங்கராகிய சிவபிரானது திருவெங்கை நகரிலுள்ள திருக்கோயிலுக்கெதிரே முழங்குகிற சங்கம்போல வாழ்வதாக வென்பதாம்.

வி - ரை. வேய் - மூங்கில். கவின் - அழகு. சுரம் - அருநெறி (பாலைவனம்). பொய்ம்மைபடுதல் - பொய்படுதல். திரண்டாலென - திரண்டாற்றாலென. ஆர்த்தல் - சத்தித்தல். கொண்கர்கரம் என்றும் பாடம். இதற்கு கொண்கர்கரம்ஆர்க்கும் வலம்புரியென்றியைத்துரைத்துக் கொள்க. (உஅ0)

தலைவன் வந்துழிப்பாங்கி நினைத்தமை வினவல்.

அதாவது—தலைவன் வந்துழிப்பாங்கி தலைவனை நோக்கி, நீயிர் எம்மைப்பிரிந்திருந்துழி, ஒரு காலெம்மை நினைந்ததுண்டோவென வினவாநிற்றல்.

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிந்தோன்,பிரிந்தமுப்பத்தைந்தாநாள் வந்தானென்று நாள்வரையறை கூறிய தென்னையெனின், "களவொழுக்கமையிருதிங்கள்" என்று வரையறை கூறினமையானும் "களவினுட்டவிர்ச்சி வரைவினீட்டம்,திங்களிரண்டினகமெனமொழிப" என்ற இறையனாரகப்பொருளுரையில், "திங்களி

ரண்டினகம்" என்பதற்குத் திங்களிரண்டின் கண்ணென்றும், ஐந்து நாள் ஆறுநாள் அவர்வரைவு முடியுமென்றும் கூறினராக லானும், "ஒருவழித்தணத்தல்" என்பதுவரைக்கும் இவ்வுரையில் பதினைந்து நாள் என்று கூறுதலானும், வரைவியல் ஆறுநாள் மணமுடிந்ததாகக் கூறுதலானும்; ஆக ஐம்பத்தாறு நாளென்று வரையறைபாய் நிற்ற லின், ஈண்டு முப்பத்தைந்தாநாள் வரையறை கூறியதெனக்கொ ள்க.

"வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோர், இருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்" என்னும் விதியான், இருதிங்கள் சென்றதெனக் கூறாது முப்பத்தைந்தாநாள் சென்றதெனக் கூறிய தெற்றுக்கெனின், இருதிங்கள் சென்றதென வருவதல்லது இதற் குள்ளே வருவதன்றென இலக்கணங்கூறிற்றிலர், இருதுவின் கண் ணுடைத்தெனக் கூறுதலான். இவ்விருதுவிடை எவ்வளவுவரை யறைப்பட்டதோ அவ்வளவே யிலக்கணமெனக் கொள்க.

அன்றி, இருதிங்கள் சென்று வந்தானெனின், களவொழுக் கம் மூன்று திங்களாம். ஆகவே, இலக்கணவழுவாய் அகப்பொருட் சிதைவாமென்க. அதற்குச் செய்யுள்,—

அம்மையிடத்தர் திருவெங்கைவாணரணிவரையெங்
கொம்மைமுலைத்தலமெல்லாம்பசலைகொளக்கொடுத்துச்
செம்மைமனத்திற்பொருள்விழைந்தார்தரச்சென்றவிடத்
தெம்மைநினைத்ததுண்டோவில்லையோசொல்லிறையவனே.

ப - ரை. இறையவனே-தலைவனே, அம்மை - லோகமாதாவா கிய வுமாதேவியாரை, இடத்தார் - இடப்பக்கத் தமைத்துக்கொண் டவர், திருவெங்கை வாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) அணிவரை - அழகியமலையிலுள்ள, எம் கொம்மை முலைத் தலம் எல்லாம் - எமது திரட்சியாகிய முலையிடமுழுதும், பசலைகொ ள்ளக்கொடுத்து-பசப்புக்கவரக்கொடுத்து, செம்மை மனத்தின்-செவ் விய மனத்தோடு, பொருள்விழைந்து ஆர்தர - பொருளை விரும்பி யீட்டிமீடற்பொருட்டு, சென்ற இடத்து - போனவிடத்தில், எம் மை - எங்களை, நினைத்தது உண்டோ இல்லையோ - நினைத்ததுண் டோ இல்லையோ, சொல் - சொல்லக்கடவை, எ - று.

க-ரை. இறைவனே! உமாதேவிபங்காளராகிய சிவபிரானரது திருவெங்கையி லுள்ள எமது கொங்கைகளிற் பசப்பூரப்பொருள்

விழைந்துபோன நீ யெம்மை யொருகால் நினைத்ததுண்டோ 'இல்லையோ? சொல்லக்கடவை யென்பதாம்.

வி - ரை. அம்மையென வாளாகூறினமையின் லோகமாதா வென்றுரைக்கப்பட்டது. அம்மையிடத்தர் என்பதற்கு அம்மையது இடமாயிருப்பவர் எனினுமாம். எங்கோமம்மை முலைத்தடம் என்றருள் தனக்குந் தலைவிக்குமொற்றுமை யுண்மையான்; 'உயிரொன்றுட்லு மொன்றொன்றே சிறப்பிவட்கென்னொடு'' என்றார் மணிவாசகரும். ஆர்தல்-வருதல். சென்றவிடத்து - பொருட்டேச் சென்றவிடத்து. ஓகாரங்க ளிரண்டும் ஐயப்பொருள. (உஅக)

தலைவனினைந்தமைசெப்பல்.

அதாவது—இவ்வாறு வினவிய பாங்கியைத் தலைவன் நோக்கி, நுமது தலைவியையான் மறந்தாலன்றோ நினைப்பது, மறந்ததே யிலையாதலால் நினைத்ததுமில்லையெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தரயன்
பறந்தாலுமென்னென்றிருக்கின்றவேணிப்பரமர்தமைத்
துறந்தார்மனமெனவெங்கொடுங்காட்டுச்சுரத்திடைநான்
மறந்தாணினைத்தலுமுண்டுபொன்னேயுங்கள்வஞ்சியையே.

ப - ரை. பொன்னே - பொன்போல்வாளே, உங்கள் - உங்களுடைய, வஞ்சியை - வஞ்சிக்கொடிபோல் பவளை, புறம்தாழ்குழல் - புறத்தே தொங்குகிற கூந்தலையுடைய, உமைபங்காளர் - உமைபங்கர், வெங்கைபுரத்தர் - திருவெங்கை நகரத்தையுடையவர், அயன் - பிரமனானவன், பறந்தாலும் என் என்று இருக்கின்ற - பறந்தாற்றானென்னென்றிருக்கிற,வேணி-சடாபாரத்தையுடைய, பரமர்தம்மை- பரமரை, துறந்தார் மனம்என-துறந்தவர் மனம்போல, வெம்கொடுங்காட்டுச் சுரத்திடை - வெவ்விய கொடிய காட்டுச்சுரத்தில், நான்- யான், மறந்தால் - மறந்தேனாயின், நினைத்தலும் உண்டு - நினைத்தலுமுண்டாகும், எ - று.

க - ரை. பொன்போல்வாளே! திருவெங்கைப்பரமரை, துறந்தோர்மனம் நிரந்தரத்தியானத்தோ டிருப்பதுபோல, நான் சென்ற வெங்கொடுங்காட்டுச் சுரத்திடை உங்கள் வஞ்சியை யிடையறாது நினைத்திருந்தேனென்பதாம்.

வி - ரை. அஜன் என்னும் வடசொல் அயன் எனத்திரிந்துவந்தது; பிறவாதவன் என்பதுபதப்பொருள்; இது மங்கலம். என்னெ

ன்றிருத்தல்-பராமுகமாயிருத்தல். பரமர் - மேலானவர். பறத்தல் - அன்னவுருவாய்த் திருமுடிகாண்பான் பறந்தவரலாறு குறித்தது. துறந்தார் மனமென-துறவோர் மன மறப்பு நினைப்புக்களின்றிததே கத்யாநமாயிருத்தல்போல, மறக்கவேயில்லையாதலால் நினைக்கவில்லை யென்றவாறுயிற்று. (உஅஉ)

பாங்கிதலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்.

அதாவது—தலைவனிவ்வாறு கூறக்கேட்ட பாங்கியானவள், தான் தலைவியை யிதுகாறும் ஆற்றுவித்திருந்தமையைத் தலைவற்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விண்மணிபொய்ப்பினும்பொய்யாநின்வாய்மைவிளம்பியெங்க
கண்மணியொத்தசெவ்வேலிறைவாவுயிர்காத்தளித்தே [ள்
னொண்மணிகண்டத்தொருவெங்கைவாணருயர்சிலம்பிற்
பெண்மணியைப்பிறைவாணுதலீர்ங்குழற்பேதையையே.

ப - ரை. எங்கள் கண்மணிஒத்த-எங்களது கண்மணியை நிகர்த்த, செவ்வேல் இறைவா - செவ்வேற்படையையுடைய இறைவனே, ஒள் - ஒட்பமாகிய, மணிகண்டத்து-மணிகண்டத்தையுடைய, ஒரு - ஒப்பற்ற, வெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, உயர்சிலம்பில் - உயர்ந்தமலையில்வாழ்கின்ற, பெண்மணியை - நாரீரத்நத்தை, பிறைவாள் நுதல் ஈர்குழல்பேதையை - பிறைபோலும் ஒளியையுடைய நெற்றியையும் குளிர்ந்த கூந்தலையுமுடைய பேதையை, விண்மணி பொய்ப்பினும் - சூரியன் பொய்த்தாலும், பொய்யா - பொய்க்காத, நின்வாய்மை - உனது உண்மை நிலையை, விளம்பி-சொல்லாநின்று, உயிர்காத்து அளித்தேன் - உயிர்காத்துரக்ஷித்தேன், எ - று.

க - ரை. எங்கள் கண்மணியொத்த செவ்வேலிறைவா! திருவெங்கைவாண ருயர்சிலம்பிற் பெண்மணியை, விண்மணி பொய்ப்பினும் பொய்யாத உன் உண்மை நிலையைச் சொல்லா நின்று உயிர்காத்தளித்தேனென்பதாம்.

வி - ரை. விண்ணுக்கோர் மணிபோறலிற் சூரியனைவிண்மணி யென்றாள். "அந்தரமணித்தபநர்" என்றார் பிறரும். பொய்ப்பினும் என்றவுமமை யுயர்வு சிறப்பு. பொய்யா - ஈறுகெட்ட பெயரெச்சம்; பொய்யாவாய்மையெனவியையும். விளம்பி-எச்சத்திரிபு. எங்கள்-உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. கண்மணி-கட்பாவை. செவ்வேல் என்றது வீரத்தன்மை தோன்றற்கென்க. மணி - நீலமணி. கருமையு

மாம். சிலம்பு - மலை. பெண்மணியென்பதற்குப் பெண்களுட் சிறந்தவளென்பது பொருள். பேதை பருவங் குறியாது பெண்ணென்னுந் துணையாய் நின்றது.

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக்கென்றல் பிரிவறிவுறுத்தற்குரியது. பாங்கிநின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல் பிரிவுடன் படாமைக்குரித்து. தலைமகனீடேனென்றல் பிரிவுடன் படுத்தற்குரித்து. பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல் பிரிவுடன்படுதற்குரித்து. தலைமகளிரங்கலும், கொடுஞ்சொற் சொல்லலும், பருவங்கண்டு பெருமகள் புலம்பலும், மறுத்தலும் ஆகிய நான்கும் பிரிவுழிக் கலங்கற்குரிய. பாங்கி கொடுஞ்சொற் சொல்லலும், வருதுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும், பருவமன்று வம்பென்றலும், அவர் தூதாகி வந்தடைந்ததிப் பொழுதென்றலும் ஆகிய நான்கும் வன்புறைக்குரிய. தலைமகளாற்றல் வன்பொறைக்குரித்து. தலைமகன் மீண்டுவருகாலை அவனவட்புலம்பலும், பாகனொடு சொல்லலும், மேகத்தொடு சொல்லலும் ஆகிய மூன்றும் வருவழிக் கலங்கற்குரிய. பாங்கி வலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தன் முதலைந்தும் வந்துழி மகிழ்ச்சிக்குரிய. (உஅரு)

முதலாவது களவியல் முற்றிற்று.

இரண்டாவது

வரையியல்.

——(o)——

வரைவு என்பது, தலைமகன் தலைமகளைக்குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடா திருப்பவும் வதுவைச் சடங்கொடு பொருந்தி மணஞ்செய்துகோடல். ஆதியில் எடுத்துக்கோடற் கண்ணே களவென்றும் கற்பென்றும் கைகோளிரண்டென வைத்து அவ்விரண்டற்குமிடையே வரைவியலெனக் கூறியதனால் முன்னதனோடு மாறுகொள்ளுமேயெனின், மாறுகொள்ளாது. என்னை; கற்பிற்கு நிமித்தமாய வரைவு கூறுதலாலிதுவுங் கற்பின்பாற்படும். ஆயின் இதனைக் கற்பின்பாற்படுத்துக் கூறாது வரைவியல் என வேறாகக் கூறியதென்னெனின், வரைவு முதலாக உடன்போக்கீறாகப் பலவகைப்பட்டு ஒவ்வோர் வகைக்குக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டு நடத்தல் விளங்குதற்கு வரைவியலென வேறு கூறப்படும். என்னை; புணர்தலும் புணர்தனிமித்தமும் குறிஞ்சியாயினவாறுபோல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கை நிமித்தமு மாயவரைவும் கற்பெனப்படுமென்றுணர்க. "வரைவுமலிவே யறத்தொடு நிலையென், றுரை யமையிரண்டும் வரைவிற்குரிய, கிளவித்தொகையெனக் கிளத்தினர் புலவர்" என்னுஞ் சூத்திரவிதியால் வரைவுமலிவு மறத்தொடு நிலையுமென இரண்டுவகைப்படும். அவற்றுள் வரைவு மலிவென்பது வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி மிகுதல். "வரைவு முயல் வுணர்த்தல் வரைவெதிர் புணர்த்தல், வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென், றொருநால்வகைத்தே வரைவு மலிதல்" என்னுஞ் சூத்திரவிதியால் வரைவுமலிதல் நால்வகைப்படும். அவற்றுள்,—

வரைவுமலிவு.

காதலன்முலைவிலை விடுத்தமைபாங்கி காதலிக்குணர்த்தல்.

அதாவது—தலைமகன் முலைவிலைவிடுத்தமையைப் பாங்கி தலைமகட்குணர்த்தாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

மலைவிலைபென்றநிலைவெங்கைவாணர்மணிவரைமே
லிலைவிலையிந்தமணிக்குமுலைக்குமென்றெண்ணியொரு
கொலைவிலைவென்றநுதன்மடவாய்நங்கொழுநர்முகிழ்
முலைவிலைநல்கினரைந்தலைநாகமுழுமணியே.

ப - ரை. ஒரு - ஒப்பற்ற, கொலை - கொலைத்தொழிலையுடைய, வில்லைவென்ற - வில்லினை வென்ற, நுதல்-நெற்றியையுடைய, மடவாய்-மாதே, நம்கொழுநர்-நமது கணவர், மலைவு இல்லையென்றநிலை-மலைத்தலில்லையென்ற நிலையையுடைய, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, மணிவரைமேல் - அழகிய மலைமீது, இந்த மணிக்கும் முலைக்கும் விலையில்லையென்று எண்ணி - இந்தரத்நத்துக்கும் ஸ்தநத்துக்கும் விலையில்லை யென்றுலோசித்து, ஐந்தலைநாகம் - ஐந்தலைப்பாம்பின், முழுமணி - முழுமணியை, முகிழ் - தாமரையரும்பு போன்ற, முலைவிலைநல்கினர் - முலை விலையாக விடுத்தருளினர், எ - று.

க - ரை. ஒரு கொலைவிலைவென்ற நுதன்மடவாய்! திருவெங்கைவாணராகிய சிவபிரானரது மலையிலுள்ள நங்கொழுநரானவர் ஐந்தலை நாகமுழுமணியை உன்முலை விலையாக விடுத்தருளினர் என்பதாம்.

வி - ரை. மலைவு - பிரமை. மலைவிலை யென்ற நிலை-அசையாத யோகநிலை; (சநகாதியர் நால்வர்க்குங் கைகாட்டாணுணர்த்திய நிலை) சநகாதியர் நால்வராவார்—சநகன், சநந்தநன், சநத்குமாரன், சநத்ஸுஜாதன் என்பவர்; இவர் பிரமன் மாநஸபுத்திரர். "கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்களுல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய், எல்லாமா யல்லவுமா யிருந்ததொன்றை யிருந்தபடி யிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்லாம்", "கல்லாலி னீழறனி லொருநால் வர்க்குங் கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட் டென்றாற், சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந்தன்மை துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபேயன்றோ" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களா னினிது விளங்கும். விலையில்லை - மதிப்பில்லை. இந்தமணி - இந்தப்பெண்மணி. வில்லை விலையெனத் தொகுத்தலாயிற்று. முகிழ் - கோங்கரும்பெனினுமாம். முகிழ் முலை - குவிமுலை யென்றலுமொன்று. முலைவிலையைப் பரியமென்ப துலகவழக்கு. முழுமணி - பொள்ளாமணி, பொல்லாமணி, தோளாமணி, (மாணிக்கம்) நாகரத்நம். நல்கல் - விடுத்தல். (உஅச)

காதலிநற்றுயுள்ள மகிழ்ச்சியுள்ளல்.

அதாவது—தலைவியின் பொருட்டுத் தலைமகன் விடுத்த முலைவிலைப் பொருளைக்கண்ட நற்றாயின் உள்ள மகிழ்ச்சியைக்கண்ட

தலைவியானவள், நமது தலைவனிங்கு வந்தால், நமது தாயானவள் நம்மினு மிக மகிழ்வாளெனக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

நான்றசடிலத்திருவெங்கைநாயகர்நல்குமொரு
கான்றகுருதிக்குடர்மாலைவேலுடைக்காளையெழில்
போன்றவுருவத்திறைவர்மென்றோளிடுபூந்தொடைகண்
டீன்றபொழுதிற்பெரிதுவவாநிற்குமெம்மனையே.

ப-ரை. நான்ற, தொங்குகிற, சடிலம் - சடாபாரத்தையுடைய, திருவெங்கைநாயகர் - திருவெங்கை நாயகராகிய சிவபெருமானார், நல்கும் - ஈன்றருளின, ஒரு - ஒப்பற்ற, கான்றகுருதி - உமிழ்ந்த வுதிரத்தையுடைய, குடர்மாலை - குடராகியமாலையையணிந்த, வேல் உடை - வேற்படையையுடைய, காளை - முருகக்கடவுளின், எழில் போன்ற - அழகைநிகர்த்த, உருவத்து - உருவத்தையுடைய, இறைவர் - தலைவர், மென்தோள்இடு - நமது மெல்லியதோளி லணிகிற, பூந்தொடைகண்டு - பூமாலையைக்கண்டு, எம் அன்னை - எமது தாயானவள், ஈன்றபொழுதின் - என்னைப்பெற்ற காலத்தினும், பெரிது உவவாநிற்கும் - மிகவும் உவவாநிற்பள், எ - று.

க - ரை. திருவெங்கை நாயகரது புதல்வராகிய முருகவேளின் அழகையுடைய நம் தலைவர், நமது மெல்லிய தோளிலிடும் பூமாலையை நமதன்னை கண்டு மிகவு மகிழ்வாளென்பதாம்.

வி - ரை. நான்ற என்பதற்குப் பகுதி-நால். நல்கல் - அருளல். கான்ற என்பதற்குப் பகுதி - கால். குடர் - ஈற்றுப்போலி. கான்ற குருதிக்குடர்மாலை வேலுடையென்ற விசேடணத்தால் காளை முருகக்கடவுளை யுணர்த்திற்று. காளை - உவமையாகுபெயர். தொடை - ஆகுபெயர். ஈன்ற என்பதற்குப் பகுதி-ஈன். பொழுதின் என்பதில் ஐந்தனுருபாகிய இன் உறழ்ச்சிப்பொருட்டு. அன்னை அனையெனத் தொகுத்தல் பெற்றது. (உஅடு)

பாங்கிதமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல்.

அதாவது—தலைவன்றமர்மணங்கூறிவந்துழித் தலைவிதமர்மண மெதிர்ந்தமையைப்பாங்கி தலைவிக்குரையாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

புரவலரோக்குங்குடிவாழும்வெங்கைபுரத்தரிந்தி
வரவலரொக்குமிடற்றூர்தங்கையிள மான்விழியா
யிரவலரொக்குமிறையோன்முலைவிலையின்மொழியாற்
றரவலரொக்குமெதிர்புகுந்தார்க்குந்தடமுரசே.

ப-ரை. புரவலர் ஒக்கும் - அரசரைநிகர்த்த, குடி - குடிகள், வாழும் - வாழ்தற்கிடமாகிய, வெங்கைபுரத்தர் - திருவெங்கை நகரத்தை யுடையவர், இந்தீவரம் அலர் ஒக்கும் - கருங்குவளை மலரை நிகர்த்த, மிடற்றார் - கண்டத்தையுடையவர், (அவரது) கை - திருக்கரத்துள்ள, இளமான் - இளமானின் விழிபோன்ற, விழியாய் - கண்களையுடையாளே, இரவலர் ஒக்கும் - இரவலரை நிகர்த்த, இறையோன் - நந்தலைவன், முலைவிலை - முலைவிலையை, இன்மொழியால் தர - இன்சொல்லோடுதர, எதிர்புகுந்து ஆர்க்கும் - அவர்க்கெதிரே சென்று முழங்குகிற, தடமுரசு - பெரிய முரசவாத்தியம், அலர் ஒக்கும் - அலரை நிகர்க்கும். எ - று.

க-ரை. திருவெங்கை நாயகரது திருக்கரத்து மான்போலும் விழியையுடையாளே! நம்மிறைவன் இன்சொல்லோடு முலைவிலை தரும்போ தார்க்குந் தடமுரசு அலரொக்குமென்பதாம்.

வி-ரை. புரவலர் - காத்தற் றொழிலில் வல்லவர். இந்தீவரம் - கருங்குவளை. அலர் - ஆகுபெயர். மிடறு - கண்டம். தம் - சாரியை. மான் - மானினது பார்வை. (ஆகுபெயர்) விழி - ஆகுபெயர். எதிர்புகல் - எதிர்கோடல். ஆர்த்தல் - மிக்குமுழங்கல். முரசு என்பது முரஜம் என்னும் வடசொற்றிரிபு. இதனை பேரீ என்றுங்கூறுவர் வடநூலார். (உஅசு)

தலைமக ளுவகையாற்றதுளத்தோடுகிளத்தல்.

அதாவது — தலைவியானவள் தனக்குளதாய மகிழ்ச்சியை யாற்றுதவளாய், தன்னெஞ்சொடு கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

வில்லுங்கணையுமதவேளுமாயவிழித்தவரெஞ்
சொல்லும்புனையுந்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
கொல்லுந்துயரமுலைமேற்பசப்பினைக்கொண்டுநெஞ்சே
செல்லுஞ்செலவையுணர்த்திபதாமிச்செழுமுரசே.

ப-ரை. நெஞ்சே - மனமே, இ - இந்த, செழுமுரசு - செழுமையாகிய முரசானது, மதவேளும் - மன்மதனும், வில்லும் - (அவனது) வில்லும், கணையும் - அம்பும், மாய - அழிய, விழித்தவர் - விழித்தருளினவர், எம்சொல்லும் புனையும் - எமது சொன்மாலையையுந் தரிக்கிற, திருவெங்கைவாணர்—, (அவரது) சுடர்கிரிமேல் - ஒளியையுடைய மலைமீது, கொல்லும் - நம்மைக் கொல்லுதற்குரிய,

துயரம் - துன்பமானது, முலைமேல் பசப்பினைக்கொண்டு - முலை மீதுள்ள பசப்பினைக் கவர்ந்துகொண்டு, செல்லும் செலவை - போகும்போக்கை, உணர்த்தியது ஆம் - அறிவித்ததாகும். எ - று.

க - ரை. மனமே! இந்தச்செழுமுரசானது, மதநசத்ருவாகிய திருவெங்கைவாணரது சுடர்க்கிரிமேல், நம்மைக் கொல்லுந் துயரம் நம்முலைமீதுள்ள பசப்பினைக் கவர்ந்து செல்லுஞ் செலவை யெமக்கறிவித்ததாகும் என்பதாம்.

வி - ரை. கணை - அம்பு. மதவேள்-இருபெயரொட்டு. மாய்தல்-மடிதல். விழித்தவர் என்றது ஒரு ஞான்றும் திறவாத நுதற்கண்ணைத் திறந்தவர் என்றபடி. எம்சொல்லும் என்னு மும்மை யிழிவு சிறப்பு; இறந்தது தழீஇயதுமாம். புனைதல் - தரித்தல். பசப்பு - பசலைநிறம். செலவு - போக்கு. செழுமுரசு என்றாள் தன்றுயரத்தையும் பசப்பையும் கொண்டு சேறலால். (உஅஎ)

தலைவனைப்பாங்கி வாழ்த்தல்.

அதாவது—தலைமகளுவகையாற்று துளத்தொடு கிளத்தல் கண்ட பாங்கியானவள் தலைமகனை வாழ்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கணத்தினிலங்குமதிப்பிள்ளையொன்றிளங்கட்செவியின்
பணத்தினுறங்குஞ்சடையாளர்வெங்கைப்பனிவரைமேற்
குணத்தினுயர்ந்தகொடியிடையாவிகொடுப்பதற்கா
மணத்தினலங்கல்புனையுநங்காதலர்வாழியவே.

ப - ரை. கணத்தின் - விண்மீன்களுடே, இலங்கும் - விளங்குகிற, மதிப்பிள்ளை ஒன்று - ஒரு மதிப்பிள்ளையானது, இளங்கட்செவியின்-இளமையாகிய பாம்பினது, பணத்தில் உறங்கும் - படத்தின் கீழுறங்குகிற, சடையாளர் - சடாபாரத்தை யுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கை - திருவெங்கையிலுள்ள, பனிவரை மேல் - குளிர்ந்த மலைமீது, குணத்தின் உயர்ந்த-குணத்தா லுயர்ந்த, கொடியிடை - கொடியிடையாளது, ஆவிகொடுப்பதற்கா - உயிரைக் கொடுப்பதற்காக, மணத்தின் அலங்கல் - மணமாலையை, புனையும் - தரித்த, நம்காதலர் - நமதன்பர். வாழிய - வாழக்கடவர். எ - று.

க - ரை. விண்மீன்களுக் கிடையேவிளங்குகிற வொரு மதிப்பிள்ளை, ஒரு இளம்பாம்பின் படத்திலுறங்குதற்கிடமாகிய சடாபாரத்தையுடைய சிவபிரானரது திருவெங்கைப் பனிவரைமேலுள்ள

குணத்திற் சிறந்த கொடியிடையாகிய நந்தலைவியினுயிரைக் கொடுப்பதற்காக, மணமாலை சூட்டின நம்மன்பர் வாழக்கடவர் என்பதாம்.

வி - ரை. கணம் - விண்மீன். மதிப்பிள்ளையொன்று - ஒரு கலையாகிய சந்திரன். பாம்புக்குக் கண்ணே செவிப்புலனையு முணர்தற் கருவியாதலால் அது கட்செவி யெனப்பட்டது. கொடியிடை - அன்மொழித்தொகை. கொடுப்பதற்கா-கொடுக்க. அலங்கல்-தொழிலாகுபெயர். மணத்தினலங்கல் - மணத்தையுடைய பூமாலை யெனினுமாம். தலைவியையுந் தன்னொடு படுத்து நங்காதலர் என்றாள். மதிப்பிள்ளையும், இளங்கட் செவியும் பகை பாராட்டா திருத்தற் காரணம் அறிவுக் கிளர்ச்சியில்லாப் பருவமேயாமென்க. (உஅஅ)

தலைவிமணம் பொருட்டாக வணங்கைப் பராநிலை காட்டல்.

அதாவது—தலைவிமணம் பொருட்டாகத் தெய்வத்துக்குச்சிறப்புச்செய்து வாழ்த்திநிற்கு நிலையைப் பாங்கி தலைவற்குக் காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நிலமாதணிநிகர்வெங்கையுளான்றருநீமுனமெங்
குலமாதினைமணஞ்செய்தாங்கெனையுங்கொழுநர்வந்து
நலமாமணம்புணர்ந்தால்விழவாற்றுவனெனவே
பலமாதருந்தொழும்பாவைசெவ்வேளைப்பரவுறுமே.

ப - ரை. (அண்ணலே) பலமாதரும் தொழும்பாவை - பலமாதரும் வணங்குதற்குரிய பாவைபோலு முருவுடையவளாகிய எமது தலைவியானவள், நிலமாது - பூதேவிக்கு, அணிநிகர் - ஆபரணத்தை நிகர்த்த, வெங்கையுளான் - திருவெங்கைப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பவனாகிய சிவபிரான், தரும் - தந்த, நீ - நீ, முன்னம் - முற்காலத்தில், எம்குலமாதினை - எமது குலப்பெண்ணை, மணம்செய்தாங்கு-மணஞ்செய்தாற்போல, கொழுநர்வந்து - எம்தலைவர்வந்து, எனையும்-அடியேனையும், நலமாமணம்புணர்ந்தால் - நலமாகிய மணம்புணர்ந்தால், நான் - அடியேன், விழஆற்றுவன்என- உனக்குத்திருவிழாவயர்வேன் என்று, செவ்வேளை-முருகக்கடவுளை, பரவுறும் - வழிபடுகிறாள், (நீ பார்த்தருள்) எ - று.

க-ரை. அன்பனே! எமது தலைவியானவள், பூதேவிக்காபரணம்போன்ற திருவெங்கையீசரீன்ற நீபண்டைக்காலத்தில், எம் குலப்பெண்ணை மணம்புணர்ந்தாங்கு, என்காதலர்வந்து என்னையுமணம் புணர்வராயின், நானுனக்குத் திருவிழாச் செய்வேனென்று முருகக்கடவுளை வழிபடாநிற்றலைப் பார்த்தருள்வாயென்பதாம்.

வி - ரை. நிலமாது - பூதேவியென்னும் வடசொன் மொழிப்பெயர்ப்பு. அணி - அழகெனினுமாம். குலமாது என்றது வள்ளிநாயகியை. நலமாமணம் என்பதற்கு நல்லபெரியமணம் என்றுரைப்பினுமாம். விழ-திருவிழா. ஆற்றல் - செய்தல். பாவை-ஆகுபெயர். பரவுறல் - முக்கரணங்களானும் வழிபடல். (சிந்தித்தல், வாழ்த்தல், தொழுதல்.) பலமாதர் என்றது பிலவுலகு நிலவுலகு போலவுலகு என்னு மூவுலகினுமுள்ள மாதரை. இவர் தொழுதற்காரணம் இவளது கற்புமுதலிய பெருங்குணங்களென்க. (உஅகூ)

பாராநிலைகண்ட தலைமகன் மகிழ்தல்.

அதாவது—இவ்வாறு தலைவி அணங்கைப்பாராநிலையைப் பாங்கி காட்டக்கண்ட தலைவன் தன்னுள்ளே மகிழ்ந்துகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மால்பற்றியபொழில்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
சேல்பற்றியவிழியாளுலகோர்முனஞ்செங்கையினாற்
கால்பற்றியம்மியின்மீதேயிருத்தல்கடைப்பிடித்து
வேல்பற்றியதெய்வசூளாமணியினைவேண்டுறுமே.

ப - ரை. மால்பற்றிய - மேகங்கள் தவழ்கின்ற, பொழில்-சோலைகள்சூழ்ந்த, வெங்கைபுரேசர்-வெங்கைநகரீசராகிய சிவபிரானாரது, மணிவரைமேல்-அழகியமலைமீதுள்ள, சேல்பற்றியவிழியாள்-சேலின்றன்மையைக்கொண்டவிழியினை யுடையவளது, கால்-காலினை, உலகோர்முன்னம்-உலகினர்க்கெதிரே, செங்கையினால் பற்றி-செங்கரத்தாற் பிடித்து, அம்மியின்மீதேயிருத்தல் - அம்மிமேலே வைத்தலை, கடைப்பிடித்து-உறுதியாயெண்ணி, வேல்பற்றிய - வேற்படையைத் தாங்கிய, தெய்வசூளாமணியினை-தெய்வசிகாமணியை, வேண்டுறும்-வேண்டாநின்றாள், என்-(இவளது மனவுறுதி யிருந்தவாறு) என்னை, எ - று.

க - ரை. மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவெங்கைநகர்க் கதிபராகிய சிவபெருமானாரது மலையிலுள்ள சேல்விழியாளது காலை, உலகோரறியயாம் பற்றியெடுத்து அம்மியின்மீதுவைத்தலைக்கடைப்பிடித்து, வேலாயுதக்கடவுளாகிய தெய்வசூளாமணியினை வேண்டாநின்றாள், இதென்னவியப்பு என்பதாம்.

வி-ரை. மால் - மேகம். பற்றல் - தவழ்தல். சேல்-ஆகுபெயர். சேல்பற்றிய விழியாள் என்றது அதிகாரத்தால் தலைவியைக் குறித்

தது. அம்மி - அம்மிக்கல். கடைப்பிடித்தல் - உறுதியாய்ப் பற்றுதல். தெய்வசூளாமணி - தெய்வசிகாமணி. வேல்பற்றிய வென்னும் விசேடணத்தால் இது முருகக்கடவுளைக் குறித்தது. சூளா-சூடா என்பன உச்சியெனப்பொருடரும் வடசொற்கள். "சூளாமணியும் பர்க்காயவன்" என்றார் மணிவாசகப்பெருமானாரும்.

"பூவண்ணம் பூவின் மணம்போலமெய் போதவின்ப
மாவண்ண மெய்கொண்டவன்றன் வலியாணை தாங்கி
மூவண்ணன்றன்சந் நிதிமுத்தொழில் செய்யவாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையைவெல்வாம்"

என்றற்றொடக்கத் தான்றோர்திருவாக்குக்கள் பலவற்றானும் சிவபெருமானே முழுமுதற் கடவுளாகப் புகழப்பட்டிருத்தலானும், அவரீன்ற இவர்க்கும் அப்பெயர் தகுதியாயினமையானும் இவரையும் தெய்வசூளாமணி யெனக்கூறலாயிற்று. அன்றியும் அம்முழுமுதற் கடவுளாகிய சிவபிரானுக்கும் ப்ரணவார்த்தத்தை யுபதேசித்தமையான் இவரைத் தெய்வசூளாமணி யென்றறகுதியேயா மென்றவாறுமாயிற்று. சிவபிராற்கு ப்ரணவார்த்த முபதேசித்தமை அடியில்வருஞ் செய்யுட்களால் விளங்கும்.

"சீயநம்போதியென வாய்புதைத்துச் செவிதர"

"தேமொழியத்தன்பெறவோர்தனக் கன்று சேணுலகத்
தேமொழியத்தஞ் சினங்காட்ட வுணரைச்சேமகரத்
தேமொழியத்தம்புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழியத்தம்பதினுலகு மந்தித்ததொன்றே"

இவ்வேதுவாற் சூளாமணி யும்பர்க்காயவற்கும் சூளாமணியாவனிம் முருகவேளென்றுணர்க.

காதலன் முலைவிலை விடுத்தமைபாங்கி காதலிக்குணர்த்தலும், தலைவிமணம்பொருட்டாக அணங்கைப் பராநிலைகாட்டலும் வரைவு முயல்வுணர்த்தல். பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தலொன்றும் வரைவெதிர் வுணர்த்தல். நற்றாயுள்ள மகிழ்ச்சியுள்ளலும், உவகையாற்றா துளத்தொடு கிளத்தலும், தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் வரைவெதிர்ந்து மகிழ்தல். தலைமகளணங்கைப் பராநிலை கண்டோன் மகிழ்தலொன்றும் பராவல் கண்டுவத்தல் எனக் கொள்க.

இத்துணையும் ஐம்பத்தொன்றாநாட்செய்தி யென்றுணர்க.

அறத்தொடுநிற்றல்.

அதாவது—களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது - தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க் கறத்தொடுநிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு நிற்கும் எனக்கொள்க. அறத்தொடு நிற்றல் என்பதற்குப் பொருள் முறையே வெளிப்படுத்தி நிற்றலென்பது. இப்பொருள் எவ்விடத்திற்குமாகாது. இவ்விடத்திற்கு மாத்திரமாமெனக் கொள்க. ஆதலால் இக்கிளவி வெளிப்படுத்தற்கு மாத்திரம் மெய், அறத்தொடு நிற்றல் என அவரால் நாட்டப்பட்ட பெயராயிற்றெனக் கொள்க.

"முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே."

என்னுஞ் சூத்திரவிதியான் அறத்தொடு நிற்றல் இருவகைப்படும்.

கையறுதோழி கண்ணீர்துடைத்தல்.

அதாவது—ஆற்றிக்கையற்ற தோழி அருகிருந்து கண்ணீர் துடைத்தல். (கையறல் - செயலறல்.)

வரைவு மலிவான் மனமகிழ்ச்சியடைந்திருக்கும் தலைவி யழுது கொண்டிருத்தல் மாறுபாடெனின், அன்று. என்னை ; களவுப்புணர்ச்சியால் அலர் மிக்கெழுதல் கண்டு தந்தையர் முதலானோர் வெறுப்படைந்த தறிந்த தலைவன் பிரிந்தேக அப்பிரிவாற்றாது தலைவியழுதலாமெனக்க. வெறுப்படைந்ததனால் மணத்தைமறுக்க, அதனால் தலைவன் பிரிந்தேக, அப்பிரிவாற்றாது தலைவியழுதனளெனச் செய்யுளிற்கூறிய தின்றெனின், மேலே கற்பொடு புணர்ந்த கவ்வையின் மகளெங்கே போயினளென்று செவிலி பாங்கியை வினவுழி, "சாந் தந் தருபவர்—ஏகினளே என்றதனாற் கண்டுகொள்க. அதற்குச் செய்யுள்,—

கோலம்புனைதலிற்குற்றமின் றன்மலர்கொய்துவருங்
காலந்தவறிலபந்திடைத்தோல்வியுங்கண்டிலமா
லாலந்திகழ்மிடற்றார்வெங்கைநாட்டுனதம்புயத்தி
னீலஞ்சிறுமுத்துதிர்ப்பதென்னோவுரைநேரிழையே.

ப - ரை. நேரிழையே - நேரிய ஆபரண மணிந்தவளே, கோலம் புனைதலில் - உனக்கியாம் கோலஞ்செய்வதில், குற்றம் இன்று -

குற்றமில்லை, மலர் கொய்துவரும் - பூப்பறித்து வருகிற, காலம் தவறில - காலங்கள் பிழைத்தனவில்லை, பந்திடை - பந்தாட்டத்தில், தோல்வியும் கண்டிலம் - தோல்வியுங் கண்டிலேம், ஆல் - ஆதலால், ஆலாலம் திகழ் - ஆலாகலவிடம் விளங்குகிற, மிடற்றார் - கண்டத்தையுடையவராகிய சிவபிரானாரது, வெங்கை நாட்டு - திருவெங்கை நாட்டில், உனது அம்புயத்தில் - உன்தாமரை மலர்மேலுள்ள, நீலம் - நீலமலர்கள், சிறுமுத்து உதிர்ப்பது என்னோ - சிறுமுத்துகளைச் சிந்துதற் காரணம் யாதோ, உரை - சொல்லக்கடவை. எ - று.

க - ரை. நேரிழையே! கோலம் புனைதலிற் குற்றமின்று, மலர் கொய்து வருங்காலந்தவறில, பந்திடைத் தோல்வியுங் கண்டிலம், அங்ஙனமாக, ஆலாலந்திகழ் மிடற்றார் வெங்கைநாட்டுனை தம்புயத்தினீலஞ் சிறுமுத் துதிர்ப்பதென்னோ? உரைப்பாயாக வென்பதாம்.

வி - ரை. கோலம் புனைதல்-தலைப்பணி திருத்தன் முதலிய அலங்காரம். மலர்கொய்துவருங்காலம்-பூப்பறித்துவரும்நியமகாலம். பந்து - பந்தாட்டம். தோல்வி - தோற்றல். ஆலாலம் - பாற்கடல் கடைந்தஞான்றதி னெழுந்தகவிடம். அம்புஜம்-வடசொல்; இதில் ஜகரம் யகரமாய்த் திரிந்து வந்தது. அம்பு - நீர். ஜம் - தோன்றுவது; இது காரண விடுகுறி. நீலம் - கருங்குவளை. அம்புயம், நீலம் என்பன வாகுபெயர்கள். அம்புயம் முகத்தையும் நீலம் கண்களையுங் குறித்தன. சிறுமுத்து - கண்ணீர்த்துளியை யுணர்த்திற்று. அம்புயமேயன்றி அம்புயத்தினீலஞ் சிறுமுத்துதிர்த்தல் எங்குமென்றுங் கண்டிலேமாயினும் ஆலாலந்திகழ் மிடற்றார் வெங்கை நாடாதலான் இங்குக் கண்டேனென வியந்தாளென்றவாறு. இறுதி செய்யுமாலாலத்தை யுறுதிசெய்யு மமுதாகக் கொண்ட வுத்தமனது நாட்டில் நிகழாதனவு நிகழலா மென்றவாறு. நேரிழை - அன்மொழித்தொகை. (உகக)

தலைமகள் கலுழ்தற் காரணங்கூறல்.

அதாவது—இவ்வாறு பாங்கி வினவத் தலைமகள் தான் கலுழ்தற் காரணங் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தெண்ணீர்முடியர் திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பண்ணீர்மைமென்மொழிப்பாவைநல்லாயிப்படிமுழுது
மெண்ணீர்மையன்பரைக்கண்டனமால்வந்ததென்றனது
கண்ணீர்கொடுமென்முலைமேற்பசப்பைக்கழுவுறவே.

ப - ரை. தெள்நீர் - தெளிவாகிய நீரை, முடியர் - திருமுடியி லுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) செழுஞ் சிலம்பில் - செழுமையாகிய மலையிலுள்ள. பண்ணீர்மை - பண்ணின்குணமமைந்த, மெல்மொழி - மென்மொழியையுடைய, பாவைநல்லாய் - பாவைபோலு முருவுடையமாதே, இ - இந்த, படிமுழுதும் - உலகமுழுதும், எண் - மதித்தற்குரிய, நீர்மை, பெருங்குணமுள்ள, அன்பரை - நமது காதலரை, அன்ன மால்கண்டு - அத்தகைய மேகங்கள்கண்டு, என்றனது கண்ணீர் கொடு - என் கண்ணீரைக் கொண்டு, மெல் முலைமேல் பசப்பை கழுவுற வந்தது - மெல்லிய கொங்கைப் பசப்பைக் கழுவுதற்கு வந்தது. எ - று.

க - ரை. தெண்ணீர் முடியர் திருவெங்கைவாணர் செழுஞ் சிலம்பிற் பண்ணீர்மை மெனமொழிப் பாவைநல்லாய்! இவ்வுலக முழுது மதித்தற்குரிய பெருங் குணத்தை யுடையவராகிய நங்காதலரை மேகங்கள் கண்டு, என் மென்முலைமேற் பசப்பைக் கழுவுற வந்ததென்பதாம்.

வி - ரை. தெண்ணீர் என்றது ஆகாயகங்கையை. "அளக்கலாகா வளவும் பொருளுந், துளக்க லாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரூஉம் வண்மையு மலைக்கே" என்ற சான்றோர் திருவாக்கை யடியொற்றி, செழுஞ்சிலம்பு என்றார். பண்ணீர்மை - இனிமை. பாவை - பிரதிமை. பண் ஈர்மையெனப்பிரித்து பண்களை யீருந்தன்மை யெனினுமாம். படி - பூமி. படிமுழுது மெண்ணீர்மை யென்றதனால் நீர்மை பெருங்குணத்துக்காயிற்று. மால் - மேகம். என்றனது, இதில்தன்சாரியை. கொடு-கொண்டென்பதன் குறுக்குதல். கழுவுற - கழுவ. முலைமேற் பசப்பைக் கழுவுற மால்வந்ததென வியையும். (உகஉ)

தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத்தெளிந்தமை கூறல்.

அதாவது—தலைவன் தெய்வங்காட்டிக் கரியென்று சூளுறவு சொல்ல, அச்சூளுறவை மெய்யென்று தான்றெளிந்தமையைப் பாங்கிக்குக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொலைசூழ் தருகுமொன் றுண்டாற்கரிநெறிகூறுமெனி
யிலைசூழ்மீனயின்முனிவரெல்லாந்தொழுமெங்கள்பழ
மலைசூழ்மறுகெழில்வெங்கைநன்னாடர்மனந்தெளிபச்
சிலைசூழ்வனந்திகழ்தெய்வதங்காட்டித்தெளித்ததற்கே.

ப - ரை. இலைசூழ்மனையின் - இலையால் வேய்ந்த வீடுகளிலுள்ள, முனிவர் எல்லாம்தொழும் - முனிவரெல்லாரும் வணங்குகிற, எங்கள் - எமது, பழமலைசூழ்-பழமலையைச்சூழ்ந்த, மறுகெழில்-தெருவழகுவாய்ந்த, நல்வெங்கைநாடர் - நல்லவெங்கைநாடர், மனம் தெளிய - நம்மனந்தெளியுமாறு, சிலைசூழ்வனம் திகழ் - மலையைச்சூழ்ந்த சோலையில் விளங்குகிற, தெய்வதம் காட்டி - தெய்வத்தைக் காட்டி, தெளித்ததற்கு - தெளிவித்ததற்கு, நெறி கரிகூறும் எனின்-முறையேசான்றுரைக்குமெனின், கொலை சூழ்குருகும் ஒன்று உண்டு - கொலைசூழுங் குருகும் ஒன்றுண்டு, எ - று.

க - ரை. இலையால் வேய்ந்த வீடுகளிலுள்ள முனிவரெல்லாரும் வணங்குதற்குரிய பழமலையிலுள்ள தெருவழகு மிக்க திருவெங்கைநாடர், நம்மனந்தெளியுமாறு அம்மலையைச் சூழ்ந்தசோலையிலுள்ள வனதேவதையைக் காட்டி மெய்மைத் தெளிவித்ததற்கு அங்கிருந்ததோர் குருகுங்கரியாகும், அது கரியுரைக்க வல்லதாயின் என்பதாம்.

வி - ரை. இலைசூழ்மனை - பர்ணசாலை; பர்ணம் - இலை. மறுகு-தெரு. வெங்கை நன்னாடர் என்றது தலைவனை. சிலை - ஆகுபெயர். வனந்திகழ் தெய்வதம் - வன தேவதை. தெளித்தல் - தேற்றுதல். கரி - சான்று. (சாக்ஷி) குருகு - ஓர்பறவை (நாரை). கரி கூறுமெனின் என்றமையால் கரி கூறமாட்டாமை தானே போதரும். அன்றியும் கொலைசூழ்தலாகிய தீச்செயலை யுடையது, அங்ஙனமாகவும் அதனைக்கரியாகக் கொண்டதறியாமை யாமெனின், என் செயவேன் அப்பொழுதங்கிருந்த ததுவேயன்றிப் பிறிதொன்றில்லையென்றுளாயிற்று. குருகும் என்றவும்மையிறந்தது தழீஇயது - கொலைசூழ்தல். மீன் முதலியவற்றைக் கொன்றுண்டல். (உகரு)

பாங்கி யியற்பழித்தல்.

அதாவது—பாங்கிதலைவியைநோக்கி, தலைவன் வன்னெஞ்சனுயிகந்தமைகூறி அவனை நிந்தியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

முனங்குழையாதமலைகுழைத்தாரம்முதல்விகன
தனங்குழையாதுகுழைந்தார்தம்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
கனங்குழையாயுனக்கிந்தாரிலைகொனங்காவலனார்
மனங்குழையாமன்முனந்தாமருந்துமருந்தினையே.

ப - ரை. முன்னம் - முற்காலத்தில், குழையாதமலை குழைத்தார் - வளையாத மலையை வளைத்தவர், அம் முதல்வி - அந்த இறை

வியின், கனதனம் குழையாது - கனதனங் குழையாமல், குழைந்தார் - தாமே குழைந்தவர், (அவரது) வெங்கைத்தடம் சிலம்பில் - திருவெங்கையிலுள்ள பெரியமலையில் வாழ்கின்ற, கனங்குழையாய் - கனங்குழையே, நம் காவலனூர் - நமது தலைவர், மனம் குழையாமல் - மனங்குழையா வண்ணம், முன்னம் - முன்னே, தாம் அருந்தும் மருந்தினை - தாமுண்டமருந்தை, உனக்கு ஈந்தாரிலை கொல்-உனக்குத் தந்தாரில்லையோ, எ - று.

க - ரை. முற்காலத்தில் மலையை வளைத்தவரும் இறைவியின் கனதனத்துக்குக் குழைந்தவருமாகிய சிவபிரானாது திருவெங்கைப் பதியில்வாழ்கின்ற கனங்குழாய்! நமதிறைவர், மனங்குழையா திருக்கத்தாமுன்னுண்ட மருந்தினை உனக்குத் தந்தாரில்லையோ வென்பதாம்.

வி - ரை. குழையாமை மலைக்கியல்பென்பது தோன்றக் குழையாத மலையென்றார்.மலை யிங்கு மேருமலையைக் குறித்தது. இதனைக் குழைத்தது திரிபுரம்ழித்தகாலத்தில். முதல்வி - தலைவி (உமாதேவி - காமாக்ஷி). கனதனம் - பெருங்கொங்கை. கனங்குழை-அன்மொழித்தொகை. கொல் - ஐயம். குழைதல் - வளைதல். (இளகுதல்) முன்னம் நங்காவலர் தம்மனங்குழையாதிருக்க அருந்தின மருந்தை யுனக்குமீந்திருப்பரேல் நீ யிவ்வாறுமனங்குழைந்து வருந்தாய் என்று தலைவனை யியற்பழித்தவாறாயிற்று. முதல்வி கனதனங் குழையாது குழைந்தார் என்றது கச்சிப்பதியிற் கம்பையாற்றினிகழ்ந்த செய்தியைக்குறித்தது. (உகச)

தலைமகளியற்படமொழிதல்.

அதாவது—இவ்வாறு பாங்கி தலைமகனை யியற்பழித்துழித் தலைமகள் பொறாது, இயற்படக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்;—

உழைகாதலிக்குங்கரத்தார்நிறைமதியொத்தசங்கக்
குழைகாதிற்பெய்தவர்தென்வெங்கைவாணர்குளிர்சிலம்பின்
மழைகாதலிக்குங்கொடையன்பர்மேற்பிறர்வாயுரைக்கும்
பிழைகாதிற்கேட்பவந்தோபடைத்தானயன்பெண்பிறப்பே.

ப - ரை. உழை-மான், காதலிக்கும் - விரும்புகிற, கரத்தார் - திருக்கரத்தையுடையவர், நிறைமதி ஒத்த-பூர்ணசந்திரனை நிகர்த்த, சங்கக்குழை - சங்கக்குழையை, காதில் பெய்தவர் - திருச்செவியிலிட்டவர், தென் வெங்கைவாணர் - தென் வெங்கையில் வாழ்பவர்,

(அவரது) குளிர் சிலம்பில் - குளிர்ந்த மலையிலுள்ள, மழை காதலிக்கும் - மேகம்விரும்புதற்குரிய, கொடை - ஈகையையுடைய, அன்பர் மேல் - நமது காதலர்மீது, பிறர்வாய் உரைக்கும் - அந்நியர்வாயினுற் சொல்லப்படுகிற, பிழை - பிழையை, காதின் கேட்ப - எமது காதினுற் கேட்கும் வண்ணம், அயன் - பிரமன், பெண் பிறப்பு படைத்தான் - எம்மைப் பெண்பிறப்பாகப் படைத்தான், அந்தோ - ஐயோ, எ - று.

க - ரை. உழைகாதலிக்குங் கரத்தார், பிறைமதியொத்த சங்கக்குழை காதிற் பெய்தவர், தென் வெங்கைவாணர், (அவரது) குளிர் சிலம்பில், மழைகாதலிக்குங் கொடையன்பர்மேல், பிறர்கூறும்பழித்துரையைக் காதிற் கேட்கவோ பிரமன் எம்மைப் பெண் பிறப்பாக பிறப்பித்தது என்பதாம்.

வி - ரை. உழைகாதலிக்குங் கரத்தார் என்றமையாற் றிருக்கரத்துப் பேரழகு பெறுதும். சங்கக்குழை - சங்கினுணியன்றதோடு. (குண்டலம்) பெய்தல் - இடுதல். மழைகாதலிக்கும் கொடையன்பர் என்றமையாற்பெருங்கொடையாரென்பது விளங்கும். அந்தோ-இரக்கக்குறிப்பு. பிறர் என்றது பாங்கியை; தலைமகளை யியற்பழித்தமையால் அவளைப்பிறர் எனவேறுபடுத்துக் கூறினுளாயிற்று. (உகூ)

தெய்வம்பொறை கொளச்செல்குவமென்றல்.

அதாவது—தெய்வத்தின்முன், பிரியேனெனச் சூளுரைகூறி நங்காதலர் பிரிந்துபோனுராதலால், அத்தெய்வஞ் சீறுதபடி, அவர் எமக்குக் குற்றஞ்செய்தாரல்லர், நீ பொறுத்துக்கொள்க வென வேண்டிக்கோடற்கு யாமிருவேமுஞ் செல்வோமெனத் தலைவிபாங்கியொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

புற்றங்கதமணிவெங்கைபுரேசர்பொருப்பிலெங்கள்
சுற்றந்தொழுமெங்கொழுநர்நிற்காட்டிமுன் சூளுரைத்த
குற்றம்பொறுத்தருளென்றடிபோற்றிக்கொழுமலர்தூய்ச்
செற்றந்தணிக்குதும்பெண்ணேயினிக்குலதெய்வத்தையே.

ப - ரை. பெண்ணே - மாதே, புற்று - புற்றில் வாழ்கின்ற, அங்கதம் அணி-பாம்பையணிந்த, வெங்கைபுரேசர் பொருப்பில்-திருவெங்கைநகர்க் கதிபராகிய, சிவபெருமானுரது மலையில், இனி-இனி, குலதெய்வத்தை - நமது குலதேவதையை, எங்கள் சுற்றம் தொழும் - எமது சுற்றத்தாரெல்லாரும் வணங்குதற்குரிய, எம்கொழுநர்-

எமது கணவர், நின்காட்டி - நின்னைக்காட்டி, முன்-உனக்கெதிரே, சூள்உரைத்த - சத்தியஞ்செய்து சொன்ன, குற்றம் - குற்றத்தை, பொறுத்தருள் என்று - பொறுத்தருள்வாயென்று, அடிபோற்றி - அடிவணங்கி, கொழுமலர் தூய் - செழுமையாகிய மலர்களைத் தூவி, செற்றம் - கோபத்தை, தணிக்குநும் - தணிப்போம் (வருவாயாக.) எ - று.

க - ரை. பெண்மணே! நமது குலதெய்வத்துக்கெதிரே அன்று சூளுரைத்துச்சென்ற நந்தலைவர் நியமித்த காலத்தில் வராமையால் அந்தக்கொடுந்தெய்வத்தை அடிவணங்கி மலர்களால் அருச்சித்து, அதன்கோபத்தைத் தணிப்போம் வருவாயாகவென்பதாம்.

வி - ரை. அங்கதம்-பாம்பு புற்றங்கதம் என்பதில் புற்று-சாதி யடை. பொருப்பு - மலை. சுற்றம் - ஆகுபெயர். சூளுரைத்தல் - சத்தியஞ் செய்தல் (ஆணையிடல்). குற்றம - தவறு (பிழை). செற்றம் - கோபம். கொழும்பலி தூய் என்றும் பாடம். (உ௬௬)

இல்வயிற் செறிந்தமையியம்பல்.

அதாவது—தலைவியானவள், என்மெய் வேறுபாட்டாலும் ஊரி லுள்ளார் அலர்தூற்றலாலும், நற்றாய் மனவெறுப் புடையாளாய், என்னை மனையிடத்தே காவல்செய்தாளெனப் பாங்கியொடு கூறு நிற்றல். அதற்குச் செய்யுள்,—

சுட்டாவறிவுருவானூரவ்வானிற்சுரர்தமக்குங்
கிட்டாவமுதனையார்வெங்கைவாணர்கிரியணங்கே
மொட்டாமுலையிற்பசலைகண்டேமனைமுன்றில்விடா
ளிட்டாளிலைவிலங்கென்பதொன்றேகுறையீன்றவட்கே.

ப - ரை. சுட்டா - சுட்டப்படாத, அறிவு உரு ஆனூர் - ஞான வடிவானவர், அவ்வானில் - அந்தச் சுவர்க்கலோகத்திலுள்ள, சுரர் தமக்கும் - தேவர்களுக்கும், கிட்டா - கிடைக்காத, அமுது அனையார் - அமிர்தத்தை நிகர்த்தவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) கிரி - மலையில் வாழ்கிற, அணங்கே - பெண்ணே, மொட்டு ஆம் முலையில் - தாமரை யரும்புபோன்ற என் முலைமீது படர்ந்த, பசலை கண்டு - பசப்பினைக் கண்டு, மனை முன்றில் - வீட்டின் முற்றத்தில், விடாள் - விடுகின்றிலள், விலங்கு இட்டாள் இல்லை - விலங்கு பூட்டினாளில்லை; என்பது ஒன்றே - என்பதாகிய ஒரு செய்கையே, ஈன்றவட்கு குறை - பெற்றாட்குக் குறையா யிருப்பது, எ - று.

க-ரை. பெண்ணே! நமதன்னையானவள் என் முலைமேற் பசப்பைக் கண்டு, மனவெறுப்படைந்து, என்னை மனை முன்றில் விடாள், விலங்கிட்டா ளில்லையென்ப தொன்றே குறையா யுள்ளது என்பதாம்.

வி-ரை. இறைவர், மனோவாக்குக்காயங்களாற் சுட்டியறியப் படாதவராதலானும், ஞானவடிவா யிருப்பவராதலாலும், சுட்டாவறி வுருவானார் என்றார். வான் - ஆகுபெயர். அமுது-அம்ருதம் என்னும் வடசொற்சிதைவு; சாவாமருந்து என்பது பொருள். மொட்டு-அரும்பு. ஆம் - உவமவுருபு. ஈன்றவட்குக் குறை விலங்கிட்டா ளிலையென்ப தொன்றே யென்றியையும். (உகஎ)

செவிலி கனையிருளவன் வரக்கண்டமை கூறல்.

அதாவது—செவிலித்தாயானவள், நமது தலைவன் மிக்க இருட் குறியிடத்து வரக்கண்டாளெனத் தலைவி பாங்கிக்குக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

மீனைக்கடந்தபொழில்சூழரன்றிருவெங்கைவெற்பர்
கானைக்கடந்துகுறிவாயிருள்வரக்கண்டனள்யாய்
மானைக்கடந்தவிழியாய்தரளமணிவடத்த
வானைக்கடந்தவிளஞ்சிங்கமோவென்றயிர்த்தனளே.

ப-ரை. மானை - மானோக்கத்தை, கடந்த-வென்ற, விழியாய்- நோக்கத்தையுடையாளே, மீனைகடந்த - விண்மீன்களைக் கடந்து சென்ற, பொழில்சூழ் - சோலைகள்சூழ்ந்த, அரன் - சிவபெருமானது, திருவெங்கை வெற்பர் - திருவெங்கை வெற்பரானவர், கானைகடந்து - காட்டைக் கடந்து, இருள் - இருட்காலத்தில், குறிவாய்வர - குறியிடத்தேவர, யாய் கண்டனள் - நமது செவிலித் தாயானவள் கண்டு, தரளமணிவடத்த - முத்துவடங்களையுடைய, ஆனைகடந்த - யானையை வென்ற, இளஞ் சிங்கமோ என்று - இளமைபொருந்திய சிங்கந்தானோ வென்றெண்ணி, அயிர்த்தனள்-சந்தேகித்தாள், எ-று.

க-ரை. மானைக்கடந்த விழியாய்! செவிலித் தாயானவள், நமது தலைவர் இருட்குறியிடத்து வரக்கண்டு, இஃது ஓர்தரளமணி வடத்தயானையை வென்ற இளஞ்சிங்கமோவென் றையுற்றாள் என் பதாம்.

வி-ரை. மான், விழி - ஆகுபெயர்கள். பொழில் சூழ் திருவெங் கையென்றியையும். வெற்பர் - மலை நாடர். கான்-காடு. யாய் - தாய்;

ஈண்டைக்கேற்பச் செவிலித்தாயெனக் கொள்க. தாளம் - முத்து. தாளமணி-இருபெயரொட்டு. வடம் - மாலை. யானை ஆனையென மரீ இயிற்று. எதுகையின்பநோக்கி ஆனைக்கடந்த வென்றுயிற்று. இவற்றுள் கலுழ்தற்காரண மொன்று மொழிந்து ஏனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவும் தலைவியறத்தொடு நிற்குநிலை தனக்குரியவாமாறு காண்க. (உகூ௬)

எறிவளைவேற்றுமைக்கேதுவினாதல்.

அதாவது—செவிலி பாங்கியை நோக்கி, நம்புரிகுழல், புனம் விட்டிங்கு வந்தவன்றே, தனம், விழி, மொழி, மனம் என்பன யாவும் வேறுபடுதற் காரணமென்னோவென வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கனம்வேறுபட்டமிடற்றார்தம்வெங்கைக்கனகவெற்பிற்
புனம்வேறுபட்டிங்குவந்தவன்றேநம்புரிகுழற்குத்
தனம்வேறுபட்டுவிழிவேறுபட்டுத்தளர்ந்துமொழி
மனம்வேறுபட்டதென்னோவுரையாய்செவ்வரிக்கண்ணியே.

ப - ரை. செவ்வரி கண்ணியே - செவ்வரிபடர்ந்த கண்களையுடையாளே, கனம் - மேகம், வேறுபட்ட - மாறுபட்ட, மிடற்றார் - திருமிடற்றையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, கனகவெற்பில்-பொன்மலையில், புனம்வேறுபட்டு - புனம்பகையாகி, இங்கு வந்த அன்றே - இவ்விடத்திற்கு வந்த அன்றுதொட்டே, நம்புரிகுழற்கு - நமது பெண்ணுக்கு, தனம் வேறுபட்டு - முலைவேறாகி, விழி வேறுபட்டு - கண்கள் வேறாகி, மொழிதளர்ந்து - சொற்றமொறி, மனம் வேறுபட்டது - மனமும் வேறாய் விட்டதற்குக் காரணம், என்னோ - யாதோ, உரையாய் - சொல்லக்கடவை, எ - று.

க - ரை. செவ்வரிக்கண்ணியே! மேகத்தோடு பகைகொண்ட திருமிடற்றினையுடையவராகிய சிவபெருமானாரது திருவெங்கைப் பொன்மலையிலுள்ள புனத்தைவிட்டு வந்தவன்றே நம்புரிகுழற்கு, தனமும் விழியும் மொழியும் மனமும் வேறுபட்டதற்குக் காரணம் யாதோ? சொல்லக்கடவை யென்பதாம்.

வி - ரை. கனம் - மேகம், (வடசொல்). வேறுபடல் - பகைத்தல்; அதாவது கறுத்திருத்தல். மிடறு - கண்டம். தம் - சாரியை. கனகம் - பொன். புனம் - தினைப்புனம். வேறுபட்டு - விட்டு. புரி

குழல் - அன்மொழித்தொகை. தனம் வேறுபடல் - பசத்தல். செவ்வரிக்கண்ணி யென்றது பாங்கியை. (உகக)

பாங்கிவெறிவிலக்கல்.

அதாவது—செவிலித்தாயானவள் வெறியாட்டாளனை யழைத்துமகட்கு நோயுற்றவாறும் அது தீருமாறும் சொல்லவேண்டுமென்று கேட்புழி, தெய்வம் வந்தாடும்போது பாங்கி அத்தெய்வத்தையாடவேண்டாமென்று விலக்கல்.

ஆடுபலிகொடுத்தால் தீருமென்று வெறியாட்டாளனுரைப்புழி, அவ்வாட்டினைக் கொல்லவேண்டாமென்று தடுத்தல் எனினுமாம். அதற்குச் செய்யுள்,—

வீட்டையுவந்துதருவார்திருவெங்கைவெற்படுத்த
காட்டைவிரும்பியுறைதெய்வமேயெங்கள்கன்னிபடும்
பாட்டைநினைந்திலைவாளாவுலகிற்பலர்விரும்பு
மாட்டைவிரும்பினைநன்றோவிதுசொல்லறிவினுக்கே.

ப - ரை. வீட்டை - வீட்டினை, உவந்து தருவார்-(தமதன்பருக்கு) உவந்து தருபவராகிய சிவபெருமானாது, திருவெங்கைவெற்புஅடுத்த - திருவெங்கைமலையை யடுத்த, காட்டைவிரும்பி - காட்டினை விரும்பி, உறை - அதில் வாழ்கின்ற, தெய்வமே-தேவதையே, எங்கள் கன்னிபடும்பாட்டை-எங்கள் பெண்படுந்துன்பத்தை, நினைந்திலை - எண்ணிலை, வாளா - சும்மா, உலகில் - உலகத்தில், பலர் விரும்பும் - பலரும் விரும்புகிற, ஆட்டை விரும்பினை - ஆட்டினை விரும்பினை, இது - இவ்வாறு விரும்புதல், அறிவினுக்கு நன்றோ - உன்னறிவுக்கு நன்றுமோ, சொல் - சொல்லக்கடவாய், எ - று.

க - ரை. வீட்டைத் தம்மன்பருக்குத் தருபவராகிய சிவபெருமானாது திருவெங்கைமலையை யடுத்தகாட்டில் விருப்பத்தோடு வாழ்கின்ற தெய்வமே! எங்கள் கன்னிபடும்பாட்டை நினையாமல், இவ்வுலகில் பலரும் விரும்புகிற ஆட்டை விரும்பினை, இது நின்னறிவிற்குச் சாலாதென்பதாம்.

வி - ரை. வீடு - வீடுபேறு; (முக்தி, மோக்ஷம் என்னும் வடசொற்களின் மொழிபெயர்ப்பு). வெற்பு-மலை. காடு-வனம். காட்டைவிரும்பியுறை தெய்வம் - வநதேவதை. கன்னி - மணமுடிக்காதபெண்; (தலைவி). பாடு-துன்பம். ஆட்டை - ஆட்டினை, ஆடலையென்றிரு பொருளுரைத்துக்கொள்க. (உ.0௦)

வெறிவிலக்கியவழி செவிலிபாங்கியை வினாதல்.

அதாவது—இவ்வாறு பாங்கியானவள் வெறியாட்டை விலக்கிய வழி, செவிலிபாங்கியை நோக்கி, யாம்நம்பெண்ணுக் குண்டாயிருக் கிறநோய் தீருமாறுமுயறலை நீ தடுத்தற்காரண மென்னையோவென வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்னோடுவமிக்குஞ்செஞ்சடையார்திருவெங்கைவெற்பிற்
பொன்னேய்விலக்குவமென்றெண்ணியாங்கள்புகும்பொழுதி
லென்னோவெறிவிலக்குற்றாயிளமுலையேந்திழையா
ணன்னோயறிந்தனையேலுரையாய்மைத்தடங்கண்ணியே.

ப - ரை. மை - அஞ்சனமெழுதப்பெற்ற, தடம் கண்ணியே - விசாலாக்ஷியே, மின்னோடு உவமிக்கும் - மின்கொடியோடுவமித்தற் குரிய, செஞ்சடையார் - செஞ்சடையை யுடையவராகிய சிவபெரு மானாரது, திருவெங்கைவெற்பில் - திருவெங்கை மலையிலுள்ள, பொன்னேய்-பொன்போல்பவளாகிய நமது தலைவியின் துன்பத்தை, விலக்குவமென்று எண்ணி - விலக்குவோ மென்று நினைத்து, யாங்கள் புகும்பொழுதில் - யாம் தொடங்கும்போது, என்னோ - யாது காரணத்தானோ, வெறிவிலக்குற்றாய் - வெறிவிலக்குற்றனை, இள முலை ஏந்திழையாள் நோய் அறிந்தனையேல் - இளங் கொங்கைகளை யும் ஏந்தப்பட்ட ஆபரணங்களையு முடையாளது நோயை இன்ன தென்றறிந்தனையாயின், உரையாய் - சொல்லக்கடவை, எ - று.

க - ரை. மைத்தடங்கண்ணியே! திருவெங்கை வெற்பிற்பொ ன்னினது நோயையாம் விலக்கப்புக்குழி, நீயதனை விலக்கப்புக்கனை, நீ யந்நோயை யின்ன நோயென் றறிதியாயின், எமக்கு விளங்கக் கூறுக வென்பதாம்.

வி-ரை. "பொலிந்திலங்கு மின்வண்ண மெவ்வண்ணமவ்வண் ணம் வீழ்சடை" எனமுன்னோர் கூறலையடியொற்றி,மின்னோடுவமிக் குஞ் செஞ்சடையார் என்றார். பொன் என்றது தலைமகளை; ஆகுபெ யர். வெறி - வெறியாடல். தன் - சாரியை. (௩0௪)

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடு நிற்றல்.

அதாவது—இவ்வாறு வினாவின செவிலியைத் தோழி நோக்கி யாங்கள் முன்னே தினைப்புனங் காக்குங்கால் அங்குள்ளசோலையில் பூப்பறிக்கச் சென்று அப்பூங்கிளை யெட்டாமற்றிகைத்து வருந்துழி அங்கோரரசிளங்குமரன் போந்து யாம் விழைந்த தழையைப்பறித்து

த்தலைமகட்களித்துச் சென்றான், ஆதலா லிவளவற்கேயுரியளென வெளிப்படையாய்க் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தடுக்கநிறைபுனற்பண்ணையிற்சூன்முதிர்சங்கம்வந்து
படுக்கநளினமலர்வெங்கைவாணர்பணிவரைமே
லுடுக்கவுதவின்மாந்தழைமாமலரொண்ணுதற்குக்
கொடுக்கமதனைவிடுத்தகன்றானொருகோமகனே.

ப-ரை. தடுக்க - தடுத்தலால், நிறை - நிறைந்த, புனல்-நீரை யுடைய, பண்ணையில் - வயல்களில், சூல் முதிர் சங்கம் - கருப்பமு திர்ந்தசங்குகள், வந்துபடுக்க - வந்துபடுத்தலால், நளினம் - தாமரை கள், மலர் - மலர்கின்ற, வெங்கை-திருவெங்கைப் பதியில், வாணர்- வாழ்பவராகிய சிவபெருமானாரது, பணி-குளிர்ச்சியாகிய,வரைமேல் - மலைமீதுள்ள, ஒரு கோமகன் - ஒரு ராஜகுமாரன், (வந்து) ஒண்ணு தற்கு - நமது தலைமகட்கு, உடுக்க - உடுத்தற்கு, மாந்தழை உதவி னன் - மாந்தழையைக் கொடுத்து, மாமலரை கொடுக்க - அழகிய மலர்களைக் கொடுத்தற்கு, மதனை விடுத்து அகன்றான் - மன்மதனை விட்டுப்போயினன், எ - று.

க-ரை. நிறைநீர் வயல்களிற் கமஞ்சூற் சங்குவந்து படிக்கத் தாமரைகள் மலர்கின்ற திருவெங்கை வாணரது பணிவரைமேலொ ருகோமகன், யாம் தினைகாத்துழிவந்து, நந்தலை மகட்குத் தழை தந்து, மலர்தர மதனை விடுத்தகன்றானாதலான், இவளவற்கேயுரிய ளென்பதாம்.

வி-ரை. பண்ணை - வயல். உதவல் - கொடுத்தல். ஒண்ணு தல் - அன்மொழித்தொகை. (௩0௨)

புனறருபுணர்ச்சியா லறத்தொடுநிற்றல்.

அதாவது—பூத்தருபுணர்ச்சியாலறத் தொடுகின்ற தோழி, பின் னும், யாம்புனங்காவலிற் சோலையில் விளையாடிய காலையில் அங்குப் போந்த புதுப்பெருக்கில் குடையப்புக்க நந்தலைவியையந் நீத்தமீர்த் துச் சேறலைக்கண்ட வொரு வேந்தன் இவளை யவ்வெள்ளத்தினின் றணைத் தெடுத்துக் கரையிலுய்த்ததனால், இவள் அவற்கே யுரியளெ னக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வான்கற்றவண்புகழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
றான்கற்றகல்விதளர்வூடுதவுந்தகையெனவே
தேன்கற்றமென்மொழியாள்வருநீரொடுசெல்பொழுதி
லூன்கற்றவேலுரவோனொருவேந்தனுதவினனே.

ப-ரை. வான்கற்ற - விண்ணோராற் கற்கப்பட்ட, வண்புகழ் - வளவிய புகழையுடைய, வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க்கதிபராகிய சிவபெருமானது, மணிவரைமேல்-அழகிய மலைமீது, தான் கற்றகல்வி-ஒருவன்தான் கற்றகல்வியானது,தளர்வூடு-தளர்ச்சியடைந்த காலத்தில், உதவும் தகையெனவே-உதவுகிற தன்மைபோலவே, தேன்கற்ற - தேனினிடத்தே கற்ற, மென்மொழியாள்-மென்சொல்லையுடையவளாகிய நந்தலைவியானவள், வரும்நீரோடு செல்பொழுதில் - பெருகிவருகிற நீரோடடித்துக் கொண்டுபோம்பொழுதில், ஊன்கற்ற - மாமிசத்திற் பழகின, வேல் - வேற்படையையுடைய, உரவோன்-திண்ணியனாகிய, ஒரு வேந்தன் - ஓரரசன், உதவினன் - உதவிசெய்தான், எ - று.

க-ரை. ஒருவன் கற்றகல்வியானது அவனுக்குத் தளர்ச்சிக் காலத் துதவுதல்போலவே, சிவபெருமானது திருவெங்கை மலைமீது, நந்தலைவியை வெள்ளமடித்துக் கொண்டுபோம்போது ஒரு வேந்தன் வந்துதவினன் என்பதாம்.

வி-ரை. வான்-ஆகுபெயர். உதவல் - கைகொடுத்தல். தேன்கற்ற என்பதற்குத் தேனனது இனிக்கக் கற்ற என்றுரைப்பினுமாம். வருநீர் - புதுவெள்ளம். ஊன் - பகைவருடற்றசை. ஊன்கற்ற வேலையுடையோ னென்றதனான் வீரமும், உரவோன் என்றமையால் அவ்வேற்படையைத் தாங்கும் வலியும், ஒரு வேந்தன், என்றமையால் செல்வப்பெருக்கும் ஆளுந்திறனும் உடையோனென்பதினிது விளங்கும். இவ் வேதுவினால் இவனே நந்தலைவிக்குரிய னென்றதாயிற்று. கல்வியுதவுந் தகையென வேந்த னுதவினன் என்றியைத் துரைத்துக்கொள்க. (௩0௩)

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

அதாவது—புனறரு புணர்ச்சியா லறத்தொடு நின்றதோழி, பின்னும், யாம் புனங்காப்பிற் பொழிலூடு விளையாட்டயரும் போழ்தில், ஆண்டோர் கடமாப் போதரக்கண்ட நந்தலைவி மெய்ந்நடுங்கி, முருகவேளை யொப்பவனாகிய வொருவனண்டு வர, அவனைப்புல்லிக் கொண்டாள், அதனால் இவள் அவற்கே யுரியளெனக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஐங்கைக்களிறுதரும்வெங்கைவாணரணிவரைமேல்
வெங்கைக்களிறுதனைப்பாய்வுறவரமெய்ந்நடுங்கிக்
கொங்கைக்களிறுபுறம்பாய்வுறப்புல்லிக்கொண்டனள்வேற்
செங்கைக்குமரனையன்னனொருவனைத்தேமொழியே.

ப - ரை. தேம்மொழியே - தேன்போலு மின்சொல்லையுடையாளே, ஐங்கைக்களிறுதரும் - ஐங்கரப்பிள்ளையை யீன்ற, வெங்கை வாணர் - திருவெங்கை வாணரது, அணிவரை மேல் - அழகிய மலைமீது, வெம் கை - கொடுங் கையினையுடைய, களிறு - ஒரு யானையானது, தன்னைப் பாய்வுற வர - தன்னைப் பாயவர, மெய் நடுங்கி - உடல் நடுங்கி, கொங்கைக் களிறு - தன் கொங்கை வேழம், புறம் பாய்வுற - முதுகிற்பாயுமாறு, வேல் - வேற்படையைத் தாங்கிய, செங்கை - செவந்த கையினையுடைய, குமரனை அன்னோன் ஒருவனை - குமாரக்கடவுளை நிகர்த்தவனாகிய வொருவனை, புல்லிக் கொண்டனள் - தழுவிக்கொண்டனள், (நந்தலைவி) எ - று.

க - ரை. தேமொழியே! ஐங்கைக்களிற்றை யீன்ற வெங்கைவாணரது அழகிய மலைமீது, யாம் புனங்காவல் செய்யுழி ஆண்டோரொருகைக்களிறு தன்னைப் பாயவருதலும் மெய் நடுங்கி, அங்கு வந்த முருகவேளை நிகர்த்தவனாகிய வொருவனைத் தன் கொங்கைக் களிறு அவன் புறத்தே பாய்வுறப்புல்லிக் கொண்டனள், நந்தலைவி யென்பதாம்.

வி - ரை. தேமொழி யென்றது செவிலியை; அன்றித் தலைவியையெனக் கோடலுமமையும்; இப்பொருட்குத் தேமொழி யெழுவாயாகவும், புல்லிக்கொண்டனள் பயனிலையாகவுங் கொள்க. பாய்வுற இரண்டனுள் முன்னையது குற்றவெனவும், பின்னையது உருவவெனவும் பொருள்பயந்து நின்றன. புல்லல் - தழுவல். தேமொழி - அன்மொழித்தொகை. வேற்செங்கைக்குமரனை யன்னோன் என்றமையால், வீரம் அழகு இளமை கல்வி யென்பன யாவுமமைந்தவனென்பது பெறப்பட்டது. இவ்வேதுவினால் இவள் அவற்கே யுரியளென்றவாறும் விளங்கிற்று. (௩0௬)

மணம்விலக்கல்.

அதாவது—தோழியானவள், தலைவி அயலார் மணத்திற்குரியளன்றெனச் செவிலி முதலியோருடன் சொல்லி மணத்தைத்தடாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வன்னித் திருவிழியார்வெங்கைவாணர்மணிவரைமே
லிந்நித்திலவடநல்கினற்கேயன்றியேதிலர்க்குக்
கன்னிக்குமரிமணமுடையாளல்லள்காண்டகைய
சென்னிக்கணிமுடிதாட்கணியாகுஞ்செயலில்லையே.

ப - ரை. திரு - அழகிய, வன்னிவிழியார் - நெருப்புக்கண்ணையுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கையில் வாழ்பவர். (அவரது) மணிவரைமேல் - அழகியமலைமீது, இ - இந்த, நித்திலவடம் - முத்துமாலையை, நல்கினற்கேயன்றி - கொடுத்தவற்கேயல்லாமல், எதிலர்க்கு - அயலார்க்கு, கன்னிக்குமரி - நமதுகன்யாகுமரி, மணமுடையாள் அல்லள் - மணத்துக்குரியளல்லள், சாண்தகைய - சாண்டற்குரிய அழகையுடைய, சென்னிக்கு அணிமுடி - சிரத்திற்கணியாகிய கிரீடம், தாட்கு அணியாகும் செயல் இல்லை - பாதத்திற்கணியாகுஞ் செயலில்லை, எ - று.

க - ரை. நெருப்புக்கண்ணராகிய திருவெங்கைவாணரது அழகியமலைமீது, இந்த முத்துமாலையைக் கொடுத்தவற்கேயன்றி அயலார்க்கு நம் கன்னிக்குமரி மணத்துக்குரியளல்லள், அது எதுபோலவெனின், சென்னிக் கணிமுடி தாட்கணியாகுஞ் செயலிலதுபோலுமென்பதாம்.

வி - ரை. வன்னி - நெருப்பு; (வடசொல்) தேவர்களுக்கு அவியுணவு கொடுப்பவன் என்பது பொருள். நித்திலம் - முத்து. நல்கல் - கொடுத்தல். எதிலர் - அயலார். தகை - அழகு. செயல் இங்குத்தகுதியைக்குறித்தது. ஏ - ஈற்றசை. (௩0௫)

மின்னிடைவேற்றுமைகண்டு நற்றாய்செவிலியைவினுதல்.

அதாவது — தலைமகளது வேறுபாடு கண்ட நற்றாயானவள் இவ்வேறுபாட்டிற்குக் காரண மென்னென்றுவெனச் செவிலியை வினுதல். அதற்குச் செய்யுள், —

நெடுங்கோவளவயல்வெங்கைபுரேசரைநெஞ்சிருத்தாக்
கொடுங்கோலரசர்குடைக்கீழடங்குங்குடியெனவே
யிடுங்கோல்வளைவிழிநீரொழியாமலிருப்பதென்னே
வடுங்கோல்புரைவிழிவெண்முத்தவாணகையாயிழையே.

ப - ரை. அடும் - கொல்லுகிற, கோல் - கணையை, புரை - நிகர்த்த, விழி - கண்களையும், வெள்முத்தம் - வெண்மையாகிய முத்துப்போன்ற, வாள் நகை - ஒளியையுடைய பற்களையும் உடைய, ஆயிழையே - செவிலியே, நெடு - நெடிய, கோ - ஆகாயமளாவிய - வளம் - வளமாகிய, வயல் - வயல்கள் சூழ்ந்த, வெங்கைபுரேசரை - திருவெங்கை நகர்க்கதிபராகிய சிவபெருமானை, நெஞ்சிருத்தா - மனத்திருத்தாத, கொடுங் கோல் அரசர் - கொடுங்கோன்மையுடைய

அரசரது, குடைக்கீழ் அடங்கும் - குடையின்கீழேயடங்கியிருக்கும், குடி எனவே - குடிகளைப்போலவே, இடுங்கோல் வளை - பெய்யப்பட்டவளையலையுடையாட்கு, விழி - கண்களில், நீர் - நீரானது, ஒழியாமல் இருப்பது—, என்னோ - யாது காரணத்தாலோ, எ - று.

க - ரை. அடுங்கோல் புரைவிழி வெண்முத்த வாணகை யாயிழையே! நெடுங்கோவளையல் வெங்கை புரேசரை நெஞ்சிருத்தாக் கொடுங்கோலரசர் குடைக்கீழடங்குங் குடிகள்போல, நமது தலைவிக்குக் கண்களில் நீரொழியாதிருத்தற் காரணம் யாதோவென்பதாம்.

வி - ரை. கோ-ஆகாயம். கோல்வளை - அன்மொழித் தொகை. கோல் - புள்ளி. வெண்முத்தம் என்பதில் வெண்மை - சாதியடை. ஆயிழை - அன்மொழித்தொகை. (௩0௬)

செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியா லறத்தோடு நிற்றல்.

அதாவது—இவ்வாறு வினவிய நற்றாய்க்குச் செவிலி முன்னிலைப் புறமொழியா லறிவியாது முன்னிலை மொழியினாலே களவை வெளிப்படையாய்க் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

புலங்கண்டளவின் மறைவெங்கைவாணர்பொருப்பிடைச்செங்
நிலங்கண்டளவி லுறைதிரிந்தாங்கொர்நெடுந்தகைதன்
னலங்கண்டளவிலலந்திரிந்தாண்மென்னகின்மிசையோர்
கலங்கண்டளவின் மிகநோமருங்குலுன் காரிகையே.

ப-ரை. புலங்கண்டளவில்-புலங்கண்டமாத்திரத்தில், மறை-[illegible], வெங்கைவாணர் பொருப்பிடை - திருவெங்கைவாணரது மலையில், மெல் நகின்மிசை-மெல்லிய தனத்தின்மீது, ஓர்கலம் கண்டளவில்-ஒரு அணிகலத்தைக் கண்டமாத்திரத்தில், மிகநோம்-மிகவும் வருந்துகிற, மருங்குல் - இடையையுடைய, உன் காரிகை - உன் பெண்ணானவள், செங்கிலம் கண்டளவில் - செங்கிலத்தைக் கண்டமாத்திரத்தில், உறைதிரிந்தாங்கு - நீர் திரிந்தாற்போல, ஓர் நெடுந்தகை தன்-ஒரு பெருந்தகையின், நலம்கண்டளவில்-அழகைக் கண்டமாத்திரத்தில், நலம் திரிந்தாள் - தனது நலந்திரிந்தனள், எ - று.

க - ரை. சப்தாதிவிடயங்களுக் கொளிப்பவராகிய திருவெங்கைவாணர் பொருப்பில், உன் காரிகையானவள் ஒரு நெடுந்தகையின் நலங்கண்டளவில், நிலத்தியல்பா னீர்திரிந்தாற்போலத் தன்னலந் திரிந்தாள் என்பதாம்

வி-ரை. சப்தாதி விஷயாகோசரராதலால் இறைவரை "புலங் கண்டளவின் மறைவெங்கைவாணர்" என்றார். பொருப்பு - மலை. செங்கிலம் - செந்தரை. உறை - நீர். திரிதல் - வேறுபடல். நெடுந் தகை - பெரியோன். நலம் - அழகு. நலந் திரிதல் - நலம் வேறு படல். (௩0எ)

நற்றாய் தமருக்கறத்தொடு நிற்றல்.

அதாவது—நற்றாயானவள் செவிலி முன்னிலைமொழியா லறத் தொடு நின்ற செய்தியைத் தமருக்கு வெளிப்படையாய்க் கூறுகிற் றல். அதற்குச் செய்யுள்,—

வேலோடுவாளும்பயினமர்காணம்விளங்கிழையைப்
பாலோடுதேன்கலந்தாங்கிளவாளைபணைமருதச்
சேலோடுபாயுந்திருவெங்கைவாணர்சிலம்பினெடு
மாலோடுமானுமொருவேலவற்குமணஞ்செயுமே.

ப-ரை. வேலோடுவாளும் பயில் நமர்காள்-வேலுடனே வாளும் பழகுகிற நமரங்காள், நம் விளங்கிழையை-நமதுபெண்ணை, பாலோடு தேன்கலந்தாங்கு-பாலோடு தேன்கலந்தாற்போல, இளவாளை-இள வாளைமீன்கள், பணை - வயல்களையுடைய, மருதச்சேலோடு பாயும்- மருதநிலத்துச் சேல்மீன்களோடு பாய்கின்ற, திருவெங்கை - திரு வெங்கைப்பதியில், வாணர் - வாழ்பவராகிய சிவபெருமானாரது, சில ம்பில் - மலையில், நெடுமாலோடுமானும் - நெடுமாலை நிகர்க்கிற, ஒரு வேலவற்கு - ஒரு வேந்தனுக்கு, மணம் செய்யும் - மணஞ்செய்யுங் கள், எ - று.

க - ரை. வேல்வாளிற் பெரும்பழக்கமுள்ள நமரங்காள், நமது பெண்ணை, திருவெங்கைவாணர் சிலம்பிலுள்ள நெடுமாலை நிகர்ப்பவ னாகிய ஒரு வேந்தனுக்கு மணமுடித்துக் கொடுங்கள் என்பதாம்.

வி - ரை. விளங்கிழை-அன்மொழித்தொகை. நெடுமால்-திரு மால். மானல் - நிகர்த்தல். சிலம்பு-மலை. வேலோடுவாளும் பயினமர் காள் என்றாள் தமது மலைநாட்டாரது வீரத்தன்மை தோன்றற்கு. தலைவி பாங்கிக்கு முன்னிலைமொழியா லறத்தொடு நிற்றலும், செ விலிநற்றாய்க்கு முன்னிலைமொழியா லறத்தொடு நிற்றலும் ஆகிய இரண்டும் பூத்தருபுணர்ச்சிமுதல் மூன்றும் முன்னிலைமொழி; வெறி விலக்கலொன்றும் முன்னிலைப் புறமொழி. (௩0அ)

உடன்போக்கு.

அதாவது—தலைவன் தலைவியைத் தன்னூருக் குடன்கொண்டு போதல்.

"போக்கே கற்பொடு புணர்ந்த கௌவை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே"

என்னுஞ் சூத்திரவிதியால் உடன்போக்கு மூவகைப்படும்.

"போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த றேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால் உடன்போக்கு எண்வகைப்படும்.

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தல்.

அதாவது—காப்பு கைமிகலால், தலைவியை யுன்னூருக் குடன்கொண்டு போதியெனப் பாங்கி தலைவற் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்;—

தாயிற்சிறந்த திருவெங்கைவாணர் தடஞ்சிலம்ப
போயிப்பொழுதுவருவலென்றேகிற்பொறுக்கறியா
டீயிற்புழுவெனவேபதைப்பாணின்றிருவருளா
னீயித்திருவையுடன்கொடுபோநின்னெடுநகர்க்கே.

ப-ரை. தாயின்சிறந்த-தாயினுஞ்சிறந்த, திருவெங்கைவாணர் தடஞ்சிலம்ப - திருவெங்கைவாணரது தடஞ்சிலம்பனே, இப்பொழுது போய்வருவல் என்று ஏகின் - இப்பொழுது போய்வருவேனென்று சொல்லிச் செல்லின், பொறுக்கறியாள்-ஆற்றவறியாள், தீயில் புழு எனவே துடிப்பாள் - நெருப்பிற் புழுப்போலவே பதைப்பாள், (ஆதலால்) நீ நின் திருவருளால்-நீ யுனது பெருங்கருணையால், இத் திருவை - இந்தத் திருவை, நின் நெடுநகர்க்கு - உன் பெரிய நகரத்திற்கு, உடன்கொண்டுபோ-உடன்கொண்டு செல்லக்கடவை, எ-று.

க-ரை. தாயிற்சிறந்த திருவெங்கைவாணர்தடஞ்சிலம்ப! போய் விரைந்துவருவேனென்று சொல்லிச் செல்லினும்ஆற்றாளாய்த் தீயிற் புழுப்போலப் பதைப்பாள் ஆதலால், நீ யிவளை யுடன்கொண்டு, நின் நெடுநகர்க்குச் செல்வாயாக வென்பதாம்.

வி - ரை. தாயின் என்பதில் இன் ஐந்தாவதனுறழ்ச்சிப்பொருட்டு. சிலம்பன் - மலைநாடன். பதைத்தல் - துடித்தல். திரு-திருப்போல்வாள்; உவமையாகுபெயர். (௩0௧)

தலைவ னுடன்போக்கு மறுத்தல்.

அதாவது—பாங்கி யிவ்வாறு கூறக்கேட்ட தலைவன் அவளை நோக்கி, யான் செல்வது கடும்பாலை நெறியாதலால் இவளது மெல்லடி பொறுது, இவளை யுடன்கொண்டு சேறல் ஒருவாற்றானும் பொருந்தாதென மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அனிச்சமுமன்னத்தின்றூவியுமாதரடிமலர்க்குச்
சனித்தநெருஞ்சிற்பழமென்றறிந்துந்தகுவரன்றி
மனித்தர்வழங்கரும்வெங்கொடும்பாலைவழியொருநா
னினித்தமொழியுடையாரையெவ்வாறுகொண்டேகுவனே.

ப - ரை. அனிச்சமும் - அனிச்சமலரும், அன்னத்தின் தூவியும் - அன்னத்தூவியும், மாதர் - மாதரது, அடிமலர்க்கு - அடிமலருக்கு, சனித்த-தோன்றின, நெருஞ்சிற்பழம் என்று அறிந்தும் - நெருஞ்சிற்பழம்போலுமென் றறிந்துவைத்தும், தகுவர் அன்றி - இராக்கதரேயன்றி, மனித்தர் - மானுடர், வழங்கரும் - வழங்குதற்கரிய, வெம் கொடும்பாலை வழி - வெங் கொடும்பாலை நெறியில், ஒருநான் - தனியனாகிய நான், இனித்தமொழி உடையாரை - இன்சொல்லுடைய மாதரை, எவ்வாறு கொண்டு ஏகுவன் - எவ்வா றுடன்கொண்டு செல்வேன், எ - று.

க - ரை. அனிச்சமலரும் அன்னத்தூவியும் மாதரடிமலர்க்கு நெருஞ்சிற்பழம்போலுமென் றறிந்துவைத்தும், அரக்கரன்றி மானுடர் சஞ்சரிக்கவொண்ணாத அருஞ்சுரத்தில், இன்மொழியாளாகிய நும் தலைவியை யானெங்ஙனங் கொண்டுசெல்வேன் என்பதாம்.

வி-ரை. அனிச்சம் - அனிச்சமலர், (ஆகுபெயர்); இது மிகவும் மென்மையாகிய மலர் என்பதனை, "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாணுசுப்பிற்கு, நல்ல படா அ பறை," "மோப்பக்குழையு மனிச்சமுகந் திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" "தாமே தமக்கொப்புமற்றில் லவர்இல்லைத்தண் ணனிச்சப், பூமேன்மிதிக்கிற் பதைத்தடி பொங்கு நங்காய்" என்றற் றொடக்கத்தான்றோர் திருவாக்குக்களானினிதுணர்க. அன்னத்தூவி - அன்னத்தின் மென்சிறகர். ஏற்றேகாரம் இரங்கல். (௩க0)

பாங்கிதலைவனை யுடன்படுத்தல்.

அதாவது—தலைவனிவ்வாறு போக்குமறுத்தலைக் கண்ட பாங்கி, அவனையுடன்படுத்திக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

துணையிற்புணர்களிவண்டினம்பூந்தண்டுணர்பொதுளும்
பணையிற்றுயில்பொழில்வெங்கைபுரேசர்பனிவரையாய்
பிணையிற்பிறழ்கருங்கண்ணாட்குநின்னைப்பிரிந்தமல
ரணையிற்கொடியதுவோவையநீசெல்லழற்சுரமே.

ப-ரை. துணையின் - தன்றுணையொடு, புணர் - புணர்கின்ற, களி - களிப்பையுடைய, வண்டு இனம் - வண்டுக்கூட்டம், தண் - குளிர்ச்சிபொருந்திய, பூந்துணர் பொதுளும் - பூங்கொத்துக்கள் நிறைந்த, பணையில் - வயல்களில், துயில் - தூங்குகிற, பொழில் - சோலைகள்சூழ்ந்த, வெங்கைபுரேசர்- திருவெங்கை நகர்க்கதிபராகிய சிவபிரானாது, பனிவரையாய் - குளிர்ந்தமலைநாடனே, பிணையின் - பெண்மான்கண்போல, பிறழ்-பிறழ்கின்ற, கருங்கண்ணாட்கு - கருங் கண்ணளாகிய எனது தலைவிக்கு, நின்னைப்பிரிந்த - உன்னைத்தணந்த, மலர்அணையின் - புஷ்பசயநத்தினும், நீசெல்-நீபோகின்ற, ஐய அழல்சுரம்-அழகாகிய சுடுகின்ற பாலைவழி, கொடியதுவோ-கொடியதா, எ-று.

க-ரை. துணையிற் புணர்களிவண்டினம் பூந்தண்டுணர் பொதுளும் பணையிற்றுயில் பொழில்வெங்கைபுரேசர் பனிவரையாய்! பிணையிற்பிறழ் கருங்கண்ணாட்கு, உன்னைத்தணந்த மலர்ச்சேக்கையினும் நீசெல்லு மழற்சுரம் கொடியதாமோ வென்பதாம்.

வி-ரை. துணை - பெண்வண்டு. துணர்-பூங்கொத்து. பொதுளல் - நிறைதல். பணை - வயல். ஐய - முன்னிலை விளியெனினு மாம். (௩௧௪)

தலைவன் போக்குடன்படுதல்.

அதாவது—இவ்வாறு கூறக்கேட்ட தலைவன், தலைவியை யுடன்கொண்டு போக வுடன்படுதல். அதற்குச் செய்யுள்,—

நாமொழியாதுபுகழ்வானருள்வெங்கைநாதரைச்சொல்
பாமொழியானெய்தலாம்பாலைஞானசம்பந்தனுக்குத்
தேமொழியாயுன்னுயிரனையாட்கருஞ் செம்பவள
வாய்மொழியாலிளங்காவாகும்பட்டமரங்களுமே.

ப-ரை. நாம் ஒழியாது புகழ்வான்-நாமிடையறாது புகழும் வண்ணம், அருள் - அருள்செய்பவராகிய, வெங்கைநாதனை-திருவெங்கையீசரை, சொல் - துதிக்கின்ற, பாமொழியால் - தேவாரப்பாடலால். ஞான சம்பந்தனுக்கு - திருஞான சம்பந்தருக்கு, பாலை - பாலைநிலமானது, நெய்தல்ஆம் - நெய்தனிலமாயிற்று, தேமொழியாய்-தேன்போலு மின்சொல்லையுடையாளே,. உன் உயிர் அனையாட்கு - உன்னுயிரை நிகர்த்தவளாகிய தலைவிக்கு, அரு - அருமையாகிய, செம்பவள வாய்மொழியால், செம்பவளம் போலும் வாய்ச்சொல்லால், பட்டமரங்களும் - பட்டுப்போன மரங்களும், இளங்கா ஆகும் - இளஞ்சோலையாகும், எ - று.

க - ரை. தேமொழியாய்! திருவெங்கை நாதரைப் புகழ்ந்து பாடியதனால் ஞான சம்பந்தனுக்குப் பாலைநிலம் நெய்தனிலமாயினாற்போல், உன்னுயிர்போல் வாட்கு, செம்பவள வாய்மொழியால், பட்ட மரங்களும் இளங்காவாகும் என்பதாம்.

வி - ரை. புகழ்வான் - புகழ. பாமொழி - தேவாரத்திருப்பதிகம். இது பாடினது திருநனிபள்ளியில். தேமொழியாய் என்றது பாங்கியை. (௩௧௨)

பாங்கி தலைவிக்குடன் போக்குணர்த்தல்.

அதாவது—பாங்கி, தலைமகனுடன்போக் குடன்பட்டமையைத் தலைமகட் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தேவியுஞ்சம்புவுநீங்காதவெங்கைச்செழுஞ்சிலம்பர்
காவியுங்கஞ்சமுமாம்பலும்பூத்துக்கவின்கனியும்
வாவியும்பெண்ணணங்கென்றார்கதிர்தெறும்வன்சுரத்திற்
காவியுங்கண்ணுமமுதமும்போன்றொளிராரணங்கே.

ப - ரை. தேவியும் சம்புவும் நீங்காத - உமாதேவியாரும் சிவபெருமானும் இடையறாது நிலைபெற்று வாழ்கின்ற, வெங்கை - திருவெங்கைப் பதியைச்சார்ந்த, செழுஞ்சிலம்பர் - செழியமலைநாடராகிய நந்தலைவர், காவியும் - கருங்குவளையும், கஞ்சமும் - தாமரையும், ஆம்பலும் - செவ்வல்லியும், பூத்து - மலர்ந்து, கவின் கனியும் - அழகு முதிர்ந்த, வாவியும் - தடாகமும், கதிர்தெறும் - சூரியன் வருத்துகின்ற, வன் சுரத்திற்கு - வலியபாலைக்கு, பெண்ணணங்கு என்றார் - பெண்ணணங்கே யென்றனர், ஆவியும் - உயிரும், கண்ணும் - விழியும், அமுதமும் - அமிழ்தமும், போன்று ஒளிர் - ஒத்துவிளங்குகிற, ஆரணங்கே - தெய்வப்பெண்ணே, எ - று.

க - ரை. தேவியுஞ் சம்புவுநீங்காத வெங்கைச் செழுஞ்சிலம்பர், ஆவியுங் கண்ணுமமுதமும் போன்றொளிராரணங்கே! கதிர்தெறும் வன்சுரத்தில் காவியும் கஞ்சமு மாம்பலும் பூத்துக்கவின் கனியும் வாவியும் பெண்ணணங்கென்றுரைன்பதாம்.

வி - ரை. தேவி - உமாதேவி. சம்பு-சிவபெருமான். பெண்ணணங்கு- துர்க்கை. காவியாதிய மலர்களும் அத்தேவியினுறுப்புக்களேயன்றி வேறு காவியாதியவும் அவை பூத்தவாவியும் அச்சுரத்தின் கண்ணின்றென்றவாறு. ஆரணங்கே யென்றது தலைவியை. (௩௧௩)

தலைவி நாணழிவிரங்கல்.

அதாவது—உடன்போக்கில் நாணழியுமே யென்று தலைவியிரங்கிக் கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஊணிலையாகநஞ்சுண்டோன்றிருவெங்கையூரனைய
வாணிலையாகுமதர்விழியாய்முன்வனைந்திருந்த
பூணிலையாகுமவயவம்போலப்பொலிவழிவார்
நாணிலையாகிற்றனுவாற்பயனென்னைநங்கையர்க்கே.

ப - ரை. ஊண் இல்லையாக - உணவில்லையாக, நஞ்சு உண்டோன்-நஞ்சுண்டவனாகிய சிவபிரானது, திருவெங்கையூர் அனைய- திருவெங்கைப் பதியைநிகர்த்த, வாள் நிலையாகும் - வாளினது நிலைமையையுடைய, மதர்விழியாய் - மதர்த்த கண்களையுடையாளே, முன் வனைந்திருந்த - முன்னே தரித்திருந்த, பூண் இல்லையாகும் அவயவம்போல-அணியையிழந்த அவயவம்போல, பொலிவுஅழிவார்- அழகிழப்பார், (ஆதலால்) நங்கையர்க்கு - மாதருக்கு, நாண் இல்லையாகில் - நாணில்லையாயின், தநுவால் - தாமெடுத்தவுடம்பினால், பயன் என்னை - பயன்யாது, எ - று.

க - ரை. ஊணிலையாக நஞ்சுண்டோன் றிருவெங்கை யூரனையவாணிலையாகுமதர்விழியாய்! மாதர் தாம் முன் பணிந்திருந்த அணியையிழந்த அவயவம்போலப் பொலிவழிவார் ஆதலால், நாரியருக்கு நாணில்லையாயின் தாமெடுத்த வுடம்பாற் பயன்யாதென்பதாம்.

வி - ரை. ஊண் - ஆகுபெயர். வனைதல் - அணிதல். தனு-உடம்பு. (௩௧௪)

கற்புமேம்பாடுபூண்முலைப்பாங்கிபுகறல்.

அதாவது—கற்பினது மேம்பாட்டை, பூண்முலைப் பாங்கி தலைவிக்குக் கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,—

சேண்போலுமேனியர்தென்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற், பாண்போலுமென்மொழிச் செந்துவர்வாய்மலர்ப் பாவையன்னாய், பூண்போலு நாண்முதலெல்லாமுமங்கலப் பூங்கழுத்தி, னூண்போலுமாணுறுங்கற்பொன்றுமேகுலநாரியர்க்கே.

ப - ரை. சேண்போலும் மேனியர் - ஆகாயம்போலுந் திருமேனியையுடையவர், தென் வெங்கை வாணர் - தென்வெங்கைப்பதியில்வாழ்பவர் (அவரது) செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையில், பாண்போலும் மெல்மொழி - பாண்போலும்ருதுவசநத்தையும், செந்துவர்வாய் - செம்பவளம்போலும் வாயினையுமுடைய, மலர்ப்பாவை அன்னாய் - திருமகளை நிகர்த்தவளே, குலநாரியர்க்கு - குலமகளிர்க்கு, நாண்முதல் எல்லாமும் - நாணமுதலிய மற்றெல்லா நற்குணங்களும், பூண்போலும் - ஏனைய அணிகள்போலும், மாண் உறும் கற்புஒன்றுமே - மாட்சிமைபொருந்திய கற்பொன்றுமே, பூங்கழுத்தில் - அழகிய கண்டத்திலணிதற்குரிய, மங்கலநாண்போலும் - மங்கலசூத்திரம்போலும், எ-று.

க - ரை. சேண்போலுமேனியர் தென்வெங்கைவாணர் செழுஞ்சிலம்பில் பாண்போலு மென்மொழிச் செந்துவர்வாய் மலர்ப்பாவையன்னாய்! குலநாரியர்க்கு நாண் முதலியயாவும் வேறு ஆபரணங்கள் போலும், கற்பொன்றும் மங்கலசூத்திரம்போலும் என்பதாம்.

வி - ரை. திகம்பரராதலால் சேண்போலுமேனியர் என்றார். பாண் - இராகம். துவர் - பவளம். (நடகு)

தலைவியோருப்பட்டேழுதல்.

அதாவது—கற்பு மேம்பாடு பூண்முலைப் பாங்கி புகலக்கேட்ட தலைவி, பாங்கியை நோக்கி, உரைப்பா ருரைப்பவை யாவுமுரைக்க, உனக்கிசைவாயின், அன்பரோடருந்தீச்சுரஞ்செல்லுவே னெனக் கூறிநிற்றல். அதற்குச்செய்யுள்,—

நரைப்பால்விடையர்பிறைபார்சடையர்மெய்ஞ்ஞானமயர்
வரைப்பாவைபங்கர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லுரைப்பாருரைப்பவையெல்லாமுரைக்கவுனக்கிசைவேற்
றிரைப்பாவையேசெல்லுவேனன்பரோடருந்தீச்சுரமே.

ப - ரை. நரைப்பால் விடையர் - மிக்க வெண்ணிறம் பொருந்திய இடபவாகநத்தையுடையவர், பிறை ஆர்சடையர் - பிறையணி

ந்த சடையையுடையவர், மெய்ஞ்ஞானமயர்-சிச்சொரூபர், வரைப்பாவைபங்கர்-மலைப்பாவைபங்கர், திருவெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர். (அவரது) மணிவரைமேல் - அழகியமலைமேல், உரைப்பாருரைப்பவை யெல்லாம் உரைக்க - சொல்லவிருப்ப முள்ளோர் சொல்லவேண்டுவனயாவும் சொல்லுக, திரைப்பாவையே - திரைப்பாவாய், உனக்கு இசைவேல் - உனக்குச் சம்மதமாயின், அன்பரோடு - அன்பருடனே, அருந்தீச்சுரம் - அருமையாகிய அழற்சுரத்தில், செல்லுவேன் - போவேன், எ - று.

க - ரை. நரைப்பால் விடையர், பிறையார் சடையர், மெய்ஞ்ஞான மயர், வரைப்பாவைபங்கர், திருவெங்கைவாணர் மணிவரைமேல், உரைப்பாருரைப்பவை யெல்லா முரைக்க, உனக்குச் சம்மதமாயின் அன்பரோடருந்தீச் சுரஞ்செல்வேன் என்பதாம்.

வி - ரை. நரைப்பால் - மிகுவெண்மை. வரைப்பாவை - உமாதேவி. இசைவு - சம்மதி. திரைப்பாவையே யென்றது பாங்கியை. அருமை - சேறற்கருமை. (௩கசு)

பாங்கிசுரத்தியல்புரைந்துழித்தலைமகள்சொல்லல்.

அதாவது—தலைமகளொருப் பட்டெழக்கண்ட பாங்கி அவள் செல்லக்கடவ சுரத்தியல்புரைத்துழித் தலைமகள்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மாவோவெனுங்கறைக்கண்டர்வெங்கேசர்மணிவரைமே
லேவோவெனுங்கண்ணிளங்கொடியேமதனெய்யுறும்
பூவோபுயல்வெண்மதியோகனிகொளும்பூங்குயில்வாழ்
காவோவிறைவருடனேபுகுங்கள்ளிக்காடெனக்கே.

ப-ரை. மாவோ என்னும்-நீலமணியோ வென்றுரைத்தற்குரிய, கறைக்கண்டர்-விஷகண்டர், வெங்கேசர்-திருவெங்கைநாதர், (அவரது) மணிவரைமேல் - அழகிய மலைமீதுள்ள, ஏவோ என்னும் - அம்போவென்று சொல்லுதற்குரிய, கண் - கண்களையுடைய, இளங்கொடியே-இளங்கொடிபோல்வாளே, இறைவருடனே புகும் - நமது தலைவரோடு செல்லுகின்ற, கள்ளிக்காடு - கள்ளிக்காடானது, எனக்கு—, பூவோ - மலரோ, புயல்வெண்மதியோ - புயலோடு கூடிய வெள்ளிய சந்திரனோ, கனிகொளும் - கனிகளைக்கவர்கின்ற, பூங்குயில்வாழ் - அழகிய குயில்கள் வாழ்கின்ற, காவோ - சோலையோ, எ - று.

க - ரை. மாவேரவெனுங் கறைக்கண்டர் வெங்கேசர் மணிவரைமேல் ஏவோவெனுங் கண்ணிளங்கொடியே! இறைவருடனே புகுங் கள்ளிக்காடானது, எனக்கு பூமதிமுக்லியனபோலத் துன்பஞ் செய்வனவல்ல வென்பதாம்.

வி - ரை. மா-நீலமணி. கறை-விடம். ஏ - அம்பு. இளங்கொடியேயென்றது பாங்கியை. கா - சோலை. (௩௧௭)

பாங்கிகையடைகொடுத்தல்.

அதாவது—பாங்கிதலைவியைத் தலைமகற்குக் கையடையாகக் கொடுத்து விடுக்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

இறந்தார்பிறந்துழலாதேமுதுகுன்றியற்றுசெயல்
சிறந்தார்புகழ்வெங்கைசெய்வானருளுஞ்சிவனுமையை
யறந்தானுருவுகொண்டன்னான்வசிட்டனருந்ததியைத்
துறந்தாலுநீதுறவேலையனேநின்றுணைவியையே.

ப - ரை. ஐயனே-இறைவனே, இறந்தார்-தன்னிடத்தே வந்து இறந்தவர், பிறந்துழலாதே - ஜன்மித்து திரியாதே, முதுகுன்று - பழமலை, இயற்றுசெயல்-செய்கின்ற செய்கையை, சிறந்தார் - உயர்ந்தோர்கள், புகழ் - புகழ்கின்ற, வெங்கை-திருவெங்கைப்பதியானது; செய்வான் அருள் - செய்யும்படி கிருபை பண்ணுகிற, சிவன் - சிவபெருமான், உமையை - உமாதேவியை, துறந்தாலும் - பிரிந்தாலும், அறந்தான் - தருமமே, உருவுகொண்டன்னான் - உருக்கொண்டாற்போன்றவன் ஆகிய, வசிட்டன் அருந்ததியைத் துறந்தாலும்-வசிட்டன் அருந்ததியைவிட்டுப் பிரிந்தாலும், நின் துணைவியை - உன் துணைவியை, நீ துறவேல் - நீ விட்டுப்பிரியாதே, எ - று.

க - ரை. இறந்தார் பிறந்துழலாதே முதுகுன் றியற்றுசெயல் சிறந்தார் புகழ்வெங்கை செய்வானருளுஞ் சிவனுமையைத் துறந்தாலும், வசிட்டன் அருந்ததியைத் துறந்தாலும், ஐயனே! நீ நின்றுணைவியைத் துறவேல் என்பதாம்.

வி - ரை. செய்வான் - செய்ய. ஐயனே யென்றது தலைமகனை. துணைவி - நாயகி. துறத்தல் - கைவிடுதல். கையடை-அடைக்கலம். (காணிக்கை). (௩௧௮)

பாங்கிவைகிருள்விடுத்தல்.

அதாவது—பாங்கிதலைவியை மிக்க இருட்காலத்தில் தலைவனோடு செல்லவிடாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வெங்கேதகைமுனிவார்வெங்கைவாணர்தம்வெற்பிலன்னை
யெங்கேமகளென்றிறுப்பாளவட்குன்னியல்பதனை
யிங்கேயிருந்துரைத்தோரிமைப்போதினுமெப்படியு
மங்கேவந்துன்னொடுகூடுவனான்மலராரணங்கே.

ப - ரை. வெங்கேதகைமுனிவார்-வெவ்விய தாழம்பூவை வெறுப்பவர், வெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) வெற்பில் - மலையில், அன்னை - தாயானவள், எங்கே மகள் என்று - எங்கே என்பெண்என்று, இறுப்பாள் - வினவுவாள், அவட்கு - அவளுக்கு, உன் இயல்பதனை - உனது நிலையை, இங்கே இருந்து உரைத்து - இங்கே இருந்து சொல்லி, ஓர் இமைப்போதில் - ஒரு இமைப்பொழுதில், எப்படியும்-எவ்விதமாயினும், அங்கே வந்து உன்னொடு கூடுவன் - அங்கே வந்து உன்னுடன் சேர்வேன், நான் - யான், மலர் ஆரணங்கே - மலர்மாதே, எ - று.

க - ரை. ஆரணங்கே! வெங்கேதகை முனிவார் வெங்கைவாணர் தம் வெற்பில், அன்னையானவள் எங்கே மகளென்றென்னைக் கேட்பாள், அவளுக்குன் செய்தியைச்சொல்லி, அங்கே வந்துன்னொடு கூடுவேன் என்பதாம்.

வி - ரை. கேதகை - தாழை. முனிதல் - அங்கீகரியாதொழித்தல். தம் - சாரியை. இயல்பு - சுரத்திற் சென்ற செய்தி. மலர் ஆரணங்கு என்றது தலைவியை. (௩௨௧)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

அதாவது—தலைமகன் தலைமகளை யுடன்கொண்டு சுரத்துச் செல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

கொடும்பாவிகளுமொருமாதவப்பயன்கொள்வரென
னெடும்பார்மிசையின்றறிந்தாம்விழிபொழிநீர்பெருகச்
சுடும்பாலையிலுன்றிருவடித்தாமரைதோய்ந்தமையா
லடும்பாதகநஞ்சமுண்டமைவார்வெங்கையாரணங்கே.

ப - ரை. அடும்-கொல்லுகின்ற, பாதகம் - பாபரூபமாகிய, நஞ்சம் - விடத்தை, உண்டு அமைவார் - உண்டு அமைவுபெற்று இருப்பவராகிய சிவபெருமானரது, வெங்கை-திருவெங்கைப்பதியிலுள்ள, ஆரணங்கே - பெண்ணே, கொடும்பாவிகளும் - கொடும்பாவிகளும், ஒருமாதவப்பயன் - ஒரு பெருந்தவப்பயனை, கொள்வர் எனல்-பெறுவர் என்பதை, நெடும்பார்மிசை - நெடிய பூவுலகில், இன்று அறிந்

தாம் - இன்று உணர்ந்தோம், விழி-கண்களினின்றும், பொழி-சிந்துகின்ற, நீர் - நீரானது, பெருக-பெருக்கெடுக்க, சுடும்-சுடுகின்ற, பாலையில் - பாலைநிலத்தில், உன் - உனது, திருவடித்தாமரை தோய்ந்தமையால் - திருவடித்தாமரையானது படிந்தமையால், எ - று.

க - ரை. அடும்பாதக நஞ்சமுண்டமைவார் வெங்கையாரணங்கே! விழிபொழி நீர்பெருகச்சுடும் பாலையினுன்றிருவடித் தாமரை தோய்ந்தமையால், கொடும்பாவிகளுமொரு மாதவப்பயன் கொள்வரென்பதை, நெடும்பார்நிசை யின்றறிந்தோம் என்பதாம்.

வி - ரை. மாதவம் - பெருந்தவம். கொள்வர் - பெறுவர். இன்றறிந்தாம் என்றமையா னிதற்கு முன்பெல்லாம் அறியாமைபெற்றும். தோய்தல் - படிதல். அடுதல் - கொல்லுதல். (௩௨0)

தலைமகன் பொழில்கண்டு வியந்தல்.

அதாவது—தலைமகன் தான் செல்லுஞ் சுரத்தில் ஒருபொழிலைக்கண்டு, ஒளியிழை தாழ்நிறப்பாரமென்முலையாய்! பாலைசெய்துன்பமொழியுமாறு, ஒருபொழி லெதிர்ப்பட்டது காண்டியெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பிறப்பாம்வனம்புக்குழல்வார்தமக்குப்பெரிதுமுன்செய்
யறப்பாலுதவுந்திருவெங்கைவாணரடிநிழல்போ
லுறப்பாலைசெய்துயரெல்லாமொழியவொளியிழைதாழ்
நிறப்பாரமென்முலையாய்பொழிலோவொன்றுநேர்ந்ததுவே.

ப-ரை. பிறப்புஆம்- பிறவியாகிய, வனம்புக்கு-காட்டில்புகுந்து, உழல்வார்தமக்கு - உழல்பவருக்கு, பெரிதும் - மிகவும், முன்செய்-முற்பிறப்பில்செய்த, அறப்பால்-அறப்பயன், உதவும்-உதவுகின்ற, திருவெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, அடி நிழல்போல்-திருவடி நிழல்போல, உற - மிகுதியாக, பாலை - இப்பாலை நிலமானது, செய் உண்டாக்கின, துயர் எல்லாம் - துன்பம் எல்லாம், ஒழிய-நீங்கும்படி, ஒளி - ஒளிபொருந்திய, இழை-ஆபரணங்கள், தாழ் - தங்குகின்ற, நிறம் - நிறமுள்ள, பாரம் - பொறையாகிய, மெல்முலையாய் - மெல்லிய தனங்களை யுடையாளே, பொழிலோ ஒன்று நேர்ந்தது - சோலையோ ஒன்று எதிர்ப்பட்டது, எ - று.

க - ரை. ஒளியிழை தாழ்நிறப்பார மென்முலையாய்! பிறப்பாம் வனம்புக்குழல்வார் தமக்குப் பெரிதுமுன் செய்யறப்பாலுதவுந் திருவெங்கைவாண ரடிநிழல்போல், பாலைசெய்துயர் எல்லா மொழியவோர் சோலை யெதிர்ப்பட்டது காண்டியென்பதாம். (௩௨௧)

தலைமகன்றலைமகளசைவறிந்திருத்தல்.

அதாவது—தலைமகன் தலைமகளது அசைவறிந்து அப்பொழிலின் கண் தங்கியருள்கவெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஆடும்பதத்தர்திருவெங்கைவாணரதிகபுகழ்
பாடுங்குமுதம்புனலூறவெய்யபரிதியினால்
வாடுங்கமலமுகவேர்புலரமலர்ந்துதென்ற
லோடுங்குளிர்தண்பொழிற்கேயிருந்தருளொண்ணுதலே.

ப - ரை. ஒண்ணுதலே - ஒண்ணுதலே, ஆடும் பதத்தர் - நடனஞ்செய்யும் திருவடியை உடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) அதிகபுகழ் - மிக்கபுகழினை பாடும் - பாடுகின்ற, குமுதம் - செவ்வல்லிமலர், புனலூற - நீர்சுரக்க, வெய்ய - வெம்மையாகிய, பரிதியினால் - சூரியனால், வாடும் - வாட்டமடைந்த, கமலமுகம்-தாமரைமலர்போலும் முகத்தில், வேர்புலர - வேர்வை உலர, மலர்ந்து-மலர்கள் விரிந்து, தென்றல்-தென்றற்காற்றானது, ஓடும்-சஞ்சரியாநின்ற, குளிர்-குளிர்ந்த, தண்பொழிற்கே - தண்ணிய சோலையிடத்தே, இருந்தருள்-இருந்தருள்வாயாக, எ-று.

க - ரை. ஒண்ணுதலே! ஆடும்பதத்தர் திருவெங்கைவாணர் அதிக புகழ்பாடுங் குமுதம் புனலூற வெய்யபரிதியினால் வாடுங்கமல முகம்வேர் புலர மலர்ந்து தென்றலோடுங் குளிர்தண் பொழிற்கேயிருந்தருள் என்பதாம்.

வி - ரை. ஆடும்பதத்தர் - நடனபாதர். பாடுங்குமுதம் - வாய். வேர் - வெயர்வை. ஓடுதல் - சஞ்சரித்தல். பொழிற்கு உருபுமயக்கம். ஒண்ணுதல் - அன்மொழித்தொகை. (௩௨௨)

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

அதாவது—தலைமகளை மகிழ்ந்து அவள் கூந்தற் கண்ணே அலரைச்சூட்டி அதனால் பரவசமடைந்து கூறுநிற்றல். உவகை - அறிவொடு கூடியது. மகிழ்ச்சி - அறிவழிந்தது. "என்னை, "உள்ளக் களித்தலுங்காண மகிழ்தலும், கள்ளுக்கில் காமத்திற்குண்டு" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் வரைந்தவுரையானு மினிது விளங்கும். அதற்குச் செய்யுள்,—

எண்ணியவெண்ணமுடிப்பார்தம்வெங்கையிமையவெற்பி
னுண்ணியநூன்மருங்குற்கனிவாய்வின்னுதலியுன்றன்
மண்ணியநீலமணிவார்குழலின்மலர்புனையப்
பண்ணியபுண்ணியமுன்னமென்னோவென்றன்பாணிகளே.

ப - ரை. எண்ணிய - நினைத்த, எண்ணம்-எண்ணத்தை, முடிப்பார் - முடித்துத்தருபவராகிய சிவபெருமானாரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள. இமயவெற்பில் - இமய மலையில், நுண்ணிய - நுட்பமாகிய, நூல் - நூல்போன்ற, மருங்குல் - இடையினையும், கனிவாய்-கனிவாயினையும், வில்நுதலி-வில்போன்ற நெற்றியினையுமுடையவளே. உன்றன் - உனது, மண்ணிய- அலங்கரிக்கப்பட்ட, நீலமணி-நீலமணிபோலும், வார்-நீண்ட, குழலில் - கூந்தலில், மலர் புனைய -மலர்சூட்ட, என்றன் பாணிகள் - எனது கைகள், முன்னம்-முற்பிறப்பில், பண்ணிய புண்ணியம் என்னோ - செய்த புண்ணியம் யாதோ, எ - று.

க - ரை. எண்ணிய வெண்ண முடிப்பார் தம்வெங்கை யிமயவெற்பில் நுண்ணிய நூன்மருங்குற் கனிவாய் வின்னுதலி! உனது நீலமணிபோலும் வார்குழற்கண்ணே மலர்சூட்டுமாறு, முற்காலத்து என்கைகள் செய்திருந்த புண்ணிய மென்னோ வென்பதாம்.

வி - ரை. உவப்பு அறிவொடுகூடியது. மகிழ்வு-அறிவழிந்தது. "எண்ணிய வெண்ண முடிப்பார்" அன்பரதெண்ணங்களை யெல்லாம் அவரெண்ணியாங்கே முடித்துத் தருபவர். அங்ஙன மியையுமோவெனின்,இயையும் சர்வசக்தராதலாலென்க. அங்ஙனமுடித்துத் தந்தவையாவையெனின்,செங்கல்லைப்பொன்னாக்கித் தருதல் முதலியவை. கனிவாய் – கனிந்தவாயெனவுமாம். மண்ணல் - அலங்கரித்தல், கைபுனைதல். புனைதல் – சூட்டல். (நூஉரு)

கண்டோரயிர்த்தல்.

அதாவது—இவ்விருவரது போக்கினைக்கண்ட வழிப்போக்கர், இவரது மேம்பாடிருந்தவாற்றான் இவர் எளியரல்லரென் றையுற்றுக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

நந்தனும்வெள்ளைமதகரிவேந்துநறியவரா
விந்தனுமுள்ளங்கசிந்தேத்தும்வெங்கைவிமலர்தருங்
கந்தனும்வள்ளியுமோவறியேமிந்தக்காளையெழின்
மைந்தனும்வள்ளிதட்போதணிவார்குழன்மங்கையுமே.

ப - ரை. இந்த - இந்த, காளை - யவ்வனபருவமுள்ள, எழில் மைந்தனும் - அழகிய ஆடவனும், வள் இதழ்போது - வளவிய இதழையுடைய மலரை, அணி - தரித்த, வார்குழல் - நீண்ட கூந்தலையுடைய, மங்கையும் - பெண்ணும், நந்தனும் - திருமாலும், வெள்ளை மதகரிவேந்தும் - வெள்ளைமதயானையின் அரசனும், நறிய அரவிந்

தனும் - பிரமதேவனும், உள்ளம்கசிந்து - மனங்கசிந்து, எத்தும் - துதிக்கின்ற. வெங்கை - திருவெங்கைப்பதியில் எழுந்தருளியிருக்கிற, விமலர் - சிவபிரானார், தரும் - ஈன்ற, கந்தனும் - சுப்பிரமணியனும், வள்ளியுமோ - வள்ளிநாயகியுமோ, அறியேம் - அறிந்திலேம், எ - று.

க - ரை. திருமாலும் பிரமனும் இந்திரனும் மனங் கசிந்தேத்துகின்ற திருவெங்கையீசர் தந்த கந்தனும் வள்ளியுந்தாமோ, எதிரே வருகிற காளையும் கன்னியுமென்பதாம்.

வி - ரை. நந்து - சங்கு. நந்தன் - சங்கத்தையுடையவன். (திருமால்). வெள்ளையானையாகிய அயிராவதத்திற் கிறைவனாதலால் இந்திரனை வெள்ளைமதகரிவேந்து என்றார். அரவிந்தம் - செந்தாமரை மலர்; அதில் வீற்றிருப்பவனாதலால் பிரமனை 'நறியவரவிந்தன்' என்றார். விமலர் - இயல்பாகவே பாசவிமுக்தர். (௩உ௪)

கண்டோர்காதலின்விலக்கல்.

அதாவது—இவர்களை யெதிரே கண்டவர்கள், தலைவனைநோக்கி இம்மாது மிக வலசினள், இனிநீபோகலாகாது, இவ்விராப்பொழுது எஞ்சிறுகுடிலிற் றங்கி, நாளை அவளை யுடன்கொண்டுன்னூர்க்குச் செல்லக்கடவை யெனத் தமது காதன் மிகுதியான் விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தாதையனைய திருவெங்கைவாணர் தடஞ்சிலம்பிற்
சீதையொடுவருமாலனையாயித் திருந்திழையாள்
கோதைவெயிலிடைப்பட்டனையாளெங்குடிலில்வைகி
மாதையுடன்கொண்டுநாளையுன்னூர்க்குவழிக்கொள்கவே.

ப - ரை. தாதை அனைய - தந்தையை நிகர்த்த, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, தடம்சிலம்பில் - பெரிய மலையில், சீதையொடுவரும் - சீதையோடு கூடி வருகின்ற, மால் அனையாய் - ஸ்ரீராமரை நிகர்த்தவனே, இத்திருந்திழையாள் - இந்தப் பெண்ணானவள், கோதை-ஒருபூமாலையானது, வெயிலிடைப் பட்டனையாள் - வெயிலில் அகப்பட்டாற்போல் மிகவும் வாட்டமடைந்திருக்கின்றாள், (ஆதலால்) எம்குடிலில் வைகி-எம்முடைய குடிசையில் தங்கி, மாதை - இப்பெண்ணை, நாளை - நாளையதினம், உடன் கொண்டு - உடனே அழைத்துக்கொண்டு, உன்னூர்க்கு-உனதுஊருக்கு, வழிக்கொள்க - வழிக்கொள்ளக்கடவை, எ - று.

க - ரை. தாதையனைய திருவெங்கைவாணர் தடஞ்சிலம்பில் சீதையொடு வருமாலனையாய்! இத்திருந்திழையாள், கோதை வெயிலிடைப்பட்டனையாள், ஆதலால், இனிப்போகலாகாது, இவ்விராஎமது குடிலில் தங்கி நாளை அவளையுடன்கொண்டு உன்னூர்க்கு வழிக்கொள்க வென்பதாம்.

வி - ரை. "விடையதூரிறையே தாதை மற்றவன் பான்மின்னெமதன்னை" என மேலோர் கூறலானும், எல்லாவுயிர்களுக்குந் தந்தைபோறலானும், இறைவரை, 'தாதையனைய திருவெங்கைவாணர்,' என்றார். சீதையொடு வருமால்-ஸ்ரீராமர். கோதை-பூமாலை. வைகல்-தங்கல். வழிக்கோடல் - பிரயாணப்படல். (௩௨௫)

கண்டோர்தன்பதியணிமைகூறல்.

அதாவது—எதிரே கண்டவர்கள் இவர்களுக்குள்ளத்தளர் வொழியுமாறு, தலைவனை நோக்கி, உங்கள் மாடவள நகரானது மிகவு மணித்தெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பணியேறியசெஞ்சடைவெங்கைவாணர்பணிவரைமேற்
கணியேறுமாவிற்படர்கொடிமீதுகழனிவளை
யணியேறுவேழம்பர்போலேதவழுமணிநகர
மணியேறுதோளண்ணலேயுங்கண்மாடவளநகரே.

ப - ரை. பணிஏறிய - பாம்பு ஏறப்பெற்ற, செஞ்சடை - செஞ்சடையை உடைய, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, பனிவரைமேல் - குளிர்ந்த மலைமீது, கணிஏறுமாவில்-கணியின்மீதேறிய மாவினிடத்து, படர்கொடிமீது - படர்ந்தகொடியின்மீது, கழனி - வயல்களிலுள்ள, வளை - சங்குகள், அணி ஏற - அழகுமிக்க, வேழம்பர்போலேதவழும்-வேழம்பர்போலே தவழ்கின்ற, அணிநகரம்-அழகிய நகரமானது, மணியேறுதோள் அண்ணலே - மணிவடம் அணிந்த புயத்தை உடைய பெரியோனே, உங்கள்-உங்களுடைய, மாடம்-மாளிகைகள் சூழ்ந்த, வளநகர் - வளநகரமேயாம், எ - று.

க - ரை. மணியேறு தோளண்ணலே! பணியேறிய செஞ்சடை வெங்கைவாணர் பனிவரைமேல், கணியேறுமாவிற் படர்கொடிமீது கழனிவளை அணியேறு வேழம்பர்போலே தவழும் அணிநகரம் உங்கள் மாடவளநகர் என்பதாம்.

வி - ரை. பணி - பணத்தையுடையது. பணம் - படம். கணி - வேங்கை மரம். மா - மாமரம். வேழம்பர் - கழைக் கூத்தர். மணி - மணிவடம்; முத்துமாலை முதலியன. (௩௨௬)

தலைவன்றன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்.

அதாவது—தலைவன் தன்னூரடைந்தமை தலைமகட்குக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

பன்னகர்கின்னரமன்னவரென்றும்பரவுவெங்கை
நன்னகர்தன்னகரென்னுமெம்மான்கிரிநன்னுதலாய்
பொன்னகரென்னகரிந்நகர்முன்னெனப்போற்றலுறு
மிந்நகரென்னகர்நின்னகராகவெழுந்தருளே.

ப - ரை. பன்னகர் கின்னரமன்னவர் - பன்னகரும் கின்னரவேந்தரும், என்றும்-எக்காலத்தும், பரவு-வழிபடுகின்ற, வெங்கைநல்நகர் - திருவெங்கையாகிய நல்லநகர், தன்னகர் என்னும் - தனது நகரம் என்கின்ற, எம்மான் - எம்பெருமானது, கிரி - மலையிலுள்ள, நன்னுதலாய் - நன்னுதலை உடையாளே, இந்நகர்முன் - இந்த நகரத்துக்குமுன்னே, பொன்னகர் - பொன்நகரமானது, என்நகர்-என்ன நகரம், என - என்று, போற்றல்உறும்-யாவராலும் துதிக்கப்படுகிற, இந்நகர் - இந்த நகரமானது, என்நகர்-என்நகரமாகும், நின்நகர்ஆக - உன்நகரமாகக்கொண்டு, எழுந்தருள் - எழுந்தருளக்கடவை எ - று.

க - ரை. பன்னகர் கின்னர மன்னவரென்றும் பரவு வெங்கை நன்னகர் தன்னகரென்னு மெம்மான் கிரி நன்னுதலாய்! இந்நகர்முன் பொன்னகரென்னகர் என்று யாவருந் துதிக்கிற இந்தநகரம் எனது நகரமாகும், இதனை யுன்னகராகக்கொண்டு இதனிடத் தெழுந்தருள்வாயாக வென்பதாம்.

வி - ரை. பன்னகர் - பாம்புருவினராகிய வோர்தேவசாதியார். எம்மான் என்றது சிவபெருமானை.

இவற்றுள் பாங்கி தலைவற் குடன்போக்குணர்த்தலும், தலைவிக் குடன்போக்குணர்த்தலும் ஆகியஇரண்டும் போக்கறிவுறுத்தல். தலைமகன் மறுத்தலும், தலைவி நாணழிவிரங்கலும் ஆகிய இரண்டும் போக்குடன்படாமை. பாங்கி தலைவனை யுடன்படுத்தலும், தலைவி கற்பின்மேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறலும் ஆகிய இரண்டும் போக்குடன் படுத்தல். தலைவன் போக்குடன் படுத்தலும், தலைவி ஒருப்பட்டெழுதலும், பாங்கி சுரத்தியல்புரைத்தழிச் சொல்லலும், ஆகிய மூன்றும் உடன்போக் குடன்படுதல். பாங்கி கையடை கொடுத்தலும், வைகிருள் விடுத்தலும், தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலும் ஆகிய மூன்றும் போக்கல். தலைவன் தலைவி யசை வறிந்திருத்தலும், கண்டோர் காதலின் விலக்கலும் ஆகிய இரண்டும் விலக்கல்.

தலைவன் தலைவியை யுவந்தலர் சூட்டியுண்மகிழ்ந்துரைத்தலும், கண்டோரயிர்த்தலும் ஆகிய இரண்டும் நிகழ்தல். கண்டோர் தன்பதியணிமை சாற்றலும், தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலும் ஆகிய இரண்டும் தேற்றமெனக்கொள்க. (௩௨௭)

கற்பொடுபுணர்ந்தகௌவை.

அதாவது—தலைவி தலைவனதுடைமையாய்க் கற்பொடு கூடியவதனை அயலார் விராயசேரியர் பலருமறிதல்.

"செவிலிபுலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோரிரக்கம்
செவிலிபின்றேடிச் சேறலென்றாங்குக்
கற்பொடுபுணர்ந்த கௌவையை வகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால், கற்பொடு புணர்ந்தகௌவை ஐவகைப்படும்.

செவிலிபாங்கியைவினாதல்.

வெளிப்படை. அதற்குச் செய்யுள்,—

சொன்மாதுதன்புகழ்யாழிலிட்டேத்தித்தொழுமிமைய
நன்மாதுபங்கர்திருவெங்கைவாணர்நன்னாடனையா
யென்மாதுசென்றவிடமேதறிந்திலனின்முழுதும்
பொன்மாதுசென்றமனைபோற்பொலிவறப்புல்லென்றதே.

ப - ரை. சொல்மாது - சரஸ்வதி, தன்புகழ் - தனது புகழை, யாழிலிட்டு எத்தி-யாழியில் அமைத்து துதித்து, தொழும்-வணங்குகின்ற, இமையநன்மாதுபங்கர் - மலையரையன் பெண்ணாகிய உமாதேவியின் இடதுபக்கத்தை உடையவர், திருவெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) நல் நாடு அனையாய் - நல்ல நாட்டை நிகர்த்தவளே, என்மாது சென்றவிடம் - என்பெண்போன இடம், ஏது - யாதோ, அறிந்திலன் - அறிந்திலேன், இல்முழுதும் - வீடுமுழுதும், பொன்மாது சென்றமனைபோல் - திருமகள்விட்டு நீங்கின மனையைப்போல, பொலிவு அற - ஒளி அற, புல்என்றது - புல் என்றது, எ - று.

க - ரை. சொன்மாது தன்புகழ் யாழிலிட்டேத்தித் தொழுமிமய நன்மாதுபங்கர் திருவெங்கைவாணர் நன்னாடனையாய்!என்மாது சென்றவிடமே தறிந்திலன், இல்முழுதும், பொன்மாது சென்றமனைபோற் பொலிவறப்புல்லென்றதே யென்பதாம்.

வி - ரை. யாழ் - வீணை. பொன்மாது - இலக்குமி. பொலிவு - விளக்கம். புல்லெனல் - ஒளிமழுங்கல். (௩௨௮)

பாங்கி செவிலிக்குணர்த்தல்.

அதாவது—இவ்வாறு வினவின செவிலிக்குப் பாங்கி, தானறிந்ததை மறையாது வெளிப்படையாய்க் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சாந்தந்தருபவர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பிற்
சேந்தங்கயல்விழிநீர்மல்கவேநின்றுதேம்புமன்னே
காந்தந்தொடர்கரும்பொன்போலவின்றுதன்காந்தனைக்கண்
டேந்தங்கலமுலைச்செம்பொனன்றொடொடர்ந்தேகினளே.

ப - ரை. சாந்தந்தருபவர் - சாந்தநிலையை அருள் செய்பவர், வெங்கைபுரேசர் - திருவெங்கைபுரேசர், தடம்சிலம்பில்-பெரியமலையில், அம்கயல்விழி-அழகிய கயல்போன்ற விழிகள், சேந்து-சிவந்து, நீர்மல்கநின்று - நீர் ததும்ப நின்று, தேம்பும் அன்னே - அழாநின்ற அன்னையே, காந்தம் தொடர் கரும்பொன்போல - காந்தத்தை தொடர்ந்து செல்கின்ற இரும்பைப்போல, இன்று - இப்பொழுது, தன் காந்தனைக்கண்டு - தன் கொழுநனைக்கண்டு, ஏந்து - ஏந்தப்பட்ட, அம் - அழகிய, கலம் - ஆபரணம் அணிந்த, முலை - தனங்களையுடைய, செம்பொன் அன்னாள் - திருமகளை நிகர்த்தவள், தொடர்ந்து ஏகினள் - தொடர்ந்து சென்றாள், எ - று.

க - ரை. சாந்தந்தருபவர் வெங்கைபுரேசர் தடஞ்சிலம்பில், சேந்தங்கயல்விழி நீர்மல்கவேநின்று தேம்புமன்னே! காந்தந் தொடர்கரும் பொன்போலவின்றுதன் காந்தனைக்கண்டு, ஏந்தங்கலமுலைச் செம்பொனன்றொடொடர்ந்தேகினள் என்பதாம்.

வி - ரை. சாந்தம் - மௌனநிலை. (விசிராந்தி.) சேந்து என்பதற்குப் பகுதி செம்மை. மல்கல் - ததும்பல். தேம்புதல் - அழுதல். கரும்பொன் - இரும்பு. காந்தன் - கணவன். கலம் - ஆபரணம். செம்பொன் - திருமகள். (௩௨௯)

செவிலி தேற்றுவோர்க்கெதிரழிந்து மொழிதல்.

அதாவது—செவிலியானவள், தன்னைத் தேற்றுவோர்க்கெதிரழிந்து, அவர்களை நோக்கி, நீங்கள் என்னைப்போல வொருபெண்ணைப்பாலையிற்போக்கி நிற்றிராயின், என்றுயர் முழுதுமுணர்வீராதிரெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அனையேயனையவருளாளர்வெங்கையணிவரைமே
லினையேலெனவெனக்கோதிநிற்பீரெனைப்போலவொரு
புனையேடவிழ்மலர்க்கோதையைப்பாலையிற்போக்கிநின்றால்
வினையேனுறுதுயரெல்லாமுமக்குவெளிப்படுமே.

ப - ரை. அனையே அனைய - தாயையே நிகர்த்த, அருளாளர் - அருளாளராகிய சிவபெருமானரது, வெங்கைஅணிவரைமேல் - திருவெங்கையாகிய அழகிய மலையின்மீது, இனையேல் என - வருந்தாதே என்று, எனக்கு ஓதிநிற்பீர்-எனக்குச் சொல்லி நிற்பவரே, எனைப்போல-என்னைப் போல, ஒரு - ஒரு, புனையேடு அவிழ்மலர்கோதையை - பெண்ணை, பாலையில்போக்கி நின்றால் - பாலையில் செலுத்தி நிற்பீராயின், வினையேன் உறுதுயர்எல்லாம் - வினையேன் அடைந்த துன்பம் எல்லாம், உமக்கு வெளிப்படும் - உமக்கு வெளிப்படத் தோன்றும், எ - று.

க - ரை. அனையேயனைய வருளாளர்வெங்கை யணிவரைமேல், இனையேல்என, எனக்கு ஓதிநிற்பீர்! என்னைப்போல வொருபுனையே டவிழ்மலர்க்கோதையைப் பாலையிற்போக்கி நின்றால், வினையேனுறு துயரெல்லாமுமக்கு வெளிப்படும் என்பதாம்.

வி - ரை. இனைதல் - வருந்தல். புனையேடவிழ்மலர்க்கோதை- பெண். பாலை - கடுஞ்சுரம். போக்கிநின்றால் வெளிப்படும் என்றதனால் நில்லாமையான் வெளிப்பட்டிலதென்றவாறாயிற்று. (௩௫0)

சேவிலி தன்னறிவின்மை தன்னைநொந்துரைத்தல்.

அதாவது—செவிலி, தலைவி தான் சுரம்போதற்குரிய குறிகள் சிலவற்றை நெருநற்றுச்செய்ததனை யானாய்ந்திலேனெனத் தன்னறியாமையை நொந்துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

புன்றோலுடையர்திருவெங்கைவாணர்பொருப்பணங்கு
வன்றோளிராமனொடுசீதைதங்கண்மனைகடந்து
சென்றோர்வனம்புகுந்தாளென்பர்மாசிறெரிவையர்க்கு
நன்றேவதுபிழைதானேவென்றாளநூநாடிலனே.

ப - ரை. புன்தோல் உடையர் - புல்லிய தோலாடையை யுடையவர், திருவெங்கைவாணவர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) பொருப்பு அணங்கு - வரையணங்கு, வல்தோல் - வலிய புயங்களையுடைய, இராமனொடு - ஸ்ரீராமபிரானோடு, சீதை - சீதாபிராட்டி, தங்கள் மனைகடந்து - தங்கள் மனையெல்லையைக்கடந்து

சென்று - போய், ஓர்வனம் புகுந்தாள் என்பர் - ஒரு வனத்தில் பிரவேசித்தாள் என்று சொல்லுவர் உலகத்தார், மாசுஇல் தெரிவையர்க்கு - குற்றமற்ற மாதருக்கு; அது - அச்செய்கை, நன்றோ - நன்மையோ, பிழைதானோ - குற்றந்தானோ; என்றாள் - என்று சொல்லினள், அது - அந்தச் சொற்பொருளை, நாடிலன் - அப்பொழுது ஆராய்ந்திலேன். எ - று.

க - ரை. புன்றேலுடையர் திருவெங்கைவாணர் பொருப்பணங்குவன்றேளிராமனொடு சீதை தங்கண் மனைகடந்து சென்றோர் வனம்புகுந்தாளென்பர், மாசுஇல் தெரிவையர்க்கு, அது நன்றோ தீதோவென்றாள், அதை யா னாராய்ந்திலேன் என்பதாம்.

வி-ரை. புன்றேலுடையர் திருவெங்கைவாணர் பொருப்பணங்கு என்றது தலைவியை. புயவலியிற் சிறந்தோனாதலானும், வாகை சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கு என ஆன்றோர் சிறந்துரைத்தலானும் 'வன்றோளிராமன் என்றார், என்பர் என்னும் பயனிலைக்கேற்ற உலகத்தார் என்னும் எழுவாய் வருவித்துரைத்துக் கொள்க. தெரிவையர், ஈண்டுப்பருவங்குறியாது மாதர் என்னும் பொதுப்பொருட்டு. நாடல் - ஆராய்தல். "மாவைவந்தாண்டமென்னோக்கிதன் பங்கர்வண்டில்லைமல்லற், கோவைவந்தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி குறிப்பறியேன், பூவைதந்தாள் பொன்னம்பந்தந்தாளெனைப் புல்லிக்கொண்டு, பாவைதந்தாள்பைங் கிளியளித்தாளின்றென் பைந்தொடியே" என்றார் மணிவாசகரும். (௩௩௧)

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

அதாவது—செவிலியானவள் இவ்வாறு தன்னறிவின்மைதன்னைநொந்துரைத்து, புலிமுதலியதுஞ்சுங் கடுங்காட்டிற்சென்ற என் பேதைவந்தால், முருகக்கடவுளுக்கு எமது குடிமுழுதும் அடிமையோலையெழுதிக்கொடுப்போமென்று தெய்வத்தை வாழ்த்தாநிற்றல், அதற்குச்செய்யுள்,—

செடிமுழுதும்புலிதுஞ்சுபொல்லாதவெந்திச்சுரத்தி
லடிமுழுதுஞ்செம்புனல்பாயச்சென்றவணங்குவந்தாற்
படிமுழுதும்புகழ்வெங்கைபுரேசர்தம்பாலனுக்கெங்
குடிமுழுதுந்தொழும்பாளாகவோலைகொடுக்குறுமே.

ப - ரை. செடிமுழுதும் - செடிகள்தோறும், புலி - புலிகள், துஞ்சு - உறங்குகின்ற, பொல்லாத - கடுமையாகிய, வெந்திச்சுரத்தில் - வெவ்வியதிச்சுரத்தில், அடிமுழுதும் செம்புனல்பாய - அடி

முழுதும் உதிரம் பாயும்படி, சென்ற - நடந்துபோன, அணங்கு - என் பெண்ணானவள், வந்தால் - வருவளாயின், படி முழுதும் புகழ் - உலகமுழுதும் புகழாநின்ற, வெங்கைபுரேசர் தம்பாலனுக்கு - திருவெங்கை நாதரது புதல்வனுக்கு, எம் குடிமுழுதும் - எம்முடைய குடிமுழுதும், தொழும்பு ஆளாக - அடிமையாளாக, ஓலைகொடுக்குதும் -'அடிமை யோலைகொடுப்போம்,—எ - று.

க - ரை. செடிமுழுதும் புலி துஞ்சு பொல்லாத வெந்தீச்சுரத்தில், அடிமுழுதும் செம்புனல்பாயச் சென்ற வணங்குவந்தால், படிமுழுதும் புகழ்வெங்கைபுரேசர்தம் பாலனுக்கு எம் குடிமுழுதும் தொழும்பு ஆளாக வோலையெழுதிக்கொடுப்போம் என்பதாம்.

வி - ரை. செடி - சிறுதூறு. துஞ்சல் - உறங்கல். செம்புனல் - உதிரம். அணங்கு - பெண். படி - உலகம். வெங்கைபுரேசர்தம் பாலன் - முருகன். தொழும்பு - அடிமை. (கூகஉ)

செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றல்.

அதாவது—செவிலி நற்றாய்க்கு, தலைவி தலைவனோடு சென்றமையை மறையாது வெளிப்படையாய்க் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வேலைத்தரளமுமைந்தலைநாகவியன்மணியுஞ்
சோலைச்செழுமலரும்போலநம்மைத்துறந்துமெல்ல
மாலைக்குழலிதனக்குரியானைமணந்துசென்றாள்
பாலைப்பொருமொழிபங்கர்வெங்கேசர்பனிவரைக்கே.

ப - ரை. பாலைப்பொரும்மொழி பங்கர்-பாலினை நிகர்த்த இன்சொல்லையுடையவளாகிய உமாதேவியாரைஇடப்பாகத்திலுடையவர், வெங்கேசர் - திருவெங்கைநாதர், (அவரது) பனிவரைக்கு-குளிர்ந்த மலையில், வேலைத்தரளமும் - கடலிற்பிறந்த முத்தும்,ஐந்தலைநாகம்-ஐந்தலைநாகமீன்ற, வியன்மணியும் - பெருமை பொருந்திய ரத்நமும், சோலைச் செழுமலரும் - சோலையில் மலர்ந்த செழுமையாகிய மலரும், போல - போன்று, மாலைக்குழலி - பூமாலையையணிந்த கூந்தலையுடையாள், நம்மைத்துறந்து - நம்மைநீங்கி, மெல்ல - மெய்ய, தனக்கு உரியானை - தனக்கு உரியவனை, மணந்து சென்றாள் - கூடிச்சென்றாள், எ - று.

க - ரை. வேலைத்தரளமும், ஐந்தலைநாக வியன்மணியும், சோலைச்செழுமலரும்போல, மாலைக்குழலி, நம்மைத்துறந்து, தனக்குரி

யானை, மெல்லமணந்து, பாலைப்பொருமொழி பங்கர்வெங்கேசர்பனி வரைக்கு, சென்றாள் என்பதாம்.

வி - ரை. வேலை - கடல். தரளம் - முத்து. வியல், வியன் இரண்டற்கும் பொருள் வேறுபாடின்று. தனக்குரியானை-தனக்குரியவனாகிய கணவனை. மணத்தல் - கூடல். பாலைப்பொருமொழி - பாலை நிகர்த்தமொழியினையுடையாள்; (உமாதேவி). வரைக்கு - உருபுமயக்கம். வேலைத்தரளம், ஐந்தலைநாகவியன்மணி, சோலைச்செழுமலர் என்பன தாம்பிறந்திடங்களுக்குப் பயன்படாவாயினபோல இவளும் நமக்குப் பயன் படாளாயினளென்றவாறு. (௩௩௩)

நற்றாயயலார்தம்மொடுபுலம்பல்.

அதாவது—நற்றாயானவள், தன்னைத் தேற்றவந்த அயலாரோடும் புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொன்போ லொருபெண் டிருவெங்கையானருள்பூண்டுபெற்
றென்போலிலையுலகம்பதினான்கினுமிப்பொழுது [றோ
துன்போடழுங்குமவருமென்போலிலைச்சோகமுறே
லென்போரறிகுவரோவறியாரிவ்விரண்டையுமே.

ப-ரை. பொன்போல் ஒருபெண் - பொன்போலஒருபெண்ணை, திருவெங்கை யான் அருள்பூண்டு பெற்றோர்-திருவெங்கைநாதனது திருவருளினால் ஈன்றவர்கள், உலகம் பதினான்கினும் - பதினான்குலகத்தினும், என்போல் இல்லை - என்போல்பவரில்லை, இப்பொழுது - இப்போது, துன்போடு - துக்கத்தோடு, அழுங்குமவரும் - வருந்துபவர்களும், என்போல் இல்லை-என் போல்பவரில்லை, இவ்விரண்டையும் - இவ்விரண்டினையும், சோகமுறேல் என்போர் - துக்கியாதேயென்று சொல்லுவோர், அறிகுவரோ - அறிவரோ, அறியார் - அறியமாட்டார், எ - று.

க - ரை. பதினான்குலகத்தினும், திருவெங்கையானருள் பூண்டு, பொன்போலொரு பெண்ணைப்பெற்றவர் என்போலொருவரில்லை, இப்பொழுது துன்பத்தோடு வருந்துவோரும் ஒருவரில்லை, இவ்விரண்டையும் அறியாதவர், சோகமுறேலென்றென்னைத் தேற்றுகின்றாரென்பதாம்.

வி - ரை. பொன்போல் - திருமகள்போல. திருவெங்கையானருள்பூண்டு என்றது திருவெங்கையானருளால் என்றபடி. அழுங்கல் - வருந்தல். சோகம் - துக்கம். இவ்விரண்டையும் என்றது இவளை யீன்றபொழுதின் மகிழ்ச்சியும் இழந்தபொழுதில் துக்கமும் எனக்கொள்க. (௩௩௪)

நற்றாய்தலைமகள்பயிலிடந்தம்மொடுபுலம்பல்.

அதாவது—நற்றாயானவள், தலைமகள் பயிலிடந் தம்மொடுபுலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஆவிக்குரியர்திருவெங்கைவாணரணிவரைமேன்
மேவிக்குடையுஞ்சுனையேமலர்கொய்யுமென்பொழிலே
வாவிக்குமுதமலர்வாய்சிறிதுமலர்ந்துபெற்ற
பாவிக்குரையுமென்றென்சொல்லிப்போயினள்பாதகியே.

ப - ரை. ஆவிக்கு உரியர் - ஜீவனுக்கு உரியவர், திருவெங்கை வாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) அணிவரை மேல் - அழகிய மலைமீது, மேவிக்குடையும் சுனையே - வந்துமூழ்குகின்ற சுனையே, மலர்கொய்யும் - பூப்பறிக்கிற, மென்பொழிலே - மெல்லிய சோலையே, பாதகி - பாதகியானவள், வாவி - தடாகத்திலமர்ந்த, குமுதமலர் - செவ்வல்லி மலர்போன்ற, வாய் - வாயினை, சிறிது மலர்ந்து - சிறித்திறந்து, பெற்றபாவிக்கு - ஈன்ற பாவியாகிய எனக்கு, உரையும் என்று - சொல்லுங்களென்று, என் சொல்லிப் போயினள் - யாதுசொல்லிச் சென்றாள், எ - று.

க - ரை. ஆவிக்குரியர் திருவெங்கை வாணரணிவரைமேல் மேவிக்குடையுஞ் சுனையே! மலர்கொய்யுமென் பொழிலே! பாதகி, வாவிக் குமுதமலர் வாய்சிறிதுமலர்ந்து, பெற்றபாவிக்கு, உரையுமென்று என்சொல்லிப்போயினள் என்பதாம்.

வி - ரை. ஆவி - உயிர்கள். குடைதல் - மூழ்குதல். பொழில் - சோலை. வாவி - தடாகம். குமுதம் - செவ்வல்லி மலர். பாதகியென்றது தலைவியை. (கூகூ)

நிமித்தம்போற்றல்.

அதாவது—கொடிக்குறியாகிய நன்னிமித்தத்தைப் போற்றாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பாவிரிமாபுகழ்வெங்கைபுரேசர்பனிவரைமேற்
பூவிரிவான்பொழில்காப்பதற்காகப்பொருதிரைத்தண்
காவிரிமாதைவருவித்தகாக்கையுங்காக்குங்கொலோ
மாவிரிமாகுழலன்மாதையீங்குவரவழைத்தே.

ப - ரை. பாவிரி - பாக்களில் விரிந்துகிடக்கிற, மாபுகழ் - பெரும் புகழையுடைய, வெங்கைபுரேசர் - திருவெங்கை நாதரது,

பனிவரைமேல் - குளிர்ந்தமலைமீது, பூவிரி - மலர்கள் மலர்ந்த, வான்பொழில் - பெருஞ்சோலையை, காப்பதற்காக - காக்கும்பொருட்டு, பொரு - கரைமேல் மோதுகின்ற, திரை - அலைகளையுடைய, தண் - குளிர்ந்த, காவிரிமாதை - காவிரியாறென்னும் பெயருள்ள பெண்ணை, வருவித்த - வருவித்துத்தந்த, காக்கையும் - காகமும், மாவிரி - வண்டுக்கூட்டம் போலவிரிந்த, மாகுழல் - நீண்டகூந்தலையுடைய, நல்மாதை - பெண்ணை, ஈங்குவர அழைத்து - இங்குவரச்செய்து, காக்குங்கொலோ - காக்குமோ, எ - று.

க - ரை. பாவிரிமாபுகழ் வெங்கைபுரேசர் பனிவரைமேல், பூவிரி வான்பொழில் காப்பதற்காகப் பொருதிரைத்தண் காவிரிமாதை வருவித்தகாக்கையும், மாவிரிமாகுழனன் மாதையிங்கு வரவழைத்து காக்குங்கொலோ வென்பதாம்.

வி - ரை. பா-தேவார திருவாசகங்கள் முதலியன. பொருதல்-மோதல். காவிரிமாது - காவிரியாறாகிய பெண். காவிரி - கவேரராஜ புத்ரி. பூவிரி வான்பொழில் என்றது இந்திரனது பூம்பொழிலை. காவிரிமாதை வருவித்த காக்கை - விநாயகர். இந்தச் சரிதத்தைக் கந்தபுராணத்தில் விரிவாய்க் காணலாம். மா - வண்டு; நீலமணியெனினுமாம். (௩௩௫)

சுரந்தணிவித்தல்.

அதாவது—தலைவி சென்ற சுரத்தின் வெம்மை தணியுமாறு திருவெங்கைநாதர் திருவருளைப் போற்றுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

சங்கலைத்தொண்புனலூர்வயனாவற்றலைவனுக்குச்
செங்கலைப்பொன்செய்ததென்வெங்கைவாணர்திருவருளாற்
பொங்கலைத்தண்புனற்காவிரிநாட்டிற்பொலிகநிறை
யங்கலைத்திங்கண்முகமாதுசென்றவருஞ்சுரமே.

ப - ரை. சங்கு அலைத்து - சங்குகளை யெடுத்தெறிந்து, ஒண்புனல் - ஒட்பமாகிய நீர், ஊர் - பரவுகின்ற, வயல் - வயல்கள்சூழ்ந்த, நாவல் தலைவனுக்கு - திருநாவலூரனுக்கு, செங்கல்லை பொன் செய்த - செங்கல்லைப் பொன்னாக்கித்தந்த, தென்வெங்கைவாணர் - தென்வெங்கைவாணரது, திருவருளால் - திருவருளினால், நிறை அம்கலை - நிறைந்த அழகிய கலைகளோடு கூடிய, திங்கள் - பூரணச்சந்திரன்போன்ற, முகம் - முகத்தினையுடைய, மாது - என் பெண்ணானவள், சென்ற - நடந்துபோன, அருஞ்சுரம் - அருஞ்சுரமா,

னது, பொங்குஅலை - பொங்குகின்ற அலைகளையுடைய, தண்புனல்- தண்ணிய நீர்வளமுள்ள, காவிரிநாட்டின் - காவிரிநாடுபோல, பொலிக - பொலிவதாக, எ - று.

க - ரை: சங்கலைத் தொண்புனலூர்வயனுவற் றலைவருக்குச் செங்கலைப் பொன்செய்த தென்வெங்கைவாணர் திருவருளால், நிறை அம் கலைத் திங்கள் முகமாது சென்ற அருஞ்சுரம், பொங்கலைத் தண்புனல்காவிரிநாடு போலப் பொலிகவென்பதாம்.

வி-ரை. நாவல் - திருநாவலூர். நாவற்றலைவன் - சுந்தரர். நாட்டின் என்பதில் இன் என்னும் ஐந்தனுருபு ஒப்புப்பொருட்டு. நிறையங்கலைத் திங்கள் பூர்ணசந்திரன். (௩௩௭)

தன்மகண்மென்மைத் தன்மைக்கிரங்கல்.

அதாவது—நற்றாயானவள், தன்மகளது மென்மைத் தன்மைக்கிரங்கிக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நோக்கக்குழையுஞ்சிலையாளர்வெங்கையினுண்ணிடையார்
மோக்கக்குழையுமனிச்சமென்பூவின்முகந்திருத்தித்
தூக்கக்குழையும்பதங்கள்வெம்பாலைச்சுடுபரலிற்
றாக்கக்குழையுங்கொலோகுழையாதெங்கடையலுக்கே.

ப - ரை. நோக்க - நோக்கம்வைக்க, குழையும் - வளைந்த, சிலையாளர் - வில்லையுடையவராகிய சிவபிரானது, வெங்கையில் - திருவெங்கைப்பதியில், நுண்இடையார் - நுண்ணிடையையுடையமாதர், மோக்கக் குழையும் - மோந்தளவிற் குழைகின்ற, அனிச்சம் மென்பூவின்முகம் - அனிச்சத்தின் மெல்லிய பூவிதழ்களை, திருத்தி - சீர்திருத்தி, தூக்க - அடியெடுத்துவைக்க, குழையும் பதங்கள் - குழையாநின்ற பாதங்கள், வெம்பாலை சுடுபரலில் - வெவ்விய பாலையிலுள்ள சுடுகின்ற பரற்கற்களில், தாக்க - தாக்குதலால், குழையும்கொலோ - குழையுமோ, எங்கள் தையலுக்கு குழையாது - எங்கள் பெண்ணுக்குக் குழையாது, எ - று.

க - ரை. நோக்கக் குழையுஞ் சிலையாளர் வெங்கையினுண்ணிடையார், மோக்கக்குழையு மனிச்சமென்பூவின் முகம்திருத்தி, தூக்கக்குழையும் பதங்கள், எங்கள் தையலுக்கு, வெம்பாலைச் சுடுபரலில் தாக்கக்குழையுங்கொலோ, குழையா என்பதாம்.

வி - ரை. நோக்கக் குழையுஞ் சிலை - பொன்மலை. இவர் கண் நெருப்பாதலானும், நெருப்பைக் காணிற் பொன் குழைத வியல்பாத

லானும், 'நோக்கக் குழையுஞ் சிலையாளர்' என்றார். நுண்ணிடையார் என்றது பாங்கியரை. பூவின் முகம் - பூவிதழ். திருத்தல் - கால்களை தல். பரல் - பரற்கல். தாக்கல் - படல். தையல் - பெண்; (கைபுனையப்பட்டவள்.) (௬௩௮)

இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல்.

அதாவது—தலைமகளது இளமைத் தன்மைக் குள்ளங் கரைந் திரங்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பேதைப்பருவமிறந்தேபெதும்பைப்பிராயமுறும்
போதைத்தொடங்கிமருண்மாலைபோல்பவள்போனதென்
மாதைக்கலந்தவிடத்தார்திருவெங்கைவாணர்வெற்பிற் [னோ
கோதைச்செழுங்கதிர்வேல்வேந்தொடுமக்கொடுஞ்சுரமே.

ப - ரை. மாதைகலந்த-உமாதேவியாரைக் கலந்த, இடத்தார் - இடப்பாகத்தை யுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) வெற்பில் - மலையில், கோதை-பூமாலையைஅணிந்த, செழுங்கதிர் - செழிய கதிர்களையுடைய, வேல்-வேற்படையைத் தாங்கிய, வேந்தொடும்-நம்மிறைவனோடும், அக்கொடுஞ் சுரம் - அந்தக்கொடுஞ்சுரத்தில், பேதைப்பருவம் இறந்து-பேதைப் பருவங்கடந்து, பெதும்பைப்பிராயம் - பெதும்பைப்பிராயமானது, உறும்போதை தொடங்கி - ஆரம்பிக்கின்ற காலந்தொடங்கி, மருள் மாலை போல்பவள் - மருட்சியைத் தருகின்ற மாலைக்காலம் போல்பவள், போனதுஎன்னோ - போனது யாதுகாரணமோ, எ - று.

க - ரை. பேதைப்பருவமிறந்தே பெதும்பைப் பிராயமுறும் போதைத்தொடங்கி மருண்மாலைபோல்பவள், மாதைக்கலந்தவிடத்தார் திருவெங்கைவாணர் வெற்பில், கோதைச்செழுங்கதிர்வேல் வேந்தொடுமக் கொடுஞ்சுரம்போனது என்னோவென்பதாம்.

வி - ரை. பேதைப்பருவம் - எழுவயதுப்பருவம். பெதும்பைப் பிராயம்-ஒன்பது வயதுப்பருவம். மருண்மாலை-மயக்குகின்ற மாலை. மாலை - மாலைக்காலம். கோதை - பூமாலை. வேந்து - ஆகுபெயர். ()

அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

அதாவது—நற்றாயானவள், தன் மகளது அச்சத்தன்மையைக் குறித்துத் தான் அச்சமுற்றிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்,—

ஆலமெழும்பொழுதவ்வெங்கைவாணர்க்கபயமென்
வேலமிடுஞ்சுரர்போலேயபயமென்றேடுங்கொலோ
ஞாலமிடந்துதிரிந்தவக்கோலமுநாணவொரு
கோலமெழும்பொழுதஞ்சிமுன்போந்தகொழுநனுக்கே.

ப - ரை. ஞாலம் இடந்து திரிந்த - பூமியைப் பிளந்து திரிந்த, அக்கோலமும் - அந்தப்பன்றியும், நாண - நாணும்படி, ஒருகோலம் எழும்பொழுது - ஒருபன்றி எழும்பொழுது, அஞ்சி - அச்சமுற்று, ஆலம் எழும்பொழுது - ஆலாகலவிடம் திருப்பாற் கடலிலுண்டான போது, அவ்வெங்கை வாணர்க்கு - அத்திருவெங்கை வாணருக்கு, அபயம்என - அபயமென்று, ஓலமிடும் - முறையிட்ட, சுரர்போலே - தேவர்கள்போல, முன்போந்த கொழுநனுக்கு - முன்னேநடந்த தன் கணவனுக்கு, அபயம் என்று ஓடும் கொல்லோ - அபயமென்று ஓடு வளோ. எ - று.

க - ரை. ஞாலமிடந்து திரிந்தவக்கோலமு நாணவொரு கோல மெழும் பொழுதஞ்சி, முன்போந்த கொழுநனுக்கே, ஆலமெழும் பொழுதவ் வெங்கைவாணர்க் கபயமென வோலமிடுஞ் சுரர்போலே, அபயமென்று ஓடுங்கொலோ வென்பதாம்.

வி - ரை. ஆலம் - பாற்கடலிற்றோன்றின ஆலாகலவிடம். ஓலமிடல் - முறையிடல். சுரர் - தேவர். ஞாலம் - பூமி. இடத்தல் - பிளத்தல். கோலம் - பன்றி. கொழுநன் - கணவன். (௩௪0)

கண்டோரிரக்கம்.

அதாவது—கண்டோர், இவள் விளையாடிய சோலையையும், பொன்னூசலையும், வண்டலம் பாவைமுதலிய வற்றையும், இவளையீன்ற தாயானவள் கண்டு என்னபாடு படுவளோவென் றிரங்கிக் கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,—

துன்படுமையர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேன்
மின்படுநுண்ணிடையாள்விளையாடியமென்பொழிலும்
பொன்படுமூசலும்வண்டலம்பாவையும்பூவையுங்கண்
டென்படுமோவறியேம்பெற்றதாயென்றிருப்பவளே.

ப - ரை. துன்புஅடும் ஐயர் - எமது பிறவித்துன்பத்தை ஒழிக்கின்ற இறைவர், திருவெங்கை வாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) சுடர்கிரிமேல் - ஒளியையுடையமலைமீது, மின்படும் - மின்கொடிபோலும், நுண்இடையாள் - நுண்ணிடையை யுடையவளாகிய இந்தப்பெண், விளையாடிய - விளையாடிக் கொண்டிருந்த, மென்பொழிலும் - மெல்லிய சோலையையும், பொன்படும் ஊசலும் - பொன்னணியன்ற ஊசலையும், வண்டலம் பாவையும் - வண்டலம் பாவையையும், பூவையும் - பூவையையும், கண்டு - பார்

த்து, பெற்றதாய் என்றிருப்பவள் - பெற்றதாயென்று சொல்லப்பட்டிருப்பவள், என்படுமோ - என்னபாடுபடுவளோ, அறியேம் - யாம் அறிந்திலேம். எ - று.

க - ரை. துன்படுமையர் திருவெங்கைவாணர் சுடர்க்கிரிமேல், பெற்றதாயென்றிருப்பவள், மின்படு நுண்ணிடையாள் விளையாடிய மென்பொழிலும், பொன்படு மூசலும், வண்டலம் பாவையும், பிறவுங்கண்டு, என்படுமோ அறியேமென்பதாம்.

வி - ரை. துன்பு - துன்பம். (பிறவித் துன்பம்) மின்படும் என்பதில் படும்-உவமவுருபு. பூவை - நாகணவாய்ப்புள்; இதனை சாரிகம் என்பர் வடநூலார். (௩௪௧)

செவிலியாற்றத் தாயைத்தேற்றல்.

அதாவது—செவிலியானவள், ஆற்றாநற்றாயைத் தேற்றிக்கூறுகிற்றல். அதற்குச்செய்யுள்,—

வெல்லப்படாதவயில்விழியாள்செயல்வேறொன்றன்றிச்
சொல்லப்படாதசெயலாய்முடியிற்றுயர்தனன்றே
வல்லற்படாதியன்னேவெங்கைவாணரருள்கொடுநான்
செல்லப்படாதவிடமேனுஞ்சென்றுதிருப்புவனே.

ப - ரை. வெல்லப்படாத - வெல்லவொண்ணாத, அயில்-வேல் போன்ற, விழியாள் - விழியையுடையவளாகிய நம்பெண்ணினது, செயல் - செய்கையானது, வேறு ஒன்று அன்றி - வேறொன்றல்லாமல், சொல்லப்படாத செயலாய் முடியில்-சொல்லவொண்ணாத செய்கையாய் முடிந்தால், துயர்தல் நன்றே - துக்கித்தல் நன்றோமோ, அன்னே - தாயே, அல்லல்படாதி - துக்கியாதே, வெங்கைவாணர் அருள்கொடு - திருவெங்கைவாணரது அருளினால், நான் - யான், செல்லப்படாத இடமேனும் - செல்லவொண்ணாத இடமாயினும், சென்று - போய், திருப்புவன் - அவளைமீட்டுக்கொண்டு வருவேன், எ - று.

க - ரை. வெல்லப்படாத வயில்விழியாள் செயல்வேறொன்றன்றிச் சொல்லப்படாத செயலாய் முடியிற்றுயர்தல் நன்றே, அன்னே! அல்லற்படாதி, நான் வெங்கைவாணரருள்கொடு, செல்லப்படாத விடமேனுஞ் சென்று திருப்புவன் என்பதாம்.

வி - ரை. அயில் - வேல். வெல்லப்படாத வயில்விழியாள் என்றது தலைவியை. துயர்தல் - துக்கித்தல். அல்லற்படல் - துன்பப்படல். திருப்புதல் - மீட்டல். (௩௪௨)

ஆற்றிடைமுக்கோற் பகவரைவினாதல்.

அதாவது—தலைமகளைத்தேடிச் சுரத்திடைச் செல்லாநின்ற செவிலி, அவ்வழியில் வருவோராகிய முக்கோற்பகவரை வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தன்னைத்தலைவனைநின்றுங்கறிந்துதவம்புணர்ந்து
முன்னைப்பவந்தொலைத்தீருண்மைகூறுமின்மூரிவெள்ள[ங்கள்
மின்னைப்பொருசெஞ்சடையில்வைத்தார்வெங்கைவெற்பிலெ
பொன்னைக்கரந்தொருகாளைகொண்டேதனிபோயினனே.

ப - ரை. தன்னை தலைவனை - தன்னையுந் தலைவனையும், நின்றுங்கு அறிந்து - உள்ளபடியே யறிந்து, தவம்புணர்ந்து - தவத்தொழிலை மேற்கொண்டு, முன்னைபவம்தொலைத்தீர் - முற்பவந்தொலைத்தவரே, உண்மைகூறுமின் - உண்மையைச் சொல்லுங்கள், மூரிவெள்ளம் - பெருவெள்ளத்தை, மின்னைப்பொரு - மின்கொடியை நிகர்த்த, செஞ்சடையில் வைத்தார் - செஞ்சடையி லிட்டவரது, வெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில், எங்கள் பொன்னை - எங்கள் பொன்போல்வாளை, ஒருகாளை கரந்துகொண்டு - ஒருகாளையானவன் கவர்ந்துகொண்டு, தனிபோயினனே - தனியேசென்றனனோ, எ - று.

க - ரை. தன்னைத் தலைவனை நின்றுங் கறிந்து தவம்புணர்ந்து முன்னைப் பவந்தொலைத் தீருண்மை கூறுமின், மூரிவெள்ளம் மின்னைப்பொரு செஞ்சடையில் வைத்தார் வெங்கைவெற்பிலெங்கள் பொன்னைக் கவர்ந்தொரு காளை கொண்டே தனி போயினனே? என்பதாம்.

வி - ரை. தன்னை தலைவனை - ஜீவான்மா பரமான்மாக்களை. பொருதல் - நிகர்த்தல். பொன் - திருமகள், பொன். முன்னைப்பவம் - ஜன்மாந்தர பாபங்கள். முக்கோற்பகவர் - திரிதண்ட சந்நியாசிகள். (௩௪௩)

மிக்கோரேதுக்காட்டல்.

அதாவது—இவ்வாறு செவிலி வினவியதற்கு, அவ் வந்தணர், அவளை நோக்கி, நீ கவலற்க, இது உலக வியலாமென்று ஏதுக்காட்டிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சேவிற்பிறங்குங்கொடிவெங்கைவாணர்சிலம்பணங்கே
பூவிற்பிறந்தபசுந்தேன்விரைவழிபோந்தணுகு
மாவிற்கலதுமலர்க்கேதுசெய்யுமவ்வாறெனவே
யேவிற்சிறந்தவிழியாணமக்குமென்றெண்ணுகவே

ப - ரை. சேவின் - இடபவுருவத்தால், பிறங்கும் - விளங்குகிற, கொடி - துவசத்தையுடைய, வெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, சிலம்பு - மலையில் வாழ்கின்ற, அணங்கே - பெண்ணே, பூவில்பிறந்த பசுந்தேன் - மலரிற்றோன்றின பசுந்தேனானது, விரை வழி - மணவழியாக, போந்து அணுகும் - வந்துசேருகிற, மாவிற்கு அலது - வண்டுகளுக்கேயன்றி, மலர்க்கு எதுசெய்யும் - மலருக்கு யாதுதவிசெய்யும், அவ்வாறெனவே - அவ்வாறாகவே, எவின்சிறந்த விழியாள் - அம்பிற் சிறந்த கண்களையுடையாளும், நமக்கும் என்று எண்ணுக - எமக்கு மாவளென்று கருதுக, எ - று.

க - ரை. சேவிற்பிறங்குங் கொடிவெங்கைவாணர் சிலம்பணங்கே! பூவிற்பிறந்த பசுந்தேனானது வாசனை வழியாய் வந்து சேர்கிறவண்டுகளுக்கேயன்றித் தான் பிறந்த பூவிற்கென்ன வுதவிபுரிகின்றது, அதுபோலவே, எவிற் சிறந்த விழியாளும் தன் கணவனுக்கேயன்றி நமக்கு யாதுதவிபுரிவள் என்பதாம்.

வி - ரை. சே - இடபம். பிறங்கல் - விளங்கல். சிலம்பு - மலை, அணங்கு - பெண். விரை - மணம். அணுகல் - சேர்தல். மா-வண்டு. எ - அம்பு. சே, பூ, மா, எ, ஒரெழுத்தொருமொழிகள். (௩சச)

செவிலியெயிற்றியோடுபுலம்பல்.

அதாவது—மிக்கோரேதுக் காட்டக்கண்ட செவிலி, வழிக்கொடுபோய், எதிரே வருகிற அந்நில மாதாகிய எயிற்றியொடு புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அள்ளியளைந்துபசுந்தாதளியினமம்புயமென்
பள்ளியுறங்குந்திருவெங்கைவாணர்பனிவரையாள்
வள்ளிநடந்தவழிதூர்ந்திடாதவ்வழிநடந்தாள்
கள்ளிபடர்ந்தசுரத்தேவருமறக்காரிகையே.

ப - ரை. கள்ளிபடர்ந்த-கள்ளிக்காடு படர்ந்த, சுரத்தேவரும் - சுரத்தின் கண்ணே வருகிற, மறக்காரிகையே - மறப்பெண்ணே, அளியினம் - வண்டுக்கூட்டம், பசுந்தாது - பசியதாதினை, அள்ளி அளைந்து - அள்ளியளைந்துகொண்டு, அம்புயம் - தாமரைமலராகிய, மெல்பள்ளி - மிருதுவாகிய சயனத்தில், உறங்கும் - தூங்குகிற, திருவெங்கைவாணர்-திருவெங்கைவாணரது, பனிவரையாள் - குளிர்ந்த மலையில் வாழ்பவளாகிய எமது பெண், வள்ளிநடந்தவழி தூர்ந்திடாது - வள்ளிநடந்தவழி தூர்ந்துபோகாமல், அவ்வழி நடந்தாள் - அவ்வழியாகவே நடந்து சென்றாள், எ - று.

க - ரை. கள்ளிபடர்ந்த சுரத்தேவரு மறக்காரிகையே! திருவெங்கைவாணரது மலையில் வாழ்கிற எமது பெண்ணானவள், வள்ளி நடந்தவழி தூர்ந்திடாமல், அவ்வழியாகவே நடந்து சென்றாள் என்பதாம்.

வி - ரை. அளைதல் - பூசுதல். தாது - மகரந்தம். பள்ளி - சயநம். வள்ளி-வள்ளிநாயகி, வள்ளிக்கொடி. மறக்காரிகை-மறப்பெண், (மறத்தி) பாலைநிலப்பெண். சுரத்தில் குமிழ்வேல் முதலிய பிறவு முளவேனும் மிகுதிபற்றி கள்ளிபடர்ந்தசுரம் என்றார். (௩சரு)

செவிலிகுரவொடுபுலம்பல்.

அதாவது—இவ்வாறு எயிற்றியொடு புலம்பின செவிலி, அவ்வழியிலுள்ள குரவொடு புலம்பா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

புரவேபுரியுந்திருவெங்கைவாணர்புனையுமணி
யரவேபுரையுமகலல்குலாளொடனைதுயா
வரவேதகுவதன்றென்றுயிலைமலர்வாய்திறக்குங்
குரவேமொழிநல்குரவேநினக்கிதுகூறுதற்கே.

ப - ரை. மலர்வாய்திறக்கும் - மலராகிய வாயைத்திறக்கிற, குரவே - குராமரமே, புரவேபுரியும் - காத்தற்றொழிலையே செய்கிற, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரானவர், புனையும் - தரித்த, மணிஅரவேபுரையும் - மாணிக்கத்தையுடைய பாம்பையே நிகர்க்கிற, அகல் அல்குலாளொடு - அகன்ற அல்குலையுடையாளொடு அனை துயா - தாய்துன்புறுமாறு, வரவேதகுவது அன்று - நீவரவேதகாது, என்றுயிலை - என்று சொன்னாயில்லை, நினக்கு - உனக்கு, இது கூறுதற்கு - இது சொல்லுதற்கு, மொழிநல்குரவே-சொல்லும் தரித்திரமா, எ - று.

க - ரை. மலர்வாய் திறக்குங்குரவே! எமது தலைவியோடு,தாயானவள் துன்புறுமாறு நீவரத்தகாதென்று சொன்னாயில்லை, இது சொல்லுதற்கும்,சொல்லும் உனக்குத் தரித்திரமா? என்பதாம்.

வி - ரை. புரவு - புரத்தல். (காத்தல்) புனைதல் - தரித்தல். மணி - மாணிக்கம். அர-பாம்பின்படம் (ஆகுபெயர்). அனை-தொகுத்தல். துயர்தல் - துன்புறல். குர - குரா. நல்குரவு - தரித்திரம். நல்குரவே யென்னு மேகாரம் வினா. (௩சசு)

சுவடுகண்டிரங்கல்.

அதாவது—இவ்வாறு புலம்பா நின்று செல்கின்ற செவிலியானவள், இருவரது அடிச்சுவடுங் கண்டிரங்கிக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

புலியோடரவுதொழுங்கூத்துடையவர்பூவையர்கைப்
பலியோடுயிர்கவர்வெங்கைபுரேசர்பனிவரைமேன்
மலியோதியினிசைவண்டுபண்பாடுறும்வஞ்சியடி
கலியோமுனஞ்செலும்வெள்ளடியோடுகலந்ததுவே.

ப - ரை. புலியோடு அரவுதொழும் - புலியோடு பாம்புந் தொழுதற்குரிய, கூத்து உடையவர் - நடனத்தை யுடையவர், பூவையர்கை பலியோடு - மாதரது கைப்பலியுடனே, உயிர்கவர் - அவரது உயிரையுங் கவர்கின்ற, வெங்கைபுரேசர் - திருவெங்கை புரேசர், (அவரது) பனிவரைமேல் - குளிர்ந்த மலைமீது, மலி - நீண்ட, ஓதியில் - கூந்தலில், இசை - பொருந்திய, வண்டு - வண்டுகள், பண்பாடுறும் - பண்களைப் பாடுகிற, வஞ்சி அடி - வஞ்சியடியானது; கலியோ - கலியா, முனஞ்செல்லும் - முன்னே சென்ற, வெள்ளடியோடு கலந்தது - வெள்ளடியுடனே கூடிற்று, எ-று.

க - ரை. புலியும் பாம்புந் தொழுங்கூத்துடையவர், பூவையர் கைப்பலியோடு உயிர்கவர் வெங்கைபுரேசர், (அவரது) பனிவரைமேல் மலியோதியி னிசைவண்டு பண்பாடுறும் வஞ்சியடி கலியோ? முனஞ்செலும் வெள்ளடியோடு கந்ததுவே, என்பதாம்.

வி - ரை. புலி - வியாக்கிரபாதர். அரவு - பதஞ்சலி. பூவையர் - மாதர். பலி - பிக்ஷை. ஓதி - கூந்தல். தலைவனடிபேரடியும், தலைவியடி சிற்றடியுமாயிருத்தலின், வெள்ளைக்குரிய அளவடியும் வஞ்சிக்குரிய சிந்தடி அல்லது குறளடியும் போல்பவென்றும், அவை தனித்தனி செல்லாது, அச்சமுதலிய காரணங்களால் விரவலின், இவ்விடம் அவ்விரண்டடிகளும் விரவும் கலிப்பாவொப்பென்றும் கூறியவாறும். தலைவனடியை வெள்ளடி யென்றது வலம்புரிச் சங்கரேகையுடைத்தாதலினென்க. வெள்ளை - வெண்பா, சங்கு. வஞ்சி - வஞ்சிப்பா, பெண். கலி - கலிப்பா, கெடுதி; வஞ்சகமுமாம். (௩சஎ)

செவிலிகலந்துடன்வருவோர்க்கஃடுகேட்டல்.

அதாவது—உடன்போக்குப் போய்த்தலைவனும் தலைவியும் போல அன்பு கலந்து ஆற்றிடை வருவோர் இருவரைக்கண்டு செவிலி வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

வேண்டாருயிர்கவர்செவ்வேலிறைவனுமெல்லியலு
மீண்டாரெனவுன்மகிழ்ந்துநின்றேன்மலர்வேதன்முதன்
மாண்டாரெலும்பணிவெங்கைபுரேசர்மணிவரைமேற்
றூண்டாவிருஞ்சுடர்போல்வருவீரெதிர்தோன்றுறவே.

ப - ரை. மலர் - தாமரைமலரை யாசநமாகவுடைய, வேதன் முதல் - பிரமன் முதலாக, மாண்டார் - இறந்தோருடைய, எலும்பு அணி - எலும்பினையணிந்த, வெங்கைபுரேசர் - திருவெங்கைபுரேசரது, மணிவரைமேல் - அழகிய மலைமீது, தூண்டா - தூண்டவேண்டாத, இருஞ்சுடர்போல் - பேரொளிபோல, வருவீர் - வருபவராகிய நீங்கள், எதிர்தோன்றுற-எதிரே தோன்றுதலும், வேண்டார்-பகைவரது, உயிர்கவர் - உயிரைக்கவர்கின்ற, செவ்வேல்-செவ்வேற்படையினையுடைய, இறைவனும் - தலைவனும், மெல்லியலும் - தலைவியும், மீண்டார் என - மீண்டனராமென்று, உள்மகிழ்ந்து நின்றேன்-மனமகிழ்ந்து நின்றேன், எ - று.

க - ரை. திருவெங்கைபுரேசர் மணிவரைமேல், தூண்டாவிளக்குப்போல நீவிரிருவரும் எதிரே தோன்றுதலும், எமது தலைவனும் தலைவியும் மீண்டாரென்று மனமகிழ்ந்திருந்தேன் என்பதாம்.

வி - ரை. வேண்டார்-பகைவர். மெல்லியல்-ம்ருதுஸ்வபாவை. மீளல் - திரும்பல். உள் - மனம்; ஆகுபெயர். தூண்டா - தூண்டவேண்டாத. இருஞ்சுடர் - பெருவிளக்கு. (௩௪௮)

அவர்புலம்பநேற்றல்.

அதாவது—எதிர்வந்தோராகிய அவர், செவிலி புலம்புதலைக் கண்டிரங்கி, அவளைத்தேற்றிக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

என்னூர்பெயரவ்விளங்காளையுமிவ்விலங்கிழையா
டன்னூர்பெயர்நம்பிணைவிழியாளுந்தனிவினவிப்
பொன்னூபுரவடிவஞ்சிபங்காளர்பொருந்துகொடி
மின்னூர்முகிலுறங்கும்பொழில்சூழ்வெங்கைமேவினரே.

ப - ரை. என்ஊர்பெயர் - என்ஊரையும் பேரையும், அ இளங்காளையும் - அவ்விளங்காளை போல்பவனும், இ இலங்கிழையாள் தன் ஊர்பெயர்-இந்தப்பெண்ணின் ஊரையும் பேரையும், நம்பிணைவிழியாளும் - நமது பெண்ணும், தனிவினவி - தனித்தனியே வினவி, பொன்நூபுரம் - பொன்னானியன்ற சிலம்பணிந்த, அடி - சீர்பாதத்தையுடைய, வஞ்சி - உமாதேவியின், பங்காளர் - பாகத்தையுடையவரது, பொருந்துகொடி - கொடிமேற் பொருந்திய, மின்-மின்னும், ஊர்முகில் - தவழ்கின்ற மேகமும், உறங்கும் - தூங்கும், பொழில் சூழ் - சோலைசூழ்ந்த, வெங்கை - திருவெங்கைப்பதியை, மேவினர் - அடைந்தார்கள், எ - று.

க - ரை. என்னூர் பெயரவ்விளங்காளையு மிவ்விலங்கிழையாள் தன்னூர் பெயர் நும்பிணைவிழியாளுந் தனிவினவி, பொன்னூபுரவடிவஞ்சி பங்காளரது மின்னூர் முகிலுறங்கும் பொழில்சூழ் வெங்கை மேவினர் என்பதாம்.

வி - ரை. அவ்விளங்காளை யென்றது தலைமகனை. இவ்விலங்கிழையாள் என்றது தன் மனைவியை. பிணைவிழியாள் என்றது தலைவியை. பொன்னூபுரம் - பொற்சிலம்பு. பொன்னூ புரவடிவஞ்சி - உமாதேவி. முகில் - மேகம். பொழில் - சோலை. (௩௭௧)

சேவிலிபுதல்வியைக்காணுநுகவலைகூர்தல்.

அதாவது—செவிலியானவள், சுரத்தேசென்ற தன் புதல்வியைச்சென்று நெடுந்தூர நேடியும், ஆற்றிடை யெதிர்ந்தோராகிய முக்கோற் பகவர் முதலிய பலரை வினவியும் அவள் தன் கண்ணுக்குப் புலப்படாமையால் பெரிதுந் துன்புறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சேணுடியமதில்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பின்
மாணுவலர்மொழிவார்க்கேதுசொல்வனென்வாய்திறந்து
நாணுதினியெங்ஙன்மீண்டுடனென்னகர்நான்புகுவேன்
காணுமருங்குலொருமாதையாற்றிடைக்கண்டிலனே.

ப - ரை. காணு - காணவொண்ணாத, மருங்குல் - இடையினையுடைய, ஒருமாதை - ஒப்பற்ற என்பெண்ணை, ஆற்றிடை கண்டிலனே - இப்பாலை நெறியிற் கண்டேனில்லையே, இனி - இங்ஙனமாய பின்னே, சேண்-சுவர்க்கலோகத்தை, நாடிய-நாடிச்சென்ற, மதில் - மதில் சூழ்ந்த, வெங்கைபுரேசர் - திருவெங்கைபுரேசரது, செழுஞ்சிலம்பில்-செழுமையாகிய மலையில், மாணு-இழிவாகிய, அலர்மொழிவார்க்கு - அலர்மொழி கூறுவார்க்கு, என் வாய் திறந்து எதுசொல்வன் - என்வாய்திறந்து யாதுசொல்வேன், நாணுது - நாணமல், எங்ஙன் - எவ்வாறு, மீண்டு - திரும்பி, உடன் - உடனே, நல் நகர் - நல்ல நகரத்தில், நான் புகுவேன் - நான் பிரவேசிப்பேன், எ - று.

க - ரை. காணுமருங்குலொருமாதையாற்றிடைக்கண்டிலனே இனிநான், சேணுடிய மதில் வெங்கைபுரேசர் செழுஞ்சிலம்பில், மாணுவலர் மொழிவார்க்கேது சொல்வனென் வாய்திறந்து, நாணுது எங்ஙன் மீண்டுடனென்னகர் நான்புகுவேன் என்பதாம்.

வி - ரை. சேண் - ஆகுபெயர். நாடல் - தேடல். மாணுவலர் என்றமையால் இழிவாகிய அலரெனலாயிற்று. காணுமருங்குல் என்

பதனை முன்பின்னாக நிறுத்து மருங்குல் காணவொண்ணாத என்றுரைப்பினுமாம். ஆறு - வழி. எ - இரக்கம். (௩௫0)

மீட்சி (மீண்டுவருதல்).

செவிலி புதல்வியைக்காணாது மீண்டுவருதலும் தலைவனும் தலைவியும் உடன்போய் மீண்டுவருதலும் அடங்கப் பொதுப்பட மீட்சியென்றார்.

"தெளித்தன் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால், மீட்சி நால்வகைப்படும்.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

அதாவது—தலைவி நெடுந்தூரஞ் சென்றமையைச் செவிலி நற்றாய்க் குரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கூனும்பிறையொன் றணிவார்தம்வெங்கைக்குளிர்சிலம்பி
லூனுங்குருதியுந்தோய்வடிவேலனொருவனொடு
மானுங்கயலும்பணிவிழியாளரிமாவழங்கு
கானுங்கரைபொருகான்யாறுங்குன்றுங்கடந்தனளே.

ப - ரை. கூனும்-வளைந்த, பிறைஒன்று-ஒருபிறையை, அணிவார் - அணிபவராகிய சிவபிரானாது, வெங்கை - திருவெங்கைப் பதியிலுள்ள, குளிர்சிலம்பில் - குளிர்ந்தமலையில், ஊனும் - மாமிசமும், குருதியும் - உதிரமும், தோய் - படிந்த, வடிவேலன் ஒருவனொடும் - வடிவேலனொருவனுடனே, மானும் கயலும் - மானும்கயல் மீனும், பணி - வணங்குதற்குரிய, விழியாள் - கண்களை யுடையவளாகிய நமது பெண்ணானவள், அரிமாவழங்கு - சிங்கங்கள் வழங்குகிற, கானும் - காட்டினையும், கரைபொருகான்யாறும் - கரைமோதுகிற கான்யாற்றினையும், குன்றும் - மலைகளையும், கடந்தனள்-கடந்து சென்றாள், எ - று.

க - ரை. கூனும்பிறையொன் றணிவார் தம்வெங்கைக் குளிர் சிலம்பில், ஊனுங்குருதியுந் தோய்வடிவேல னொருவனொடு மானுங் கயலும் பணிவிழியா ளரிமாவழங்கு கானுங் கரைபொருகான் யாறுங் குன்றுங் கடந்தனள் என்பதாம்.

வி - ரை. கூனும்பிறை யொன்று என்றது, ஒருகலையாகிய சந்திரனை. இது "தாரென்னவோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள் வைத்த, காரென்னவாருங் கறைமிடற்றம்பலவன்" என்னுந் திருக்

கோவையாருரையாலினிது விளங்கும். ஊன் - தசை. குருதி-உதிரம். ஊனுங்குருதியுந் தோய்வுடிவேலன், என்றமையால் அவனது வீரத்தன்மை தொனிக்கின்றது. அன்றியும், அரிமாவழங்கு கானுங் களிறுபொருகான் யாறுங்குன்றுங் கடத்தற்கு மிதுவே துணையாயினமையும் பெறப்பட்டது. அரிமா - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கான் - காடு. பொருதல் - மோதுதல். (நுருக)

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றல்.

அதாவது—ஐம்பத்து நான்காநாள், தலைவன் மீட்சியில், தலைவிய தூரைத்தாம் சார்ந்தமை தலைவிக்குச் சாற்றுகிற்றல். அதற்குச், செய்யுள்,—

சேய்விளையாடுந்திருமார்பர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னீவிளையாடுஞ்சுனையீதுநாண்மலர்நீபறிப்ப
மாவிளையாடும்பொழிலதுகாணிளமந்திமுதிர்
வேய்விளையாடுமவ்வெற்பேநம்வெற்புவிளங்கிழையே.

ப - ரை. விளங்கிழையே-விளங்கிழாய், சேய்விளையாடும்-முருகர் விளையாடுதற்குரிய, திருமார்பர்-திருமார்பினையுடையராகிய சிவபிரானது, வெங்கைச் செழுஞ்சிலம்பில் - திருவெங்கையிலுள்ள செழுமையாகிய மலையில், நீ விளையாடும் சுனை இது - நீ விளையாடுகிற சுனை யிதுவாகும், நீ - நீ, நாள் மலர் பறிப்ப - புதிய மலர்களைப் பறிக்க, மாவிளையாடும் - வண்டுகள் விளையாடுகிற, பொழில் அது - சோலை அதுவாகும், இளமந்தி - இளைய மந்திகள், முதிர் - முதிர்ந்த, வேய் - மூங்கிலின்மேல், விளையாடும் - விளையாடுகிற, அவ்வெற்பே - அந்தமலையே, நம் வெற்பு - நமது மலையாகும், எ - று.

க - ரை. விளங்கிழையே! சேய்விளையாடுந் திருமார்பர் வெங்கைச் செழுஞ்சிலம்பில், நீ விளையாடுஞ் சுனையீது, நீ நாள்மலர் பறிப்ப மாவிளையாடும் பொழில் அது, இளமந்தி முதிர்வேய் விளையாடும் அவ்வெற்பே நம்வெற்பு, என்பதாம்.

வி - ரை. சேய் - முருகக்கடவுள். நாள் - புதுமை. பறித்தல் - கொய்தல். மா - வண்டு. மந்தி - குரங்கு. வேய் - மூங்கில். வெற்பு - மலை. விளங்கிழை - அன்மொழித்தொகை. (நுருஉ)

தலைவி முன்செல்வோர்தம்மோடுதான்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

அதாவது—தலைவியானவள், தன்வருகையை, முன் செல்வோரொடுகூறித் தன் பாங்கியர்க் குணர்த்துமாறு விடுத்தல். அதற்குச் செய்யுள்,—

வேலையிற்றோன் றுநஞ்சுண்டோன்றிருவெங்கைவெற்பிலளி
சோலையிற்பாடுமெம்மூர்புகுவீரிதுசொன்மினறு
மாலையிற்றோன் றுங்கதிர்வேலவனொடுமாவழங்கு
பாலையிற்போயினமாதுவந்தாளென்றுபாங்கியர்க்கே.

ப - ரை. வேலையில் தோன்றும் - பாற்கடலிற் றோன்றின, நஞ்சு - விடத்தை, உண்டோன் - உண்டவனாகிய சிவபிரானது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், சோலையில் அளி பாடும் - சோலையில் வண்டுகள் பாடுகிற, எம்மூர்புகுவீர் - எமதூரிற் புகுவோரே, நறுமாலையின் தோன்றும்-நறுமணமுள்ள பூமாலையோடு விளங்குகிற, கதிர்வேலவனொடு-கதிர்வேலவனுடனே, மாவழங்கு - விலங்குகள்சஞ்சரிக்கிற, பாலையில்போயின - பாலையிற்சென்ற, மாது வந்தாள் என்று - பெண்வந்தாளென்று, பாங்கியர்க்கு - என் பாங்கியர்க்கு, இது சொல்மின் - இந்தச் செய்தியைச் சொல்லுவீராமின், எ - று.

க - ரை. வேலையிற்றோன்று நஞ்சுண்டோன் திருவெங்கை வெற்பில், அளிசோலையிற் பாடுமெம்மூர்புகுவீர்! நறுமாலையில்தோன்றுங்கதிர்வேலவனொடு, மாவழங்கு பாலையிற் போயினமாது வந்தாளென்று, பாங்கியர்க்கு இது சொல்மின், என்பதாம்.

வி - ரை. வேலையென வாளாகூறினரேனும் தோன்று நஞ்சு எனமேல் வருதலால், வேலையீண்டுப்பாற்கடலைக்குறித்தது. வேலை-கடல்; இது வேலா என்னும் வடசொற்றிரிபு. அளி - வண்டு. நறுமாலை யென்றமையாற் பூமாலை யெனப்பட்டது. கதிர்வேலவன்-ஒளியோடு கூடிய வேற்படையை யுடையவன். (தலைவன்) மா - விலங்கின் பொது. பாலை - சுரம். (௩௰௩)

முன்சென்றோர் பாங்கியர்க்குணர்த்தல்.

அதாவது—தலைவியானவள் தன் வரவினையறிவுறுத்துவான் விடுக்க முன்சென்றோர், அவளது பாங்கியர்க் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வெளிறுந்தரளநகையிரரன்றிருவெங்கைவெற்பிற்
களிறும்பிடியுமுடங்குளைக்கோளரிகண்டுடைந்து
பிளிறுஞ்சுரத்திடைப்புக்கநம்மாதுபிறழ்மின்போ
லொளிறுங்கதிர்வடிவேலுடையானொடிங்குற்றனளே.

ப - ரை. வெளிறும் - வெளுத்த, தாளம் - முத்துப்போலும், நகையீர் - பற்களையுடையீர், அரன் - சிவபெருமானது, திருவெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில், களிறும் - ஆண்யானையும், பிடியும் - பெண்யானையும், முடங்கு - வளைத்த, உளை - புறமயிரினையுடைய, கோளரிகண்டு - ஆண்சிங்கத்தைக் கண்டு, உடைந்து - மனங்கலங்கி, பிளிறும் - ஒலிக்கிற, சுரத்திடை - பாலையில், புக்க - சென்ற, நும் மாது - உங்கள் பெண்ணானவள், பிறழும்மின்போல் ஒளிறும் - பிறழாநின்ற மின்போலவிளங்குகிற, கதிர் - ஒளியையுடைய, வடிவேல் உடையானொடு - வடிவேலுடையவனாகிய வொருவனோடு, இங்கு உற்றனள் - இங்கடைந்தாள், எ - று.

க - ரை. வெளிறும் தாளநகையீர்! அரன் திருவெங்கைவெற்பில், களிறும் பிடியும் முடங்குளைக்கோளரி கண்டுடைந்து பிளிறும் சுரத்திடைப்புக்க நும்மாது, பிறழுமின்போல் ஒளிறும் கதிர்வடிவேலுடையானொடு, இங்கு உற்றனள் என்பதாம்.

வி - ரை. வெளிறும் - சாதியடை. நகை - பல். உளை - புறமயிர். கோளரி - ஆண்சிங்கம். உடைதல் - மனங்கலங்கல். பிளிறல் - பேரிரைச்சலிடல். பிறழ்தல் - மின்னுதல். ஒளிறல் - மிக்கு விளங்குதல். ஒளிறுங்கதிர் வடிவேலுடையான் என்றது தலைவனை. (நகூச)

பாங்கியர் கேட்டு நற்றாய்க்குணர்த்தல்.

அதாவது—தலைவி வருகையை முன்வந்தோர் சொல்லக்கேட்ட பாங்கியர், நற்றாய்க் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கிற்றுப்பிறையர்திருவெங்கைவாணர்கிரியிலன்னே
கூற்றுக்குடித்தவுயிர்மீண்டெனத்தன்கொழுநனொடு
வேற்றுப்புலத்தினின்றுற்றாளெனச்சிலர்மெய்புரைத்தா
ராற்றுப்படுத்துன்மனத்தேயிருந்தவருந்துயரே.

ப-ரை. கிற்று பிறையர் - சந்திரகண்டத்தை யுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர் (அவரது) கிரியில் - மலையில் வாழ்கின்ற, அன்னே - தாயே, கூற்று - யமனானவன் - குடித்த - உண்ட, உயிர் - உயிரானது, மீண்டென - மீண்டாற்போல, தன்கொழுநனொடு - தன் கணவனோடு, வேற்றுப்புலத்தினின்று உற்றாள் என - வேற்றிடத்தே யிருந்து வந்தாளென்று, சிலர் மெய் உரைத்தார் - சிலர்வந்து உண்மையைச் சொன்னார்கள், (ஆதலால்) உன்மனத்தேயிருந்த அருந்துயர் - உன்மனத்திலிருந்த அரியதுயரத்தை, ஆற்றுப்படுத்து - தணிப்பாயாக, எ - று.

க - ரை. கீற்றுப்பிறையர் திருவெங்கைவாணர் கிரியில் அன்னே! யமன் கொடுபோனவுயிர் மீண்டுவந்தாற்போல, நம்மாது, தன் கணவனோடு மீண்டு வந்தாளென்று சிலர் உண்மையாகிய செய்தியைவந்து சொன்னார்கள், ஆதலால்; உன்மனத்துயர மொழிவாயாக வென்பதாம்.

வி - ரை. கீற்றுப்பிறையர் - பிறைக்கீற்றையுடையவர். கூற்று சொல்லா னஃறிணையும் பொருளானுயர்திணையு மாயதோர்சொல். யமன் என்பது பொருள்; உடலுயிர்களை வேறுபடுத்துவோன் என்பதும் பதப்பொருள். மீண்டென-மீண்டாளென வென்பதன் விகாரம். வேற்றுப்புலம் - பாலைநிலம். நின்று - ஐந்தாவதன் சொல்லுருபு. அருந்துயர் - சகித்தற்கரிய துயர். ஆற்றுப்படுத்தல் - தணிவித்தல். (௩௫௫)

நற்றாய் கேட்டவனுளங்கோள்வேலனை வினாதல்.

அதாவது—இச்செய்தியைக் கேட்ட நற்றாயானவள், அத்தலைவனது மனக்கருத்தை யறிந்து சொல்லக் கடவையென வெறியாட்டாளனை வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கைக்காலசூலத்தர்வெங்கையிலேநற்கடவுடர
முக்காலமுமுணர்ந்தீருலகாளுமுடிமன்னவன்
மைக்காவியங்கண்மடமாதுடனெம்மனைவருமோ
தக்கார்புகழ்தம்மனைபுகுமோவொன்றுசாற்றுமினே.

ப - ரை. கை - தமது திருக்கரத்தில், காலன் - யமன்போலும், சூலத்தர் - சூலப்படையை யுடையவராகிய சிவபெருமானது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், நல்கடவுள்தர - நல்ல தெய்வந்தர, முக்காலமும் - திரிகாலத்தையும், உணர்ந்தீர் - அறிந்தவர்களே, உலகு ஆளும் - உலகத்தையாளுகிற, முடிமன்னவன் - முடிமன்னனாகிய தலைவன், மை - கருமையாகிய, காவி - கருங்குவளை மலர்போலும், அம்கண் - அழகிய கண்களையுடைய, மடமாதுடன் - மடமாதோடும், எம்மனைவருமோ - எமதுமனைக்கு வருவனோ, தக்கார்புகழ் - தக்கோர்புகழ்கின்ற, தன்மனைபுகுமோ - தன் மனைக்குப்போவனோ, ஒன்று - இவ்விரண்டிலொன்றை, சாற்றுமின் - சொல்லுங்கள், எ - று.

க - ரை. கைக்காலசூலத்தர் வெங்கையிலே, நற்கடவுள்தர, முக்காலமு முணர்ந்தீர்! உலகு ஆளும் முடிமன்னவனாகிய தலைவன், மைக்காவியங்கண் மடமாதுடன் எம்மனைவருமோ? தக்கார்புகழ் தன்மனை புகுமோ? ஒன்று சாற்றுமின் என்பதாம்.

வி - ரை. காலசூலம் - யமன்போலுஞ் சூலம், யமன் செய்யுந் தொழிலைச்செய்யுஞ்சூலம்; அத்தொழிலாவது உடலுயிர்களைப் பிரிப்பது. முக்காலம்-மூன்றுகாலம். அவை:—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன. உலகாளு முடிமன்னவன் என்றது தலைமகனை. மடமாது - தலைமகள். ஒன்று - இவ்விரண்டிலொன்று.

தலைவன் சேணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலும், தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றலும் ஆகிய இரண்டுந்தெளிதல். தலைவி முன்செல்வோர் தம்மொடுதான் வரல் பாங்கியர்க் குணர்த்திவிடுத்தலும், பாங்கியர் நற்றாய்க் குணர்த்தலும் ஆகிய இரண்டும் மகிழ்ச்சி. நற்றாய் தலைவனுளங்கோள் வேலனை வினவலொன்றும் வினவுதல். பாங்கியர்க்கு முன்செல்வோர்உணர்த்தலொன்றும் செப்பல். (ருகு)

தன்மனைவரைதல்.

அதாவது—உடன்போய் மீண்டுவந்த தலைமகன் தலைமகளைத் தன்னூருக்கழைத்துப்போய்த் தன்மனையின்கண் வரைந்துகோடல்.

"வினவல்செப்பல்மேவலென்றிறைவன்
தனதில்வரைதன்மூவகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால் தன்மனைவரைதல் மூவகைப்படும்.

நற்றாய்மணனயர் வேட்கையிற் செவிலியைவினவல்.

அதாவது—நற்றாயானவள், தலைவி தன் மனையில் மணஞ்செய்யும் விருப்பினாற் செவிலியை வினவல். அதற்குச்செய்யுள்,—

மின்னைப்பயந்தவெனக்கோகதிர்வடிவேலொருவன்
றன்னைப்பயந்தவனைக்கோதிருவடித்தாமரையி
லென்னைப்புரந்தவர்வெங்கையன்னாய்மணமேற்றுவக்கு
முன்னைத்தவமெவர்க்கோவறியேம்வந்துமுற்றுவதே.

ப - ரை. திருவடித்தாமரையின் - தமது திருவடித் தாமரையால், என்னைப் புரந்தவர் - என்னை யாண்டருளினவராகிய சிவபெருமானாது, வெங்கை அன்னாய் - திருவெங்கையை நிகர்த்தவளே, மின்னை பயந்த எனக்கோ - தலைவியைப் பெற்ற எனக்கோ, கதிர்வடிவேல் ஒருவன் தன்னை பயந்த அன்னைக்கோ - ஒளியுள்ள வடிவேலினையுடைய வொருவனையீன்ற தாய்க்கோ, மணம் ஏற்று உவக்கும் - மணஞ்செய்து களித்தற்குரிய, முன்னை தவம் எவர்க்கோ - முன்னைத்தவப்பயன் யாவர்க்கோ, வந்து முற்றுவது - வந்து முடிவது, அறியேம் - அறிந்திலேம், எ - று.

க - ரை. திருவடித் தாமரையி னென்னைப்புரந்தவர் வெங்கை யன்னாய்! மின்னைப் பயந்த எனக்கோ? கதிர்வடிவேலொருவன் தன்னைப்பயந்தவனைக்கோ? மணமேற்றுவக்கும் முன்னைத்தவம் எவர்க்கோ அறிவேம் வந்து முற்றுவது என்பதாம்.

வி - ரை. மின்னை - மின்கொடிபோல்வாளாகிய தலைவியை. பயத்தல் - பெறல். கதிர்வடிவேலொருவன் என்றது தலைமகனை. புரத்தல் - காத்தல். உவத்தல் - சந்தோஷித்தல். திருவடித் தாமரையி னென்னைப் புரந்தவர் என்றது திருவடிதீக்ஷை செய்தாட் கொண்டருளினமையை. வெங்கையன்னாய் என்றது செவிலியை.

செவிலிக்கு இருளை வரைந்தமை யுணர்த்தல்.

அதாவது—செவிலிக்கு, பாங்கி, வரைந்த செய்தியை யுணர்த்தா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

செவ்வாய்மடமயிறன்னையின்னே மணஞ்செய்திருந்தா
ரவ்வாளரியனையாரென்றுதூதரறைந்தனராற்
சைவாகமந்திகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லெவ்வாறறைவதறங்கோடிசெய்துமுன்னீன்றவட்கே.

ப - ரை. செவ்வாய் மடமயில் தன்னை - தலைமகளை, அ - அந்த, ஆளரி அனையார் - ஆளரியை நிகர்த்தவராகிய தலைவர், இன்னே மணம் செய்திருந்தார் என்று - இப்பொழுதே மணம் செய்திருந்தனரென்று, தூதர் அறைந்தனர் - தூதர்வந்து சொன்னார், ஆல் - ஆதலால், சைவாகமம் திகழ் - சைவாகமங்கள் விளங்குகிற, வெங்கைபுரேசர் - திருவெங்கை நாதரது, தடம் சிலம்பில் - பெரியமலையில், அறம் கோடி செய்து, பல அறங்களைச்செய்து, முன் ஈன்றவட்கு - முன்னேபெற்றவட்கு, எவ்வாறு அறைகுவது - எவ்வாறிச்செய்தியைச் சொல்லுவது, எ - று.

க - ரை. தலைமகளைத் தலைவர் இப்பொழுதே மணம் புரிந்திருந்தாரென்று தூதுவர்வந்து சொன்னார்களாதலால் இந்தச் செய்தியைப் பல அறங்களைச் செய்து இவளைப் பெற்றவட்கு யாமெவ்வாறு சொல்லுவதென்பதாம்.

வி - ரை. செவ்வாய் மடமயில் - செவந்த அதரத்தையுடைய இளமயில் போல்வாள். (தலைவி) அறங்கோடியென்றது, பல அறங்களென்றபடி. "அக்கமொருகோடி பெறுவச்ரபாணி" என்றார் மேலோரும். வேதப்பொலிவு மிக்கு விளங்காமையும் ஆகமப்பொலிவு மிக்கு

விளங்குகின்றமையும் விளங்க, "சைவாகமந்திகழ் வெங்கைபூரேசர்" என்றார். இதனால் வெங்கைபுரம் சைவாகம வழக்கத்தையே மிகக் கொண்டிருப்பதென்றவாறாயிற்று, "சித்திரவன்னிகருங்கொங்கை பங்கர்செற்றார் புரமூன், றத்திரவன்னிக் கருணைகையார்க் கிடமாகம நூல், மித்திரவன்னியும் பூவையுங்கேட்டு வியந்துரைக்கும், பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப்பதியகமே" என்றார் பிறரும். (௩௰௮)

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.

அதாவது—தலைமகன் தலைமகளை வரைந்துகொண்டமையைத் தூதரானுணர்ந்த செவிலி நற்றாய்க் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பொன்னாரிதழித்தொடையாளர்வெங்கைப்பொருப்பிலிந்த
நன்னாளினிவருங்காலத்துறாதெனநன்மணஞ்செய்
தன்னாய்வருகின்றனர்மடமாதுடனன்பரென்று
சொன்னார்மொழிபிறழாதுண்மைகூறுநற்றூதுவரே.

ப-ரை. அன்னாய் - தாயே, அன்பர் - நமது தலைவர், பொன் ஆர்-பொன்போலும், இதழித்தொடையாளர் - கொன்றைமலர்மாலையையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கைபொருப்பில் - திருவெங்கைமலையில், இந்த நல்நாள் - இந்த நல்லநாளானது, இனிவருங் காலத்து - இனிவருங்காலத்தில், உறாதுஎன - வாராதென்று, நல் மணஞ்செய்து - நல்லமணஞ்செய்துகொண்டு, மடமாதுடன் வருகின்றனர் என்று - தலைமகளோடு வருகின்றனரென்று, மொழிபிறழாது - சொற்றவறாமல், உண்மைகூறும்-மெய்ம்மையையே சொல்லுகிற, நல்தூதுவர் சொன்னார் - நல்லதூதுவர் வந்து சொன்னார்கள், எ-று.

க-ரை. அன்னாய்! நமது தலைவர், பொன்போலும் கொன்றைமலர்மாலையைத் தரித்தவராகிய சிவபெருமானாரது திருவெங்கைமலையில், இந்த நல்லநாளானது இனிவருத லருமையாமென்று, மணஞ்செய்துகொண்டு தலைமகளோடு வருகின்றனரென்று, சொற்றவறாமல் உண்மையையே சொல்லுகிற, நல்ல தூதுவர் வந்து சொன்னார்கள் என்பதாம்.

வி-ரை. பொன்னார் என்பதில் ஆர்-உவமவுருபு. இதழி-ஆகுபெயர். தொடை - மாலை. இனிவருங்காலம்-எதிர்காலம். அன்பர் - அன்புடையவராகிய தலைவர். இந்தச் சுபதினம் இனிநேர்த லரிதென விரைந்து மணமுடித்ததேயன்றி நம்மிடத் தன்பொழிந்தன ரன்றென்பது தோன்ற அன்பர் என்றான். (௩௰௯)

தலைவன் பாங்கிக்கு, யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றேறென்றல்.

அதாவது—தலைவன் பாங்கியை நோக்கி, யான்வரைந்தமையை நுமர்க்கறிவுறுத்தக் கடவையெனக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

ஊனெழுவாய்மழுவெங்கைபுரேசருயர்சிலம்பிற்
றேனெழுவார்குழலாய்நுமர்தேறத்தெளித்தருள்வாய்
வானெழுமீரமதிவாண்முகத்துங்கள்வல்லிதனை
யானெழுநாவொன்றுசான்றாகச்செய்தவிருமணமே.

ப - ரை. ஊன்எழுவாய்-தசைநாறுகிற வாயினையுடைய, மழு-மழுப்படையைத் தாங்கிய, வெங்கைபுரேசர் - திருவெங்கைபுரேசராகிய சிவபெருமானுரது, உயர்சிலம்பில் - உயர்ந்த மலையில், தேன் எழு - வண்டுகள் ஒலித்தெழாநின்ற, வார்குழலாய் - நீண்டகூந்தலையுடையாளே, வான்எழும் - ஆகாயத்திலுதிக்கிற, ஈரமதி - குளிர்ந்த சந்திரன்போலும், வாள் - ஒளிபொருந்திய, முகத்து - முகத்தினையுடைய, உங்கள் வல்லிதனை - உங்கள் தலைவியை, யான்-நான், எழுநாஒன்று சான்றாக-அக்கினியொன்றுமே சாக்ஷியாக, செய்த-செய்துகொண்ட, இருமணம் - பெருமைபொருந்திய மணத்தை, நுமர்-உம்மவர், தேற - தெளியுமாறு, தெளித்தருள்வாய் - தெளித்தருளக் கடவை, எ - று.

க - ரை. தசைநாறுகிற வாயினையுடைய மழுப்படையைத்தாங்கிய திருவெங்கைபுரேசராகிய சிவபெருமானரது மலையில், வண்டுகளொலித்தெழாநின்ற நீண்ட கூந்தலையுடையாளே! குளிர்ந்த சந்திரன்போலும் ஒளிபொருந்திய முகத்தினையுடைய உங்கள் தலைவியை, நான் அக்கினியொன்றுமே சாக்ஷியாகச்செய்துகொண்ட பெருமைபொருந்திய மணத்தை, உம்மவர்க் கறிவுறுத்துவாயாக வென்பதாம்.

வி - ரை. வாய் - கூர்ந்த பக்கம். தேன் - வண்டுகள். தெளித்தல் - விவரித்துச்சொல்லல். முகத்துக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால், மதிபூர்ண சந்திரனென்றுரைத்துக்கொள்க. வல்லி-ஆகுபெயர். எழுநா - அக்கி. இதற்கு எழுநாக்களுண்மையான் இப்பெயருண்டாயிற்று. சான்று - கரி. (சாக்ஷி). (கூசு0)

பாங்கி, தான்அதுமுன்னேசாற்றியதுரைத்தல்.

அதாவது—பாங்கியானவள் தலைவனை நோக்கி, யான் அச்செய்தியை முன்னமே யெமர்க்கியம்பினேனெனக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பன்னாளருந்தவஞ்செய்ததன்மாதைப்பனியிமய
நன்னாகநல்கவரைந்தார்திருவெங்கைநாடளிக்கு
மன்னாவெம்மேமவரைவளர்மாதைவரைந்தமைநான்
முன்னுவறிந்துபயந்தாடனக்குமொழிந்தன்னே.

ப - ரை. பனி - குளிர்ச்சிபொருந்திய, நல்-நல்ல, இமயநாகம் - இமயமலையானது, பல்நாள் - பலநாள், அருந்தவம் செய்த - அரிய தவஞ்செய்தீன்ற, தன்மாதை-தன்பெண்ணை, நல்க-கொடுக்க, வரைந்தார் - வரைந்துகொண்டவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை நாடு அளிக்கும் - திருவெங்கை நாட்டினை யளிக்கிற, மன்னா - அரசனே, எம் - எமது, ஏமவரை வளர்மாதை-பொன்மலையில் வளர்ந்த மங்கையை, வரைந்தமை-நீவரைந்துகொண்டமையை, நான் முன்னு அறிந்து - நான் முன்னரே தெரிந்துகொண்டு, பயந்தாள் தனக்கு - ஈன்றவட்கு, மொழிந்தனன் - சொல்லினேன், எ - று.

க - ரை. பன்னாளருந்தவஞ்செய்த தன்மாதைப் பனியிமய நன்னாக நல்க வரைந்தார் திருவெங்கை நாடளிக்கும் மன்னா! எம் ஏமவரைவளர் மாதை வரைந்தமை, நான்முன்னுவறிந்து பயந்தாடனக்கு மொழிந்தனன் என்பதாம்.

வி - ரை. பன்னாள் - நெடுங்காலம். செய்த - செய்ததனாலுண்டாகிய, காரணப்பொருட்டாகிய பெயரெச்சம். நாகம் - மலை. வரைதல் - மணஞ்செய்தல். அளித்தல் - காத்தல். ஏமம் - பொன். பயந்தாள் - ஈன்றவள், நற்றாய். தூதுவராலறிந்து சொன்னேனென்றவாறு.

மணனயர் வேட்கையினற்றாய் செவிலியை வினாதலொன்றும் வினாதல். வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்தலும், வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தலும், பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தலும் ஆகிய மூன்றும் செப்பல். தலைமகனுமர்க்கியம்பு சென்றென்றலொன்றும் மேவுதல். (நகூக)

உடன்போக்கிடையீடு.

அதாவது—நம் மனையில் வரைந்துகொள்ளாது, தன்னூரில் வரைந்தானென்று தலைவி சுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவி

யையுடன்கொண்டு போம்போது, தலைவி சுற்றத்தாரிடையீடுபட்டு, மீண்டு தலைவி வருதல்.

"போக்கறிவுறுத்தல் வரவறிவுறுத்த
னீங்கமிரக்கமொடு மீட்சியென்றுங்
குடன்போக்கிடையீ டொருநால்வகைத்தே"

என்னுஞ் சூத்திரவிதியால் உடன்போக்கிடையீடு ஒருநால்வகைப் படும்.

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்தல்.

அதாவது—ஐம்பத்தைந்தாநாள் தன்னூரைவிட்டுநீங்குங்கிழத்தி எதிர்வருவோர் தம்மொடு, தலைவனுடன் செல்லுந்தன் செலவைப் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல். அதற்குச் செய்யுள்,—

வெறிமேவுகொன்றையம்பூந்தொடையார்திருவெங்கைவெற்
கறிமேவுமுப்பெனவன்பரிற்கூடிவெங்கானகத்தி [பிற்
னெறிமேவுமங்கைமகிழ்ந்துசென்றாளெனநீருரைமின்
மறிமேவுமுண்கண்மடக்கொடிமாதர்க்குமாதவரே.

ப - ரை. மாதவரே - பெருந்தவத்தினரே, மறிமேவும்-மானினோக்கத்தையுடைய, உண் கண் - மையுண்ட கண்களோடு கூடிய, மடக்கொடி - இளங்கொடிபோலும், மாதர்க்கு - என்பாங்கியர்க்கு, வெறி மேவு - மணம் பொருந்திய, அம் - அழகிய, கொன்றைப்பூந் தொடையார் - கொன்றைமலர்மாலையை யணிந்தவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், கறிமேவும் உப்பு என - கறிக்குரிய வுப்புப்போல, அன்பரின் கூடி - தலைவரோடு கூடி, வெம் - கொடிய, கானகத்தில் - காட்டில், நெறிமேவு மங்கை - அறநெறியையுடைய மங்கையானவள், மகிழ்ந்து சென்றாள் என - மகிழ்ந்து போனாளென்று, நீர் உரைமின் - நீங்கள் சொல்லுங்கள், எ - று.

க - ரை. மாதவரே! திருவெங்கை மங்கையானவள் தன்கணவனோடு கூடி வெங்கானகத்திற் சென்றாளென்று என் பாங்கியர்க்குச் சொல்லுங்கள் என்பதாம்.

வி - ரை. வெங்கானகம் - பாலைநிலம். நெறி - கற்புநெறி. மறிமேவு முண்கண் மடக்கொடிமாதர் - பாங்கியர். மறி-மான். (நகூஉ)

தலைமகடன்செலவீன்றாட்குணர்த்தல்.

அதாவது—தலைமகள், தன்செலவையீன்றாட் குணர்த்துமாறு அந்தணரோ டுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்னைத்திருத்துமவிர்சடையார்திருவெங்கைவெற்பிற்
பொன்னைப்பரித்ததிருமார்பரோடதர்போயினளென்
றென்னைக்கொடுத்துக்கலங்கவிழ்நாய்கரெனக்கவலு
மன்னைக்குரைத்தருளீர்வழுவாநெறியந்தணரே.

ப - ரை. வழுவாநெறி - தவறாத நெறியினையுடைய, அந்தணரே-அந்தணீரே, என்னைகொடுத்து - என்னை யிழந்து, கலம் கவிழ் - மரக்கலங்கவிழப்பெற்ற, நாய்கர் என - சிரேட்டிகள்போல, கவலும்-துன்பப்படுகிற, அன்னைக்கு - என்னையீன்றவட்கு, மின்னை - மின்கொடிகளை, திருத்தும் - திருத்துகிற, அவிர்சடையார்-விளங்குகிற சடையையுடையவராகிய சிவபெருமானுடைய, திருவெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், பொன்னை பரித்த - பொன்னைத்தாங்கிய, திருமார்பரோடு - திருமார்பினையுடையவருடனே, அதர்போயினள் என்று, அருநெறியிற்சென்றாளென்று, உரைத்தருளீர்-சொல்லியருள்வீராக, எ - று.

க - ரை. வழுவா நெறியந்தணரே! மரக்கலம் கவிழக்கொடுத்த சிரேட்டிகள்போல, என்னை யிழந்து வருந்தாநின்ற என் தாய்க்கு, உன்மகள், பொன்னைப்பரித்த திருமார்பரோடுகூடி அருநெறிசென்றாளென்றுரைத்தருள்வீராக வென்பதாம்.

வி - ரை. மின்னைத்திருத்தலாவது மின்னையவிரக்கற்பித்தல். அவிர்தல் - விளங்குதல். பொன் - இலக்குமி. பரித்தல்-தாங்குதல். அதர் - அருநெறி. கலம்-மரக்கலம். நாய்கர்-சிரேட்டிகள் (வணிகர்). கவலல் - துன்புறல். வழுவாநெறி-துறவறநெறி. அந்தணர்-அழகிய தட்பத்தினையுடையார். (௩௬௩)

நற்றாய்க்கந்தணர்மொழிதல்.

அதாவது—தலைவி சொன்னவாறே, அந்தணர் சென்று நற்றாய்க்குத் தலைவி செல்வையுணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அல்லஞ்சுகண்டர்திருவெங்கைவாணரணிவரையி
னில்லஞ்சுரமச்சுரமேதன்னில்லமெனக்கருதி
வல்லீஞ்சுமென்முலையாணடந்தாளென்வழிச்செலவைச்
சொல்லந்தணவனைகென்றுவெம்பாலைச்சுரத்திடையே.

ப - ரை. அல்அஞ்சுகண்டர் - இருட்டு அஞ்சுதற்குரிய கண்டத்தையுடையவர், திருவெங்கைவாணர்-திருவெங்கைப்பதியில் வாழ்பவர் (அவரது), அணிவரையீர் - அழகிய மலையில் வாழ்பவரே, வல் அஞ்சும் - வல்அஞ்சுதற்குரிய, மெல் முலையாள் - மெல்லியதனங்களையுடையவளாகிய தலைவி, இல்லம் சுரம்-வீடேசுரம், அச்சுரமே தன் இல்லம் - அந்தச்சுரமே தன்வீடு, எனக் கருதி - என்று நினைத்து, அந்தண - அந்தணனே, என்வழிச் செலவை - என்வழிப்போக்கை, அன்னைக்கு - என்தாய்க்கு, சொல்என்று-சொல்லக்கடவையென்று, வெம் - வெவ்விய, பாலைச்சுரத்திடை - பாலையாகிய சுரத்தில், நடந்தாள் - நடந்தனள், எ - று.

க - ரை. அல்லஞ்சுகண்டர் திருவெங்கைவாணர் அணிவரையீர்! வல்அஞ்சு மென்முலையாள், இல்லம் சுரம், அச்சுரமே தன் இல்லமெனக்கருதி, அந்தணனே, என்வழிப்போக்கை என்தாய்க்குச் சொல்லக்கடவையென்று வெவ்விய பாலையாகிய சுரத்தில், நடந்தனள் என்பதாம்.

வி - ரை. அல்லஞ்சுகண்டர் - மிகக்கறுத்த கண்டத்தையுடையவர் என்றபடி. வல்லஞ்சு மென்முலை-உரு, அழகு முதலியவற்றால் வல்லினுஞ் சிறந்தமுலை. சுரம் - அருநெறி. அல்லஞ்சுகண்டர் - திருவெங்கைவாணர். அணிவரையீர் என்றது நற்றாயை. (நகச)

நற்றாய் அறத்தொடுநிற்றலின், தமர்பின்சேறலைத்தலைவி கண்டுதலைவற்குணர்த்தல்.

அதாவது—நற்றாய் தமருக்கு அறத்தொடு நின்றமையால், அத்தமர் பின்றொடர்ந்து செல்லுதலைத் தலைவிகண்டு தலைவற்குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கல்வளைத்தன்றுபுரமெரித்தார்கருங்காவியங்கட்
பல்வளைச்செங்கைக்கொடிபாகர்வெங்கைப்பனிவரையாய்
வில்வளைத்தம்புபொழிந்தார்த்தெழுந்துவியன்சிலம்பைச்
செல்வளைப்புற்றதுபோல்வளைந்தாரெமர்தேரினையே.

ப - ரை. அன்று - அந்நாளில், கல்வளைத்து - மலையை வளைத்து, புரம்எரித்தார் - முப்புரத்தை யெரித்தவர், கருகாவி - கருங்குவளைமலர்போலும், அம்கண் - அழகிய கண்ணையும், பல் வளை செங்கை - பலவளையலை யணிந்த செங்கையையும் உடைய, கொடி - கொடியை நிகர்த்த வுமாதேவியாரை, பாகர் - பாகத்தி லுடை

யவர், (அவரது) வெங்கை பணிவரையாய் - குளிர்ந்த திருவெங்கை மலையில் வாழ்பவனே, செல் - மேகங்கள், வில்வளைத்து-வில்லைவளைத்து, அம்புபொழிந்து - அம்பைப்பொழிந்து, ஆர்த்து எழுந்து - ஆரவாரித்தெழுந்து, வியன் சிலம்பை - பெரியமலையை, வளைப்புற்றது போல் - வளைத்துக்கொண்டாற்போல, எமர் - எம்மவர், தேரினை - உனது தேரினை, வளைந்தார் - வளைத்துக்கொண்டார், எ - று.

க - ரை. கல்வளைத்தன்று புரமெரித்தார், கருங்காவியங்கட் பல்வளைச் செங்கைக்கொடி பாகர் வெங்கைப்பணிவரையாய்! செல்லானது, வில்வளைத்து அம்புபொழிந்து ஆர்த்து வியன்சிலம்பை வளைப்புற்றதுபோல, எம்மவர், நின்றேரினை வளைத்துக்கொண்டார். என்பதாம்.

வி - ரை. இறைவர் வளைத்தது பொன்மலையே யாயினும், கல் என்றார் சாதிபற்றி. கல் - ஆகுபெயர் வாளாபுரமென்றாரேனும் கல் வளைத்தெரித்தார் என்ற குறிப்பால் முப்புரத்தைக் குறித்தது. செல்லுக்கேற்ப வில் வானவில்லெனவும், அம்புபொழிதல் நீர்சொரிதல் எனவும், ஆர்த்தல் கர்ஜித்தல் எனவும், எழுதல் விண்ணிற்படர்த லெனவும், எமருக்கேற்ப வில்தநுசு எனவும், அம்பு அம்புகள் ளெனவும், ஆர்த்தல் ஆரவாரித்த லெனவும், எழுதல் போர்க்கெழுத லெனவும் உரைத்துக்கொள்க. சிலம்பைச் செல்வளைத்தாற்போல, தேரினை யெமர் வளைத்தாரென வினைமுடிக்க. (நகூரு)

தலைமகடன்னைந் தலைமகன் விடுத்தல்.

அதாவது—தலைமகளைத் தலைமகன் விடுத்தல். அதற்குச் செய்யுள்,—

செருகிக்கிடந்தமதிவேணியர்திருவெங்கைவெற்பிற்
சருகிற்புகுஞ்சுழற்காற்றுகுவன்பகைச்சார்வினரேற்
குருகிற்சிறந்தகைத்தோகாய்நுமரைக்கொலாமையினு
லருகிற்செலவஞ்சுவேனிற்கநீயிவ்வதரிடையே.

ப - ரை. செருகிக் கிடந்த - செருகப்பட்டுக்கிடந்த, மதி - சந்திரகண்டத்தை யணிந்த, வேணியர் - சடாபாரத்தையுடையவராகிய சிவபெருமானாரது, திருவெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில், பகைச் சார்வினரேல் - பகைச்சார்வினராயின், சருகில்புகும் - சருகின்றிரளிற் புகுந்த, சுழற்காற்று ஆகுவன் - சூறைக்காற்றாவேன், குருகின் - வளையலால், சிறந்த - அழகுபெற்று விளங்குகின்ற, கை- யையினையுடைய, தோகாய்-தோகையே, நுமரை-நும்மவரை, கொல்

லாமையினால் - கொல்லாமையால், அருகில் செல்ல - அவர்க்கருகே செல்லவும், அஞ்சுவேன்-அஞ்சாநிற்பேன், நீ இ அதரிடையே நிற்க-நீயிவ்வதரிடத்தே நிற்கக்கடவை, எ - று.

க - ரை. குருகிற் சிறந்தகைத் தோகாய்! செருகிக்கிடந்த மதி வேணியர் திருவெங்கை வெற்பில், பகைச்சார்பினராயின், சருகிற் புகுஞ்சுழற் காற்றாவேன், நமராயின் அவரைக் கொல்லமாட்டாமையால் அவர்க்கருகினுஞ் செல்ல வஞ்சாநிற்பேன், நீ யிவ்வதரிடை நிற்கக்கடவை யென்பதாம்.

வி - ரை. செருகி-செயப்பாட்டுவினை. பகைச்சார்வினர்-பகைவர். குருகு-வளையல். தோகை-இருமடியாகுபெயர். அதர்-அருநெறி. பகைவராயின் அவர்களைச் சுழற்காற்றுச் சருகுகளைப் பறக்கடிப்பது போலப் பறக்கடிப்பேன், நமராயின், அவர்க்கருகே செல்லவு மஞ்சுவேன் நீ யஞ்சாதிவ்வதரிடை நிற்கக்கடவை யென்றவாறு. (௩௬௬)

தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றுற்றல்.

அதாவது—தமருடன் செல்லாநின்ற தலைவி, அவன் புறங்காட்டிப்போதலை நோக்கிக் கவன்றுற்றுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கன்மலையென்னினுமவ்வேடர்பெய்யுங்கணைமழைக்கிங்
கென்மலையென்னும்புயத்தோர்க்கிடந்தருமிம்மலைதான்
பன்மலையென்னுமணிமாடவெங்கைப்பழமலைவாழ்
பொன்மலைவெள்ளிமலைபோற்பொலிகபுகழ்படைத்தே.

ப - ரை. கல்மலையென்னினும்-கல்மலையேயாயினும், அவ்வேடர் பெய்யும் - அவ்வேடர் சொரிகிற, கணைமழைக்கு-அப்ப மாரிக்கு, இங்கு - இவ்விடத்து, என் - எனது, மலையென்னும்புயத்தோர்க்கு-மலையென்றற்குரிய புயத்தினராகிய தலைவருக்கு, இடம் தரும்-இடந்தருகிற, இம்மலை-இந்த மலையானது, பல்மலையென்னும்-பலமலைகளென்றற்குரிய, மணிமாடம் - மணிமாடங்களையுடைய, வெங்கை பழமலைவாழ் - திருவெங்கைப் பழமலையில் வாழ்கின்ற, பொன் மலை வெள்ளிமலைபோல் - பொன்மலைபோலவும் வெள்ளிமலைபோலவும், புகழ்படைத்து பொலிக - புகழ்படைத்து விளங்குக, எ - று.

க - ரை. கல்லானியன்ற மலையேயாயினும், அவ்வேடர் சொரிகின்ற கணைமழை யெமது தலைவர்மீது படாமற் காத்தலால் இந்த மலையானது பொன்மலைபோலவும்வெள்ளிமலைபோலவும் புகழ்படைத்து விளங்குகவென்பதாம்.

வி - ரை. மலையென்னும் புயத்தோர் - தலைவர். மணிமாடம் - மணிகுயின்ற மாளிகைகள். பொன்மலை - மேரு. வெள்ளிமலை-கைலாயம். கவன்றார்றல் என்றதனால் இக்கிளவி யிரக்கத்தின்பாற்படும்.

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தலும், தன்செலவீன்றாட் குணர்த்திவிடுத்தலும், ஈன்றாட் கந்தணர் மொழிதலும் ஆகிய மூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய. அறத்தொடுநிற்றலிற் றமர்பின்சேறலைத் தலைவிகண் டுரைத்தலொன்றும் அலரறிவுறுத்தற் குரித்து. தமருடன் செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்றுரைத்தலொன்றும் இரக்கத்துக் குரித்தெனக் கொள்க. (௩௬௭)

வரைதல்.

அதாவது—"தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலும், என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோன், அந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலம், தந்துவரைத றகுதியென்ப" என்னுஞ் சூத்திரவிதியால், சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு' வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

வரைதல் என்பது - ஐம்பத்தாறுநாள் தலைமகன் மீண்டு தலைமக ளில்லின் வாராநின்றுழி, தலைமகள் தமர் எதிர்கொண் டழைத்து வந்தபின், உலகவியற்கையின்படி பலவகையாக அருங்கலமுதலிய வேண்டுவன கொடுத்து, அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு, மண சடங்குடனே வதுவை முடித்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு,
அருங்கலந் தந்து வரைந்துழிக் கண்டோர் சாற்றல்.

அதாவது—(வெளிப்படை) அதற்குச் செய்யுள்,—

கருவேரறுக்குந்திருவெங்கைவாணர்க்குங்கற்புமைக்கு
மருவேள்விநன்மணஞ்செய்துசெம்பாதிமெய்யாயினவால்
வருவேதநன்னெறிநாள்வழுவாமன்மணம்புணர்ந்து
பொருவேலிறைவற்குநன்மாதினுக்குமெய்பூரித்தவே.

ப் - ரை. கருவேர் அறுக்கும் - (அன்பாது) கருவை வேரறுக்கிற, திருவெங்கை வாணர்க்கும் - திருவெங்கைவாணராகிய சிவபிரா

னார்க்கும், கற்பு உமைக்கும் - கற்பினையுடைய வுமாதேவியார்க்கும், அருவேள்வி - அரிய வேள்வியாகிய, நல்மணம் செய்து - நல்லமண முடித்தலால், மெய் - இருவருடம்பும், செம்பாதி ஆயின - நேர்பாதி யாயின. பொரு-போர் செய்தற்குரிய, வேல் - வேற்படையையுடைய, இறைவற்கும் - தலைவனுக்கும், நல்மாதினுக்கும்-நன்மையையுடைய தலைவிக்கும், வரு - வளராநின்ற, வேதநல்நெறி - நல்லவேதமார்க்கப் படி, நாள் வழுவாமல் - நாள் தவறாமல், மணம் புணர்ந்து - மணம் புணர்ந்ததனால், மெய் - இருவருடம்புகளும், பூரித்த - பூரித்தன. எ - று.

க - ரை. கருவேரறுக்குந் திருவெங்கை வாணர்க்கும் கற்புமைக்கும் அருவேள்வி நன்மணஞ்செய்து செம்பாதி மெய்யாயின, பொருவேலிறைவற்கும் நன்மாதினுக்கும் வருவேத நன்னெறி நாள் வழுவாமல் மணம் புணர்ந்து, மெய்பூரித்தன வென்பதாம்.

வி-ரை. கரு - பிறவி. வேரறுத்தல் - நிர் மூலமாக்குதல். மணமும் ஓர் வேள்வியாதலால், 'அருவேள்வி நன்மணம்' எனப்பட்டது. செய்து - காரணப் பொருட்டாகிய வினையெச்சம். செம்பாதி - சரிப்பாதி, "தீராதவினை தீர்த்த தம்பிரான் திருமேனியிற், செம்பாதியுங் கொண்டதையனு யகிருமர செங்கீரை யாடியருளே" என்றார் பிறரும். மெய் - உடம்பு; இதுமங்கலவழக்கு. ஆல்-அசை; வியப்பிடைச் சொல்லென்னினுமாம். வியப்பென்னெனின், மணமுடித்த இருதிறத்தாருள் ஒரு திறத்தார்க்கு மெய் செம்பாதியாயினமையும், மற்றொரு திறத்தார்க்கு மெய் பூரித்தமையுமென்க. பொருவேலிறைவன் என்றமையால் தலைமகனது வீரமும், நன்மாது என்றமையால் தலைமகளது கற்புந்தொனிக்கின்றன. பூரித்தல் - நிரம்பல்.

இங்ஙனம் ஒரு தலைவனுக்கும் ஒரு தலைவிக்கும் ஒருகால் மணமுடிப்பதன்றிப் பலகால் மண முடிந்ததாகக் கூறுதல் உலகின் கண் வழங்குவதன்றே, இவ்வாறு கூறிய தென்னையெனின், உடன்போய்த் தன்னூரின் கண்ணே வரைதலும், மீண்டுவந்து தன் மனையின் கண்ணே வரைதலும், அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டுத் தாய்தமறிய மணச்சடங்கின் முறையே முடியாமையால் அவையிரண்டு மணமாகா. அஃதென்னையெனின், உலகியலில் தாய்தமரறியாது மணச்சடங்குமின்றி ஒருவன் உரிமை கருதித்தாலிகட்டு மணமென்று உலகத்தார் கைக்கொள்ளார், அவர்க்கேமீண்டு மணச்சடங்குடனே மணமுடிப்பார். ஆதலால் அந்தணர் முதலாயினாரை முன்

ளிட்டு அவன் மனையின் மணச்சடங்குடனே முடித்தலின் இதுவே மணமாயினவாறுணர்க. இவ்வாறு நாள் முறையாய்க் கூறிவந்து ஐம்பத்தாறுநாள் மணமுடிந்ததென்று கூறியதென்னையெனின்,

"திங்க ளிரண்டி னகமென மொழிப"

என்னும் இறையனா ரகப்பொருட் சூத்திரத்துறையில் இருதிங்களுள் நாலு நாளிருக்க மணமுடிப்பதியல் பென்றிலக்கணங் கூறினமையாற் கூறியதென்றுணர்க. (௫௯௮)

வரைவியல் முற்றிற்று.

கற்பியல்.

அதாவது—கற்பிக்கப்படுவது, கற்பித்தலாவது அறிவும் ஆசாரமும் தலைவனாற் கற்பிக்கப் படுதலும், இருமுது குரவராற் கற்பிக்கப் படுதலும், செவிலியாற் கற்பிக்கப்படுதலும், அந்தணர்முதலிய சான்றோராற் கற்பிக்கப்படுதலும் எனக்கற்பித்தல் பலவாகாதலின், இதற்குக் கற்பியல் எனப் பெயராயிற்று. ஆயின், இவ்வாறு களவினொழுகல் கற்பின்கணொழுகல் உலகின்கண் இன்றேயெனின், நன்று சொல்லினை, அறிவுடையோர் மக்கட்கு மணஞ்செய்யுங்கால், இத்தன்மையானை நினக்கு மணஞ்செய்ய நினைந்தேம், இது நினக்கியையபோ? இயைபின்மையோ? என வினவி, அவரவர் இசைவின்படியே செய்வர். அவர் கூறுக்கால் குறிப்பானுணர்ந்து செயவரெனக்கொள்க. இங்ஙனம் இருவருள்ளமு மொத்தவழிமணஞ் செய்த லியல்பாயிற்று. ஆகவே, உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாம். உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபோதே மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. "இதனை, "உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக், கள்ளத்தாற் கள்வே மெனல்" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர், நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமெனக் கூறியதனானுணர்க. எனவே, உலகின்கண் ணிகழுங் கற்பொழுக்கமெல்லாம் கந்தருவ மணத்தின் வழியாய கற்பென்றேகொள்க.

இல்வாழ்க்கை.

அதாவது—தலைவனும் தலைவியும் இல்லின்கண்வாழும் வாழ்க்கையைக் கூறுதல்.

"கிழவோன்மகிழ்ச்சி கிழத்திமகிழ்ச்சி
பாங்கிமகிழ்ச்சி செவிலிமகிழ்ச்சியென்
றீங்குநால்வகைத்தில்வாழ்க்கையே"

என்னுஞ் சூத்திர விதியால் இல்வாழ்க்கை நால்வகைப்படும்.

தலைவன்தலைவிமுன் பாங்கியைப்புகழ்தல்.

(வெளிப்படை.) அதற்குச் செய்யுள்.

கலைகாணரும்புகழ்வெங்கைபுரேசர்கனகவெற்பிற்
குலைகாணலைபுனற்பண்ணையிறுக்குபைங்கூழ்விளைவுற்
றலைகாணளவும்வருந்துகின்றாரினென்னெண்டொடைமின்
முலைகாணளவும்வருந்தினைவாழியுழுகின்முலையே.

ப-ரை. முகிழ்முலையே - முகிண்முலையை யுடையாளே, கலை-கலைகளால், காண்அரு - காண்டலருமையாகிய, புகழ் - புகழை யுடைய, வெங்கைபுரேசர்-திருவெங்கை புரேசரது, கனகவெற்பில்-பொன்மலையில், குலைகாண் - குலைகள் தோற்றுகிற, அலைபுனல் - அசையாநின்ற நீரையுடைய, பண்ணையின் - வயல்களில், ஆக்கு - விளைவிக்கப்படுகிற, பைங்கூழ் - பயிரானது, விளைவுற்று-விளைந்து, உலைகாண் அளவும் - உலையிற் பெய்யக் காணுமளவும், வருந்துகின்றாரின் - வருந்துவோர்போல, என் ஒள்தொடை - எனது ஒட்பமாகிய மாலை, மின் - மின்கொடி போல்வாளாகிய தலைவியின், முலை காணளவும் - முலையின்மீது காணப்படுமளவும், வருந்தினை - நீவருந்தினை (ஆதலால்) வாழி - நீ வாழக்கடவை, எ - று.

க - ரை. முகிண்முலையே! கலைகாணரும் புகழ்வெங்கை புரேசர் கனகவெற்பில், குலைகாணலைபுனற் பண்ணையினுக்கு பைங்கூழ் விளைவுற்றுலை காணளவும் வருந்துவோர்போல, எனது ஒள்ளிய பூமாலையானது, உங்கள் தலைவியின் முலையினிடத்துக் காணப்படுமளவும் நீவருந்தினையாதலால், நீ பல்லாண்டு வாழக்கடவை யென்பதாம்.

வி - ரை. இறைவனது புகழ் கலைகளானளவிடப் படாததாகலான் அதனைக் 'கலைகாணரும்புகழ், என்றார். கனகம் - பொன். குலை - கொத்து, (நெற்கற்றை). பண்ணை-வயல். வருந்துகின்றாரின் என்பதில் இன் ஐந்தாவத னுருப்புப்பொருட்டு. தொடை - பூமாலை. மின் - ஆகுபெயர். முகிண்முலையென்பதில் முகிழ் - தாமரை யரும் பெனினுமாம். (௩௬௬)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

அதாவது—இவ்வாறு தன்னைப் புகழ்ந்த தலைவனைப் பாங்கி வாழ்த்தாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

மால்போலிருக்குமிறைநீயணிந்தநன் மங்கலநாண்
பால்போலிருக்குமொழியாட்குவெங்கைப்பரனணிந்த
சேல்போலிருக்கும்விழிமாதுமையின்றிருக்கழுத்தி
னூல்போலிருக்கப்பெறுகதின்மாதவநோக்கடைந்தே.

ப - ரை. மால்போல் இருக்கும் இறை- திருமால்போலிருக்கிற இறைவனே, நீ அணிந்த - நீ பூட்டின, நல்மங்கல நாண் - அழகிய மங்கல சூத்திரமானது, மாதவநோக்கு அடைந்து- திருமாலின் கடா

க்ஷத்தை பெற்று, பால்போல் இருக்கும் மொழியாட்கு-பால்போல இனிதாயிருக்கிற சொல்லினையுடையவளாகிய தலைவிக்கு, வெங்கை பரன் - திருவெங்கைச் சிவபிரான், அணிந்த-பூட்டின, சேல்போல் இருக்கும் விழி - சேல்மீன்போல் இருக்கும் கண்களையுடைய, மாது - அழகிய, உமையின் - உமாதேவியின், திருக்கழுத்தில் - திருக்கழுத்திலுள்ள, நூல்போல்-மங்கல சூத்திரம்போல, இருக்கப் பெறுக - இருக்கபெறுவதாக, எ - று.

க - ரை. திருமால்போலிருக்கு மிறைவனே! நீயணிந்த மங்கலநாண், திருமாலருள்பெற்று, பால்போலு மின்சொல்லையுடையவளாகிய தலைவிக்கு, திருவெங்கைச் சிவபிரான் பூட்டின, சேல்மீன் போலிருக்குங்கண்களையுடைய அழகியவுமாதேவியின் திருக்கழுத்திலுள்ள மங்கல சூத்திரம்போல விருக்கப்பெறுவதாக வென்பதாம்.

வி - ரை. மால் - என்பதற்கு அன்பரிடத்து அன்புள்ளவன், அன்பராலன்பு செய்யப்பட்டவன் என்றிருவகைப் பொருளுரைப்ப. இறை - பண்பாகுபெயர்; அண்மை விளியாதலா லியல்பு. இறை நீயெனவைத்து இறைவணுகிய நீயென்றுரைத்தலுமாம். அணிதல் - பூட்டுதல். பால்போலிருக்கு மொழி - இன்சொல். பரன் - மேலானவன். சேல் - மீன்விசேடம். நூல்-ஆகுபெயர். மாதவன்-மா=தவன்= திருமகள் கொழுநன் மா - திருமகள். தவன்-நாயகன். தில்-அசை. வெங்கைப்பரனணிந்த சேல்போலிருக்கும் விழிமாதுமையின்றிருக்கழுத்தினூல்போலிருக்கப்பெறுகஎன்றமையால் உமாதேவியின்திருக்கழுத்தின் மங்கல நாண்மிக்க வுறுதியுடைத்தென்பது பெறப்பட்டது. அவ்வுறுதியாதெனின், நான்முகனுதியர் நல்லமு துண்டிறக்கவும், சிவபிரான் தீவிடமுண்டிறவாதிருத்தற் காரணமாயிருத்தல் என்க இது.

> "வேதரஞ்சகன் மால்புரந்தரன் வேகசண்ட குபேரனே
> டாதியெண்டிசை பாலர்பொன்றவு மாதியந்தமிலாததோர்
> நாதர்பொன்றில ரேதுன்மங்கல நாணுறுந்திற மாதலால்
> நீதழைந்தது யோகமம்பிகை நீவியென்பது பாவமே"

என்னுஞ் செய்யுளாலினிது விளங்கும். (௩௭0)

பாங்கிதலைவியைவரையுநாளளவும்வருந்தாதிருந்தமை யுரையாயென்றல்.

அதாவது—பாங்கியானவள் தலைவியை நோக்கி நீவரையுநாளளவும்வருந்தாதிருந்தமை யெவ்வாறு உரையாய் என வினவாநிற்றல்.

அதற்குச்செய்யுள்,—

போற்றலர்போற்றுங்கதிர்வேலவன்தொடைபூணளவு
நீற்றலர்மேனியர்வெங்கையிலேயுண்ணிரம்புசெந்தே
னூற்றலரொன்றிற்கொடிநுசுப்பாயிவ்வுலகநிறை
தூற்றலரெங்ஙனநீசுமந்தாற்றினைசொல்லுகவே.

ப - ரை. கொடி - பூங்கொடிபோலும், நுசுப்பாய்-இடையினையுடையாளே, போற்றலர்-பகைவர். போற்றும்-வணங்குகின்ற, கதிர்-ஒளியுள்ள, வேலவன் - வேற்படையை யுடையவனாகிய தலைவனது, தொடை-மாலையை, பூண் அளவும் - பூணுமளவும், நீறு-திருவெண்ணீறு, அலர் - பூசப்பெற்ற, மேனியர் - திருமேனியையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே-திருவெங்கைப்பதியில், உள்நிரம்பு - உள்ளே நிறைந்த, செந்தேன் - செந்தேனை, ஊற்று-உமிழ்கின்ற, அலர் ஒன்றின் - ஒருமலரைப்போல, இவ்வுலகம் - இவ்வுலகத்தார், தூற்று - தூற்றுகின்ற, நிறை அலர் - மிக்க அலரை, எங்ஙனம் - எவ்வாறு, நீ சுமந்து ஆற்றினை-நீசுமவாநின்று பொறுத்திருந்தனை, சொல்லுக - சொல்லக்கடவை, எ - று.

க - ரை. கொடிநுசுப்பினையுடையாளே! பகைவர் வணங்குகிற கதிர்வேலவனது தொடையணியுமளவும், நீறுபரந்த திருமேனியையுடையவராகிய சிவபிரானாரது திருவெங்கைப்பதியில், தேனையுமிழ்கின்றவொரு அலரைச்சுமப்பதுபோல, இவ்வுலகத்தார் தூற்றுகிற மிக்க அலரை நீயெவ்வாறு சுமந்தாற்றினை யென்பதாம்.

ப - ரை. போற்றலர் - விரும்பாதவர் (பகைவர்). தொடை பூணளவும் என மேல்வருதலால் கதிர்வேலவன் என்பது தலைமகனையுணர்த்திற்று. தொடை - ஆகுபெயர். நீறு - திருவெண்ணீறு. ஊற்றுதல் - வார்த்தல். ஒன்றின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருட்டு. அலர்-மலர், நிந்தை. கொடி-பூங்கொடி. நுசுப்பு-இடை. ஆற்றல் - சகித்தல். (௩௭௧)

பெருமகளுரைத்தல்.

அதாவது—தலைவி, தான் வரையுநாளளவும் வருந்தாதிருந்தமைக்குக் காரணம் இன்னதெனப் பாங்கிக்கு உரையாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

வினைக்கூறுசெய்தந்திருவடித்தாமரைமேவுறவென்
றனைக்கூவுமையர்திருவெங்கைவாணர்தடஞ்சிலம்பின்
முனைக்கூரயில்விழியாயின்றுகாறுமுதல்வருட
னெனைக்கூறிடுமலரேதுணையாகவிருந்தனமே.

ப - ரை. வினைக்கு - வினைகளுக்கு, ஊறு செய் - அழிவு செய்கின்ற, தம்-தம்முடைய, திருவடி-திருவடியாகிய, தாமரை-தாமரை மலர், மேவுற - வந்து அடுக்கும்படி, என்றனைக்-வும்-என்னைவலிந்தழைக்கின்ற, ஐயர் - இறைவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர், (அவரது) தடம் சிலம்பில்-பெரிய மலையில் வாழ்கின்ற, முனைகூர் - கூர்ந்தநுனியையுடைய, அயில் - "வேல்போன்ற," விழியாய் - கண்களை யுடையவளே, இன்றுகாறும் - இன்றளவும், முதல்வருடன் - தலைவரோடும், என்னை - என்னையும், கூறிடும் - (இவ்வூரார்) பேசுகின்ற, அலரே துணையாக - அலரையே உதவியாகக்கொண்டு, இருந்தனன் - இருந்தேன், எ - று.

க் - ரை. வினைகளுக்கழிவுசெய்கிற தமது திருவடித்தாமரை மலரையடைய என்னை வலிந்தழைக்கின்ற இறைவரது திருவெங்கையில் வாழ்கின்ற கூர்வேல்போலுங் கண்களையுடையாளே! தலைவனையும் என்னையும் இவ்வூரார் கூறுமலரையே துணையாகக்கொண்டுஆற்றியிருந்தே னென்பதாம்.

வி - ரை. வினை - நல்வினை தீவினை. ஊறுசெய்தல் - கெடுத்தல். தீவினையையேயன்றி நல்வினையையுங் கெடுத்த லென்றுக்கெனின், இவ்விருவினைகளும் பிறவிக்குக் காரணமாதல்பற்றி யென்க. இவ்விரண்டும் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போல்வனவென்றார் பெரியோர். கூவுதல் - வலிந்தழைத்தல். அயில் - வேல். காறு - வினையெச்சப்பொருள் பயப்பதாய வரையறை யிடைச்சொல். முதல்வருடனெனைக்கூறிடுமலர் என்றது முதல்வரையு மென்னையுங் கூறுகின்ற அலர் என்றவாறு. இன்றுகாறும் இருந்தனன் எனவும் துணையாக விருந்தனன் எனவு மியையும். (௩எ௨)

தலைவனைப் பாங்கிவரையுநாளளவு நிலைபெறவாற்றிய நிலைமை வினாதல்.

அதாவது—பாங்கியானவள் தலைவனை நோக்கி நீ வரையுநாளளவும் எவ்வாறு ஆற்றி யிருந்தனையென்று அவனது நிலைமையை வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வேலைதருவிடமுண்டோன்றிருவெங்கைவெற்பிலெழு
காலையிரவியனையாயெவ்வாறுகனலிமுனஞ்
சோலையிளமயிலன்னாள்கழுத்திற்சுரும்புமுரன்
மாலையிடுமளவும்பொறுத்தாய்மலர்வாளியையே.

ப - ரை. வேலைதரு-திருப்பாற்கடல்தந்த, விடம் - விஷத்தை, உண்டோன்-உண்டருளினவனாகிய சிவபெருமானது, திருவெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில், காலை - காலைப்பொழுதில், எழு-தோற்றுகின்ற, இரவி அனையாய் - சூரியனை நிகர்த்தவளே, கனலி முன்னம் - அக்கினிக் கெதிரே, சோலை - சோலையில் வாழ்கின்ற, இளமயில் அன்னாள் - இளமயில் போன்றவளாகிய எமது தலைவியின், கழுத்தின் - திருக்கழுத்தில், சுரும்பு - வண்டுகள், முரல் - சப்திக்கின்ற, மாலை - பூமாலையை, இடும்அளவும் - சூட்டுமளவும், மலர் வாளியை (மன்மதனது) புஷ்பபாணத்தை, எவ்வாறு பொறுத்தாய்-எவ்வாறு பொறுத்திருந்தனை எ - று.

க-ரை. கடறரு நஞ்சுண் கண்ணுதற் பெருமானது திருவெங்கை மலையில், உதிக்கின்ற செங்கதிர் போல்பவளே! சோலை யிளமயி லன்னாள் கழுத்தில், சுரும்பு முரல்மாலையைக் கனலி முன்னமிடு மளவும், மன்மதனது பூவாளியை யெவ்வாறு பொறுத்திருந்தனை யென்பதாம்.

வி - ரை. வேலை-வேலா என்னும் வடசொற்றிரிபு; வேலைதரு விடம் - பாற்கடல் கடையப்படுங் கடுவெண்ணெய். இரவி-ரவியென்னும் வடசொற்றிரிபு. கனலி - விளையாலணையும் பெயர்; கனறலையுடையது. கனறல் - சுடுதல். முரலல் - சத்தித்தல். சுரும்புமுரல் மாலை யென்றமையால் மலர்மாலையை யுணர்த்திற்று. பொறுத்தல் - ஆற்றியிருத்தல், (சுமத்தல்). வாளி - அம்பு. (௩ எ௩)

மன்றன்மனைவந் தசெவிலிக்கிருவரன் புணர்த்தல்.

அதாவது—மணவீட்டிற்கு வந்த செவிலிக்கு, இருவரது அன்பினையும் பாங்கியானவள் உணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

இலருமுளருமலர்வெங்கைவாணரிமையவெற்பி
லலருமலருமலர்த்துவெய்யோனுமன்றென்றற்கொன்று
மலருமிருபொருளுண்டாயின்மங்கைக்குமன்னவற்கும்
பலருமிசையவொப்பாகுமன்னையிப்படியகத்தே.

ப - ரை. அன்னே-தாயே, இலரும் - இல்லாதவரும், உளரும்-உள்ளவரும், அலர் - அல்லாதவர், வெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) இமைய வெற்பில் - இமய மலையின் மீது, அலரும் - மலர்கின்ற, அலரும் - மலரும், அலர்த்து-(அதனை) மலர்த்துகின்ற, வெய்யோனும் - சூரியனும், அன்று - அல்லாமல்,

ஒன்றற்கு ஒன்று மலரும்-ஒன்றிற்கொன்று மலர்கின்ற, இருபொருளுண்டாயின் - இரண்டு பொருள்கள் உளவாயின், மங்கைக்கும் - (நமது) தலைவிக்கும், மன்னவற்கும் - தலைவனுக்கும், இ - இந்த, படி அகத்தே - பூமியின்கண், பலரும் இசைய - எல்லாரும் சம்மதிக்க, ஒப்பு ஆகும் - உவமை ஆகும், எ - று.

க - ரை. அன்னே ! இலருமுளரு மலராகிய வெங்கைவாணர் இமயவெற்பில், மலருமலரை மலர்த்தும் வெய்யோனும் போல் இருவேறு பொருள்களுண்டாயின். நம்மங்கைக்கு மனனவற்கும், யாவருமொப்புமா றொப்பாகு மென்பதாம்.

வி - ரை. இறைவரது இன்மையுண்மைகளைச் சாதிக்கவொண்ணாமையின் இறைவரை 'இலரு முளருமலர், என்றார். அலர்தல் - மலர்த்தல். சூரியன்வெப்பமுடையோனாதலால் அவனை வெய்யோன் என்றார். இசைதல் - சம்மதித்தல். ஒப்பு - நிகர். படி-உலகம். வெற்பில் உண்டாயின் எனவியையும், உண்டாயின் என்றது உண்டாதலருமைதோன்ற நிற்றலால் உண்டாதலுமில்லை ஒப்பாதலுமில்லையென்றவாறாயிற்று. (நஎச)

பாங்கியில்லறவாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்.

அதாவது—பாங்கியானவள், செவிலியை நோக்கி, இல்வாழ்க்கையே நன்மையாமென் றுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பல்லறமாற்றியுமெல்லாமொருங்குபடத்துறந்தோர்
நல்லறமாற்றுந்துணையாகவும்பெறுநன்மையினு
லல்லறமாற்றுங்களத்தார்திருவெங்கையாரணங்கி
னில்லறமாற்றவுநன்றெனுமாலிவ்விருநிலமே.

ப - ரை. பல் அறம் - பலவாகிய அறங்களை, ஆற்றியும் - செய்தும், எல்லாம் - எல்லாப்பற்றுக்களையும், ஒருங்குபட-ஒருமிக்க, துறந்தோர் - விட்டவர், நல்அறம் ஆற்றும்-நல்லறத்தைச் செய்தற்குரிய, துணையாகவும் பெறும் - உதவியாகவும் பெற்ற, நன்மையினால் - நன்மையையுடைத்தாதலால், இ - இந்த, இரு - பெரிய, நிலம் - நிலவுலகமானது, அல் - இருட்டை, அற - முழுதும், மாற்றும் - வென்ற, களத்தார்-கண்டத்தையுடையவராகிய சிவபெருமானரது, திருவெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, ஆரணங்கின் - நம்தலைவியின், இல்லறம் - இல்லறமானது, ஆற்றவும்-மிகவும், நன்று என்னும் - நன்றென்று சொல்லாநிற்கும், எ - று.

க - ரை. பலவாகிய அறங்களைச் செய்தும், முற்றத்துறந்தோர் தமது துறவறத்தை யிடையூறின்றி யினிது நடத்தற்குத் துணையாகவு மிருக்கையால், நீலகண்டராகிய சிவபெருமானது திருவெங்கைப்பதியில் நமது பெண்ணினது இல்வாழ்க்கை சால நன்றென்று இந்தப் பெரிய வுலகின ரெல்லாரும் புகழ்ந்துரைக்கின்றார்களென்பதாம்.

வி - ரை. பல்லறம் என்றது இல்லறத்தார் செய்தற்குரிய முப்பத்திரண்டறங்களை. அவை - "வண்ணான் புன்னாவிதன் காதோலை சேலை மடந்தடம்வெண், சுண்ணம் பறவைப் பிணஞ்சுட னாரியஞ் சோறளித்தல், கண்ணாடியாவிற் குரிஞ்சுகல் வாயுறை கண்மருந்து, தண்ணீர்ப் பந்தல்தலைக் கெண்ணெய்பெண் போகந் தரலையமே" "மேதகு மாதுலர்க்குச் சாலையேறு விடுத்தல்கலை,யோதுவர்க்குண்டி விலங்கிற்குணவோ டுறுபிணிநோய்க், கீதன்மருந்து சிறைச்சோறளித்தலியல் பிறர்தம், மாதுயர்காத்தனற் கன்னியர் தானம் வழங்கலுமே" "கற்றவறுசம யத்தோர்க் குணவு கருதும்விலை, யுற்றதளித் துயிர் மீட்டல் சிறாருக் குதவனற்பால், மற்றுமகப் பெறுவித்தல் சிறாரை வளர்த்தலெனப், பெற்றவிவற்றினை யெண்ணான்கற மெனப்பேசுவரே" என்னு மிம்மூன்று செய்யுட்களி லமைந்துள்ளவை. ஒருங்குபடத் துறத்தல் - முற்றத்துறத்தல். அதாவது யானென்னு மகப்பற்றினையும் எனதென்னும் புறப்பற்றினையும் விடுதல். உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை விடுத லென்றலு மொன்று. இம்முற்றத் துறத்தல் என்னும் பொருளமைந்த வடசொல் ஸந்யாஸம் என்பது. (ஸம் - முழுதும். ந்யாஸம் - விடுதல்). வீடுபேற்றிற் கேதுவாதலானும், இல்லறத்தார்க்கு வீடுபேற்றிற் கதிகாரமின்மையானும் இல்லறத்திற் சிறந்தது துறவறம் என்பதுதோன்ற அதனை நல்லறம் என்றார். துறவறத்தார்க்கு நல்லற மாற்றுந் துணையாயிருத்தல், "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றினின்ற துணை" "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும், இல்வாழ்வானென்பான்றுணை" "ஆற்றி னொழுக்கி யறனிழுக்காவில்வாழ்க்கை, நோற்பாரினோன்மை யுடைத்து" என்றற் றொடக்கத்தன வற்றாலினிது விளங்கும். அல்லறமாற்றுங்களத்தார் என்றது மிகக்கறுத்த கண்டத்தையுடையவர் என்றபடி. இருநிலம் என்பதற்கு மண்ணுலகம் பொன்னுலகம் எனினுமாம். திருவெங்கையாரணங்கு என்றது தலைமகளை. (௩௭௫)

மணமனை சென்றுவந்த செவிலி, பொற்றொடி கற்பியல் நற்றாய்க்குணர்த்தல்.

அதாவது—மணவீட்டிற்குச் சென்று வந்த செவிலியானவள் பொன்வளையலையும் கற்பொழுக்கத்தையுமுடைய நற்றாய்க்குரையா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

மெய்யாமிறைவர் திருவெங்கைவாணர் தம்வெற்பில்வளைக்
கையாளுடனவ்வருந்ததிமாதொப்பள்கற்பினென்றாற்
பொய்யாமருங்குலவள்வாழுமூர்க்குப்புயல்களென்றும்
பெய்யாவிவளிடந்திங்கண்மும்மாரியும்பெய்திடுமே.

ப - ரை. மெய்ஆம் - உண்மையாகிய, இறைவர் - தலைவராகிய, திருவெங்கைவாணர் - திருவெங்கைவாணரது, வெற்பில் - மலையில் வாழ்கின்ற, வளைக்கையாளுடன் - வளையலையணிந்த கையினையுடையவளாகிய நம் தலைவியுடன், அ - அந்த, அருந்ததிமாது - அருந்ததியாகிய பெண், கற்பின் - கற்பினால், ஒப்பள் என்றாள் - நிகர்ப்பளென்றால், பொய்யாம் மருங்குல் - பொய்போலு மிடையினையுடைய, அவள் - அவ்வருந்ததியானவள், வாழும் - வாழ்கின்ற, ஊர்க்கு - ஊரில், புயல்கள் - மேகங்கள், என்றும் பெய்யா - எந்நாளும் மழை பெய்யா, இவள் இடம் - இவள் வாழுமூரில், திங்கள் - மாதம், மும்மாரியும் பெய்திடும் - மூன்று மழையும் பெய்யா நிற்கும், எ - று.

க - ரை. உண்மையாகிய தலைமைப்பாட்டினையுடைய திருவெங்கைவாணர் வெற்பில் வாழ்கின்ற நம் தலைவியோடு அந்த அருந்ததியாகிய பெண்கற்பினால் ஒப்பாவளென்றாலும், அவள் வாழுமிடத்தில் மழைபெய்தலேயில்லை; இவள் வாழுமிடத்தில் மாதமும்மாரி பெய்யா நின்றது என்பதாம்.

வி - ரை. மெய் - உண்மை. (சத்ரூபி) மெய்யாமிறைவர் திருவெங்கைவாணர் என்றமையால் இவரது இறைமையுண்மையென்பதும்பிறதெய்வங்களது இறைமைபொய்யென்பதும் பெறப்பட்டது. அருந்ததி வசிட்டர் மனைவி; இவள் கற்பிற் சிறந்தவளாதலால் அவளை யிவட்குவமையா யெடுத்துரைக்கப்பட்டது. பொய்யாமருங்குல் என்றது மிகவும் நுண்ணிதாய விடை யென்றபடி. புயல் - மேகம். திங்கள் - மாசம். மாரி - மழை. பெய்தல் - பொழிதல். மேகங்கள் கீழிட்த் திருப்பனவாதலான் மேலிடத்திருப்பதாகிய அருந்ததியூரிற் சேறலும் பொழிதலும் இன்மைபற்றி என்றும் பெய்யாவென்று அவள் கற்புக்கு விசேட மின்மை யெடுத்துரைக்கப்பட்டது. (௩எசு)

நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

அதாவது—செவிலியானவள், நற்றாய்க்குத் தலைமகளது மனை வாழ்க்கைத் தன்மையை யுணர்த்தாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

நாறுஞ்செறியிதழ்த்தாமரைத்தேனுமந்நுண்டுகளுஞ்
சேறும்பழனத்திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பேறும்பெருவிருந்தோடுதன்கேளைப்பிடிகடொறும்
வேறுஞ்சுவைபெறவூட்டிப்பின்றானுணுமெல்லியலே.

ப - ரை. செறி - நெருங்கின, நாறு ஆம் - நூறாகிய, இதழ் - இதழ்களையுடைய, தாமரைதேனும்-தாமரைமலர்த்தேனும், அ-அதனது, நுண்துகளும் - நுண்ணியமகரந்தமும், சேறு ஆம்-சேறாகின்ற, பழனம் - வயல்கள் சூழ்ந்த, திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவராகிய சிவபிரானாரது, செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையில், பேறுஆம் - நற்பேறு ஆகிய, பெருவிருந்தோடு - பெரிய விருந்தினருடன், தன்கேளை - தன்கொழுநனை, பிடிகள்தொறும் - பிடிகடோறும், வேறுஆம்சுவைபெற ஊட்டி - வெவ்வேறாகிய சுவையோடு முன்னுண்பித்து, பின் - அதன் பிறகு, மெல்லியல் தான் - மெல்லியலாகிய நமது தலைவி, உண்ணும் - உண்ணாநிற்பள், எ - று.

க - ரை. நமது மெல்லியல், நூற்றிதழ்த் தாமரைத்தேனும் மகரந்தமும் சேறாகின்ற வயல்கள் சூழ்ந்த திருவெங்கைவாணர் செழுஞ் சிலம்பில், பெருவிருந்தினரோடு தன் கொழுநனையும்முன்னே யின் சுவையூணையூட்டிப் பின்னே தானுண்ணாநின்றாள், என்பதாம்.

வி - ரை. நூறுஞ் செறியிதழ்த்தாமரை - நூறிதழ்களையுடைய தாமரைமலர், "நூற்றிதழ்க்கமலத்திறை" என்றார் பிறரும். தாமரை ஆகுபெயர். துகள் - பராகம். (மகரந்தம்). பழனம் - வயல். பேறு - இலாபம். விருந்து - ஆகுபெயர். கேள் - கேளாந்தன்மை; இது ஆகு பெயராய் அதனையுடைய கொழுநனை யுணர்த்திற்று. உறவினரை யுணர்த்தாதோவெனின் உணர்த்தும்; உணர்த்தினும், கணவனிற் சிறந்த வுறவினரின்மையானும் கேள்வனென்னும் பெயர் அவனுக் குண்மையானும் "அறுசுவையுண்டி யமர்ந்தில்லாளூட்ட, மறுசிகை நீக்கியுண்டாரும்" எனமேலோர் கூறலானும் கொழுநனையுணர்த்திற் றென்றலே சிறப்புடைத்து. வேறுஞ் சுவை-வெவ்வேறாகிய சுவை. (ருசி). அது உப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, இனிப்பு என அறுவகைப்படும். பின்றானுண்ணும் என்றமையால் விருந்தொடு

கேளையுண்பித்தல் முன்னென்பது பெறப்பட்டது. பெருவிருந்தோடு தன் கேளையூட்டிப் பின்ருனுணும் என்றமையால், இவளுண்பது மிச்சில் என்றதாயிற்று. மிச்சில் - சேடம். மெல்லியல் - மெல்லியலையுடையவள். மெல்லியல் அதிகாரத்தாற்றலைவியை யுணர்த்திற்று. (௩௭௭)

செவிலிநற்றய்க்குஇருவர்காதலையுமறிவித்தல்.

அதாவது—மணமனைச் சென்று வந்த செவிலி, இருவர்காதலையும் நற்ருய்க் குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கருமாமணிகண்டர்தென்வெங்கைவாணர்கைக்கார்முகமா
மொருமாமலையைவலங்கொண்டுகாலையுதயவெற்பில்
வருமாதவன்றிருத்தேர்மெய்ம்மைபோலப்புன்மாலையினிற்
செருமாமுகமுறச்சென்ருலுமன்பர்தந்தேர்வருமே.

ப - ரை. அன்பர் - தலைவரது, தேர் - தேரானது, புல்மாலையினில் - புல்லியமாலைக்காலத்தில், மா - பெரிய, செருமுகம் - போர்முகத்தில், உறச்சென்ருலும் - மிகுதியாய்ச் செல்லினும், மா கருமணிகண்டர் - பெரிய நீலமணிபோலும் கண்டத்தையுடையவர், தென்வெங்கைவாணர்-தென்வெங்கைப்பதியில் வாழ்பவர்,(அவரது) கைகார்முகம் ஆம் - கைவில்லாகிய, ஒரு - ஒப்பற்ற, மாமலையை - பெரிய மலையை, வலம்கொண்டு - வலம்வந்து, காலை - காலையில், உதயவெற்பில்வரும் - உதயகிரியில் தோன்றுகிற, ஆதவன் - சூரியனது, திருத்தேர் - திருத்தேரின், மெய்ம்மைபோல - உண்மைபோல, வரும் - வந்துவிடும், எ - று.

க - ரை. அன்பரது தேரானது, தலைவன்செருமுனையிற்சென்ருலும், கருமாமணிகண்டர் தென்வெங்கை வாணர் கைவில்லாகிய வொருமாமலையை வலங்கொண்டு, காலையுதயவெற்பில் வருமாதவன் றிருத்தேர் மெய்ம்மைபோல, மாலைக்காலத்து தன்னிடம் வந்து சேரும் என்பதாம்.

வி - ரை. கருமாமணிகண்டர் - மிகக்கறுத்த கண்டத்தையுடையவர். கார்முகம்-வில். கருமாமணிகண்டர்தென்வெங்கைவாணர் கைக்கார்முகம் - மேருமலை. சூரியசந்திரர்கள் நாடோறும் மேருவை வலங்கோடலுண்மையால் இங்ஙனங் கூறப்பட்டது. "பருந்தொன்று கூரிலை வேற்படைவாணன் பரிமளப்பூஞ், செருந்தொன்று சோலைத்தென்மாறையன்னீர் செழுந்திங்களுங்கள் ,முருந்தொன்று

கோபமுகங்கண்டு நாணிமுயன்மறுத்தீர், மருந்தொன்று நாடியன்றோ வடமேரு வலங்கொள்வதே" என்னுமிச்செய்யுளால், அங்கண்வானகத் தவிரொளிமதியமும் பொங்கரவணிந்தோன் புரமெரிசிலையை வலம்வருதல் பெறுதும். "உலகமுவப்ப வலனேர் புதிரிதரு, பலர்புகழ்ஞாயிறு" என்புழியும் சூரியன் மாமேருவை வலம் வருகிறானென்பது தெற்றென விளங்காநின்றது. உதயவெற்பு - காலையில் சூரியனுதிக்குமலை. ஆதவம் - வெயில்; அதனையுடையவனாதலால் சூரியனை ஆதவன் என்றார். அந்திப்போது நிற்பது அற்பகாலமாதலால் அதனைப் புன்மாலை யென்றார். செரு - போர். முகம் - முனை.

பரத்தையிற்பிரிவு.

அதாவது—தலைமகன், பரத்தைமேற் காதலாய்த் தலைமகளைப் பிரிந்து, பரத்தையர் சேரிக்குச்செல்லக் கருதிப்பிரிதல். பரத்தையிற் பிரிவெனவே, "பொதுநலத்தார் புன்னலந்தோயார் மதிநலத்தின், மாண்டவறிவினவர்" என்பதனால் தலைமகன் அறிவிலனென்றதாயிற்று. அதனால், தலைமகளிடத் தன்பிலனென்றதும் பெறப்பட்டது. பெருமையிலனென்பதும், பட்டியாவனென்பதுஞ் சித்தித்தது. ஆகலின், இவற்கிவ்வாறு தறகுவன்றேயெனின், அற்றன்று. அரசுரிமையனாதலின், அரசுரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கு முறைமையராயும், வரையாதவுரிமையாய் சேரியின்கணுறைவாருமாய இவரும் பிறந்த ஞான்றுதொட்டிவர்க்கென விதிக்கப்பட் டிருத்தலானும், அவரை நீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற் பிரிதல் அரசர்க்குக் குற்றமன்றெனக்கொள்க. அன்றியும், காலைக்கடன்கழித்தலும், உலகத்திலிருந்து நாடுகாவற்றொழில் செய்தலும், விருந்துடனடிசில் கைதொடலும், காவலரோடு கல்விபயிறலும், ஆடல்பாடல்களிற் களித்தலும், மடவாரோடுகூடலும், துயிறலும், துயிலுணர்ந்து தேவற்பராவலுமாகிய காலவரையறை யெட்டினுள், ஆடல்பாடல் ஒன்றாதலானும், அதற்குரியுர் பரத்தையராதலானும், அதற்குரிய காலத்தில் அவர்மீது மனஞ்சேற வியல்பாதலானும், பரத்தையிற் பிரிதல் அரசர்க்குக் குற்றமன்றெனக்கொள்க.

ஆயின், பரத்தையர் சேரியில் செல்லுமா றென்னையெனின், அவர் பலரோடும் விளையாடற் பொருட்டும், அவருட் புணர்தற்குரியரைப் புணர்தற்பொருட்டும்பரத்தையர் சேரிக்குச் செல்லுமென்றுணர்க.

காதலன் பிரிவுழிக்கண்டோர்புலவிக்கேது விதாமவ்விறைவிக்கென்றல்.

அதாவது—தலைமகன் தலைமகளைப்பிரிந்து பரத்தையர் சேரிக்குச் சேறலைக்கண்டோர், இவ்வாறிவன் சேறல் அவ்விறைவியின் புலவிக்குக் காரணமாமெனக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

வெண்டாமரைமனையாள்புகழ்ந்தேத்தரன்வெங்கைவெற்பிற்
றண்டாமரையையிசைபாடியாடித்தடவும்வரி
வண்டாமெனமடவார்பலர்சூழ்ந்தனர்மன்னவனைக்
கண்டாலனமனையாளூடற்கிங்கிதுகாரணமே.

ப - ரை. வெள்தாமரைமனையாள்-வெண்டாமரையை வீடாகவுடையவள், புகழ்ந்து ஏத்து-புகழ்ந்து துதிக்கிற, அரன்-சிவபிரானது, வெங்கைவெற்பில்-திருவெங்கைமலையில், தண்தாமரையை-குளிர்ந்த தாமரைமலரை, இசைபாடிஆடி-இராகம்பாடி விளையாடி, தடவும் - தடவுகிற, வரிவண்டு ஆம்என - வரிவண்டுகள்போல, மன்னவனை - தலைவனை, மடவார் பலர் சூழ்ந்தனர் - மாதர்பலர் வளைந்துகொண்டார்கள், அன்னம் அனையாள் கண்டால்-அன்னத்தை நிகர்த்தவளாகிய தலைமகள் காணின், இது - இது, ஊடற்கு - அவள் ஊடுதற்கு, காரணம் - ஏதுவாகும், எ - று.

க - ரை. வெண்டாமரை மனையாள் புகழ்ந்தேத்து அரன் வெங்கைவெற்பில், மன்னனை, தண்டாமரையை யிசைபாடியாடித் தடவும் வரிவண்டாமெனப் பலமடவார் வளைந்தனர். இச்செய்தியைக் கண்டால் தலைவியூடுவாளென்பதாம்.

வி - ரை. வெண்டாமரை மனையாள்-சரசுவதி. இவளால் பூஜிக்கப்பட்ட திருப்பதியாதலால், வெண்டாமரையாள் புகழ்ந்தேத்தரன் வெங்கை யென்றார். தண்டாமரையைத் தடவும் எனவியையும். ஊடல் - பிணங்குதல். (நஎக)

தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல்.

அதாவது—தலைமகன் பரத்தையிற் பிரிந்தானாகத் தலைமகள் தனித்திருந்துழிப் பிரிவாற்றாது, இவ்விராப்போது புலருங்கொலென்றினைந்தழு திரங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

நினைப்பேரிரகத்தினடமாடும்வெங்கைநிமலர்வெற்பிற்
றினைப்போதுமன்பதொருவாதகாதலர்நீர்ந்தமெண்ணிக்
கனைப்போதிருளின்புலர்ச்சியென்றென்றுகருத்தழிந்திட்
டெனைப்போற்றுயினீத்திருப்பவர்யாரிவ்விருநிலத்தே.

ப - ரை. நினைப்போர் - தம்மைத் தியானிப்பவரது, அகத்தில் - மனத்தில், நடமாடும் - நடனஞ்செய்கிற, வெங்கை நிமலர் - திருவெங்கைநின்மலராகிய சிவபிரானுரது, வெற்பில் - மலையில், நினைப்போதும் - நினைப்பொழுதும், அன்பு ஒருவாத - அன்பு நீங்காத, காதலர் - தலைவர், தீர்ந்தது எண்ணி-நீங்கினதை யெண்ணி, கனை - மிக்க. இருட்போதின்-இருட்காலத்தின், புலர்ச்சி - விடிவு, என்று என்று - என்றோவென்று, கருத்து அழிந்திட்டு-மனமழிந்துபோய், என்னைப்போல் - என்னைப்போல, துயில்நீத்து இருப்பவர் - துயிலொழிந்திருப்பவர், இ - இந்த, இருநிலத்து - பெரிய நிலவுலகத்தில், யார் - யாவர், எ - று.

க - ரை. தம்மை நினைப்பவரது மனமே நடனசபையாகக்கொண்ட நின்மலராகிய சிவபெருமானது மலையில், நினைப்பொழுதும் அன்பு நீங்காத காதலர் நீங்கினதையெண்ணி, மிக்க இருட்காலமாகிய இரவின் புலர்ச்சி யென்றோவென்று மனங்கலங்கி என்னைப்போலத் துயிலொழிந்திருப்பவர் இவ்வுலகில் யார்? என்பதாம்.

வி - ரை. நினைப்போர் - இடையறாது மநநஞ் செய்வோர். அகம் - ஆகுபெயர். நடம் - நடநம். நிமலர் - நிர்மலர். (மலாஹிதர்). வெற்பு - மலை. போதிருளின் என்பது இருட்போதின் என முன் பின்னாக மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. புலர்ச்சி - புலர்வு (விடிவு). துயில்-தூக்கம். நீத்திருத்தல் - ஒழித்திருத்தல். நினை - சிறுமைக்கெடுத்துக் காட்டுமோரளவை. அன்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. ஒருவல் - நீங்கல். காதலர் - தலைவர். தீர்தல் - நீங்கல். கனை - மிகுதி. இருட்போது - இராக்காலம். யார் என்னும் வினா ஒருவருமில்லை யென்னும் பொருட்டு. (௩அ௰)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினவுதல்.

அதாவது—மற்றைநாட் காலையில் வந்த பாங்கி தலைவியைநோக்கி, நீ யழுதுகொண்டிருத்தற் காரணம் யாதென வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

திரியாவருநிலையார்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
கரியானுமார்பிற்றிருமாதுமென்னக்கணவனுரம்
பிரியாதமையுமிக்காலத்திலேமன்பிரிந்தவர்போற்
றரியாதழுங்கினைமாதேயுனக்கென்கொல்சார்ந்ததுவே.

ப - ரை. மாதே-பெண்ணே, திரியா அருநிலையர்-மாறுபடாத அருமையான நிலையினையுடையவர், வெங்கைவாணர்-திருவெங்கைப்

பதியில் வாழ்பவர், (அவரது) செழுஞ்சிலம்பில் - செழுமையாகிய மலையில், கரியானும் - திருமாலும், மார்பில் - அவன் மார்பில்வாழ்கின்ற, திருமாதும் - திருமகளும், என்ன - போல, கணவன் - உன் கொழுநன், உரம்பிரியாது - உன்னெஞ்சைவிட்டு நீங்காமல், அமையும் - அமைந்திருக்கிற, இக்காலத்திலே - இந்தக்காலத்திலே, மன் பிரிந்தவர்போல் - கணவனைப் பிரிந்தவர்போல, தரியாது அழுங்கினை - ஆற்றாதுவருந்தினை, உனக்கு சார்ந்தது என்-உனக்கு நேர்ந்ததுயாது, எ - று.

க - ரை. மாதே! திரியா வருநிலையார் ஆகிய வெங்கைவாணரது செழுமையாகிய மலையில், திருமாலும் அவன் மார்பில் விளங்குகிற இலக்குமியும்போல, உன்கொழுநனும் நீயும் பிரியாதமைந்திருக்கிற இக்காலத்தில், கணவரைப் பிரிந்தவர்போல ஆற்றாது வருந்தினை, உனக்கு நேர்ந்தது யாது? என்பதாம்.

வி - ரை. திரியாவருநிலை-ஒருகாலத்தும் அழியாத அரியநிலை. அருமை-ஒருவராலுமறிதற் கருமை. இது "உணர்ந்தார்க்குணர்வரியோன், "உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்" என்றற்றொடக்கத்தான்றோர் திருவாக்குக்களிற் காண்க. மார்பிற்றிருமாது எனமேல் வருதலால் கரியான் என்றது திருமாலை யுணர்த்திற்று. உரம்-மார்பு எனினுமாம். அமைதல் - கூடியிருத்தல். மன்-கணவன். அழுங்கல் - வருந்தல். கொல் - அசை; ஐயம் எனினுமாம். சார்தல் - நேர்தல்.

எடுத்துக்கோடற் கண்ணே அகப்பொருள் என்பதற்கு இன்பப்பொருளென்று பொருள் கூறினவர் இவ்வாறு துன்பமுறுதலைக் கூறியவாறென்னை யெனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பன இன்பத்திற் குறுப்பாகலின், இவ்வைந்தனுளொன்று நீங்கினும் அவ்வின்பத்திற் குறுப்புக்குறையாம். அஃதென்னையெனின், புணர்தலே யின்பமென்றும் ஏனைய துன்பமென்றும் கூறுகின்றுழி, பிரியாது புணர்ந்துழி வெறுப்புண்டாம். பிரிந்துழிதுன்புற்றிலரேல் அறிவிலராம். இருத்தலும் ஊடலும் இவ்வாறேகொள்க. ஆதலால் துன்பமுறுவிடின் இன்பக்குறைபாடே யாமெனக் கொள்க. (௩௮௧)

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

அதாவது—தலைமகன் தன்னிடத்தொழுகுமொழுக்கம் இன்று பரத்தையரிடத் தொழுகா நின்றானென்று, தலைவிபாங்கிக்குக் கூறா நிற்றல். புறத்தொழுக்கு என்பதற்குப் பொருள்பரத்தையரிடத்தொ

ழுந்தொழுக்கமெனக் கொண்டவாறென்னையெனின், வடநூலார் மதம்பற்றியும், பரத்தையரிடத்தின்பம் இன்பத்திற் புறமாதலானும் இவ்வாறு பொருள் கூறலாயிற்றென்க. அதற்குச்செய்யுள்,—

செய்ச்சேதகத்திற்குளிர்நடந்தாங்குச்செறிந்தவடு
மெய்ச்சேயிழைக்கொடியன்னார்கடைத்தலைமேயினதாற்,
கைச்சேரிடபக்கொடியாளர்வெங்கைக்கனகவெற்பின்
மைச்சேல்விழிச்செந்திருவேநம்வாய்தன் மணிவையமே.

ப - ரை. கைசேர் - கையிற்பொருந்திய, இடபக்கொடியாளர் - இடபக்கொடியினராகிய சிவபெருமானரது, வெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, கனகவெற்பில் - பொன்மலையில் வாழ்கின்ற, மை - அஞ்சனமெழுதப்பெற்ற, சேல்விழி - சேல்மீன்போலுங் கண்களையுடைய, செந்திருவே - திருமகளே, நம்வாய்தல் - நமது வாயிலினிற்றற்குரிய, மணிவையம் - அழகிய தோரானது, செய்சேதகத்தில் - வயற்சேற்றில், குளிர்நடந்தாங்கு - நண்டு நடந்தாற்போன்ற, செறிந்தவடு - நெருங்கின வடுக்கள்பொருந்திய, மெய் - உடம்பையுடைய, சேயிழை - செவ்விய ஆபரணமணிந்த, கொடி அன்னார் - கொடிபோல்வாராகிய பரத்தையரது, கடைத்தலைமேயினது - கடைத்தலையைச் சென்றடைந்தது, எ - று.

க - ரை. கைச்சேரிடபக் கொடியாளர் வெங்கைக் கனகவெற்பில், மைச்சேல்விழிச் செந்திருவே! நம்வாய்தல் மணிவையம் செய்ச்சேதகத்திற் குளிர்நடந்தாங்குச் செறிந்தவடு மெய்ச்சேயிழைக்கொடியன்னார் கடைத்தலைமேயினது என்பதாம்.

வி - ரை. செய் - வயல். சேதகம் - சேறு. குளிர்-நண்டு. செறிந்தவடு மெய் என்றது தனத்தை யெனக்கொள்க. ஆடவர் நகக்குறி அவ்வங்கத்திற் காணப்படுதல் செய்ச்சேதகத்திற் குளிர்நடந்த வடுக் காணப் படுதல்போலு மென்றவாறு. சேயிழைக் கொடியன்னார் என்றது 'செய்ச்சேதகத்துக் குளிர் நடந்தாங்குச் செறிந்தவடுமெய்' என்கிற விசேடணத்தால் பரத்தையரைக் குறித்தது. செந்திரு - ஆகுபெயர். வாய்தல் - வாயில். (முற்றம்). மணி - ரத்நங்கள் பதிக்கப்பெற்ற என்றுரைப்பினுமாம். வையம் - தேர். நம்வாய்தல் மணிவையம், செய்ச்சே தகத்திற் குளிர் நடந்தாங்குச் செறிந்தவடு மெய்ச்சேயிழைக் கொடியன்னார் தலைக்கடை மேயினதெனத் தலைமகன் புறத்தொழுக்கினைக் குறிப்பா னுணர்த்தியவாறாயிற்று. ஆல் - அசை. இதனால் தமக் கிழிவுண்டானமையும் உணர்த்தினளாயிற்று. இழி

வாவது நம்முற்றத்தி னிற்குந்தேர் பரத்தையர் கடைத்தலையி னிற்றல். (ரு அ௨)

தலைவியைப் பாங்கிகழறல்.*

அதாவது—இவ்வாறு தலைமகனது புறத்தொழுக்குக் கூறின தலைவியை நோக்கி, பாங்கியானவள், நீயிவ்வாறு கூறத்தகாதென் றிடித்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பலமாதருள்வெள்வளையூடுயர்ந்தபழுதில்சலஞ்
சலமாமெனவுயர்மாதேதிருவெங்கைத்தாணுவெற்பி
னலமாமனையறஞ்செய்கடன்பூணுநயன்றிருந்து
குலமாதர்தங்கட்கியல்போதங்கேள்வர்குறைசொல்வதே.

ப - ரை. வெள்வளையூடு - வெண்மையாகிய சங்குகளுள்ளே. உயர்ந்த - சிறந்த, பழுதுஇல் - குற்றமில்லாத, சலஞ்சலம் ஆம் என - சலஞ்சலமா மென்னும்படி, பலமாதருள் - பலமாதர்களுக் குள்ளே, உயர் - சிறந்த, மாதே - பெண்ணே, திருவெங்கை - திரு வெங்கைப்பதியிற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கிற, தாணு - சிவபெருமானது, வெற்பில் - மலையில், நலம் ஆம் - நன்மையாகிய, மனை அறம் - இல்லறத்தை, செய் - செய்தற்குரிய, கடன்பூணும் - கடன்மைபூண்ட, நயன் திருந்து - நற்குணங்களிற் றிருத்தமடைந்த, குலமாதர் தங்கட்கு - குலமகளிர்க்கு, தம்கேள்வர் குறைசொல்வது - தம்கணவரது குற்றத்தை யெடுத்துப்பேசுவது, இயல்போ - தகுதி யாமோ, எ - று.

க - ரை. வெள்வளையூடு சலஞ்சலம் போலப் பலமாதருள்ளுஞ் சிறந்தமாதே! திருவெங்கைத் தாணுவின் மலையில், நன்மையாகிய இல்லற வொழுக்கக் கடமை பூண்ட குலப் பெண்களுக்குத் தம் கொழுநரது குறைசொல்வது தகுதியாமோ? வென்பதாம்.

வி - ரை. வெள்வளையென்றது வலம்புரிச் சங்கினை. சலஞ் சலம் - ஆயிரம் வலம்புரிச்சங்கு சூழ நடுநாயகமாய் வீற்றிருப்பதாகிய சங்கு விசேடம். தாணு - பிரளயகாலத்து மழியா திருப்பவன் (சிவ பிரான்). மனையறம்-இல்லறம். துறந்தார் முதலியோருக்குத் துணை யாயிருத்தலால் இல்லறத்தை நலமாமனையறம் என்றார். கேள்வர் - கேளாந்தன்மையர். இதில் வகரம் ஒற்றில் வழியொற்று செல்வழி சார்வழியென்பவற்றிற் போல. இயல்போவென்னு மோகாரம் எதிர் மறை. (ரு அரு)

தலைவி செவ்வணியணிந்து சேடியைவிடுப்புழி அவ்வணியுணர்ந்தயலார் கண்டழுங்கிக்கூறல்.

அதாவது—பூர்த்தகாலை மூன்றுநாள் போக்கி நான்காநாள் நீராடியபின், செம்மலர்சூடி, செவ்வுடையுடுத்து, செஞ்சந்தனம் பூசிச் சேடியை விடுக்க, அவள்சென்று பரத்தையர் சேரியிலிருக்குங்கால், அவ்வணியை அயல்மனையிலுள்ளார் கண்டு வருந்திக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நறுவாய்முருகுமிழ்வெண்டாமரையினளிநகைமதிய
மறுவாயளிமுரல்செய்வெங்கைவாணர்வரைமடவீர்
வெறுவாய்மெல்வார்கட்கவல்கிடைத்தாங்குமுன்வீணிலிக
ழுறுவார்தமக்கிவ்வரத்தமெங்கேவந்துதவியதே.

ப - ரை. நறுவாய் - மணமுள்ளவாயினால், முருகுஉமிழ்-தேனையுமிழ்கின்ற, வெண்டாமரையில் - வெண்டாமரைமலரில், அளி-வண்டுகள், நகை - ஒளியுள்ள, மதியம் - பூர்ண சந்திரனிடத்தே, மறு ஆய் - களங்கம்போன்று, முரல் - சத்திக்கிற, செய் - வயல்கள் சூழ்ந்த, வெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபிரானாரது, வரை - மலையில் வாழ்கின்ற, மடவீர் - மாதரே, வெறுவாய் மெல்வார்கட்கு - வெறுவாயை மென்று கொண்டிருப்பவருக்கு, அவல் கிடைத்தாங்கு - அவல் கிடைத்தாற்போல, முன் - முன்னமே, வீணில் - வீணாக, இகழுறுவார் தமக்கு - இகழ்வோர்க்கு, இ - இந்த, அரத்தம் - செவ்வணி, எங்கேவந்து உதவியது - எங்கேவந் துதவிசெய்தது. எ - று.

க - ரை. ஒளியுள்ள பூர்ணசந்திரனிடத்துக் களங்கம்போல, வெண்டாமரை மலரினிடத்து வண்டுகள் கூடி முரலாநின்ற வயல்கள் சூழ்ந்த திருவெங்கைப் பதியில் வாழ்பவராகிய சிவபிரானாரது மலைமடவீர்! வெறுவாய் மெல்லுவாருக் கவல்கிடைத்தாற்போல, முன்னமே வீணி லிகழ்வோர்க்கு, இந்தச் செவ்வணி யெங்கேவந்து வாய்த்த தென்பதாம்.

வி - ரை, நறுமை - மணம். வாய் - முகம். முருகு - தேன். நகை - ஒளி. மறு - களங்கம். முரலல் - சத்தித்தல். இகழுறல் - இகழ்தல். அரத்தம் - செந்நிறம்; அது அதனையுடைய செவ்வணிக் காயிற்று. தமக்கு என்பதில் தம், அசைநிலை. உதவல் - துணை செய்தல். (௩௮௪)

பரத்தையர்கண்டுபழித்தல்.

அதாவது—செவ்வணியோடு அச்சேரியிற்சென்று நின்ற சேடியைப் பரத்தையர் கண்டு பழித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பரைகவர்பங்கர்மதிவார்சடையர்பணியணியர்
தரைகவர்வண்புகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
விரைகவர்வண்டுதொடர்வெட்சிசூடுமிம்மெல்லியலார்
நிரைகவர்கின்றவரோவறியேமிவர்நெஞ்சகமே.

ப - ரை. பரை - உமாதேவியாரால், கவர் - கவரப்பட்ட, பங்கர் - கூற்றினையுடையவர், மதி-சந்திரகண்டத்தை அணிந்த, வார் - நீண்ட, சடையர் - சடையினையுடையவர், பணி - பாம்பாகிய, அணியர் - ஆபரணத்தை உடையவர், தரை - உலகத்தை, கவர் - மூடின, வண்புகழ் - வளவிய புகழினையுடைய, வெங்கைபுரேசர் - வெங்காபுரேசர், (அவரது) தடம்சிலம்பில் - பெரியமலையில், விரைகவர்-மணத்தைக் கவர்கின்ற, வண்டுதொடர் - வண்டுகள் தொடரப்பெற்ற, வெட்சி - வெட்சிமலரை, சூடும் - தரித்த, இ-இந்த, மெல் இயலார்-மாதரசியானவர், நிரை கவர்கின்றவரோ - நிரையைக் கவர்பவரோ, இவர் நெஞ்சகம் - இவர் மனக் கருத்தை, அறியேம் - அறிந்திலேம், எ - று.

க - ரை. பரைகவர் பங்கரும் மதிவார்சடை யரும் பணியணியரும் தரைகவர் வண்புகழ் வெங்கைபுரேசருமாகிய சிவபெருமானது தடஞ்சிலம்பில், மணமுள்ள வெட்சிமலர்மாலையைச் சூடிவந்த இந்த மெல்லியலார், நிரைகவர்பவரோ? இவர் மனக்கருத்தினை யறிந்திலேம் என்பதாம்.

வி - ரை. பரை-பரா என்னும் வடசொல்லீறு திரிந்தது. (உமாதேவி). மேலானவள் என்பது பொருள். கவர்பங்கர் என்றமையால்—கொடாமையாற்போரிட்டுத் தன்பங்கைக் கவர்ந்தவளென்றதாயிற்று. பங்கு - பாகம். (இடப்பாகம்). மதி - மதுவையுடையது. (மது-அமிர்தம்.) வார் - நீட்சி. பணி - பாம்பு. அணி - அணியப்படுவது. (ஆபரணம்). தரைகவர் வண்புகழ் என்றது உலகமுழுதும் போர்த்த வளவிய பெரும்புகழ். விரை - வாசனை. வெட்சி - செங்கடம்பு. மெல்லியலார் என்றது சேடியை. நிரை - பசுநிரை. இதனைக் கவர்வோர்வெட்சி சூடுவதுமரபாதலால் வெட்சி சூடுமிம் மெல்லியலார் நிரை கவர்கின்றவரோ என்றார். நெஞ்சகம் - மனக்கருத்து. (௩அ௫)

பரத்தைப்புலகியனேக்கிவிடுத்தலிற்றலைமகன்வரவுகண்டு வந்துவாயில்கண்மொழிதல்.

அதாவது—தலைவி நீராடிய ஞான்று பரத்தையர் தங்கள் சேரியில் தலைவனிருத்தல் உலகமுறைமைக்கு இயலாதென்று விடுத்தலின் தலைவன் வருதலைக்கண்டு வந்து தாதிகள் பாங்கிக்கு மொழிதல். அதற்குச் செய்யுள்,—

நாவலரென்றும்புகழ்வெங்கைவாணர்நன்னடனையா
யேவலர்தம்மையெதிர்கண்டபோதிலிரவியெதிர்
பூவலர்கின்றதெனவேமகிழ்ந்துபுவிபுரக்குங்
காவலர்வந்தனர்தாமேயுலகியல்காப்பதற்கே.

ப - ரை. நாவலர் - புலவர்கள், என்றும் - எந்நாளும், புகழ் - புகழ்கின்ற, வெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவராகிய சிவபெருமானுரது, நல்நாடனையாய் - நல்ல நாட்டினை நிகர்த்தவளே, புவிபுரக்குங்காவலர் - இவ்வுலகைக் காக்கின்ற நமது அரசர், ஏவலர் தம்மை-ஏவலாளரை, எதிர்கண்டபோது-எதிரேகண்ட பொழுதில், இரவியெதிர் - சூரியனுக் கெதிரே, பூ - தாமரைமலரானது, அலர்கின்றது எனவே - மலர்கின்றதுபோலவே, மகிழ்ந்து-மனமகிழ்ந்து, உலகியல் காப்பதற்கு - உலகஃஒழுக்கத்தைக் காத்தற்பொருட்டு, தாமே வந்தனர் - தாமே வந்திருக்கின்றனர், எ - று.

க - ரை. நாவலர் என்றும் புகழ் வெங்கைவாணர் நன்னடனையாய் ! நம் ஏவலாளரைத் தலைவர் கண்டபோதே, சூரியனைக்கண்ட தாமரைமலர்வதுபோல மனமகிழ்ந்து வந்துவிட்டார் உலகியலைக் காக்கும்பொருட்டு என்பதாம்.

வி - ரை. நாவலர்-நாவலூரர்; (சுந்தரர்). அப்பர், சம்பந்தர், திருவாதவூரர் முதலிய அறிஞர் எனினுமாம். ஏவலர்-ஏவலாளர்; (சேடியர்). இரவியெதிர் அலர்கின்றது என என்றமையால் பூவென்றது தாமரைப் பூவையே குறித்தது. புரத்தல் - காத்தல். காவலர் - அரசர். (காத்தற்றொழிலில் வல்லவர்). உலகியல் - உலகநடை. காவலராதலால் உலகியல் காப்பதற்கு வந்தனர் என்றவாறு. (௩அ௬)

வரவுணர்பாங்கி அரிவைக்குணர்த்தல்.

அதாவது—தலைவன் வரவினை வாயில்களால் அறிந்த பாங்கியானவள் தலைவிக்கு அறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்னுகியசெஞ்சடையார்திருவெங்கைவெற்பினுனை
யுன்னுதகன்றவர்வந்தாரவர்செயலுன்னலைநீ
யின்னுசெய்தாரையொறுத்திடினன்மையியற்றுகெனச்
சொன்னர்புலவரறிந்திலையோபொற்சுடர்த்தொடியே.

ப - ரை. சுடர் - ஒளியையுடைய, பொன்தொடியே - பொற்றொடியை அணிந்தவளே, மின் ஆகிய - மின்கொடிபோன்ற, செஞ்சடையார் - செவந்த சடாபாரத்தை யுடையவராகிய சிவபெருமானரது, வெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில், உன்னை உன்னுது - உன்னை நினையாமல், அகன்றவர் - நீங்கினவராகிய தலைவர், வந்தார் - வந்தனர்; (ஆதலால்) அவர்செயல் - அவரது செய்கையை, நீ உன்னலை - நீ நினையற்க, இன்னுசெய்தாரை ஒறுத்திடின் - இன்னுசெய்தவரை யொறுக்கவேண்டின், நன்மை இயற்றுக என - நன்மையைச் செய்கவென்று, புலவர்சொன்னுர் - புலவர் சொல்லினர், அறிந்திலையோ - அதனை நீ யறிந்தாயில்லையோ. எ - று.

க - ரை. பொற்சுடர்த்தொடியே! மின்போலுஞ் செஞ்சடையை யுடையவராகிய சிவபெருமானரது திருவெங்கைமலையில், உன்னைநினையாதகன்றுபோனவர் வந்தார், அவர் தீச்செயலை நீ நினையற்பாலையல்லை, "இன்னு செய்தாரை யொறுத்தலவர்நாண, நன்னயஞ் செய்துவிடல்" என்ற பெரியோர் வாக்கினை நீ கேட்டறிந்திலையோ? வென்பதாம்.

வி - ரை. மின்னுகிய என்பதில் ஆகிய-உவமையுருபு. அகலல்-பிரிதல். செயல் எனவாளா கூறினும் உன்னு தகன்றவர் என்றமையால் அச்செயல் தீச்செயலாயிற்று. உன்னல் - நினைத்தல். இன்னு - தீங்கு. ஒறுத்தல் - தண்டித்தல். (௩௮௭)

தலைவனைத்தலைவி யெதிர்கொண்டுபணிதல்.

அதாவது—இவ்வாறுபாங்கியினுல் தலைவனது வரவினையறிந்த தலைவிதலைவனை யெதிர்கொண்டு வணங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

அரவிடுங்கங்கணக்கையாளர்கொன்றையுமாத்தியுமே
விரவிடுஞ்செஞ்சடைவேதியனுர்திருவெங்கைவெற்பிற்
பரவிடுமெங்கள்விழியாரக்கண்டுன்பதம்பணிய
வரவிடுமங்கையர்பல்லாண்டிருந்துயிர்வாழியவே.

ப - ரை. அரவுகங்கணம் இடும் - நாககங்கணத்தை யணிந்த, கையாளர் - திருக்கரத்தினை யுடையவர், கொன்றையும் - கொன்றைமலரும், ஆத்தியும் - ஆத்திமலரையும், விரவிடும் - கலந்தணிகின்ற, செஞ்சடை - செஞ்சடையையுடைய, வேதியனுர் - அந்தணர், (அவரது) திருவெங்கை வெற்பில் - திருவெங்கை மலையில்,

பரவிடும் - பரந்த, எங்கள் விழிஆர - எமது கண்ணிறைய, கண்டு - பார்த்து, உன்பதம்பணிய - உன்பாதத்தை வணங்குமாறு, வரவிடும்- வரவிட்ட, மங்கையர் - மாதர், பல்ஆண்டு இருந்து - அநேகவருடங் களிருந்து, உயிர் வாழிய - உயிர் வாழக்கடவர், எ - று.

க - ரை. சர்ப்ப கங்கணரும், கொன்றை மலரையும் ஆத்தி மலரையும் சேர்த்து முடிக்கிற சடாபாரத்தை யுடையவரும் ஆகிய சிவபிரானாரது திருவெங்கைமலையில், எமது கண்ணாரக்கண்டு உன் பாதத்தை வணங்குமாறு உன்னையிங்கு வரவிடுத்த மாதர் பல்லாண்டு வாழக்கடவர் என்பதாம்.

வி - ரை. கொன்றை, ஆத்தி ஆகுபெயர்கள். விரவல் - கலத்தல். பரவிடல் - பரத்தல். (விசாலித்தல்). மங்கையர் இங்குப் பரத்தையரை யுணர்த்திற்று. அரவு - பாம்பு. கங்கணம் - முன்கையிலணிவதோராபரணம். மங்கையர் - மாதர்பொது. (௩௮௮)

புணர்ச்சியின்மகிழ்தல்.

அதாவது—இவ்வாறெதிர்கொண்டு பணிந்த தலைவியைப் புணர்ந்த தலைமகன், அப்புணர்ச்சி யின்பத்தை மகிழ்ந்துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

நாவுண்கடலமுதொப்பாகுவதன்றுநல்லளிகள்
பூவுண்பொழில்புடைசூழ்வெங்கைவாணரைப்போற்றலுறும்
பாவுண்செவிச்சுவையேயெனலாமலர்ப்பாயலினில்
மேவுண்கருங்கண்மடப்பாவைநல்கியவின்பினுக்கே.

ப-ரை. ஏ உண் கருங்கண்-அம்புபோலுமையுண்ட கரிய கண்களையுடைய, மடப்பாவை-மடமாதானவள், மலர் பாயலினில்-புஷ்ப சயநத்தில், நல்கிய-கொடுத்த, இன்பினுக்கு-இன்பத்துக்கு, நாவுண்-நாவினா லுண்ணப்படுகிற, கடல் அமுது - பாற்கட லமிர்தமானது, ஒப்பு ஆகுவது அன்று - நிகராவதன்று, (அவ்வின்பத்தை மற்றென்னெனலாமெனின்) நல் அளிகள் - நல்லவண்டுகள், பூ உண் - மலர்களில் தேனையுண்ணுகின்ற, பொழில் - சோலைகள், புடைசூழ் - பக்கங்களில் சூழப்பெற்ற, வெங்கைவாணரை - திருவெங்கைவாணராகிய சிவபெருமானாரை, போற்றலுறும்-அன்பர் துதிக்கிற, பா-பாடல்களை, உண்-கேட்கிற, செவிச்சுவையே எனல் ஆம்-செவிச்சுவையே யென்னலாகும், எ - று.

க - ரை. புஷ்ப சயநத்தில், ஏவுண்கருங்கண் மடப்பாவை நல்கிய வின்பினுக்கு, நாவினா லுண்ணப்படுகிற பாற்கடலமிர்தம்

நிகராவதன்று, மற்றென்னெனின், திருவெங்கைச் சிவபெருமானை ரைத் துதிக்கிற பாடல்களைக் கேட்கிற செவிச்சுவையே நிகரென்னலாம் என்பதாம்.

வி - ரை. எ-அம்பு. கடல் அமுது - திருப்பாற் கடல்கடைந்த காலத்தில் அதிற் றோன்றிய அமிர்தம். பூ - ஆகுபெயர். பா-பாடல்கள்; அவை தேவார திருவாசகங்கள் முதலாயின. பயல் - சயநம். பாவை - ஆகுபெயர்; பாவைபோலு முருவுடையாள். நல்கல்-கொடுத்தல். இன்பு - சுகம். (நடஅகூ)

வெள்ளணியணிந்துவிடுத்துழித் தலைமகன் வாயில்வேண்டல்.

அதாவது—தலைவி புதல்வனைப்பயந்து நெய்யாடிய செய்திக் குடையாளமாகிய வெள்ளாடை முதலியன வணிந்து சேடியை விடுப்புழி அச்சேடியை வாயிலாகத் தலைவன் வேண்டிக்கூறல். அதற்குச் செய்யுள்,—

மலைமகள்பங்கர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லலைமகளென்னவருமடவார்வெள்ளணியணிந்து
கலைமகளென்னவடைந்தனராலினிக்கானவர்தந்
தலைமகண்மெய்ந்நலங்காண்பானெனையார்தருபவரே.

ப - ரை. மலைமகள் பங்கர் - மலையரையன் மகளாகிய பார்வதி தேவியாரை யிடப்பாகத்தி லுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) மணிவரைமேல் - அழகிய மலைமீது, அலைமகள் என்னவரும் - திருமகள்போல வருகிற, மடவார் - மாதர். வெள் அணி அணிந்து - வெள்ளணியைத் தரித்து, கலைமகள் என்ன - சரசுவதிபோல, அடைந்தனர் - வந்தார்கள், இனி - இனி, கானவர்தம் - வேடுவரது, தலைமகள் - தலைமகளது, மெய்நலம் காண்பான் - உடம்பழகைக் காண்டற்கு, என்னை தருபவர்யார் - என்னைக் கொடுபோய் விடுவோர்யாவர், எ-று.

க - ரை. மலைமகள் பங்கராகிய திருவெங்கைவாணர் மணிவரைமேல், திருமகள்போல வருமாதர்கள், வெள்ளணியணிந்து, கலைமகள்போல வந்தார்களாதலால், இனி, தலைமகளது உடம்பழகைக் காண்பதற்கு என்னைக் கொடுபோய் விடுவோர்யாவர், என்பதாம்.

வி - ரை. அலைமகள் - திருப்பாற் கடலிற் றோன்றிய மகள். (இலக்குமி) வெள்ளணி - வெள்ளுடை முதலாயின. கலைமகள் - வித்யாதிதேவதை; (சரசுவதி) காண்பான் - காண. பான் - வினையெச்ச விகுதி. (நடகூ0)

தலைவிநெய்யாடிய திதலை சாற்றல்.

அதாவது—தலைவி புதல்வனைப் பயந்து நெய்யாடியதனைப்பாங்கி தலைவற்குணர்த்தா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

மையாடியுதடங்கண்ணுளொருநன்மகவுயிர்த்து
மெய்யாடியதிருவெண்ணீற்றழகர்தம்வெங்கையிலே
செய்யாடியநல்வலம்புரியீன்றசெழுமணிபோ
னெய்யாடினணல்வினைப்பயன்மேவுநெடுந்தகையே.

ப - ரை. நெடுந்தகையே - நெடுந்தகாய், மையாடிய - மையை யெழுதின, தடம்கண்ணுள் - பெருங்கண்களையுடையவளாகியதலைவி, மெய்ஆடிய - திருமேனியிற் பூசப்பட்ட, திருவெண்ணீறு அழகர் - திருவெண்ணீற்றழகை யுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், செய்ஆடிய - வயலில்வாழ்கின்ற, நல் - சிறந்த, வலம்புரி ஈன்ற - வலம்புரிச்சங்கீன்ற, செழுமணி போல் - செழுமையாகிய முத்துப்போல, நல் - உத்தமமான, ஒரு மக உயிர்த்து - ஒரு புதல்வனைப் பெற்று, நெய்யாடினள் - நெய்யாடினாள், நல்வினைப்பயன் - இது நுமது புண்ணியப்பயனாகும், (ஆதலால்) மேவு - நமதில்லிற் கெழுந்தருளக் கடவை, எ-று.

க - ரை. நெடுந்தகையே! மையாடிய தடங்கண்ணாள் வலம்புரிமுத்துப்போல ஒரு நல்ல மகப்பயந்து நெய்யாடினள், மெய்யாடிய திருவெண்ணீற்றழகர் தம் வெங்கையிலே, இனி நீயவளைச் சென்று சேரக்கடவை, இது உன் புண்ணியத்தின் பயன் என்பதாம்.

வி - ரை. மை - அஞ்சனம். ஆடுதல் நான்கனுள் முன்னது எழுதுதல், இரண்டாவது பூசுதல், மூன்றாவது வாழ்தல், நான்காவது மூழ்குதல். நெய்யாடுதல் - நெய்பூசி மூழ்குதல்; இது பிள்ளைப்பேற்றுச் சடங்குகளிலொன்று. திருவெண்ணீறு-விபூதி. வலம்புரி-சங்கிற் சிறந்த சங்கு. வலம்புரியீன்ற செழுமணி யென்றமையால் மணிமுத்தினை யுணர்த்திற்று. (௩௯௧)

தலைவன் றன்மனத்துவகை கூர்தல்.

அதாவது—தலைவி புதல்வனைப்பயந்து நெய்யாடிய செய்தியைப்பாங்கி சொல்லக்கேட்ட தலைவன் தன்மனதில் மிக மகிழா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

பத்திரதன்மகனின்றேத்தும்வெங்கைப்பழமலையார்க்
கத்திரமன்னவிழியுமையாளயில்வேலவனைப்

புத்திரனென்னும்பொருள்படவின்றிலள்பொன்னுரைத்த
சித்திரமன்னவள்புத்திரற்பூத்துச்சிறந்தனளே.

ப - ரை. பத்திரதன்மகன் - ஸ்ரீராமபிரான், நின்று ஏத்தும் - நின்று துதிக்கிற, வெங்கை - திருவெங்கைப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற, பழமலையார்க்கு - பழமலை நாதராகிய சிவபெருமானுர்க்கு, அத்திரம் அன்ன - அம்புபோன்ற, விழி - கண்களையுடைய, உமையாள் - உமாதேவியானவள், அயில் - கூர்மைபொருந்திய, வேலவனை - குமாரக்கடவுளை, புத்திரன் என்னும் பொருள்பட - புத்திரன் என்னும் பொருள்தோன்ற, ஈன்றிலள் - பெற்றிலள், பொன் உரைத்த - பொன்னுரைத்துச் செய்த, சித்திரம் அன்னவள் - சித்திரப் பாவைபோன்ற நம் தலைவியானவள், புத்திரன்பூத்து சிறந்தனள் - புத்திரனையீன்று சிறப்படைந்தாள், எ - று.

க - ரை. ஸ்ரீராமபிரான் நின்று துதிக்கிற, திருவெங்கைப் பழமலை நாதருக்கு உமாதேவியானவள், குமாரக் கடவுளைப் புத்திரனென்னும் பொருள்படப் பெற்றிலள், பொற்பாவைபோலும் நம் தலைவியானவள் புத்திரனைப் பெற்றுச் சிறப்படைந்தாள் என்பதாம்.

வி - ரை. பத்திரதன் என்பதனைப் பத்து இரதன் எனப் பிரித்துப் பத்துத் திக்கினுந் தன்றேர் செலுத்துவோன் எனப் பொருள் கொள்க. இக்காரணத்தானே யிவற்குத் தசரதன் என்னும் பெயருண்டாயிற்று. பத்துத் திக்குக்களாவன:—அஷ்ட திக்குக்களும் பூம்யந்தரிக்ஷங்களும். அந்தரிக்ஷம்-ஆகாயம். பொன்னுரைத்தல்-பொன்னுருக்கு நீர்பூசல். புத்திரன் - தாய்தந்தையரைப் புத்தென்னு நரகத்தினின் றெடுப்பவன்; அச்செய்கை யின்மையால், அத்திரமன்ன விழியுமையாள் அயில்வேலவனைப் புத்திரனென்னும் பொருள்பட வீன்றிலள் என்றான். (நுகஉ)

தலைவிக்கவன்வரல் பாங்கியுணர்த்தல்.

அதாவது—பாங்கியானவள் தலைவனது வருகையைத் தலைவிக்குணர்த்தா நிற்றல். அதற்குச் செய்யுள்;—

ஆடுந்தொழிலர் திருவெங்கைவாண ரணிவரைமேற்
பாடுஞ்சுரும்புபடர்ந்தலர் பூத்தபசுங்கொடியை
நாடும்பணியெனநன்மகவீன்ற நினைவிரும்பிக்
கூடும்படிவதன்னர் பிரிந்தேகியகொற்றவரே.

ப-ரை. பிரிந்து ஏகிய - பிரிந்துசென்ற, கொற்றவர் - நமது தலைவர், ஆடும்தொழிலர் - கூத்தாடுந் தொழிலையுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப் பதியில் வாழ்பவர், (அவரது) அணிவரைமேல் - அழகிய மலையின்மீது, பாடும் சுரும்பு - பாடுகிற வண்டுகள், படர்ந்து - படர்ந்து, அலர்பூத்த - பூப்பூத்த, பசுங்கொடியை - பசிய கொடியினை, நேடும் பணி என - தேடுந்தொழில் போல, நல்மகவு ஈன்ற நின்னை விரும்பி - நற்புதல்வனைப் பெற்ற வுன்னை விரும்பி, கூடும்படி வந்தனர் - சேரும்படி வந்தார், எ-று.

க-ரை. ஆடுந்தொழிலர் திருவெங்கைவாண ரணிவரைமேல், பாடுஞ் சுரும்பு படர்ந் தலர்பூத்த பசுங்கொடியை நேடுதல்போல, நன்மகவீன்ற நின்னை விரும்பி, நம் தலைவர் வந்தார் என்பதாம்.

வி-ரை. "மாணிக்கக் கூத்தன்" "அன்பரென் பூடுருகக் குனிக்கும் பாம்பலங்கர்ரப்பரன்" "இரதமுடைய நடமாட்டுடையவர்" "சிற்றம்பலத்துப் பயில்கின்ற கூத்தன்" "தில்லையெங் கூத்தப்பிரான்" என்றற் றொடக்கத்தான்றோர் செய்யுட்கள் பலவற்றானும் சிறப்பித்துக் கூறப்படுதலால், இவரும் அவ்விறைவரது திருக்கூத்தின் மனம் படிந்தவராய் ஆடுந்தொழிலர் என்றார். நேடல்-தேடலை. பணி - தொழில். கொற்றவர் - அரசர். (௩,௯௯)

தலைவியுணர்ந்து தலைவனோடு புலத்தல்.

அதாவது—தலைமகன் வரவைப்பாங்கியாலுணர்ந்த தலைமகள் அவனோடு புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

பண்காணுறுமென்மொழிப்பங்கர்வெங்கைப்பனிவரைவாய்
கண்காதளவுமக்காதேந்திளமுலைகாறுமுள
பெண்காணெனமுன்புரைத்ததுநீபெறும்பிள்ளைசுவைத்
துண்காலமென்முலைநுண்ணிடைகாறு முளையென்றதே.

ப-ரை. பண்காணுறும் - பண்களெல்லாம் காணப்படுகிற, மெல்மொழி - மென்சொல்லையுடைய வுமாதேவியை, பங்கர் - ஒரு பாகத்தி லுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கை - வெங்கையிலுள்ள, பனிவரைவாய் - குளிர்ந்த மலையினிடத்து, கண் காது அளவும் - கண்கள் காதளவாகவும், அக்காது - அந்தக் காதுகள், இள - இளமை பொருந்திய, ஏந்து முலைகாறும் - ஏந்து முலையளவும், உள்ள - உள்ள, பெண்காண் என - பெண்காண் நீயென்று, முன்பு உரைத்தது - முன்னே சொன்னது, நீ பெறும்பிள்ளை - நீ

பெறப்போகிற பிள்ளை, சுவைத்து உண்காலம் - சுவைத்துண்ணுங் காலத்தில், மென்முலை-மெல்லிய தனங்கள், நுண் இடைகாறும் - நுண்ணிடையளவும், உளைஎன்றதே - உளை யென்று சொன்னதே யாகும். எ - று.

க-ரை. பண்காணுறு மென்மொழிப்பங்கர் வெங்கைப் பணிவரைவாய், கண்காதளவாகவும் அக்காது இளமுலையளவாகவுமுள்ள பெண்ணாயிருக்கின்றனை நீயென்று முன்பு நீசொன்னது, மகவீன்ற காலத்து அவன் சுவைத்துண்ணு முலையிடையளவாக வுள்ளவளாதி யென்றசதியாடினது போலுமென்பதாம்.

வி-ரை. பண் - இந்தளம், காந்தாரம், பஞ்சுரம் முதலியவை; பைரவி, தோடி முதலிய இராகங்கள் எனினுமாம். காறும்-அளவும். உளை - உள்ளவளாவை. (நூகூச)

தலைவி பாணனை மறுத்தல்.

அதாவது—தலைவன் விடுவாயிலாக வந்த பாணனைத் தலைவி வெகுண்டு மறுக்கிற்றல். அதற்குச்செய்யுள்,—

பைத்தலைநாகமணிவோன்றென்வெங்கைப்பணிவரைமேற்
செய்த்தலையூரனுனையீங்குவிட்டதுதேரினொரு
மெய்த்தலைநீட்டிநுழைவான்கருதிமுன்வெங்கரவன்
பொய்த்தலைகாட்டியதன்றேபண்பாடும்புலைமகனே.

ப - ரை. பைத்தலை - படத்தோடு கூடிய தலையையுடைய, நாகம் - பாம்பை, அணிவோன் - தரிப்பவனாகிய சிவபிரானது, தென் வெங்கை - தென்வெங்கையிலுள்ள, பணிவரைமேல் - குளிர்ந்தமலை மீதுள்ள, செய்த்தலை ஊரன் - வயலிடங்களால் சூழப்பெற்றவூரன், உன்னை ஈங்குவிட்டது - உன்னை யிங்கே யனுப்பினது, தேரின் - ஆராயுமிடத்து, ஒரு மெய்த்தலை நீட்டி-ஒரு உண்மையாகிய தலையை நீட்டி, நுழைவான் கருதி - நுழையவெண்ணி, முன் - முன்னே, வெங்கரவன் - கொடிய திருடனவன், பொய்த்தலை-பொய்யாகிய தலையை, காட்டியது அன்றே - காட்டினதுபோலுமன்றே, பண் பாடும் புலைமகனே - பண்கள் பாடுகிற புலைமகனே, எ - று.

க - ரை. பண்பாடும் புலைமகனே! பைத்தலை நாகமணிவோன் றென் வெங்கைப்பணிவரைமேற் செய்த்தலையூர னுனையீங்குவிட்டது தேரின், வெங்கரவன், மெய்த்தலைகாட்டி நுழையக் கருதி, முன்பு, பொய்த்தலையைக் காட்டிய செயல்போன்றதன்றே வென்பதாம்.

வி - ரை. செய் - வயல். தலை - இடம். தேர்தல் - ஆராய்தல். நுழைவான்-நுழைய. கரவன்-திருடன். புலைமகன்-நீசன். (பாணன்) விடல் - அனுப்புதல். (௫௯௫)

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

அதாவது—தலைவியால் வாயில் மறுக்கப்பட்ட பாணன் தலைவியைநோக்கிக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்,—

செல்வீரவாள்விழிமங்கைபங்காளர்தம்வெங்கைவெற்பி
னல்வீகமழ்புயத்துங்காதலர்பெயர்நானுரைப்பிற்
செல்வியுலகரென்னைவியந்தேகட்செவியுமிழ்செங்
கல்வீசுவரின்றுநீவீசினைகருங்கல்லினையே.

ப - ரை. செல்வீ - திருமகள்போல்வாளே, வெல் - (பகைவரை) வேறற்குரிய, வீரம் - வீரத்தன்மையுள்ள, வாள் - வாட்படை போலும், விழி - கண்களையுடைய, மங்கைபங்காளர் - மங்கைபாகரது, வெங்கைவெற்பில் - திருவெங்கைமலையில், நல் - நல்ல, வீ - மலர்மாலை, கமழ் - பரிமளிக்கிற, புயத்து - தோள்களையுடைய, உம் காதலர்பெயர் - நுமது அன்பரது பேரை, நான் உரைப்பின் - நான் சொன்னால், உலகர் - உலகத்தார், என்னைவியந்து - என்னை மெச்சி, கட்செவி உமிழ்-பாம்பானது உமிழ்ந்த, செங்கல் வீசுவர் - செங்கல்லினை யெறிவர், இன்று - இன்று, நீ - நீ, கருங்கல்லினை வீசினை - கருங்கல்லினை யெறிந்தாய், எ - று.

க - ரை. செல்வீ! சிவபெருமானது வெங்கைவெற்பில், உன் காதலர் பேர்சொன்னால், யாவரும் எனக்குப் பரிசிலாக நாகரத்தினத்தை யெறிவர், நீ யின்று கருங்கல்லை யெறிந்தா யென்பதாம்.

வி - ரை. வீரம் - வாளுக்கிலக்கணை. பங்காளர் என மேல்வருதலால் வெல்வீரவாள்விழி மங்கையென்றது உமாதேவியைக் குறித்தது. வீ - மலர். கமழ்தல் - பரிமளித்தல். செல்வி - திருமகள். வியத்தல்-மெச்சுதல். கட்செவி - கண்ணையே செவியாகவுடையது; (பாம்பு) கட்செவியுமிழ் செங்கல் - மாணிக்கம். (௫௯௬)

விருந்தோடுவந்துழிப் பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

அதாவது—விருந்தினரோடு வந்துழித்தலைவி வெகுளாது பொறுத்தமைநோக்கித் தலைமகன் மகிழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

× கருங்கல் - [illegible]; [illegible].

திருந்துமரவப்பணியாளர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
லருந்துமமுதமருந்தாய்ப்பிணிகளைந்தாங்குமுத்து
முருந்துமனையநகையாளிதய்முனிவகற்றும்
விருந்துவருகதில்லென்றுமெப்போதுமெம்விட்டினுக்கே.

ப - ரை. திருந்தும் - திருத்தமாகிய, அரவப்பணியாளர் - சர்ப்பாபரணராகிய சிவபெருமானாரது, வெங்கைச் செழுஞ்சிலம்பில் - திருவெங்கையிலுள்ள செழுமையாகியமலையில், அருந்தும் அமுதம் - உண்ணுகின்ற பாலானது, மருந்து ஆய் - மருந்துமாகி, பிணிகளைந்தாங்கு - பிணியை யொழித்தாற்போல, முத்தும் - முத்தினையும், முருந்தும் - முருந்தினையும், அனைய - நிகர்த்த, நகையாள் - பல்லினையுடையவளாகிய நம்தலைவியின், இதயமுனிவு-மனவெறுப்பை, அகற்றும்-ஒழிக்கிற, விருந்து - விருந்தானது, என்றும்-எந்நாளும், எப்போதும் - எப்பொழுதும், எம் வீட்டிற்குவருக-எமது வீட்டிற்கு வருக, எ-று.

க - ரை. திருந்துமரவப்பணியாளர் வெங்கைச் செழுஞ்சிலம்பில் அருந்தும்பாலே மருந்தாகி நோயையொழித்தாற்போல, தலைவியின் முனிவகற்றுதற்குரிய விருந்தினர் எக்காலமும்எம்வீட்டிற்கு வரக்கடவரென்பதாம்.

வி - ரை. பணி - ஆபரணம். அமுதம் - பால். களைதல்-ஒழித்தல். முருந்து - மயிலிறகினடி. நகை - பல். இதயம்-மனம். முனிவு-கோவம். விருந்து ஆகுபெயராய் விருந்தினரையுணர்த்திற்று. தில்-அசை. (௩௬௭)

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச்
சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

அதாவது—தலைவனானவன்,விருந்துகண்டு மறைந்த தலைவியூடலானது வெளிப்படக்கண்டு சீறற்கவென்று, அவளது சிற்றடியை வணங்காநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அறத்தாறறியுந்திருவெங்கைவாணரணிவரைமேல்
வெறுத்தாலுனைமுனிவாற்றுநர்தாஞ்சிலர்வேறுளரோ
வொறுத்தாரைபெறுமின்பமுநினையாமலொருவர்பிழை
பொறுத்தார்புகழுமறிந்திலையேமலர்ப்பூங்கொடியே.

ப - ரை. மலர் பூங்கொடியே-மலர்ப் பூங்கொடிபோல்வாளே, அறத்துஆறு - தருமமார்க்கத்தை, அறியும் - அறிகின்ற, திருவெங்

கைவாணர் - திருவெங்கைவாணரது, அணிவரைமேல் - அழகிய மலைமீது, வெறுத்தால் - நீ கோவித்தால், உன்னை - உன்னை. முனிவு ஆற்றுநர் - கோபந்தணிப்பவராகிய, சிலர் - சிலபேர், வேறு உளரோ - வேறுளராவரோ, ஒறுத்தார் பெறும் இன்பமும் - ஒறுத்தவர் அடைவதாகிய இன்பத்தினையும், ஒருவர்பிழை - ஒருவர் செய்தபிழையை, நினையாமல் பொறுத்தார்புகழும் - நினையாமற் பொறுத்தவரது புகழினையும், அறிந்திலையோ - அறிந்தாயில்லையோ எ - று.

க - ரை. மலர்ப் பூங்கொடியே! நீ வெறுத்தால் உன் கோபந் தணிப்பவர்யார்? உலகத்தில், ஒறுத்தவர் அடையுமின்பமும், பொறுத்தவர் அடையும்புகழும் அறிந்திலையோ வென்பதாம்.

வி - ரை. வெறுத்தல் - கோவித்தல். ஆற்றுநர் - தணிப்பவர். ஒறுத்தல் - வருத்தல். (ருகூஅ)

இஃதெங்கையர்காணின்நன்றன்றென்றல்.

அதாவது—நீர் எமக்குச் செய்வதாகிய இப்பணிவை, எங்கையராகிய பரத்தையர் கண்டால் குற்றமாய் முடியுமெனத் தலைவி கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மையென்றகண்டர்தம்வெங்கையிலேவண்டுவாரிசமென்
கையென்றலம்வருநல்வயலூரகண்ணுற்றனரேற்
பொய்யென்றறிகிலரெங்கையர்நீசெயும்பொய்ம்மையினை
மெய்யென்றுளங்கொண்டொழியாரெழுந்ததம்வெஞ்சினமே.

ப - ரை. மை என்ற கண்டர் - மேகமென்று சொல்லப்பட்ட கண்டத்தையுடையவராகிய சிவபெருமானரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியிலுள்ள, வண்டு - வண்டுகள், வாரிசம் - தாமரை மலரை, மெல்கையென்று - மெல்லியகையென்று, அலம்வரு - மயக்காநின்ற, நல்வயல் - நல்லவயல்கள் சூழ்ந்த, ஊர - ஊரனே, எங்கையர் - என் தங்கையர், நீ செய்யும்பொய்ம்மையினை - நீசெய்கிற பொய்ப்பணிவை, கண்ணுற்றனரேல் - பார்த்தாராயின், பொய்யென்று அறிகிலர் - பொய்யென்றறியாதவராய், மெய்யென்று உள்ளங்கொண்டு - மெய்யென்றெண்ணித்து, எழுந்ததம் வெஞ்சினம் ஒழியார், - உண்டாகிய தமது கடுங்கோவந்தணியார், எ - று.

க - ரை. மை யென்ற கண்டர் தம்வெங்கையிலே, வண்டு வாரிசமென் கையென்றலம்வரு நல்வயலூரனே! எங்கையர் காணின், நீ

செய்யும் பொய்ம்மையைப் பொய்யென்றறியாது மெய்ம்மையாகவே கருதியுன்னைச் சினப்பராதலால், நீயெம்மிடத்துச் செய்யும் பொய்ப் பரிவினை யொழிவாயாக வென்பதாம்.

வி - ரை. மை - மேகம். வாரிசம் - தாமரை; இது வடசொல். வாரி - நீர், சம் - பிறப்பது. (நீரிற்பிறப்பது.) இதனை யோகரூடியெ ன்பர் வடநூலார்; தமிழர் காரண விடுகுறியென்பர். அலம்வரல் - சுழலல். கண்ணுறல் - காண்டல். எல்-எனின் என்பதன்மரூஉ. எங் கையர் - என் தங்கையர் என்பதன் மரூஉ; இது பரத்தையரைக் குறித்தது. (நூகூகூ)

நின்னலதியாரையுநினையேனென்றல்.

அதாவது—உன்னை யன்றி வேறொருவரையு நினைந்திலேனென த் தலைவன் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மின்னையலாமனுவமையில்வேணிநம்வெங்கைபுரி
மன்னையலாமலடியார்பிறரைமதிப்பரெனி
னின்னையலாமனினைவேன்பிறரையென்னெஞ்சகத்திற்
பொன்னையலாமலெதிரிலையாகியபூங்கொடியே.

ப - ரை. பொன்னை அல்லாமல் - பொன்னே யன்றி, எதிர் இல்லை ஆகிய - நிகரில்லையாகிய, பூங்கொடியே - பூங்கொடிபோல் வாளே, மின்னை அல்லாமல்-மின்கொடியையல்லாமல், உவமைஇல் - வேறொப்பில்லாத, வேணி-சடாபாரத்தையுடைய, நம் - நமது, வெங் கைபுரி மன்னை அல்லாமல் - திருவெங்கை நகர்க்கிறைவராகிய சிவ பெருமானையன்றி, பிறரை - அயலாரை, அடியார் - அன்பரானவர், மதிப்பர் எனின்-மதிப்பாராயின், நின்னை அல்லாமல்-நின்னையன்றி, பிறரை-அயலாரை, என்னெஞ்சகத்தில் - என்மனத்தில், நினைவேன் - நான் நினைப்பேன், எ - று.

சு - ரை. பொன்னையலாம லெதிரிலையாகிய பூங்கொடியே! அன்பரானவர் திருவெங்கைச் சிவபெருமானை யன்றி வேறு தெய் வங்களை மதிப்பாராயின் நான் உன்னையன்றி வேறொருவரை நினைப் பேனென்பதாம்.

வி - ரை. பொன் - திருமகள்; அன்றிச் சுவர்ணமெனினுமாம். எதிர்-ஒப்பு. மன்-இறைவன். (நிலைபேறுடையவன்) அடியார் பிறரை மதிப்பரெனி னின்னையல்லாம னினைப்பேன் பிறரை யென்னெஞ் சகத்தில் என்றமையால் அடியார் வேறு தெய்வங்களை மதியார் நா னும் பிறரை யெண்ணேன் என்றதாயிற்று. (சOO)

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.

அதாவது—தலைவனிவ்வாறு கூறக்கேட்ட தலைமகள், தான் பரத்தையைக்கண்ட செய்தியைத் தலைவனோடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மறிந்தேதெருவிற்சிறுதேருருட்டுறுமைந்தனைப்போய்ச்
செறிந்தேதழுவக்கண்டுன்மகன்காணெனச்செப்பவெள்கிப்
பிறிந்தேகினளொருபெண்சோதிவெங்கைப்பெருந்தகையா
யறிந்தேனவளையிங்குன்மாமகன்றனக்கன்னையென்றே.

ப - ரை. சோதி-ஒளியுருவாகிய சிவபெருமானாரது, வெங்கை-திருவெங்கைப்பதியிலுள்ள, பெருந்தகையாய் - பெருந்தகையை யுடையானே, தெருவில் - வீதியில், மறிந்து - திரும்பி, சிறுதேர் உருட்டுறும்-சிறுதேருருட்டாநின்ற, மைந்தனை-புதல்வனை, போய்-சென்று, செறிந்து-நெருங்கி, தழுவக்கண்டு-தழுவநோக்கி, உன்மகன்காண் எனசெப்ப-உன் மகனேயென்று யான்சொலல, வெள்கி-நாணி, ஒருபெண்-ஒருபெண்ணானவள், பிறிந்துஏகினள்-பிரிந்துபோயினள்,(ஆதலால்) அவளை - அந்தப்பெண்ணை, இங்கு-இவ்விடத்து, உன் - உனது, மா - அழகிய, மகன் தனக்கு - மகனுக்கு, அன்னையென்று அறிந்தேன்-தாயென்றறிந்தேன், எ - று.

க - ரை. சோதிவெங்கைப் பெருந்தகையாய்! நம்புதல்வன், தெருவில் விளையாடச்செய்தே ஒருபெண் அவனைத் தழுவக்கண்டு அவன் உன்புதல்வனே யாவனென்றேன், உடனேயவள் நாணிச் சென்றாள், அவளையுன் காமக்கிழத்தியென்றறிந்தேன் என்பதாம்.

வி - ரை. செறிதல் - கிட்டுதல். வெள்கல் - நாணல். பெருந்தகை-பெருங்குணம். எல்லாவொளிகட்கு மேலான பரஞ்சோதியாதலால் இறைவனைச் 'சோதி' என்றார். காண் - முன்னிலையசை.

தாமக்தழலியைப்பாங்கிதணித்தல்.

அதாவது—இந்தச் செய்தியைக் கண்ட பாங்கியானவள் தலைவியைத் தணியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

வயேதிலரைவிடாதன்பர்தாம்வந்திறைஞ்சிடவு
நீயேதுமெண்ணலையென்கொல்பொன்னேவிழிநீர்ப்பரவை
தாயேறுவந்தவர்மேதன்வெங்கைநாயகர்தூதுவராய்ப்
போயேயிரந்துகொளத்தீர்ந்தனடன்புலவியையே.

ப-ரை. பொன்னே - பொன்போல்வாளே, விழி - கண்களில், நீர் - நீர்கொண்ட, பரவை - பரவைநாச்சியார், தூ ஏறு உவந்தவர் - வெள்விடையை யுவந்தவர், தென்வெங்கை நாயகர் - தென் வெங்கைக் கிறைவர், (அவர்) தூதுவராய்போய் - தூதராகச்சென்று, இரந்துகொள்ள - வேண்டிக் கொள்ளுதலும், தன்புலவியை - தன தூடலை, தீர்ந்தனள்-நீங்கினள், எய்-பொருந்திய, ஏதிலரைவிடாது- அயலாரை யனுப்பாமல், அன்பர்தாம்-காதலர் தாமே, வந்து இறைஞ்சிடவும் - வந்து வணங்கவும், நீ ஏதும் எண்ணலை - நீ சிறிதும் மதித்திலை, என் - யாது காரணம், எ-று.

க-ரை. பொன்னே! திருவெங்கை வாணர் முற்காலத்துத் தூதுவராய்ச் செல்லுதலும் பரவைநாச்சியார் சினந்தவிர்ந்தாளன்றே, அதனைக் கேட்டறிந்த நீ, நம்மன்பர் தாமேவந் திறைஞ்சவும் சினந்தவிரா திருத்தல் நன்றன்றென்பதாம்.

வி-ரை. ஏதிலர் - அயலார். விடல் - அனுப்பல். இறைஞ்சல்- வணங்கல். தூயேறு - வெள்விடை. (விடை - இடபம்) புலவி - ஊடல். தீர்தல் - நீங்குதல். (௪0௨)

தலைமகள்புலவி தணியாளாகத் தலைமகனூடல்.

அதாவது—இவ்வாறு பாங்கி தணிக்கவும் தலைமகள் தணியாளாகத் தலைமகனூடாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விரும்பாமறவர்புரமூன் றெரித்தவர்வேணியினி
லரும்பாமதியொன் றணிந்தபிரான்வெங்கையன்னவயற்
கரும்பாமொழியென்மடமாதினுக் கெந்தக்காலமுமிவ்
விரும்பாமணமிலையாரோவறிதிங்கிருந்தவளே.

ப-ரை. விரும்பா - தம்மை விரும்பாத, மறவர் - பகைவரது, புரம்மூன்று - முப்புரத்தை, எரித்தவர் - நீறு செய்தவர், வேணியினில் - சடாபாரத்தில், அரும்புஆம் - அரும்பாகிய, மதி ஒன்று - ஒரு கலையாகிய சந்திரனை, அணிந்தபிரான் - தரித்த வுபகாரசீலன், (அவனது) வெங்கை - திருவெங்கைப்பதியில் உள்ள, அன்னம் வயல் - அன்னங்கள் சஞ்சரிக்கிற வயல்களில் விளைந்த, கரும்பு ஆம் - கருப்பஞ்சாறுபோலும், மொழி - மொழியினையுடைய, என் மடமாதினுக்கு - என் மட மங்கைக்கு, எந்தக்காலமும் - எக்காலத்தும், இ - இந்த, இரும்பு ஆம்மனம் இல்லை - இரும்புபோலும் மன மில்லை, வறிது இங்கு இருந்தவள் - சும்மா இங்கே யிருந்தவள், யாரோ - யாரோ, எ-று.

க-ரை. விரும்பாமறவர் புரமூன்றெரித்தவர் வேணியினில் அரும்பாமதிபொன் றணிந்தபிரான் வெங்கை யன்னவயற்கரும்பா மொழியென் மடமாதினுக்கு, எந்தக்காலத்தினும், இவ்விரும்பு மனங்கிடையாது, ஆதலால், இங்குவந்திருக்கு மிவள் யாரோ வென்பதாம்.

வி-ரை. மறம் - கோவம்; அதனை யுடையவராதலாற் பகைவரை மறவர் என்றார். அரும்பாமதியொன்று - ஒரு கலையாகிய சந்திரன். கரும்பு - ஆகுபெயர். வயலுக்கு அன்னம் அழகு செய்வதாதலால் அன்னவயல் என்றார். "அன்னவயற்புதுவை" "அன்னவயல் சூழருணை." "அன்னங் கண்படுதெண்பணை" என் றிவ்வாறு பிறருங் கூறுதல்காண்க. யாரேயென்னு மேகாரம் ஐயம்; வினவுமாம். (௩௦௯)

பாங்கியன்பிலைகொடியை யெனத்தலைவனையிகழ்தல்.

அதாவது—இவ்வாறு ஊடினதலைமகனைப் பாங்கியானவள் அன்பிலைகொடியை யென்றிகழாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

தீம்பால்கமழுமணிவாய்ப்புதல்வற்குச்சிற்றெலும்பு
பூம்பாவையாகவருள்வோன்றென்வெங்கைப்பொருப்பிலிளங்
காம்பானதோளிமுன்வேம்புதந்தாலுங்கழைக்கரும்பாம்
வேம்பாமுனக்குக்கரும்பாயினுமின்றுவேலவனே.

ப-ரை. வேலவனே - வேற்படையுடையவனே, தீம்பால்கமழும் - இனிய பாலானது பரிமளிக்கிற, மணிவாய் - அழகியவாயினையுடைய, புதல்வற்கு - புதல்வனாகிய திருஞானசம்பந்தனுக்கு, சிறு எலும்பு - சிறிய எலும்பானது, பூம்பாவை ஆக - திருப்பூம்பாவையாம்படி, அருள்வோன் - அருள் செய்தவனாகிய சிவபெருமானது, தென் வெங்கைப்பொருப்பில் - தென்வெங்கை மலையிலுள்ள, இளங்காம்பு ஆன - இளமூங்கில்போலும், தோளி - தோள்களை யுடையவளாகிய எமது தலைவி, முன்-முன்னே, வேம்புதந்தாலும் - வேம்பைக்கொடுத்தாலும், கழைகரும்புஆம் - கழைக்கரும்புபோலும், இன்று - இன்று, கரும்புஆயினும் - கரும்பேயாயினும், உனக்குவேம்புஆம் - உனக்கு வேம்புபோலும், எ - று.

க-ரை. வேலவனே! தீம்பால்கமழுமணிவாய்ப் புதல்வற்குச் சிற்றெலும்பு பூம்பாவையாக வருள்வோன்றென் வெங்கைப்பொருப்பில் இளங்காம்பானதோளி, முன்னே வேம்புதந்தாலும் கரும்பாயிருந்தது, இன்று கரும்புதந்தாலும் உனக்குவேம்பாயிருந்ததென்பதாம்.

வி - ரை. பூம்பாவை - அழகிய பெண். தீம்பால் கமழுமணி வாய்ப்புதல்வற்கு என்றது திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகத்திற்கு என்றபடி. அது, "மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை" எனத் தொடங்குவது. காம்பு - மூங்கில். கழைக்கரும்பு - கரும்பு விசேடம். (௪0௪)

ஆயிழைமைந்தனொடாற்றன்மையுமேவாயில்களாக வரவெதிர்கோடல்.

அதாவது—ஆயிழைப்புதல்வனும்ஆற்றாமையுமேவாயில்களாகக் கொண்டு தலைவன் வரவெதிர் கொள்ளாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

அறந்தாங்குமையவள்கொங்கைத்தழும்ப ழியாவுரத்தர்
பிறந்தாங்கறிகிலர் வெங்கைமன்னாதுப்பிலகுமொரு
நிறந்தாங்கரவிந்தவண்டோர்புன்முள்ளிநினைந்ததுபோன்
மறந்தாங்கிராமலெம்மை நீநினைந்ததெம்மாதவமே.

ப - ரை. அறம் தாங்கு - அறத்தைத் தாங்கின, உமையவள் - உமாதேவியின், கொங்கைத் தழும்பு - கொங்கைவடுக்கள், அழியா - கெடாத, உரத்தர் - திருமார்பினையுடையவர், பிறந்தறிகிலர் - பிறந்தறியாதவர் (அவரது) வெங்கை - திருவெங்கையிலுள்ள, மன்னா - அரசனே, துப்புஇலகும் - பவளம்போல விளங்குகிற, ஒரு-ஒப்பற்ற, நிறம்தாங்கு - நிறத்தைக்கொண்ட, அரவிந்தம்-தாமரைமலரிலுள்ள, வண்டு - வண்டானது, ஓர்புல்முள்ளி - ஒரு அற்பமாகிய முள்ளி மலரை, நினைந்ததுபோல் - கருதினதுபோல, ஆங்கு - அவ்விடத்திதே, மறந்து இராமல் - மறந்திருக்காமல், எம்மை - எங்களை, நீ நினைந்தது - நீ கருதினது, எம்மாதவமே - எமதுபெருந்தவமேயாம், எ - று.

க - ரை. அறந்தாங்குமையவள் கொங்கைத் தழும்பழியாவுரத்தர் பிறந்தாங்கறிகிலர் வெங்கைமன்னா! எம்மைமறந்து அவ்விடத்தேயிராமல் இங்கு வந்தது, செந்தாமரை மலரில் வாழும் வண்டானது அற்பமாகிய வொருமுள்ளிமலரை நினைந்ததுபோலும் என்பதாம்.

வி - ரை. திருக்கச்சிப்பதியில் எண்ணான் கறமும் வளர்ப்பவளாதலால், 'அறந்தாங்குமையவள்' என்றார். தழும்பு - வடு. உரம் - மார்பு. துப்பு - பவளம். அரவிந்தம் - செந்தாமரைமலர்; ஆகுபெயர்.

மணந்தவன் போயபின் வந்தபாங்கியோ டிணங்கியமைந்தனை யினிதிற்புகழ்தல்.

அஃதாவது—தலைவன் போனபின்பு வந்த பாங்கியையும் புதல்வனையும் புகழாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பிறந்தவன்றேநன் மணிநேர்புதல்வன்பிறர்கடைத்தேர்
பறந்தடைந்தாங்குநம்வாய்தலிலேவரப்பண்ணினனே
யிறந்தவங்கம்புனையெம்மான்றன்வெங்கையிலிம்மையினுஞ்
சிறந்தவின்பந்தரவல்லவனேயெனத்தேறினமே.

ப - ரை. நல்மணிநேர் புதல்வன் - மாணிக்கம்போலு நம்புதல்வன், பிறந்த அன்றே - பிறந்த அந்நாளிலேயே, பிறர்கடை - பிறருடைய கடைவாயிலிலிருந்த, தேர் - (நமதன்பாது) தேரானது, பறந்து அடைந்தாங்கு - பறந்துவந்தாற்போல, நம் வாய்தலிலே வரப்பண்ணினன் - நம் வாயிலில் வரச்செய்தான், ஆல் - ஆதலால், இறந்த அங்கம் புனை - செத்த எலும்பைத்தரித்த, எம்மான் - எம்பெருமானது, வெங்கையில் - திருவெங்கைப்பதியில், இம்மையினும் - இகத்திலும், சிறந்த இன்பம் தரவல்லவனே என - மேலான இன்பத்தைக் கொடுக்கவல்லவனேயாவனென்று, தேறினம் - தெளிந்தோம், என்று.

க - ரை. பிறந்தவன்றே, பிறர்கடைவாயிலிலிருந்த நந்தலைவரது தேரானது நந்தலைவாயிலிலே வரப்பண்ணினனாதலால், இந்தப் புதல்வன் நமக்கு இம்மைப் பயனையுந் தரவல்லவனே யாவனென்பதாம்.

வி - ரை. வாய்தல் - வாயில். அங்கம் - என்பு; அது ஆகுபெயராய் அதனாலியன்ற மாலையை யுணர்த்திற்று. இம்மை - இவ்வுலகம். இம்மையினும் என்றவும்மை யிறந்தது தழீஇயது; மறுமையின்பந் தருதலேயன்றி யெனப்பொருள்படுதலான். மறுமையின்பந் தருதலாவது புத் என்னும் நரகத்தினின்று மெடுத்தல். இதனானே புத்திரன் என்னும் பெயருண்டானதுமென்க. தேறல் - தெளிதல். ()

தலைவி தலைவனைப்புகழ்தல்.

அஃதாவது—இவ்வாறு தலைவிபாங்கியோடு மைந்தனைப் புகழ்ந்த பின்னர்த் தலைவனைப் புகழாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

மன்னுற்றமென்மொழியாய் தமிழ்நாவிசைப்பாவலர்தா
மென்னுற்றநம்முயிர்க்காதலர்போல்பவரில்லையெனப்
பொன்னுற்றபங்கர்தம்வெங்கையிலேதண்பெரும்பொழில்
மின்னுற்றகாதலைபின்றளவாகவுங்காட்டினரே. [வாய்க்

ப - ரை. பண்உற்ற - பண்போலும், மெல்மொழியாய் - மெல்லிய மொழியினையுடையாளே, தமிழ்நூல் - தமிழ்நூல்களில், இசை - கீர்த்திபெற்ற, பாவலர் - பாவலர், எண் உற்ற - மதித்தற்குரிய, நம் உயிர் - நம் முயிர்போலும், காதலர்போல்பவர் - அன்பரை நிகர்த்தவர், இல்லை என - இல்லையென்று சொல்லுமாறு, பெண் உற்றபங்கர் - பெண்பாகராகிய சிவபெருமானுரது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், தண் - குளிர்ந்த, பெரும்பொழில்வாய் - பெரியசோலையிலே, கண்ணுற்ற காதலை - கண்ட அன்பை, இன்றளவாகவும் காட்டினர் - இந்நாளளவுங் காட்டினர், எ - று.

க - ரை. பண்ணுற்ற மென்மொழியாய் ! நமது காதலர்போல் வாரில்லையென்று அறிஞர் கூறும்படி நமது தலைவர், திருவெங்கைப் பொழிலில் நம்மைக் கண்ணுற்ற காலந்தொடங்கி யிதுகாறும் தம் மன்பை யெம்மீதிருக்கக் காட்டினர் என்பதாம்.

வி-ரை. பண்ணுற்ற மென்மொழியாய் என்றது தோழியை. உயிர்க்காதலர் - உயிர்போலுங் காதலர். பெண்ணுற்ற பங்கர் - சிவபெருமான். கண்ணுறல் - காண்டல். (சஂ0எ)

சிலைநுதற்பாங்கிதலைவியைப்புகழ்தல்.

அதாவது—இவ்வாறு தலைவி தலைவனைப் புகழ்ந்த பின்னர், பாங்கியானவள் தலைவியைப் புகழாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கேளோர்பரத்தையிற்போகாதிருத்தலிற்கீர்த்திபெற்று
நாளோடிலங்குமருந்ததியோவொப்புநாகமணி
தோளோனொருதெய்வசூளாமணிவெங்கைத்தொன்னகரில்
வாளோவெனுங்கட்பிறைவாணுதலெங்கண்மாதினுக்கே.

ப - ரை. கேள் - நாயகன், ஓர்பரத்தை இல் - ஒருபரத்தை வீட்டில், போகாது இருத்தலின் - போகாதிருத்தலால், நாகம் அணி - பாம்பை யணிந்த, தோளோன் - புயங்களையுடையவன், ஒரு தெய்வ சூளாமணி - ஒப்பற்ற தெய்வசிகாமணி, (அவனது) வெங்கை - திருவெங்கைப்பதியாகிய, தொல் நகரில் - பழமையாகிய நகரத்தில், வாளோ என்னும் கண் - வாளோவென்றற்குரிய கண்களையும், பிறை வாள் நுதல் - பிறைபோலும் ஒளியையுடைய நெற்றியையுமுடைய, எங்கள் மாதினுக்கு - எங்கள் பெண்ணுக்கு, கீர்த்திபெற்று - புகழ் பெற்று, நாளோடு இலங்கும் - நாண்மீன்களோடு கூடி விளங்குகிற, அருந்ததியோ ஒப்பு - அருந்ததியோ நிகராவாள், எ - று.

க - ரை. நாகமணிதோளோ னொருதெய்வ சூளாமணி வெங்கைத் தொன்னகரில் வாளோவெனுங்கண் பிறைவாணுதலெங்கள் மாதினுக்கு, தன் கணவன் ஒருபரத்தை வீட்டிற்குப் போகாதிருத்தலாலே, அருந்ததியோ வொப்பாவளென்பதாம்.

வி - ரை. கேள் - கணவன். பரத்தை - விலைமாது. நாள்-நாண்மீன். எங்கள் மாதினுக்கு அருந்ததியோ வொப்பு என முடிக்க. சூளா, சிகா என்பன வட சொற்கள். முடியென்னும் பொருள். (௪0அ)

ஓதற்பிரிவு.

அதாவது—தலைமகன் ஓதல் காரணமாகப்பிரிதல், தலைமகளை யெய்தியிருந்தே இவனோதுவான் பிரிதலெற்றுக்கெனின், முன் ஞானமில்லாதானாகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாதலானும், ஒழுக்கத்தின் வழியது குலமாகலானும், இவையாவும் குறையிடாமே யெனின், ஆகாது. கற்பான் பிரியுமென்பதன்று, பண்டே குரவர்களாற் கற்பிக்கப்பட்டுக் கற்றான், அறம்பொருள் இன்பம் வீடு பேறு என்பவைகள் நுதலிய நூல்களெல்லாம் இனிப்பரதேயத்து அவை வல்லோருளரெனிற் காண்பலென்று அவை வல்லார்களுள் வழிச்சென்று தன் ஞானம் மேற்படுத்து அவர் ஞானங் கீழ்ப்படுத்தற்குப் பிரியுமெனக்கொள்க.

ஓதற்பிரிவுதலைமகன்றன்றுலுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல்.

அதாவது—ஓதற்பிரிவினைத் தலைமகனாலறிந்த தோழியானவள் தலைமகளுக்குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

விண்ணுடையார்புகழ்நூபுரபாதர்வெல்வேனெடுங்கட் [கே
பெண்ணுடையார்மகிழ்தென்வெங்கைமாநகர்ப்பெண்ணணங்
கண்ணுடையார்கற்றவரேகல்லார்கண்முகத்திரண்டு
புண்ணுடையாரெனக்கூறிநங்காதலர்போயினரே.

ப - ரை. விண்உடையார் புகழ் - விண்ணுலகத்தைத் தமக்கிடமாக வுடையவராகிய தேவர்கள் புகழ்கின்ற, நூபுரபாதர் - நூபுரமணிந்த திருவடியையுடையவர், வெல்-வெல்லுந்தொழிலையுடைய, வேல்-வேல்போலும், நெடுங்கண் - நெடிய கண்களையுடைய, பெண் உடையார் - பெண்ணை யிடப்பாகத்தே யுடையவர், (அவர்) மகிழ் - விரும்புகிற, தென்வெங்கை - தென்வெங்கையாகிய, மாநகர் - பெரிய நகரத்

தில் வாழ்கின்ற, பெண் அணங்கே - பெண்தெய்வமே, கற்றவரே - கல்வி கற்றவரே, கண் உடையார்-கண்ணுடையராவர், கல்லார்கள் - கல்லாதவர்கள், முகத்து - தமது முகத்தில், இரண்டு புண் உடையார் - இரண்டுபுண்ணுடையராவர், என - என்று, கூறி - சொல்லி, நம்காதலர் போயினர் - நமதன்பர் சென்றார், எ - று.

க - ரை. விண்ணுடையார் புகழ் நூபுரபாதர் வெல்வேலெனடுங் கட் பெண்ணுடையார்மகிழ் தென்வெங்கைமாநகர்ப் பெண்ணணங்கே! கற்றவர், தம்முகத்திரண்டு கண்ணுடையவர் கல்லாதவர் தம் முகத்திரண்டு புண்ணுடையவர் என்று சொல்லி நங்காதலர் போயினர் என்பதாம்.

வி - ரை. விண் - ஆகுபெயர். நூபுரம் - காற்சிலம்பு ; இதனை பாதஜாலம் என்பர் வடநூலார். போயினும் விரைந்து வருவர் என்பது தோன்ற 'நங்காதலர் போயினர்' என்றாள். (௪0௧)

தலைமகள்கார்ப்பருவங்கண்டுவருந்தல்.

அதாவது—தலைமகன் ஓதற் பிரிவினனாக, கார்ப்பருவம் வரத் தனிமை பொறாத தலைமகள் வருந்தா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

சிலையோடுவந்தனவென்செய்குவேன்முகில்செங்கமலன்
றலையோடுகொண்டவர்வெங்கையிலேசெந்தமிழ்முதலாங்
கலையோதுவான்விழைந்துற்றார்க்கக்கல்விக்கடலதனு
ளிலையோவொன்றேனுமருள்வேண்டுமென்னவிசைப்பதுவே

ப - ரை. முகில் - மேகங்கள், சிலையோடு வந்தன - வில்லோடு வந்தன, என்செய்குவேன் - யாதுசெய்வேன், செங்கமலன் - பிரமனது, தலையோடு கொண்டவர்-தலையோட்டை ஏந்தினவராகிய சிவபிரானது, வெங்கையிலே - திருவெங்கைப்பதியில், செந்தமிழ்முதலாம் - செந்தமிழ் முதலாகிய, கலை - கலைகளை, ஓதுவான் - ஓதும் பொருட்டு, விழைந்து உற்றார்க்கு - விரும்பிச்சென்றவர்க்கு, அ - அந்த, கல்வி கடலதனுள்-கல்வியாகிய கடலினுள்ளே, அருள்வேண்டும் என்ன-அருள்வேண்டுமென்று, இசைப்பது-சொல்லுவது, ஒன்றேனும் - ஒன்றாயினும், இல்லையோ - இல்லையா, எ - று.

க - ரை. செங்கமலன் தலையோடு கொண்டவர் வெங்கையிலே செந்தமிழ் முதலாங் கலையோதுவான் விழைந்து சென்றவர்க்கு, அந்தக்கலாசாகரத்தில், அருள்வேண்டுமென்று சொல்லுவதாகிய கலையொன்றேனு மின்றோ வென்பதாம்.

வி - ரை. சிலை - வானவில். தலையோடு - கபாலம். ஓதுவான் - ஓத. விழைதல் - விரும்புதல். இசைத்தல் - சொல்லுதல். அருள் வேண்டுமென்ன விசைப்பது ஒன்றேனு மிலையோவென்றமையான் இரக்கமுடையன் இவரிவ்வாறு நம்மேலருளின்றியிரார் என்றவாறாயிற்று. (௪௧௦)

பாங்கியாற்றுவித்தல்.

அதாவது—கார்ப்பருவங்கண்டு வருந்தின தலைமகளைப் பாங்கியாற்றுவித்தல். அதற்குச்செய்யுள்,—

என்போடரவணிபெம்மான்றிருவெங்கையேந்திழையாய்
நின்போதகமன்னமன்னவர்தாமின்றுநீகளிப்பத்
துன்போடுகல்விக்கடன்மேய்ந்துசெய்யுளஞ்சோனைபெய்து
தன்போல்வருவரென்றேவந்ததாலிச்சலதரமே.

ப - ரை. என்போடு - எலும்பு மாலைகளுடனே, அரவு - பாம்பினையும், அணி - தரித்த, எம்மான் - எம்பெருமானது, திருவெங்கை - திருவெங்கைப்பதியில் வாழ்கின்ற, ஏந்திழையாய் - பெண்ணே, நின் - உனது, போதகம் அன்ன - யானையை நிகர்த்த, மன்னவர் - அரசர், இன்று - இன்று, நீ களிப்ப - நீ மகிழ, துன்பு ஓடு - துன்பங்களோடுதற்குரிய, கல்விக்கடல் மேய்ந்து - கல்வியாகிய கடலைக்குடித்து, செய்யுள் - செய்யுட்களாகிய, அம் - அழகிய, சோனைபெய்து - சோனைமாரியைப்பொழிந்து, தன்போல் - தன்னைப்போலவே, வருவர் என்றே - வருவர் என்று சொல்லிக்கொண்டே, இ - இந்த, சலதரம் - மேகமானது, வந்தது - முன்னே வந்தது, எ - று.

க - ரை. என்போடரவணிபெம்மான் திருவெங்கையேந்திழையாய்! நின்காதலர், நீகளிக்கும்படி, கல்விக்கடலைக்குடித்து, செய்யுண்மழைபெய்து, தன்போல் வருவரென்று நமக்கறிவிக்க, இம்மேகம் வந்தது என்பதாம்.

வி - ரை. என்பு - ஆகுபெயர். போதகம் - யானை; யானைக்கன்றுமாம். மேய்தல் - குடித்தல். செய்யுள் - கவி. சோனை - விடாமழை. சலதரம் - வடசொல்; இது நீரைத்தாங்கியிருப்பது என்னும் பொருட்டு. ஆல் - அசை. (௪௧௧)

காவற்பிரிவு.

அதாவது—நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவு. இவன் நாட்டைப் பிறர் புகுந்து நலிதலும் கைக்கொள்வதும் செய்யப்பட்டவை நீக்கு

தற்குப் பிரிய ஆண்மையும் மதிப்பும் இலனுமெனின், நாட்டை நலி வாருளராக நலிவுகாத்தற்குப் பிரியுமென்பதன்று. நாட்டகத்து நின்று நகர்த்து வந்து முறைசெய்யமாட்டாத மூத்தோரும் பெண் டிரும் இருகை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாருமென இத்தொடக்கத்தார் முறைக்கருமங்கேட்டுத் திருத்துதற்பொருட் டாகவும் வளனில்வழி வளந்தோற்றுவித்தற்கும், "தேவர்குலமே சாலையம்பலமே" என்றித் தொடக்கத்தனவற்றையாராய் தற்கும், மதிகுடியோம்புதற்கும் பிரியுமென்பது. அன்றியும், பிறந்த வுயிர் தாயைக்கண்டு இன்புறுதல்போலத் தன்னாற் காக்கப்படும் உயிர்கள் தன்னைக்கண்டு இன்புறுதலின் தான் அவைகட்குத் தன்னுருக்காட் டுதற் பொருட்டாகவும் பிரியுமெனக் கொள்க.

காவற்பிரிவு தலைமகன்றன்னாலுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல்.

அதாவது—தலைமகன் தன்காவற்பிரிவைத் தோழிக்குணர்த்த, அவள் அதனைத் தலைமகட்குணர்த்தா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

கருமாமுகி லுறங்குஞ்சோலைவெங்கைக்கடவுண்முக்கட்
பெருமான்றொழிலையொருநீபெறினும்பெறுகவென்றே
யொருமாநிலந்தனினம்முயிர்க்காவலரோங்குபுகழ்த்
திருமான்றொழில்வைகுதுமென்றுபோயினர்தேமொழியே.

ப - ரை. தேமொழியே - தேன்போலு மின்சொல்லையுடையா ளே, கருமாமுகில் - கரியபெரிய மேகங்கள், உறங்கும் - உறங்குதற் குரிய, சோலை - சோலைகள் சூழ்ந்த, வெங்கை - திருவெங்கைப்பதி யிலெழுந்தருளிய, கடவுள் - இறைவர், முக்கண்பெருமான் - மூன்று கண்களையுடைய பெருமான், (அவரது) தொழிலை-தொழிலினை, ஒரு நீ பெறினும் - ஒப்பற்ற நீ பெற்றாலும், பெறுக என்றே - பெறுக வெனத் துணிந்தே, ஒரு - ஒப்பற்ற, மா நிலந்தனில் - பெரிய நிலவுலகத்துள்ள, நம் - நமது, உயிர்க்காவலர் - உயிர்க்காவலராகிய தலைவர், ஓங்குபுகழ் - உயர்ந்த புகழினையுடைய, திருமால் தொழில்- திருமாலின் தொழிலில், வைகுதும் என்று போயினர் - இருப்போ மென்று சென்றனர், எ - று.

க - ரை. தேமொழியே! திருவெங்கைக் கடவுளாகிய முக்கட் பெருமானது தொழிலை நீ பெறினும் பெறுகவெனத் துணிந்தே, நம் முயிர்க்காவலர், திருமாலின்தொழில் செய்வோமென்று போயினர் என்பதாம்.

வி - ரை. கருமாமுகிலுறங்குஞ் சோலையென்றமையாற்சோலை யினுயர்ச்சி தோன்றிற்று. பெருமான் - பெருமையுடையான்; இது பெருமாள் என மரூஉவாயிற்று. முக்கட்பெருமாள் தொழில் - சங்காரம் (மரணம்). தேமொழி-அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

அதாவது—தலைமகள் பனிக்காற்று வீசுகிற கூதிர்ப்பருவங் கண்டு பொறுளாய் வருந்தா நிற்றல். அதற்குச்செய்யுள்,—

கணையிலைவேலெனுங்கண்மாதுபங்கர்கருப்பவில்லிற்
கிணையிலையென்னுந்திருவெங்கைநாட்டிலிறைவரின்றே
யணையிலையென்செய்குவேன்முறையோவென்றரற்றுகினுந்
துணையிலையென்பதுகொண்டோவிவ்வாடைதுயர்செய்வதே.

ப - ரை. கணை-அம்பு, இலைவேல்-இலைவடிவினதாகிய வேல், என்னும் - என்று சொல்லுதற்குரிய, கண்-கண்களையுடைய. மாது - உமாதேவியை, பங்கர் - இடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானாரது, கருப்பம் இல்லிற்கு - கர்ப்பக்ருஹத்திற்கு, இணையில்லையென்னும் - ஒப்பில்லையென்னும்படியான, திருவெங்கைநாட்டில் - திருவெங்கை நாட்டிலுள்ள, இறைவர் - நமது தலைவர், இன்றே அணையில்லை - இன்றே என்னை அணைதலில்லை, என்செய்குவேன் - யாது செய்வேன், முறையோவென்று அரற்றுகினும் - முறையோ வென்று அரற்றினாலும், துணையில்லையென்பதுகொண்டோ-(இவட்குத்) துணையாவாரில்லை யென்பது பற்றியோ, இ - இந்த. வாடை - வாடையானது, துயர்செய்வது-எனக்குத் துன்பஞ்செய்வது, எ - று.

க - ரை. கணையிலை வேலெனுங் கண்மாதுபங்கர் கருப்பவில்லிற் கிணையிலையென்னுந் திருவெங்கைநாட்டிற் கிறைவர், இன்றணைவாரில்லை, என் செய்குவேன், முறையிட்டரற்றினும் துணையாவாரொருவருமில்லை யென்றுணர்ந்துதானோ, இவ்வாடை யெனக்குத் துயர் செய்வது என்பதாம்.

வி - ரை. பங்கர் என மேல்வருதலால், கணையிலை வேலெனுங் கண்மாது உமாதேவியைக் குறித்தது. அணை - முதனிலைத்தொழிற்பெயர்; அணைதல். அரற்றல் - பேரிரைச்சலிடல். வாடை - வடகாற்று. (சகரு)

தோழியாற்றுவித்தல்.

அதாவது—கூதிர்ப்பருவங் கண்டு வருந்தாநின்ற தலைமகளைத் தோழியாற்றாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

பனிபொருசெஞ்சுடரன்னார் திருவெங்கைப்பாவைநல்லாய்
முனிபொருவிந்தமெனவே கணவர்தம்முன்புரத்திற்
கனிபொருமெல்லிதழ்நன்மாதர்கொங்கைகரந்திடப்பன்
னுனிபொருகாலம்வரக்காதலர்நமைநோக்குவரே.

ப - ரை. பனிபொரு - பனியினாற் பொரப்பட்ட, செஞ்சுடர் அன்னார் - சூரியனை நிகர்த்தவராகிய சிவபெருமானாரது, திருவெங்கை - திருவெங்கைப்பதியிலுள்ள, பாவை - பாவைபோலும், நல்லாய் - மாதே, முனிபொரு - அகத்திய முனிவராற் பொருதடக்கப்பட்ட, விந்தம் எனவே - விந்தமலைபோலவே, கணவர் - கணவரது, முன்பு உரத்தில் - முற்புறத்துள்ள மார்பில், கனிபொருமெல் இதழ் - கோவைக்கனிபோலு மெல்லிய அதரத்தையுடைய, நல்மாதர் - அழகிய மாதரது, கொங்கை - தனங்கள், கரந்திட - மறைய, பன்னுனி பொரு காலம்வர - சொல்லப்பட்ட நுனியழுந்துங்காலம் வருதலும், காதலர் - தலைவர், நம்மை நோக்குவர் - நம்மைநோக்கி வருவார். எ - று.

க - ரை. பனிபொரு செஞ்சுடரன்னார் திருவெங்கைப்பாவை நல்லாய்! அகத்தியர் அடக்கின விந்தமலைபோலு மாதர் கொங்கைகள் தம் கணவர் மார்பிலழுந்துங்காலம் வரின், நம்காதலர் நம்மை நோக்கி வருவர் என்பதாம்.

வி - ரை. திருவெண்ணீற்றான் மறைக்கப்பட்டிருத்தலான் இறைவரை பனிபொரு செஞ்சுடரன்னார் என்றார். பாவை - பிரதிமை. நல்லாய் - பெண்ணே. முனி - அகத்தியமுனி. உரம் - மார்பு. கனி - கோவைக்கனி. இதழ் - அதரம். கரத்தல் - மறைதல். பல்நுனியென்றும் பிரித்துரைக்கலாம். நம்மிடத் தன்புடையாரென்பது தோன்றக் காதலரென்றார்; அதனானே நம்மை நோக்குவரென்றது மாயிற்று. (சகசு)

தூதிற்பிரிவு.

அஃதாவது—இருவேந்தர் தம்மிற் பொருமிடத்து அவரைச்சந்தி செய்வித்தற்குப் பிரியும் பிரிவு. வேந்தரைச்சந்தி செய்வித்தற்குப் பிரியுமெனின், தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வார், அவர் பொருவிறப் பென்னையோவெனின், தூதுவர்போலச் சந்திசெய்வித்தற்குப் பிரியுமென்பதன்று. இருவேந்தரும் நாளைப்பொருதுமென்று முரண்கொண்டிருந்த நிலைமைக்கண் தான் அருள்வேந்தனாதலின், இம்மக்களும் இவ்விலங்குகளுமாகிய வெல்லாம்பட இவை யிருகுலத்திற்கும் வதம் நிகழ்ந்தது என்செய்யுமோ, யான் இப்போரொழிப்ப

லென்று இருவரையுமிரந்து சந்தி செய்வித்தலுமொன்று; தேவரும் அசுரரும்பொருத காலத்து, தேவரையும் அசுரரையும் மிகைசெய்தாரை யொறுப்பலென்று பாண்டியன் மாகீர்த்தி சந்திசெய்வித்தது போல, இவரையும் மிகைசெய்தாரை யொறுப்பலென்று சந்திசெய்வித்ததெனக் கொள்க.

தூதிற்குப்பிரிவு தலைமகன்றன்னாலுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல்.

அதாவது—தலைமகன் தூதிற்குப் பிரிதலை அவனாலுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

சடைநின்ற கங்கையர் வெங்கையி லேயொரு சந்துசென்றார்
படைநின்ற கண்ணிநங் காவல ரின்றுபற் றுசொன்றுதான்
தொடைநின்ற நேரிசை முன்குற ளுந்தனிச் சொல்லுமுற
விடைநின்று கூட்டுதல் போலிரு வேந்தரை யிசைப்பதற்கே.

ப - ரை. படைநின்றகண்ணி - வேற்படைபோலுங் கண்ணையுடையாளே, நங்காவலர் - நமது தலைவர், இன்று - இந்நாள், பற்றுசொன்று - ஒரு பற்றுசானது, தொடைநின்ற நேரிசை முன் - தொடையாய் நின்ற நேரிசை வெண்பாவுக்கு முன்னே, குறளும் - குறள்வெண்பாவும், தனிச்சொல்லும் உற - தனிச்சொல்லும்பொருந்த, இடைநின்று கூட்டுதல்போல் - இடையே நின்று சேர்ப்பதுபோல, இருவேந்தரை இசைப்பதற்கு - இரண்டு அரசரை யிசைவிப்பதற்கு. சடைநின்ற கங்கையர் - சடையில் நிலைபெற்ற கங்கையையுடையவராகிய சிவபெருமானாரது, வெங்கையிலே - திருவெங்கையிலே, ஒரு சந்து சென்றார் - ஒரு தூது சென்றார், எ - று.

க - ரை. படைநின்ற கண்ணீ! பற்று சொன்று இடைநின்று இருகுறள் வெண்பாவையுந் தனிச்சொல்லையுங் கூட்டுவதுபோல இரண்டு அரசரை யிசைவித்தற்கு நம்வேந்தர் தூது சென்றார் என்பதாம்.

வி - ரை. சந்து - தூது. படை - வேற்படையென்றே பொருள் கொள்ளக்கிடந்தது கண்ணுக்குவமையாகப் புணர்க்கப்பட்டதனால்.

தலைமகள்முன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

அதாவது—தலைமகன் தூதிற்குப் பிரிந்தழித் தனித்திருந்த தலைவி முன்பனிப் பருவங்கண்டு வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கருங்காளகண்டர் திருவெங்கைவாணர் கனகவெற்பிற்
பொருங்காவலர் தம்பகைதணிப்பான் முனம்போயினவர்
பெருங்காலமுன்பனிநாள்வந்தும்வந்திலர்பேதையர்மேல்
வருங்காமவெஞ்சரந்தன்னையுமாற்றமனமதித்தே.

ப - ரை. கருங்காளகண்டர் - கருமையாகிய விஷகண்டத்தை யுடையவர், திருவெங்கைவாணர்-திருவெங்கைத் திருப்பதியில் வாழ்பவர், (அவரது) கனகவெற்பில் - பொன்மலையில், பொரும் - போர் செய்கிற, காவலர் - அரசரது, பகைதணிப்பான் - பகைதணிவிக்கும் பொருட்டு, முன்னம் போயினவர் - முன்னேசென்றவர், பேதையர் மேல் - மாதர்மீது, வரும் - வருகின்ற, காமன் - மன்மதனது, வெம் சரம் தன்னையும் மாற்ற-கொடிய பாணங்களையும் விலக்க, மனம்மதித்து - மனத்திலெண்ணி, பெருங்காலம் - பெருங்காலமாகிய, முன் பனி நாள் வந்தும்-முன்பனிப்பருவம் வந்தும், வந்திலர்-வந்தாரில்லை, எ - று.

க - ரை. கருங்காள கண்டர் திருவெங்கைவாணர் கனகவெற்பில், பொருங்காவலர் தம்பகை தணிப்பான் முனம் போயினவர் முன்பனிக்காலம் வந்தும், பேதையர்மீது காமசரந்தைக்குமே யென்பதை மதித்து வந்திலர், என்பதாம்.

வி - ரை. காளம் - விஷம். பொருதல்-போர்செய்தல். தணிப்பான் - தணிக்க. காமசரம் - காமபாணம். மதித்தல் - எண்ணல். பேதையர் - பருவங்குறியாது மாதர் என்னுந் துணையாய் நின்றது. சரந்தன்னையும் என்பதில் தன் - சாரியை. (சகக)

தோழியாற்றுவித்தல்.

அதாவது—இவ்வாறு முன்பனிப்பருவங் கண்டு வருந்தாநின்ற தலைமகளைத் தோழி தணிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

போதாகிவந்தபிறைவேணியர்வெங்கைப்பொன்னகரிற்
காதாகிவந்தநல்வள்ளையிற்றாங்குகனங்குழைசேர்
மாதாகிவந்தசெந்தேனேயவர்தம்வரவுசொலத்
தூதாக [illegible] முன்பனிநாண்மன்னர்தூதுவர்க்கே.

ப - ரை. போதுஆகிவந்த - அரும்பாகி வந்த, பிறை - சந்திர கண்ட[illegible] வேணியர் - சடாபாரத்திலுடையவராகிய சிவபெருமானது [illegible] - திருவெங்கையாகிய, பொன்நகரில் - அழகிய நக

ரத்தில், காதுஆகிவந்த - காதுருவாய் வந்த, நல்வள்ளையில் தூங்கு - அழகிய வள்ளையிற்றூங்குகிற, கனங்குழைசேர் - கனங்குழையையுடைய, மாதுஆகிவந்த - பெண்ணாகி வந்த, செந்தேனே - செந்தேன் போல்வாளே, அவர் வரவுசொல்ல - அவரது வரவை யறிவிக்கும்பொருட்டு, மன்னர் தூதுவர்க்கு-அரசர் தூதுவர்க்காக, முன்பனிநாள் - முன்பனிப்பருவமானது, தூதாகி வந்தது - தூதாய் வந்தது, (ஆதலால் நீ வருந்தற்க), எ - று.

க - ரை. போதாகி வந்த பிறைவேணியர் வெங்கைப்பொன்னகரிற் காதாகிவந்த நல்வள்ளையிற்றூங்கு கனங்குழைசேர் மாதாகி வந்த செந்தேனே! இந்த முன்பனிப்பருவம் நம்தலைவரது வரவுசொல்லத்தூதாகி வந்தது என்பதாம்.

வி - ரை. போது - அரும்பு. வள்ளை - வள்ளைத்தண்டு. தூங்குதல் - தொங்குதல். கனங்குழை-கனவியகுழை, (காதணி). (சகஎ)

துணைவயிற்பிரிவு.

அதாவது—நண்பாகிய வேந்தனுக்குப் பகைவேந்தர் இடையூறுற்றவழி, அவ்விடையூறு தீர்த்தற்குத் துணையாகத் தலைமகன் பிரிதல். தன்னுழையரிலொருவனைப் படை கூட்டிச் செல்லவிடாது, தானே போதல்வேண்டுமென்ப தெற்றுக்கெனின், நட்பு மிக்கால் தானே யவனாயிருத்தலின், அவன் கருமந் தன்கருமமா வெண்ணி, விரைந்தெழுந்து அப்பகை நீக்கத் தானே போயினனெனக்கொள்க.

துணைவயிற்பிரிவுதலைமகன்றன்றலுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல்.

அதாவது—தலைமகன் துணைவயிற் பிரிந்தமையை யவனாலுணர்ந்த தோழி தலைமகட் கறிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்,—

கடுக்கையணிந்தமுடியோன்றிருவெங்கைக்காரிகையா
யுடுக்கையிழந்தவன்கையோர்பொருளையொழித்ததனைத்
தடுக்கைவிரைந்ததுபோனட்டவேந்தன்றனக்குதவி
யடுக்கைவிழைந்துநினைவிடுத்தார்நட்பறிந்தவரே.

ப - ரை. கடுக்கை அணிந்த முடியோன்-கொன்றைமலர்மாலையையணிந்த திருமுடியையுடையவனாகிய சிவபெருமானது, திருவெங்கை காரிகையாய் - திருவெங்கைமாதே, உடுக்கை இழந்தவன்கை - ஆடையிழந்தவன் கையானது, ஓர் பொருளை ஒழித்து - தன்னிடத்திருந்த வொருபொருளைவிட்டு, அதனை - அந்தவுடுக்கையை, தடுக்கை - தடுத்தலில், விரைந்ததுபோல் - விரைந்ததுபோல, நட்ட-தன்னைச் சிநேகித்த, வேந்தன் தனக்கு - அரசனுக்கு, உதவி அடுக்கை விழைந்து - உதவிசெய்ய விரும்பி, நட்பு அறிந்தவர் - நட்பின்றன்மை யறிந்தவராகிய நம் தலைவர், நின்னை விடுத்தார் - உன்னைவிட்டார், எ - று.

க - ரை. கடுக்கை யணிந்த முடியோன் திருவெங்கைக் காரிகையாய்! உடுக்கையிழந்தவன் கையானது அதனைத்தடுக்க விரைவது போலத் தமது நண்பனுக் குதவிசெய்யச் சென்றார் நங்காவலர் என்பதாம்.

வி - ரை. கடுக்கை - இருமடியாகு பெயர். உடுக்கை - உடுக்கப்படுவது; ஆடை விழைதல்-விரும்பல். விடுத்தல் - நீங்கல். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதாநட்பு" என்பது திருக்குறள். (சகஅ)

தலைமகள்பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

அதாவது—தலைமகன் துணைவயிற் பிரிதலால் தமியளாய தலைமகள் பின்பனிப்பருவங்கண் டாற்றாளாய் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நன்பனிவெண்மதியொன் றுடையோன்வெங்கைநாட்டொருதம்
அன்பனிருந்துயர்தீர் துணையாகவடலரிபோன்
முன்பனிகஞ்செலச்சென் றவர்காண்கிலர்மூடியெங்கும்
பின்பனிபெய்துபெருந்துயர்வேலைபெருகுவதே.

ப - ரை. நன்பனி வெண்மதி ஒன்று உடையோன்-நல்லகுளிர்ச்சிபொருந்திய வெள்ளிய சந்த்ரகலை யொன்றைத் தரித்தவனாகிய சிவபெருமானது, வெங்கைநாட்டு-திருவெங்கைநாட்டில், ஒரு - ஒப்பற்ற, தம் அன்பன் - தம் மன்பனது, இருந்துயர் - பெருந்துன்பம், தீர் துணையாக - ஒழிதற்குரிய வுதவியாக, அடல் அரிபோல் - வலிமிகுந்த சிங்கம்போல, முன்பு - தமக்கு முன்னே, அனிகம் செல்ல - படைகள் செல்ல, சென்றவர்-போனவராகிய நம்தலைவர், பின்பனி - பின்பனியானது, எங்கும் மூடி-எங்கும் கவிந்துகொண்டு, பெய்து - சொரிவதனால், பெருந்துயர் வேலை பெருகுவது-பெருந்துன்பக்கடல் பெருகுவதை, காண்கிலர் - காண்கின்றிலர், எ - று.

க - ரை. நன்பனி வெண்மதி யொன்றுடையோன் வெங்கை நாட்டில், தம் அன்பனாகிய வொருவனது துன்பத்தைத் தீர்த்தற்குரிய வுதவியாகச் சிங்கம்போலப் படையோடு கூடிச்சென்றவர். இந்தப் பின்பனிப்பருவஞ் செய்யுந்துன்பத்தைக் காண்கின்றிலர் என்பதாம்.

வி - ரை. பனி - குளிர்ச்சி. ஒரு - ஒப்பற்ற. இருந்துயர்-பெருந்துன்பம். அடல் - வலி. அரி - சிங்கம். அனிகம் - படை. வேலை - கடல்; இது வேலா என்னும் வடசொற்றிரிபு. (சகங)

தோழியாற்றுவித்தல்.

அதாவது—இவ்வாறு பின்பனிப் பருவம்கண்டு வருந்தாநின்ற தலைமகளைத் தோழி தணிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

நின்பாலுதவிநினைந்துவந்தார்கைந்நிமிர்த்தலரும்
பின்பாய்பனிவருநாளயில்வேற்கட்பிறைநுதலாய்
தன்பாதமென்றலைக்கீவோன்றிருவெங்கைதன்னிலொரு
மன்பாலுதவிநினைந்துமுன்போயினமன்னவரே.

(பத-உரை.) அயில்வேல் - கரிய வேற்படை போன்ற, கண் - கண்களையும், பிறைநுதலாய் - பிறைபோலும் நெற்றியையு முடையாளே, கைநிமிர்த்தல் அரும் - கைநிமிர்த்த லருமையாகிய, பின்பாய் பனிவருநாள் - பின்பனிப் பருவத்தில், தன்பாதம் என்தலைக்கு ஈவோன் - தன் திருவடியை யென் சிரத்திற் கணியாகத் தருபவனாகிய சிவபெருமானது, திருவெங்கை தன்னில் - திருவெங்கையில், ஒரு மன்பால் - ஒரு அரசனிடத்து, உதவி நினைந்து - உதவிசெய்ய நினைந்து, முன்போயின மன்னவர் - முன்னேசென்ற நம்மரசர், நின்பால் - உன்னிடத்தில், உதவி நினைந்துவந்தார் - உதவிசெய்ய நினைந்து வந்தனர், எ-று.

(க-உரை.) அயில்வேற்கட் பிறைநுதலாய்! தன்பாதமென்றலைக்கீவோன் திருவெங்கை தன்னிலொரு மன்பாலுதவி நினைந்து முன்போயின மன்னவர், கை நிமிர்க்க வொண்ணாத பின்பனிப் பருவத்தை நோக்கி நினக் குதவிசெய்ய நினைந்து வந்தார் என்பதாம்.

(வி-உரை.) கைநிமிர்த்த லருமையாயது குளிர் மிகுதியாலென்க. பிறை - முற்பக்கத்து அஷ்டமீ சந்திரன். நுதல் - நெற்றி. நின் - சாரியை. மன்னவர் - தலைவர். (சஉ0)

பொருள்வயிற்பிரிவு.

அதாவது—பொருளீட்டல் காரணமாகப் பிரியும்பிரிவு. எனின் முன்பொரு ளிலனும். ஆகவே: "எள்ளுநர்ப் பணித்தலு மிரந்தோர்க் கீதலும், நள்ளுநர் நாட்டலு நயவாபொறுத்தலும்" என்னு மிவையாவும் பொருட் குறைபா டுடையார்க்கு நிகழாமையான், இக்குறைபாடெல்லா முடையனும். அவை யுடையானது பொருவிறப் பென்னையோவெனின், பொருளிலனைப் பிரியு மென்பதன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல் வேறுவகைப்பட்ட பொருள்களெல்லாம் கிடந்தன; மன்னன் அவைகொண்டு துய்ப்பது ஆண்மையன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது. அல்லதூஉம், தேவகாரியமும் பிதிர்க்காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொடுசெய்யத் தனக்குப் பயன்படுவன. என்னை, தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரும் இன்புறு ராகலான் அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமெனக்கொள்க.

பொருள்வயிற்பிரிவு தலைமகன் றன்னுலுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல்.

அதாவது—பொருள்வயிற் பிரிவைத் தலைமகனுணர்த்த வுணர்ந்த தோழியானவள் அதனைத் தலைமகட்குணர்த்தா நிற்றல். அதற்குச் செய்யுள்,—

திரைப்பாலெழுநஞ்சமுண்டோன்றிருவெங்கைத்தெண் கயத்தின், விரைப்பானலங்கண்விளங்கிழையாய்மகமேருவெ ன்னும், வரைப்பானிதியந்தரற்கேகினர்கடன்மாநிலத்தி, லிர ப்பார்மிடிகள்புகுமிடந்தேடவிறையவரே.

ப - ரை. திரைப்பால் எழும் - திருப்பாற் கடலிற்றோன்றின, நஞ்சம் உண்டோன் - நஞ்சினை யமுது செய்தவனாகிய சிவபெருமா னது, திருவெங்கை - திரு வெங்கையிலுள்ள, தெண் கயத்தில் - தெளிவாகிய ஓடையிற்பூத்த, விரை - மணமுள்ள, பானலம்கண் - நீலோத்பல மலர்போலுங் கண்களையும், விளங்கிழையாய் - விளங் குகிற ஆபரணங்களையு முடையவளே, கடல் - கடல்சூழ்ந்த, மாநில த்தில் - பெரிய நிலவுலகத்தில், இரப்பார் - யாசிப்பவரது, மிடிகள்- வறுமைகள், புகும் இடம்தேட - தாம் நுழைதற் கிடந்தேடும் வண் ணம், இறையவர் - நம் தலைவர், மகமேரு என்னும் - மஹாமேரு வென்று சொல்லப்படுகிற, வரைப்பால் - மலையின் பகுதியதாகிய, நிதியம் - பொருளை, தரற்கு - கொணரும் பொருட்டு, ஏகினர் - சென்றார்.

க - ரை. திரைப்பாலெழு நஞ்சமுண்டோன் றிருவெங்கைத் தெண்கயத்தின் விரைப்பானலங்கண் விளங்கிழையாய்! இவ்வுல கில் இரப்பவரது மிடிகள் புகுதற்குரிய இடந்தேடுமாறு, நம்மிறைய வர், மகமேரு வென்னும்படியான பொருட்குவையைத் தேடிக்கொ ணரும்பொருட்டுச் சென்றார் என்பதாம்.

வி - ரை. திரை - ஆகுபெயர். கயம் - ஓடை. விரை - வாச னை. பானல் - கருங்குவளை; ஆகுபெயர். வரை - மலை. நிதியம் - பொருள்; இதில் அம்-சாரியை. புகுமிடம் - புகுந்தொளிக்குமிடம்.

தலைவி யிளவேனிற் பருவங்கண்டு வருந்தல்.

அதாவது—தலைவன் பொருள்வயிற் பிரியத் தமியளாய தலை வி இளவேனிற் பருவங்கண்டு வருந்தா நிற்றல். அதற்குச்செய்யுள்—

போதந்திறைப்பவழறென்றல்பற்றுதல்போலவிளஞ்
சூதந்தழைக்குமிந்நாள்கண்டிலார்கொறுணிவொடுநால்
வேதந்துதிக்குந்தனிமூலகாரணர்வெங்கைவெற்பிற்
பாதஞ்சிவக்கப்பொருள்வயிற்போயினபாதகரே.

ப - ரை. துணிவொடு - துணிவுடனே, நால்வேதம் - நான்கு வேதங்களும், துதிக்கும் - துதிக்கின்ற, தனி - ஒப்பற்ற, மூலகார ணர் - மூலகாரணராகிய சிவபெருமானாரது, வெங்கை வெற்பில் - திருவெங்கைமலையில், பாதம்சிவக்க - கால்கள் சிவக்க, பொருள் வயிற்போயின - பொருள்பெற் சென்ற, பாதகர் - பாதகரானவர், தென்றல் - தென்றலானது, போதந்து - வந்து, அழல் இறைப்ப - நெருப்பை யிறைக்க, பற்றுதல்போல - பற்றி யெரிதல்போல, இள ஞ்சூதம் தழைக்கும் - இளமாமரங்கள் செழித்துத் தளிர்க்கிற, இந் நாள் - இந்தப் பருவத்தை, கண்டிலார்கொல் - கண்டிலரோ. எ-று.

க - ரை. நால்வேதந் துதிக்குந் தனிமூல காரணர் வெங்கை வெற்பில் பாதஞ் சிவக்கப் பொருள்வயிற் போயின பாதகர், தென்றல்வந்து அனலை வீசுதலாற் பற்றியெரிகிற நெருப்புப்போல, மாமரங்கள் தளிர்க்கிற இந்த இளவேனிற் பருவத்தைக் கண்டிலரோ வென்பதாம்.

வி - ரை. போதந்து - வந்து. போதா பகுதி. இறைத்தல் - வீசுதல். சூதம் - மாமரம். துணிவு - வேதத்திற் காதல் பாதகர்க் காதல் அடையாக்குக. (சஉஉ)

தோழியாற்றுவித்தல்.

அதாவது—இளவேனிற் பருவங்கண்டு வருந்தா நின்றதலைமகளைத் தோழி தணிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்—

நாகூரரவணிவெங்கைபுரேசர்நன்னாட்டிலொரு
பாகூர்மணிநெடுந்தேரன்பர்கேட்டுநின்பாலடைந்தா
ராகூழ்பெறுவலிவெஞ்சினவேள்வந்தமர்புரியக்
கூகூவெனவிளமாவேறியேகுயில்கூவுவதே.

ப - ரை. ஆகூழ்பெறு - ஆகூழினைப்பெற்ற, வலி - வலியையும், வெஞ்சினம் - கொடுங்கோபத்தையு முடைய, வேள்வந்து - மன்மதன்வந்து, அமர்புரிய - போர்செய்ய, குயில் - குயில்கள், இளமா ஏறி - இளமா மரங்களிலேறி, கூகூ என கூவுவது - கூகூவென்று கூவுவதை, நாகு - இளமைபொருந்திய, ஊர் - ஊர்தலையுடைய, அரவு அணி - பாம்பை யணிந்த, வெங்கைபுரேசர் - திருவெங்கை நகர்க்கிறைவராகிய சிவபிரானது, நல் நாட்டில் - நல்ல நாட்டின்கண், ஒரு - ஒப்பற்ற, பாகு - பாகனால், ஊர் - செலுத்தப்பட்ட, மணி - ரத்நகசிதமாகிய, நெடுந்தேர்-நெடிய தேரினையுடைய, அன்பர் - நமது தலைவர், கேட்டு - கேட்டு, நின்பால் அடைந்தார் - உன்னிடத்தடைந்தார், (நீகவலற்க) எ-று.

க - ரை. மன்மதனனவன் வந்து போர்புரியக் கண்டு, குயில்கள் மாமரத்திலேறிக் கூகூவெனக் கூவுவதைக்கேட்டு, நாகூரரவணி வெங்கைபுரேசர் நன்னாட்டி லொருபாகூர்மணி நெடுந்தேரன்பர் நின்பாலடைந்தார் என்பதாம்.

வி - ரை. நாகு - இளமை. ஊர்தல் - தவழ்தல். பாகு - ஆகுபெயர், (பாகன்). ஊர்தல் - செலுத்தல். பால் - ஏழனுருபு. ஆகூழ் - நல்வினைப் பயன். வேள் - மன்மதன். அமர் - போர். புரிதல் - செய்தல். மா - மாமரம். (சஉங)

தலைமகன்தலைமகளதுஉருவெளிப்பாடுகண்டுள்ளேவியந்தல்.

அதாவது—பாசறை முற்றிமீண்டு வருந்தலைமகன், தலைமகளது உருவெளிப்பாடு கண்டு தன்னுள்ளே மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கூர்க்குங்கனன்மழுவார்வெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
சீர்க்குங்கயலுங்கரும்புயலுந்தொண்டைத்தீங்கனியும்
வார்க்குங்குமமுலையுங்கொண்டுமாதெதிர்வந்துநின்றாள்
பார்க்குந்திசைதொறுமெங்கேயிம்மாயைபயின்றதுவே.

ப - உரை. கூர்க்கும் - கூரிய, கனல் - நெருப்புருவாகிய, மழு வார் - மழுப்படையை யுடையவர், வெங்கைவாணர் - திருவெங்கையில் வாழ்பவர், (அவரது) குளிர் சிலம்பில்-குளிர்ந்த மலையில், பார்க்கும் திசைதொறும் - பார்க்குந்திக்குகடோறும், சீர்க்கும் - சிறந்த, கயலும் - கயல்மீனையும், கரும்புயலும் - கரியமேகத்தையும், தீ-மதுரமாகிய, தொண்டைக்கனியும் - கோவைக்கனியையும், வார் - கச்சணிந்த, குங்குமமுலையும் கொண்டு - குங்கும ஸ்தநங்களையுங் கொண்டு, மாது - நம்தலைவியானவள், எதிர்வந்து நின்றாள்-எனக்கெதிரேவந்து நின்றனள்; இம்மாயை பயின்றது எங்கே - (இவள்) இம்மாயை பயின்றது எவ்விடத்தே, எ - று.

க - ரை. கூர்க்குங்கனன்மழுவார் வெங்கைவாணர் குளிர்சிலம்பில், கயல், புயல், தொண்டைத்தீங்கனி, வார்க்குங்குமமுலை, என்பவற்றைத்தாங்கி, நம்தலைவியானவள், யாம் பார்க்குந் திசைதொறும் வந்து நின்றனள்; இவளிம்மாயை பயின்றது எவ்விடத்தென்பதாம்.

வி - ரை. கூர்த்தல் - கூரிதாதல். கயல்-மீன்விசேடம். புயல் - மேகம். தொண்டை - கொவ்வை. "ஓர்தொண்டையுந்தீட்டி" என்றார் மணிவாசகரும். பயிலல் - பழகல்; (கற்றல்). (சஉச)

பாசறைமுற்றிமீண்டூர்வயின்வந்ததலைமகன்பாகந்துப் பரிவோடுமொழிதல்.

அதாவது—பாசறை முற்றி மீண்டு ஊர்க்குவந்த தலைமகன் தன் தேர்ப்பாகற்கு அன்பொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்,—

கார்கண்டகண்டர்திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
போர்கண்டமன்னவர்நல்வலவாநம்புரவிநெடுந்
தேர்கண்டபோதிலிரிந்தாரினிமணித்தேரெதிர்செந்
நீர்கண்டமீனென்வுண்மகிழ்ந்தேவருநேரிழையே.

ப - உரை. கார்கண்ட—கார்போலும், கண்டர்-கண்டத்தையுடையவர், திருவெங்கைவாணர் - திருவெங்கைப்பதியில் வாழ்பவர் (அவரது) கனகவெற்பில் - பொன்மலையில், நம் - நமது, புரவி - குதிரைகள் பூண்ட, நெடுந்தேர் - நெடியதேரினை, கண்டபோதில் - பார்த்தலும், போர்கண்டமன்னவர் - போர்செய்யவந்த அரசர் யாவரும், இரிந்தார் - ஓடிப்போயினர், (ஆதலால்) நல்வலவா - நல்லதேர்ப்பாகனே, இனி - இனி, நேரிழை - நம் தலைவி, மணி தேர் எதிர் - நமது மணித்தேரினெதிரே, செந்நீர்கண்ட - செந்நீரைக்கண்ட, மீன்என - மீன்கள்போல, உள்மகிழ்ந்து வரும் - மனமகிழ்ந்து வருவள், எ - று.

க-ரை. நல்வலவா! கார்கண்ட கண்டர் திருவெங்கைவாணர் கனகவெற்பில், நமது தேர்கண்டளவில், போர்கண்ட மன்னவரெல்லாரு மிரிந்தேகினர், இனி நம்தலைவி, செந்நீர்கண்ட மீன்போல நந்தேருக்கெதிரே விரைந்து வருவள் என்பதாம்.

வி-ரை. கார்கண்ட என்பதில் கண்ட-உவமவுருபு. கனகம் - பொன். வெற்பு - மலை. வலவன்-தேர்ப்பாகன். புரவி - குதிரை. இரிதல் - ஓடுதல். செந்நீர் - புதுவெள்ளம். சேரிழை-அன்மொழித்தொகைக் காரணப்பெயர். (௪௨௫)

தலைமகளோடு கலந்துறுந் தலைமகன் கார்ப்பருவங் கண்டு களித்தியம்பல்.

அதாவது—பாசறை முற்றிமீண்டுவந்து தலைமகளோடு கூடியிருக்குந் தலைமகன் கார்ப்பருவங்கண்டு தன்னுள்ளே மகிழ்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்,—

கயலேயனையவிழியாளும்யானுங்கலந்துபுணர்
செயலேமருவியிருக்கின்றனமலர்த்தேனொழுகி
வயலேவிளையுந்திருவெங்கைவாணர்வரையில்வரும்
புயலேயினிமதியொன்றின்முக்காலும்பொழிபொழியே.

ப-ரை. கயலே அனைய - கயல்மீனை நிகர்த்த, விழியாளும் - கண்களையுடைய தலைவியும், யானும் - நானும், கலந்து - கூடி, புணர்செயலே - புணர்கின்ற செயலையே, மருவியிருக்கின்றனம் - பொருந்தியிருக்கின்றோம், மலர்த்தேன் ஒழுகி - பூந்தேன் ஒழுகுதலால், வயல் விளையும் - வயல்கள் விளைகின்ற, திருவெங்கைவாணர் வரையில் - திருவெங்கைவாணரது மலையில், வரும் - வருகின்ற, புயலே - மேகமே, இனி - இனி, மதி ஒன்றில் - மாதமொன்றில், முக்காலும் - மூன்றுதரமும், பொழி பொழி - மழையைப் பொழியக்கடவை பொழியக்கடவை, எ-று.

க-ரை. மலர்த்தேன் ஒழுகி வயலே விளையுந் திருவெங்கைவாணர் வரையில் வரும்புயலே! கயலேயனைய விழியாளும் யானும் கலந்து புணர்செயலே மருவி யிருக்கின்றனம்; இனி, மதியொன்றின் முக்காலும் பொழி பொழி யென்பதாம்.

வி-ரை. புணர்தல்-கூடுதல். செயல்-தொழில். மருவல் - பொருந்தல். ஒழுகல் - பாய்தல். புயல் - மேகம். மதி - மாசம். முக்கால்-மூன்றுதரம். பொழி பொழியென்ற அடுக்கு மிகுதியாகப் பொழியென்னும் பொருளது. எ-று. (௪௨௬)

திருவெங்கைக்கோவை மூலமும் உரையும்

முற்றிற்று.

கணபதிதுணை.

திருவெங்கைக்கோவை

செய்யுள் முதற்குறிப் பகராதி.

திருவெங்கைக்கோவை

செய்யுள் முதற்குறிப் பகராதி முற்றிற்று.